முதற் பதிப்பு: நவம்பர் 1957.

V58:51:97 N57
31 N57

விலை ரூபா: ஆறு

106899

காபிரைட் உரிமை பதிவுசெய்யப்பெற்றது

சாந்தி பிரஸ், சென்னை - 1

# சுதந்திர தாகம்

( CHAPAYEV )

OFFICE ... MADRAS
717
457

எழுதியவர் :

**திமித்திரி பர்மானுவ்**

✱

மொழிபெயர்த்தவர் :

**எஸ். குழந்தைநாதன் பி. ஏ.**

**புதுமைப் பதிப்பகம் (பிரைவேட்) லிமிட்டெட்**
**காரைக்குடி**

## பதிப்பாளரின் குறிப்புகள்

**சுதந்திர தாகம்**—சுவைகனியும் வரலாற்றோவியம். நாட்டு நலனுக்காகவே வாழ்ந்து மடிந்த வீரனொருவரின் வெற்றி மடல். சிதறிக் கிடந்த மக்கள் சக்தியனைத்தையும் சேர்த்து ஒருமுனைப்படுத்தி ருஷ்ய நாட்டுச் சுதந்திரப் போரில் புதுப்பாதை காட்டிய மக்கள் தலைவனின் வாழ்க்கை ஏடு; உயிரியக்கமுள்ள உண்மை ஏடு.

**சுதந்திர தாகம்** என்ற இந்த நூல் ருஷ்ய சுதந்திரப் போர்க் காலத்தில் ஏற்பட்ட உள்நாட்டுக் கிளர்ச்சியில் உதயம் கண்டது. ஆண்டாண்டுகளாக அடக்குமுறைக்கும், ஆளாக் கொடுமைக்கும் சுரண்டலுக்கும் யதேச்சை வெறிக்கும் ஆளாகி அடங்கிக் கிடந்த மக்களின் இயக்கம் எரிமலையாகக் குமுறல் கண்டது. அந்தக் குமுறல்களையெல்லாம் ஒரு துறையில் சேர்த்து வெற்றிக்கு வழி வகுத்த வீரருள் ஒருவன் வாஸிலி இவானோவிச் சப்பாயேவ். (1887–1919,) மக்களின் மதிப்பெல்லாம் பெற்ற மாவீரனாகவும், தருதிறல் கொண்ட தளகர்த்தனாகவும் தலைமையேற்றுப் பணிபுரிந்த சப்பாயேவ்–சோவியத் மக்களின் சரித்திரத்தில் சிரஞ்சீவியத்துவம் பெற்றவன். அவனுடைய வீரச்செயல்களும், பராக்கிரமத் தொண்டுகளும் சோவியத் மக்களால் நன்றியுணர்வுடன் போற்றப்படுகின்றன; நாட்டுப் பாடல்கள், கிராமியப் பாடல்கள் முதலிய இலக்கிய வழியாக என்றென்றும் நின்று நிலவுகின்றன.

சப்பாயேவ் உண்ணவும் உடுக்கவும் வசதியற்ற ஏழைக் குடும்பத்தில் பிறந்தான்; குடும்ப வறுமையிலும் நாட்டுக் கொடுமையிலும் வளர்ந்தான்: வயிற்றைக் கழுவத் தச்சுத் தொழிலைக் கற்றுக் கொண்டான்; அத் தொழிலுக்குத் தக்க கூலியும் உழைப்பும் தேடி, சமாரா மாகாணம் முழுவதும் சுற்றி அலைந்தான். நலிந்து கிடக்கும் மக்கள் நிலையை, நாய்போல் வாழும் கேடுகெட்ட வாழ்வை, நேரில் கண்டான்; நெஞ்சம் புழுங்கினான். உரிமை வறட்சி மிகுந்த நாட்டில் சுதந்திர தாகப் போர்மூட்டத் துடித்தான். போர்வீரனாகச் சேர்ந்தான். 1917-ம் ஆண்டுவரை சாதாரணப் போர்வீரனாகவே இருந்தான் சப்பாயேவ்.

மாபெரும் அக்டோபர் புரட்சி சோவியத்தில் மூண்டது; கலி வீழ்ந்ததுபோலக் கண் மூடி ஆட்சியைத் தலைக்குப்புறத் தள்ளும் திருப்பணி தொடங்கியது. சாதாரணப் போர்வீரன் சப்பாயேவ், இன்னும் சாதாரண வீரனாகவே இருக்கவில்லை; உயிரும் உணர்வும் பெற்ற உரிமை வீரனாக, அனைவர்க்கும் வழிகாட்டும் வாழ்வுத் தலைவனாகச் சப்பாயேவ் வடிவெடுத்துவிட்டான். தன் முயற்சியாலும் திறமையாலும் தலைமைப் பதவிக்கு உயர்ந்தான்; செஞ்சேனைப் படைகளைத் திரட்டிக் குவிப்பதில் முழு ஈடுபாடு கொண்டான். புகழ் பெற்ற 25-வது ராணுவப் பிரிவின் ஒப்பற்ற தலைவனான். அப்பிரிவு 'சப்பாயேவின் பிரிவு' என்று அழைக்கப்படும் அளவிற்குப் பெருமை தேடித் தந்தான்.

சப்பாயேவின் தொண்டு, சோவியத்தின் புரட்சிப் பாதையில் புதிய திருப்பத்தை நிறுவிற்று. 1919 புரட்சிக்குப் பின்னர், புதிதாக நிறுவப்பட்ட சோவியத் குடியாட்சிக்கெதிராக வெளிநாட்டுப் படையெடுப்பும் உள்நாட்டுக் குடிகெடுப்பும் மிகுந்தன. உள்நாட்டுப் பெரும் நிலப் பிரபுக்கள், பணக்காரர்கள் ஆகியோரின் உதவியுடனும் வெளிநாட்டு ஏகாதிபத்தியக் கழுகுகளின் ஆதரவுடனும் கோல்சாக்கின் துருப்புகள் கீழ்த் திசையில் படையெடுத்தன. சோவியத் மக்களின் சித்தம் தளரா மன உறுதியாலும், கட்டுமாறா உடல் உறுதியாலும் அப்படையெடுப்பு சின்னாபின்னப்படுத்தப்பட்டது. சப்பாயேவின் தலைமையில் இயங்கிய 25-வது ராணுவப் பிரிவு இப்போர்களில் மேற்கொண்ட பங்கு மிகப் பெரிது.

கோல்சாக்கின் படையெடுப்பை எதிர்க்க வலுவான மக்கள் படை குவிய வேண்டுமெனக் குரல் கொடுத்தார், லெனின். குரல் கேட்ட மக்கள் கொதித்தெழுந்தனர்; தாமே வலியச் சேர்ந்தனர். சப்பாயேவின் ராணுவத்தில் சேரத் திரண்டுவந்த இவானோவாவின் நெசவாளப் பெருமக்களை முதன் முதலாக இந்த நாவலில் அறிமுகம் செய்துகொள்கிறோம். சுதந்திர தாக வீறுகொண்டு, துன்பத்தை யெல்லாம் தூவெனத் தள்ளிச் செல்லும் இவ்வீரர் படை கண்டு வியப்படைகிறோம். அவ்வீரர்களிலே ஒருவர் பியோடார் கிளிக்கோவ். நிதானப் போக்கும் நேர்மைத் திறமும் கொண்ட



இந்த நபரை நூல் முழுதும் சந்திக்கிறோம்; இயக்கக் கூட்டம் முதல் போர்க் களம்வரை எல்லாத் துறையிலும் பியோடாரின் அரசியலறிவும் சமுதாய உணர்வும் பின்னிச் செல்வதைக் காணுகிறோம். சப்பாயேவின் வாழ்க்கையையே வடிவமைத்துத் தரும் பியோடாரின் திறமை நம்மை மெய்சிலிர்க்கச் செய்கிறது.

இந்த நூலாலாசிரியர் திமித்திரி பர்மானுவ்தான், பியோடார் கிளிக்கோவாகக் காட்சி தருகிறார். கட்சித் தலைவன் ஒருவனுக்கு வேண்டிய குண நலன்களை யெல்லாம் கொண்டிலங்கும் லட்சியப் பாத்திரமாக பர்மானுவே தன்னை ஆக்கிக்கொண்டார்.

பர்மானுவ், சோவியத் புரட்சிகளில் நேர்நின்று பாடுபட்டவர், அதுவும் சப்பாயேவின் ராணுவத்தில் சிறப்பிடம் பெற்றவர். தான் நேரில் கண்டவற்றையும் உணர்ந்தவற்றையும் உருவாக்க முயன்றார். பர்மானுவ்; அந்தச் சிறு முயற்சி இந்தப் பெரு நூலாக விரிந்தது. "காரணமில்லாமல் என் உயிர் அழிவதற்குப் பதில், நாட்டு விடுதலைக்குப் பலிப் பொருளாகட்டும்" என்று முழக்கிய மாவீரன் சப்பாயேவின் வாழ்க்கை வரலாறாக முடிந்தது.

சப்பாயேவின் வாழ்க்கை, நாட்டு மாந்தரிடம் மூண்ட சுதந்திர தாகத்திற்குச் சுவை நீராயிற்று; சோவியத் நாட்டின் சுதந்திரப் போர் வரலாற்றில் மாற்றவியலாத நினைவுச் சின்னமாயிற்று.

சோவியத்து இலக்கியம் புதிய வடிவெடுத்த சமயத்தில் **சுதந்திர தாகம்** என்ற இந்த நூல் வெளிவந்தது. லட்சக் கணக்கான பிரதிகள் சோவியத்து ருஷ்யாவில் இந்த நூல் விற்பனையாகி இருக்கிறது.

தாங்கள் பெற்ற சுதந்திரத்தைச் சோவியத்து மக்கள் தங்கள் இன்னுயிரையும் ஈந்து எப்படிக் காத்தனர் என்பதை இந்த நூலில் நாம் காணலாம்.

காரைக்குடி,
1 நவம்பர் – 1957.

**அ. லெ. நடராஜன்.**
பதிப்பாளர்.

## பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | பாட்டாளி மக்களின் படைப் பகுதி | ... | 1 |
| 2. | பசும்புல் வெளியிலே... | ... | 34 |
| 3. | உரால்ஸ்க் | ... | 66 |
| 4. | அலெக்ஸாண்ட்ரோவ் - கை | ... | 88 |
| 5. | மாவீரன் சப்பாயேவ் | ... | 109 |
| 6. | போர் மூள்கிறது ; புறப்பட்டுச் செல்கிறார்கள் | | 144 |
| 7. | வழியிலே | ... | 220 |
| 8. | கோல்சாக்கை எதிர்த்து | ... | 246 |
| 9. | போர்முனைக்குப் புறப்படு முன் | ... | 268 |
| 10. | புருகுஸ்லான்மீது படையெடுப்பு | ... | 291 |
| 11. | பெலெப்பேமீது படையெடுப்பு | ... | 358 |
| 12. | முன்னேற்றம் | ... | 430 |
| 13. | ஊபா | ... | 473 |
| 14. | உரால்ஸ்க் நகரம் மீட்கப்பட்டது | ... | 508 |
| 15. | முடிவு | ... | 520 |


# சுதந்திர தாகம்

# 1

## பாட்டாளி மக்களின் படைப்பகுதி

ரயில் நிலையமே அதிர்ந்துவிடும்போல அவ்வளவு பெரிய கூட்டம். ஜனநெருக்கத்தால் பிளாட்பாரம்முழுதுமே கறுப்பாக இருந்தது. ஊக்கமும் உற்சாகமும் உணர்ச்சிப் பெருக்கமும் உந்த நிற்கிற இந்தக் கூட்டத்தை, அங்கு அணிவகுத்து நின்ற செஞ்சேனை வீரர்கள்தான் திருப்திப்படுத்த முடியும்; கட்டுப்படுத்த முடியும்; அந்தச் செஞ்சேனை வீரர்களை வாழ்த்தி வழியனுப்பத்தான் இவ்வளவு பேரும் திரண்டு அங்கே கூடியிருந்தனர். அந்தச் செஞ்சேனையினர் ப்ருன்ஷ் என்ற தளபதியால் கூட்டப்பட்ட பாட்டாளி மக்களின் படைப்பகுதியினர் ஆவர்; இவர்கள் அந்தநள்ளிரவில் கோல்சாக்கிற்கு எதிராகப் போர்புரியப் புறப்படபோகிறார்கள். அவர்களை வழியனுப்புவதற்காகவே இவானோவா—வோஷ்னேஸென்க் பஞ்சாலைத் தொழிலாளர்களும் இதர தொழிற்சாலைகளிலுள்ள தொழிலாளர்களும் ரயில் நிலையத்திற்கே வந்திருந்தார்கள். படைப் பகுதியினருள் தம் கணவன்மாரையும், நண்பர்களையும், உறவினரையும், உடன்பிறந்தாரையும், தந்தையரையும், தம் புதல்வர்களையும் வாழ்த்தி வழியனுப்ப அவர்கள் வந்து அங்கே கூடிக் கிடந்தார்கள்.

போருக்குப் புறப்படப்போகிற அந்தப் பட்டாளம், பாட்டாளிகளின் செஞ்சேனைப் பகுதி. அப்பொழுதுதான் போர்க்களத்தையே அது முதன் முறையாகச் சந்திக்கப் போகிறது. அப்படையின் வீரர்கள் எல்லாரும் அன்று முதல்தான் படைவீரர்கள். அந்தப்புதிய வீரர்கள் அத்தனை பேரும் மிகவும் மகிழ்ச்சியுடன் இருந்தனர்; உடைகளைக் கூடச் சரிவரப் போட்டுக்கொள்ளத் தெரியாத அப்பாவிக

ளாகவும், ஒன்றும் தெரியாத சாமானியர்களாகவும் புலப் பட்டனர். அவர்களில் பலர் அப்பொழுதுதான் முதன் முறையாகப் பட்டாளத்து உடுப்புகளை அணிந்திருந்தனர்; பாரமான உடுப்புச் சுமையைத் தாங்காது பலர் தவித்த னர்; சரிவரப் பொத்தான்களைப் போட்டுக்கொள்ளாது கோலாகலமாகப் பலர் காட்சியளித்தனர்; உடைகளைச் சரி வரப் போட்டுக்கொள்ளத் தெரியாவிட்டால் என்ன? அத ஞல் என்ன கெட்டுவிடப் போகிறது? அவர்களது ஆண்மை யும் அடங்காத சுதந்திர வேட்கையும் இதனுலா தணிந்து விடப் போகின்றன! இல்லவே இல்லை! ஒரு இளைஞன் இடுப்பே ஒடிந்துவிடுவதுபோலத் தன் இடுப்பு வாரை இறுகப் பிணித்திருந்தான்; இந்த அப்பாவி அணிந்திருந்த சட்டை ஒரு புறம் சுருங்கி மற்ருெரு புறம் பொம் மென்று துருத்திக் கொண்டிருந்தது. மூச்சுக்கூடவிட முடியாது உடை நெருக்கத்தால் தவித்த ஒருவன் லாடம் பொருத்தப் பட்ட பூட்ஸுகளைப் போட்டுக்கொண்டு குதித்துக்குதித்து நடந்துகொண்டிருந்தான்; தோளின் குறுக்காக இடுப்பு வாரு டன் பொருத்தப்பட்ட தோல் பட்டையில் தோட்டாக்கள் குலுங்க, இடுப்பின் மறு பக்கத்தில் துப்பாக்கி தொங்க, மறு புறத்தில் கையாலெறியும் வெடிகுண்டுகள் அசைய ஆடி ஆடி நடந்துகொண்டிருந்தான் மற்ருெரு புதுவீரன்!

இங்ஙனம் எல்லோரது கண்களிலும் படும்படி சாதனைகளும் சாகசங்களும் செய்துகொண்டிருந்த புது வீரர்களை வைத்த கண் வாங்காது பார்த்துச் செயல் மறந் திருந்தனர் கூடியிருந்த கூட்டத்தின் பெரும் பகுதியினர்; எஞ்சியிருந்தவர்கள் அன்புடனும் ஆர்வத்துடனும் வீரர் களை உற்சாகப்படுத்திக்கொண் டிருந்தனர்; அவர்களது உற்சாகக் குரல்கள் எங்கும் எதிரொலித்தன!

"புதுசா இருந்தா என்னய்யா கெட்டுப்போச்சு... பொறந்தவுடனே கத்துக்கிட்டுத்தான் போர்க்களம் போக ணுமா என்ன? இவுங்களும் எல்லாத்தையும் ஒரு கொடியிலே



தெரிஞ்சுக்குவாங்க. போர்முனைக்குப் போயிட்டாத் தன் ஞலே வந்திடுது; அதுவும் ஒரு நொடியிலே புரிஞ்சுடுது."

"நீ சொல்றது ரொம்ப சரி. அது ஒண்ணும் கண்ணு மூச்சி ஆட்டம் இல்லே. போனவுடனே தன்ஞலே ரோசம் பொத்துக்கிட்டு வந்திராதா...!"

உடனே கூட்டத்திலே பரபரப்பும், கும்மாளியும் மிகுந்தன; ஒருவரை ஒருவர் முட்டி மோதித் தள்ளிக் கொண்டு எட்டிப் பார்த்தனர்.

"அந்தா நிற்கிருனே டெரெண்டி...அவனை இதுக்கு முன்ஞலே தெரியாதே; ஊறுகாய்க் கடையிலே அசல் கரிக் கட்டை மாதிரியே இருந்தான். இப்ப என்னடான்னு ராணு வச் சட்டையைப் போட்டுக்கிட்டு ரோந்து நடைபோடுருன். ஆள் அழகா, வாட்டசாட்டமா இருக்கான்."

"ஆமாய்யா....இப்ப நல்லாப் பெருத்திட்டான். அவன் நடக்கிற அழகும், அவனுடைய தளபதிக் கத்தி தரையிலே படும்படி தொங்குவதும் அவனை அசல் தளபதியாகவே காட்டுதய்யா....! இல்லையா! ...ஆமா...ஆமா."

"யாரு...டெரெண்டியா....ஹி....ஹி....நம்ப டெரெண் டியா அப்படி இருக்கான்....ஹி...ஹி. ஏய்...டெரெண்டி... உன்னைத்தானய்யா...அந்தப் பட்டாக் கத்தியை மடக்கிப் பையிலே போட்டுக்கய்யா. இல்லாட்டி அதைக் கொஸாக் கியர்கள் உன்னிடமிருந்து பிடுங்கிக் கொண்டுவிடுவார் களய்யா" என்று உரக்கக் கிண்டல் செய்தான் ஒருவன். உடனே கூட்டம் முழுவதும் சிரிப்பலைகள் மோதி எதி ரொலித்தன; எல்லோரும் கேலிசெய்யத் துவங்கிவிட் டனர்.

"ஆமா டெரெண்டி! கத்தியைப் பத்திரமா மடக்கி வைச்சுக்க; உன் அம்மா கண்டாள்ணு காய்கறி நறுக்க வேணும்னு கேட்டாலும் கேட்டுவிடுவாள்."

"ஆமாம்...நீ நடக்கிற நடையிலே கத்திமேலே தடு மாறி விழுந்து அதை உடைச்சுப்பிடாதே டெரெண்டி!"

"அய்யா! அரை வேக்காட்டு ஜெனரல், பச்சைவெட்டுத் தளபதி.. கத்தி பத்திரம்; கைவிரல் பத்திரம். உருவுற வேகத்திலே ஒவ்வொரு விரலாக் காலிபண்ணிப்பிடாதே."

"ஹி....ஹி....ஹா...ஹா..." என்ற கேலிச் சிரிப்புக் குமுறி மறைந்தது.

அந்த டெரெண்டி போக்கின் நல்ல இளைஞன்; இருபத்தெட்டு வயது; எதற்கும் அஞ்சாத நெஞ்சன்; உணர்ச்சி ததும்பும் தோற்றம்; உறுதி மிகுந்த நோக்கம்; தலையில் சிவப்புத் தொப்பி, முகத்தில் ஓரிரு மச்சங்கள்—இவையெல்லாம்தான் டெரெண்டி. இந்தக் கிண்டலை யெல்லாம் கேட்டான்; ஒரு நமுட்டுச் சிரிப்புடன் காலில் பின்னித் தொங்கிய கத்தியைத் தள்ளிவிட்டுக்கொண்டே நடந்தான். தன்னையே காட்சிப் பொருளாக வைத்துக் கேலி செய்யும் அத்தனை பேரையும் எப்படி மட்டம் தட்டுவதென்றே அவனுக்குப் புரியவில்லை.

"கத்தியை எப்படி வைத்துக்கொள்ளுவதென்று வேண்டுமானால் காட்டட்டுமா?" என்று வீராவேசத்துடன் பயமுறுத்துவதுபோலச் சூளுரைத்தான் டெரெண்டி.

"பூ என்னத்தையா காட்டிடப்போறே டெரெண்டி; இங்கே ஒண்ணும் காட்டிடாதே, சரக்குக் காலியாகிவிடும். எல்லாம் அங்கேபோயிச் சேர்த்துக்காட்டய்யா; இல்லாட்டி கூர் மழுங்கிடும் ஆமாம்."

"இந்தாப்பா........தம்பிக்கு ரொம்ப வீரம் வந்திடுச்சு போலிருக்கு; நீ இந்தச் சூரிய காந்திப்பூ விதைகளை வாயிலே போட்டு மென்னுக்கிட்டே பேசப்பா டெரெண்டி!"

"டெரெண்டி!....நீபோட்டிருக்கிறது கோட்டுத்தானா... இல்லே கன்றுக்குட்டித் தோலை உறிச்சுதான் போர்த்திப் பிட்டாங்களா."

"ஹி...ஹி...ஹா....ஹா."

இதற்குமேல் டெரெண்டியால் தாங்க முடியவில்லை; அத்தனை பேருக்கும் எதிராகச் சரிக்குச் சரியாகப் பேசவும் தெரியவில்லை. வாய்க்குள்ளேயே முணுமுணுத்தபடி, ரயில் பெட்டிகளைத் தாண்டிச் செஞ்சேனை வீரர்களது வெள்ளத்தோடு கலந்து ஒளிந்துகொண்டான்.



டெரெண்டி மட்டு மல்ல. எந்த இளைஞன் அகப்பட்டாலும் சரி, கூட்டத்தினர் விடுவதாயில்லை. வண்டி புறப்படும்வரை சரியான பொழுதுபோக்குக் கருவிகளாக அவர்களைப் பயன்படுத்திச் சிரிப்பு வெடிகளை வீசிக்கொண்டிருந்தனர். வழியனுப்பவந்த துக்கத்தையும் மறந்து வாய்விட்டு வயிறு குலுங்கச் சிரித்துக்கொண் டிருந்தனர். உடனே நெஞ்சம் உருக்கும் சோகக் காட்சிகள் மிகும்; உடனே கேலியும் சிரிப்பும் மறையும்; அமைதியும் ஆறுதலும் அதிகரிக்கும். கூட்டத்தினரின் உணர்ச்சியும் உற்சாகமும் மாறி மாறிச் சென்றன. சுண்டக் கடலைமுதல் சண்டைச் செய்தி வரை காரசாரமாகப் பேச்சும் வளர்ந்தது.

கூட்டத்தில் ஒரே பேச்சு மயமாக இருந்தது; ஒருவர் சொன்னர்: "இந்தச் சண்டையிலே கட்டாயம் ஒரு கை பார்த்துவிடுவோம். இதுக்கு முன்னலேயே போதுமான பூட்ஷுகளும், உடைகளும், துப்பாக்கிகளும் இல்லாமல் நமது வீரர்கள் சிணுங்கிக்கொண் டிருந்தார்கள். இப்பொழுது இந்த ரயில்வண்டி வழியப் புறப்படப்போகிற செஞ்சேனையினரைப் பாருங்கள்; பாட்டாளி மக்களாகிய நாம் தந்த படைச் சாதனங்களுடன் அணிவகுத்துப் புறப்படப்போகும் நமது அருமந்த மக்களைப் பாருங்கள்; அத்தனை பேருக்கும் அத்தனை வசதிகளும் தந்துள்ளோம். எல்லாம் நாம் பாடுபட்டு ஆக்கித் தந்தவை. கிட்டத்தட்ட ஆயிரம் பேருக்கு மேலே வேண்டியவற்றை யெல்லாம் தந்திருக்கிறோம்."

"எத்தனை பேருக்கு என்று சொல்கிறீர்கள்?"

"ஆயிரம் பேருக்கு மேலேதான். அது மட்டு மல்ல, இன்னும் பல ஆயிரம் பேருக்கு வேண்டியவற்றை யெல்லாம் சேமித்துள்ளோம். உனக்கு என்னவாவது சாப்பாடு

கீப்பாடு வேணும்னாத் தயங்க வேண்டாம். ஒட்டிப்போன வயிற்றை இன்னும் உலரப்போட வேண்டாம். எல்லாவற்றிலும் ஏராளம் சேர்த்துவிட்டோம். ஏராளம் ஏராளம்."

"ஆமாம். எல்லாவற்றையும் செம்மையாக்கிவிட்டோம்" என்று கரகரத்த முரட்டுக் குரலொன்று எதிரொலித்தது.

"நாம் மட்டுமா தயாராகிவிட்டோம். அந்தக் கோல்சாக்கைச் சேர்ந்த பயலுகளுந்தான் தயாராகிவிட்டார்கள். இப்பொழுது யூரல் பகுதியிலே கிளம்பிக் குழப்பம் செய்கிறார்கள்."

"அடடா, ஏம்ப்பா இப்புடி நெருக்குறிங்க. ஆளையே அப்பளம் ஆக்கிப்பிட்டீங்களே சேசே!" என்று முண்டியடித்துக்கொண்டு, வியர்க்க விறுவிறுக்க மெலிந்த ஒரு கிழவர் கூட்டத்தைவிட்டுப் பிதுங்கி வெளியில் வந்தார்.

"அது சரி. எங்கே குழப்பம் வந்தாலும் சரி. நாம் எப்படி நிலைமையைச் சமாளிக்க வேண்டு மெனப் பாருங்கள். வரவர மோசமாகிக்கொண்டே இருக்கிறது" என்று ஒரு உணர்ச்சியற்ற அவநம்பிக்கைக் குரல் கிளம்பி அமுங்கியது.

அந்த அவநம்பிக்கை ஆசாமிக்கும் ஒருவர் சுடச்சுடப் பதில் தந்தார். "எது எப்படி எப்பொழுது வரும்னா எவராலே நிதானிக்க முடியும்? சண்டையின்னா எதுவும் எப்பவும் வரும். எதுவும் தானா நடந்துவிடாது; நாம்ப முயன்று நடத்திவைச்சாத்தான் எதுவும் நடக்கும். இது நமது முதல் படி. இன்றுதான் நமது போராட்டம் துவங்குகிறது. நமது ஆயிரம் காளைகள் களம் பாயப் போகிறார்கள். இதுவே பெரிய காரியம். முதல் படியே பெரிய முயற்சிதான். பத்திரிகையிலே யெல்லாம் படித்தோம். போராடும் ராணுவத்தினரிடையே போதிய தொழிலாளர்கள் இல்லையென்ற பற்றாக்குறைச் செய்தியைப் படித்தோம். இப்பொழுது நாம் தொழிலாளத் தோழர்களைத் துப்பாக்கி முனையுடன் அனுப்பிவைக்கிறோம். பிறரைவிடப் பொறுப்



புணர்ச்சியும் கடமை நெறியும் கொண்டவர்கள் தொழிலாளத் தோழர்கள்தாம். நம்முடைய பவ்லூஷ்கா லோபாரைத் தெரியுமல்லவா? இரும்புபோன்ற உறுதியும் மலைபோன்ற தெம்பும் கொண்ட அந்த நல்லிளைஞன் எதற்கும் சளைத்தவனா என்று பாருங்கள்."

"ஆமரம். பவ்லூஷ்காவை எங்களுக்குத் தெரியாதா என்ன?" என்றனர் கூட்டத்தினர்.

"ஆம் நம்மவர்கள் வெறும் நாட்டுப்புறத்தவர்கள் அல்லர். நரம்புகள் எல்லாம் இரும்பாகி, நினைவெல்லாம் உணர்வுபெற்ற வீரர்கள். அதோ மார்வா கொஸானாயா நிற்கிறாள்! அவளைத் திரும்பிப் பாருங்கள். சாதாரணப் பட்டிக்காட்டுப் பெண் என்று எண்ணி ஏமாந்துவிடலாமா? இங்கே இருக்கிற அத்தனை வீராதி வீரர்களையும் சின்னப் பாப்பாக்கள் ஆக்கிவிடுவாள் மார்வா. அவள் அவ்வளவு துணிச்சல்காரி."

"மார்வா" என்று கூட்டத்தில் தன் பெயர் சொல்லப்படுவதைக் கேட்ட மார்வா எழுந்து வந்தாள்; என்ன வெட்டிப் பேச்சு வேண்டியிருக்கிறது என்று துடுக்குடன் கேட்கத்தான் வந்தாள். மார்வா ஒரு நெசவுக்காரி. நல்ல உடற்கட்டும், படர்ந்த நெற்றியும் கூரிய நோக்கும் கொண்ட வடுவிழுந்த முகமும், சுழன்று செல்லும் நீலக் கருவிழிகளுடன் நெருங்கிவந்து நின்றாள். அவளுக்கு வயது முப்பத்தைந்து ஆகிவிட்டதாக மதிப்பிட முடியாத அளவிற்கு அவ்வளவு இளமை யெழில்கொட்ட நிமிர்ந்து நின்றாள். ராணுவ உடை, நீளக் கால்சட்டை, கனமான பூட்ஸுகள் இவை யெல்லாம் பூட்டி, நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும் துலங்க நின்றாள். தலைமுடி அழகாக நீவப்பட்டுத் தலையில் வைக்கப்பட்டிருந்த தொப்பி அவருடைய பின்புறத் தலையில் தொங்கி அழகு செய்தது.

"என்னை ஏன் வம்புக்கிழுக்கிறீர்கள்?" என்று கேட்டாள் மார்வா.

"அம்மாடி! உன்னை யேம்மா நாங்க போயி வம்பு இளுக்கணும். உனக்கே வம்பு இளுக்கத் தெரியாதா என்ன? நான் சும்மா சொன்னேன்."

மார்வா கொஸானுயா வந்து....ஒரு பொண்ணு இல்லே; சரியான முரட்டுப் பொட்டைக் குதிரையின்னு சொன்னேன்."

"என்ன சொன்னே....நான் என்ன அப்படியா முரட்டுக் குதிரையாத் திரியுறேன்?"

"ஐயையோ இதை வேறே நாங்கள் சொல்லணுமா? பின்னெ என்னவாம்...நான் சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன். விளையாட்டுக்கு என்னெத்தைச் சொன்னேன்; நீ மட்டும் உடுப்பைப் போட்டுக்கிட்டாயின்னு சரியான சிப்பாய் ஆயிடுவே; உனக்கிட்டே அவ்வளவு தீரமும் வீரமும் பொங்குதுன்னு பெருமையாச் சொன்னுச் சீறி விழுகிறியே."

"நான் சரியான சிப்பாயோ இல்லையோ. தாய் நாட்டுரிமை காக்க நான் போரங்கி பூண வேண்டுமென்ற தேவை யேற்பட்டது. நான் புறப்பட்டுவிட்டேன்; இதிலென்ன கேலி கிண்டல்?"

கேலி செய்தவன் மார்வாவின் துடிப்பை உணர்ந்து அடங்கிவிட்டான், தன் பேச்சை மாற்றத் துவங்கினன். "அது சரி, அது சரி; தேவையின்னு புறப்பட வேண்டியது தானே நியாயம். நான் அதுக்குச் சொல்லலே. நீ பாட்டுக்குப் போர்முனைக்குப் புறப்புட்டுட்டா உன் குடும்பம், குழந்தை குட்டி இதெல்லாம் என்ன ஆகிறதுன்னு தான் சொல்ல வந்தேன்."

"ஆமா. சொல்ல வந்தே; நான்தான் குடும்பத்தே தாங்கப் போறேனே...நாடே கொள்ளை போறபோது என் குடும்பம் மட்டும் இருந்து என்ன செய்யுறது. அதுனலே தான் வீட்டிலே எல்லா ஏற்பாடும் பண்ணி வைத்துவிட்டு நானே புறப்பட்டு விட்டேன்."



"நான் அந்த ஏற்பாட்டைச் சொல்லலே. உன் சொந்த விஷயத்தைப் பத்தித்தான்" என்றுன் கிண்டலாக.

"சொந்த விஷயம் எனக் கென்னய்யா சொந்த விஷயம். என் பிள்ளைகளுக்கெல்லாம் வீட்டிலேயே தகுந்த ஏற்பாடு செய்துவிட்டேன்."

"அது சரிதாம்மா...நீ அதுக்கு மேலே என்ன செய்வே, உன் பிள்ளைகளெ நாங்க கவனிச்சுக்கிறேம்மா, நல்லாக் காப்பாத்துறோம், உன் கடமையெ நீ பாரம்மா; தெரியாமெ வம்பு இழுத்துட்டேன். மன்னிச்சிடம்மா" என்று தானே திருந்தி அடங்கினன் அந்த வம்பிழுத்த வாயாடி!

"அது மட்டு மல்லம்மா...உங்க எல்லோருடைய வேலைகளையும் இங்கே நாங்களே கவனிச்சுக்கிறோம். நாங்களும் போர்முனைக்கு வேண்டுமென்ற தாய் நாட்டுக் குரல் வந்தால் தாவி எழுவோம்" என்று வீரச் சபதம் எடுக்கும் அளவிற்கு அவனுக்கும் வீரத்தை ஊட்டிவிட்டாள் மார்வா!

"அதுதான் சரி ஐயா...அதுதான் வேண்டும். கட்டாயம் உங்கள் தொண்டு நாட்டுக்குத் தேவைப்படும் காலம் வரும். எங்களுடைய இந்த ஒரு சிறு படைப் பகுதி மட்டும் போதும் என்று அயர்ந்துவிடலாமா? அதிகம் அதிகமாய்ச் செஞ்சேனை வீரர்களைப் பெருக்க முயலுங்கள்" என்று முழக்கினுள் மார்வா.

மார்வாவின் முழக்கத்தினல் இளைஞர்களிடையே புத்துணர்ச்சியும் ஊக்கமும் விளைந்தது. ராணுவ உடை தரித்தவர்கள் ரயிலுக்குக் காத்துக் காத்து அலுத்துவிட்டார்கள். உடனே போர்க்களம் போக வேண்டு மென்று துடிதுடித்தார்கள். இதைக் கண்ட மார்வா மேலும் சொன்னுள்:

"நம் இளைஞர்கள் துடிதுடிக்கிருர்கள். போர்க்களம் புறப்பட முந்தி நிற்கிருர்கள். அது அவர்களுக்குரிய

இயல்பும் இயற்கையும் தானே! எவ்வளவு சீக்கிரம் போர்க் களம் காணுகிறோமோ அவ்வளவு நல்லது என்று தான் எண்ணுகிறார்கள். காத்திருந்து அலுத்துவிட்டார்கள். ஏன் இவ்வளவு தாமதப்படுத்துகிறார்கள், ரயில் புறப்பட வேண்டியதுதானே....ஓ! ஆண்ட்ரேவ் ஏன் இன்னும் ரயில் புறப்படவில்லை? எப்பொழுதுதான் அனுப்பப் போகிறார்களாம்!" என்று அதிகாரத் தொனியில் உரக்கச் சத்தமிட்டுக் கூப்பிட்டாள் மார்வா.

அவள் கூப்பிட்ட ஆண்ட்ரேவ் பெட்ரோகிரேடைச் சேர்ந்த பாட்டாளி மகன். அங்கிருந்து சில காலத்திற்கு முன்னர்தான் இவானோவாவிற்கு வந்திருந்தான். இருபத்தி மூன்று வயதே ஆனவன் ஆண்ட்ரேவ் அவனது வெளிறிய முகத்தில் நீலக் கருவிழிகள் நிலையற்றுச் சுழன்றன; மெலிந்த தேகத்தில் உணர்ச்சி வெள்ளம் பொங்கிப் பொங்கி எழுந்தது. கிழிந்த சட்டையும், காவி வர்ண ராணுவச் சட்டையும் அணிந்திருந்தான். தலையில் சிவப்புத் தொப்பி கவசமாகக் காட்சி தந்தது. மார்வாவின் குரல் கேட்டதும் வெகு வேகமாக வந்து ராணுவ மரியாதையுடன் மார்வாவின் எதிரில் நின்று ராணுவ வணக்கம் அடித்துத் தனது புகாரைக் கூறினான் மார்வாவிடம்:

"மாட்சிமை மிகுந்த தங்களுக்குத் தெரிவிக்கிறேன், இன்னும் நாற்பது நிமிட நேரத்தில் ரயில் புறப்படுமெனப் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்!"

அவன் சட்டையைப் பிடித்துக் குலுக்கிய வண்ணம் மார்வா சொன்னாள்: "வந்திருக்கும் இவர்களிடமிருந்து விடை பெற்றுக்கொள்ளப் போகிறோமா இல்லையா! கொட்டுகிற பனியில் எல்லோரும் வந்து குவிந்து கிடக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் ஆறுதலாக ஏதேனும் பிரிவு உபசாரமாகப் பேசினால்தானே நல்லது. எங்கே அந்த கிளிக்கோவ்? எங்கே போய்த் தொலைந்துவிட்டான் மனுஷன்!"



இதைக்கேட்ட ஆண்ட்ரேவ் அவளிடமிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு, மீண்டும் ராணுவ வணக்கம் செய்து, அதே முரட்டுக் குரலில் "மாட்சிமையுடையீர்! கிளிக்கோவ் தன்னுடைய தொப்பையைத் தேத்தண்ணீரால் நிறைத்துக்கொண்டிருக்கிறான் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்" என்றான்.

எல்லோரும் சிரித்தனர். ஆண்ட்ரேவை ஒரு தட்டுத் தட்டினாள் மார்வா. "போதும் போதும் சனியனே! இந்த அவலட்சணம் பிடித்த மரியாதையை நிறுத்தித் தொலை. மகா தளபதியைக் கண்டுப்பிட்டே பாரு; மரியாதையோடே பேச ஆரம்பிச்சுட்டே" என்றாள்.

ஆண்ட்ரேவ் உடனே தன் கோமாளித்தனத்தை மாற்றிக்கொண்டு இயல்பாகப் பேசத் தொடங்கினான்.

"அன்புடைய மார்வா அம்மையே! உங்களுக்குப் பேச்சென்றாலே பிடிக்காதோ?" என்று ஏகத்தாளமாகக் கேட்டான்.

மார்வா இதைக் கவனிக்கவே இல்லை. தன் முன்னங் கால்களை ஊன்றி எழும்பிப்பார்த்த வண்ணம், "அதோ வருவது அவர்களாகத்தான் இருக்க வேண்டும்" என்றாள்.

அவளுக்குப் பக்கத்தி லிருந்த அத்தனை பேரும் அவ் விதமே எழும்பி நின்று திரும்பிப் பார்த்தனர். கூட்டத்தினருக்கு அருகில் மூவர் நெருங்கி வந்தனர். அவர்களில் ஒருவன் பவ்லூஷ்கா லோபார். நிமிர்ந்த உடலும், உயர்ந்த தோற்றமும், கருத்த மயிர் முடியும், நிலைத்த காந்தக் கண்களும் கொண்ட துணிச்சல்காரன். சுற்றி யிருந்தோருக் கெல்லாம் கையை உயர்த்தி விடை தந்த வண்ணம் வெகு லாவகமாக நடந்து வந்துகொண் டிருந்தான்.

அவனுக்குப் பக்கத்தில் எலெனா குனிட்ஸினா நின்று கொண்டிருந்தாள். அவளும் இருபத்திரண்டே வயதினள்; நெசவுக்காரி; எளிமையும் இனிமையும் கொண்டவள். இனிய

தோற்றமும் இசைந்த குரலும் அமைந்தவள். தெளிந்த நம்பிக்கையும் முதிர்ந்த அறிவு நலமும் பெற்றவள். அவளது ஆணித்தரமான குரலொலியை எல்லா நெசவாளர்களும் அடிக்கடி விரும்பிக் கேட்டவர்கள். ஆம்! எலெனு எல்லோரது இதயத்தையும் கவர்ந்தவளாக விளங்கினுள். அவள் அரைகுறை ராணுவ உடுப்புகளை அணிந்திருந்தாள். தலையில் சிவப்புக் கவசத்திற்குப் பதிலாகச் சிறிய கைக்குட்டையைக் கட்டியிருந்தாள்; படை வீரர்களின் கம்பளிக் கோட்டிற்குப் பதிலாக மெல்லிய கருப்புச் சட்டையை, அந்த ஜனவரி மாதத்து உறைபனிக் குளிரையும் பொருட்படுத்தாது அணிந்திருந்தாள். கூட்டத்தை நெருங்கி வந்ததும் அவளுடைய முகத்திலே புதுச்சோபை படர்ந்தது.

எலெனுவிற்கு அருகில் நின்றவன்தான் பியோடார் கிளிக்கோவ்; அவன் நெசவாளி அல்லன். சொல்லப்போனுல் அவன் ஒரு தொழிலாளியே இல்லை. ரொம்ப நாளைக்கு முன்னர் மாஸ்கோவிலிருந்து கிளம்பி இங்கே வந்தான்; பிறகு இங்கேயே ஒட்டிக்கொண்டான். முடிந்தவரை பாடம் போதித்துக் கிடைத்த சொற்ப ஊதியத்தை வைத்துக் கொண்டு பறவைபோல வாழ்ந்து வயிற்றைக் கழுவினுன். பெரும் புரட்சிக் காலத்தில் முயன்று முன்னுக்கு வந்தான்; பல ரகசியக் கூட்டங்களையும் பொதுக் கூட்டங்களையும் அமைத்துப் புரட்சிக் கருத்துக்களைப் பரப்பும் அமைப்பாளனுக உயர்ந்தான். திறமையுடன் கூட்டங்களைக் கூட்டுவான்; கூட்டங்களிலே உணர்ச்சி உந்தக் கொட்டி முழக்குவான். அவனது பேச்சிலே அறிவுச் சுடர் மின்னுவிட்டாலும் உணர்ச்சித் திவலைகள் சரமாரியாகப் பெய்யும். கிளிக்கோவ் என்ருல் எல்லாத் தொழிலாளர்களும் விரும்புவார்கள். தங்களிலேயே ஒருவனுக அவனைக் கருதிப் போற்றுவார்கள்.

லோபார், குனிட்ஸினு, கிளிக்கோவ் ஆகிய மூவரையும் கண்ட கூட்டத்தினர் 'உஷ்' என்ற சத்தத்துடன் பிளாட்பாரத்தில் நெருக்கிக்கொண்டு முன்வந்தனர். பல குரல்கள் பேசின.



"பிரிவுபசாரப் பேச்சுக்கள் எல்லாம் உடனே துவங்கக் கூடும் என்று எதிர்பார்க்கிறேன்."

"ஆமாம். ரயில் கிளம்ப வேண்டிய நேரமும் நெருங்கிக்கொண்டிருக்கிறது."

"விடை தர வேண்டிய நேரம் வந்துவிட்டது, வீட்டிற்குச் சென்று கண்ணயர வேண்டும். தூக்க மயக்கமும் கொட்டும் பனியும் வெடவெடக்க வைக்கின்றன."

"என்ன பிரிவு உபசாரப் பேச்சு வேண்டியிருக்கிறது? போய் வாருங்கள் என்று சொல்லி முத்தம் தந்துவிட்டால் எல்லாம் முடிந்தமாதிரிதான்."

"அதோ மணி சத்தம் கேட்கிறதே!"

"இது முதல் மணிதானே? இல்லையா?"

"ஆமாம். முதல் மணிதான்."

"சரியாகப் பன்னிரண்டு மணிக்கு ரயில் பெருமூச்சு விட்டுப் புறப்பட்டுவிடும்."

"சரியாக, நடுச் சாமத்தில் புறப்பட வேண்டும் என்பதற்காகவே தாமதப்படுத்துகிருர்கள்."

இங்ஙனம் எல்லா வகையாகவும் பேசிக்கொண்டிருந்தனர் கூட்டத்தினர், அவர்கள் வெவ்வேறு வகை உடையணிந்திருந்தனர்.

அந்த ரயில் நிலையப் பிளாட்பாரம் மிகவும் குறுகியது, இவ்வளவு கூட்டத்தை என்றுமே கண்டறியாதது. எல்லோரையும் தனக்குள்ளே அடக்கிக்கொள்ள முடியாமல் தடுமாறிக் கிடந்தது. பலர் ஜன்னல் கதவங்களில் தொத்திக்கொண்டிருந்தனர், பலர் ரயில் நிலையத்துக் கூரைமீதேறி அமர்ந்து தலை குப்புறக் கவிந்து கிடந்தனர், இன்னும் சிலர் கம்பி வேலிகளிலும், இடுக்கு வழிகளிலும் அமர்ந்திருந்தனர். பலர் ரயில் வண்டிகளின் முகட்டிலேயே அமர்ந்துகொண்டு "குசலப்ரச்னம்' செய்துகொண்டிருந்

தனர், பலர் வேடிக்கை பார்ப்பதில் தங்களது நெருக்கடித் தொல்லைகளையெல்லாம் மறந்திருந்தனர். ஏணிப்படியாக இருந்தாலென்ன? நடைபாதையானால் என்ன? எங்கும் ஒரே நெரிசலும் நெருக்கடியும்தான், பிரிவு உபசாரப் பேச்சு நடக்கவிருந்த சிறிய மேடைக்கு அருகில் வர எல்லோரும் முயன்று நெருக்கினர். தள்ளுவாரும், நெட்டி நெருக்குவாரும், முணுமுணுப்பாரும், சபிப்பாரும் பெருகப் பெருக நெருக்கடியும் மிகுந்துகொண்டே வந்தது.

கடைசியாக கிளிக்கோவ் மேடைக்கு வந்தான். 1914-ம் வருஷத்து அழியாத சின்னமான சாயம் போன பழைய கோட்டுடன் மேடை ஏறினான். அவனுடைய கைகள் பனியால் மரமரத்துப் போய்விட்டன; மரத்துப்போயிருந்த கைகளைச் சட்டைப் பைக்குள் போடுவான்; உடனே கை மடித்து முஷ்டியை உயர்த்திக் கரங்களை வீசுவான். கடந்த இரண்டு இரவுகளாக அவனுக்குச் சரியான தூக்கம் இல்லை, எனவே அவனுடைய முகம் வழக்கத்தைவிட வெளிறிப் போய் இருந்தது. கடந்த சில நாட்களாக அவனுக்குக் கடுமையான வேலை. மிகவும் சோர்ந்து போயிருந்தான். எனவே அவனது பேச்சில் முன்பிருந்த கவர்ச்சியும் தெளிவும் இல்லை; கரகரத்த குரலில், உயிரற்ற பாணியில், கிணற்றுக்குள்ளிருந்து குலவையிடுவதுபோல உணர்ச்சியின்றிப் பேசினான்.

ஆம்! கிளிக்கோவ் முதலில் பேசவேண்டும் என்றுதான் எல்லோரும் விரும்பினார்கள். படையினரின் சார்பாக வழியனுப்ப வந்தவர்களுக்கு முதன் முதலாக விடை கூற வேண்டியவன் அவன்தான். ஏற்கெனவே நல்ல பனி பெய்துகொண்டிருந்தது. காலா காலத்தில் வீட்டிற்குச் சென்று பெயருக்குக் கண்ணயர்ந்துவிட்டு மறு நாட் காலையில் வேலைக்குச் செல்ல வேண்டியவர்கள் அத்தனை பேரும். எனவே அவர்களால் அந்த அகால நேரத்தில் நீண்ட பிரசங்கம் எதையும் கேட்க முடியாது. இதைக் கிளிக்கோவ் நன்கு உணர்ந்துகொண்டான். ஒரே கருமேகம் படர்ந்தது



போல மொய்த்துக்கிடந்த பாட்டாளித் தோழர்களது பெருந்திரளைக் கண்டான்; கண்ணுக்கு எட்டிய தூரம்வரை விளக்கொளியில் அவர்களது தலைகளையே கண்டான்; அந்த விளக்கொளிக்கு அப்பால் சூழ்ந்திருந்த அந்தகார இருட்டிலும், மூடுபனிப் படலங்களிலும் இதுபோன்ற பல்லாயிரக் கணக்கான மக்கள் நிற்பதுபோலவே உணர்ந்தான்; எண்ணிக்கையற்ற மக்களின் உரிமைப் போர் முழக்கிக் களம்பாயச் செல்வோரைக் கடைசி முறையாகக் கண்களால் பருகி விடைதர வந்திருப்பதாகக் கருதினான். தாயகமே திரண்டு வந்திருப்பதுபோலப் பெருமிதம் பெற்றான், மேடையேறிக் கூட்டத்தினரைக் கண்ணோட்டிப் பார்த்ததும் அவன் உடலிலெல்லாம் உணர்ச்சிக் காந்தம் பாய்ந்தது; நரம்புகள் முறுக்கேறின. இந்தக் கூட்டத்தினர் எவ்வளவு முக்கியமானவர்கள்; இவர்களை இப்பொழுதுதானே கடைசி முறையாகப் பார்க்கப்போகிறோம்? படையில் செல்லும் வீரர்களிலே எத்தனை பேர் திரும்பி வரப் போகிறார்கள்? தான் திரும்பி வந்து திரும்பவும் இவ்வளவு பெரிய கூட்டத்தவரிடம் பேச முடியுமா? இந்த ஏக்கம் அவன் நெஞ்சத் திரையில் சுழன்று சுழன்று சென்றது.

இந்தச் சோக எண்ணங்கள் அவனுடைய சொல்லோட்டத்தைத் தடை செய்தன; பேச வேண்டிய கருத்துக்களைக் குலையச் செய்தன. ஏற்கெனவே குறைந்த அவகாசத்தில் திடீரென்று பேச வேண்டியதிருந்தது. எதைப் பேசுவது என்று எண்ணிப்பார்க்கக்கூட நேரமில்லாத சமயத்தில் ஏற்பட்ட உணர்ச்சிக் கொந்தளிப்பு அவனை நிலைதடுமாற வைத்தது. என்றாலும் மிக உரத்த குரலில் கிளிக்கோவ் கத்திக் கத்திப் பேசத் தொடங்கினான்:

“தொழிலாளத் தோழர்களே! நாமனைவ நம் இன்னும் சிறிது நேரம்தான் சேர்ந்திருப்போம். கடைசி மணி அடித்ததும் பிரியா விடைபெற்றுப் பிரிந்துவிடுவோம். உங்கள் சார்பாக அணிவகுத்துச் செல்லும் செஞ்சேனையினர் சார்

பாகப் பிரிவு நவில்கிறேன். எங்களை மறந்துவிடாதீர்கள்; உங்களோடு தோள் இணைந்து நின்ற உங்கள் தோழர்களை மறந்துவிடாதீர்கள். நாங்கள் எங்கே போகிறோம், எதற்காகப் போகிறோம் என்பதையெல்லாம் எண்ணிப்பார்க்க மறந்துவிடாதீர்கள். உங்கள் சேவையும் நாட்டுக்குத் தேவை என்ற முதல் அழைப்பு வந்ததும் எங்களைத் தொடர்ந்து வரத் தயாரா யிருங்கள். எங்களோடு எப்பொழுதும் தொடர்பு வைத்துக்கொள்ளுங்கள். செய்தியாளர்களையும் இயன்ற தம்படிகளையும் அடிக்கடி போர்முனைக்கு அனுப்புங்கள். உங்களால் எவ்வெவற்றை அனுப்பி உதவ முடியுமோ அவற்றையெல்லாம் தாராளமாக உதவுங்கள். தோழர்களே போர்முனை கொடியது, பயங்கரமானது. உண்ணப்போதிய உணவு கிடைக்காது. இங்கு இருப்பதைவிடக் கஷ்டம் மிக மிக அதிகமாக யிருக்கும். இதையுணர்ந்து உதவத் தவறாதீர்கள். எங்களில் பெரும்பாலோர் எங்களது குடும்பங்களையெல்லாம்விட்டுச் செல்கின்றோம். தகப்பனில்லாத குழந்தைகளையும் தலைவனில்லாத குடும்பங்களையும் கண்கலங்க விட்டுவிடாதீர்கள். பட்டினியோடுதான் அவர்களை விட்டுச் செல்லுகிறோம். அவர்களைப் பாதுகாத்து அரவணைக்க மறந்துவிடாதீர்கள். போர்முனையிலே குழிகளில் பதுங்கிப் போரிடுவது கொடுமையானது. இயற்கைச் சோதனைகளை வென்று முன்னேறுவது பயங்கரமானது. எதிரிகளின் தாக்குதல்களை முறியடித்து முன்னேறுவது நெஞ்சு நடுக்குறுவது. அவையெல்லாவற்றையும்விட ஆயிரம் மடங்கு எங்களுக்குத் தொல்லை தரக்கூடியது எங்களது குடும்பக் கவலை. உதவியின்றி, உணர்வார் இன்றி மறக்கடிக்கப்பட்டுச் சாகின்றனர் என்ற செய்தி கேட்டால் சோர்ந்துவிடுவோம்; செயல்மறந்து பின்வாங்கிவிடுவோம். அதை மறந்துவிடாதீர்கள். பிரிவதற்கு முன்னர் இன்னொரு செய்தியையும் வலியுறுத்த விரும்புகின்றேன். உழையுங்கள், உழையுங்கள், அயராது உழையுங்கள், சோர்வின்றி



உழையுங்கள்! நீங்கள் எல்லோரும் நெசவாளப் பெருமக்கள். இவானோவாவில் நீங்கள் நெய்து குவிக்கும் ஆடைகளே, ஓரன்பர்க், யூரல் பகுதிக் குளிரில் நடுங்கும் எங்களுக்குச் சூடு தரும் கவசமாக உதவும் என்பதை மறவாதீர்கள். நீங்கள் நெய்யும் ஆடைகள் யாருக்குப் பயன்பட்டாலும் சரி, அயராது உழைத்துக்கொண்டே யிருங்கள். போரில் வெற்றி பெறுவது எங்களுடைய துப்பாக்கி முனைகளால் மட்டுமே முடியும் என்று தப்புக் கணக்குப் போட்டுவிடாதீர்கள்; உங்களுடைய இடையறாத உழைப்பும், ஒரு மனப்பட்ட உழைப்பும் வேண்டும் என்பதைப் புறக்கணித்துவிடாதீர்கள். நாமெல்லாரும் ஒருவரை ஒருவர் மீண்டும் சந்திக்க முடியுமோ என்னமோ? சந்திக்கலாம் என்ற நம்பிக்கையுடனே விடைபெறுகிறோம். அப்படியே நம்மால் சந்திக்கவியலாது போய்விட்டாலும் அதற்காகக் கரைந்துருகிக் கடமையை மறக்க வேண்டாம். புரட்சிப் போரிலே தனிப்பட்ட சடலங்கள் எத்தனையோ உருளும். இவற்றையெல்லாம் கணக்கிட்டுச் சோர்ந்துவிடலாகாது, நாட்டு நலன் பெரிது. நமது உரிமை பெற்ற வாழ்வு மிக உயர்ந்தது. அந்த உயர்ந்த இலட்சியத்தை நிறைவேற்றுவதற்காகவே விடைபெறுகிறோம். உங்களைப் பிரிகிறோம். எல்லாச் செஞ்சேனைப் படையினரின் சார்பாகவும் பிரிவு விடைபெறுகிறேன். வணக்கம்!'' என்று முடித்தான் கிளிக்கோவ்.

அதுவரை நிலவிய நிசப்தம் கலைந்தது. உறைபனியைக் கிழித்துவந்த ஊதல் காற்றைவிடப் பெரும் முழக்கம் கூட்டத்தில் எழுந்தது. ''தோழர்களே! சென்று வாருங்கள்; உங்களுக்கு நல்லதிர்ஷ்டம் பெருகட்டும். உங்களை மறக்கவே மாட்டோம்; எதையும் நாங்கள் மறக்கவே மாட்டோம்'' என்ற முழக்கம் கூட்டத்திலிருந்து எக்காளமிட்டது.

உடனே ஆரவாரம் அமுங்கியது; மீண்டும் சோக அமைதி நிலவியது. அந்த அமைதி ஒரு வினாடியே நீடித்

தது. "எலெனா! அதோ எலெனா பேசவருகிறாள்—குனிட்
ஸினாதான்" என்ற முணுமுணுப்பு பல கோணங்களில்
இருந்து கேட்டது.

எலெனா மேடைமீது ஏறினாள். அவளுடைய கவர்ச்சி
நிறைந்த கருவிழிகள் மருட்சியின்றிக் கூடியிருந்தாரைச்
சுழன்று சென்றன. கன்னங்களிலே புரண்டு கிடந்த தலை
மயிரைச் சடையோடு சேர்த்துப் பிணைத்த வண்ணம் மெது
வாக தனக்குத் தானே பேசுபவள்போலப் பேசத் தொடங்கி
னாள் எலெனா.

"தோழர்களே! விடைபெறும் முன்னர் நானும் சில
வார்த்தைகள் சொல்ல விரும்புகின்றேன். போர்முனைக்
குச் செல்வது நாங்கள் மட்டு மல்ல. நீங்களும்தான். ம்பார்
முனைத் துருப்புகளின் முற்பகுதி நாங்கள்; பிற்பகுதி
எங்களுக்கு உதவும் நீங்கள்; ஒருவரைவிட்டு மற்றொருவர்
மட்டும் தனியாக நின்று போராடிவிட முடியாது. நாம்
ஒருவருக்கு ஒருவர் உதவி செய்துகொள்ள வேண்டும்.
அதுதான் நமது மிக முக்கியமான வேலைத்திட்டம். எங்
களுக்குப் பின்னணியில் எல்லாம் செவ்வனே நடக்கின்றன
என்பதை நாங்களும் உணர வேண்டும்; உங்களது முன்
னணியில் எல்லாக் கடமைகளையும் சிறப்பாக ஆற்று
கிறோம் என்பதை நீங்களும் அறிய வேண்டும். எங்களது
பின்னணி நீங்கள்; உங்களது முன்னணி நாங்கள். ஒவ்
வொருவரது கடமைகளையும் நாம் செம்மையாக நிறை
வேற்றினால் எல்லாம் வெகு சுலபமாக முடியும். அதற்கு
மாறாக ஏதேனும் இங்கே கோளாறு ஏற்பட்டால் சண்டை
யில் முன்னேறுவது மிகவும் கஷ்டம்தான். கடந்த இரண்டு
வருடங்களாக நாம் பட்ட பாடெல்லாம் வீணாகப் போய்,
விழலுக்கு இறைத்த நீராக ஆக நாம் பாடுபடவில்லை.
நாம் பட்டபாடுகளும் சிந்திய வியர்வையும் வீணாகிவிடுமா?
இல்லை, இல்லை, ஒருபோதும் இல்லை. நமது உழைப்பு
அனைத்தும் தகுந்த பலனைத் தரும். மற்றொரு சிறப்பான



செய்தியும் சொல்ல விரும்புகின்றேன். அதுதான் பெண்
களின் தொண்டைப்பற்றி! இன்று புறப்படுகிற போர்
வீரர்களுடன் நாங்கள் இருபத்தாறு பேர் செல்கின்றோம்.
தாய் நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள இக்கட்டான சூழ்
நிலையை அறிந்து எங்கள் கடமைகளை இயன்ற அளவு செய்ய
நாங்களும் புறப்பட்டுவிட்டோம். எங்கள் தொண்டு நாட்
டுத் தேவை; எனவேதயக்கமின்றி, தாய்க்குலத்தின் சார்
பாக நாங்கள் புறப்பட்டுவிட்டோம். பெண்கள் பகுதியைப்
பாருங்கள். இந்தப் பெண்டிர், தாயர், மனைவியர், புதல்வி
யர், சோதரிகள், இதயங்கவர்ந்த எழில் அணங்குகள்,
எண்ணங்கவர்ந்த காதல் தெய்வங்கள் அத்தனை பேரும்
போர்ப்படையினராகச் செல்கின்றார்கள். உங்களது அன்பு
பெற்ற பெண்மக்களின் சார்பாக நான் வணக்கம் தெரிவிக்
கிறேன்! தோழர்களே! வணங்குகிறேன். தோழர்களே!
உற்சாகத்தைத் தளரவிட்டுவிடாதீர்கள், நாங்களும்
உணர்ச்சியை வளர்த்து வருவோம்."

உடனே "தளரவிட மாட்டோம்" என்ற முழக்கம்
இடியாக முழங்கியது. எல்லோரும் ஆயிரம் குரல்களாக
ஒன்றுசேர்ந்து வீர சபதம் செய்தனர்; உணர்ச்சி குன்ற
மாட்டோமென்று சூளுரைத்தனர்.

"எலெனா ஒரு சாதாரணப் பெண்ணில்லை. அவள் ஒரு
சரியான அரசியல் மேதை. தலைசிறந்த நாட்டுத் தலைவி"
என்ற பாராட்டுரைகள் அலைமோதின.

கூட்டத்திலிருந்த ஒரு கிழட்டு நெசவாளி நெருக்கித்
தள்ளிக்கொண்டு மேடைமீது ஏறினான். சிக்குப்பிடித்த
தொப்பியும் கிழிந்து நைந்த பூட்ஸும் தன்னை அழகு செய்ய
உற்சாகத்துடன் தாவி ஏறினான் மேடையில். சுருக்கம்
விழுந்த முகத் தசைகளிலே உணர்ச்சி கொப்புளித்தது;
உதடுகளிலே சொற்கள் துடித்து வெளிவந்தன கண்ணீ
ரால் நிறைந்த கண்களிலே புத்தொளி பாய்ந்தது; முகத்
திலே புதுச் சோபை படர்ந்தது.

"ஆம்! நான் பதில் சொல்லப் போகிறேன். 'சென்று வாருங்கள் செல்வங்களே' என்று விடைதரப் போகிறேன். இங்கு கூடியுள்ள எல்லோரின் சார்பாகச் சில சொல்ல வந்திருக்கிறேன்" என்று அந்தக் கிழவன் சற்றுத் தயங்கினான். தயக்கம் சிறிது நேரமே நீடித்தது. தலையை உயர்த்தித் துணிவுதுள்ளப் பேசத்தொடங்கினான்: "எதற்காக உங்களையெல்லாம் இங்கே அணிவகுத்து நிறுத்தி அனுப்பப் போகிறோம் என்பதன் அவசியம் எங்களுக்கு நன்றாகத் தெரியும். நீங்களே சென்று எல்லாவற்றையும் பார்ப்பீர்கள். எல்லாவற்றிலும் நேரடியாக ஈடுபட்டு உணர்வீர்கள். ஒருவேளை நீங்கள் திரும்பி வராமலே மாயும்படி நேரிடலாம். அதனால் என்ன? உங்களைப் பெற்றுப் பேணி வளர்த்த உங்கள் பெற்றோர்களாகிய நாங்கள் சொல்லுகிறோம், மனத் துணிவுடன் சொல்லுகிறோம். நீங்கள் புறப்படுங்கள் என்று. எவ்வளவு தொல்லை ஏற்பட்டாலும் தயங்காது முன்னேறுங்கள். நீங்கள் போக வேண்டியது மிகவும் அவசியம். எனவே எப்பாடுபட்டேனும் நீங்கள் போயே ஆக வேண்டும். பாசத்தாலும் நேசத்தாலும் தயங்கித் தயங்கிப் பின்னிடுவது கோழைத்தனமானது. உங்கள் கடமைகளில் ஒருசிறிதும் வழுவிவிடாதீர்கள். உங்கள் கடமைதான் உங்களுக்கு முக்கியமானது, தலையாயது, முதன்மையானது. அங்கே ஏதேனும் அளவுகடந்த கஷ்டம் நேரிட்டால் உடனே எங்களை எண்ணிப் பாருங்கள். உரிமையும் உணர்வும் இல்லாத கோழைகளாக நாங்கள் ஆக்கப்பட்டுள்ள இழிநிலையை எண்ணிப் பாருங்கள். தாய்நாட்டு மக்கள் நிலையைச் சிந்தித்துப் பாருங்கள்; உங்கள் பொறுப்பை உணருங்கள். மலைபோல வந்த துன்பங்கள் எல்லாம் பனிபோல மறையக் காண்பீர்கள்; துணிந்து போராடுங்கள்; முயன்று முன்னேறுங்கள். நாங்களும் உறுதி கூறுகிறோம். உங்களுடைய குழந்தைச் செல்வங்களையும் மனைவி மக்களையும் கண்கலங்காது காப்போம். கடமை



யெனப் போற்றுவோம் என உறுதி தருகிறோம். எங்களால் ஏராளமாகச் செய்ய முடியாவிட்டாலும், இயன்றதையெல்லாம் செய்து நாங்கள் காப்பாற்றுவோம். போர்க்காலத்தே பொதுமக்களாகிய எங்களுக்கு அதைக் காட்டிலும் வேறு எது முக்கியம்? சரிதானே! வேறென்ன இருக்கிறது? நீங்கள் செல்ல வேண்டியதைத் தவிர வேறென்ன இருக்கிறது?" என்று தயங்கித் தயங்கிச் சோகத் தொண்டையில் கம்மச் சொன்னான் அந்தக் கிழவன்.

அதற்குமேல் வார்த்தைகள் எழவில்லை. சற்றுத் தயங்கினான். இதற்கு முன்னர் என்ன பேசினோம் என்று நினைவுபடுத்திப் பார்த்தான்; எதுவும் புலப்படவில்லை. சொற்கள் சோர்ந்துவிட்டன, உதடுகள் மறுத்துவிட்டன. கண்கள் குளமாக நிறைந்து சொரிந்தன. கைகளை உயர்த்தி அசைத்தவாறே "விடைபெறுங்கள் செல்வங்களே! விடைபெறுங்கள். இதுவே கடைசிச் சந்திப்பாகக் கூட இருக்கலாம். விடைபெறுங்கள்" என்று உரக்க முழங்கிவிட்டுக் கீழே இறங்கினான்.

கன்னங்களிலே ததும்பி வழிந்த கண்ணீரை அந்த அழுக்குச் சட்டையால் துடைத்தவாறே தடுமாறித் தடுமாறி இறங்கிக்கொண்டிருந்தான். கண்ணீர் அவன் கண்களில் மட்டும் பெருகவில்லை. கூட்டத்தவரில் பாதிப் பேருக்குமேல் கேவிக் கேவி அழும்படி செய்துவிட்டான் அந்தக் கிழவன்.

"நீங்கள் சொன்னதெல்லாம் ரொம்பப் பொருத்தம் தாத்தா! ரொம்பப் பொருத்தம். உணர்ச்சி வெள்ளத்திலே தத்தளிக்க வைச்சுட்டீங்க போங்க!" என்று எழுந்த பாராட்டுக் குரல்களைக் கிழவன் சட்டை செய்யவேயில்லை.

கிழவன் இறங்கியதும் மேடையில் எவரும் ஏறவில்லை. இரண்டாவது மணியும் அடித்துவிட்டது. கூட்டத்தினரது ஆரவாரம் மணியோசையை அமுக்கிவிட்டது. கடைசியாக கிளிக்கோவ் மேடைமீது ஏறினான்:

"சரி; வணக்கம்! விடைபெறுகிறோம், தோழர்களே! கடைசியாக விடை பெறுகிறோம். மீண்டும் சந்திப்போம்; வெற்றியோடு சந்திப்போம்" என்றான் கிளிக்கோவ்.

உடனே பெருங் கோஷம் கிளம்பியது. அடுத்த வினாடியே அப் பேரிரைச்சல் அடங்கியது.

"அவரவர் இடங்களுக்குச் செல்லுங்கள்" என்று தளபதி உத்தரவிட்டார்.

உடனே அவசரம் அவசரமாகக் கைகளை வீசுதலும், தொப்பிகளைத் தூக்கி யெறிந்து வழியனுப்புவதும், சிவப்புத் தலைக் கவசங்களைத் தூக்கி அசைத்து விடை பெறுவதும் ஓடி ஓடி முத்தமிட்டுக் கண்ணீர்களைத் துடைத்துக் கொள்வதும் கண்கொள்ளாக் காட்சிகளாக நிகழ்ந்தன. அவசர ஆலோசனைகளும், பாதுகாப்புப் புத்திமதிகளும், துணிச்சல் மிகுந்த யோசனைகளும், உணர்ச்சி உந்திய முழக்கங்களும், பிரிவுப் பேச்சுக்களும் ஆதரவு மொழிகளும் மிகுந்தன. சோகத்தால் சூழப்பப்பட்ட செஞ்சேனை வீரன் ஒருவனைக் கட்டிப் பிடித்தவண்ணம் சோர்ந்து போயிருந்தாள் ஒரு தாய்; பெற்ற பாசத்தால் மகனைப் பிரியப் பொறுக்காது துடிதுடித்து மயங்கிக் கிடந்தாள் அவள். ஓருயிரின் ஈருடல்கள் போல, பிரியவியலாது தாயும் தனயனும் தடுமாறி யிருந்தனர். தாய் விம்மினாள், கோவென்று கதறி அழுதாள். தனயன் தயங்கினான். வந்த கண்ணீரை உறுதியுடன் அடக்கிக் கொண்டு வைராக்கியத்துடன் மௌனமாக உட்கார்ந்திருந்தான். எங்கு திரும்பினாலும் இந்தச் சோகக்காட்சிகள்தான்!

படையினர் அத்தனை பேரும் ரயில் பெட்டிகளிலே அடைந்தனர். சன்னல்கள் வழியாகப் பார்க்கும்பொழுது மங்கிய வெளிச்சத்தில் ஆயிரக்கணக்கான கண்களும் கரங்களும் ஓர் உருவம் பெற்றுப் புறப்படப் போவது போலத் தெரிந்தன.

மூன்றாவது மணியும் அடித்துவிட்டது. ஊதிகள் காதைத் துளைத்தன. ஆந்தைபோல அலறிக்கொண்டு



ரயில் புறப்பட்டது. பெருமூச்சுவிட்டபடி தயங்கித் தயங்கி இருந்தது. தண்டவாளத்தில் உறைந்து கிடந்த பனிக் கட்டிகளைத் தவிடாக்கிய வண்ணம் வேகம் வேகமாகச் சக்கரங்களைச் சுழற்றியது.

செஞ்சேனையினர் சன்னல்கள் வழியாக ரயில் நிலையத்தையும் மங்கிய விளக்கொளியில் கலந்த கூட்டத்தையும் கண்டனர். ரயில் நிலையத்தில் நின்றவர்கள் ஓடுகின்ற ரயிலில் செல்லும் ஒட்டிய உள்ளங்களை எண்ணித் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டிருந்தனர். ரயில் கண்ணுக் கெட்டிய தூரத்தைக் கடந்துவிட்டது. காரிருளைக் கிழித்துக்கொண்டு வேகமாகச் சென்றுகொண்டிருந்தது. கூட்டத்தினரின் உற்சாகமெல்லாம் போய்ப் பன்மடங்கு சோர்வு மிகுந்துவிட்டது. தள்ளாடிய கால்களுடனும் தளர்ந்த நெஞ்சத்துடனும் சோக எண்ணங்களுடனும் ஜனவரி மாதத்துக் கடுங் குளிரையும் எண்ணாது வீடு திரும்பினர்!

புறப்பட்ட போர்வீரர்கள் இவானோவா-வோஷ்னெஸென்க்கிலிருந்து சமாரா வருவதற்கு இரண்டு வாரங்களாயிற்று. அதுவே ரொம்ப விரைவு என்றுதான் சொல்ல வேண்டும். இரண்டு வாரங்கள் தொடர்ந்து பயணம் செய்தும் அவர்கள் களைப்படைந்துவிடவில்லை. புதிய பல இயற்கைக் காட்சிகளையும், நாட்டு வனப்புகளையும், அழகிய சுற்றுப்புறங்களையும் கண்டு புதிய புதிய அனுபவங்களைப் பெறுகிற உற்சாகத்தில் களைப்பே அவர்கட்குத் தோன்றவில்லை. வழியில் உள்ள சிறுசிறு ஸ்டேஷன்களில் வண்டி நிறுத்தப்படும்போதெல்லாம் அலுப்பும் சலிப்பும் அவர்களுக்குத் தோன்றவே இல்லை. உறசாகமாகச் சுற்றிச் சுற்றிப் பார்த்துப் பொழுதைக் கழித்தனர்.

ஒவ்வொரு ரயில் நிறுத்தத்திலும் அந்தப் பட்டாளத்து ரயிலுக்குச் சரியான வேலை இருந்தது; நீண்ட பயணம் முழுவதும் சொற்பொழிவுகளும், ஆய்வுக் கூட்டங்களும், உரையாடல்களும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தப் படைப் பகுதியினரான போல்ஷெவிக் நெசவாளிகள் அறிவுநலமும் கட்டுப்பாட்டுணர்வும் கொண்டவர்கள். எனவே, வழியில் சந்தித்த எல்லோரிடமும் நல்லபிமானமும் நற்பெயரும் பெற்றனர். அந்தக் காலத்தில் பட்டாளத்தினர் என்றாலே நல்ல பெயர் கிடையாது. ஏராளமான கொரில்லாக் கொள்ளையர்களும், சில்லரைப் படைவீரர்களும் கூடிக்கொண்டு சிறு சிறு நகரங்களையும், பட்டணங்களையும் முற்றுகையிட்டுக் கொள்ளையடிப்பார்கள். எத்தகைய கட்டுப்பாடும் இல்லாமல் மனம்போன போக்கில் வேட்டையாடித் திரிவார்கள், அவ் வெறியர்கள். நிஜமாகவே பட்டாளத்திலிருந்து ஓடிவந்த உதவாக்கரைகளும், வேலையற்ற சோம்பேறிகளும் சேர்ந்துகொண்டு, பரந்த ருஷ்ய நாட்டின் ஒரு கோடியிலிருந்து மறு கோடிவரை ஊர் ஊராகச் சென்று தட்டிப் பறித்து வருவார்கள். ஊதியமில்லாத சேவகர்கள்போல நடிப்பார்கள். எண்ணற்றவர்களைக் கொண்ட இந்தக் கும்பல் நாடு முழுவதும் பெருகிவிட்டது. அவர்கள் நினைத்தால் கலகம் செய்வார்கள், கொள்ளையிடுவார்கள், அவர்களை ஒடுக்கப் போதிய சட்டமோ, அவற்றை நிறைவேற்றத்தகுந்த பாதுகாப்போ நாடுமுழுவதும் இல்லை. புதிதாகத் தோன்றிய சோவியத் ஆட்சியும் வலுவான கட்டுக்கோப்புடன் நாட்டின் பெரும்பகுதிக்கு இன்னும் பரவவில்லை.

ஒரு ஜதை கூரிய கண்கள், சிறிய சலசலப்பைக்கூட அறிந்துகொள்ளக் கூடிய திறன்வாய்ந்த செவிகள், வேலை செய்வதற்கு ஏற்ற தகுதியான இரு கரங்கள், தனியாக இருக்கிற இதயம், தோள்பட்டைகள்மீது பொருந்தி இருக்கிற தலை இவை மட்டும் இருந்துவிட்டால் போதாதது என்பதை அந்தக் காலத்தில் ஒவ்வொரு நபரும் உணர்ந்தனர். எனவே அராஜகம் எங்கும் தலைவிரித் தாடியது. மனிதப் பண்புடன் வாழ முடியாத மிருக எதேச்சாதிகாரமே எங்கும் மிகுந்திருந்தது.



சோவியத் நாட்டின் நிலையுணர்ந்த நல்லவர்கள் பலர் போர்முனைக்குச் சென்றுவிட்டனர். எஞ்சியவர்கள் இடைத்தட்டுப் பேர்வழிகளின் கொள்ளைகளையும் வெறியாட்டங்களையும் ஒடுக்க முடியாது தவித்தனர். எல்லாவற்றையும் எப்படித்தான் ஒரே சமயத்தில் சமாளிப்பது என்று ஒன்றும் புரியாமல் திகைத்தனர். கலகமும் குழப்பமும் மிகுந்திருந்த காலத்தில் வெகு தூரத்தில் உள்ள நாட்டுப்புறங்களிலும், காடுகள் அடர்ந்த கிராமப் பகுதிகளிலும், விவசாய உள்நாடுகளிலும் என்னென்ன கொடுமைகள் நடந்தன என்று எவராலும் விவரிக்க முடியாது! எங்கும் கொடுமை! எதிலும் கொடுமை! கண்களெல்லாம் புண்ணாக இரத்தம் வடிய நைந்து நொந்தனர் விவசாயிகள். பொறுப்பற்ற உணர்ச்சியற்ற சில பைத்தியக்காரர்கள் சோவியத் ஆட்சி முறையே அனைத்திற்கும் காரணம் என்று கதைகட்டினர். அதைஒழித்துக் கட்டவேண்டும் என்று தூண்டிவிட்டனர்.

இங்கே பழைய ஆட்சிமுறை நிலவ இல்லை; புதிய ஆட்சி முறையும் வரவில்லை. பாதுகாப்பு அற்றவர்கள் யாரை அடைக்கலம் புகுவது? நாட்டில் ஏன் இவ்வளவு குழப்பம் வந்தது? குழப்பமும் கொடுமையும் மிகுந்தது யாரால் தெரியுமா? எல்லாம் அந்தப் போல்ஷெவிக்குகளால்தான் என்ற வதந்தி கிளப்பப்பட்டது. மக்களுக்கு ஏற்பட்டுள்ள தொல்லைகளுக்கும் துயரங்களுக்கும் அந்தப் பயல்கள்தான் காரணம் என்று தூபம்போட்டனர்.

புதிதாக ஆட்சிப் பொறுப்பேற்ற சோவியத் நிர்வாகம் மக்களுடையது. அது இப்பொழுதுதான் கட்டுக்கடங்காத பெருங் கொள்ளைக் கூட்டத்தினரை யெல்லாம் வளைத்துப் பிடிக்க முயன்று வருகிறது என்பதைக்கூட ஜனங்களில் பலர் இன்னும் உணரவில்லை. கொள்ளைக்காரர்களைக் கிளப்பிவிட்டதற்குக் காரணமே போல்ஷெவிக்குகள் ஆட்சிதான் என்று பலர் முடிவுகட்டிவிட்டனர். வேளாண்மைப் பகுதி மக்கள் தமக்கு ஏற்பட்ட எல்லா இன்னல்களுக்கும்

காரணஸ்தர்கள் போல்ஷெவிக்குகளே என்று துணிந்து திட்டினர்.

“திருடர்கள், வெறியர்கள், கொள்ளையர்கள்” என்றெல்லாம் போல்ஷெவிக்குகளை அவர்கள் ஏசினர்.

நாடு முழுவதும் இத்தகைய மனோநிலை நிலவிய நேரத்தில்தான், இந்தப் புதுப் பட்டாளம் வந்தது. முற்றிலும் புதிய பாட்டாளிகளின் படைப் பகுதியினரைத் தாங்கிய ரயில் வந்தது! இந்த ஆயிரம் போல்ஷெவிக் நெசவாள வீரர்களும் நல்லவர்கள், நாட்டு நிலையுணர்ந்தவர்கள், கடமையை அறிந்தவர்கள், கண்ணியம் உள்ளவர்கள், கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவர்கள். இவர்களது போக்கும், நடத்தையும், பழக்கமும், நோக்கமும் எல்லோரது இதயங்களையும் கவர்ந்தன. அவர்களிடம் எல்லா மக்களும் நெருங்கிச் சென்று உரையாடினார்கள்; நாட்டு நடப்பை எடுத்துச் சொன்னார்கள். கேட்ட கேள்விகளுக்கு அனுதாபத்துடன் இவர்கள் பதில்கூறினர். இந்தப் பட்டாளத்தினர் யாரையும் பயமுறுத்தவில்லை, எதையும் கொள்ளையிடவில்லை. மனம் போனவாறு களஞ்சியத்தில் புகுந்து சூறையாடவில்லை. எதை வாங்கினாலும் காசு கொடுத்துத்தான் வாங்கினார்கள். இதைக் கண்ட விவசாயிகள் வியந்தனர். இதற்கு முன்பு எந்தச் சிப்பாய்களும் இப்படி நடந்துகொண்டதில்லை. இந்த வீரர்களின் போக்கு அவர்களுக்குப் புதியதாக இருந்தது; இதுதான் அவர்களுக்குப் பிடித்தமாகவும் இருந்தது. இந்த நல்ல பெயரைத் தாங்கிய வண்ணம் ஊர் ஊராகக் கடந்து அந்தச் செஞ்சேனையினர் பயணம் செய்துகொண்டிருந்தனர். அவர்களுடைய நல்லுரைகளைக் கேட்க வழியெல்லாம் கிராம மக்கள் திரண்டுவந்தனர்.

இச்செஞ்சேனையரின் போராட்டம் பெருகிக்கொண்டே சென்றது. இன்று புறப்பட்டுச் செல்லும் இந்த இவானோவா நெசவாளிகளின் பகுதியினர், பின்னர் மூண்ட உள்நாட்டுப் போர்வரை ஓயாது ஓடி ஓடிப் போரிட்டனர். எந்தப் போர்



முனையில் பார்த்தாலும் இவானோவா வீரர்களே காணப்பட்டனர். சீனத்து எல்லை, சைபீரியக் காடுகள், ஓரன்பெர்க் புல்வெளிகள், போலந்து எல்லைப்புறம் முதலிய எல்லாப் போராட்டப் பகுதிகளிலும் அயராது உழைத்தனர். அவர்கள் எங்கெங்கு சென்றனர், எங்கெங்கு செல்லவில்லை என்றுகூடக் கணக்கிட்டுச் சொல்ல முடியாது! சந்தித்த போர்க்களங்களில் எல்லாம் குருதி கொட்டப் போரிட்டுக் கொட்டி முழங்கினார்கள். அதனால்தான் பிற்காலத்திலும் அவர்கள் ஒருமுகமாகப் பாராட்டப்பட்டார்கள்; போற்றிப் புகழப்பட்டார்கள். எல்லையற்ற சோவியத் நாட்டின் பரந்த நிலப்பரப்பு முழுவதும் அவர்களுடைய இனிய புகழும் விழுமிய தொண்டும் இன்னிசையாகப் பரவின; இதயகீதமாக எதிரொலித்தன; எல்லோரது நெஞ்சிலும் நிறைந்தன!

அவர்களுடைய அத்தகைய புனிதப் புகழ் யாத்திரையின் முதல் பயணம்தான் இது! பல்கிட்டும் கடுங்குளிரில் பகல் இரவாகப் பயணம்செய்துகொண்டிருக்கிறார்கள். வழியில் எல்லாம் மனிதத்தன்மையோடும் வரம்போடும் பழகினார்கள். மக்களுக்குத் தம்மால் இயன்ற சேவைகளைச் செய்துகொண்டே வந்தார்கள். அவர்களுக்குப் பொழுதுபோக்குகள் படித்தலும் உரையாடலும்தான்! சிறிதுநேரம் படிப்பு, பிறகு அலுவல், அதன் பின்னர் தொடர்ந்த சிந்தனைகள், தனிப்பட்ட சிந்தனைகள் - நாட்டுத் துயர் தீர்க்கத் தன்னால் என்ன செய்ய முடியும் என்பதுபற்றிய சிந்தனைகள் - இப்படியே அவர்களது பொழுது கழிந்தது. பயணமும் கடந்தது. அவர்கள் எல்லா வகையிலும் தங்களைத் தகுதியாக்கிக் கொண்டார்கள். அவர்களுக்கு நாட்டு நிலையும் போக்கும் நன்றாகத் தெரியும். அவர்கள் துப்பாக்கி முனைகளோடு மட்டுமே போர் செய்ய வேண்டி இருக்காது; அறிவுக் கூர்மையோடும் நெஞ்சத் தெளிவோடும் சொற்போரிலும் வெற்றி பெற வேண்டி இருக்கும். எனவே எல்லா வகை நூல்களையும் படித்துப் பயன்கொண்டனர். சாமான் வண்டியில்கூட

ஒரு பெரிய புத்தகப் பொட்டலம் இருந்தது. அந்தப் புத்தகங்களைப் படிப்பதற்காகச் சாமான் வண்டியையும் பலர் முற்றுகையிட்டுக்கொண்டனர்.

காக்கைகளின் கூட்டம் ஒன்று கரைவது போன்ற முழக்கத்துடன் வண்டியில் வாதப் பிரதிவாதங்கள் நடந்தன, இடையிலே திடுமெனப் பறவை ஒன்று பாடுவது போன்று, கணீர் என்ற குரலில் பாட்டு ஒன்று கிளம்பும்:

நாம் எல்லோரும் இளம் கொல்லர்கள்—நமது இதயங்களுக்குச் சாவே இல்லை.
மனிதர்களுக்காக நாம் இன்பத்தை உருவாக்குகிறோம்.
ஆகவே, உங்கள் சறுக்குவண்டியை உயர்த்தி, மேலே பீடத்தில் வைத்து,
மீண்டும் அதைச் சரிபார்த்துச் செப்பனிடுங்கள்.

கூச்சலிடும் சாமான் வண்டிகளிலிருந்தும், ஆமை வேகத்தில் நகருகிற அந்த வண்டிகளிலிருந்தும் வீரம் செறிந்த பாடல்கள் புல்வெளி எங்கும் வியாபித்துப் பரவின; சக்கரங்களின் முழக்கத்தைக் காட்டிலும் அதிக முழக்கத்துடன் இடிபோன்று முழங்கி வெற்றிச் செய்தியை எங்கும் பரப்பின. எப்படி எப்படி எல்லாம் அந்த நெசவாளிகள் பாடினார்கள்! எத்தகைய பாட்டுக்கள் அவை! பதுங்கி இருந்து அவர்கள் போராடின ஆண்டுகள் வீணுக்கு அல்ல என்பது தெரிந்துவிட்டது. இதன் பயனாகத்தான் பின்னர் போர்முனைகளில், இவானுவாவோஷ்ஸென்ஸ்க் பட்டாளத்தைச் சேர்ந்தவர்கள் பாடின போராட்டப் பாடல்களைப்போல், வேறு எந்தப் பட்டாளத்தாலும் பாட முடியாத நிலை இருந்தது. அவர்கள் பாடின பாடல்களில் நேர்மையும் உணர்ச்சிப் பிரவாகமும் எல்லையற்ற அன்பும் மிகுந்து இருந்தன. இந்தப் பாடல்கள் மற்ற பட்டாளத்தினரையும் உற்சாகப்படுத்திப் பெருமைப்படும்படி செய்தன. மனித இதயத்தைப் பாடல் எவ்வளவு தூரமோ கவர்ந்துவிடுகிறது!



இங்ஙனம் பயண மெல்லாம் பாட்டும் படிப்புமாகப் பொழுது ஓடிற்று. ரயிலும் ஓடிக்கொண்டிருந்தது.

சமாராவை நெருங்கி வரவர, வழிப்பட்ட ஸ்டேஷன்களில் மிக மலிவாக ரொட்டியும் உணவுப் பொருள்களும் வாங்கினர். இவோனோவாவில் ஒரு மாதத்துக்கு ஒருதரம் ஒரு பவுண்டு ரொட்டியைக் கண்ணால் பார்ப்பதே அபூர்வம். ஒரு சிறு ரொட்டித்துண்டைப் பெரிய பொக்கிஷம் போலப் போற்றுவர். இங்கோ மலைமலையாக ரொட்டிக் குவியலைக் கண்டனர். ரொட்டிகள் ஏராளமாகக் கிடைத்தாலும் இன்னொரு துர்ப்பாக்கியமான நிலை அங்கு காணப்பட்டமை கண்டு அவர்கள் வருந்தினர். இயந்திரத் தொழிலாளர்களுக்கும் உணவு உற்பத்தித் தொழிலாளர்களுக்கும் இடையே போதிய இணக்கம் இல்லாத காரணத்தால், அங்கு பெருங் குழப்பம் நிலவியதைக் கண்டு மிகவும் துக்கித்தனர். இவ்வளவு குழப்பத்தினிடையேயும் இவ்வளவு மலிவாக ரொட்டி விற்பது கண்டு வியந்தனர். இவ்வளவு காலமும் அரைகுறைப் பட்டினியாகக் கிடந்ததற்கெல்லாம் பழிவாங்குவது போல வேண்டிய மட்டும் ரொட்டியை வாங்கி நிரப்பினார்கள். சமாராக் களஞ்சியப் பிரதேசத்தை நெருங்க நெருங்க எல்லாமே மலிவாகக் கிடைக்கும் என்றுதான் யாரும் எண்ணுவார்கள்; எல்லாம் ஏராளமாக இருக்கும் என்றுதான் நம்புவார்கள். ஆனால், அந்தச் செஞ்சேனையினர் மட்டும் அப்படி நம்பவில்லை, எண்ணவில்லை. அதற்குக் கூடப் போதிய நேரமில்லை. கடந்த காலப் பட்டினித் தொல்லை நினைவுக்கு வந்ததும், கிடைத்தவரை வாங்குவோம் என்று மூட்டை கட்டத் துவங்கிவிட்டனர். சில ரயில் நிலையங்களில் ரொட்டி நல்ல நிறத்தோடும் மணத்தோடும், மலிவாகவும் கிடைத்தது. இதையெல்லாம் எளிதில் விட்டுவிட அவர்கள் மனம் இடம் தரவில்லை! ஆனால், மறு நாள் அடுத்த ஸ்டேஷனுக்கு வந்தால் அங்கு எல்லாம் முன்னைக் காட்டிலும் இன்னும் மலிவாக விற்கக் கண்டார்கள். "அடடே!

இங்கே ரொம்ப நல்லாயிருக்கே. முன்னாலே வாங்கி மூட்டை கட்டியதுல்ல தப்பாப் போச்சு!" என்று முணுமுணுத்தார்கள். இந்த எதிர்பாராத ஏமாற்றங்களை அனுபவித்தவாறே சமாராவை அடைந்தார்கள்.

சமாரா ரயில் நிலையம் அலங்கோலமாகக் கிடந்தது. செஞ்சேனையினரைச் சுமந்துவந்த ரயில் எங்கோ ஒரு மூலையில் பதினைந்தாவது தண்டவாளத்தில் நின்றது. எங்கே பார்த்தாலும் துருப்பிடித்த தண்டவாளங்களும், நொறுங்கிப்போன ரயில் பெட்டிகளும் குவிந்து கிடந்தன. வண்டி நின்றதும் எல்லோரும் தாவி வெளியில் குதித்தனர். தளபதியிடம் பலர் ஓடோடிச் சென்றனர். அடுத்தபடியாக எல்லோரும் என்ன செய்ய வேண்டும்? எங்கே போக வேண்டும்? எதற்காகப் போக வேண்டும்? அவர்களுடைய முதல் வேலை என்ன? இந்த நகரில் ஓரிரு நாட்கள் தங்கல் உண்டா? இல்லையா? என்றெல்லாம் கேள்விகளை அடுக்கினார்கள் அவர்கள்!

இத்தனை கேள்விச் சரங்களுக்கும் பதில்தரக் கூடியவன் ப்ரூன்ஷ்தான்! ஆனால் அவன் அங்கில்லை. ப்ரூன்ஷ் ஏற்கெனவே நான்காவது டிவிஷன் ராணுவத்தைத் தலைமை தாங்கி நடத்திக்கொண்டிருக்கிறான். சில நாட்களுக்கு முன்னர் அவன் இவானோவாவிற்கு வந்து இப்படையைத் திரட்டினான். செஞ்சேனைப் படையினர் புறப்படுவதற்கு முன்னதாகவே அவன் வந்துவிட்டான். இப்பொழுது உரால்ஸ்க் பகுதியிலே இருக்கிறான்! அங்கிருந்த பிராந்திய ராணுவச் சங்கத்தில் கிளிக்கோவிற்கு ஒரு குறிப்பெழுதி வைத்திருந்தான் ப்ரூன்ஷ். அந்தக் கடிதம் கொணரப்பட்டது. கிளிக்கோவ், லோபார், டெரெண்டி, ஆண்ட்ரேவ் ஆகிய நால்வரும் உரால்ஸ்க் பகுதிக்கு உடனே வீரர்களுடன் புறப்பட வேண்டும் என்று அதில் குறித்திருந்தான்.

ப்ரூன்ஷ் தனது சிறு கடிதத்தில் எல்லோருக்கும் வாழ்த்து உரைத்திருந்தான். உடனடியாகச் செய்ய வேண்



டிய வேலைகள் எவ்வளவு தொல்லை தரக் கூடியவை என்பதைச் சுருக்கமாக எழுதியிருந்தான்; உடனடியாக எதையும் பொருட்படுத்தாது போர்க்களம் வருமாறு அழைத்திருந்தான். கிளிக்கோவ் அந்தக் கடிதத்தை அனைவருக்கும் உரக்கப் படித்துக் காண்பித்தான். அவர்களுடைய நெஞ்சங் கவர்ந்த தளபதி ப்ரூன்ஷின் வீர உரைகளைச் செவிமடுத்தனர்; அந்தச் சொற்கள் போர்முரசம் போல அவர்களது செவிகளிலே ஆர்த்தன.

"தளபதிக்கு நன்றி தெரிவித்து உடனே தந்தி அனுப்புங்கள்" என்று ஒரு குரல் கூறியது.

"நன்றி தெரிவிப்பதா? கூடாது. எதற்கு?" என்று சிலர் இடைமறித்தனர்.

"நாமெல்லாம் இங்கே வந்துவிட்டோம். எதற்கும் தயாராக இருக்கிறோம். எங்கே புறப்பட வேண்டுமென்றாலும் தயார் என்று தெரிவித்தால் போதுமானதாயில்லையா?" என்றான் இன்னொருவன்.

"அதுவும் சரிதான்! நாமெல்லோரும் எதற்கும் தயார்; என்று மட்டும் தளபதிக்குத் தந்தியடியுங்கள்" என்றது ஒரு உரத்த குரல்.

"சரி, சரி. வாங்க, வாங்க. தந்தியே அனுப்பிவிடுகிறோம். ப்ரூன்ஷ் வாழ்க! வாழ்க" என்றனர்.

'வாழ்க! வாழ்க!' என்ற முழக்கம் எழுந்தது. சிவப்புத் தொப்பிகளும் கைக்குட்டைகளும் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் பறவைகள்போல வானில் உயர்ந்து தாழ்ந்தன. சமாரா ரயில் நிலையமே கிடுகிடுத்தது!

ப்ரூன்ஷின் கடிதத்தைக் கையில் உயர்த்தியவாறே கிளிக்கோவ் உரக்க, உணர்ச்சி ததும்பக் கத்தினான்: "தோழர்களே! தோழர்களே! இந்தச் சிறு கடிதத்தைப் பாருங்கள். நமக்காக வந்த இந்த நாலுவரிக் கடிதத்தை நமது ராணுவத் தளபதி தமது கைப்படவே எழுதி அனுப்பியிருக்கிறார். நம்மோடு எல்லா வகையிலும் சமமாகப் பழகிய

நமது தோழர் எழுதியுள்ளார் என்ற உணர்ச்சியும் உற்சாகமும் நம்மை உந்துகின்றன. நம்மோடு பழகிய தோழமைப் பண்போடும், எளிமையோடும் நமது தோழர் எழுதியுள்ள சொற்களை நீங்களும் உணர்கிறீர்கள் இல்லையா! உண்மையிலேயே நமது தளபதிக்கும் நமக்கும் எத்தகைய ஏற்றத் தாழ்வும் இல்லை; ஒரே ஒரு படிதான்; அதுவும் சாதாரணப் படிதான். என்ருலும் தளபதியும் வீரர்களாகிய நாமும் ஒருமனப்பட்டு ஒரு நிலையில் பணியாற்றுகிறோம். தளபதியும் செஞ்சேனையினரும் எல்லா வகையிலும் ஒரே நிலையினர், ஒத்த பண்பினர். கட்டுக்கோப்புவாய்ந்த பிணைப்பாலும், கலைக்கவியலாத ஒருமிப்பாலும்தான், நமது செஞ்சேனை வலுவாய்ந்ததாக, உரம்பெற்றதாக இப்போது வளர்ந்துள்ளது. இந்தப் பிணைப்பும் ஒருமிப்பும் இருக்கும்வரை வலுவும் உரமும் என்றுமே குலைந்துவிடா. எனவே, நமது படை வெல்லும்; எதையும் வெல்லும்; என்றென்றும் வாழும், புகழ்பெற்று வாழும்" என்று முடித்தான் கிளிக்கோவ்.

அவனுடைய சொற்கள் வீரர்களிடையே புத்துணர்ச்சியைத் தூண்டிவிட்டன. மீண்டும் கடல் ஒலி போன்று வாழ்த்தொலி எழுந்தது. சீறியெழும் அலைக் கரங்கள் கரையில் பாய்ந்து பெரும் பாருங்கல்லை ஒதுக்குவதுபோலச் சூளுரைத்துச் சபதம் செய்தனர்; வெற்றி நமதே என்று வீறுகொண்டனர்.

நேரங் கடந்தது. ராணுவ உத்தரவுகளைச் சிரமேற்கொண்டு செஞ்சேனையினர் பாய்ந்து புறப்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது. தற்காலிக உத்தரவுகள் தரப்பட்டன. ராணுவத் தலைமை நிலையத்திற்குத் தளபதி அழைக்கப்பட்டார். உடனடியாகச் சேனையினர் புறப்படுவதற்குரிய முஸ்தீபுகள் செய்யப்பட்டன. முன்னே குறிப்பிடப்பட்ட நால்வரும் படைத்தலைமையேற்று முன்னதாகப் புறப்பட வேண்டுமென நினைவுபடுத்தப்பட்டது. கடைசியாக



"உடனே உரால்ஸ்க் பகுதிக்குப் புறப்படுக!" என்ற அதிகாரபூர்வமான உத்தரவும் வந்துவிட்டது.

அந்த நால்வரும் ஓடி ஓடி விடைபெற்றனர். விரைவில் உரால்ஸ்க் வட்டாரத்தில் தங்களுடைய தோழர்கள் அனைவரையும் பார்க்க முடியும் என்ற நம்பிக்கையுடன் முன்னதாகப் புறப்பட்டனர்.

புரட்சி ராணுவத் தலைமைச் சங்கத்திலிருந்து போர்க் குதிரைகள் மூன்று பூட்டிய இரண்டு பனிச்சறுக்கு வண்டிகள் பாய்ந்து வந்து நின்றன. முதல் குதிரை வண்டியில் பியோடார் கிளிக்கோவும், ஆண்ட்ரேவும் ஏறிக்கொண்டனர்; மற்றொன்றில் லோபாரும், டெரெண்டியும் ஏறி அமர்ந்தனர். சீட்டிச் சத்தங்கள் வானைப் பிளந்தன; வீறுகொண்டு சிட்டாய்ப் பறந்தன புறவிகள். தூரத்துக் காட்சிகள் எல்லாம் தோன்றித் தோன்றி நொடியில் மறைந்தன; சவுக்குகள் பாம்புகள் போல் வளைந்து சொடக்கிட்டன. மேகம் உறைந்த பனிப் படலத்தில் ஒட்டிக்கொண்டுள்ள சிறு பறவைபோல அந்தச் சறுக்கு வண்டிகள் மறைந்தன!

# 2

# பசும்புல் வெளியிலே

காலையிலும் கடுங்குளிர் வீசிக்கொண்டிருந்தது, ஸ்டெப்பிப் புல்வெளியிலே. பனிச்சறுக்கில் ஓடுதற்கேற்றவாறு அமைந்திருந்த குதிரை வண்டிகள் மூடுபனியைக் கிழித்துக்கொண்டு பறந்து சென்றன. சமாரா ரயில் நிலையத்தைவிட்டுப் புறப்பட்ட நால்வரும் ஏறிவந்த வண்டிகள் கண்மூடும் வேகத்தில் சென்றுகொண்டிருந்தன; பனிப்பாறைகளையெல்லாம் மாவாக அரைத்துத் தள்ளிச் சுழன்றன அந்த வண்டிச் சக்கரங்கள். வண்டிக்காரர்கள் ஏராளமான கம்பளிச் சட்டைகளால் உடம்பையெல்லாம் மறைத்துக்கொண்டு குறுகிச் சுருண்டிருந்தார்கள். தலையை மட்டும் நீட்டிக்கொண்டு பிரயாணிகளைப் பார்த்தவண்ணம் குதிரைகளை ஓட்டிச் சென்றார்கள்.

"என்ன லோபார்! உறைஞ்சு போச்சே. ஓரேயடியா, நடுக்குதல்ல" என்று குழறினான் போக்கின், லோபார் மீது சாய்ந்தவாறே; அவன் உதடுகள் நடுங்கின; கரங்கள் தந்தியடித்தன.

"எலும்பு வரைக்கும் ஓரே நடுக்கந்தான் போ" என்று விசனத்தோடு திக்கித் திக்கிச் சொன்னான் லோபார். "எங்கேயாவது விரைவில் வண்டி நிற்கும் என்று நினைக்கிறாயா? ஹூம்?"

"எனக்கு இந்தப் பக்கத்தைப்பத்தி ஒரு எழவும் தெரியலைப்பா, நிக்குமோ, இல்லே ஓரே நெடுவழியாத்தான் போய்த் தொலையுமோ! நம்ப நண்பர் இருக்கிறாரே, அந்த டிரைவரையே கேட்போம், ஏ தாத்தா!" என்று பக்கத்தில் மஞ்சள் நிறக் கம்பளியால் மூடிக்கிடந்த கிழவனைத் தட்டி



னான் போக்கின். "இங்கே எங்கேயாவது வழியில் இறங்க முடியுமா?"

"குளிர் நடுக்குதா?" என்று முனகினான் கிழவன்.

குளிருதான் தாத்தா வாட்டுது. அடுத்தாப்பிலே ஏதாவது கிராமம் வருமான்னு கேட்கிறேன்."

எழு மைலோ அல்லது பன்னிரண்டு மைலோ போகும்படியாக இருக்கும்" என்று திரும்பிப் பாராமலே பதில் சொன்னான் வண்டியோட்டின கிழவன்.

"ஐயா! புரியுராப்பிலே பேசுமே. என்ன மூளையும் உறைஞ்சு போச்சா? இன்னும் எவ்வளவு தூரம் போகணும்?"

"ஏன்! அவ்வளவு தூரம்தான் போகணும்."

"அது எந்த ஊருண்ணாவது சொல்லித் தொலைய்யா!"

"ஐவான்டேயேவ்கா."

"அந்த ஐவான்டேயேவ்காவிலிருந்து புகாசோவ் ரொம்பத் தொலைவா என்ன?"

"தொலைவா? போனால் ஒன்னும் தெரியாது" என்று சிணுங்கியபடியே உறைந்துபோன உணர்ச்சியற்ற விரல்களால் மூக்கைச் சுரண்டினான் அந்த நாட்டுப்புறத்துக் கிழவன். ஒரு வினாடி பேசா திருந்தான். பிறகு தானே பேசத் துவங்கினான்: "பார்க்கப்போனால் ஒண்ணும் மிஞ்சாது. பெரிசாவும் தோணாது; இப்ப இங்கேயிருந்து டவோலோஷ்கா பதினெட்டு மைல்; பதினெட்டு மைலா? அங்கே இருந்து அப்புறம் இருபத்திரெண்டு இருபத்தி மூணுமைல்; மதியம் சாப்பாட்டு நேரத்துக்குள்ளே போயிடலாம்! கிட்டத்தான்!"

"உன் சொந்த ஊரு எது தாத்தா! நிகோலயேவ்கா தானே!" என்று துப்பு விசாரித்தான் போக்கின்.

"அதுதான் என் சொந்த ஊரு. என்னைப்போல ஆளுக்கு அதுதான் சொந்த ஊரா இருக்க முடியும்; இல்லையா?" என்று நெஞ்சம் விம்மச் சொன்னான் அந்தக்

கிழவன். "ஏனய்யா வெட்டிப் பேச்சுப் பேசணும்?" என்று கேட்பது போலத் தொனித்தது அவனது பார்வை.

"அப்புடீன்னா வேறே எது மாமா! ஐவான்டேயேவ்கா தானா" என்று பாசம் ததும்பக் கேட்டான் மீண்டும் போக்கின்.

"ஐவான்டேயேவ்காவுமில்லே, ஒண்ணுமில்லேப்பா" என்று பட்டென்று சலிப்புடன் விடையிறுத்தான் அந்தப் பலே கிழவன்!

அந்த நாட்டுப்புறத்து வண்டிக்காரர்கள் தங்கள் சௌகரியத்திற்காக, வண்டியோட்டுவதில் சில ஒப்பந்தங்களை வைத்திருந்தனர். அது ஒரு பழக்கமாகவும் போய் விட்டது; உதாரணமாக, ஐவான்டேயேவ்காவிலிருந்து ஐவான் என்பவன் யாரையாவது நிகோலயேவ்காவிற்குக் கூட்டிப்போக வேண்டியிருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அதே சமயத்தில் நிகோலயேவ்காவைச் சேர்ந்த ஐவானோவிச் என்பவன் யாரையாவது ஐவான்டேயேவ்காவிற்குக் கூட்டிச் செல்ல வேண்டியிருக்கும். இந்த இரு வண்டிக்காரர்களும் என்ன செய்வார்கள் என்றால் நேரடியாகவே சென்று திரும்ப மாட்டார்கள். இடை வழியில் சந்தித்துப் பிரயாணிகளை வண்டிமாற்றிக்கொள்ளுவார்கள். இடுக்கமான பனிச்சறுக்குப் பாதைகளில் களைத்துப்போன குதிரைகள் தள்ளாடித் தள்ளாடி மாதம் காத வழி நடக்கும். இந்த முறை வண்டிக்காரர்களுக்குச் சவுகரியமானது, பிரயாணிகளுக்கு மரணாவஸ்தையானது. "மிக அவசரம்" "முதலில் அனுப்ப வேண்டும்" "சீக்கிரம் போக வேண்டும்" என்றெல்லாம் வருகிற உத்தரவுகளை யெல்லாம் காதில் போட்டுக்கொள்ளாமலே காலத்தைக் கடத்துவார்கள் வண்டிக்காரர்கள்.

நேரஞ் செல்லச் செல்ல இந்தக் குதிரை வண்டியும் இப்படித்தான் நகர்ந்தது. பிரயாணம் செய்த இரண்டு வீரர்களின் அவசரத்தை வண்டிக்காரர்கள் புரிந்துகொள்ள



மறுத்துவிட்டார்கள். "ஆத்திரப்படாமல், பொறுமையா இருங்கப்பா; வண்டி தன்னாலே போகும்; சீக்கிரத்திலே நீங்க போக வேண்டிய சமாதிக்கே போய்ச் சேர்ந்திடும்" என்றார்கள் சாவதானமாக!

வண்டிக்காரர்களின் இந்தப் பழக்கவழக்க மெல்லாம் டெரெண்டிக்கு ஓரளவு தெரியும். வேண்டு மென்றே மெதுவாக ஏன் போகிறார்கள் என்பதையும் அவன் அறிவான். "ஏன் மெதுவாகப் போறீங்கன்னு எனக்குத் தெரியும்பா, எதிர்த்தாப்பிலே வர்ற வண்டிலே இருக்கிற ஆளுகளே ஏத்திக்கிட்டு இப்படியே திரும்பிடலாம்னு நினைக்கிறீங்க. எங்களை யெல்லாம் அந்த வண்டிலே மாத்தி அனுப்பிடலாம்னு திட்டம் இல்லையா?" என்றான் டெரெண்டி

"யாரு இல்லேயின்னு சொன்னது. பிரயாணிகளை வண்டி மாத்திக்கிறதுதான் சுலபம். இல்லாட்டி இம்மாந் தூரம் யாரு போயிச் சாகிறது?" என்றான் துடிப்புடன் வண்டியோட்டி!

"சுலபந்தான்; யாருக்கப்பா சுலபம்? உங்களுக்கா? இல்லே எங்களுக்கா?"

"எல்லாருக்கும்தான்!" என்று சமாதானமாய்ச் சொல்லி, டெரெண்டியின் சந்தேகத்தைப் போக்க முயன்றான் வண்டியோட்டி.

"வண்டிக்காரர்களுக்கு ரொம்பச் சல்லிசுதான். அதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், எங்கபாடுல்ல திண்டாட்டமா இருக்கு. ஒரே சங்கடமா ரெண்டுங் கெட்டானாக் கஷ்டப்பட வேண்டி யிருக்கு. சோர்ந்து போனக் கிழட்டுக் குதிரைகளை வெச்சிக்கிட்டு நீதான் பாவம் என்ன செய்வே? நாளெல்லாம் இப்படி இழுத்து இழுத்துத்தான் கழிக்கணும்" என்று மிக்க இரக்கத்தோடு கேட்டான் போக்கின்.

"என்னுடைய மட்டக் குதிரைகளையா கிழடு, சோர்ந்து போச்சுன்னு கேலி பண்றே; இந்தாப் பாரு. சிட்

டாப் பறக்கப் போகுது பாரு" என்று கோபத்துடன் கடிவாளத்தைச் சுண்டிச் சுழற்றினான் வண்டியோட்டி. தளர் நடை போட்ட குதிரைகள் தாவிப் பறந்தன. நாலு கால் பாய்ச்சலில் எகிறிக் கிளம்பின. வண்டி, தத்தித் தத்தி உருண்டது. "போங்கடா கண்ணுங்களா! புயல் மாதிரி பறங்கடா! நொடிப் பொழுதிலே நூறு காதம் துள்ளுங்கடா என் சிங்கங்களா!" என்று தட்டியோட்டினான் உற்சாகத்துடன் குதிரைகளை. வண்டி யெல்லாம் குலுங்கியது, வண்டிக்குள் ளிருந்தவர்கள் தடுமாறினார்கள். பந்தய ஓட்டம்போலச் சுழன்றோடின சக்கரங்கள்; வண்டிக்காரனுடைய ஆத்திரம் அடங்கியதும் பிடியைத் தளர்த்தினான்; குதிரைகளின் வேகம் குறைந்தது. கர்வத்துடன் பிரயாணிகளைத் திரும்பிப் பார்த்தான்.

"களைச்சுப்போன கிழட்டுக் குதிரைகள் போன போக்கைப் பார்த்தீங்கல்ல. கிழட்டுக் குதிரையாம்! எது கிழட்டுக் குதிரை?" என்று சவால் விட்டான்.

"அதுதான் அப்பனே! உற்சாகமும் உணர்ச்சியும் பண்ற வேலை. நொண்டிக் குதிரைகூடத் துள்ளிப் பாயும். உன் குதிரை என்ன மட்டமா!" என்று மேலும் கிளப்பி விட்டார்கள்.

"நீ சொல்றது சரிதான் ஐயா. எல்லாம் நம்ப கையிலே தான் இருக்கு. குதிரையெல்லாம் சோர்ந்து போயிட்டாலும் நாம்ப அதட்டித் தட்டிவிட்டா அப்படியே ஜிவ்வுன்னுல்ல பறக்கும், காத்தாப் பறக்கும்ல. எல்லாம் ஓட்டுறதிலே இருக்கு சாமர்த்தியம். அதுவும் இந்த மாதிரி அவசர ராணுவ உத்தரவு வந்துட்டா அதுக்குன்னு ஒரு தனி வேகந்தான் போங்க. நாம் வெரட்டுற வேகத்திலே குதிரை மட்டுமா களைச்சிடும். குட்டிச்சாத்தானைக் கட்டி விரட்டினா அது கூடத் துடிச்சிடும்" என்றான் வண்டிக்காரன் மதிப்புடன்.

"அப்புடீன்னா இந்த மாதிரி உத்தரவுகள் உங்களுக்கு அடிக்கடி வருதோ?" என்று கேட்டான் லோபார் வினயமாக.



"ஒண்ணா ரெண்டா? அதே பொளப்பாகத்தான் போச்சு. வர்றவன் எல்லாரும் குதிரை வண்டிதான் கேட்கிறான். சும்மாவாவது அங்கேயும் இங்கேயும் சுத்துறவன் எல்லாம் குதிரை வண்டிலேதான் பறக்கணுமாம். அதுவும் மெதுவாப் போயிடப்பிடாதாம். அவரு கிழிக்கிற வேலைக்கு வண்டி அப்படியே பறக்கணுமாம். அவனுக்காவது இல்லேயின்னா முஷ்டியைக் காட்டிப் பயமுறுத்துறானுங்க. பொளப்பே கெட்டுப் போச்சய்யா" என்றான் வண்டிக்காரன் சங்கடத்துடன்.

"அப்படியா கதை?" என்றான் லோபார் சந்தேகத் தொனியில்.

"பின்னே? எப்படி நீ என்னய்யா புகார் வெச்சிருக்கே? சொல்லேன் கேட்போம்" என்றான் வண்டிக்காரன் விடாப்பிடியாக.

"உன்னைப்போல நாட்டுப்புறத்தான் எல்லாம் புளுகுவதிலே பெரிய ஆளுங்கப்பா" என்றான் லோபார்.

"அப்பனே! அதையும் நீங்களே பழகிகிட்டு நீங்களே பெரிய ஆள்களா வாங்களே" என்றான் கிண்டலாக.

"எவனோ, ஒண்ணு ரெண்டு கபோதிப் பயலுக அதிகாரம் பண்ணிப் பயமுறுத்தி யிருப்பாங்க. அதை வச்சுக்கிட்டு ஒரேயடியாகக் கதைக்கிறியேப்பா. விடுவிடு" என்றான் லோபார்.

"கதைக்கிறதாவது! எல்லாம் பட்டாத்தானய்யா தெரியும்."

"எவனுக்கிட்டேயாவது நீ சிரமப்பட்டிருக்கிறாயா அதைசொல்லு. அடுத்தவன்சொன்னான்னு நீயும்புளுகாதே."

"ஒருத்தன்மட்டுமா! எத்தனை பேரு. ஒண்ணே ஒண்ணு மட்டும் மறக்கவே முடியாது. ஒரு சமயம் கத்தியையே மேலே பாய்ச்சிப்பிட்டான். நல்ல வேளை; முரட்டுத் தோலாலான சட்டையெப் போட்டிருந்ததாலே தப்பிச்சேன். இல்லேயின்னா, குடல் பிதுங்கிப் போயிருக்கும்."

"அந்த முட்டாள் குடிச்சுப்பிட்டு வந்திருப்பான்."

"குடிச்சானோ நாசமாப் போனோ; அவன் செய்த கொடுமை மட்டும் குறையலே."

"ஆமா, குடிகாரன் கிட்டே போயி எதுவும் எதிர் பார்க்கலாமா?"

"எவன்ய்யா எதிர்பார்த்தான். சும்மா விட்டாப் போதாதா!" என்று நிறுத்தினான் வண்டிக்காரன்.

இவ்வளவு நேரமும் சும்மாயிருந்த டெரெண்டி அந்தப் பகுதியில் சோவியத்துகள் எப்படி நடக்கின்றன என்பதைப்பற்றி அறிய விரும்பினான். புதிய சோவியத் ஆட்சிப் பகுதிகளுக்குள்ள இடையூறுகள் என்ன? அவற்றின் சாதனைகள் என்ன என்பதையெல்லாம் கேட்டறிய விரும்பினான். மெதுவாக வண்டிக்காரனைக் கேட்டான்; அவன் இதற்கும் வழக்கம்போல வேண்டா வெறுப்புடன் சம்பந்தமில்லாத வெவ்வேறு பதில்களையே சொன்னான். எதையோ கண்டு பயப்படுவதுபோல, பதுங்கிப் பதுங்கி வார்த்தைகளை வெளியிட்டான்.

"அப்படித்தான் எல்லாத்தையும் சமாளித்தாகணும். வேறே என்ன செய்ய முடியும்!" என்பது போன்ற அரைகுறைப் பதில்களைத்தான் அவன் தந்தான். டெரெண்டி எதிர்பார்த்ததுபோலத் தெளிவான விவரம் எதையும் தெரிந்துகொள்ள முடியவில்லை.

"ஏம்பா! புரியுறாப்லே சொல்ல முடியாதோ? சுற்றி வளைச்சுக் குட்டை குழப்புறியே" என்று அதட்டலாகக் கத்தினான் பொறுமையிழந்த லோபார்.

"கொஞ்சம் அடக்கு தம்பி, அடக்கு. கொஞ்சத்தேத் தெரிஞ்சிகிட்டே இப்படிக் குதிக்கிறியே; பொறு பொறு" என்றான் வண்டிக்காரன்.

லோபார் எங்கே உள்ளதையும் கெடுத்துவிடுகிறானோ என்று பயந்தடெரெண்டி இடைமறித்து, "பொறுங்கப்பா, பொறுங்க" என்று சமாதானப்படுத்தினான். "ஏய்யா!



இந்தப் பக்கத்திலே உள்ள சோவியத் மக்களாட்சிப் பகுதியின் நிர்வாகம் எப்படி இருக்கிறது? இந்தப் புதிய ஆட்சிமுறை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா? இல்லை. இதுவும் பழைய குருடிதானோ? வேலைகளை யெல்லாம் ஒழுங்காகச் செய்கிறார்களா?" என்று வினவினான் டெரெண்டி.

"வேலையெல்லாம் ஒழுங்கத்தான் நடக்குது. ஆனால், அந்தப் பய கொர்ஸ்கோவ்தான் அவ்வளவு நன்றாக நடப்பதில்லை."

"அவ்வளவு நன்றாக நடப்பது இல்லை என்றால்" என்ற அந்த ஒரு வாக்கியத்தை மட்டும் எலியைப் பூனை பிடிப்பது போலப் பிடித்துக்கொண்டு திருப்பித் திருப்பி விளக்கும்படி கேட்டான் லோபார்.

"அவன் ரொம்ப அதிகாரம் பண்ணுகிறான். அவனுடைய மாமனாரை அடிக்கடி காசு கொடுக்காமல் வண்டியில் அனுப்ப வருகிறான்; எங்களைப் போன்ற நாட்டுப்புறத்தார்களிடம் கண்டபடி வேலை வாங்குகிறான்."

"நீ ஏன் புகார் செய்யவில்லை? சோவியத்திற்குப் போய் உடனே நடந்ததை யெல்லாம் விவரமாகத் தெரிவி. அந்த அதிகார வெறிபிடித்த அயோக்கியனைச் சரியாக மொத்துவார்கள்" என்று யோசனை சொன்னான் டெரெண்டி.

"ஆமாமா, மொத்துவாங்க, மொத்துவாங்க. அவனையா மொத்துவாங்க. அகப்பட்ட மத்தவங்களை யில்ல மொத்துவாங்க" என்று நம்பிக்கையில்லாத தீனக் குரலில் அங்கலாய்த்தபடி குதிரையைத் தட்டினான் அவன். "ஆமாமா, நீங்களும் பத்திரமா யிருங்க; உங்களையும் பதம்பார்த்துப்பிடுவானுக. போக வேண்டிய இடத்தைவிட்டு எங்கேயாவது கொண்டேத் தள்ளிப்பிடுவானுக" என்று அச்சுறுத்தினான் அவன்!

"என்னய்யா, முட்டாள்தனமா உளர்றே" என்று பாய்ந்து குதித்தான் லோபார்.

"பொறுப்பா. நான் ஒண்ணும் உளர்றலே. நடக்கிற தெத்தான் சொன்னேன்!" என்று சொல்லிவிட்டுச் செத்த பறவையைப்போலத் தலையைத் தொங்கவிட்டுக்கொண்டான் அந்த வண்டிக்காரன்.

குறுக்கு விசாரணைக்காரன்போல டெரெண்டி விடுவதா இல்லே; நேரடியாகவும் துணிவாகவும் வண்டிக்காரனை நோக்கி, "இந்த மாதிரிச் சமாசாரம் சமீபத்திலே எப்பொழுதாவது நடந்ததுண்டா?" என்று கேட்டான்.

"சமீபத்திலேகூட நடந்தது."

"என்ன? எங்கே? எப்படி? எதற்காக நடந்தது?"

"எதற்காக? ஒன்றுமில்லாத வரட்டுக் காரணத்திற்காகத்தான் அந்தப் பாடுபடுத்தினர்கள்" என்று சொன்னபடியே பனிபடிந்த உதடுகள் துடிக்கச் சொன்னான். "மிகச் சமீபத்தில்கூட எங்களைச் சேர்ந்த ஒருவனைக் காணுமல் செய்துவிட்டார்கள். சாவு வந்து போறதுக்கு முன்னலே அவனை ஒண்ணுக்கும் ஆகாதபடி தீர்த்துப்பிட்டாங்க."

"இந்தக் கொடுமையைக் கண்ட பின்னுமா நீங்க பேசாமல் இருந்தீங்க?" என்று பொங்கினன் லோபார்.

"பேசாமெ இல்லாமெ வேறு என்னத்தைச் செய்யுறது? பேசாமெ இருந்தாத்தான் சஞ்சடியும் சங்கடமும் நீங்கும்னுதான் வாய்மூடிவிட்டோம். நம்ம பேசாமெ மட்டும் இருந்தா எல்லாம் ஒழுங்கா நடக்கும். பேசினத்தான் ஆபத்து" என்றான் அவன் அலுப்புடன்.

"சரி; வேடிக்கை போதும். அது சரி. ஏன் மாமா! இந்த மாதிரி வெட்டியாப் பிரயாணிகளை இழுத்துக்கிட்டே போனு உங்களுக்கு எவ்வளவு நஷ்டம் வரும்? சோவியத் பகுதி முழுவதும் எங்கே பார்த்தாலும் அறிவிப்புப் பலகைகள் தொங்குகின்றன. அவற்றிலெல்லாம் 'பிரயாணத்திற்கு உரிய கட்டணங்களைச் செலுத்திவிடுங்கள்; ஏதாவது சாமானைப் பெற்றுக்கொண்டால் அதற்கும் பணத்தைக் கொடுத்து விடுங்கள்' என்றெல்லாம் குறிக்கப்பட்டுள்ளன;



அவற்றையெல்லாம் நீங்கள் படிக்கவில்லையா?' பார்க்கக்கூட இல்லையா?" என்று வாஞ்சையுடன் கேட்டான் லோபார்.

"பார்த்திருக்கிறேன், பார்த்திருக்கிறேன். அது பாட்டுக்குத் தொங்கிக் கிடக்கட்டும்" என்றுன் இதற்கும் வண்டிக்காரன்.

இந்த உணர்ச்சியற்ற பதிலைக் கேட்டதும் நத்தைபோலச் சோர்ந்து ஒடுங்கிவிட்டான் லோபார். கம்பளிக் காலரைப் பிரித்துவிட்டபடியே மௌனமாக உட்கார்ந்துவிட்டான்; லோபார், எப்பொழுதும் வெளிப்படையாகப் பேசுபவன். நகர்ப்புறத்திலும் நாட்டுப்புறத்திலும் உள்ள பாட்டாளி மக்களிடமெல்லாம் மணிக்கணக்கில் உரையாடுவான்; மனம் கலந்து பழகுவான். இந்தக் கிழட்டு வண்டிக்காரனுடைய தெளிவில்லாத, பிடிப்பில்லாத, உணர்ச்சியில்லாத, பொருளற்ற உளறல்களும், பொருத்தமில்லாத பதில்களும் அவனுக்கு ஆத்திரமூட்டின; அளவுகடந்த எரிச்சலையுண்டாக்கின. எனவே, ஐவான்டேயேவ்கா போகும்வரை பேசாதிருந்துவிட்டான். டெரெண்டியும் போக்கினும் மட்டும் சளசள என்று பேசிக்கொண்டேயிருந்தார்கள். கடலில் மூழ்கி முத்தெடுப்பதுபோல அந்த வண்டிக்காரனுடைய அளவுகடந்த புளுகு மூட்டைகளிலும் உளறல்களிலுமிருந்து ஓரளவு உண்மைகளையும் யதார்த்த நிலையையும் நாட்டு நடப்பையும் துருவி அறிந்தார்கள்.

இனி. அடுத்த வண்டியைப் பார்ப்போம். பியோடாரும் ஆண்ட்ரேவும் வேறுவிதமான பேச்சில் ஈடுபட்டிருந்தனர். அவர்களுடைய வண்டியை ஓட்டிச் சென்றவன் கிரிஷா.

"நீகூட அவனுடைய ராணுவ டிவிஷனில்தானே இருந்தாய் கிரிஷா?" என்று கேட்டான் பியோடார்.

"ஆமாம், ஆமாம். அவனோடிருந்து போரிட்டுக்கொண்டிருந்தபொழுது இந்தக் காலை இழந்தேன்" என்று சுட்டிப் பேசினன் கிரிஷா. "போன கோடைக்காலம் முழுவதும் புல்வெளிப் பிரதேசம் எல்லாம் எங்களை விரட்டி விரட்டி

வேட்டையாடினார்கள். நாங்களும் முடிந்தவரை அவர்களுக்குக் கடுக்காய் கொடுத்துவிட்டுத்தான் மறைந்திருந்தோம். இருந்தாலும் பல தடவைகள் அகப்பட்டுக்கொண்டோம். இந்த செக்கியர்கள் (Czeks) எல்லாம் சின்னப் பாப்பாக்கள்தான். ஆனால், அந்தக் கொஸாக்கியர்களைத் தான் ஏமாற்ற முடியாது. அவர்கள் இங்கும் பெருகிவிட்டார்கள்" என்றான் கிரிஷா.

கிரிஷா தன் இருக்கையில் இருந்தவாறே திரும்பி உட்கார்ந்திருந்தான். காலைச் சூரிய வெளிச்சத்தில் அவனுடைய முகம் செவ்வரி படர்ந்திருந்தது புலப்பட்டது. தெளிவும், துணிவும், அஞ்சாமையும் உடைய கண்கள் நன்கு விளக்கம் செய்தன. உணர்ச்சிவயப்பட்ட சில வார்த்தைகளைப் பேசினவுடன் இரண்டு உதடுகளையும் நன்கு மடித்துக் கொள்வான் அவன். சப்பட்டையான பெரிய மூக்கு, ஆழ்ந்த சாம்பல் நிறமுடைய கண்கள், எண்ணெய்ப்பசை ஒழுகும் ஒடுக்கமான நெற்றி, விசேஷம் எதுவும் சொல்ல முடியாத, மற்றவர்களுக்கு இருப்பதைப்போன்ற முகம் முதலியன கிரிஷாவுக்கு இருந்தன. அவனுடைய மனஉறுதியையும் நெஞ்சுரத்தையும் அவனுடைய முகந்தான் பிரதிபலித்தது. அவனுக்கு இருபத்திரெண்டே வயது இருக்கும்; ஆனால் பார்வைக்கு முப்பது வயதைக் கடந்தவன்போல எண்ணச் செய்தது, அவனது முகத் தோற்றம். கடுமையான போராட்ட வாழ்வும், விவசாய வேலைகளும், கால் துண்டிக்கப்பட்ட பின்னர் அவன் பட்ட கஷ்டங்களும் உபாதைகளும் அவனுடைய முகத்தில் மாறாத வயோதிகச் சின்னங்களை முத்திரையாகப் பதித்துவிட்டன.

அவனை ஏற இறங்கப் பார்த்தவாறே பியோடார் சம்பாஷணையைத் தொடர்ந்தான்:

"அந்த வீரனோடுதான் நீயும் போரிட்டாயா! அது சரி, அவன் ஆள் எப்படி இருப்பான்? நல்ல இளமை முடுக்குள்ளவன்தானா?"



"ஆம்; இன்னும் இளைஞன்தான்; என்ன ஒரு முப்பது வயசைக்கூடத் தாண்டியிருக்க மாட்டான்."

"அவன் இந்தப் பகுதியைச் சேர்ந்தவனா? கொஸாக்கியனா?"

"இல்லை இல்லை. புகாசோவிற்குப் பக்கத்தில் பியாஷோவ்கான்னு ஒரு கிராமம் இருக்கிறது. அவன் அங்குதான் வாழ்ந்திருக்க வேண்டும். இங்கே வருவதற்கு முன்பு அவன் பாலாகோவில் இருந்ததாகப் பலர் பேசக் கேட்டிருக்கிறேன். எதுதான் சரின்னு யாருக்குத் தெரியும்?"

"அவன் ஆளு எப்படி இருப்பான்?" என்று பேராசை கொப்புளிக்கக் கேட்டான் பியோடார் வண்டிக்காரன் சொல்லுவதைத் தெளிவாகக் கேட்டு அந்த வீரனைப்பற்றிய முழு விவரத்தையும் அறிந்துகொள்ளத் துடித்தான்.

"அவன் ஆளு எப்படி இருப்பான்னா கேட்டீங்க, நான் அதை எப்படி விவரிக்கிறது? ஒரே வரியில் சொல்லட்டுமா? அவன் ஒரு சரியான வீரன்!" என்று நிதானமாகவும் உறுதியாகவும் முத்தாய்ப்பு வைத்தான் கிரிஷா. "நாங்க இப்புடித்தான் வண்டியிலே போயிகிட்டு இருக்கிறம்னு வைச்சுக்குங்களே; வழியிலே தூரத்திலே அவன் வருவதைப் பார்த்துவிட்டால் "அதோ சப்பாயேவ் வருகிறான்! சப்பாயேவ் வருகிறான்!" என்று எல்லோரும் உரக்கச் சொல்லி மகிழ்வார்கள். ஒரு நாளைக்குப் பத்துத் தரம் அவனைப் பார்ப்போம். இருந்தாலும் அவனை இன்னும் அடிக்கடி பார்க்கணும், பார்த்துக்கிட்டே இருக்கணும் என்கிற ஆசை மட்டும் குறையவே குறையாது. நண்பனே! அந்த மாதிரி ஆசாமி அவன்! அவன் வண்டிக்கிட்டே வந்ததும், வண்டியைவிட்டுக் குதித்து அவனைக் கிட்டத்திலே போயி ஏதோ அதிசயத்தைப் பார்க்கிறது போல, வைச்ச கண்ணு வாங்காமே பார்ப்போம். அவன் தன்னுடைய கருகருத்த மீசையை முறுக்கியவாறே கம்பீர

மாக நடந்து செல்வான். அவனுக்கு மீசை என்றால் கொள்ளை ஆசை. அவன் மீசையைத் திருகியவாறே எங்களுக்கு அருகில் வருவான். 'என்ன அங்கே உட்கார்ந்து பொழுது போக்குகிறீர்களா?' என்பான். 'ஆமாம், தோழர் சப்பாயேவ்!' என்போம், 'பொழுது போக்குங்கள்; சாவதானமாக அமர்ந்து மகிழுங்கள்' என்று புன்சிரிப்புடன் சொன்னவாறே எங்களைக் கடந்து போய்க்கொண்டிருப்பான். அவனுடைய அந்த ஓரிரு வார்த்தைகளே தேனமுதம்போல எங்களுக்குத் தித்திக்கும்; உச்சிமுதல் உள்ளங்கால்வரை புளகாங்கிதத்தால் உடல் சிலிர்க்கும். ஆம், மனிதன் என்றால் அவன்தான் சரியான மனிதன், வீர புருஷன்!"

"அவன் என்ன அவ்வளவு பெரிய வீரனா?" என்று கிளறினான் பியோடார்.

"அதிலென்ன சந்தேகம்" என்று அழுத்தம் திருத்தமாகத் தலையசைத்தான் கிரிஷா. "ஒரு தடவை இவாஷென்கோ தொழிற்சாலைக்குப் புயல்போல வந்தான் பாருங்கள், அடடா! அதெ எப்படிச்சொல்றது போங்க; பாட்டாளி மக்களைக் காப்பாற்றவேண்டுமென்று துடித்துப் புறப்பட்டு வந்தான். ஆனால், பாவம் அவனால் குறித்த நேரத்தில் வந்து சேர முடியவில்லை."

"அவ்வளவு தாமதமாகவா போய்விட்டது?"

"ஆம், ரொம்பவும்தான் தாமதமாகிவிட்டது" என்று பெருமூச்சுடன் தொடர்ந்தான் கிரிஷா. "அதுகூட இல்லை; அவன் ஒருசிறிதுதான் தாமதித்து வந்தான். அந்தச் சிறு பொழுதுக்குள் எவ்வளவு தொழிலாளர்கள் நசுக்கப்பட்டு நாசமானார்கள். உஷ்ஷ்!" என்று சொல்லியவாறே, சோர்ந்த கைகளையும் தலையையும் தொங்கவிட்டுக் கொண்டான் கிரிஷா.

துயரம் பொதிந்த எண்ணச் சுமையால் இருவரும் ஒரு நிமிஷம் பேசாமல் இருந்தனர். முன்னையைவிட அமைதியுடன் கிரிஷா பேசத் தொடங்கினான். "பலர் பலவிதமாகச் சொல்லுகிறார்கள். கூடவும் குறைத்தும் சொல்லுகிறார்கள். ஆனால், குறைந்த பட்சம் இரண்டாயிரம் பேராவது இருக்கக் கூடும். அவர்கள் அத்தனை பேரும் தொழிற்சாலைக் கட்டடங்களுக்கு இடையே இருந்த குறுகலான காலியிடத்தில் நெருக்கி நிறுத்தப்பட்டார்கள். அவர்களிலே பெண்கள் இருந்தனர். அவர்களுடைய கைக் குழந்தைகள் துடித்துக்கொண்டிருந்தார்கள். வயோதிகர்கள் தள்ளாடி நின்றார்கள். அத்தனை பேரையும் நிற்கவைத்து ஈவிரக்கமின்றிச் சுட்டுப் பொசுக்கினார்கள்; எவ்விதக் கருணையும் இரக்கமும் காட்டாது நரவேட்டையாடினார்கள். மிருகங்களாக நடந்துகொண்டார்கள்" என்று சொன்னபடியே கடிவாளத்தைச் சுண்டி இழுத்தவாறு பற்களை நறநறவென்று கடித்தான் கிரிஷா.



"இதை யெல்லாம் நீ நேரில் பார்த்தாயா?"

"இந்தக் கொடுமையைப் பார்க்காமல் எப்படி இருக்க முடியும்? இந்தச் சண்டாளத்தனத்தை வார்த்தைகளால் விவரித்துவிட முடியாது. சேறும் சகதியும் போல உருக்குலைந்த உடல்களும், உதிரம்பாய்ந்த சடலங்களும் குவியல் குவியல்களாகக் கிடந்தன. முறைகெட்டவர்களின் மூர்க்கத்தனத்திற்கும் சுழல் துப்பாக்கிக் குண்டுகளுக்கும் பலியாகப் பாடுபட்டுழைத்த செல்வங்கள் பரிதாபப் பிணங்களாக்கப்பட்டிருந்தனர்."

"அப்படின்னா, சப்பாயேவ் என்ன செய்துகொண்டிருந்தான்?"

"அவன் ஒருத்தனாலே அந்தக் கடைசி நேரத்திலே என்ன செய்ய முடியும்? எப்படிச் சமாளிக்க முடியும்? ஓடி வந்தான், கொடூரத்தையும் பேயாட்டத்தையும் கண்டான், கண்கள் எல்லாம் குருதி கொட்டின, முகம் சிவந்தது, உடல் பதறியது. பந்தயத்தில் ஓடிவந்த குதிரைபோல உடலெல்லாம் துள்ளியது. இரத்தம் துடித்துத் துடித்துப்

பாய்ந்தது. போர்க்கத்தியை உருவினான்; கைபோன போக்கில் ஓங்கிச் சுழற்றினான்; கைபோன போக்கில் ஓங்கிச் சுழற்றினான், ஆத்திரத்தில் பாறைமீது மோதினான். 'இங்கே வீணாகச் சிந்தப்பட்ட இவ்வளவு இரத்தத்திற்கும் ஈடாக இரத்த வெள்ளம் சிந்தச் செய்யப்படும். இந்தக் கொடுமையை நாங்கள் மறக்க மாட்டோம். பழிக்குப் பழி வாங்காமல் விட்டுவிட மாட்டோம்; ஒருபோதும் விட மாட்டோம்'' என்று சபதம் செய்தான்.

''செய்த சபதப்படி பழிக்குப் பழி வாங்கினானா?'' என்று கேட்டான் ஆண்ட்ரேவ் அவசரக் கோலத்துடன்.

''கண்டிப்பாக!'' இரத்தம் புல்வெளிப்பிரதேசம் எல்லாம் ஆறாகப் பாய்ந்தது. கொடுமைக்காரர்களை வாழைக்காய் போலச் சீவினான் சப்பாயேவ். பைத்தியம் பிடித்தவனைப்போலப் பாய்ந்து சென்று பழிவாங்கினான். எவனையும் சிறையில் அடைத்து விட்டுவிட அவன் மனம் பொறுக்கவில்லை. 'மூர்க்கர்களையெல்லாம் நிர்த்தாட்சண்ணியமாகக் கொன்று குவியுங்கள்' என்று கொக்கரித்தான் சப்பாயேவ் ''அந்த இவாஷென்கோ தொழிற்சாலைச் சம்பவத்தை மறக்கவே முடியாது'' என்று முடித்தான் கிரிஷா.

மீண்டும் அமைதி நிலவியது. மேலும் கிளிக்கோவ் பல கேள்விகளைக் கேட்டான். எல்லாவற்றிற்கும் பொறுமையாகப் பதில் சொல்லி வந்தான் கிரிஷா.

''ஏன் கிரிஷா! சப்பாயேவுடன் இருந்த ஆட்கள் எல்லாம் எப்படிப்பட்டவர்கள்? அவனுடைய சக வீரர்கள் எல்லோரும் எந்தப் பகுதியினர்?''

''எந்தப் பக்கம்? எல்லாம் இந்தப் பக்கத்து ஆசாமிகள் தான்; வேறே எங்கேயிருந்து வந்தவங்க! என்னைப் போன்ற விவசாயக்காரர்களும் பஞ்சைப் பாட்டாளிமக்களும்தான் பெரும்பாலோர். அவர்களோடு கொஞ்சம் படகோட்டிகளும் இருந்தார்கள். அவர்கள் எல்லாம் ரொம்ப நாளைக்கு முன்பே வீரர்களாகச் சேர்ந்தவர்கள்.''



''அதென்ன அசல் சைனியமேதானா, வேறே என்னமுமா?''

''ஆம்; நாங்கள் எல்லோரும் புகாசோவில் இருந்தபொழுது பெரிய சேனையினராகத்தான் இருந்தோம். பின்னர் அந்தச் சேனை சிறு சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. அதை ஒரு சேனை என்று சொல்லிக் கூப்பிடுவதைச் சப்பாயேவே விரும்புவதில்லை. அதை ஒரு சின்னப் பட்டாளம், படைப்பகுதி என்றுதான் அழைப்பான்.''

''சரி, அந்தப் பட்டாளத்திலே காயம் பட்டவர்களையும் மாண்டுபோனவர்களையும் வைச்சுக்கிட்டு எப்படிச் சமாளித்தீர்கள்?''

''எப்படியெல்லாமோ சமாளித்தோம் ஒரு மாதிரியா; எல்லா வகைத் துயரங்களையும் தாங்கினோம். காயம் பட்டவர்களைக் காப்பாற்ற எங்களால் முடிவதில்லை. கைவிடப்பட்ட அவர்களைக் கொடுமைக்காரக் கோஸாக்கியர்கள் தீர்த்துக் கட்டிவிடுவார்கள். ஒருவரைக்கூட விடாது கொன்று தீர்த்துவிடுவார்கள். யாராவது எங்கள் கண்ணில் பட்டால் அவர்களைக் கிராமங்களில் ஒளித்து வைப்போம். எங்களுடைய ஆட்களும் அனுதாபிகளும் எங்கும் உண்டு. இந்த டவோலோஷ்காவில்கூடக் காயமுற்றோர் பலர் பதுங்கியிருக்கிறார்கள், நன்கு பராமரிக்கப்படுகிறார்கள். இங்கு மட்டுமென்ன? எங்கும் உண்டு.''

''அவங்களையெல்லாம் எப்படித்தான் காப்பாற்றினீர்கள்?''

''மருந்தும் இல்லாமெ மண்ணாங்கட்டியும் இல்லாமெத்தான் அவுங்க காயங்களுக்கு மருந்து போட்டோம். எல்லாம் பாட்டி வைத்தியம்தான். ஏதாவது பட்டணமாக இருந்தால் ஓரிரு மருந்துகள் கிடைக்கும். இந்த மாதிரிப் பட்டிக்காடுகளிலே கேட்கவே வேண்டாம். வயதான பாட்டிகள் சிலர்தான் எல்லா வகை வைத்தியமும் செய்தனர். கால் எலும்பெல்லாம் சுக்கல் சுக்கலாக நொறுங்கிப்

போனதை எடுத்து வைச்சுக் கட்ட இந்தப் பாமரக் கிழவி களுக்கு என்ன தெரியும்? இந்த மாதிரி மரணவஸ்தையான பயங்கரக் காயங்களே நிறைய இருந்தா அவுங்கதான் என்ன செய்ய முடியும்?"

"அந்த மாதிரி பயங்கரமான காயம் பட்டோர் நிறை யவா?"

"நிறையவாவது! எல்லாமே அப்படிப்பட்ட காயங் தான் போங்க. சண்டையிலே கொஞ்சமாகத்தான் ரத்தம் வரும், கூட வராதுன்னு நினைக்கிறது?"

"நீ சொல்றது ரொம்ப வாஸ்தவம் கிரிஷா! எதுவும் நடக்கும், எல்லா மிருகத்தனமும் செய்வார்கள்" என்று தட்டிக்கொடுத்துப் பேசினான் அதுவரை மௌனமாயிருந்த ஆண்ட்ரேவ். அதுவரை எதையோ பிடிக்காதவன் போலும் யார்மீதோ கோபம்கொண்டவன் போன்றும் ஆண்ட்ரேவ் இருந்து வந்தான்.

"ஆமாம்" என்று மகிழ்ச்சியுடன் கையை அசைத்துக் கொண்டே பின்னவன் பதில் சொன்னான்: "யாவற்றை யுமே நாங்கள் சமாளிக்க வேண்டியது இருந்தது."

பியோடார் அதோடு நிறுத்த விரும்பவில்லை "கிரிஷா! அந்தச் சமயத்திலே சாப்பாடுகூடக் கிராம ஜனங்கள் போடு வார்களா?"

"போடுவார்களாவது? பின்னே போராடி அங்குலம் அங்குலமாகச் செத்தவர்களை யெல்லாம் உற்சாகப்படுத்திச் சாப்பாடு போட்டது யாரு, எல்லாம் அந்த நாட்டுப்புறத்து மக்களேதான். சண்டைக்குப் போகிற நாங்க எவ்வளவு சாப்பாட்டைத்தான் சுமந்து போக முடியும்? தலைமைக் கேந்திரத்திலிருந்து எப்பவாவது சாப்பாட்டுப் பொட்டலம் வரும். எங்களுக்கு வந்தால் அவர்களுக்கும் கொடுப்போம்; இல்லாத நாட்களில் அவர்களுடைய சாப்பாட்டை எங் களுக்கும் வழங்குவார்கள். எங்களுக்கு நிறையக் கொடுத்து அவர்கள் கஞ்சியாகக் குடிப்பார்கள். யாராயிருந்தாலும் சரி. தாய்நாட்டு வீரனொருவன் என்றால் தாராளச் சிந்தை யுடன் காப்பாற்றுவார்கள். அவர்களின் கருணையே கருணை" என்றான் மதிப்புடன்.



"அங்கே யெல்லாம் சாப்பாட்டுக்கு அவ்வளவு மோசமா?" என்று முகத்தைச் சுளித்தான் கிளிக்கோவ்.

"அவ்வளவாவது, மோசமாவது; மோசம் மோசம்னு சொன்ன காலமெல்லாம் போச்சு. ஆனால் எங்களுக்கு எல் லாம் சுளுவாத்தான் இருந்துச்சு" என்று திடமாகவும் நம் பிக்கையாகவும் சொன்னான் கிரிஷா.

"அதெப்படிப்பா மோசமில்லாமெ இருக்க முடியும்? கஷ்டமாகத்தான் இருந்திருக்கும்" என்று சமாதானமாகத் தன்னையே திருப்திபடுத்திக்கொண்டான் பியோடார். கிரிஷா தொடர்ந்தான்:

"எல்லாம் அப்படித்தான். நல்ல சுகமான காலமும் இருந்திச்சு, கஷ்டப்பட்ட காலமும் இருந்திச்சு. நினைக்க முடியாத பயங்கரமும் கொடுமையும் நிகழ்ந்தன. எண்ண முடியாத ஆதரவும் அரவணைப்பும் கிடைத்தன. சில சம யங்களில் எங்களுக்கு ரொட்டியும் கிடைக்காது; குதிரை களுக்குக் கொள்ளும் கிடைக்காது. ஓடிக் களைத்துப்போன அந்தக் குதிரைகளை மாற்றிப் போக வேறு குதிரையும் தர மாட்டார்கள். ஒன்றும் தரவில்லையே நாங்கள் சுணங்க முடியுமா? ஏதோ கிடைச்சவரைக்கும் தருவாங்க, நாங் களும் கிட்டினதை யெல்லாம் வாங்குவோம். சில சமயங் களில் அள்ளி வழங்குவார்கள். அவர்கள் எப்படியெல் லாம் இரக்கம் காட்டினார்களோ அதற்குச் சரியாகத்தான் நாங்களும் நடந்துகொண்டோம்; அங்கே எல்லாம் தட புடலா நடந்தது, தாராளமாக் கிடைச்சதுன்னு நான் ஏன் பெருமையடிச்சுக்கணும். பல சமயங்களில் எல்லாமே படு மோசமா இருக்கும். பல நாட்கள் தொடர்ந்து போரிட்டு முன்னேறி வரும் நேரத்தில், நாலைந்து நாட்களுக்கு ஒரு துண்டு ரொட்டிகூடப் பல்லிலே கடிச்சுப் பார்க்கக் கிடைக்

காது. யாராவது ஒரு ஆளை சந்திச்சு, ஏதாவது கொஞ்சம் ரொட்டி கடிச்சுப் பார்க்கக் குடுங்க. பல்லெல்லாம் கிட்டிப் போச்சு என்று கேட்டாலும், இல்லவே யில்லை என்று எல்லாவற்றையும் திறந்து காட்டிவிடுவான் மனுஷன்; இதைக் கேட்டதும் பேசாமெ, சந்தோஷமா இருக்கிறது போல நடந்திடுவோம். இந்த மாதிரி எத்தனையோ கதை! சில சமயங்களிலே சில வசதியான ஆளுக வெச்சுக்கிட்டே இல்லையின்னு கையை விரிச்சிடுவானுக; விஷயம் தெரிஞ்சா விட மாட்டோம்; கிடைத்தவரை சுருட்டிக்கொள்ளுவோம்; சில சமயம் உதைகளும் சரியா வாங்கி யிருக்கிறோம்.''

''நீங்களும் அவன்மாதிரி ஆளுகளை வெளுத்து வாங்கியிருப்பீங்கல்ல.''

''ஆமாமா! அந்த மாதிரி ஐந்தாம் படை ஆளுகளெ எல்லோருமே வெளுத்துப்பிடுவோம். அதுதானே யுத்தம்!''

''சரியான ஆளு நீ கிரிஷா!'' என்று மீண்டும் ஒரு தட்டுத் தட்டினுன் ஆண்ட்ரேவ்; கிரிஷாவின் வெளிப்படையான, முரட்டு உண்மைகள் அவனுக்கு ரொம்பவும் பிடித்திருந்தன.

''சில சமயங்களில் நானும் சேர்ந்து கொடுத்திருக்கிறேன். நல்லா வாங்கியு மிருக்கிறேன். ஒரு நாள் சப்பாயேவே என்னையும் ஒரு சமாசாரத்திலே பிச்சுப்பிட்டான்ல'' என்று கம்பீரமாக, நெஞ்சு நிமிர்ந்து தொடர்ந்தான் கிரிஷா.

'சப்பாயேவ்' என்ற மந்திரப் பெயரைக் கேட்டதும் நிமிர்ந்து உட்கார்ந்தான் பியோடார். ''என்ன என்ன? சப்பாயேவுமா? எதுக்கு? எப்படி சொல்லேன்ய்யா?'' என்றுன்.

''கேளுங்கள். ஒரு சமயம் புகாசோவிற்கு அப்பால் உள்ள ஒரு கிராமப் பகுதியில் நான் பாராக் காத்துக் கொண்டிருந்தேன். நானும் ரொம்ப நேரம் பாராக் கொடுத்துக் கொடுத்துக் களைச்சுப் போயிட்டேன். எல்லா வேலையிலேயும் இந்த எழவெடுத்த பாரா வேலைதான் மகா மோசமானது. எனக்கும் அலுப்புத்தட்டிப் போச்சு; நான் இருந்த இடத்துக்குக் கொஞ்சம் தள்ளி ஒரு பூவரசமரத் தோட்டம் இருந்தது. அந்த அடர்ந்த மரக் கிளைகளில் ஒரு காக்கைக் கூட்டம் கத்திக்கொண் டிருந்தது. கா கா என்ற கரைச்சல் என் பொறுமையைச் சோதித்தது. அந்தச் சத்தம் காதிலே நாராசம்போலே பாய்ந்தது. என்னுலே பொறுக்க முடியவில்லை. ஏற்கெனவே களைச்சுப் போயிருந்த எனக்கு இதைத் தாங்க முடியவில்லை. ஏதாவது ஒரு காக்கையைச் சுட்டுப்பிட்டா எல்லாந் தொலைஞ்சிடும்னு நினைச்சேன். சுட்டா யாருக்குத் தெரியப் போகுங்கற தைரியமும் வந்திடுச்சு; அங்கே வந்து எத்தனையோ பேரு சுடுறுங்க; நம்ம சுட்டா யாரு கவனிக்கப் போறுங்கன்னு நினைச்சேன். கிட்டத்திலே போனேன். துப்பாக்கியை வைத்துக் குறி பார்த்தேன். அந்தக் காக்கைக் கூட்டத்தின் நடுவிலே டப் டுப் டப் என்று ஐந்து தோட்டாக்களையும் பொசுக்கிவிட்டேன். காக்கைக் கூட்டமே எழுந்து வானத்தைக் கருமையாக்கி ஒரே கரைச்சலுடன் மூலைக் கொன்றுகப் பறந்தன. குண்டு பட்ட பறவைகள் பரிதாபமாகத் தலைகுப்புறக் குற்றுயிராக விழுந்தன. இறகொடிய, குருதி வடிய, நொடியில் விழுந்து மாண்டன. மற்ற காக்கை யெல்லாம் வானத்தில் வட்டமிட்டு, வட்டமிட்டுப் பேரிரைச்சலுடன் சுற்றின. ஆனல், அந்த இடத்துக்குப் பக்கத்திலேயே சப்பாயேவும் தன்னுடைய கிலேதார்களுடன் இருந்தான் என்பது எனக்குத் தெரியாது. வேட்டுச் சத்தத்தைக் கேட்டதும் இடிமேகம் போலேச் சீறிவந்தான் சப்பாயேவ்.''



''நீதான் சுட்டாயா?'' என்றுன் கடுகடுத்த குரலில்.

எனக்கு ஒரே நடுக்கமாகிவிட்டது. ''இல்லெ இல்லெ, ம்....ம் நான் இல்லையே இல்லே'' என்றேன்.

''நீ இல்லாமெப் பின்னே யாரு அந்தக் காக்கைகளை விரட்டியது?''

''அதுகளாப் பறந்திருக்கும்.''

"அப்படியா எங்கே உன் துப்பாக்கியைக் காட்டு!" என்று சொன்னபடியே வெடுக்கென்று துப்பாக்கியைப் பறித்தான். தோட்டாக் காலியான அந்தத் துப்பாக்கியைக் கண்டதும் அவன் முகம் சிவ்வென்று சிவந்தது. கத்தத் தொடங்கிவிட்டான்.

"என்ன சுடலேயின்னா சொன்னே; லெட்சணத்தைப் பார்த்தாலே தெரியுதே! கேடுகெட்டவனே! எங்கேயிருந்து தோட்டாவும் ரவையும் கிடைக்கும்னு நினைக்கிறே? இருக்கிற கொஞ்சநஞ்சம் தோட்டாவையும் பாழாக்கிட்டியே. கொடுமைக்காரக் கோஸாக்கியர்களை எதினாலே சுடுவாய் முண்டமே! அந்தக் கோஸாக்கியர்களுக்குப் பயப்படுறதை விடக் காக்கைக் கூட்டத்தைக் கண்டு ரொம்பப் பயந்துட்டியோ முட்டாளே! அடிமுட்டாளே!" என்று கர்ஜித்தவாறே துப்பாக்கியை என்னிடம் விட்டெறிந்தான்.

"நான் மூச்சுவிடவில்லை. அந்தச் சமயத்திலே அவனுக்கிட்டேப்போயி என்னத்தைப் பேசுறது. அவன் இவ்வளவு தூரத்துக்குத் திட்டவிடாமெ நானும் அடக்கியிருக்கலாம். அப்ப அசந்து போயிட்டேன். பிறகுதான் ஞாபகத்துக்கு வந்துச்சு; அவன் எங்கே துப்பாக்கியைக் காட்டுண்ணு கேட்டபோதே நான் உஷாரா யிருந்திருக்கணும்: 'எட்டி நில், கிட்ட வராதே; வந்தாப் பொசுக்கிப்பிடுவேன்; பாராவில் இருக்கிறவன் துப்பாக்கியைப் பரிசோதிக்க உனக்கு ஒண்ணும் அதிகாரம் இல்லே; ஒழுங்காப் போயிடு' என்று நானும் கொஞ்சம் சுண்டியிருந்தா இவ்வளவு பேசி யிருக்க மாட்டான். அப்படி இல்லையின்னாலும் வேறே ஏதாவது வழி செஞ்சு ஏதாவது வேக்காடு வெச்சிருப்பான். அந்தச் சமயத்திலே நம்ம முறைப்பெல்லாம் ஒரு சல்லிக்கும் உதவாது.' என்னுடைய துப்பாக்கிச் சனியனை அவனுடைய தொந்திக்கு நேரே நீட்டியிருந்திருக்க வேண்டும். அதுதான் அவனுக்கும் பிடிக்கும்; உடனே என்னையும் மன்னிச்சிட்டுப் போயிருப்பான்."



"என்ன? என்ன? அதுதான் அவனுக்குப் பிடிக்குமா?" என்று வியப்புடன் விளித்தான் பியோடார்.

"ஆம். அதுதான் அவன் சுபாவம். நாம் எவ்வளவுக்கு ஆண்மையும் ரோஷமும் காட்டுகிறோமோ அவ்வளவுக்கு அமைதியும் அன்பும் கொள்ளுவான் சப்பாயேவ். துணிச்சல் உள்ள எவனையும் அவனுக்கு ரொம்பப் பிடிக்கும். 'நீ ஒரு முரட்டுப் பையன்; வைரம்பாய்ந்த இதயம் கொண்ட முரடன்' என்று தட்டிக்கொடுப்பான். இந்த மாதிரி சப்பாயேவின் குணத்தை யெல்லாம் சொல்றதுன்னு ஆரம்பிச்சா, அதுக்கு ஒரு முடிவே இருக்காது" என்று ரோட்டைப் பார்த்தவனாய் "அதோ ஐவான்டேயேவ்காவும் வந்திடுச்சே!" என்றான் கிரிஷா.

கிரிஷாவிற்கு ரொம்பவும் ஆனந்தம் பெருகிவிட்டது. சீட்டி யடித்த வண்ணம் வெகு லாவகமாகக் கடிவாளத்தைப் பிடித்தபடி வண்டியை ஓட்டிக்கொண்டு ஊரை நெருங்கினான்.

"உங்களை யெல்லாம் சோவியத்துக்கே கூட்டிப்போகணுமா?"

"ஆமாம்; சோவியத்துக்குத்தான் கிரிஷா!"

"இல்லையின்னா உங்களை பார்ப்யோனிச்சுக் கிட்டேக் கூட்டிப் போகட்டுமா? அந்த ஆளு சப்பாயேவெப்பத்தி ரொம்பவும் தெரிஞ்சவன்."

"யாரு அந்தப் பார்ப்யோனிச்?"

"எங்க ஆளுதான். எனக்கு முன்னாலே எங்க சேனையிலே இருந்தான். போரிலே அவனுடைய கை யொன்று அடியோடு துண்டித்துப்போய்விட்டது. அதோடு வீடு திரும்பிவிட்டான்."

"இப்ப இங்கேதான் இருக்கிறானா?"

"ஆம். இங்கேதான் கஷ்டப்படுகிறான். அவனுடைய விளைநிலமெல்லாம் பாழாப்போச்சு; பாழாப்போன கோஸாக்கியர்கள் அவனுடைய உடைமைகளை யெல்லாம் நாசமாக்கி

விட்டார்கள். அவனுடைய வீட்டைப் பிரித்து நெருப்புக்கு இரையாக்கிவிட்டார்கள். சாமான்களை யெல்லாம் கைப்பற்றிக்கொண்டு அம்மணமாக்கிவிட்டார்கள். இருந்தாலும் அவன் அசந்துவிடவில்லை. எல்லாவற்றையும் செம்மைப்படுத்திச் சரியாக்கணும்னுதான் கஷ்டப்படுகிறான். என்றாலும் அவனாலே ரொம்பப் பாடுபட முடியலே.”

“அப்படியா? வழியிலே அவனுடைய வீட்டை எங்களுக்குக் காட்டுங்க” என்றான் பியோடார்.

“சரி” என்றான் கிரிஷா.

அதற்குள் வண்டி ஐவான்டேயேவ்காவிற்குள் நுழைந்துவிட்டது. அது ஒரு பெரிய கிராமம். குளிர்காலம் வந்துவிட்டால் சிறு கிராமங்களின் பாடு திண்டாட்டம்தான். உறைபனியின் மூட்டத்தால் கிராம அழகே கெட்டுவிடுகிறது. கரடியின் குகைபோலக் கிராமமே சுருங்கிவிடுகிறது. கிராமத்தின் வீதிகள் பனிப்பாறைகளால் ஒடுங்கிப் போய்விடுகின்றன. ஆனால், பெரிய கிராமங்களோ பனிக்கட்டிகளால் மேலும் அழகு பெறுகின்றன. வெள்ளித் தோரணங்கள்போல எங்கும் பனி மண்டலங்கள் கண்ணைக் கவர்கின்றன. எனவே, ஐவான்டேயேவ்காவும் அழகும் களையும் சொட்டப் பொலிந்தது!

குதிரை வண்டி தெருவின் வழியாகப் பவனிச் சென்றது. பாதையை மூடிக்கிடந்த பனிக் கல் பளிங்குகளைப் பொடியாக்கிச் சாவதானமாகப் போய்க்கொண்டிருந்தது. வழியில் ஒரு இடத்தில் வண்டியைச் சற்று நிறுத்தி, ஒரு குடிசையைக் காட்டியபடியே “அதுதான் பார்ப்யோனிச்சின் வீடு!” என்றான் கிரிஷா. அதுபோல இன்னொரு சிறு வீட்டையும் சுட்டிக்காட்டிவிட்டு, தீனக் குரலில் தலை தாழ்த்திப் பேசாது வண்டியை ஓட்டினான். குடிபோதை தலைக்கேறியவனைப்போல மேலும்கீழும் அசைந்தபடியே வண்டி நகர்ந்தது. கடைசியாகச் சோவியத் இருந்த கட்டிடத்திற்கே வந்துவிட்டார்கள். எங்கும் போல, இங்கும்



சோவியத் ஆட்சி மன்றம் ஊருக்கு நடுவில், முக்கியமான இடத்தில், பழைய பஞ்சாயத்துத் தலைவனுடைய வீட்டிலேயே இருந்தது.

சோவியத்தை அடைந்ததும், வண்டியை விட்டுப் பொத்துப் பொத்தென்று குதித்தார்கள். சுரணையற்று மரக்கட்டை போலக் கிடந்த தங்கள் கால்களை ஊன்றித் திமிர் விட்டார்கள், நின்றபடியே நெட்டி முறித்தார்கள். உடைகளை யெல்லாம் நன்கு சரிப்படுத்திக்கொண்டார்கள். பனி மூடிக்கிடந்த பொட்டலங்களையும், பெட்டிகளையும் தூக்கிக்கொண்டார்கள். கால் காசுகூடப் பெறாத அந்தச் சாமான்களை வெகு பத்திரமாகத் தூக்கி வந்தார்கள். சோவியத்தின் மாடிப் படிகளில் விரைந்து ஏறினார்கள்.

வழக்கம் போல, எல்லா அலுவலகத்தையும் போலத்தான் இதுவும் இருந்தது. பரந்த இடம். எங்கு பார்த்தாலும் தூசும் தும்பட்டும், காகிதக் குப்பையும், கத்தைக் கட்டுகளும் நிறைந்து இருளடைந்து கிடந்தன. அவர்கள் ரொம்பவும் முன்கூட்டி வந்துவிட்டார்கள். பனி கொட்டும் அத்தகைய காலை நேரத்தில் யாரும் எந்த அலுவலகத்துக்கும் வர மாட்டார்கள். ஆனால் இங்கே மட்டும் இவ்வளவு சீக்கிரத்தில், இதற்கு முன்பே ஒரு பெரிய கூட்டம் படையெடுத்துவிட்டது! அவர்களுக்கு அப்படி என்னதான் தேவைப்பட்டு இவ்வளவு சீக்கிரத்தில் வந்திருக்கிறார்கள் என்று யாருக்குமே புரியவில்லை. ஆனால், வந்தவர்கள் மட்டும் அவர்களது காரியத்தைக் கவனித்தபடியே இருந்தனர். சிக்கும் அழுக்கும் திரண்ட கைபிடிச் சுவரில் சாய்ந்துகொண்டும், சன்னல்களைத் திறந்து வைத்துக்கொண்டும், சன்னல் சட்டங்களைச் சுரண்டிக்கொண்டும், கைகளைச் சூடுவரச் தேய்த்துக்கொண்டும், உற்சாகமில்லாது ஓரிரண்டு வார்த்தைகளை உதிர்த்துக்கொண்டும் அங்கேயே இருந்தனர். ஒரு குறிப்பிட்ட தெளிவான நோக்

கம் ஏதுமின்றியே இங்கே வந்ததுபோலத்தான் கூடியிருந்தார்கள்.

சிறிது நேரங் கழிந்தது. புதிதாகப் பலர் உள்ளே வரக் கண்டனர். அவர்களைப் பார்த்தவண்ணமே பனிபெய்யும் பரிதாபத்தையும், குளிரின் கொடுமையையும், களைத்துப் போய்ப் பிரயாணிகள் வருவதையும், யார் யார் எங்கே எதற்காகப் போகிறார்கள் என்பதுபோன்ற பல விஷயங்களையும் மாறி மாறிப் பரிமாறிக்கொண்டனர். ஓட், பார்லி முதலிய தானியங்கள் திடீரென்று போதாமல் போனமையைக் குறித்தும், இன்று கண்டிப்பாகப் பனிப்புயல் வருமென்பது குறித்தும், எனவே யாரும் எங்கும் வெளியில் போகாமல் இருப்பதே நல்லது என்றும் டல விஷயங்களைக் குழப்பிக் குழப்பித் தவித்துக்கொண்டிருந்தனர்.

எல்லோரும் உள்ளே வந்துவிட்டனர். கடைசியாக வந்த லோபார் "தோழர்களே! தோழர்களே!" என்று கூப்பிட்டபடியே உள்ளே நுழைந்தான்.

"வாங்க வாங்க" என்று பல குரல்கள் வரவேற்றன.

"சோவியத்தின் தலைவர் உள்ளே இருக்கிறாரா?" என்றான் லோபார்.

"ஆமாம். அந்தா இருக்கிற அறைகுள்ளேதான் இருப்பாரு; பாருங்க" என்றனர் பலர்.

இந்தப் பிரயாணம் முழுவதும் வேண்டிய வசதிகளையெல்லாம் கவனித்து வந்தவன் லோபார்தான். அந்த நால்வரிலும் முன்னணியில் நின்று பேரம் பேசுவதும், கூலி பேசி முடிப்பதும், குதிரை வண்டிகளை வாடகைக்கு அமர்த்துவதும், சாப்பாடு முதலிய வசதிகளுக்கு ஏற்பாடு செய்வதும், தங்குவதற்கு ஆவன செய்வதும் எல்லாம் அவன் பொறுப்பு.

ஆண்ட்ரேவ் இன்னும் போர்த்தியிருந்த கம்பளியைக் கோட்டைக்கூடக் கழற்றவில்லை. அங்கே ஒரு மூலையில் சன்னல் விளிம்பில் உட்கார்ந்திருந்த ஒரு நாட்டுப்புறத்



தானைத் தள்ளியபடியே அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்துவிட்டான். ஏற்கெனவே இடம் பிடித்து இருந்த அவன் கொஞ்சம் முறைத்துப் பார்த்ததைக் கண்டான், உடனே ஒரு சுருட்டை அவனுக்கும் கொடுத்துவிட்டுத் தானும் புகைக்க ஆரம்பித்துவிட்டான். டெரெண்டி ரொம்பவும் சுறுசுறுப்புடன் தன் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தான். கூடியிருந்த கிராமத்தார்களையெல்லாம் அருகில் வைத்துக்கொண்டு பல விஷயங்களைப்பற்றி விசாரித்தான். அந்தக் கிராமத்தில் எத்தனை பேர் வசிக்கிறார்கள்? ஊர் நிலைமை எப்படி இருக்கிறது? அகவிலையெல்லாம் உயிர்ந்துவிட்டதா இல்லையா? சோவியத் நிர்வாகம் எப்படி நடைபெறுகிறது? புதிய சோவியத் நிர்வாகத்தின் அமைப்பும் போக்கும் ஜனங்களுக்குப் பிடித்திருக்கிறதா இல்லையா? என்பதைப்பற்றியெல்லாம் விரிவாக விவாதித்துக்கொண்டிருந்தான். அவனுடைய அந்த வேலை சுணக்கமின்றி முன்னேறிக்கொண்டிருந்தது.

ஆனால் பியோடார் மட்டும் நீண்ட சிந்தனைச் சுழலில் ஆழ்ந்திருந்தான். கிரிஷாவுடன் பேசிய பேச்சுக்களும், அவன் சொன்ன சம்பவங்களும் அவன் நினைவுத் திரையில் ஓடின: தீரன் சப்பாயேவ், புல்வெளிப் பிரதேசத்தின் பாதுகாவலன் சப்பாயேவ், பாட்டாளி மக்களின் தோழன் சப்பாயேவ், பஞ்சைகளின் நம்பிக்கைத் தெய்வம் சப்பாயேவ் அவனுடைய எண்ணக் கண்ணாடியில் தோன்றித் தோன்றி மறைந்தான். "ஆம். அவன் ஒரு உயர்ந்த வீரன்; ஒப்பற்ற வீரன். மகத்தான வீரன், மக்களிடமிருந்து தோன்றிய உயர்ந்த சிறந்த வீராதி வீரன்" என்று வாய்விட்டுச் சொல்லிக்கொண்டான் பியோடார். "சுதந்திர தாகம் கொண்ட மக்களிடையே தோன்றிய சூராதி சூரன், எமெல்யான் புகாசேவ், ஸ்டெபான் ராஸின், ஏர்மாக் போன்ற பழம் பெரும் மக்கள் படைத்தலைவர்களை ஒத்த தடந்தோளான், மலைபோன்ற உறுதியும் மலையாத நெஞ்சாழமும்

கொண்ட மாவீரன். அந்தப் பழைய வீரர்கள் எல்லோரும் மகத்தான சாதனைகளால் மங்காப் புகழ் பெற்றவர்கள் தாம். அவர்களது காலத்தின் அணி வீரர்கள்; ஆனால் சப்பாயேவ் வாழ்வது இந்தக்காலத்தில்;இவன் வாழ்வது முரண்பட்ட சூழ்நிலையும், மோதி எழும் மூர்க்கத்தனமும் அதிகாரப் போர்வையில் படர்ந்துள்ள அக்கிரமக் காலத்தில். எனவே, சப்பாயேவின் தீரச் செயல்களும், துணிச்சலும் தனிப் போக்குடையவை. கிரிஷா சொன்னதிலிருந்து சப்பாயேவின் துணிச்சலும், தயங்காத அஞ்சாமையும் தளராத முன்னேக்கமும் வெளிப்படையாகப் புலப்படுகின்றன. அவனைச் சாதாரணப் படைவீரன் என்பதைவிடப் பண்பால் உயர்ந்த மாவீரன் என்பதே சிறந்தது; வெறும் புரட்சிக்காரன் என்பதைவிட விழுமியதே நாடும் வீராதி வீரன் என்பதே உயர்ந்தது. சற்று நேரங்கூட ஓய்ந்திராத உடலுறுதியும், அயராத தாகமும் கொண்ட ஆண்மையாளன் என்றுதான் அவனைச் சொல்ல வேண்டும். அடக்கப்பட்டு அமுங்கிக்கிடந்த நாட்டுப்புறத்து மக்களின் பின்னணியில் இத்தகைய வல்லமையும் வேட்கையும் கொண்ட தகையாளன் தோன்றியுள்ள புதுமையே புதுமை" என்றெல்லாம் வியந்துகொண்டிருந்தான் பியோடார்.

நேரம் கடந்தது. பியோடாரின் சிந்தனையும் கலைந்தது. பார்ப்யோனிச்சின் வீட்டிற்குப் போகும் வழியைப்பற்றிப் பக்கத்தில் நின்றவர்களைக் கேட்டு விசாரித்தான். சோவியத்துத் தலைவரைக் கண்டு பேசிவிட்டு லோபார் திரும்பி வந்து எல்லோரையும் தேத்தண்ணீர் பருக அழைத்தான். பியோடார் மட்டும் போகவில்லை. பார்ப்யோனிச்சைச் சென்று பார்த்துவருவதாகக் கூறிப் புறப்பட்டான் அவன்.

அதற்கப்புறம் ஒன்றரை மணி நேரம் ஓடிச்சென்றது. ஐவான்டேயேவ்காவிலிருந்து அவர்கள் மீண்டும் புறப்பட்டார்கள். பியோடார் மட்டும் விசனத்தோடும் வேதனையோடும் அமர்ந்திருந்தான். மிகச் சிரமப்பட்டுச் சென்றும்



அவனால் பார்ப்யோனிச்சைச் சந்திக்க முடியவில்லை. அதற்கு முதல் நாள்தான் அவன் புகாசோவ் சென்றுவிட்டான். அந்த ஆழ்ந்த வருத்தத்தில் இருந்த பியோடாரை ஓரிரு கேள்விகள் கேட்டு வேறு பேச்சிற்கு இழுக்க முயன்றான் ஆண்ட்ரேவ். பியோடார் உம் கொட்டுவதாகக்கூட இல்லை. அசையாமல் பேசாதிருந்தான். டெரெண்டியும் லோபாரும் கொஞ்ச நேரம் வாய்மூடி இருந்தனர்; அதற்கு மேல் அவர்களால் வாய் பொத்தி இருக்க முடியவில்லை. தங்களை மறந்து பாட ஆரம்பித்துவிட்டனர்; டெரெண்டிதான் வாய் திறந்து பாடினான், லோபார் வெறுமனே ராகம் போட்டு ஒத்து ஊதிக்கொண்டிருந்தான். டெரெண்டியின் சங்கீதம் பேய்க் கூச்சலாக மாறிவிட்டது. சுருதி, இராகம் இவற்றிற்கெல்லாம் கட்டுப்படாது காட்டாற்று வெள்ளம் போலக் காற்றைப் பிளந்து எதிரொலித்தது. இதற்கு மேல் ஆண்ட்ரேவால் இதைச் சகிக்க முடியவில்லை. ஊளையிடுவதை நிறுத்துமாறு அவன் முன்னிலிருந்தபடியே உரக்கக் கத்தினான். உடனே பாட்டை நிறுத்திப் பேசாதமர்ந்தான் டெரெண்டி. அதிலிருந்து டவோலோஷ்கா போகும் வரை எல்லோரும் தூங்கி வழிந்தார்கள். அங்கு சென்றதும் ரொம்ப நேரம் தாமதிக்கவில்லை. வேறு குதிரைகளை மாற்றிக்கொண்டு புகாசோவை நோக்கிப் போய்க் கொண்டேயிருந்தார்கள்!

டவோலோஷ்காவை விட்டுப் புறப்பட்டது முதல் குளிரும் காற்றும் கொடுமையாகப் பெய்யவும் வீசவும் தொடங்கின. கரும் புகைபோலக் கண்ணை மறைத்து மேகங்கள் வானத்தைக் கப்பிச் சென்றன. சுரீரென்று, காயவைத்த இரும்புக் கம்பியைப் பாய்ச்சுவது போல ஊதி வீசியது குளிர் காற்று. ஒரு குறிப்பிட்ட திசையிலிருந்து மட்டும் வீசாமல் எல்லாம் புறத்திலிருந்தும் திடீரென்று பாய்ந்து தாக்கும் பகைப் புலம் போலச் சீறி வீசியது பனிக்காற்று! சங்கிலியால் பிணைக்கப்பட்ட வேட்டை நாய் ஒன்று

பாய்ந்து பிரண்டுவது போல, சதையைக் கிழித்துச் சென்றது உறைபனியால் ஊறிப் போன பேய்க்காற்று; வீச்சு சற்று அடங்குவதும், திடீரென்று பொங்குவதுமாக வாட்டி வளைத்து வீசியது. பாதையெல்லாம் பனிப் பாறைகள், பாதி சிதைந்த பனித் தூள்கள். பொழுதும் மங்கத் தொடங்கியது. பயணமும் நீண்டுகொண்டே இருந்தது. சற்று நேரத்தில் காரிருள் சூழ்ந்துகொண்டது; பனிப் படலங்கள் ஊசி குத்துவதுபோலப் புண்ணாக்கிப் பறந்தன.

பிரயாணிகள் எல்லோரும் இறுகப் போர்த்திக்கொண்டு புதர் எலிகளைப்போலச் சுருண்டு கிடந்தார்கள். வண்டிக்காரர்கள் உணர்ச்சியில்லாமல் ஓட்டிக்கொண்டிருந்தார்கள். முகத்தில் வீசிப் பறந்த பனிக்கட்டிகளைச் சட்டை செய்யாமல் குதிரைகள் நடந்துகொண்டிருந்தன. கரடுமுரடான பிரதேசங்களையெல்லாம் பொருட்படுத்தால் போய்க்கொண்டிருந்தன. புல்லும் புதரும் மண்டிக்கிடந்த பகுதிகளில் வண்டிகள் சென்றபொழுது ஒருவகையான அமைதி நிலவியது. வெறும் பசும்புல் வெளியிலே இறங்கி மீண்டும் ஓடத் தொடங்கியதும் ஊதற் காற்று உடல் கிழிய வீசிற்று, இரைந்து இரைந்து சூராவளியாகச் சுழன்றது. 'எல்லாமே என்னுடையவை, எதிர்ப்படும் எதையும் அழித்துச் சின்னாபின்னப்படுத்துவதே என் தொழில்' என்பதுபோல இரைந்து கத்திச் சென்றது கடுங்குளிர் காற்று. அந்தப் புல்வெளிப் பிரதேசம் முழுவதையுமே கிடுகிடுக்க வைத்தது குளிர்; பயங்கரமான பாழிடமாக்கி நாளெல்லாம் வீசிக்கொண்டிருந்தது; ஓய்ச்சல் ஒழிவின்றி வீசிக்கொண்டேயிருந்தது.!

புகாசோவிற்கு இன்னும் பத்துக் கல் தூரம்தான் இருக்கும். பாதையில் கொஞ்சம் சலசலப்பும் சந்தடியும் இருந்தது. ஒட்டகக் கூட்டம் ஊர்ந்து எதிர்ப்பட்டது. ஓரிரு பிரயாணிகள் கொடுமைக் குளிருக்கும், கொட்டும் பனிக்கும் அஞ்சாது போய்க்கொண்டேயிருந்தார்கள். இவர்களில்



பெரும்பாலோரால் தங்கள் வீடு திரும்ப முடிவது இல்லை. பனியால் விரைந்து மடிந்து போவார்கள். வேறு சிலர் பனியிலேயே மறு நாள் காலைவரை புதையுண்டு கிடப்பார்கள். யாராவது தோண்டி எடுத்தால்தான் அவர்களுக்கு மீண்டும் உயிர் வரும். இயற்கையின் திருவிளையாடலுக்கு இசையாதவர்கள்போலப் போய்க்கொண்டேயிருந்தார்கள்.

“இதுக்கு முன்னாலே இப்படிப் பனிப்புயல் வீசியதைப் பார்த்ததேயில்லை” என்றான் ஒரு பாதசாரி. “கடவுள்தான் இதை அனுப்பிச்சுட்டாரு போலயிருக்கு. அவரை ஒழுங்காக் கும்பிடாமெக் கோயிலையெல்லாம் மறந்ததுக்குத் தண்டனைதான் இது” என்றான் அவன்.

இந்த மாதிரி அர்த்தமில்லாத சம்பிரதாயச் சொற்களைச் சொல்லிச் சொல்லி அவர்கள் பழகிப்போய்விட்டார்கள். கிறிஸ்துவ சமய சம்பிரதாயங்களில் ஊறிக்கிடந்த அந்த நாட்டுப்புறத்தவர்களுக்கு இது வழக்கமாகிவிட்டது. ஆனால், எதையும் உண்மையாகவே உணர்ந்து இப்படிப் பேசவில்லை என்பது மட்டும் நிச்சயம்.

பனிப்புயலின் பயங்கரம் வினாடிக்கு வினாடி அதிகரித்து வந்தது. எல்லோரும் ரயில் நிலையத்திற்கு ஓடிச் சென்று அடைக்கலம் புகுந்தனர். நமது பிரயாணிகளும் அவ்விடத்தை அடைந்தனர். சறுக்கு வண்டிகளை விட்டுப் பந்துபோலக் குறுகிக் குதித்தனர். இந்தத் தரம் வழக்கம்போல, லோபாரை மட்டுமே எல்லா வேலைக்கும் அனுப்ப அவர்கள் விரும்பவில்லை. எல்லோரும் வேலைகளைப் பங்கிட்டுக்கொண்டார்கள். ஒருவன் ரயில் நிலையத்து அதிகாரிகளிடம் சென்றான், இன்னொருவன் தளபதியைப் பார்க்க ஓடினான். டெரெண்டி பனி மூடிய தண்டவாளத்து வழியாகவே நடந்து சென்று ஏதாவது ரயில் யூரல் பகுதிக்குச் சமீபத்தில் புறப்படுமா என்பதை அறிந்து வரச் சென்றான். இந்த மாதிரி அவர்கள் வேலையைப் பிரித்துக்கொண்டதற்கும் தகுந்த காரணம் இருக்கிறது. சமாராவிற்குச்

சென்ற அவர்களுடைய பயணவழியில் ரயில்வே அதிகாரிகளின் ஆணவத்தையும், ஏமாற்றுதலையும் நேரில் கண்டு அறிந்தவர்கள் அவர்கள். பிரயாணிகளுக்கு அவர்கள் சரியான பதிலே தர மாட்டார்கள், வசதிகளைக் கொடுக்க மாட்டார்கள்; ரயிலை அனுப்பும் அதிகாரிகளில் பலர் ரயில் புறப்படும் நேரத்தை வேண்டுமென்றே தவறாகச் சொல்லிப் பிரயாணிகளை ஏமாற்றிய கொடூரம் கண்டு இவர்களும் மனம் குலைந்திருந்தார்கள். இந்தா, ஒரு மணி நேரத்தில் வண்டி புறப்பட்டுவிடும் என்றால் மறு நாள் வந்தாலும் வண்டி நகராது. காத்துக் காத்து மக்கள் கண்பூத்துப் போவார்கள். அவர்களை அப்படிக் காத்துக் கிடக்கச் செய்வதிலே ஒரு தனி ஆனந்தம் இருந்தது, அந்த அதிகார வெறியர்களுக்கு! இந்த மாதிரி ஏமாற்றுதலுக்கு ஆளாகாமல் வண்டி புறப்படும் சரியான நேரத்தைப் பலர் வாயிலாகக் கேட்டு ஒப்பிட்டறியத்தான் பலரும் பல திசைகளில் சென்றனர்.

சிறிது நேரங் கடந்தது. தூரத்தில் ஒரு ரயில் பெட்டியொன்று நின்றது. அதன் அருகில் யூரல் பகுதிக்குச் செல்லப்போகிற சில அரசியல் ஊழியர்கள் பயணத்துக்கு வேண்டிய பொருள்களைச் சேர்த்துக்கொண்டிருப்பதைக் கண்டார்கள். சில நிமிடங்கள் அவர்களுடன் பேசிக்கொண்டே நின்றார்கள். உடனே தங்கள் சாமான்களுடன் இவர்களும் அந்தப் பெட்டிக்குள் ஏறி அமர்ந்தார்கள். யூரல் பகுதிக்குப் போவதற்குள் என்ன நேருமோ என்ற பயமும் திகிலும், சந்தேகமும் சங்கடமும் இவர்களையும் வாட்டி வதைத்தது. இந்த ஏர்ஷோவ் பகுதியில் ரயில் பாதையும் படுமோசமாயிருந்தது; போதாக் குறைக்குப் பனிக்கட்டியும் பாதையை அடைத்துக்கொண்டது, வழியில் கிடந்த பனிக்கட்டிகளை எல்லோரும் இறங்கித் தள்ளிவிட்டுப் பின் ஏறிக்கொண்டார்கள். தளபதியோடு சண்டைபோட்டுக் கொஞ்சம் விறகுக் கட்டைகளை வாங்கி எரிமூட்டிப் பனிக்கட்டிகளை உருக்கினார்கள். வண்டிக்குள்ளும்



சூடு பரந்தது. நோய் பிடித்த கூனன்போல முக்கி முனகியவாறே ஊர்ந்து புறப்பட்டது ரயில் வண்டி. ஏர்ஷோவ் செல்லுவதற்கு முன்னர் இஞ்சினில் ஏதோ கோளாறு வந்துவிட்டது. மீண்டும் குழப்பம், இரைச்சல். எல்லோரும் கீழே இறங்கித் தள்ளினார்கள். ரொம்ப நேரம் காத்துக் கிடந்த பின்னர் மீண்டும் பெருமூச்சுவிட்டுத் தும்மியவாறே ஓடத் தொடங்கியது ரயில். அந்த ஓட்டமும் ஒழுங்காக இல்லை. வழியில் பலவிதக் கோளாறுகள் ஏற்பட்டுத் திடீர், திடீரென்று வண்டி நின்றுகொண்டது. புகாசோவிற்கும் உரால்ஸ்க்கும் இடையில் இருந்த அற்பத் தூரத்தை இரண்டு நீண்ட நாட்கள் கடந்து கடைசியாக உரால்ஸ்க்கைச் சேர்ந்தது!

# 3

## உரால்ஸ்க்

சமாராவைவிட்டுப் புறப்பட்டு, நீண்ட பயணத்திற்குப் பின்னர் நல்லிளைஞர் நால்வரும் உரால்ஸ்க்கை அடைந்தனர். ரயில் நிலையத்திலிருந்தவாறே தளபதிக்கு போன் வழியாகத் தங்கள் வருகையைத் தெரிவித்தனர். தளபதி இவர்களுக்கு இரண்டு வண்டிகளை அனுப்பினான். தங்களுடைய அரைகுறை மூட்டை முடிச்சுகளுடன் வண்டியில் ஏறி மத்திய விடுதிக்கு வந்தனர். அந்த விடுதியின் அறையொன்றில் அடைக்கலம் புகுந்தனர். அறையெங்கும் ஒரே தூசியும் புழுதியும். உட்காருவதற்கு ஒரு ஆசனமும் இல்லை பாழும் தரையில் படுப்பதற்குக்கூட யோக்கியதை இல்லை. கொண்டுவந்த முடிச்சுகளை வைப்பதற்குக்கூடச் சரியான இடம் இல்லை. இந்த அவலக்ஷண அறையில் எப்படியோ சமாளித்துக்கொண்டனர். நால்வரும் ஒரே அறையில் தங்கியிருந்தனர்.

இன்னும் குளிர் விட்ட பாடில்லை. ஆளுக்கு இரண்டு கோப்பைத் தேத்தண்ணீரை மடக்மடக்கென்று குடித்துத் தீர்த்தார்கள். பிறகு நகரைச் சுற்றிப் பார்த்து நேரத்தைக் கழிக்கச் சென்றார்கள். ஸ்டேஷனிலேயே ப்ரூன்ஷைப்பற்றி விசாரித்துக்கொண்டார்கள். ப்ரூன்ஷ் அன்று காலையில் தான் புதிய போராட்ட முனையில் அணிவகுப்பை வலுப்படுத்தச் சென்றிருந்தான். அச்சமயம், உரால்ஸ்க்கிலிருந்து இருபது கல் தொலைவிற்குள்தான் போராட்டம் நடந்துகொண்டிருந்தது. பகைவர்களை முன்னேறவிடாது தடுக்கும் மாபெரும் சோதனைப் போர் நடந்துகொண்டிருந்தது. முதலில் செஞ்சேனையினருக்குப் பல முகாம்களில் படு



தோல்வி ஏற்பட்டது. முன்னேறி வந்த கொஸாக்கியர்களைப் புறமுதுகிடச் செய்ய முடியவில்லை. உடனே போர்த் திட்டங்களைப் புனரமைத்துக் கெடுபிடிப் போர் நடத்தினார்கள். பல முனைகளில் இடுக்கித் தாக்குதல்களை மூட்டினார்கள். உரால்ஸ்க்கிலிருந்து அலெக்ஸாண்ரோவ்—கை வரை அணிவகுப்பை நிறுத்தி, கொஸாக்கியக் கிராமங்களையும் பாசறைகளையும் நிர்மூலமாக்கினார்கள். ஒரு கிராமத்திற்கும் மற்றொரு கிராமத்திற்கும் கொஸாக்கியர்கள் கொண்டிருந்த தொடர்புகளைத் துண்டித்தார்கள். வடதிசையிலிருந்து துரிதமாக முன்னேறி, கொஸாக்கியர்களை நெட்டித் தள்ளிக்கொண்டிருந்தார்கள். உரால்ஸ்க் - குர்யேவ் நெடுஞ்சாலை செஞ்சேனையினர் வசமாகிவிட்டது.

இந்த ஓய்ச்சல் ஒழிவில்லாத நெடுஞ்சாலைப் பயணங்களையெல்லாம் பற்றி மீண்டும் சந்திக்க நமக்குச் சந்தர்ப்பம் வரும்.

ஊர் சுற்றிப் பார்க்கப் புறப்பட்ட அந்த நல்லிளைஞர் நால்வரும் வழியெல்லாம் அவரவர்கட்குப் பிடித்தமான காரியங்களில் வெகு சிரத்தையுடன் ஈடுபட்டிருந்தனர். தத்தமக்குப் பிடித்தமான விஷயங்களில் தீவிரமாக ஈடுபட்டு, ஆராய்ச்சிகள்கூடச் செய்தார்கள் என்று துணிந்து கூறலாம். டெரெண்டி போக்கின் ஒரு கடிதப் பைத்தியம். ஏராளமாகக் கடிதம் எழுதுவான்; பெரும்பாலும் வீட்டுக்கு வேண்டிய குடும்பச் சமாசாரங்களைப்பற்றித்தான் விரிவாக எழுதிக்கொண்டே இருப்பான். ஒரு வீட்டில் என்னென்ன சாமான்கள் இருக்க வேண்டும், எவ்வெவற்றை எங்கெல்லாம், என்ன விலைக்கு வாங்கலாம், என்றெல்லாம் ஒப்பிட்டுக் காட்டிக் கடிதம் எழுதுவான்.

கிளிக்கோவ் தன் பங்கிற்கு ஒரு டைரி—நாட்குறிப்பேடு—வைத்திருந்தான். அவனுக்கு எவை எல்லாம் முக்கியமானவை என்று தோன்றினவோ அவையெல்லாம் அந்த டைரியில் அடைந்து கிடக்கும். டைரியில் மட்டும்தான்

எழுதுவது என்ற நியதியேதும் அவனுக்கு இல்லை. கண்ட கண்ட கடுதாசிகளில் எல்லாம் அவன் எழுதிக்கொள்ளு வான். தொடர்ந்த பயணத்தில் இருக்கும்பொழுதும், வேறு வேலைகள் செய்யும்பொழுதும் சுவரின்மீது கடுதாசியை வைத்துக்கொண்டு ஏதாவது எழுதிக்கொண்டே இருப் பான். இந்த மாதிரி உபயோகமில்லாத குப்பை விஷயங்களை யெல்லாம் எழுதி வீண் பொழுதாக்குகிறானே என்று நண்பர்கள் அனைவரும் அவனைக் கேலி செய்வது வழக்கம்.

"பியோடார்! ஏன்'பா நல்ல காகிதத்தையெல்லாம் நாச மாக்கிறே! நடக்கிற அற்ப விஷயத்தை யெல்லாம் ஏன் பா எழுதி வீணாக்குறே? யார் யார், என்ன சொல்லித் தொலைச் சிருக்காங்க என்கிறதெல்லாம் எழுதி முடியும்னு நினைக்கிறியா? அப்படி நீ எழுதோணும்னு நினைச்சா எத்தனை எழவெத்தான் எழுதறது? எழுதினா முழுவதை யும் எழுதணும்; அதைவிட்டு உன்னைப்போலே அரையும் குறையுமா எழுதிவைச்சா என்ன ஆகும் தெரியும்ல; உன் டைரியைப் பார்த்துப்பிட்டு ஜனங்கள் எல்லாத்தையும் தலைகீழாகத்தான் புரிஞ்சுக்குவாங்க!" என்றான் ஆண்ட் ரேவ் கிண்டலாக.

"நீ சொல்றது தப்பு ஆண்ட்ரேவ். ஒரு சம்பவத்தைப் பார்த்து நான் கொஞ்சம் குறிப்பு எழுதி வைப்பேன், இன்னொருவர் ஒரு கோணத்தில் பார்த்து அவர் கருத்தை எழுதுவார்; இதைப்போலப் பலர் கண்டறிந்து தங்கள் தங்கள் கருத்தைச் சொல்லுவார்கள். எல்லாவற்றையும் சரியாக இணைத்துப் பார்த்தால் செம்மையான வரலாற் றோவியமே புலப்படும். தெரியுமா?" என்று மறுத்துரைத் தான் பியோடார் சாவதானமாக.

"ஆமா. பத்துப் பேர் சேர்த்த கழிசடைகளை யெல்லாம் சேர்த்தா என்ன மாதிரி வரலாற்றோவியம்பா வரும்? எனக் குப் புரியலியே!" என்று ஏகத்தாளமாகக் கேட்டான் ஆண்ட்ரேவ்.



"எனக்குத் தெரியும். என் சரக்கு குப்பையா இல்லெ" என்று கிளிக்கோவ் முடிப்பதற்குள் "உனக்குத் தெரியுமா; உனக்கு என்ன தெரியும்? குப்பையைப் புடிச்சுக்கிட்டுப் பிரமாதம் பிரமாதம்ங்றவனுக்கு எங்கே போனாலும் குப்பை தான் பிடிக்கும்; அதுதான் கிடைக்கும்!" என்றான் சுருக் கென்று ஆண்ட்ரேவ்.

கிளிக்கோவிற்கு இந்த மாதிரிப் பேச்செல்லாம் பிடிக் காது; ஆண்ட்ரேவைத் திருப்திப்படுத்துவது முடியாதென் பதை அவன் நன்கு அறிவான். எனவே அதற்கு மேல் அவன் பேசவில்லை; ஆண்ட்ரேவ் கேட்ட சில கேள்விகட்குக் கூடப் பதிலே சொல்ல வில்லை; எனவே அவர்களுடைய குப்பைச் சம்பாஷணையும் குறையாகவே முடிந்தது.

கிளிக்கோவ் தனது டைரியில் குறித்து வைத்திருக்கும் விஷயங்கள் வழக்கமாகப் பத்திரிகைகளில் வருவது கிடை யாது. அப்படி வந்தாலும் மோசமான நிலையில்தான் உருக் குலைந்து அது வெளிப்படும். தான் எழுதுவது எதற்காக என்பதை அறியாமலே கிளிக்கோவ் இப்படி டைரிஎழுதி வந்தான். திட்டமான காரணமில்லாமல் உள்ளுணர்ச்சியின் தூண்டுதலால் இவன் இப்படி எழுதி வந்தான்.

ஆண்ட்ரேவின் வேலைத்திட்டம் வேறு வகையானது. தொழிலாளர் முனையைப்பற்றிய எல்லாச் செய்திகளும் அவனைச் சேர்ந்தவை; டெரெண்டிக்குக் கடிதம் போலவும், கிளிக்கோவிற்கு டைரிபோலவும், ஆண்ட்ரேவிற்குத் தொழிலாளர் பிரச்னை இயல்பாகவே அமைந்துவிட்டது. அவன் யாரிடம் பேசினாலும் சரி, அவனை யறியாமலே இதைப்பற்றிக் கேள்விகள் கேட்கத் துவங்கிவிடுவான்; இந்தப் பிராந்தியத்தில் எத்தனை தொழிற்சாலைகள் இருக் கின்றன? அவை எப்பொழுது நிறுவப்பட்டவை? எல்லாம் நன்றாக இயங்குகின்றனவா? அவற்றில் ஏதாவது நீண்ட நாட்களாக மூடிக்கிடக்கின்றனவா? அப்படி மூடிக்கிடந் தால் அதற்கு என்ன காரணம்? அவற்றில் எத்தனை பேர்

வேலை செய்கிறார்கள்? அவர்களின் அந்தஸ்து என்ன? அவர்களிடையே வர்க்க-உணர்ச்சி வளர்ந்துள்ளதா இல்லையா? எந்த அளவிற்கு வர்க்க உணர்ச்சியில் முன்னேறியுள்ளார்கள்? அது எந்தத் துறைகளில் எல்லாம் புலப்படுகிறது? இத்தியாதி, இத்தியாதிக் கேள்விகளை யெல்லாம் ஆண்ட்ரேவ் அயராது கேட்பான்.

இம் மாதிரிக் கேள்விகளை ஒரு தொழிலாளியிடம் கேட்பதன் மூலம் அவனுடைய நிலையை அவனே உணருமாறு செய்துவிடுவான் ஆண்ட்ரேவ்; அவன் கேள்வி கேட்கும் முறையே ஒரு அலாதியானது. அது மட்டுமல்ல, இடையிடையே ஏராளமான பொது விஷயங்களையும் விசாரிப்பான். அந்த ஜில்லாவின் இயற்கை வளம், தொழில் நிலை, ஜனத்தொகை, புதிய ஆட்சிமுறைமீது அவர்களுக்குள்ள விசுவாசம் முதலியவற்றை யெல்லாம் பேச்சுவாக்கில் கேட்பான். இத்தகைய பொதுத் தொழிற் பிரச்னைகள் சம்பந்தப்பட்ட விஷயங்கள், அவர்கள் நால்வருக்குமே ஓரளவு விருப்பமானவை என்றே சொல்லலாம்.

ஆனால், லோபார் ராணுவ மோஸ்தருடையவன். எங்கெங்கு போனாலும் ராணுவச் செய்திகளைத்தான் விசாரிப்பான்: எங்கெங்கே ராணுவ நிலையங்களும், பயிற்சித் தளங்களும் உண்டு, எந்த ரெஜிமெண்ட் பலம் வாய்ந்தது? எந்தப் பிரிவு மோசமானது? செஞ்சேனை வீரர்களிடையே அரசியல் ஆக்கவேலை எந்த அளவு செய்யப்படுகிறது? அவர்களிலே கம்யூனிஸ்டுகள் உண்டா? அவர்களுடைய வேலைப் போக்கு எத்தன்மையது? போர்முனையின் பொதுவான நிலவரம் என்ன?—இவை யெல்லாம் அவன் சாதாரணமாக எவரையும் கேட்கும் கேள்விகள்!

பயணத்தின்போதே அவரவர்களுடைய ஆராய்ச்சி வேலைகளில் அயராது அவர்கள் ஈடுபட்டுத்தான் வந்தார்கள். ஆனால் சில தடவைகளில் நால்வருக்கும் ஒரே சமயத்தில் வேலை யிருப்பதில்லை. தொழிலாளரைப்பற்றிப் பேசக்



கூடிய சூழ்நிலையே ஆண்ட்ரேவுக்குக் கிடைக்காமல் போனதுண்டு, லோபாருக்கு மிகுதியான குறிப்புகள் கிடைப்பதுண்டு. ஆனால் பொதுவாக ராணுவச் செய்திகள் அவர்கள் நால்வரது கவனத்தையும் கவர்ந்தன. சிந்தனையைத் தேக்கின. தங்களுக்குப் பிடித்தமான செய்திகளைப் பல தடவைகள் மறந்துவிட்டுப் போர்ச் செய்திகளில் முழு மூச்சுடன் ஈடுபடத் துவங்குவர்.

இங்ஙனம் நடந்து நடந்து ஊரின் மறுகோடிக்கு வந்து விட்டனர். ஊர் முழுவதும் விறுவிறுப்பான சூழ்நிலை சோபிதமாகப் பரவியிருந்தது. எங்கு பார்த்தாலும் சிப்பாய்களே தென்பட்டனர்-நீண்ட கோட்டுகள், தொங்கும் அங்கிகள், துப்பாக்கிகள், துப்பாக்கியில் செருகும் கத்திகள், பீரங்கிகள், ராணுவ வண்டிகள்-இவைதான் திரும்பிய பக்கமெல்லாம் தெரிந்தன. ஊர் முழுவதும் ஒரு ராணுவ முகாம் போலவே தோன்றியது. செஞ்சேனை வீரர்கள் தனித் தனியாகவும், கூட்டம் கூட்டமாகவும் தெரு முழுவதும் நடை போட்டுக்கொண் டிருந்தார்கள். குதிரைப் படைகளும், பீரங்கி வண்டிகளும், பொதி சுமந்த ஒட்டகக் கூட்டங்களும் தெருவெல்லாம் பவனிவந்த வண்ணமாயிருந்தன. எப்பொழுதும் (கட்டுப்பாடில்லாத, தேவையில்லாத) வேட்டுச் சத்தம் கேட்டுக்கொண்டே யிருந்தது. இரவு நேரங்களில்தான் வேட்டுச்சத்தம் தணிந்திருக்கும். துப்பாக்கியைத் துடைத்து வைக்கும்பொழுது வெடித்து விட்டது என்போர் ஒரு புறம், வேடிக்கைக்காக வானத்தைப் பார்த்துச் சுட்டோம் என்போர் வேறொரு புறம், தற்செயலாகத் திடீரென்று துப்பாக்கி தானாகவே வெடித்து விட்டது என்று சமாதானம் சொல்வோர் இன்னொரு புறம். இப்படி எங்கு திரும்பினாலும் வேட்டுச் சத்தங்கள் காதைத் துளைத்தன. ஒவ்வொரு வினாடியும், நிமிஷமும் வீணாகச் சுட்டுத் தள்ளும் வேடிக்கைத்தனத்தால் ஒவ்வொரு நாளும் சராசரி மூன்று மிலியன் தோட்டாக்கள் பயனின்றிப் பாழா

கின்றன என்று பொறுமையோடு கணக்கெடுத்த ஒரு ராணுவ நிபுணர் வயிற்றெறிச்சலோடு கூறினார். அவர் சொன்ன கணக்கு முற்றிலும் சரியானது என்று ஒப்புக் கொள்ள முடியாவிட்டாலும் பெரும் பகுதி தோட்டாக்கள் இம்மாதிரி நாசமாயின என்பதை மறுக்கவே முடியாது. புல்வெளிப் பிரதேசம் முழுவதும் வியாபித்திருந்த படை வீரர்களிடயே ஒருமித்த உணர்ச்சியும், உறுதியான ராணுவக் கட்டுப்பாடும் அந்தச் சமயத்தில் பரவியிருக்க வில்லை. அரசியல் உணர்ச்சியோட்டங்களை நன்கு புரிந்துகொண்டு பிறர்க்கும் பிரதிபலிக்கும் ஆற்றல்வாய்ந்த போல்ஷெவிக் வீரர்கள் செஞ் சைன்னியத்தில் மிகுதியாகச் சேர்ந்திருக்க வில்லை; அம்மாதிரியான அரசியல் உணர்ச்சியோட்டங்கள் பிற்காலத்திலேதான் பொங்கிப் பெருகின. ஆனால், இதுவோ 1919 ல் உரால்ஸ்க்கின் சுற்றுப்புறங்களில் போரிட்டவர்கள் முழுக்க முழுக்க நாட்டுப்புறத்தவர்கள்; போதிய பயிற்சியும் கட்டுக்கோப்பும் இல்லாதவர்கள், என்றாலும் அவர்கள் தீரத்தோடும் வீரத்தோடும் துணிந்து இடையறாது போராடினார்கள். அவர்களிடையே கம்யூனிஸ்டுகளே இல்லாமலிருந்ததும் உண்டு. ஒருசிலரே இருந்ததும் உண்டு. இருந்த ஓரிருவரும் ஒன்றும் தெரியாத பேர்வழிகளாக இருந்ததும் உண்டு!

இவர்களுடைய சைன்னியங்களில் பல விஷமிகள் ஒரு வகையான சந்தேகக் கிளர்ச்சியையும் உண்டுபண்ணி விட்டார்கள். கம்யூனிஸ்டுகள் நகர்ப்புறங்களிலிருந்துவந்து தங்களுடைய கூட்டத்தவரை நிரப்பி எல்லாவற்றையும் கைப்பற்றிக்கொள்ளுவார்கள் என்ற பீதியை அவர்கள் கிளப்பிவிட்டார்கள்.

இந்தச் சிறு சிறு சேனைகளில், போல்ஷெவிக்குகள் என்றால் தோழர்கள், சகோதரர்கள் என்றும், கம்யூனிஸ்டுகள் என்றால் கொடிய விரோதிகள் என்றும் கருதி நடத்தினர். இது வேடிக்கையாகவும் வேதனை தருவதாகவும் இருந்தது கிளிக்கோவிற்கு; அவன் இந்த விபரீதத்திற்கு ஒரு முடிவுகட்ட எண்ணினான். தான் வந்து சேர்ந்த இரண்டாம் நாளே "போல்ஷெவிக்குகளுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் இடையே உள்ள வேறுபாடு யாது?" என்பதைப்பற்றி நீண்ட பிரசங்கமே செய்துவிட்டான்!



அங்கு இந்த விபரீதம் பரவியிருந்ததில் ஒன்றும் ஆச்சரியமில்லை. போல்ஷெவிக்குகள், கம்யூனிஸ்டுகள் என்ற விளங்காத பிரச்னை நாடு முழுவதையும்தான் குழப்பிக் கொண்டிருந்தது. பாமர மக்கள் அனைவரும் புரியாமல் திகைத்தார்கள். காகசஸ், உக்ரேன், யூரல், டர்க்கிஸ்தான், ஜார்ஜியா முதலிய பகுதிகளில் எல்லாம் காரசாரமாகக் கூட விவாதிக்கப்பட்டது.

இந்த மாதிரியான குழப்பத்தால், லிண்டாவ் என்ற பெருமைக்குரிய புரட்சித் தலைவன் ஒருவனும் அவனைச் சேர்ந்த பல போல்ஷெவிக்குகளும், அவனோடு இருந்த செஞ்சேனையினராலேயே கொன்று குவிக்கப்பட்டார்கள் என்ற கொடுமைச் செய்தியிலிருந்து, இந்தப் பிரச்னை எவ்வளவு தூரம் குழம்பிக்கிடந்தது என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

சின்னாட்களுக்குப் பின்னர் இவானோவா வோஸ்னெஸென்ஸ்க்கிலிருந்து புறப்பட்டு வந்த நெசவாளர் செஞ்சேனை உரால்ஸ்க்கை அடைந்தது. செஞ்சேனைத் தலைக் கவசத்தையும் சிவப்பு நட்சத்திரங்களையும் அணிந்து அப் படையின் வீரர்கள் உரால்ஸ்க் நகரையே காவல்காத்து நின்றார்கள். அவர்கள்மீதே சில மூலைகளிலிருந்து வெடிகுண்டுகள் வீசப்பட்டன! வீசியது வேறு யாருமில்லை; நாட்டுப்புறச் சேனையைச் சேர்ந்த செஞ்சேனை வீரர்கள்தான்! நெசவாளப் படையால் தங்கள் உரிமை யெல்லாம் பறிபோய்விட்டதென்ற பயத்தால், அளவுகடந்து தங்கள் சுதந்திரத்தை அப்படிப் பயன்படுத்திக் காட்டினார்கள் அவர்கள்!

இந்தக் கோணங்கித்தனம் ஓரிரு நாட்களில் அழுங்கி விட்டது. போர்க்களத்தில் நெசவாளப் படையினர் காட்

டிய திறமையையும் உறுதியையும் உணர்ந்த நாட்டுப்புறப் படையினர் மனம் திருந்தினர். புரியாத பொறாமையை மறந்தனர். தோளோடு தோளிணைத்து நாட்டு நலன் காக்கப் பல நூறு மைல்கள் தாண்டிவந்த மாவீரர்களுடன் மனம் ஒன்றினர். இரு பகுதியினரும் இணைபிரியாது இணைந்தனர்!

உரால்ஸ்க்கைப் பொறுத்தவரை அங்கு வெகு சிலர் தான் கம்யூனிஸ்டுகள்; பலர் போரிலே கொல்லப்பட்டார்கள், இன்னும் பலரைக் கோஸாக்கியர்கள் கவர்ந்துசென்று விட்டார்கள். எஞ்சியிருந்த சிலரும் அச்சுறுத்தப்பட்டுக் கட்சியைவிட்டுப் பிரிக்கப்பட்டனர். இவை யெல்லாம் போக ஒருசிலர்தான் உயிரோட்டத்துடன் கம்யூனிஸ்டுகளாக இருந்தனர். எனவே அவர்களுடைய வேலைகளில் பெரும் பகுதியைப் பல்வேறு இடங்களிலும் இருந்து வந்து சேர்ந்த போல்ஷெக்குகள் தொடர்ந்து நடத்திவந்தனர். அவர்களில் தலையானவன் 'புகாஸ்' எனப்படும் சுரங்கத் தொழிலாளி. நல்ல பண்பாடும், குணநலமும், தோழமையும், துணிந்த போர்த்திறமும், கொள்கைப் பிடிப்பும், குன்றாத உறுதியும் உடையவன் அவன். அவனுக்கு நேர்மாறாக, அவனுக்குப் போட்டியாகவே அங்கு ஒரு கோணங்கி இருந்தான். அவன் பட்டப் பெயர் பூலேமியாட்கின். பூலேமியாட் என்றால் சுழற் துப்பாக்கி என்று பொருள். அது போலவே இவன் தலையெல்லாம் சுழலும், சொல்லெல்லாம் சுழலும். எதிலும் நிலையில்லாத அரசியல் எத்தன்; வெளிப் பகட்டுக்காரன் இவன். இவனும் தன்னை ஒரு கம்யூனிஸ்டு என்றே சொல்லிக்கொண்டான். ஆனால், அவனுடைய தன்மையும் போக்கும் எல்லோரிடத்திலும் வெறுப்பைத்தான் மிகுவித்தன. அவன் தன்னைப் பிரமாதமாகப் பெருமைப் படுத்திக்கொள்ளுவான். அவனுடைய நடத்தையும் போக்கும் அவன் ஒரு வெத்துவேட்டு, வெறும் வாயரட்டை, தகர டப்பா என்பதையும், பிறரைத் தன்பால் ஈர்க்க வேண்டும் என்பதற்கும், தன்னை நான்கு பேர் மதிக்கவேண்டுமென்பதற்குமே விளம்பரம் செய்துகொள்ளும் வீணன் என்பதையும் வெளிப்படையாக்கின. இந்த இரண்டு பேருக்கும் சார்பான இரு கட்சிகள் இயல்பாகவே எழுந்தன. இந்த இரண்டு கட்சிகளின் தராதரத்தையும் நம்மவர் நால்வரும் வெகு எளிதில் புரிந்துகொண்டனர். இவர்களும் புகாஸின் கட்சியில் சேர்ந்துகொண்டு நெருங்கிய நண்பர்களாயினர்.



நடந்து களைத்துப் போன நால்வரும் தங்களுடைய அறைக்குத் திரும்பிவந்தனர். டெரெண்டி தன்னுடைய கடிதத்தில் பாதிகூட முடிக்கவில்லை. அதில் முட்டைக் கோஸும் ரொட்டியும் ஐந்து ரூபிளுக்கு விற்கப்படுகின்றன வென்றும், ஒரு பவுண்டுக் கறுப்புக் காவியர் கிழங்கின் விலை இருபத்தி மூன்று ரூபிள் என்றும் எழுதியிருந்தான். இந்தச் சமயத்தில் தலைமை நிலையத்திலிருந்து ஒரு பணியாள் அங்கு வந்து, தளபதி ப்ரூன்ஷ் திரும்பிவிட்டதாகத் தெரிவித்துச் சென்றான். உடனே நால்வரும் வேகமாக ஓடிச் சென்றார்கள். தலைமை நிலையத்தில் எல்லாம் வினோதமாகவும் புதுமையாகவும் தோன்றின. அவர்களை உடனே உள்ளே அனுமதிக்க மறுத்து வெளியில் நிறுத்திவிட்டார்கள். அவர்கள் வந்திருப்பதைத் தெரிவிக்க ஒரு காவலாள் உள்ளே சென்றான். யாரிடம் தெரியுமா? மிக்கேல் வாஸில்யேவிச் ப்ரூன்ஷிடம்தான்! மிக்கேல் வாஸில்யேவிச் அவர்களுக்குப் புதியவர் அல்லர்; அவரோடு மிக நெருங்கிப் பழகியிருக்கிறார்கள். தங்கள் தோழர், தங்களில் ஒருவர் என்றெல்லாம் பாராட்டி அவரோடு பழகியிருக்கிறார்கள்; அந்த நண்பரை நேரில் சென்று பார்க்க முடியவில்லை; புதிய புதிய கட்டுப்பாடுகளும், சட்டங்களும் திடீரென்று முளைத்து விட்டன. இதெல்லாம் கனவா என்ன? இல்லவே யில்லை; கனவே யில்லை. அவர்களுக்கு எதிரே நீட்டிய துப்பாக்கியுடன் உண்மையிலேயே பாராப் படை நின்றுகொண்டிருந்தது. பாராக்காரன் நேயபாவத்தோடு அவர்களைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. தளபதியைச் சட்டை செய்யாது

முறை கேடாகவும் சம்பிரதாயங்கட்கு மாறாகவும் விடுவிடென்று உள்ளே நுழைய முயன்ற அவர்களைக் கடுகடு வென்று பார்த்தவண்ணம் வெளியிலேயே நிறுத்தி விட்டான்.

அவர்களுக்கு ஒரே மானக்கேடாகிவிட்டது. வெளி வராந்தாவில் அங்குமிங்கும் நின்று நின்று பார்த்தார்கள். சுற்றி நின்றவர்களை ஏறெடுத்துப் பார்க்கக்கூடச் சங்கடப் பட்டார்கள்.

"உள்ளே வாருங்கள்" என்றது ஒரு குரல்.

நால்வரும் உள்ளே வந்தார்கள். தளபதி ப்ரூன்ஷின் அருகில் அமர்ந்தார்கள். அவர்களது அந்தச் சந்திப்பு மிக எளிமையாகவும், மனமொன்றியதாகவும், கபடமற்றதாகவும், தோழமையுடையதாகவும் அமைந்தது. தாங்கள் மிக விரும்பி நேசித்து வந்த தங்களது இனிய தோழமைத் தளபதி இதயங் கவரப் பழகியது அவர்களுக்கு எல்லையற்ற மகிழ்ச்சியைத் தந்தது. உயர்ந்த ராணுவத் தலைவர்களும், கர்னல்களும், ஜெனரல்களும் ப்ரூன்ஷைச் சுற்றி அமர்ந்துப் பேசிக்கொண் டிருந்தனர். ப்ரூன்ஷ் கூறியவற்றைப் பேசாது தலையாட்டிக் கேட்டுக்கொண்டனர். மிகப் பணிவுடனும் மரியாதையுடனும் ப்ரூன்ஷின் ஒவ்வொரு சொல்லையும் உற்றுக் கேட்டுக்கொண்டனர். இளைஞர்கள் இதிலிருந்து 'கட்டுப்பாடு' என்றால் என்ன என்பதைப் புரிந்து கொண்டார்கள். ஆனால், புரிந்துகொண்டதைச் செயலில் காட்ட அவர்களால் முடியவில்லை. மீண்டும் கமாண்டரிடம் (கிலேதாரிடம்) அதே அடங்காத் தொனியுடனும் அலட்சிய பாவத்துடனும் சங்கக் கூட்டங்களிலும் கட்சி அரங்குகளிலும் சகஜமாகப் பேசுவது போலவே கத்திப் பேசினர். கர்னல்களுக்கும் சிறு படைத் தலைவர்களுக்கும் இவர்களுடைய பேச்சும் நடத்தையும் பிரமிப்பையும் குழப்பத்தையும் தருவதாகத் தோன்றின. அவர்களைக் கண்டதும் ஏதோ பெயருக்குப் புன்முறுவல் காட்டினார்கள். இருந்தாலும் தாங்கள் மட்டும் மிக உஷாராக இருந்தார்கள். எங்கே இவர்களோடு சேர்ந்து தங்களுக்கும் வாய் தடுமாறிக் கட்டுப்பாடு குலைந்துவிடப் போகிறதோ என்று அஞ்சி மிக விழிப்புடன் அடங்கினார்கள். இங்ஙனம் ப்ரூன்ஷிடம் இரு வகைப்பட்ட போக்கினர் ஒரே சமயத்தில் உரையாடிக் கொண்டிருந்தனர். மரியாதையும் கட்டுப்பாடும் உணர்ந்த ராணுவத் தலைவர்கள் ஒரு புறம்; ஒன்றிலும் பழக்கமில்லாத புதிய இளந் தொழிலாளர்கள் மற்றொரு புறம். உரையாடல் நீடித்தது.



ப்ரூன்ஷ் எல்லோருக்கும் பொதுவாகப் பேச ஆரம்பித்தான். போர்முனை நிலவரத்தையும், கையாள வேண்டிய போர்முறைகளையும், உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டியவற்றையும் ஆணித்தரமாக விளக்கினான். அவன் சொன்ன எல்லாவற்றையும் புரிந்துகொள்ள இந்த இளைஞர்கள் முயன்றார்கள். அனைத்தையும் நினைவில் கொள்ள அவர்களால் முடியவில்லை; எல்லாவற்றையும் பற்றிய தெளிவான நிலை அவர்களுக்கு விளங்கவே யில்லை. முதலில் அந்தப் பகுதித் தேசப்படமே அவர்களுக்குத் தெரியவில்லை. எனவே கொஸாக்கியக் கிராமங்களின் பெயர்கள் எல்லாம் வெறும் விளங்காப் பெயர்களாகவே தொனித்தன. மேலும், "படைத்திறம்" "ராணுவ தந்திரம்" "நிர்வாக உபாயம்" போன்ற சொற்களை அவர்களால் புரிந்துகொள்ளவே முடியவில்லை.

சிறிது நேரத்தில் ராணுவத் தலைவர்கள் சென்றுவிட்டார்கள். ப்ரூன்ஷும் அவருடைய நண்பர்களுமே எஞ்சினர். சம்பாஷணை புதிய பாணியில் துவங்கியது. ப்ரூன்ஷைப் பல கோணங்களில் விழித்து விழித்துப் பார்த்து மலைத்துக்கொண் டிருந்தான் பியோடார். ராணுவச் சமாசாரங்களில் எங்கிருந்துதான் இவன் இவ்வளவு திறமையைப் பெற்றான்; எல்லாவற்றைப்பற்றியும் ஆய்ந்து அலசித் தெளிவுபட உணர்ந்து, பிறர்க்கும் உணர்த்தும் ஆற்

றலை எப்படிப் பெற்ருன் என்றெல்லாம் வியந்துகொண்டிருந்தான். ப்ரூன்ஷ் மிகச் சர்வ சாதாரணமாக நடந்துகொண்டான். எல்லாவற்றைப்பற்றியும் மிக எளிதில் புரிந்துகொண்டான். அவனுக்கு எதுவும் தெரியும், நன்கு புரியும். கொஞ்ச நாளைக்கு முன்புவரை சாதாரணமானவஞக இருந்த ப்ரூன்ஷ், படையில் சேர்ந்து, தளபதியான சொற்பக் காலத்திற்குள்ளே தலைமைத் தளபதியாகிவிட்டான். அவனிடம் இயல்பாகத் ததும்பிநின்ற எளிமை, விரைவு, தெளிவு, திடம், நுண்மா நுழைபுலம், நுணிகியறியும் ஆற்றல், அடிப்படை யறிவு, கொள்கைப் பிடிப்பு, குலையாத நம்பிக்கை, வெற்றியில் விடாப்பிடி—ஆகிய இவை அனைத்தும் அவனுடைய உயர்வுக்கும் சிறப்புக்கும் காரணங்களாயின!

சொந்த ஊரான இவானேவா - வோஷ்னெஸென்கைப் பற்றியும், நெருங்கிய நண்பர்கள், செய்து முடித்த அலுவல் ஆகியவற்றைப்பற்றியும் இரவு நெடு நேரம்வரை மனம் விட்டுப் பேசிக்கொண்டிருந்தனர். மறு நாள் அதி காலையிற் மிக அவசரமாக சமாராவிற்கு ப்ரூன்ஷ் புறப்பட நேர்ந்தது. புறப்படுமுன், புதிதாகவந்த இந்த நால்வரும் என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றிய விபரத்தைச் சமாராவிற்குச் சென்றதும் அனுப்புவதாகவும், அதுவரை உரால்ஸ்க்கில் உள்ள கட்சிக் குழுவினருடன் வேலை செய்யும்படியும் அவசரம் அவசரமாகச் சொல்லிச் சென்ருன் ப்ரூன்ஷ். ராணுவத்தில் வேலை கிடைக்கும்வரை கட்சிக் குழுவினருடன் இந்த நால்வரும் பணியாற்றிப் புதிய அனுபவங்களை உணர்ந்தனர். எட்டு நாட்கள் கழிந்தன.

ஒரு நாள் அவர்கள் தங்களுக்குள்ளேயே ப்ரூன்ஷைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர்.

"ப்ரூன்ஷ், ரொம்ப மாறிட்டான்ல்ல."

"அது எதிர்பார்க்கக் கூடியதுதானே. ஏராளமான இவ்வளவு வேலையிலிருந்தா அவன் என்ன செய்வான்?"



"ஆளு இளைச்சுட்டான். முகமெல்லாம் வெளிறிப் போச்சு."

"இங்கே யிருக்கிற நம்ப சிப்பாய்களே போதுமே; இவனுக எதுக்கும் கட்டுப்பட்டு ஒழுங்காவா நடப்பானுக. இவுங்களே அடக்குறதுக்குள்ளேயே பாதிப் பிராணன் போயிடுமே. இந்த நாட்டுப்புறத்துச் சிப்பாய்களிடம், வீணுச் சுட்டுத் தோட்டாக்களைப் பாழாக்காதீங்கன்னு பத்துத் தரம் சொல்லியாச்சு....என்ன ஆச்சு இதுவரைக்கும்... இப்படி யெல்லாம் அலைஞ்சா ஆளு இளைக்காமல் என்னப்பா செய்ய முடியும்?"

வெளியிலிருந்து வந்த பேரிரைச்சல் அவர்களுடைய பேச்சை நிறுத்திற்று. ஜன்னல் வழியாக வீதியில் எட்டிப் பார்த்தார்கள். வெறிபிடித்தவண்ணம் தொடர்ந்து துப்பாக்கி வெடிக்கும் ஓலத்தைக் கண்டார்கள்.

"இந்த அராஜகம் இன்னுமா ஒழியவில்லை" என்று கோபமாகக் கத்தினன் ஆண்ட்ரேவ். ஒரு விநாடி பேசாதிருந்தான். "இப்படி நாசமாகிநலியும் சக்திகளை யெல்லாம் திரட்டிச் செம்மைப்படுத்துவோம்" என்று நம்பிக்கையுடன் வாய்விட்டுச் சொன்னன்.

பிப்ருவரி 23ம் தேதி நெருங்கிக்கொண்டிருந்தது. அன்று அனைவர்க்கும் விடுமுறை; அதுதான் செஞ்சேனை தினம், ஆண்டு விழா; பல நாட்களுக்கு முன்பிருந்தே விழாவுக்கான ஏற்பாடுகள் துவக்கப்பட்டன. என்ருலும் கடைசி மூன்று, நான்கு நாட்கள்தான் துரிதமாக வேலைகள் நடந்தன; விழாவிற்கான வேலைத் திட்டங்கள் உருப்படியாக நிறைவேறின. அங்கு வந்த ஓரிரு நாட்களுக்குள்ளேயே கட்சி அமைப்பு மிகவும் நலிந்திருக்கிறது என்பதை நுணுகி அறிந்துகொண்டான் லோபார். விழாவை எடுத்து நடத்துவதற்குக்கூட யாரும் முன்வரவில்லை என்ற பரிதாப நிலையைப் புரிந்துகொண்டான். யாராவது தலையிட்டு, செய்து முடிக்கக் கூடிய சிலரிடம் எல்லாப் பொறுப்பையும்

ஒப்புவித்தால்தான் விழா ஒரு மாதிரியாக நடைபெறும்-இல்லாவிட்டால் எல்லாமே கெட்டுவிடும் என்ற கேவல நிலையை உணர்ந்தான். விழாவுக்கான எல்லாப் பொறுப்பும் கட்சிக் குழுவினரையே சார்ந்தது என்று புரட்சிக் கவுன்சில் லோபாரிடம் கூறிவிட்டது. உடனே லோபார் கட்சிக் குழுவினரிடம் சென்று விசாரித்தான். அவர்கள் ஏதோ ஒரு அனுமதேயக் குழுவைச் சாட்டிவிட்டனர், கடைசியில் புரட்சிக் கவுன்சிலுக்கே திருப்பி அனுப்பினர். இந்த இரண்டும்கெட்டான் நிலையைக் கண்ட லோபார், எல்லாப் பிரிவினரையும் சேர்ந்த எல்லாப் பிரதிநிதிகளையும் அழைத்து அவசரக் கூட்டம் கூட்டினான். தொழிலாளர் பிரதிநிதிகள் வந்தனர். ஆனால், புரட்சிக் கவுன்ஸிலில் இருந்து யாரும் வரவில்லை. இருந்தாலும் லோபார் சோர்ந்துவிடவில்லை. வந்திருந்தோரைக் கொண்டே ஒரு விழாக் குழுவை அமைத்து எல்லாவகையிலும் சட்டபூர்வமாக அதுவே ஆவன செய்யும் என்றும் அறிவித்தான். மேலும் தாமதிப்பது கூடாது என்று கருதி விழாக் குழுவிலிருந்து செயற் குழு உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்கச் செய்தான்.

செயற்குழுவின் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான் லோபார்; செயலாளனானான் ஆண்ட்ரேவ். வேலை துரிதமாக முன்னேறியது; நகரம் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. சிறு சிறு விவாத அரங்குகளும் பெரும் பொதுக் கூட்டங்களும் நடத்துவதற்குரிய இடங்கள் குறிக்கப்பட்டன. விழாவையொட்டிய இதர நிகழ்ச்சிகளுக்கும் யார் யார், எங்கெங்கு பேசுவது என்பதற்கும் நாடக அரங்கு, சினிமா, வாத்தியக் குழு ஆகியவற்றைப் பயன்கொள்ளுவதற்கும் விரிவான நிகழ்ச்சிப் பட்டியல் தயாரிக்கப்பட்டது. எல்லாத் தொழிற் சங்கங்களோடும் தொடர்பு கூட்டப்பட்டது; விழாவுக்கான ஊழியர்களை அனுப்பி உதவுமாறு அவற்றிற்கு வேண்டுகோள் விடப்பட்டது. நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் திரண்டனர். வேலைகளைப்



பகிர்ந்துகொண்டனர்; அரங்க நிர்மாணம் முதல் அலங்கார வேலைவரை ஆளுக்கு ஒன்றாகப் பங்கிட்டுக்கொண்டனர். சுவரொட்டிகள், விளம்பரப் பலகைகள், சிறு அறிக்கைகள் முதலியன தயாரிப்பதில் சிலர் ஈடுபட்டனர். குழந்தைகளுக்கு வேண்டிய சிற்றுண்டி வசதிகள், சினிமாக் காட்சிகள் முதலியவற்றை ஏற்பாடு செய்வதில் பெண் தொண்டர்கள் பொறுப்பேற்றனர்.

மூன்றே நாட்களில் முழுவதும் தயாராகிவிட்டது. பெப்ருவரி, 23-ம் தேதி விடியற் காலையில், நகரின் பல்வேறு தொழிற் சங்கங்களையும் சேர்ந்த தொழிலாளர்கள் சாரிசாரியாகப் பவனி வந்து மத்தியச் சதுக்கத்தில் கூடத் தொடங்கினர். சொற்பொழிவு மேடைக்கு எதிரில் ஓரளவு இடத்தை ராணுவத்தினருக்கு ஒதுக்கிவிட்டு எஞ்சிய இடங்களில் வரிசையாக நின்றனர். செஞ்சேனையினர் அழகான உடையுடன் கம்பீரமாக அணிவகுத்து நின்றார்கள். சதுக்கம் முழுவதும் ஒரே ஜனத்திரள். சொற்பெருக்குகள் பொங்கிப் பொழிந்தவண்ணமாயிருந்தன. முதலில் புகாஸ் பேசினான். அவனுடைய சுருக்கமான, வெளிப்படையான, கருத்தாழம் நிறைந்த பேச்சு முடிந்தவுடன் கூடியிருந்தவர்கள் உணர்ச்சி பெருக, வான் அதிரக் கை தட்டி ஆரவாரித்தனர். புகாஸ் அமர்ந்ததும், வழக்கம்போல பூலேமியாட்கின் மேடைமீது தாவி ஏறினான். எதிர்ப் புரட்சியாளர்களின் பல துறை விஷமத்தனத்தைப் பற்றிச் சளசள வென்று வெறும் வார்த்தைப் பின்னலால் அடுக்கினான். எல்லோருக்கும் தெரிந்த ஊசிப்போன விஷயங்களைப்பற்றிக் குதித்துக் குதித்துப் பேசினான். ஜீவனும் உணர்ச்சியுமில்லாத சொற்களைத் திணித்துக்கொண்டிருந்தான். பத்து நிமிடம் ஆயிற்று. அப்புறம் இருபதாயிற்று. முப்பதும் கடந்தது. இன்னும் பூலேமியாட்கின் பொழிந்துகொண்டுதான் இருந்தான். மேடையிலிருந்த சிலர் நேரம் கடந்து செல்வதைக் குறிப்பிடுவதற்காக அவனுடைய

அங்கியை இருமுறை சுண்டியிழுத்துப்பார்த்தார்கள். அப்படியும் ஆள் அசைவதாய் இல்லை. பேசிக்கொண்டே இருந்தான். எல்லோரும் அலுத்து அயர்ந்து போய்விட்டார்கள். அணிவகுத்து நின்ற செஞ்சேனையினர்க்கும் கால்கள் கடுத்துவிட்டன; மாற்றி மாற்றி ஒற்றைக் காலில் நின்றும் அவர்களால் தாங்க முடியவில்லை. பனிக் காலமாகையால் எங்கும் குளிர் கப்பிவிட்டது; உடம்பில் இரத்தமெல்லாம் உறையச் செய்யும் குளிர் வீசியும் அவன் நிறுத்தவில்லை. இந்த அநியாயத்தை ஒருவராலும் பொறுக்க முடியவில்லை. லோபாரும் பொறுமையை இழந்துவிட்டான். பூலெமியாட்கினுக்குப் பின்னால் நின்றபடியே, "இந்த நிமிஷத்திலேயே உன் பேச்சை நிறுத்தாவிட்டால் கோஷம் போடச் செய்துவிடுவேன், தெரிந்ததா?" என்று அழுத்தம் திருத்தமாக எச்சரித்தான்.

பூலெமியாட்கின் சுற்றிலும் ஒரு கண்ணோட்டம் விட்டான்; நீர் நிறைந்த அவனுடைய கண்கள் கோபத்தாலும் ஆத்திரத்தாலும் சிவந்தன; லோபாரின் கண்களில் பொங்கிய கோபாக்கினியை ஏறிட்டுப் பார்த்தான். நிலைமையைப் புரிந்துகொண்டு, அவசரம் அவசரமாகப் பேச்சை முடித்துக்கொண்டு கீழிறங்கிவிட்டான். இங்ஙனம் விழாவில் முழக்கப்பட்ட எல்லாச் சொற்பொழிவுகளும் எங்கும் நடப்பதுபோலத்தான் இருந்தன. அவற்றைப் போன்ற பிரசங்கங்களே சோவியத் நாடு முழுவதும் அந்த நன்னாளில் எதிரொலித்தன; அதுபோல மாலை விழா நிகழ்ச்சிகளும், கொண்டாட்டங்களும், பிரசங்கங்கள், நாடகங்கள், சினிமாக்கள் முதலியவற்றால் சிறந்து விளங்கின.

நிகழ்ச்சிகள் முடிவுற்றதும் சதுக்கத்திலிருந்து அனைவரும் ஊர்வலமாகப் புறப்பட்டனர். செங்கொடிகளைக் கையிலேந்திப் புரட்சிப் பாடல்களைப் பாடியவண்ணம் கம்பீர நடையுடன் சென்றனர். ஊர்வலம் பல வீதிகளையும் கடந்து, புரட்சிப் போரில் வீரமரணம் எய்திய வீரர்



களின் சமாதியை அடைந்தது. அங்கும் ஒரு பிரசங்கமேடை இருந்தது. பூகாஸூம் லோபாரும் உணர்ச்சியை மீட்டி, நரம்புகளிலே முறுக்கேற்றிச் சுருக்கமாகப் பேசினார்கள். பூலெமியாட்கின் இங்கும் பிரசங்கம் செய்வதற்கு முண்டினான். நல்ல வேளை! தக்க சமயத்தில் தலையிட்டுத் தடுத்து நிறுத்துவது பெரும்பாடாகிவிட்டது. லோபாரின் பிரசங்கம் யாரும் மறக்க முடியாதவாறு அமைந்தது. தாய்நாட்டு மக்களின் நலத்திற்காகத் தம் உயிரையும் தந்து சவக் குழியில் தூங்கும் மறைந்த மாவீரத்தோழர்களைக் குறிப்பிட்டுப் பேசினான்; அவர்கள் ஏன் தங்கள் உயிரையே தந்தார்கள் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டுமென்றும், அவர்களுடைய பெயரை நினைவேட்டில் அழியாது பதித்துக் கொள்ளவேண்டுமென்றும் உத்வேகத்துடனும் உணர்ச்சிக் கொந்தளிப்புடனும் முழங்கினான். அவனுடைய ஒவ்வொரு சொல்லையும் அமைதியாக அனைவரும் உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தனர். அப்பொழுது திடீரென்று ஒரு துப்பாக்கியிலிருந்து வெடி கிளம்பியது. தற்செயலாக ஏற்பட்ட இந்த வெடிச் சத்தம் ஒரு சமிக்ஞையாகவும் தூண்டுதலாகவும் மாறிவிட்டது. அதைத் தொடர்ந்து அருகில் நின்ற ராணுவத்தினரின் துப்பாக்கிகள் அனைத்தும் வானை நோக்கி முழங்கின. சம்பிரதாயமாக நடக்கும் மரியாதைக் குண்டு முழக்கம் போலில்லாவிட்டாலும், வெடிச் சத்தம் மட்டும் காதுகளைச் செவிடாக்கி வானத்தையே அதிரச் செய்தது. எங்கும் ஒரே குழப்பம். இம்மாதிரி எதிர்பாராது ஏற்படும் குழப்பங்களில்தான் வெள்ளைச் சிப்பாய்கள் புகுந்து, போல்ஷெவிக்குகளை ஒருவருக்கும் தெரியாமல் கடத்திச் சென்றுவிடுவது வழக்கம். குண்டு முழக்கம் ஒரு வழியாக ஓய்ந்தது. அது முடியும்வரை பிரசங்க மேடையைவிட்டு யாரும் நகரவில்லை. செஞ்சேனையினர் தங்கள் தோட்டாக்களனைத்தையும் காலியாக்கிய பிறகுதான் அதைவிட்டு நகர்ந்தார்கள்; லோபார் பேயறைந்தவன்போல முகம் வெளுக்க நின்றான்.

அங்கியை இருமுறை சுண்டியிழுத்துப்பார்த்தார்கள். அப்படியும் ஆள் அசைவதாய் இல்லை. பேசிக்கொண்டே இருந்தான். எல்லோரும் அலுத்து அயர்ந்து போய்விட்டார்கள். அணிவகுத்து நின்ற செஞ்சேனையினர்க்கும் கால்கள் கடுத்துவிட்டன; மாற்றி மாற்றி ஒற்றைக் காலில் நின்றும் அவர்களால் தாங்க முடியவில்லை. பனிக் காலமாகையால் எங்கும் குளிர் கப்பிவிட்டது; உடம்பில் இரத்தமெல்லாம் உறையச் செய்யும் குளிர் வீசியும் அவன் நிறுத்தவில்லை. இந்த அநியாயத்தை ஒருவராலும் பொறுக்க முடியவில்லை. லோபாரும் பொறுமையை இழந்துவிட்டான். பூலேமியாட்கினுக்குப் பின்னால் நின்றபடியே, "இந்த நிமிஷத்திலேயே உன் பேச்சை நிறுத்தாவிட்டால் கோஷம் போடச் செய்துவிடுவேன், தெரிந்ததா?" என்று அழுத்தம் திருத்தமாக எச்சரித்தான்.

பூலேமியாட்கின் சுற்றிலும் ஒரு கண்ணோட்டம் விட்டான்; நீர் நிறைந்த அவனுடைய கண்கள் கோபத்தாலும் ஆத்திரத்தாலும் சிவந்தன; லோபாரின் கண்களில் பொங்கிய கோபாக்கினியை ஏறிட்டுப் பார்த்தான். நிலைமையைப் புரிந்துகொண்டு, அவசரம் அவசரமாகப் பேச்சை முடித்துக்கொண்டு கீழிறங்கிவிட்டான். இங்ஙனம் விழாவில் முழக்கப்பட்ட எல்லாச் சொற்பொழிவுகளும் எங்கும் நடப்பதுபோலத்தான் இருந்தன. அவற்றைப் போன்ற பிரசங்கங்களே சோவியத் நாடு முழுவதும் அந்த நன்னாளில் எதிரொலித்தன; அதுபோல மாலை விழா நிகழ்ச்சிகளும், கொண்டாட்டங்களும், பிரசங்கங்கள், நாடகங்கள், சினிமாக்கள் முதலியவற்றால் சிறந்து விளங்கின.

நிகழ்ச்சிகள் முடிவுற்றதும் சதுக்கத்திலிருந்து அனைவரும் ஊர்வலமாகப் புறப்பட்டனர். செங்கொடிகளைக் கையிலேந்திப் புரட்சிப் பாடல்களைப் பாடியவண்ணம் கம்பீர நடையுடன் சென்றனர். ஊர்வலம் பல வீதிகளையும் கடந்து, புரட்சிப் போரில் வீரமரணம் எய்திய வீரர்



களின் சமாதியை அடைந்தது. அங்கும் ஒரு பிரசங்கமேடை இருந்தது. பூகாஸும் லோபாரும் உணர்ச்சியை மீட்டி, நரம்புகளிலே முறுக்கேற்றிச் சுருக்கமாகப் பேசினார்கள். பூலேமியாட்கின் இங்கும் பிரசங்கம் செய்வதற்கு முண்டினான். நல்ல வேளை! தக்க சமயத்தில் தலையிட்டுத் தடுத்து நிறுத்துவது பெரும்பாடாகிவிட்டது. லோபாரின் பிரசங்கம் யாரும் மறக்க முடியாதவாறு அமைந்தது. தாய்நாட்டு மக்களின் நலத்திற்காகத் தம் உயிரையும் தந்து சவக் குழியில் தூங்கும் மறைந்த மாவீரத் தோழர்களைக் குறிப்பிட்டுப் பேசினான்; அவர்கள் ஏன் தங்கள் உயிரையே தந்தார்கள் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டுமென்றும், அவர்களுடைய பெயரை நினைவேட்டில் அழியாது பதித்துக் கொள்ளவேண்டுமென்றும் உத்வேகத்துடனும் உணர்ச்சிக் கொந்தளிப்புடனும் முழங்கினான். அவனுடைய ஒவ்வொரு சொல்லையும் அமைதியாக அனைவரும் உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தனர். அப்பொழுது திடீரென்று ஒரு துப்பாக்கியிலிருந்து வெடி கிளம்பியது. தற்செயலாக ஏற்பட்ட இந்த வெடிச் சத்தம் ஒரு சமிக்ஞையாகவும் தூண்டுதலாகவும் மாறிவிட்டது. அதைத் தொடர்ந்து அருகில் நின்ற ராணுவத்தினரின் துப்பாக்கிகள் அனைத்தும் வானை நோக்கி முழங்கின. சம்பிரதாயமாக நடக்கும் மரியாதைக் குண்டு முழக்கம் போலில்லாவிட்டாலும், வெடிச் சத்தம் மட்டும் காதுகளைச் செவிடாக்கி வானத்தையே அதிரச் செய்தது. எங்கும் ஒரே குழப்பம். இம்மாதிரி எதிர்பாராது ஏற்படும் குழப்பங்களில்தான் வெள்ளைச் சிப்பாய்கள் புகுந்து, போல்ஷெவிக்குகளை ஒருவருக்கும் தெரியாமல் கடத்திச் சென்றுவிடுவது வழக்கம். குண்டு முழக்கம் ஒரு வழியாக ஓய்ந்தது. அது முடியும் வரை பிரசங்க மேடையைவிட்டு யாரும் நகரவில்லை. செஞ்சேனையினர் தங்கள் தோட்டாக்களனைத்தையும் காலியாக்கிய பிறகுதான் அதைவிட்டு நகர்ந்தார்கள்; லோபார் பேயறைந்தவன்போல முகம் வெளுக்க நின்றான்.

அந்தச் சில நிமிட நேரத்தில் நரகத்தின் கொடுமையையே அனுபவித்தான். இதுபோன்ற அனுபவத்தை, பிற்காலத்தில் கடும்போரில் ஈடுபட்டிருந்த காலத்தில்கூட அவன் பெற்றதில்லை. இந்தத் திடீர் நிகழ்ச்சி அவன் உடம்பையே குலுக்கி எடுத்துவிட்டது. திடீரென்று நம்மை யறியாமலே ஏற்படும் நிகழ்ச்சிச் சுழற்சியில் அகப்பட்டு ஒன்றும் செய்ய முடியாது விழிப்பதைப்போல மோசமான நிலை வேறெதுவும் இருக்க முடியாது; லோபாருக்கும் அன்று அந்த நிலைதான் ஏற்பட்டது.

இவ்விதமாக உரால்ஸ்க்கைப் பொறுத்த மட்டில் செஞ்சேனை தினம் திருப்தியாகக் கொண்டாடப்பட்டது. மற்றப் பிராந்தியங்களில் எவ்விதம் நிகழ்வுற்றது என்பதுபற்றி யாருக்குத் தெரியும்? உரிய சமயத்தில் அறிவிப்புகளையும் கட்டளைகளையும் எல்லாப்பகுதியினருக்கும் அனுப்ப முடியவில்லை. எனவே விழாக் கொண்டாட்டம் பற்றிய பொதுவான ஒரு நினைவுக் குறிப்பு மட்டுமே சுற்றறிக்கையாக அனுப்பப்பட்டது. விழாவிற்கு முதல் நாளே போக்கினும், பியோடார் கிளிக்கோவும் போர்முனைக்குச் சென்றிருந்தனர், கிடைத்த அளவு அரசியல் நூல்களையும், யாட்ஸ்காயா பிராவ்தா சஞ்சிகையின் விழா மலரையும், சிறுசிறு விண்ணப்ப நூல்களையும், அறிக்கைகளையும் அவர்கள் தங்களுடன் எடுத்துச் சென்றிருந்தனர். போர்முனைப் பகுதியில் எல்லாவற்றையும் வினியோகித்துவிட்டு விழாவன்று நள்ளிரவிற்குப் பின்னர்தான் அவர்களால் திரும்ப முடிந்தது. திரும்பியவுடன் தங்கள் நண்பர்களை எழுப்பினர். டல பிரயத்தனங்களுக்குப் பிறகு சலிப்புடன் அரைகுறையாக ஆண்ட்ரேவும் லோபாரும் கண்களைத் திறந்தனர். அவர்களிடம் தாங்கள் பெற்ற அனுபவங்களையும், தங்களுக்குக் கிடைத்த அபரிமிதமான வரவேற்பையும் பெருமையுடனும் கர்வத்துடனும் விவரிக்கத் தொடங்கினர். விழாவைப் பற்றி நினைவுகூட்டி அறிக்கைகளைத் தந்தமைக்காகப்



போர் வீரர்கள் அனைவரும் எல்லை கடந்து நன்றி தெரிவித்த விதத்தையும், தங்களுடைய சொற்பொழிவுகளை விருப்புடன் கேட்டு மீண்டும் வருமாறு கேட்டுக்கொண்ட சிறப்பையும் மளமள வென்று பொழிந்து தள்ளினார்கள். அவர்களுடைய உற்சாகமான சொற்களை யெல்லாம் தூங்குமூஞ்சி நண்பர்களால் ரசிக்க முடியவில்லை. கொஞ்ச நேரம் ‘ஊம்’ போட்டபின் இந்த மாதிரிக் கதையெல்லாம் கேட்டுச் சலித்துவிட்டது என்று சொல்லிவிட்டு முகங் குப்புறப் படுத்துக்கொண்டான் ஆண்ட்ரேவ். என்ன வெல்லாமோ சொல்லிப் பெருமையடைய வேண்டு மென்ற ஆத்திரத்துடன் வந்த நண்பர் இருவருக்கும் ஒரே ஏமாற்றமாகி விட்டது. கேளாக் காதினராக மரக்கட்டைகள் போலக் கிடந்த நண்பர்களைத் திட்டியவாறே இவர்களும் கண்ணயர்ந்தனர். இவ்விதம் செஞ்சேனை தினத்தில் நால்வரும் நன்கு பங்குகொண்டார்கள்!

சில நாட்கள் கழிந்தன. ஒரு நாள் மாலைச் சிற்றுண்டிக்குப் பின்னர் நண்பர்கள் நால்வரும் ஒருசேர அமர்ந்திருந்த பொழுது ஒரு தந்தி வந்தது. அதில் லோபாரும் போக்கினும் மறு நாள் காலையில் படைவகுப்புத் தலைமைக் காரியாலத்திற்குப் புறப்பட வேண்டு மெனக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆம்! சேர்ந்துவந்த நால்வரும் பிரிந்து செல்ல வேண்டிய தருணம் வந்துவிட்டது. பிரியும் காலத்தில் இயல்பாக எல்லோருக்கும் ஏற்படும் மன எழுச்சியும் சங்கட நிலையும் அவர்கட்கும் ஏற்பட்டன; எதிர்பாராத சிந்தனைச் சுழலிலும், உணர்ச்சிப் பெருக்கத்திலும் சிக்கி ஒன்றும் பேசாது நெடுநேரம் உட்கார்ந்திருந்தனர். அவர்களில் இருவர் மறு நாள் காலை புறப்பட வேண்டியுள்ளது. எஞ்சிய இருவரும் அதற்கு மறு நாள் வேறெங்கேனும் புறப்பட நேரிடும். இந்த மாதிரிச் சம்பவத்தில் ஒன்றும் ஆச்சரியமில்லை. இதை அவர்கள் எப்போதும் எதிர்பார்த்துத்தான் இருந்தார்கள். என்றாலும், அப்பொழுது மட்டும் தந்தி யுத்தரவைக் கண்டதும்

அவர்கள் மனநிலையே குழம்பிவிட்டது. அவரவர்க்கு ஏற்பட்ட மனவருத்தத்தை மறைக்க முயன்றனர். லோபாரும் டெரெண்டியும் போர்முனையிலே அடிபட்டு அனுபவம் பெற்றவர்களைப்போல வேடிக்கையான போர்ப்பயிற்சி முறைகளைச் செய்துகொண்டே குதிபோட்டனர்; ஆண்ட்ரேவ் வழக்கத்தைக் காட்டிலும் மந்தமாயிருந்தான்! முகத்தில் சோபையே இல்லை. பியோடார் எதையோ சிந்திப்பது போலப் பேசாதிருந்தான். பிரிந்துசெல்லப் போகும் தன் இனிய நண்பர்களின், உற்சாகம் நிறைந்த சொற்களைக் கேட்டு உணர்ச்சியற்றவனாக உட்கார்ந்திருந்தான்.

மறு நாட் காலை டெரெண்டியும் லோபாரும் தங்களுக்கென வந்த சறுக்கு வண்டியில் ஏறிக்கொண்டனர். பிரியப் போகும் உயிர் நண்பர்களை ஆண்ட்ரேவும் கிளிக்கோவும் கட்டியணைத்து முத்தம் தந்து விடை கொடுத்தனுப்பினர். அவர்களது வண்டி கடுகிச் சென்று மறைந்தது. சற்று நேரத்தில் மற்றொரு தந்தி வந்தது. அதில், ஆண்ட்ரேவ் அங்கேயே தங்கியிருந்து, அங்குள்ள படைப்பகுதியின் காரியஸ்தனாக (கமிசார்) வேலைபார்க்கும்படி உத்தரவிடப் பட்டிருந்தது. பியோடார் உடனே புறப்பட்டு அலெக்ஸாண்ரோவ்-கை செல்லவேண்டு மென்றும், அங்கு சப்பாயேவின் தலைமையில் இயங்கும் ராணுவப் பகுதியினரின் அரசியல் அமைப்பியக்க வேலைகளில் பங்கேற்க வேண்டு மென்றும் குறிக்கப்பட்டிருந்தது. முதலில் இதைப் படித்தபோது இருதயமே எகிரிக் குதிப்பதுபோன்ற துள்ளல் உணர்ச்சி பியோடாருக்கு ஏற்பட்டது. முதலில் அவனால் இதைநம்பவே முடியவில்லை. தந்தியை இரண்டு மூன்று தடவை திரும்பத் திரும்பப் படித்தான். அதில் ஏதும் சந்தேகம் இல்லை. சப்பாயேவேதான்! புகழ்பெற்ற சப்பாயேவிற்கு அருகிலே தானும் செல்லப்போகிறோம். என்ற எண்ணத்தால் உடலெங்கும் புது ரத்தம் பொங்கி உணர்ச்சி நரம்புகளின் வழியாக உந்திப் பெருகியது!



"என்ன! அவ்வளவு புகழ் பெற்ற வீரனான சப்பாயேவுடன் தோளோடு தோளிணைந்தா வேலை செய்ய வேண்டும்? என்ன புதுமையாக இப்படி வந்து முடிந்தது? இதை நிஜமாக நம்பவே முடியாது. நான் சப்பாயேவின் தீரத்தையும் வீரத்தையும் கேள்வியுற்று அவனைப் புராண புருஷனாகக் கருதிக் கனவு கண்டுகொண் டிருந்தேன். இப்பொழுது திடீரென்று அவனோடு நானும் சேர்ந்து வேலை செய்ய வேண்டு மென்று வாய்த்திருக்கிறது. வேடிக்கை தான். என்னைப்போன்ற ஆளுக்கு இது பெருமைதான், ஆனால் ஆண்ட்ரேவ்தான் இங்கேயே இருக்க நேர்ந்துவிட்டது. அங்கு சென்றதும் நமக்குப் புதிய நண்பர்கள் கிடைக்கக் கூடும்; எல்லாம் சுமுகமாகவே முடியும். ஒன்றொன்றும் நடப்பதைப் பார்த்தால் வியப்பாகவும் புதுமையாகவும் தான் தோன்றுகிறது" என்றெல்லாம் எண்ணி எண்ணி வியந்துகொண்டிருந்தான் பியோடார்.

அந்த வினாடிமுதல் அவன் உள்ளத்தில் ஒரே ஒரு எண்ணம்தான் தலைதூக்கி நின்றது. சப்பாயேவை எவ்வளவு சீக்கிரத்தில் பார்க்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் செல்ல வேண்டு மென்ற தாகமே அது! சப்பாயேவ் தற்சமயம் அலெக்ஸாண்ரோவ் கையில் இல்லையென்பதும் இனிமேல் தான் அங்கு செல்லப் போகிறான் என்பதும் அந்தத் தந்தியிலிருந்தே தெளிவாகப் புலப்பட்டன; என்றாலும் உடனே அங்கு சென்றுவிட வேண்டு மெனப் பியோடார் துடித்தான். மறு நாள்வரைக்கும்கூட, காத்திருக்க அவன் விரும்பவில்லை. அடுத்த மூன்று மணி நேரத்திற்குள் கிளம்பிவிடவும் அவன் தயாராக இருந்தான். உளமொன்றிப் பழகிய இரு நண்பர்கள் மனம் கசிந்து பிரிவதைப்போல உணர்ச்சி கொப்புளிக்க ஆண்ட்ரேவிடம் விடை பெற்றுக் கொண்டான். சிறிது நேரத்தில் பியோடார் கிளம்பிவிட்டான். ஆண்ட்ரேவ் மட்டும் உரால்ஸ்க்கில் தனிமையில் இருந்தான். அவன் மட்டுமே இருந்தான்!

# 4

# அலெக்ஸாண்ரோவ் - கை

பியோடார் ரயில் நிலையத்திற்குச் சென்று விசாரித்தான். "ஆல்கை" நகருக்கு (அலெக்ஸாண்ரோவ் - கை என்பதின் சுருக்கப் பெயர்.) ஒரே நாளில் ரயில் போய்விடும் என்று தீர்க்கமாக அவனிடம் சொல்லப்பட்டது. அதைக் கேட்டதும் சற்று மகிழ்ந்தான். உடனே அந்தச் செய்தி தவறானது என்பதை அறிந்தான். எர்ஷோவ், ஊர்பக், கிராஸ்னிகட் ஆகிய மூன்று இடங்களில் ரயில் மாற வேண்டும் என்றதும் திகிலடைந்துவிட்டான். மூன்று இடங்களில் ரயில் மாறுவதென்றால் சாமானியமில்லை. அதுவும் 1919 வாக்கில் ரயில் பயணம் சென்று வந்தவர்கள் யாரேனும் இருந்தால், அவர்கள் சொல்லுவார்கள், மூன்று இடங்களில் ரயில் மாற்றுவதால் ஏற்படும் இன்னல்களை! இதிலிருந்து, ஆல்கை சேரக் குறைந்தது ஒன்றரை வாரமாவது ஆகும் என்பதை பியோடார் உடனே கணக்குப் போட்டுப் பார்த்துவிட்டான். இருந்தாலும் என்ன செய்வது? வேறு ஒரு யோசனை அவனுக்குத் தோன்றியது. அதன்படி ரயில் ஏறி, இடைவழியில் டெர்காச்சி ஸ்டேஷனில் இறங்கி அங்கிருந்து குதிரைத் தபால் வண்டிகளில் பயணமானான். அப்படியும் குறுக்குவழியில் அலெக்ஸாண்ரோவ் கைக்கு நாற்றைம்பது மைல் செல்ல வேண்டியதிருந்தது.

மீண்டும் ஒரே புல்வெளிகள், திறந்த வெற்றிடங்கள், நீல முகட்டு வான விளிம்புகள், நினைவுக் கெட்டாத தூரம் வரை உறைந்துபோன பனிப்படலங்கள். ஒவ்வோரிடங்களிலும் பனி மூட்டங்கள் உருகி ஓடின. அவ்விடங்களில் கருத்த மணற் குன்றங்களைப் பரிதாபமாகத் தலை நீட்டிக்



காட்டிய வண்ணம் பூமி பதுங்கிக் கிடந்தது! அப்பருவத்தில் கடுங்காற்று இல்லை. சூரியன் தன்னால் முடிந்தவரை வெப்பத்தை வழங்கிக்கொண்டிருந்தான்; எனவே மிகவிரைவில் வசந்தகாலம் வந்துவிடும். இன்னிசையும், இளந்தென்றலும் இனிய நடை போட்டுத் தளிர் வீசி வந்துவிடும் வசந்தகாலம்! இந்த ஸ்டெப்பிப் பகுதியில் ஒருசில கிராமங்களே தென்பட்டன. ஒரு கிராமத்திற்கும் இன்னொரு கிராமத்திற்கும் இடையில் பல மைல்கள் பரவிக்கிடந்தன; மக்கள் தத்தமது கிராமங்களிலேயே ஒடுங்கிக் கிடந்தனர்; கொள்வது, கொடுப்பது எல்லாம் அந்தந்தக் கிராமத்திற்குள்தான் பெரும்பாலும் நடந்தது. வெளியுலகத்துடன் தொடர்பு வேண்டாதவர்கள் போல வாழ்ந்தனர்; வெளியூராருக்குப் பெரும்பாலும் பெண் கொடுக்க அவர்கள் இசைவதில்லை. அதனால் அவர்களுக்கு மிகுந்த தொல்லையேதும் ஏற்படவில்லை! அதுதான் அந்தக் கிராமத்திலேயே போதுமான இளைஞர் பட்டாளமும் இருந்ததே! ஒவ்வொரு கிராமமும் ஒரு தனிக் குடியரசு போலவே இருந்தது. வெளியிடங்களுக்குச் சென்று எதையும் தேடிச் சேர்க்க வேண்டிய கட்டாயமோ, சென்று விற்க வேண்டிய அவசியமோ இல்லாத சுதந்திர வாழ்வு வாழ்ந்தனர். எல்லாவற்றிலும் சுயதேவைப் பூர்த்தி செய்து தன்னிறைவுடன் வாழ்வதை அனைவரும் விரும்பினர், போற்றினர், மேற்கொண்டனர். ஆல்கை செல்லும் பாதைகளின் இடையே உள்ள இதுபோன்ற பெரும் கிராமங்கள், ஸ்டெப்பிப் பிரதேசங்களில் நடந்த உள்நாட்டுப் பெரும் போரில் சிறந்த பங்கேற்றுப் பணியாற்றின. ஒஸினாவ்கை, ஆர்லாவ்கை, குரிலாவோ முதலிய கிராமங்கள் வரலாற்றுச் சிறப்பையும் பொன்றாப் பெருமையையும் பெற்றுவிட்டன. போர்க்காலத்தில் தனிப்பட்ட தொண்டர்கள் பலரைத் தந்ததுடன் ஒவ்வொரு கிராமமும் ஒரு முழுப் பட்டாளத்தையே அனுப்பி உதவியது. சிலர் வெள்ளைப்பட்டாளத்திலும் சேர்ந்துகொள்ள ஓடிப்போனார்கள்

என்பது உண்மையே! என்றாலும் செஞ்சேனைகளில் சேர்ந்து சுதந்திர தாகத்தை ஊட்டித் தாய்நாட்டை வளர்த்தவர்கள் மிகுதியானவர்கள். 1918 ம் வருடத்தில் குரிலாவோ நகரைக் கொஸாக்கியர்கள் முற்றுகையிட்டுக்கொண்டனர். உள்ளூரைச் சேர்ந்த சில கங்காணிகள் கொடுத்த தகவல்களைக்கொண்டு பல சோவியத் ஊழியர்களை வேட்டையாடத் துவங்கினர். இதைக் கண்ட கிராமமே திரண்டுவிட்டது. ஆண், பெண் அனைவரும் திரண்டு, கைக்குக் கிடைத்த ஆயுதங்களையெல்லாம் கொண்டு முழு மூச்சுடன் போராடிப் பல கொஸாக்கியர்களைக் கொன்று தீர்த்து, சோவியத் ஊழியர்களை மீட்டனர். கொஸாக்கியர்களைத் தலைதெறிக்க ஓடச் செய்தனர். பின்னர் விழிப்புணர்ச்சி பெற்றனர். தங்களுக்கும் ஒரு படை வேண்டுமென உணர்ந்தனர். குரிலாவோ கிராமப் படை உருவாயிற்று.

இதைப்போலவே பல பிராந்தியப்படைகள் தொடர்ந்து தோன்றின. தொமாஷ்கின், புகாசோவ், ஸ்டெபான் ராஷின் கிராஸ்னிகட் முதலிய பல கிராமப் படைகள் வலுப்பெற்றன. தொடக்க காலத்தில் இந்தக் கிராமப் படைகள் எல்லாம் தத்தமது கிராமத்தைப் பாதுகாக்கவும் பேணவுமே நிறுவப்பட்டன. எனவே அந்தந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்களே படைகளில் சேர்க்கப்பட்டனர். எல்லோரும் நன்கு பழகியவர்களே படையிலும் இருந்ததால் அவர்களிடையே ஒருமித்த உணர்ச்சியும், ஒன்றுபட்ட மனவலிவும் உறுதிப்பட்டன. கிராமத்தைப் பாதுகாக்கவேண்டும் என்ற பொது நோக்கம் உந்தியதால் எல்லாவற்றையும் மறந்து தோளிணைந்து நின்றனர். குரிலாவோப் படையில் ஒரு தகப்பனும் அவனுடைய ஐந்து பிள்ளைகளும் மனம் விரும்பிச் சேர்ந்திருந்தனர். வேறு வகை நிகழ்ச்சிகளும் இடம் பெறாமல் இல்லை. ஒன்றிப் பழகிய இரு நண்பர்களுள் ஒருவன் வெள்ளைப்படையில் சேர்ந்து கொஸாக்கியர்களுடன் ஓடிவிட்டதும் உண்டு. இன்னொருவன் செஞ்சேனையில் சேர்ந்து



கிராமப் படையில் பெருமையோடு அங்கம் பெற்றதும் உண்டு; இதுபோல ஒரு குடும்பத்திற்குள்ளேயே பிளவு ஏற்பட்டுப் பாதிப்பேர் வெள்ளைப்படையிலும் பாதிப்பேர் செஞ்சேனையிலும் அனுதாபமும் அக்கறையும் காட்டி வந்தனர்!

இங்ஙனம் அந்த அந்தக் கிராமங்களின் பாதுகாப்பிற்கெனவே ஏற்பட்ட சிறு படையினர் நாளடைவில் வெளிப் போராட்டங்களிலும் ஈடுபட்டனர். ஸ்டெப்பிப் பிரதேசம் முழுவதும் தொடர்ந்து போரிட்டனர். கோல்சாக்கை எதிர்த்துப் படைதிரட்டினர். அதன் பின்னர் போலிஷ் முனைக்குச் சென்று நிலப் பிரபுக்களுடன் போர்புரிந்தனர்.

எல்லாப் படைப் பகுதிகளிலும் ஊக்கமும், உள்வலியும், அருந்திறலும், ஆற்றலும் ஒருங்கே கொண்டவை முஸ்லீம் ரெஜிமெண்டுகள் தாம். பதினான்கு இனவழி மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அனைவரும் இப்படையில் திரண்டிருந்தனர். அவர்களிலும் கிர்கிஷ் மாவட்டத்தினரே ஏராளமானவர்கள். இக் கிர்கிஷியர்கள் இது நாள்வரை கொஸாக்கியர்களால் இரக்கமின்றியும், தன்மான உணர்வின்றியும், தயை தாட்சண்ணியமின்றியும் சுரண்டப்பட்டவர்கள்; அங்கம் அங்கமாக உறிஞ்சப்பட்டவர்கள்; ஒடுக்கப்பட்டவர்கள். எனவே, கொடுமை நிறைந்த அந்தக் கொஸாக்கியர்களை ஒழித்துக்கட்டத் தீர்க்கமாக முடிவு கட்டி இவர்கள் மூர்க்கமாக முனைந்தார்கள்.

இங்ஙனம் மனமுவந்து பணிபுரியவந்த போர்ப் படையினர் எல்லாத் துறைகளிலும். அஞ்சா நெஞ்சத்துடனும் அயர்வேதுமின்றியும் பாடுபட்டனர். அவர்கட்குப் போதுமான இருக்கை வசதியோ, வெடி மருந்துகளோ இல்லை. தரங்குறைந்த வலுவற்ற ஆயுதங்களையும் ஒருசிலரே வைத்திருந்தனர். போதுமான ஆயுதமின்றியும், வேண்டிய உடைகளும், பிற வசதிகளும் இன்றியும் நெஞ்சுறுதியுடன் போரிட்டனர். இருந்தும், சோவியத் ஆட்சிமுறையையும்

அரசியலையும் எதிர்த்துப் பலமுறை எழுந்த யூரல் பகுதிக் கொஸாக்கியர்களைச் சுவடு தெரியாமல் மடக்கினர். போர்த் துறைகளில் ஒவ்வொருவரும் அடிமுதல் நுனிவரை தலை சிறந்து விளங்கினர். என்றாலும் அரசியல் உணர்ச்சியும் விழிப்பும் பெறுவதில் மிகப் பின்தங்கி நின்றனர். எதையும் அவர்களால் எளிதில் புரிந்துகொள்ள முடியவில்லை. அப்பொழுது சோவியத் நாடு முழுவதும் சமுதாயத் துறையில் பெருகியிருந்த போராட்டங்களையும் கொந்தளிப்புகளையும் உணர்வதற்கோ, அன்றி அத்தகைய மாறுதல்களுக்குரிய காரணங்களை அறிவதற்கோ வேண்டிய திராணி அவர்களிடம் இல்லை. கட்டுப்பாடற்ற போக்கு, நெறியற்ற ஒழுங்கீனம், அவர்களுக்கே யுரிய 'அலாதி சுதந்திரம்', தேர்ந்தெடுத்த தலைவனை ஏற்பதில் சதா தகராறு, வேலைகளையும் போர்த்திட்டங்களையும் விரைவில் புரிந்துகொள்ள வியலாத மந்தகதி, மத்திய நிர்வாகத்திலிருந்து அனுப்பப்படும் தாக்கீதுகளைப் புரிந்து செயலாற்ற முடியாத பேதமை - இவையெல்லாம் மத்திய ருஷ்ய மாவட்டங்களிலிருந்து உணர்ச்சி பொங்கத் திரண்டிருந்த விவசாயப் பாட்டாளிகளின் படையினருக்கே உரிய, மாறாத குண நலன்கள், பண்புச் செல்வங்கள், அலங்கார குணங்கள்!

அலெக்ஸாண்ரோவ் கை, ஸ்டெப்பிப் புல்வெளியில் உள்ள அழகிய கிராமம். அதைச் சுற்றியிருந்த, ஆர்லாவ் கை, ஆசினாவ்கை போன்ற கிராமங்களுக்கும் அதற்கும் ஒரு சிறிதே தோற்றப் பொலிவில் வேறுபாடிருந்தது. அது எப்பொழுதும் சந்தடியும் ஜீவனும் கொண்ட கிராமம். அதன் நடுப் பாகத்தில் சேறும் சகதியும் திரண்டு கிடந்தன, சுற்றுப்புறங்கள் நடமாடக்கூட யோக்கியதை யில்லாமல் இருந்தன. அச் சமயத்தில் அலாக்ஸாண்ரோவ் கை வேறு காரணங்களாலும் முக்கிய மடைந்திருந்தது. ராணுவத் தலைமைக் காரியாலயம், அரசியல் துறைகள், பிற தலைமை நிலையங்கள், சிறு ராணுவத் தளங்கள் ஆகியவை யெல்லாம்



அங்கு குடியேறின. கிராமத்திலிருந்து ஷில்நயாபால்கா, பைடர்கான், உரால்ஸ்க், போர்டு ஆர்தர் முதலிய எல்லாப் பகுதிகளுக்கும் தகுதியான போக்கு வரத்து ஏற்பட்டது. பிற பகுதிகளில் போர் செய்துகொண்டிருந்த செஞ்சேனைப் படைகளுடன் தொடர்பும் போக்குவரத்தும் பெருகின. கணக்கில் அடங்காத வண்டிகளும், வந்து போகும் ஜனப் பெருக்கமும் மிகுதியாகிக்கொண்டே வந்தன. ஓய்வு ஒழிவற்ற குதிரைப் படை வீரர்கள் அவசரம் அவரமாக வருவதும் போவதுமா யிருந்தனர். ஏராளமான மூட்டை முடிச்சுகளைப் பாரவண்டிகளும், ஒட்டகக் கூட்டங்களும் சுமந்து வந்து குவித்தவண்ணமே யிருந்தன. பொருள்களை ஏற்றுவதும், இறக்குவதும், அடுக்குவதும், அனுப்புவதுமாக இடைவிடாத வேலைகள் தொடர்ந்து நடந்துகொண்டிருந்தன. இவ்விதமாக இதுகாறும் அந்தக் கிராமமே அனுபவித்தறியாத பரபரப்பான வாழ்க்கை தோன்றியது. சந்தையில் பாராக் கொடுப்பதுபோல நாள்தோறும் மாலையில் சதுக்கத்தின் பாதுகாவலுக்கு வந்து போயினர் காவற்காரர்கள். செஞ் சேனையினரின் அலுவல்களும், நடவடிக்கைகளும் நாளுக்கு நாள் பெருகின. ஆல்கை நகரப் பெண்களில் பெரும் பகுதியினர் செஞ்சேனையினரின் நடவடிக்கைகளில் மனமொன்றினர். மகிழ்ந்து நின்றனர்.

செஞ்சேனையினருக்கும், பொதுமக்களுக்கும் வேண்டிய அரசியல் அறிவு விளக்கத்திற்கெனப் பல சொற்பொழிவுகட்டும், பொதுக்கூட்டங்களுக்கும் ராணுவத்தின் அரசியல் பகுதியினர் ஏற்பாடு செய்து வந்தனர். அவ்வப் போதைய விஷயங்களைப்பற்றிய விளக்கச் சொற்பொழிவுகளே அக்கூட்டங்களில் நிகழ்த்தப்பட்டன. செஞ்சேனையினரை அரசியல் இயக்கங்களிலும் ஆக்க வேலைகளிலும் ஈடுபடுத்த முடிந்ததைப்போலப் பிராந்தியப் பொது மக்களை இழுப்பது மிகவும் கடினமாயிருந்தது. ஆனால் செஞ்சேனையினர் மட்டும் எல்லாக் கூட்டங்களுக்கும் மகிழ்வோடும்

விருப்போடும் சென்றனர். கவனத்துடன் சொற்பொழிவு
களைக் கேட்டுணர்ந்தனர். ஏராளமாகக் கூட்டங்களுக்கு
ஏற்பாடு செய்யும்படி தூண்டினர். சொற்பொழிவுகள்
விளக்கமாகவும் தெளிவாகவும் அமைய வேண்டு மென்று
விரும்பினர். இம்மாதிரி விருப்பமெல்லாம் நன்கு வரவேற்
பதற்குரியவைதான்; என்றாலும் போதுமான அரசியல்
ஊழியர்கள் இன்மையால் அவர்களுடைய விருப்பங்களை
எல்லாச் சமயங்களிலும் திருப்தியாக நிறைவேற்ற முடிய
வில்லை. சுற்றிலும் கொஸாக்கியர்களே நிறைந்திருந்த இக்
கட்டான அரசியல் சூழ்நிலைகாரணமாக அடிக்கடி இவை
போன்ற பொதுக்கூட்டங்களையும், வெளி அரங்க விவாதங்
களையும் நடத்த முடியவில்லை. அவ்விதம் ஏதேனும் கூட்டம்
நடத்தினால் கொஸாக்கியர்கள் அதை உளவறிந்து கொண்டு,
நிராயுத பாணிகளைத் திடீரெனத் தாக்கி வெறியாட்ட
மாடிச் சென்றுவிடுவர் என்ற திகில் இயல்பாகவே மாற
வில்லை. அம்மாதிரி அவ்வெறியர்கள் பல முறை செய்திருந்
ததே அத் திகிலின் காரணம்!

அந்தச் சமயத்தில் நிக்கோலாய் நிக்கோலாயேவிச்
யோஷிகாவ் என்பவன் அரசியற் பகுதியின் தலைவனாக
இருந்தான். அவன் பெட்ரோகிராடைச் சேர்ந்த பாட்டாளி
மகன். முதிர்ந்த அறிவும், தெளிந்த உணர்ச்சிப் பாங்கும்
நிறைந்த, இருபத்திரண்டு வயதே அடைந்த இளைஞன்.
அதே சமயத்தில் (கமிசார்) படைக் காரியஸ்தனாயும்
வேலை பார்த்துக்கொண்டான். இத்தகு துடிப்புள்ள நல்
லிளைஞனை ராணுவத்தினரும், செஞ்சேனையினரும் மட்டு
மின்றி அந்தக் கிராம மக்கள் அனைவருமே மனமார நேசித்
தனர். மதித்துப் போற்றினர். யதார்த்தமாகவும், இனிமை
யாகவும், அறிவாற்றலுடன் அவன் தேனொழுகப் பேசுவது
பலரது சிந்தையைக் கவர்ந்தது; தன்னால் எல்லாம் முடியும்
என்று வீண் சம்பம் பேச மாட்டான்; அப்படி எதை
யேனும் செய்து முடிப்பதாக வாக்களித்தால் எப்பாடு பட்



டேனும் அதை முடித்துவைக்கத் தவற மாட்டான். சொல்
தவறாத நேர்மையுடையவன்; கடமை பேணும் கண்ணியம்
நிறைந்தவன். இந்த நல்லுணர்ச்சிகளை அரசியல் இயக்கத்
தில் ஈடுபட்ட அனைவரும் பெற்றுயர வழி செய்தான். இத
னால் செஞ்சேனையினர் நெறிதவறாது கட்டுப்பாட்டுடன்
கிராம மக்களிடம் நடந்துகொண்டனர். ஒழுங்கு தவறாது
பழகினர். இந்த மாறுதலை நிலைநிறுத்தியவன் நிக்கோலாய்
நிக்கோலாயேவிச்தான். படைவீரர்களும் அவனை ரொம்ப
வும் போற்றினர். அவன் படையினரின் போக்கெல்லாம்
தானும் சென்றான், படைப் பெயர்ச்சிகளில் எல்லாம் அய
ராது உடன் உழைத்தான். முன்னேறிச் சென்ற காலத்
தில் நெருப்புச் சுழல்களில் பதுங்கியும், முனைப்புடன் உற்
சாகம் காட்டியும் முன்மாதிரி யானான். எல்லாத் துறையி
லும் சம அந்தஸ்தும் தகுதியும் பெற்ற சிறந்த தோழனாக
எல்லார்க்கும் விளங்கினான்.

1919-ம் வருஷத் தொடக்க காலத்தில் அரசியல் ஆக்க
வேலைகள் செஞ்சேனைப் பகுதிகளில் முறையாக உருவாக
வில்லை, செம்மையாக வளரவில்லை. அரசியல் இயக்க வேலை
களின் முறையும் போக்கும் பலர்க்குத் தெளிவாக விளங்க
வில்லை. என்றாலும் அரசியல் பகுதிகளில் தலைமையேற்று
நடத்திய கமிசார்கள் தங்களுடைய இடையறாத தொண்டு
களாலும் உழைப்பாலும் செஞ்சேனையினரின் வர்க்க
உணர்ச்சியை வலுப்படுத்தி வளர்த்துவந்தனர். செஞ்சேனை
வீரனொருவன் எவ்விதம் பசித் துன்பத்தைப் பொறுக்க
வேண்டும், போதிய உடையும், காலுறைகளும் இல்லாமல்
குளிரையும் வெப்பத்தையும் எவ்விதம் தாங்க வேண்டும்,
எல்லையற்ற முன்னேற்றப்படைப் பெயர்ச்சிக் காலங்களி
லும் போராட்டக் காலங்களிலும் எல்லாத் துன்பங்களையும்
எவ்விதம் ஏற்க வேண்டும், போராட்டங்களில் துணிந்து
எவ்வகையில் போரிட்டுத்தேவையானால் நாட்டுக்காகத் தன்
உயிரையும் பெருமையுடன் காணிக்கையாக்க வேண்டும்

என்பனவற்றையெல்லாம் வீறுகொள உணர்த்தினார்கள். தொடர்ந்த போராட்டம் நடந்துகொண்டே யிருந்தால் அரசியல் இயக்கப் பயிற்சியைப் பல வாரங்களுக்கு வழங்க முடியாமலும் போய்விடுவதுண்டு. ஒழுங்குபடுத்தி அமைக்கப்பட்ட வேலைத்திட்டத்தைக் குலைத்துவிடுவதும் உண்டு. நேரம் கிடைத்தபோதெல்லாம் அவசரக் கூட்டங்கள் மட்டுமே நடத்த முடிந்தது. உருப்படியான ஆக்கவேலைத் திட்டங்களெல்லாம் ஒத்திப்போட வேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டது.

அலெக்ஸாண்ரோவ்கை கிராமத்திலும் இதே நிலைதான் நிலவியது. இன்னும் மோசமென்றுதான் சொல்லவேண்டும். போர்முனைக்குச் செல்லாத 'ரிசர்வ்' பகுதியினர் மிகக் குறைந்த அளவினர். வேலையினின்று அடிக்கடி ஓய்வு பெற்று வருவோரால் குறைந்த நேரமே பெற முடிந்தது. வேலைப்பளு மிகுந்தமையால் போதிய ஓய்வுபெற அவர்களால் முடியவில்லை. பெரும்பாலோர் போராட்ட முனைகளில் முழுமூச்சுடன் ஈடுபட்டிருந்தனர். எனவே, அரசியல் இயக்கப் பகுதியில் வேலை பார்த்த சிலரும் அடிக்கடி போர்முனைக்குச் சென்று திரும்பிய வண்ணமே இருந்தனர். அச்சு அறிக்கைகள், அவசரத் தாக்கீதுகள், குறிப்புகள், மேற்கொள்ளவேண்டிய நடபடிகள் முதலியவற்றை எடுத்துச் சென்று போர்முனையில் உள்ளோர்க்குத் தெரிவித்துத் திரும்புவதே அவர்களுக்குப் போதுமான வேலையாக இருந்தது. இதனால் கமிசார்களோடும், கட்சிக் கிளைகளுடனும் தொடர்புகொண்டு வேண்டிய சமாசாரங்களையும் கட்டளைகளையும் தெரிவிக்க அவர்களால் முடிந்தது. தவிரவும் சமயம் கிடைத்தபொழுதெல்லாம் செஞ்சேனையினரிடத்தும் அரசியல் இயக்கங்களைப் பரப்பி வந்தனர். அவசியம் நேர்ந்தபொழுது துப்பாக்கி ஏந்திச் சென்று போர்முனையிலும் சமாளித்துக்கொண்டனர். அந்தச் சமயம் மார்ச் மாத ஆரம்பத்தில் ஒரு நாள், செஞ்சேனை வீரர்கள் சிலருடன்



பின்வாங்கி வந்துகொண்டிருந்தபொழுது, குதிரைப் படைக் கொஸாக்கியர் கூட்டம் ஒன்று வந்து அவர்களைத் தாக்கி, அரசியல் பிரிவில் இருந்த மூன்று ஊழியர்களை கொன்றுவிட்டார்கள். போர்முனை சென்று இப்படிப் பலியான ஊழியர்கள் பலப்பலர்!

விவசாய மக்களின் ரெஜிமெண்டுகளில் அரசியல் இயக்கப் பணிகளைப் புரிந்துவந்த ஊழியர்கள் அனைவரும் உணர்ச்சியும், வலுவும் வாய்ந்த தீவிரமான செஞ்சேனையினர். அவர்களில் ஒருவன்தான் நிக்கோலாய் நிக்கோலாயேவிச்! மேலே குறிப்பிட்ட எல்லாவகைச் சிறப்பும் பெற்ற ஈடிணையற்ற பெருவீரன் அவன். இப் பேராண்மைக் குணங்களால்தான் செஞ்சேனை வீரர்களிலே சிகரம் போன்றவன் என்று எல்லோராலும் பாராட்டப்பட்டான். செஞ்சேனை வீரர்களுக்கெல்லாம் முன்மாதிரிகையானவன் என்று புகழப்பட்டான்!

ஆல்கை அப்பொழுது கேந்திரஸ்தானமாக மாறிவிட்டது. போராட்டத்தின் உச்சநிலை அங்கு ததும்பி நின்றது. ஆல்கை நகருக்கு வெகு அண்மையில் கொஸாக்கியர்களின் பிடியில் அகப்பட்ட கிராமங்கள் ஏராளமாயிருந்தன. அவற்றையெல்லாம் விடுவித்து முன்னேறும் வேலையில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர் ராணுவத்தினர். ஸ்லோமிகின்ஸ்காயா என்னும் கொஸாக்கியக் கிராமத்திற்கு அருகில் இருந்த ஆர்தர் துறைமுகத்தை வளைத்துக்கொண்டனர். அதிலிருந்து ஸ்லோமிகின்ஸ்காயா வழியாக உரால்ஸ்க் குர்யேவ் நெடுஞ்சாலை முழுவதையும் எளிதில் கைப்பற்றிவிட முடியும். எனவே, உரால்ஸ்க் பகுதியிலிருந்து பிரிந்த ராணுவம் அனைத்தும் கொஸாக்கியர்களை விரட்டியோட்டுவதிலும், வெள்ளைக் கொஸாக்கியப் படைகளைக் குலைப்பதிலுமே ஈடுபடவேண்டியிருந்தது. அவ் வேலைத் திட்டத்தின் முதல் படியாக, ஆல்கையைக் கேந்திரமாகக் கொண்டு ஸ்லோமிகின்ஸ்காயாவை முதலில் தாக்க வேண்டும். அங்

கிருந்தபடியே சேரும் சகதியும் நிறைந்த சீனப் பிரதேசத்தில் நுழைந்து, பிறகு, உரால்ஸ்க்—குர்யேவ் நெடுஞ்சாலை வழியாக முன்னேறிச் செல்லவேண்டும். சமத்காரமான இத்தகைய திடீர் தாக்குதலால் பின்வாங்கி ஓடும் கொஸாக்கியர்களை, உரால்ஸ்க் வட்டாரத்தையே தாண்டவிடாது மடக்கிப் பிடித்துவிட முடியும். எனவேதான், எல்லா முனைகளிலும் வலுவாகப் போரைத் துவங்குதற்குரிய நாளை மிகச் சமீபத்தில் குறித்துவைத்திருந்தனர். அப்போராட்டத்திற்காக ஆல்கையில் குவிந்திருந்த ராணுவத்தினர் அனைவரும் துரிதமான ஆயத்தங்களைச் செய்துகொண் டிருந்தனர். எனவே ஆல்கை நகர் முழுவதும் ஓயாத சந்தடியும், அயராத பரபரப்பும் மிகுதியாக இருந்தன.

இந்தச் சூழ்நிலையில்தான் ஆல்கையில் நுழைந்தான் பியோடார். நேராக அரசியல் பகுதிக் காரியாலயத்திற்குச் சென்றான். நிக்கோலாய் நிக்கோலாயேவிச்சிடம் அழைத்துச் செல்லப்பட்டான். அங்கே நிக்கோலாயேவிச் முழு ராணுவ உடையணிந்து, ஏராளமான குறிப்புக்கள் நிறைந்த தொகுப்புப் பட்டைகளை (பைல்கள்) உற்றுக் கவனித்துக்கொண் டிருந்தான்.

போதுமான வசதிகள் இல்லாத காரியாலயத்தில் நடுங்கும் கரங்களுடன் எல்லாத் தாள்களையும் ஆழ்ந்து நோக்கிக்கொண் டிருந்தான். அவன் இருந்த அறையில் ஒரு நாற்காலியும் மேசையும் தவிர வேறு ஆசனம் ஏதுமில்லை. மேசைமீது சில சாதாரணப் பென்சில்களும், சிம்னி விளக்கு ஒன்றும், சில அரசியல் நூல்களும், குறிப்புச் சுவடிகளும், காகிதக் கற்றைகளும் குவிந்து கிடந்தன.

பியோடாரும் நிக்கோலாயேவிச்சும் வாழ்த்தித் தம்மை அறிமுகப்படுத்திக்கொண்டனர்; ப்ருன்ஷ் அனுப்பிய தந்தி உத்தரவை நிக்கோலாயேவிச்சிடம் பியோடார் காட்டினான் அதில், "**தோழர் கிளிக்கோவ் அலெக்ஸாண்ரோவ் கையில் உள்ள படைப் பகுதியினர்க்குரிய அரசியல் அலுவலில் பொறுப்பேற்கவேண்டும்**" என்ற உத்தரவைக் கண்டான்.



தந்தியைச் சரியாகக்கூடப் பார்க்காது நிக்கோலாய், ஏதோ ஞாபகமாக மேசைமீது கிடந்த சில காகிதக் கற்றைகளைப் பார்த்தவண்ணம் இருந்தான். எதையோ சிந்தித்த வண்ணம் அந்தத் தந்தியை பியோடாரிடம் திருப்பிக் கொடுத்தான். உடனே உணர்வு வந்தவனாய், "சரி. நாமிருவரும் அங்கேயே போவோம். உத்தரவுப்படி உம்மிடம் பொறுப்பை ஒப்புவித்துவிடுகிறேன். உமது பிரயாணக் களைப்பைப் போக்கக் கொஞ்சம் தேத்தண்ணீரில் சாப்பிடலாமே!" என்றான்.

பியோடாருக்கு இதற்கெல்லாம் நேரமில்லை; வந்தவுடன் முழு மூச்சுடன் வேலையில் இறங்கத் துடித்துக் கொண்டிருந்தான். நிக்கோலாயிடம் நேரடியாக வேண்டுவனவற்றை மட்டும் தெரிந்துகொண்டு தன் வேலையைத் தொடங்க விரும்பினான். ராணுவ நிலை, அரசியல் இயக்க வேலையின் வளர்ச்சி, வேலைத் திட்டங்கள் அவற்றின் முன்னேற்றம், இனி வேண்டிய மாற்றங்கள் ஆகிய அனைத்தையும் விரைவில் தெரிந்துகொண்டு தன் அலுவலகத்திற்கு ஓடோடிச் செல்ல வேண்டுமெனத் தவித்துக்கொண் டிருந்தான். அவன் தனக்கு வேண்டிய எந்தச் சவுகரியத்தையும் கவனிக்கும் நிலையில் இல்லை. ஆனால் நிக்கோலாய் அவனுக்கு வேண்டிய வசதிகளில் எல்லாம் கண்ணும் கருத்துமாயிருந்தான். அவனது அறைக்கு அழைத்துச் சென்று, வெந்நீருக்கும் தேத்தண்ணீருக்கும் ரொட்டிக்கும் ஏற்பாடு செய்தான். இதனால் முக்கியமான விஷயங்களையெல்லாம் ஒத்திப்போட வேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டது பியோடாருக்கு. நிக்கோலாய் மட்டும் ஒரு தனி அறையில் வசித்துக்கொண்டிருந்தான்; அந்த அறையில் ஏராளமான இடமிருந்தது. அதை அடுத்து ஒரு பெரிய மண்டபமும் பல சிறிய அறைகளும் அமைந்திருந்தன. அவ் அறைகளுள் ஒன்றில் பியோடார்

தங்கினன். பியோடாருக்கு வேண்டிய வசதிகளைச் செய்த பின்னர், மண்டபத்திலிருந்த பெரிய ப்யோனுவில் புரட்சிப் பாடல்களைப் பாடி மகிழச் சென்றுவிட்டான் நிக்கோலாய்!

நேரம் கடந்தது. இருவரும் நெருங்கி உரையாடும் சந்தர்ப்பம் கிடைத்தது; மிக நெருங்கிப் பழகத் துவக்கினர். நிக்கோலாயின் இளமைத் துடிப்பையும் சுறுசுறுப்பையும் கண்டு வியந்தான் பியோடார். இத்தகைய நல்லிளைஞன் ஒருவன் அரசியல் பகுதியின் தலைவனாகத் தனக்குமுன் பணியாற்றியதை யறிந்து மிக மகிழ்ந்தான். தத்தமது கடந்த கால வரலாற்றையும், கட்சியுடன் தமக்கிருந்த தொடர்புகளையும், புரட்சிப் போரில் அதுவரை ஆற்றிய பணிகளையும் இனிச் செய்ய விரும்புவதையும் இருவரும் பரிமாறிக்கொண்டனர்;இருவரும் சாவதானமாகத்தான் பேசிக்கொண்டிருந்தனர்; என்றாலும், நிக்கோலாய் பரபரப்புடனும், ஏதோ அவசரமாகப் புறப்பட விரும்புவதுபோலவும் நடந்துகொண்டான்; அவன் எதையோ எண்ணி எண்ணி மனம் குழம்புவதாகவும் தடுமாற்றமடைவதாகவும் பியோடார் உணர்ந்தான். அவனோடு பழகிய அனைவரும், அவனது வெளிப்படையான, முரண்பாடில்லாத, இதயங்கலந்த நட்பையும் தொடர்பையும் பெரிதும் விரும்புவார்கள். அத்தகைய நிக்கோலாய் இன்று மட்டும் பியோடாரை நேருக்கு நேர் பார்க்க முடியாது கண்கூசிக் குனிந்துகொண்டான். கைகளைப் பிசைந்தவண்ணம் ஒரு நிலையில் உட்கார முடியாது தவித்துக்கொண் டிருந்தான். அடிக்கடி எழுவான்; திடீரென்று அமர்வான்; காரணமின்றி வலிந்து அசட்டுச் சிரிப்புக் காட்டுவான். ஏதோ வலுவந்தமாக மரியாதை காட்டுவது போலவும், இதயம் பொருந்திய தொடர்பில்லாதவன் போலவும், பியோடாரது கருத்துக்களை முழுக்க முழுக்க மறுக்காது ஏற்றுக்கொள்ளுபவன்போலவும் இயல்பான உணர்ச்சியின்றி இயந்திரமாக நடந்துகொண்டான்.

V55:5137M57
21N57



இத்தகைய முரண்பட்ட நடத்தையைக் கண்ட பியோடாருக்கு ஒன்றும் புரியவில்லை. "இதென்ன வேடிக்கையாயிருக்கிறது! இந்த நிக்கோலாவைப் புரிந்துகொள்வதே கஷ்டம் போலிருக்கிறதே" என்று தனக்குள்ளேயே குழம்பிக்கொண் டிருந்தான்.

அவர்கள் அறையைவிட்டு மீண்டும் அரசியல் இயக்க அலுவலகத்திற்கே திரும்பினர். அங்கே பெரும்பகுதியும் அலுவல் அடிப்படையில் பேசிக்கொண்டிருந்தனர். நிக்கோலாய் யோஷிகோவ் ஒருசிறிதே பேசினன்; அதிலும் தன்னைப்பற்றி எதுவுமே சொல்லிக்கொள்ளவில்லை. பியோடார் கேட்ட கேள்விகளை யெல்லாம் விருப்பின்றிப் பெயருக்குக் கேட்டுக்கொண் டிருந்தான். அவற்றிற்கெல்லாம் பிடிப்பின்றியும், பொருத்தமின்றியும் எரிந்து விழுபவன் போலப் பதிலிறுத்தான். எவரேனும், அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள் உள்ளே நுழைந்தால் அவர்களை இன்முகத்துடன் வரவேற்று வேண்டாத விஷயங்களைப்பற்றியெல்லாம் வலுவந்தமாக இழுத்து இழுத்து மணிக் கணக்கில் பேசிக்கொண் டிருந்தான். யோஷிகோவ் காற்றடித்த பக்கமெல்லாம் சாயும் காற்றாடி போன்ற நிலையற்றவன், கொள்கைப் பிடிப்பற்றவன் என்று கருதி யிருப்பார்க்கு அவனுடைய இந்தப் போக்கு வேடிக்கையாகத் தோன்ருது; விபரீதமாகவும் விளங்காது. ஆனல் பியோடார், நிக்கோலாயைத் தெளிவாகவும் திருத்தமாகவும் புரிந்துகொண்டவன். அவன் அலுவலில் ஈடுபட்டிருக்கும்பொழுது மிகக் குறைந்த சொற்களை மிகச் செட்டுடன் பயன்தரும் அளவிற்கே உபயோகிப்பதை அறிந்துகொண்டவன். ஆனல் இப்பொழுது மட்டும் அவனுடைய வலுவந்தப் பேச்சுப் பாவனையை அவனல் விளங்கிக்கொள்ள முடியவில்லை; இந்தப் பாவனையை அவனது இயல்பிற்கு மாறுபட்டதாகவும் உணர்ந்தான்; அதைவிட தன்னோடு பேசும்பொழுது உணர்ச்சியின்றிக் கேட்டுக்கொண் டிருந்த யோஷிகோவ்

106899

தன்னுடைய சக ஊழியர்களைக் கண்டதும் பல்லெல்லாம் தெரியக் காட்டி, மெய்மறந்து மகிழ்ந்து நிற்பது, பெரும் புதிராகத் தோன்றியது.

யோஷிகோவின் அரைகுறைப் பதில்களினின்று, அங்கெல்லாம் கட்சிக் கிளைகள் அமைக்கப்பட்டுள்ளன வென்றும், "தோழர்களின் விசாரணை மன்றங்கள்" நன்கு செயல்படுகின்றன வென்றும், சிறு சிறு கையேடுகளும் கட்சி இலக்கியங்களும் பரப்பப்பட்டுள்ளன வென்றும், விவாத அரங்கங்களும், வெளியிடச் சொற்பொழிவுகளும் தொடர்ந்து கூட்டப்படுகின்றன வென்றும் மேற்போக்காகத் தெரிந்துகொள்ள முடியும். இங்ஙனம் அங்கு எல்லாத் துறைகளிலும் அரசியல் இயக்க அடிப்படை வேலைகள் செம்மையாக்கப்பட்டுள்ளதாகவே புலப்பட்டது. இவ்விதம் ஏற்கனவே செம்மையுற அமைக்கப்பட்டிருந்ததை 'நன்கு நிறுவவும், பரப்பவும்' பியோடாரை இங்கு அழைத்திருக்க வேண்டிய அவசியமே இல்லைதான்!

பச்சையாகச் சொல்லவேண்டுமெனில் இதையெல்லாம் கேட்டபின்னர் தன் வேலைகளை எந்தத் துறையில் துவங்குவதென்று பியோடாருக்கு விளங்கவில்லை. ஏராளமான வேலைகளின் மத்தியில் ஓய்வு ஒழிவின்றி உழைக்கத் துடிதுடித்து வந்தவனுக்கு ஒன்றுமில்லாத நிலையைக் கண்டதும் மிகவும் மனச் சோர்வே ஏற்பட்டது. அவன் இதுவரை போர் முனைக்கு நேரில் சென்றறியாதவன், அதற்குரிய அனுபவங்களையும் பிற விஷயங்களையும் பழகியுணராதவன். எனவே இங்கிருந்த நிலவரத்தை அவனால் எளிதில் புரிந்துகொள்ள முடியவில்லை. அங்கேயிருந்து அனுபவம் பெற்ற யோஷிகோவிற்குச் சொல்லிக்கொடுக்கும் நிலையிலும் அவன் இல்லை. மேலும் அவன் அங்கு அதிகாரம் செய்து வாழ வரவில்லை; அடங்கிப் பணிபுரியவே வந்தான். எனவே, பிறர் தனக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் என்பதை அவன் பெரிதாகக் கருதவில்லை; ஒரு பொருட்டாகவும் மதிக்கவில்லை. முதன்



முதல் யோஷிகோவிடம் பேசிக்கொண் டிருந்தபொழுதே தனது இந்தக் கருத்தைப் போதுமான அளவு பியோடார் தெரிவித்துவிட்டான். ஆனால் யோஷிகோவின் புரியாத நடத்தையும், மர்மமான பழக்கமும், வாய்திறவாத முணுமுணுப்பும் பெரும் குழப்பத்தை உண்டாக்கின. தன்னுடைய நல்லெண்ணத்தைத் தவறாகப் புரிந்துகொண்டுவிட்டானோ என்று வேதனைப்பட்டான். அதுவும் தவிர, அலுவலகத்தில் அவனோடு பேசிக்கொண் டிருந்தபொழுது யோஷிகோவ் வலுவந்தமாகப் பதில் சொன்னதும், வேண்டா வெறுப்பாகத் தலையாட்டியதும் உண்டு, மிக விழிப்புடன் இருப்ப தென்று முடிவுசெய்துகொண்டான் பியோடார். தானும் தந்திரமாக உள்ளுணர்ச்சியையும், மனச்சாட்சியையும் மறைத்து நடக்கக் கற்றுக்கொண்டான். நேற்று வந்த பியோடாருக்குக் கீழ்ப்பட்டவனாகத் தான் நடக்க நேர்ந்திருப்பது பற்றியும் அதனால் தனக்கிருந்த செல்வாக்கும், தடபுடல் வாழ்வும் பறிபோய்விட்டதென்றும் யோஷிகோவ் வருந்தக்கூடுமெனச் சந்தேகப்பட்டான் பியோடார். இதுவரை ராணுவப் பிரிவுகளிலும், ஆல்கைப் பகுதியிலும் கேள்வி கேட்பாரற்ற தலைவனாகத் தனியாணை செலுத்தி வந்தான் யோஷிகோவ். எல்லா சூட்சுமக் கயிறுகளும் அவன் கரங்களில் இருந்தே ஆடின! எதைப்பற்றியும் எவரும் அவனிடமே வர வேண்டும் என்ற அளவிற்கு உயர்ந்திருந்தான்; மதிப்புப் பெற்றிருந்தான். இங்ஙனம் வளர்ந்திருந்த மதிப்பையும் புகழையும் தன்னுடைய தாக்கிக்கொள்ள பியோடார் வந்துவிட்டான். யோஷிகோவின் புகழ் அடிப்படை ஆட்டம் கண்டுவிடும். யோஷிகோவின் அதிகாரங்களை யெல்லாம் குலைத்து அவனை ஒன்றுமில்லாதவனாகப் பியோடார் ஆக்கிவிடக் கூடும்—இதுபோன்ற சந்தேகங்களாலும் சங்கடங்களாலும்தான் நிக்கோலாய் முரண்பட்டு நடக்கிறானோ என்று பியோடார் கருதினான். வந்து பழகிய ஒன்றரை மணி நேரத்திற்குள் மாறுபாட்டுடன் அவன்

தன்னுடன் பழகுவதற்கு இவையே காரணங்கள் என்ற முடிவிற்கும் வந்தான்.

பியோடார் கிளிக்கோவ் தன் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டான். அவன் மிகுதியாக ஏதும் பேசவில்லை. அரசியல் இயக்க அமைப்பாளன் ஒருவனுக்குரிய இயல்பான போக்குடன் தன் வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினான்.

முதன் முதலில் நிகழ்ச்சிப் பதிவேடுகளையும், குறிப்புகளையும், கடந்த அறிக்கைகளையும் துருவிப் பார்த்து நிலவரத்தையும் கட்சிகளின் நிலையையும் தெளிவாகத் தெரிந்து கொள்ளத் தீர்மானித்தான். இதற்கு யோஷிகோவின் உதவி கிடைக்காவிட்டாலும்கூட அவனுடைய உதவியாளர்களையும் சக ஊழியர்களையும் கொண்டு அதிகார பூர்வமான அறிக்கைகளைத் திரட்ட விழைந்தான் அவன்.

அடுத்தபடியாக, கட்சிக் கிளைகள் அனைத்தையும் பல வகையில் இணைக்க விரும்பினான். பொதுப் பேரவைகள், கலாசாரக் குழுக்கள், பொருளாதாரக் கட்டுப்பாட்டுக் கழகங்கள், போர்ப் படையினரின் கூட்டங்கள்—போன்ற பல துறைகளில் அரசியல் இயக்கத்தைச் செம்மைப்படுத்த விரும்பினான். இதன் வழியாக எல்லாவற்றையும் எளிதில் புரிந்துகொண்டு செயல் திட்டத்தை உருவாக்க முடியும் என்று நம்பினான்.

அதன் பின்னர் எல்லாக் கிளைப் பிரிவுகளையும் நேரில் சென்றே பார்வையிட்டு, அவற்றின் நிலவரத்தை அறிய முடிவு கட்டினான். கடைசியாக, அவனுடைய தலைசிறந்த ஆசையும், நீண்ட நாள் விருப்பமும் நிறைவேற வழி வகுக்க விரும்பினான். வரப்போகிற பெரும் போராட்டத்தில் ஒரு முழுநேரச் சேவகனாகப் பணிபுரிந்து, ஊக்கமும் வீரமும் கொண்ட தகுதிறலோன் என்ற புகழ் பெறத் துடித்தான். இவனுடைய வருங்கால அரசியல் வாழ்வையும், இயக்கப் பணிகளையும் நிர்ணயிக்கும் சோதனைக் களமாகவே தன் பொறுப்பை உணர்ந்தான்!



அதைத் தொடர்ந்து சில நாட்கள் தனது அலுவலைத் தொடர்ந்து நிறைவேற்றினான். கட்சி அமைப்பியல், கலாச் -சார, கல்வித்துறைச் செய்தி நிறுவனங்கள், முதலியவற் றைச் சேர்ந்த அனைவருடனும் பல முறை கூடி விவாதித் தான். ஆனால் எல்லாரிடமிருந்தும் இணக்கமற்ற எதிர்ப் பும் வெறுப்பும் நிறைந்த வரவேற்பையும் பதிலையுமே பெற் றான். யோஷிகோவின் செல்வாக்கில் வயப்பட்டோரது வெறுப்பு எல்லாத் துறைகளிலும் வெளிப்பட்டது. இது போன்ற எத்தனையோ இடையூறுகளும் தடங்கல்களும் நிறைந்திருந்தும்; விடாப்பிடியுடனும் உற்சாகத்துடனும் எல்லாக் குறிப்புகளையும் தொகுத்து நிலைமையைப் புரிந்து கொண்டான் பியோடார். வேண்டிய வேலைத்திட்டத்தையும் உணர்ந்துகொண்டான். பலர் தொகுத்து அனுப்பிய அறிக்கைகளில் போதிய விளக்கமோ விபரமோ காணப்பட வில்லை. பொதுப்பட மேல்பூச்சாகப் பெயருக்கே அறிக் கைகள் பலரால் தரப்பட்டிருந்தன. ஒரு நூதனச் சூழ் நிலை, குறிப்பிட்ட கிராமத்தின் அமைப்பு, எல்லாத் துறை யிலும் மலிந்துள்ள கேடுகெட்ட போக்குகள், அப்போக்கு களைச் செம்மை செய்யத் துவக்கப்பட்ட வேலைகள், மேற் கொள்ளப்பட்ட சாதகமான நடவடிக்கைகள், குறைகளை நிவர்த்திக்கக் கையாளவேண்டிய முறைகள் ஆகிய இவற் றைப்பற்றி யெல்லாம் அறிக்கைகள் அனைத்திலும் கூறப் பட்டிருந்தன என்றாலும், போதுமான அளவு வேண்டிய மாற்றங்கள் ஏதும் உருவாகவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இதைப் பியோடார் நன்கு புரிந்துகொண்டான்.

பொதுவாக அறிக்கை தந்த விளக்கங்கள் பின்வரு மாறு: போர்ப் படையினருக்கு வேண்டிய நூல்களும், இயக்க ஏடுகளும் ஏராளமாக உரிய காலத்தில் வழங்கப்பட் டன. நூலகங்கள் பல இடங்களில் ஏற்படுத்தப்பட்டன, முதியோர் கல்வித் திட்டங்கள் பல இடங்களில் ராணுவ நடவடிக்கைகளால் கைவிடப்பட்டன; என்றாலும் நடத்தப்

பட்ட ஒருசில இடங்களில் மிகச் சிறுபான்மையினரே கலந்துகொண்டனர். எல்லாத் துறைக்கும் வேண்டிய குழுக்கள் அமைக்கப்பட்டு ஓரளவு செய்யபட்டன. ஆனால் அவற்றின் வேலைத்திட்டம் பற்றிய விபரம் ஏதும் கிடையாது; சொற்பொழிவுப் பேரவைகள் நடத்தப்பட்டன, என்றாலும் அவற்றில் ஒருசிலரே கலந்துகொண்டனர். நாடக விழாக்களில் பலர் பங்கு பெற்றனர். இவைதான் அறிக்கை முழுவதும் காணப்பட்ட விளக்கங்கள். இந்தப் புள்ளி விபரங்க ளெல்லாம் நிலையைப் புரிந்துகொள்ள ஓரளவு உதவின என்றாலும், எல்லாவற்றையும் தானே நேரில் சென்று அறிந்துகொள்ளுவதையே பியோடார் பெரிதும் விரும்பினான்.

எனவே, கமிசார்களின் கூட்டத்திற்கு பியோடார் ஏற்பாடு செய்தான். இங்கும் துவேஷத்தையே உணர்ந்தான். கட்சிக் கிளைகளின் பிரதிநிதிகளைக் கூட்டினான், இதற்கு யாருமே வரவில்லை. பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தான். இதற்கு அரசியல் பகுதி போதிய விளம்பரம் தராமையால் விரல்விட்டெண்ணக் கூடிய ஒருசிலரே கூட்டத்திற்கு வந்தனர்.

எனவே எந்த வேலையும் உருப்படியாக நடக்கவில்லை. இம்மாதிரியான போக்கு மேலும் நீடித்தல் மிகவும் அபாயமானது. எனவே, இச் சிக்கல் அனைத்தையும் நீக்கி, எல்லாவற்றையும் செம்மைப்படுத்த, பியோடாருக்குத் தோன்றிய ஒரே வழி—சப்பாயேவின் வருகைதான்! சப்பாயேவ் வந்த பின்னரே எதுவும் முன்னேறும் என்று உறுதியாக நம்பினான்.

இன்னும் ஓரிரு நாட்களில் எதிர்த்தாக்குதல் தொடங்கி விடும். ஆனால் சப்பாயேவ் இன்னும் வந்து சேரவில்லை; ஏன் வரவில்லை என்பதும் தெரியவில்லை. பியோடார் ராணுவத் தலைமை நிலையத்தில் விசாரித்தான். அங்கும் பதில் பெற முடியவில்லை. தாக்குதலைத் தொடங்குவதற்காக



ஆர்தர் துறைமுகத்திற்கும், டலோவ்காவிற்கும் ராணுவத்தின் முதல் தொகுதியினர் நாளையே புறப்பட வேண்டும். எனினும் இன்னும் சப்பாயேவ் வந்து சேரவில்லை!

ராணுவத் தளபதிகளின் காரியாலயத்தில் கடைசி முறையாக ஆலோசனை அரங்கம் கூடித் தாக்குதலுக்கு வேண்டிய திட்டங்களைப் பரிசீலித்தது. அதன்படி தாக்குதலை மூன்று முனைகளில் இருந்து தொடர வேண்டும். இந்த எதிர்த் தாக்குதலின் வெற்றி—திடீரென எதிரியை எதிர்பாராத சந்தர்ப்பத்தில் தாக்கப் போவதால் கிடைத்து விடாது. செஞ்சேனையினரின் ஊக்கத்தாலும், ராணுவ அமைப்பாலும், போதிய வலுவான ஆயுதங்களாலுமே அவ் வெற்றியை அடைய முடியும். இதையெல்லாம் ஆலோசனை அரங்கத்தில் விரிவாக ஆராய்ந்தார்கள். அதற்கு பியோடாரும் அழைக்கப்பட்டிருந்தான். அவனுக்கு ராணுவத் துறையில் போதிய அனுபவமும் பயிற்சியுமின்மையால் வாய்பேசாது பிறருடைய காரசாரமான பேச்சுக்களையும் விவாதங்களையும் கவனித்துக்கொண்டேயிருந்தான். எல்லோருடைய முகங்களையும், பேசிய சொற்களையும் உற்று நோக்கினான், எண்ணிச் சிந்தித்தான். அவன் உள்ளத்தில் பல எண்ணங்கள் சுழன்றன.

“அதோ இருக்கிறானே உப தளகர்த்தன் அவன் ஒரு நம்பிக்கைத் துரோகியாக, வஞ்சகனாக இருக்கக் கூடுமோ? அவன் பேசுகிற அனைத்தும் பொய்யாக இருக்குமோ? எல்லோரது கண்களிலும் பொடியைத் தூவுதற்காகத்தான் இப்படிக் காரசாரமாகப் பேசி உணர்ச்சியை ஊட்டுவது போல நடிக்கிறானோ? அவன் மட்டுமின்றி இங்கேயுள்ள அத்தனை பேருமே ஏமாற்றிவிட்டால்! நாளை எதிர்த் தாக்குதல் தொடங்கியவுடன் இன்று நண்பர்களாயுள்ள அனைவரும் எதிரிகளாகிவிட்டால்?”

இவ்வாறெல்லாம் பல எண்ணச் சுழற்சியில் அகப்பட்டு நீண்ட பெருமூச்சுவிட்டான் பியோடார். மீண்டும்

அந்த உப தளகர்த்தனது முகத்தை உற்றுப் பார்த்தான்.

"நிச்சயமாக அவன் துரோகியாகிவிட்டால்" என்ற சந்தேகத்துடன் பார்த்தான்.

ஆனால், அந்தத் தளகர்த்தரின் முகமும், பேச்சும் எத்தகைய சந்தேகத்திற்கும் இடம் தரவில்லை. மாறாக எல்லோரது ஆதரவையும் நம்பிக்கையையும் அவன் பெற்றுவிட்டான். அவனது முடிவுகளையும் திட்டங்களையும் முழுமனதாக ஏற்றுக்கொண்டனர்.

"கமிசார் அவர்களே! பாதுகாவலாய் இருங்கள்."

இப்படியாக ஆலோசனை அரங்கம் கூடிக் கலைந்தது. எல்லாத் தளபதிகளும், ராணுவ அலுவலர்களும் தலைமை நிலையத்தினின்று புறப்பட்டனர்.

அன்று முழுவதும் ஏராளமான ஒட்டக வண்டிகளும், ரயில்களும் டலோவ்காவிற்குப் புறப்பட்ட வண்ணமேயிருந்தன. எல்லாப் போர்வீரர்களும் செஞ்சேனையினரும் புறப்பட்டுவிட்டனர். ஆல்கை நகரமே காலியாகிக்கொண்டிருந்தது. கடைசிப் படையினர் நாளை மாலை புறப்பட்டு விடுவர். அதன் பின்னர், ஆல்கை நகரமே பொலிவிழந்து பாதுகாப்பின்றிக் கைவிடப்படும்.

# 5

# மாவீரன் சப்பாயேவ்

மறு நாள், விடியற்காலை ஐந்து மணிக்கு பியோடாரின் அறைக் கதவை யாரோ தட்டினார்கள். பியோடார் கதவைத் திறந்தான். அங்கு ஒரு புதிய ஆள் நிற்பதைக் கண்டான்.

" ஹலோ! நான்தான் சப்பாயேவ்" என்ற குரலை கேட்டதும் ஏற இறங்க அவனைப் பார்த்தான் பியோடார். அவனையறியாமலே உடலெங்கும் ஒரு வகைப் பரபரப்புத் தோன்றியது. "நான்....நா....ன் கிளிக்கோவ்" ம்....ம்....இப்பொழுதுதான் வருகிறீர்களா?"

"ஆம். இப்பொழுதுதான் ரயில் நிலையத்திலிருந்து வருகிறேன். என்னுடன் வந்தவர்கள் எல்லோரும் அங்கேயே இருக்கிறார்கள். அவர்களுக்குக் குதிரைகளை அனுப்பியிருக்கிறேன்" என்றான் அவன்.

பேராசைத் தாகம் தீராத கண்களுடன் அவனை அள்ளி விழுங்கிவிடுவதுபோலப் பார்த்துக் கொண்டிருந்தான். பியோடார்.

"பார்ப்பதற்குச் சாதாரணத் தோற்றம்; நடுத்தர உயரம்; வலுவாய்ந்த உடல்; மெல்லிய கைகள். எதையும் உணரும் எடுப்பான மூக்கு; அழகிய புருவங்கள். நெற்றியில் படர்ந்து சுருண்ட செம்பட்டை மயிர்ச் சுருள்கள். வெண்மை கலந்த நீலநிறக் கண்கள். எதையும் துருவி ஆராயும் ஆழ்ந்த நோக்கு. சுருக்கமும் பருக்களும் படராத முகம். சர்ஜண்ட் மேஜரின் தோற்றம் போல முறுக்கிவிட்ட மீசை. காக்கி நிற மேற்சட்டை. நீலநிறக் காற்சராய். குதிஉயர்ந்த பூட்ஷுக்கள். செந்நிறப் பதக்கம்

பொறித்த தொப்பி. இடுப்புடன் இணைந்த தோள்பட்டையும் அத்துடன் பொருத்தப்பட்ட கைத்துப்பாக்கியும்...', என்றெல்லாம் அன்று மாலை தன்னுடைய குறிப்பேட்டில் அவனைப்பற்றிக் குறித்துக்கொள்ளும் அளவிற்கு வைத்த கண் வாங்காது நோக்கினான் பியோடார்.

சற்று நேரம் கழிந்தது. சப்பாயேவ் நீண்ட நேரம் நடந்து வந்திருந்தான்; என்றாலும் தேத்தண்ணீர் அருந்த மறுத்துவிட்டான். நின்றவாறே பேசிக்கொண்டிருந்தான். படைத்துணைத் தளபதியை ராணுவத் தலைமைக் காரியாலயத்திற்குச் செல்லுமாறு சொல்லி வர ஆளனுப்பினான். தானும் காரியாலயத்திற்கு விரைவில் வருவதாகக் கூறச் சொன்னான். அவனோடு வந்த இளைஞர்களும் அங்கு வந்து சேர்ந்துவிட்டார்கள். அறையெல்லாம் தங்களது சாமான்களைப் பிரித்துப் போட்டார்கள். ஏக இரைச்சல் போட்ட வண்ணம் உடைகளை மாற்றிக்கொண்டார்கள். தொப்பிகள், கையுறைகள், இடுப்புப் பட்டைகள் ஆகிய அனைத்தையும் அங்கிருந்த மேசைகள், சன்னல் படிகளில் எல்லாம் எறிந்தார்கள். வெளியில் இருந்து செவிமடுத்தால் ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டுக்கொள்கிறார்களோ என்று திடுக்கிடும்வகையில் காரசாரமாகப் பல விஷயங்களை அலசினார்கள்.

இப்படி அந்தக் கட்டடம் முழுவதும் அவர்களுடைய உரையாடல்களும் விவாதங்களுமே எதிரொலித்தன. யோஷிகோவின் அறை ஒன்றைத் தவிர ஏனைய எல்லா அறைகளையும் அவர்களே ஆக்ரமித்துக்கொண்டனர்.

சுருட்டி வைக்கப்பட்டிருந்த பியோடாரின் பாய்ச் சுருளில் சாய்ந்தவண்ணம், கால்களைச் சுவர்மீது தூக்கிவைத்தபடி புகை பிடித்துக்கொண்டிருந்தான், ஒரு புது விருந்தாளி; அவன் உதிர்த்த சிகரெட் க்ரித்தூள்கள் பியோடாரின் தோற்பெட்டிமீது விழுந்துகொண்டிருந்தன. இன்னொருவன் அவனுடைய உடுப்பு மேசைமீது அப்படியே சாய்ந்தசைந்துகொண்டிருந்தான்; அந்த மேசை தரையில் உரசி அசையும்பொழுது கிரீச், கிரீச் என்று பரிதாபமாக ஓசை எழுப்பியது. மற்றொருவன் தன்னுடைய கைத்துப்பாக்கியின் பிற்பகுதியினால் சன்னல் சட்டங்களைத் தட்டிக்கொண்டிருந்தான். வேறொருவன் தன்னுடைய வியர்வை நாற்றம் பிடித்த கோட்டை மேசை மீதிருந்த ரொட்டியின் மேல் எறிந்துவிட்டுச் சென்றான். வியர்வை வாடை, சாப்பிடக்கூட முடியாதவண்ணம் ரொட்டிக்கும் ஏறிவிட்டது.



அங்கு அடைந்து கிடந்த அத்தனை பேரும் ஒரு வினாடியாவது ஓய்ந்திருக்கவில்லை; அப்படியிருக்க அவர்களால் முடியவும் இல்லை. ஸ்டெப்பிப் பிரதேசங்களைச் சேர்ந்த எல்லோருமே இயல்பாகப் பேசும் பேச்சுப் போக்குத்தானும் இது! எல்லோருடைய சத்தமும் ஒரே மாதிரிதான் ஒலித்தது. உத்தரவிடுவது எந்தக் குரல், பணிந்து கேட்பது எந்தக் குரல் என்ற வேறுபாடு அறிய முடியாது. எல்லோரும் ஒரே பாணியில் பேசினர். அவர்களுடைய பேச்சு மட்டுமல்ல, நடையுடையும், பழக்க வழக்கமும் ஆகிய எல்லாம் முரட்டுத்தனமாகத்தான் இருந்தன. ஆனால் எளிமையாகவும் இனிமையாகவும் கருத்தாழத்தோடும் பேசினார்கள். ஒரே குடும்பம்போலத் தோற்றம் தந்தாலும் ஒருவருக்கொருவர் பிடிப்பின்றியே பழகிக்கொண்டார்கள்! எனினும் கூட ஒரு சரத்தில் இணைந்த மக்களாக எல்லாத் துறையிலும் தமக்குள்ளே இசைந்து நடந்துகொண்டார்கள். அவர்களை இணைத்து வைத்த சரம் அவர்களுடைய ராணுவ வாழ்க்கைதான். துணிந்த வீரமும், தனிப்பட்ட நெஞ்சுரமும், ஆபத்தைத் துச்சமாகக் கருதும் திட வாழ்வும், துயரம் மிகுந்த போழ்தும் ஒருவருக்கொருவர் உதவிக்கொள்ளும் ஒப்பற்ற பிணைப்பும், ஆழ்ந்த ஈடுபாடும், இணக்கமும் நிறைந்த ராணுவ வாழ்க்கையே அக்கட்டுக் கோப்பைத் தந்தது. கடுமையும் கவர்ச்சியின்மையும் நிறைந்த அந்த வாழ்க்கையில், பல போராட்டங்களில் தோளோடு தோளிணைந்து போரிட்டுப்

போரிட்டுப் பெற்ற இணைந்த வாழ்க்கை அவர்களை ஓர் இயக்கத்தவ்ராக ஒன்றுபடுத்தி வைத்திருந்தது.

அவர்களிலும் மாறுபட்டுயர்ந்தவனாக விளங்கினான் சப்பாயேவ். அவன் ஓரளவு பண்பாடுள்ளவன். மற்றவர்களைப்போல அநாகரிகமாகவும் முரட்டுத்தனமாகவும் அவன் நடந்துகொள்ளவில்லை. தன்னைத் தானே அடக்கிக் கட்டுப்பாடு வழுவாமல் அவன் வாழ்வதாகவே பிறர்க்குப் புலப்பட்டது. பிறர் அவன்பால் நடந்துகொண்ட முறையும் அலாதியானது. அவ்விளைஞர்கள் தங்களுக்குள்ளே பழகிக்கொள்ளும்பொழுது கட்டுப்பாடின்றியும் மனம்போன போக்கிலும் நடந்துகொள்வார்கள். தங்களுக்கு என்னென்ன உதயமாயிற்றோ அவற்றையெல்லாம் உரக்க உளறிக் கொட்டுவார்கள், சரசமாடி விளையாடுவார்கள், ஒருவன் தன் தொப்பியால் மற்றொருவனைத் தட்டுவான், அவன் மரக்கரண்டியாலோ, பூட்ஷாலோ திரும்ப மரியாதை செய்வான். இல்லையென்றால் வெந்நீரை வாரியிறைப்பான். இவ்வளவு திருக்கூத்துகளும் ஓய்வு ஒழிவின்றி நடந்துகொண்டே இருக்கும். ஆனால் சப்பாயேவ் தோன்றிய அதே கணத்தில் எல்லாம் அடங்கிவிடும். அவன் இந்த உரிமைகளை யெல்லாம் மறுப்பவனுமில்லை, பறிப்பவனும் இல்லை. பயத்தினாலோ அன்றி உயர்வு தாழ்வு என்ற பேத உணர்ச்சியினாலோ அவர்களும் அடங்குவதில்லை. அவர்களை யறியாத ஒருவகை மரியாதைப் பண்பால் உந்தப்பட்டுப் பேசாதிருப்பார்கள். "சப்பாயேவ் நம்மிலே ஒருவனாயிருந்தாலும், அவன் தன்னளவில் ஒப்பாரும் மிக்காருமில்லாத ஒருதனி ஒருவன், பிறரோடு சமமாகக் கருத முடியாது உயர்ந்தவன்" என்ற எண்ணமே அந்த மரியாதை உணர்ச்சியைத் தந்தது!

இந்த மரியாதை உணர்ச்சி மாறாமல் வளர்ந்து வந்தது. சப்பாயேவ் அலுவலகபூர்வமாக இன்றி உரையாடும் பொழுது முன்பு போல் எல்லாவிதச் சேஷ்டைகளிலும் ஈடுபட்டு அவனையும் மட்டம் தட்டத் தயங்க மாட்டார்கள்.



ஆனால் அதிகாரபூர்வமாக ஆணையிடும் நேரத்திலும், பிற விவகாரங்களில் ஈடுபட்டுள்ளபோழ்தும் எல்லாவற்றையும் ஒடுக்கிக்கொள்ளுவார்கள். பய பக்தியுடன் பழகுவார்கள். அன்பையும் மரியாதையையும் அடக்கிப் புலப்படுத்துவார்கள். சப்பாயேவ் வந்து நின்றதும் மீண்டும் அந்த மரியாதையுணர்ச்சி இயல்பாகவே எழுந்தது; அமைதி பரவியது.

"பெட்கா! உடனே புறப்பட்டுத் தளபதியின் காரியாலயத்திற்குப் போக வேண்டும்" என்று உத்தரவிட்டான் சப்பாயேவ்.

பெட்கா துடிப்புள்ள இளைஞன். விசேடச் செய்திகளையும் தாக்கீதுகளையும் கொண்டு செல்லும் தூதுவன். சப்பாயேவின் உத்தரவைக் கேட்டதும் ஒரு நொடியில் வந்து சப்பாயேவின் எதிரில் நின்றான்.

"நான் இன்னும் இரண்டு மணி நேரத்தில் புறப்படவிருக்கிறேன். அதற்கெனக் குதிரைகளைத் தயார் செய்யவும், முன்னதாகவே குதிரை வீரர்களை அனுப்பும்படியும், பொடாபோவும் நானும் சறுக்கு வண்டியில் செல்வோம் என்றும் சென்று தெரிவி!" என்றான் சப்பாயேவ்.

பின் வேறு பக்கம் திரும்பி, "பொடாபோவ்! என்னுடன் வருகிறாயா?" என்று பக்கத்தில் நின்றவனைக் கேட்டான்.

அவனுக்கு முப்பத்தைந்து வயதிருக்கும். இனிமையும் மகிழ்ச்சியும் அவனது முகத்தில் ததும்பின, ஆனால் குரல் ஒலி மட்டும் கரடு முரடாக, அண்டங் காக்கையின் கரைச்சல் போல இருந்தது. கட்டுமாறாத உடலுறுதியும் திறமும் நிறைந்தவன் என்றாலும் மென்மை நடையும், பண்பும் கொண்டவன்.

பொடாபோவ் எதைப் பற்றியோ வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்தான். மகிழ்ச்சி ததும்ப எதையோ சொல்ல வாயெடுத்தபொழுது சப்பாயேவின் குரலைக் கேட்டதும் நிறுத்திக்கொண்டான். காற்றில் அலைபட்ட கை

விளக்குபோல் அவன் முகத்தில் வீசிய சிரிப்பொலி மறைந்தது. தன் பெயரை சப்பாயேவ் உச்சரித்ததும் அவனையே கவனிக்கத் தொடங்கினான் பொடாபோவ். "நான் தெரிந்து கொண்டேன்" என்றான் துடிப்புடன்.

சப்பாயேவ் தன் உத்தரவுகளை உரத்த குரலில் முழக்கிக்கொண் டிருந்தான் :

"பொடாபோவைத் தவிர வேறு யாரும்வரவேண்டாம். இங்குள்ள கமிசார்கள் உடனே சென்று மூன்று குதிரை வீரர்களை அனுப்ப வேண்டும். எஞ்சியவர்கள் எங்களைப் பின்பற்றி டலோவ்கா வரவேண்டும். குதிரைகளை வீணில் அவசரமாக விரட்டி யோட்டி வர வேண்டாம். இன்று மாலைக்குள் அங்கே வந்துவிட்டால் போதுமானது."

"கவனியுங்கள்......" என்று மீண்டும் சொல்லியபடி அறை முழுவதையும் துருவிக் கண்ணோட்டம்விட்டு யாரையோ தேடினான் சப்பாயேவ். "ஓ...ஆமாம்....நான் தான் அவனை முன் கூட்டியே அனுப்பிவிட்டேனே! சரி. இந்தா...கோச்னெவ்! நீ உடனே தலைமை அலுவலகத்திற்குச் செல். அங்கு யாராவது இருந்தால் அதை அறிந்து வந்து என்னிடம் தெரிவி."

கோச்னெவ் அவ்விடத்தினின்று அகன்றான். பியோடாரின் கண்களுக்குக் கோச்னெவ் ஒரு பயில்வான் போலத் தோன்றினான். துரித நடையும், உற்சாக உணர்ச்சியும் கொண்டு இயந்திரம்போல இயங்கினான். முப்பது வயதைக் கூடத் தாண்டியிருக்காத அவனுடைய நெற்றியில் சுருக்கங்கள் மிகுந்திருந்தன. பற்கள் மட்டும் நீண்டு ஓநாயின் கூரிய பற்கள்போலக் காட்சி தந்தன. அவன் சிரிக்கும் பொழுது எதையோ பற்றிக் கடித்துச் சிதைக்கப் புறப்படப் போவது போன்ற பயங்கரத் தோற்றமே புலப்படும்.

அங்கு மற்றொருவனும் இருந்தான். அவன் பெயர் செகோவ். சிவந்த விழிகளும், அடர்ந்த மீசையும், முதலை போன்ற வாயும், மங்கோலியத் தாடையமைப்பும் கொண்



டவன் செகோவ். இரத்தம் குடித்துத் தொங்கும் அட்டை போல அவனுடைய கீழுதடு தொங்கிற்று. தடித்துப் பருத்த மூக்கும் அகன்ற தாடையும் ஒரு வகை அச்சத் தோற்றத்தைத் தந்தன. விழிகள் எரிகின்ற கொள்ளிகள் போலச் சொலித்தன. அகன்ற மார்பு நிமிர்ந்து நின்றது. கைகள் மண்வெட்டிபோலப் பரந்திருந்தன. எனினும் அவன் நாற்பது வயதுகளைக் கடந்தவன்!

இன்னொருவன் இல்யா ட்யோட்கின். ஆவி பறக்கும் தேக் கோப்பையும், ரொட்டித் துண்டுகளும் ஏந்திப் பரிமாறிய வண்ணம் நகைச் சுவைகளை உதிர்த்துக்கொண்டிருந்தான். எல்லோரையும் கிண்டல் செய்து மட்டம் தட்டிக் கொண்டிருந்தான். வர்ணப் பூச்சு வேலைக்காரனாக வாழ்வைத் துவங்கிச் செஞ்சேனை வீரனாக மாறிவிட்டான். நல்லியல்பும், நகைச்சுவைப் பாங்கும், பாடறிந்து ஒழுகும் பண்பும், இசை நலமும் ஒருசேர அமைந்த இனியன் இல்யா ட்யோட்கின். அவன் பெட்காவைவிட வயதில் இளையன். ஏறத்தாழ இருபத்தெட்டு வயதிருக்கும்.

அவனுக்குப் பக்கத்தில் நின்றவன் விக்கோர். துணிவு நிறைந்த குதிரை வீரன், குதிரைச் சாரணப் படையின் தலைசிறந்த தளகர்த்தன். ட்யோட்கின் பரிமாறி வந்த ரொட்டித் துண்டுகளைப் பெறுவதற்காகப் பொறுமையுடன் காத்திருந்தான். தன்னுடைய இடது கைச் சுண்டு விரலை இழந்துவிட்டான். இது கேளிக்கைக்கு இடமாயிருந்தது.

"விக்கோர்! ஓய் நாலுவிரல் கிழட்டுக் கழுதையை உன் சுண்டு விரலாலே ஒரு அமுக்கு அமுக்கப்பா."

"ஏய்! உன் நொண்டிச் சுண்டு விரலை மட்டும் தூக்கிக் காட்டு சொல்கிறேன்; ஒரே மடக்குத்தான் ஆமா!"

"ஏய் ஒன்பது விரல் சிப்பாயி! மரமண்டைக் கருமுண்டம் ஏய்! ஒன்பது கால் கிழட்டு நாய்."

இவ்வளவெல்லாம் கிண்டல்பண்ணியும் விக்கோர் அசையவில்லை. அவனுக்கு இதனால் எல்லாம் சூடு பிடித்து

விடவில்லை. அவன் இயல்பே அப்படித்தான். போர்க்களத்தில்கூட அப்படித்தான் பழகுவான். யார் என்ன பேசினாலும் எதுவும் பதில் சொல்லாது, காரியத்திலே கண்ணாயிருந்து எடுத்ததை முடிப்பதில் இணையற்றவன். எனவே இதற்கும் பேசாமலே இருந்துவிட்டான்!

எல்லோரிலும் மிக வயதானவன் ஸ்மாரின். ஐம்பது வயதை என்றோ தாண்டியவன். ஒரே இரைச்சலும் எக்காளமும் அவனிடமிருந்தே கிளம்பிக்கொண் டிருந்தன. கண்ணுராவியாகத் தைத்த கம்பளிச் சட்டையைப் போட்டிருந்தான். எப்பொழுதும் சளிபிடித்தவன் போல் இருமிக்கொண்டே யிருப்பான். இவனுடைய சத்தமும் பொடாபோவின் குரலொலிபோலக் கர்ண கடூரமாகவே இருக்கும்.

வண்டிக்கார அவெர்கா நல்லதொரு இளைஞன். சாட்டைக் கம்பின்மீது சாய்ந்தவண்ணம் எல்லாவற்றிலும் உல்லாசமாகக் கலந்துகொண்டான். தேத் தண்ணீர், பலகாரங்கள் ஆகிய அனைத்தையும் ருசி பார்த்தபடியே இருந்தான். வெளிறிய செந்நிறம் அமைந்த முகமும், வெங்காயம் போன்ற மூக்கும் அவனுக்கே யுரியவையாய் அமைந்திருந்தன. பனிப் படலங்களைத் தாங்காது அவனுடைய கண்கள் சிறுத்திருந்தன, உதடுகள் வெடித்துக் கருகியிருந்தன. கழுத்தைச் சுற்றி ஒரு பட்டைத் துண்டு கட்டியிருந்தான். தூங்கும்பொழுதுகூட அந்தத் துண்டு கழுத்தை விட்டு நீங்காது!

எஞ்சிய ஏவலாளர்களுள் அலெக்ஸேயும் ஒருவன். எல்லோருக்கும் இணங்கி நடப்பவன் இவன். சப்பாயேவின் நீண்ட நாள் நண்பன். திறமையும் தகுதியும், செயல்வன்மையும், வலிவும் கொண்டவன். எது வேண்டுமென்றாலும் அலெக்ஸேயை அனுப்பினால் போதும். கிடைக்காத பொருளையும் வேட்டையாடிக் கொணர்ந்துவிடுவான். உணவுப் பொருளிலிருந்து மருந்துவரை எது தேவையென்றாலும் அவனைதான் அனுப்புவார்கள். நொடிப் பொழுதில் தருவிக் கொண்டுவந்துவிடுவான்!



இத்தனை பேரும் கொண்ட சிறு கூட்டம்தான் அது! ஒவ்வொருவரும் அலாதிப் பிறவிகள். இவர்களைக்கொண்டே ஸ்டெப்பிப் பிராந்தியத்தைப்பற்றி ஒரு பெருங் காவியமே எழுதிவிடலாம். எல்லாவற்றிலும் இணங்கிய இருவரைப் பார்க்கவே முடியாது; ஒரே மாதிரியான இரு கற்களைப் பார்க்க முடியுமா? ஆனால் எல்லோரும் இணைந்திருந்த பொழுது ஒரே கூட்டத்தவராக, அலகையும் அஞ்சும் கூட்டத்தவராக, இருந்தார்கள். ஆம்! அவர்கள் ஒரே குடும்பத்தவர்! வேடிக்கையான குடும்பத்தவர்.

இதற்குள் கோச்னெவ் திரும்பி உள்ளே வந்தான்:

"தலைமை அலுவலகத்தில் துணைப்படைத் தளபதி இருக்கிறார்—நீங்கள் இப்பொழுதே செல்லலாம்."

அறையில் நிசப்தம் நிலவியது. எல்லோருடைய கண்களும் சப்பாயேவையே உற்று நோக்கின.

"சரி. நாம் போவோம்" என்றான் சப்பாயேவ்.

பொடாபோவிடம் சொன்னான். ஸ்மாரினையும் விக்கோரையும் கைகாட்டிக் குறிப்பிட்டான். அவர்கள் புறப்பட்டு வெளியில் சென்றார்கள். அப்பொழுது இருப்பாணிகள் நிறைந்த பூட்ஸுகளின் சத்தம் அறையெங்கும் பரவியது. பியோடாரும் அவர்களுடன் சென்றான். தன்னைச் சப்பாயேவ் ஓரளவே கருதுவதாகவும், அவனுடைய கூட்டத்தவருடனே தன்னையும் ஒருசேர மதித்துவிடுவதாகவும் பியோடார் புழுங்கினான். இம்மாதிரி வீண் சந்தேகங்களாலேயே குழம்புவது பியோடாருக்குள்ள பிறவிப் பழக்கம். அத்துடன் சப்பாயேவைப் பற்றிய ஒருவகைப் பயமும், திகிலும் அவன் நெஞ்சத்தின் மூலையில் பதுங்கியபடியே அடிக்கடி தலைதூக்கிச் செயலைத் தடுக்கி வந்தன. சப்பாயேவைப் பற்றி அவன் கேள்வியுற்ற ஒரு நிகழ்ச்சி அடிக்கடி அவன் நினைவிற்கு வந்தது. இது நடந்தது 1918—ல். அச்சமயம்

நடந்த போராட்டத்தில் சப்பாயேவும், அவனைச் சார்ந்தாரும் எதிரிகளால் சூழப்பட்டனர். அப்பொழுது உடனிருந்த கமிசார் ஒருவன் தொடை நடுங்கிப் பயந்துவிட்டான். இதைப் பொறுக்காத சப்பாயேவ் கைச் சாட்டையினால் அவனை வெளுத்துவிட்டான். பயத்தையே உரிந்துவிட்டான். இந்த நிகழ்ச்சியை மீண்டும் நினைத்துக்கொண்டான் பியோடார்; அந்த நினைப்பு அவன் நெஞ்சத்தைத் தாக்கிச் செயலை முடக்கிச் சிந்தனையைக் குழப்பிற்று. இச் சம்பவம் கட்டுக் கதையாகக்கூட இருக்கலாம், அல்லது மிகைப்படக் கூறப்பட்டதாகக்கூட இருக்கலாம் என்பதைப் பியோடார் உணர்ந்தவன்தான். என்றாலும் சம்பவத்தின் போக்கும், சப்பாயேவின் தோற்றமும், நினைப்பை உறுதிப்படுத்திவிட்டன. மேலும் 1918—ம் ஆண்டிலேயே சப்பாயேவ் அவ்வளவு கெடுபிடியுடன் நடந்திருந்தால் இப்பொழுது கேட்கவே வேண்டாம். இப்பொழுது காலமும் மாறிவிட்டது, சப்பாயேவும் மாறிவிட்டான். இன்றுள்ள சூழ்நிலையில் சவுக்கடிபட்ட கமிசாரின் கதி யாருக்கும் ஏற்படக் கூடும். இதை யெல்லாம் எண்ணியவண்ணம் பின்புறமாகவே மறைந்து சென்றான் பியோடார். அவ்விதம் அவன் சென்றது என்னவோ மாதிரியாகத்தான் இருந்தது.

துணைப்படைத் தளகர்த்தனிடம் சென்றான் சப்பாயேவ். சுருக்கமாகவும் அவசரத் தொனியுடனும் வாழ்த்துரைத்தான். தளகர்த்தன் சப்பாயேவின் எதிரில் மிடுக்குடன் வந்து நின்று, இரு முறை குனிந்து வணங்கி வாழ்த்தியவுடன் மளமள வென்று பேசத் துவங்கினான். அவன் சப்பாயேவைப்பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறான். ஆனால் அவன் கேள்விப்பட்டதெல்லாம் சப்பாயேவின் தீக்குணங்களைப் பற்றித்தான். வெறியன், முரடன், நெறி நெகிழ்ந்த கிறுக்கன் என்பது போன்ற பட்டங்களையே அவன் அறிந்திருந்தான். சப்பாயேவின் வீர தீரத்தைப்



பற்றி ஸ்டெப்பிப் பிராந்தியத்தில் வழங்கிய கதைகளையெல்லாம் அவன் நம்புமாறில்லை. அப்படிச் சப்பாயேவ் என்னதான் செய்துவிட்டான் என்ற கேள்வியே அவனைக் குழப்பிக்கொண் டிருந்தது.

எதிர்பாராத விருந்தினர் ஒருவர் வீட்டிற்குத் திடீரென்று வந்துவிட்டால் வீட்டில் உள்ள எல்லோரும் ஓடி வந்து தலை நீட்டிப் பார்ப்பது போல அலுவலகத்தின் எல்லாக் கதவுகள் வழியாகவும் எல்லோரும் எட்டிப் பார்த்தனர். இதிலிருந்து துணைப்படைத் தளகர்த்தனைப் போல எல்லோருமே சப்பாயேவைப் பற்றி ஒரு மாதிரியாகக் கேள்விப்பட்டவர்கள் போலவே தோன்றியது. அதனால்தான் அவ்வளவு முனைப்பும் வியப்பும் உந்த எட்டிப் பார்க்கத் துவங்கினர். அன்று தலைமை அலுவலகம் வழக்கத்துக்கு மாறாக ஒரே சுத்தமாய் இருந்தது. ஒவ்வொருவரும் தத்தம் இடத்தில் நின்றுகொண்டோ அமர்ந்துகொண்டோ அலுவலில் கண்ணோட்டம் செலுத்தினர். துவங்கப் போகும் போராட்டத்தை வெற்றியுடன் நடத்துவதற்கான திட்டங்களில் எல்லோரும் மூழ்கிக் கிடந்தனர். என்றாலும் போட்டிருந்த திட்டங்களை எந்த அளவிற்குச் சப்பாயேவ் ஏற்றுக் கொள்ளுவான் என்று திகில் வேறு அவர்களைப் பற்றிக் கொண்டது. சப்பாயேவும் பிறரும் உள்ளே வந்ததும், துணைப்படைத் தளகர்த்தர் தாம் முடித்திருந்த திட்டத்தை மேசைமீது பரப்பினர்; எங்கெந்த முனைகளில் போராட்டத்தைத் துவக்க வேண்டுமெனக் குறித்திருந்த விபரங்களை விளக்கினர். சப்பாயேவ் அந்தக் காகிதச் சுருளைக் கையிலெடுத்து உற்று நோக்கினான்; வரைப்படம் வரைந்திருந்த அழகை வியந்தவண்ணம், அதைச் சுருட்டி மேசையின் மீது வைத்தான். பக்கத்தில் கிடந்த முக்காலி யொன்றை இழுத்துப் போட்டுக்கொண்டு அமர்ந்தான். அவனோடு வந்த சிலரும் பக்கத்தில் அமர்ந்தனர்.

"காம்பசுகள் இருக்கின்றனவா?"

அழுக்கேறித் துருப்பிடித்துக் கிடந்த பழைய காம்பசு ஒன்றைக் கொடுத்தனர். அதன் இரு முனைகளையும் இழுத்துப்பார்த்தான். சரியாக வரவில்லை.

உடனே "விக்கோர்! அவெர்காவிடம் சென்று என்னுடைய பையிலிருந்து காம்பசை எடுத்துத் தரச் சொல்லி வாங்கி வா" என்று அனுப்பினான் சப்பாயேவ்.

சில வினாடிகளில் காம்பசுடன் திரும்பி வந்தான் விக்கோர். மீண்டும் வரைப் படத்தைப் பிரித்தான். காம்பசால் அளந்து பார்த்து தாக்குதல் முகாம் நோக்கிப் படைகள் செல்ல வேண்டிய பாதைகளைக் குறிப்பிட்டான். முதலில் மேசை மீதிருந்த படத்தைக் கொண்டு மட்டும் கணக்கிட்டுக்கொண் டிருந்தான். பின்னர் தன்னுடைய பையிலிருந்து ஒரு தேசப்படத்தை எடுத்தான். அதையும் காம்பசால் அளந்தான், ஓரிடத்திற்கும் மற்றொரு குறிப்பிட்ட இடத்திற்கும் உள்ள தூரத்தைக் கேட்டறிந்துகொண்டான். செல்லும் பாதையின் தன்மை, இதர போக்குவரத்து வசதிகள், தண்ணீர் வசதி, சாமான் ரயில்கள் தங்கும் ஸ்டேஷன்கள், காலநிலை, பருவச் சூழல், பனிப்படலங்களின் தன்மை ஆகிய அனைத்தையும் தீர விசாரித்து அறிந்துகொண்டான்.

சுற்றியிருந்த எல்லோரும் பேசாதிருந்தனர். துணைப் படைத் தளகர்த்தர் மட்டும் சப்பாயேவ் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் ஓரிரு சொற்களில் பதில் தந்துகொண் டிருந்தார். தேசப்படத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே சப்பாயேவின் மனக் கண்ணில் முன்னேறிச் செல்லும் துருப்புகளின் வெற்றிப் பாதை உருவாகியது. பனி படர்ந்த பள்ளத்தாக்குகள், நெருப்புக்கு இரையாகி உருக்குலைந்த கிராமங்கள், படைவீரர்களின் தயங்காத அணிவகுப்பு, சாமான் வண்டிகள் ஊர்ந்து செல்லும் கோலம்—இவையெல்லாம் நினைவுத்திரையில் தோன்றின. குளிர்நிறைந்தகாலைக் காற்றில் வீசும் ஊதற் காற்றும்



பனிப்புயலும் சீறிப் பாய்வது காதில் ஒலித்தது; வெள்ளை வெளேரென்ற பாறை முகடுகளும், உறைந்துபோன ஆற்றுப் படுகையும், அதில் நெளிந்தோடும் நீலநிற நீர்ப்பெருக்கும், தாக்குதலால் தகர்ந்துபோன பாலங்களும், கருகிப்போன புதர்களும் கண்ணில் புலப்பட்டன.

சப்பாயேவ் போராட்டத்தையே துவக்கிவிட்டதுபோல உணர்ந்தான்.

வரைப்படத்தை அளந்து பார்த்த பின்னர் துணைப் படைத் தளகர்த்தனிடம், அந்தத் திட்டத்தில் காணப்பட்ட குறைகளை விவரித்தான்; இன்னின்ன இடங்களில் படையினர் நீண்ட தூரம் நடக்கவேண்டியிருக்குமென்றும், தங்குதற்கெனக் குறிக்கப்பட்ட இடங்கள் தகுதியற்றவையென்றும், சில இடங்களில் நீண்ட நாள் பாடிவீடு அமைக்காது விரைவில் புறப்பட வகைசெய்ய வேண்டுமென்றும் விளக்கினான். தன்னுடைய கருத்துகளுக்கும் திட்டங்களுக்கும் சரியான சான்றுகள் தந்து, அவற்றின் அடிப்படையிலே ஆணித்தரமாகப் பேசினான் சப்பாயேவ். அவன் சொன்ன அத்தனை கருத்துக்களையும் தளகர்த்தர் ஏற்றதுபோலத் தோன்றவில்லை. சில சமயங்களில் மெதுவாகச் சிரித்தபடியே கேட்டுக்கொண் டிருந்தார். என்றாலும் பல விஷயங்களில் அவர் இசைய வேண்டி ஏற்பட்டது; பல குறிப்புகளை ஏற்றுக்கொண்டார், திட்டத்தை மாற்றிக்கொண்டார். சில பொதுப் பிரச்னைகளைப்பற்றி விவாதித்தபொழுது இடையிடையே விக்கோரையோ, பொடாபோவையோ, ஸ்மாரினையோ திரும்பிப் பார்த்து அவர்களுடைய கருத்துக்களையும் வினயமாகக் கேட்டுக்கொண்டான் சப்பாயேவ்.

"சரி. இதைப்பற்றி நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? நான் சொல்வது சரிதானா அன்றித் தவறா? என்ன பேசாதிருக்கிறீர்கள்? சொல்லுங்கள்" என்று கேட்ட சப்பாயேவிற்குத் தக்கபடி

உதவும் வகையில் சூழ்ந்து அமர்ந்திருந்த யாரும் பதில் சொல்ல முடியவில்லை.

சப்பாயேவின் முன்னர் துணிவுடன் ராணுவச் செய்திகளை விவாதிக்கும் ஆற்றல் யாருக்கும் வரவில்லை; சப்பாயேவைப் போன்று தீர்க்கமாகவும் தெளிவாகவும் தம் கருத்துக்களைக் கூறும் திராணியும் எவர்க்கும் இல்லை. எனவே "ஒருவரைவிடப் பலர் கூடி யோசிப்பது நல்லது" என்ற பழமொழியைக் கூடச் சம்பாயேவிற்காக மாற்றிக்கொண்டு பேசாதிருந்தனர். "சப்பாயேவை நமது உருப்படாத விவாதங்களால் குழப்பிவிட வேண்டாம். அவனைப் பொறுத்தவரையில் "இரு தலைகளைவிட அவனுடைய ஒரு தலையே சிறந்தது" என்பதுதான் தங்கள் கருத்தும் என்று பேசாதடங்கினர்.

சில சமயங்களில் சப்பாயேவ் பிறருடைய ஆலோசனைகளைக் கேட்டுக்கொண்டதும் உண்டு. ஆனால் பின்னர் அதற்காக வருந்தித் தன்னையே நொந்துகொண்டு அவன் துடித்ததையும் கண்டிருக்கிறார்கள். ஒரு முறை அவர்கள் அனைவரும் ஒருங்குகூடிச் சப்பாயேவிற்குத் தெரிவித்த ஒரு 'விபரீத யோசனை'யைப்பற்றி நினைத்துக்கொண்டார்கள். அவர்களது கருத்துக்களைப் பொறுமையோடு, ஆழ்ந்து கேட்டுக்கொண்டான் அவன்;

"சரி....ரொம்பவும் சரி, நன்று...ம்....ம்...அப்படியா... அது ரொம்ப நல்லது" என்பன போன்ற பாராட்டுரைகளுடன் அவர்களது ஆலோசனையைக் கொடுத்த அனைவரும் தங்கள் கருத்துகளுக்கெல்லாம் சப்பாயேவ் முழுமனதுடன் இசைந்துவிட்டதாகவே பெருமிதங்கொண்டனர்.

அவர்களுடைய ஆலோசனைப் பட்டியல் முடிந்ததும் சப்பாயேவ் தொடங்கினான் :

"நன்று, நாம் அனைவரும் இப்பொழுது உடனடியாகச் செய்ய வேண்டியது இதுதான். நீங்கள் இதுவரை கூறிய ஆலோசனைகள்மீது காறித் துப்புங்கள். உடனே அவற்றை



மறந்தும்விடுங்கள். ஒரு பகுதியாவது அதில் உருப்படியானதில்லை. எனவே எல்லோரும் என்னுடைய உத்தரவுகளைக் கேளுங்கள்" என்று சொன்னான்.

முற்றிலும் புதுமையான, தன்னுடைய முடிவுகளையும் திட்டங்களையும் வியத்தகும் வண்ணம் வெளியிட்டான். அவர்கள் அத்தனை பேருக்கும் புலப்படாத பல உண்மைகளை வெகு லகுவில் விவரித்தான்.

இந்த மூவரும் அன்றும் சப்பாயேவுடன் இருந்தவர்கள்தான். எனவே அன்றுபோல் உருப்படாத யோசனைகளைச் சொல்லுவதைவிட ஒன்றும் பேசாமல் இருப்பதே நல்லதெனப் பேசாதிருந்தனர். சில சமயங்களில் ஒரு நல்ல யோசனை தோன்றுவதுபோல உணர்ந்து அதைச் சொல்ல வாயெடுப்பார்கள். ஆனால், தங்களுடைய ஒரு சொல் பல சமயங்களில் விபரீதமான குழப்பங்களை விளைவித்துவிடும் என்று அடங்கிவிடுவர்.

எனவே அம் மூவரும் மௌனமாயிருந்தனர். பியோடாரும் வாய்மூடி மௌனியானான். அவனுக்கு இன்னும் ராணுவச் சமாசாரங்களில் போதிய அனுபவமும், பயிற்சித் திறமும் ஏற்படவில்லை. சில விஷயங்களைப் புரிந்துகொள்ள மிகவும் தொல்லைப்பட்டான். போர்முனைக்குச் சென்று பல மாதங்கள் பெற்ற அனுபவத்தின் பின்னர்தான் ஓரளவு எதையும் நுணுகி ஆய்ந்து விவாதிக்கும் அறிவைப் பெற்றான். அப்படியிருக்க முக்கியமான கேந்திரத் தாக்குதலைப் பற்றிய திட்டத்தில் புதிதாகச் சொல்ல அவனுக்கு இப்பொழுது என்ன யோசனை உதயமாகிவிடப் போகிறது? எனவேதான் பேசாதிருந்தான். ஒன்றும் தெரியாத தன்னையும் ஆலோசனை கேட்டதுதான் அவனுக்குப் புரியவில்லை!

புறங்கைகளை மடக்கியவண்ணம், மேசைக்கு எதிராக நின்றுகொண்டு தேசப்படத்தையும் திட்டப் படத்தையும் மாறி மாறிப் பார்த்தான். நீண்ட பெருமூச்சுகளை அடிக்கடி

வெளிவிட்டான்; விஷயமறிந்தவன் போல புருவங்களை நிமிர்த்திப் பார்த்தான்; விவாதப் போக்கைக் குலைத்து விடக்கூடாது என்ற அச்சத்துடன் பின்புறம் திரும்பி இருமிக்கொண்டான். அவனுடைய பாவனையிலும் போக்கிலும் அமைதியும் கம்பீரமும் அரும்பிக் கிடந்தன. வெளியிலிருந்து கவனிப்பார்க்கு அவனும் உரையாடல்களில் முழு அக்கறையுடன் கலந்துகொள்ளுவதாகவே புலப்படும். அப்படியிருந்தது அவனுடைய தோற்றம். சப்பாயேவைச் சந்திக்கும் முன்னரே அவனுடன் பழகும்பொழுது கடைப்பிடிக்க வேண்டிய சில முறைகளைத் தனக்கென வகுத்துக் கொண்டான் பியோடார். விழிப்போடும் எச்சரிக்கையோடும் எல்லா வகையிலும் உறவுகொள்ளத் தீர்மானித்திருந்தான். அதிலும் ராணுவ சம்பந்தமாகத் தனக்கொன்றும் தெரியாதென்பதை வெளியிடாதிருக்க எதுவுமே விவாதிக்கக்கூடாதென்று முடிவு கட்டியிருந்தான். அப்பொழுது தானே அவனுடைய அறியாமை வெளிப்படாதிருக்கும்! அதற்குப் பதிலாக முழுக்க முழுக்க அரசியல் இயக்கச் செய்திகளையே பேசுவதென்று துணிந்தான். அந்தத் துறையில் பியோடார் மிக உயர்ந்தவன், எல்லாம் தெரிந்தவன். சப்பாயேவை இதில் கட்டாயம் மிஞ்சிவிடுவான். அவனுக்கு வேண்டிய எல்லா அம்சங்களைப் பற்றியும் தீர்க்கமாகத் தனது கருத்துக்களைத் தெரிவிக்க அவனால் முடியும். தனிப்பட்ட பிரச்னைகள், தனிப்பட்ட இலட்சியங்கள், இலட்சனங்கள், பண்புகள் முதலியவற்றை நன்கு விளக்க முடியும். விஞ்ஞானம், கல்விநலம், பிற துறை வளர்ச்சி ஆகியவைபற்றி மணிக்கணக்கில் பேசமுடியும். இவ்விஷயங்களில் பேசுவதைவிடச் சப்பாயேவ் மிகுதியாகக் கவனிக்கத்தான் வேண்டியிருக்கும். அப்பொழுது பியோடார்தான் சிறந்த தலைவனாக விளங்குவான். அவன் அத்தகைய தலைவனாக விரைவில் மாற முயல வேண்டும். அதுதான் வேண்டும். இன்றேல் எல்லாச் சிறப்பும் சப்பாயேவையே தேடிச்



சென்றுவிடும். கேள்வி கேட்பாரற்ற தலைவனாக அவன் உயர்ந்துவிடுவான்; எல்லாச் செஞ்சேனை வீரர்களும் அவனைச் சுற்றியே திரிவார்கள். பின்னர், அரசியல் இயக்கமோ, அறிவுத் துறையோ, தனி மனிதப்பண்போ தோன்றாது, வளராது, நிலைக்காது! எல்லாம் பயனின்றிப் பாழாகும். எனவே அரசியல் இயக்கத் தலைமை ஸ்தானத்திற்கு, பியோடாரும் விரைவில் உயர வேண்டும். அதற்கு வேண்டிய அடிப்படை வேலையை அவன் முனைந்து தொடங்கி உயர வேண்டும். அப்பொழுது சாப்பாயேவ் தன்னிடம் அண்டிப் பல ஆலோசனைகள் கேட்க நேரிடும். பிறகு இருவரும் ஒரே நிலைபெற்ற நண்பர்களாகப் பழக முடியும். ஆனால் அதற்கு முன்பு, தற்சமயம் சப்பாயேவின் கருத்துகளுக்கு இணங்கி விழிப்புடன் பழக வேண்டும் பியோடார். [தன்னுடைய புகழும் பெருமையும் எங்கும் எதிரொலிப்பதைச் சப்பாயேவும் அறிவான். யாரும் அவனோடு தொடர்பு கொள்ளப் பெரிதும் விரும்பி முந்துறுவார்கள் என்பதும் அவனுக்குத் தெரியும்.] சப்பாயேவ் அறிவுத் துறையில் ஈர்க்கப்பட வேண்டும்; பியோடாரின் சொற்களைச் செவிமடுத்துக் கேட்கும் நிலைக்குச் சப்பாயேவ் வரவேண்டும். அப்பொழுதுதான் பியோடாரால் ஓரளவு அவனுடன் நெருங்கிப் பழக முடியும். எனவே காலம் தாழ்த்தாது விரைவில் தன் திட்டத்துடன் பியோடாரும் முனைய வேண்டும். எளிமை யுணர்வோடும், திறந்த மனத்தோடும், வெளிப்படையாகவும், ஓரளவு முரட்டுத்தனமாகவும் சப்பாயேவுடன் அவன் பழகத் தொடங்க வேண்டும். பியோடார் குலைநடுக்கம் கொண்டவன், போர்முனையில் எதையும் சந்தேகத்துடன் பார்த்துப் புரியாத குழப்பமும், திகிலும், வெறுப்பும், வேதனையும் எளிதில் அடைபவன் என்பது போன்ற குறைகளை யெல்லாம் சப்பாயேவ் எண்ணிப் பார்க்கும் முன்னர் பியோடார் அவனுடன் நெருங்கித் தொடர்புகொள்ள முற்பட வேண்டும்.

இவ்வளவு முன்னெச்சரிக்கையோடு, தானே வகுத்துக்கொண்ட திட்டங்களின் அடிப்படையில் செயலாற்றி வந்தான் பியோடார். இவனுடைய முன்னெச்சரிக்கை நிறைந்த திட்டம், எளிமையும், துரிதமும் கொண்டது. எனவே சூழ்நிலைக்கேற்பத் தன் திட்டத்தையும் மாற்றி முற்றிலும் நெருங்கிய தொடர்புகொண்டவன் போல வாழத் தொடங்கினான். 'இனி என்ன நேர இருக்கிறது' என்பதை அறுதியிட்டு உணர அவனால் முடியவில்லைதான்; என்றாலும் சப்பாயேவும், அவனோடு இருக்கும் அவனுடைய கூட்டமும்—காட்டுமிராண்டித்தனமும் வெறிப்போக்கும் கொண்ட அந்தக் கூட்டமும், அந்தக் கூட்டத்தின் செயல்களும்—கற்பனைக்கெட்டாத அளவில் உயர்ந்து செல்வதையோ கண்மூடித்தனமாக அவை யனைத்தையும் பின்பற்றிச் செல்வதையோ அவனால் பொறுக்க முடியவில்லை. அவர்களிடம் நல்ல நோக்கமும், சீரிய செயல் திட்டங்களும் பெருகியிருந்தன என்பது உண்மையே. என்றாலும் பல விஷயங்களை விழிப்போடும், பாதுகாப்போடும் செய்விக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது என்பதையும் மறுக்க முடியாது!

அப்படியானால் சப்பாயேவைப் பற்றி என்ன? அவன் எப்படிப்பட்டவன்? பியோடார் அவனைப்பற்றி என்ன கருதியுள்ளான்? அவனோடு மட்டிலும் ஏன் நெருங்கிய, தந்திரமான தொடர்பும் பிணைப்பும் கொள்ள வேண்டுமென விரும்புகிறான்? அது அவ்வளவு அவசியமானது தானா?"

போர்முனைக்கு அப்பால், பொது மக்களிடையே பணியாற்றியபொழுது, பல வீரர்களையும், தீரர்களையும்பற்றிப் பியோடார் நிறையப் படித்திருக்கிறான், கேள்விப்பட்டிருக்கிறான். உள்நாட்டுப் போரில் துணிந்து போராடி வந்த பலரைப்பற்றிப் பெருமையுடன் அறிந்துள்ளான். ஆனால் இப்போழுது உள்ள நிலை வேறு. இன்று போர்க்



களத்தில் நின்று அனைவரையும் நேருக்கு நேர் பார்க்கின்றான், பழகுகின்றான். அவ்வீரர்களில் பெரும்பாலோர் நாட்டுப்புறத்தவர்கள்; நகர்புறத்துப் பாட்டாளி மக்களில் ஒருசிலரே படைகளில் இருந்தனர். நகர்புறத்துத் தொழில் வீரர்களின் போக்கே அலாதியானது; அவர்களது தகுதியே தனிப்பட்டது; அவர்கள் அனைவரும் தொழிற் கட்டுப்பாட்டில் சிறந்தவர்கள். பியோடாரோ, பெரிய தொழிலியல் பெருக்கம் வாய்ந்த நகர்ப்புறத்தில் வளர்ந்தவன். கட்டுப்பாடும், கட்டுக்கோப்பும், செம்மையான அமைப்பும் சிறந்த நிர்வாகமும் அமைந்த நெசவாலைத் தொழிலாளர்களின் இயக்கங்களில் எல்லாம் ஊறி வளர்ந்தவன். எனவே முற்றிலும் கட்டுப்பாடற்ற, கொரிலாப் போக்கும், மனம்போன திட்டமும் நிறைந்த நாட்டுப்புறத்து மக்களிடையே இருந்து பெரிய மாவீரனான சப்பாயேவ் போன்றோரை ஒரு மாதிரியான கண்ணோட்டத்துடன்தான் பியோடார் நோக்கினான், கருதினான், பழகினான். என்றாலும் இக்கண்ணோட்டம், அவர்களோடு அவன் கொண்டிருந்த தொடர்பைக் குலைக்கவில்லை, அவர்களுடைய செயல் முறைகளைப் பின்பற்றுவதைத் தடுக்கவில்லை. மாறாக, மதிப்போடும், மாண்பு மிகுந்த மரியாதையுணர்வோடும் அவர்களையும் பாராட்டினான்; அவர்களுடைய தீரச் செயல்களைப் போற்றினான். கூட ஒருவகையான மனக்குறையும், தெளிவற்ற நம்பிக்கையும் ஒரு மூலையில் பதுங்கியே கிடந்தன. இதுதான் பியோடாரின் இப்போதைய நிலை!

"சப்பாயேவ், ஒரு மாவீரன்தான்!" என்பதை தனக்குத்தானே அறிவுறுத்திக்கொண்டான் பியோடார். "நாட்டுப் புறத்துப் பாட்டாளிப் பெருமக்களிடமிருந்து பாரம்பரியமாகத் தோன்றியிருந்த கடுங் கோபம், எதையும் எளிதில் எதிர்த்து மறுக்கும் சுபாவம் ஆகிய அனைத்தையும், அடக்க முடியாது இயல்பாகத் தோன்றிய எல்லாப் பண்புகளையும் ஒருசேரக் கொண்டவனாக, பிரதிபலிப்பவனாக, கொள்கல

மாக விளங்கினுன் சப்பாயேவ். இதுபோன்று இன்னும் எத்தனை பண்புகள்தான் இயல்பாகவே கிளம்பி அவனிடம் பொங்கும் என்பதை யாராலும் சொல்ல முடியாது! சப்பாயேவ் போன்ற தலைசிறந்த தளகர்த்தனே, அடங்காத கோபத்திற்கு ஆட்பட்டுக் கமிசார்களைத் தலையிலடித்துத் தாக்கும் சம்பவங்களைக் கண்டிருக்கிறோம். (அப்படி ஒரு முறையா? இரு முறையா? பல முறைகள் நடந்திருக்கின்றன!) அதுவும் ஒரு அயோக்கியனுகவோ, வாயரட்டை தவிரச் செயல் திறம் அற்றவனுகவோ, கோழைக் குணம் உடையவனுகவோ, இருந்து இப்படிச் செய்தால் பரவாயில்லை. ஆனுல் முழு வீரனை, வீராதி வீரனை சப்பாயேவே இப்படி ஆத்திரத்தில் எல்லை மீறி நடப்பதுதான் தாங்க முடியவில்லை. தங்களுடைய உத்வேகப் பெருக்கத்தில் தங்களை யறியாமலே வெள்ளைப் படையினரிடம் செல்லும் அளவிற்கு வந்திருந்தனர்!

ஆனுல், தொழிலாளர்கள்—வேறு வகையானவர்கள். அவர்கள் எந்தச் சூழலிலும் தங்கள் நிலையில் பின்னிடமாட்டார்கள். அதாவது வர்க்க உணர்வுடன் போராட்டத்தில் குதித்த யாருமே பின்தங்கிவிட மாட்டார்கள். அவர்களிலும் நேற்றுவரை விவசாயிகளாக இருந்த பல தொழிலாளர்கள் இருக்கக் கூடும். அவர்களிலே போதுமான வர்க்க உணர்ச்சி கொண்டவர்களும் உண்டு; மிகுதியான வர்க்க உணர்ச்சியால் நிலைகெட்டுநிற்பவர்களும் உண்டு. என்றுலும் கூடத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் யாரோடு எப்படிப் பழகுகிறோம் என்பதை அவர்கள் எளிதில் புரிந்து கொள்ளுவார்கள். இதை யாரும் உணர முடியும்!

"ஆனுல், சப்பாயேவின் இந்தக் கொரில்லாக் கூட்டத்திடம் எவ்வளவு அபாயம் நிறைந்திருக்கிறது? அப்பப்பா!" என்று பெருமூச்சுவிட்டான் பியோடார்.

இயல்பாகவே கொரில்லாப் போக்குக்கொண்ட இந்த இயக்கத்தைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கத் தொடங்கிய பியோடார், அக் கூட்டத்தவருடனே மிக முன்னெச்சரிக்கையுடனும், விழிப்புடனும் தொடர்புகொள்ள விரும்பினுன்; அவர்களோடு கொள்ளும் தொடர்பால் தானும் அவர்களுடன் ஐக்கியமாகிவிடாமல், தன்னுடைய கொள்கைப் பிடிப்பாலும், அரசியலறிவுத் திறத்தாலும் தன் கட்சிக்கு, செல்வாக்கிற்குப் பிறரை ஆட்படுத்த நினைத்தான். எனவே தொடக்கத்திலிருந்தே—தலைவனிலிருந்து—சப்பாயேவிடமிருந்து தன் கருத்தைப் பரப்பத் துவங்கினுன். பியோடார் தன் நோக்கத்தை யெல்லாம் அவனிடமே குவித்துவைத்தான்.

தன்னுடைய குருவித் தலையைக் கதவின்மீது சாய்ந்தபடி, பொடாபோவைச் சாடையாக அழைத்து அவனுடைய சிறு விரலில் ஒரு காகிதத்துண்டைக்கொடுத்தான் பெட்கா. அத் துண்டில்,

"வாஸிலி இவானேவிச்சிடம், குதிரைகளும், மற்ற எல்லாமும் தயாராயிருக்கின்றன என்று சொல்லு" எனப் பிழைபட எழுதப்பட்டிருந்தது!

தன்னுல் வாய் திறந்து பேசி ஒன்றைத் தெரிவிக்க முடியாத இடத்திலும், சூழ்நிலையிலும் இதுபோலச் சிறு காகிதத் துண்டில் எழுதுவது பெட்காவிற்கே உரிய பழக்கம். தப்பும் தவறுமாக நினைத்ததை எழுதிவிடுவான். இப்பொழுது அந்தக் குறிப்பு சரியான சமயத்தில் வந்தது. பிற எல்லா வேலைகளும் முடிந்துவிட்டன. உத்தரவுகளும், திட்டங்களும் பேசி முடிக்கப்பட்டுக் கையெழுத்தும் இடப்பட்டது. அன்று முடிவான உத்தரவுகளை எல்லாப் படைப் பகுதிகளுக்கும் விரைவில் அனுப்பப்பட இருக்கின்றன.

திடீரென்று சப்பாயேவ், "நான் போர்த் தொடக்கத்திற்கு வேண்டியவற்றைச் செய்து முடிக்க ஆணையிட வந்தேனே யன்றிக் காகிதக் கற்றைகளை வைத்துக்கொண்டு குழப்பிக்கொள்ள வரவில்லை. அதற்கு ஏற்கெனவே போது

மான கணக்கர்கள் இருக்கிறார்கள்" என்றபடியே திரும்பினான்.

இதைக் கண்ட பொடாபோவ் "வாஸிலி இவானோவிச்! நீ தயாராயிருக்கிறாய் என்று தெரிகிறது. எல்லாம் தயார் தானே! அப்ப நாம் புறப்படலாம்" என்று முனகினான்.

"எல்லாம் தயாராகிவிட்டதா? அப்படியானால் நாம் போகலாம்' என்று சொல்லிக்கொண்டே எழுந்தான் சப்பாயேவ். எல்லோரும் அவனுக்கு வழிவிட்டார்கள். எல்லோருக்கும் முதலில் வந்தது போலவே, இப்பொழுதும் எழுந்து அவனே முதலில் சென்றான். எல்லோரும் பின் சென்றார்கள்.

சப்பாயேவின் வருகையைக் கேள்விப்பட்டிருந்த செஞ்சேனை வீரர்கள் பலர் முகப்பு மண்டபத்தில் குழுமியிருந்தனர். அவர்களில் பலர் 1918-ல் அவனோடு சேர்ந்து போரிட்டவர்கள்; பலர் அவனுக்கு நன்கு அறிமுகமானவர்கள். அப்படியே இல்லாத சிலரும் அவனைப்பற்றி ஓரளவாவது கேள்வியுற்றிருந்தார்கள். கழுத்துகளை நீட்டிய வண்ணம், வியப்புச் சொட்ட விழிகளை உறுத்து நிறுத்திய வண்ணம், பல்லெல்லாம் தெரிய மகிழ்ச்சியைப் புலப்படுத்திய வண்ணம் அனைவரும் எதிர்வந்த சப்பாயேவைக் கண்டனர்.

சப்பாயேவ் படியைவிட்டுக் கீழிறங்கியதும், "சப்பாயேவ் வாழ்க!" என்று முழங்கினான் முன்னால் நின்ற ஒருவன். அதைத் தொடர்ந்து வாழ்த்தொலிகள் கிளம்பின.

வாழ்த்தொலி கேட்ட எல்லாச் செஞ்சேனையினரும் ஓடித் திரண்டனர். கிராம மக்கள் அனைவரும் வந்து கூடினர். கூட்டம் பெருகிவிட்டது.

"தோழர்களே!" என்று தொடங்கினான் சப்பாயேவ். எங்கும் அமைதி நொடியில் நிலவியது.

"உங்களுடன் நீண்ட நேரம் பேச எனக்குப் போதிய அவகாசம் இல்லை. போர்முனைக்குப் புறப்பட்டுவிட்டேன்.



நாளை நாம் அனைவரும் ஒருவரையொருவர் போர் முனையில் சந்திப்போம். கொஸாக்கியர்களுக்கு நாளைச் சரியான சாப்பாடு கொடுப்போம். அதன் பின்னர் பேசுவதற்கு நமக்கு அவகாசம் கிடைக்கும். இப்பொழுது இத்துடன் விடைபெறுவோம்."

மீண்டும் இடிபோன்று வாழ்த்தொலிகள் எதிரெதிரே முழங்கின. சறுக்கு வண்டிக்குள் சப்பாயேவ் ஏறியமர்ந்தான். அவனுக்குப் பக்கத்தில் பொடாபோவ் ஏறியமர்ந்தான். மூன்று குதிரை வீரர்கள் காத்து நின்றனர். உரம் வாய்ந்த கருங் குதிரையொன்று பியோடாருக்குக் கொணரப்பட்டது.

"புறப்படுங்கள்!" என்று உத்தரவிட்டான் சப்பாயேவ்.

குதிரைகள் சுண்டி இழுத்தன. கூடிநின்ற மக்களும் வீரரும் வாழ்த்து முழக்கத்துடன் வழிவிலகினர். ஆல்கை முனையை நோக்கிச் சென்ற பாதையில் இணையாக எல்லோரும் போய்க்கொண்டிருந்தனர்.

பனிப்படிந்த ஸ்டெப்பிப் பாலைவனப் பயணம் சலிப்பாயும் சங்கடமாயும் இருந்தது. கோடை காலத்தில் பயணம் இலகுவாயிருக்கும். ஆனால் இப்பொழுது பாதையெல்லாம் பனிமூடி வண்டிச் சக்கரங்களைச் சிக்க வைத்தது. என்றாலும் அந்தப் பாதையிலே சென்று பழகிப் போன குதிரைகள் சலிப்பின்றி இழுத்துச் சென்றன. சப்பாயேவும் பொடாபோவும் முதுகைத் திருப்பியவண்ணம் எதிரும் புதிருமாக அமர்ந்திருந்தனர். ஏதோ சண்டையிட்டுக்கொண்டு பேசாதிருப்பவர்கள் போன்று இருப்பதாகவே பிறர்க்குத் தோன்றும். ஆனால் அவர்கள் அமைதியாக நாளை நடக்கப் போகும் போரில் மேற்கொள்ள வேண்டிய செயல்முறைகளைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தனர். வண்டியுடன் வந்துகொண்டிருந்த மூன்று குதிரைவீரர்களும் முன்பின்னாகச் சம தூரத்தில் குதிரைகளை விரட்டி

வந்தனர். வேறொரு புறத்தில் பியோடார் வந்துகொண்டிருந்தான். சில சமயங்களில் மெதுவாகக் குதிரையைச் செலுத்தியவண்ணம் ஒரு மைல்வரை பின்தங்கிவிடுவான். உடனே, திடீரென்று நாலுகால் பாய்ச்சலில் விரட்டிக்கொண்டு வந்து முன் செல்வோருடன் சேர்ந்துகொள்ளுவான். ஸ்டெப்பிப் பிராந்தியத்தில் குதிரைகளை வேகமாய் ஓட்டிச் செல்வதுதான் எளிது! அதிலும் பியோடார் ஏறிவந்தது இளமைக் கட்டுக் குலையாத ஆண் குதிரை. எனவே, விருப்புடன் பாய்ந்து பாய்ந்து ஓடியது. குதிரையின் ஓட்டத்துடன் அவனுடைய சிந்தனையும் ஓடிக்கொண்டிருந்தது!

"படைவீரன் என்ற புது வாழ்க்கை எனக்கு நாளை துவங்கிவிடும். அதுதான் என்னுடைய புது வாழ்வின், உண்மையான வாழ்வின், தொடக்கமும் ஆகும்! அந்த வாழ்க்கை மிக நன்றாகக் கழியும். என்றாலும் அது நீடிக்குமா? இந்த வாழ்க்கையும் எதில் சென்று முடியும் என்பது யாருக்குத் தெரியும்? வெற்றியடையும் நாளை யாரால் முடிவு கட்டிச் சொல்ல முடியும்? நமது வெற்றி என்று கிட்டும்? நாளுக்கு நாள், போராட்ட முனையில், அபாயப் பாதையில், பயங்கரச் சுழலில் பாய்ந்து முன்னேற வேண்டியிருக்கும். கீழே கழித்தெறியப்பட்ட வைக்கோற் சுருணைகளைப்போல நாம் மதிக்கப்படக் கூடும்! நம்மில் எத்தனை பேர் வீடு திரும்புவார்கள்? எத்தனை பேர் இந்த ஸ்டெப்பிப் பனி மூட்டங்களிலும், கொடிய புதர்களிலும் குற்றுயிராய்க் கைவிடப்படுவார்கள்?" என்றெல்லாம் எண்ணினான் பியோடார்.

அந்த எண்ணத்தைத் தொடர்ந்து அன்றாடச் சம்பவங்கள் அவன் மனத்தில் தோன்றின. அவனுக்கு இதமான, அறிமுகமான முகங்கள் தோன்றி மறைந்தன. தானே இறந்து வீழ்ந்துவிட்டதுபோல அவன் எண்ணிக்கொண்டான். விரித்த கைகளுடன், இரத்தம் உறையப் பனிக் குவிய



லில் மாண்டு கிடப்பதுபோல உணர்ந்தான். அந்த உணர்ச்சி, தன்னைப் பற்றியே அவனைப் பரிதாபப்படச் செய்தது. திடீரென ஏற்பட்ட இந்தத் தன்னிரக்கம், நீண்ட சோகப்படலமாக மாறுவதற்குள் அவன் தன்னுணர்வு பெற்றான்; அத்தன்னிரக்க உணர்வை, தன்னைப்பற்றியே எழுப்பிக்கொண்ட கழிவிரக்கத்தை உதறித் தள்ளினான். தன்னுடைய சாவைப்பற்றி எண்ணிக்கொண்டதைப்பற்றி வாய்விட்டுச் சிரித்தவண்ணம் குதிரையைத் தட்டிவிட்டான்,

இரண்டரை மணி நேரம் இப்படியே கழிந்தது. அசையாமல் உட்கார்ந்திருந்து களைத்துப்போன சப்பாயேவ் வண்டியை நிறுத்தச் சொன்னான். குதிரையில் ஏறிவந்த ஒருவனை வண்டியில் அமர்த்தினான். அவனுக்குப் பதிலாகத் தானே குதிரைச் சவாரியைத் தொடங்கினான். சற்று நேரத்தில் பியோடாருடன் இணையாக வந்துகொண்டிருந்தான்.

"என்ன கமிசார் தோழரே! நாம் மீண்டும் ஒன்று சேர்ந்துவிட்டோம்!"

"ஆம்!" என்று விடையிறுத்த வண்ணம் சப்பாயேவ் குதிரைமீது அமர்ந்திருந்த லாகவத்தையே பார்த்துக்கொண்டிருந்தான் பியோடார். குதிரைச் சேணத்துடன் ஒட்டியிருப்பதுபோலக் கம்பீரமாக அமர்ந்திருந்தான் சப்பாயேவ். இறுகக் கட்டப்பட்டவன்போலத் தான் அமர்ந்திருந்த கோலத்தையும் உடனே பார்த்துக்கொண்டான்.

"குதிரை ஒரு முறை எவ்விப் பாய்ந்தால் சேணத்திலிருந்து நான் பறந்துவிடுவேன். ஆனால் சப்பாயேவ் அமர்ந்திருப்பதைப் பார்த்தால் வியப்பாயிருக்கிறது. சேணத்தை விட்டே பிரிக்க முடியாதவன்போலச் செம்மையாக உட்கார்ந்திருக்கிறான்" என்று ஒப்பிட்டான் பியோடார்.

"நீ பல முறை சண்டை செய்திருக்கிறாயா?"

இதைக் கேட்டதும், கிண்டலாகத் தன்னைப் பார்த்துக் கூட வரும் சப்பாயேவ் கேலி செய்வதாக உணர்ந்தான் பியோடார். "அவனுக்கே நன்றாகத் தெரியும். நான் இப்

பொழுதுதான் முதன் முதலாகப் போர்முனைக்கு வருகிறேனென்று. அதைத் தெரிந்துகொண்ட பின்னரும் என்னுடன் விளையாடுகிறான் போலிருக்கிறது!" என்று கருவியவண்ணம் "இப்பொழுதுதான் போர்முனை சென்று துவங்கவிருக்கிறேன்" என்றான் பியோடார்.

"அப்படியானால் இதுவரை பின்னணியில் போரிட்டீரோ?"

மீண்டும் இந்தக் கேள்வியில் கிண்டல் தொனித்தது.

சப்பாயேவ் போன்ற முன்னணி வீரர்களின் கண்களுக்கு, பின்னணியில் பாடுபடுபவர்களைக் கண்டால் உபயோகமற்றவர்களாகவும், இழிவானவர்களாகவுமே எண்ணத் தோன்றும் என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். முன்னதாகவே இக் கருத்தைப்பற்றிய சந்தேகம் பியோடாருக்கும் ஏற்பட்டது. கடந்த பல நாட்களாகப் பல வீரர்களுடனும், தளபதிகளுடனும் நெருங்கிப் பழகிப் பேசிய பின் இந்த எண்ணம் உண்மையாகவே அவன் நெஞ்சில் நிலைத்துவிட்டது.

"பின்னணியில் வேலை செய்தேனா என்றுதானே கேட்கிறீர்கள்! ஆம். இவானோவா வோஸ்னெஸென்க்கில் வேலை பார்த்தேன்" என்று உற்சாகமற்ற தொனியில் அசட்டையுடன் சொற்களை உதிர்த்தான் பியோடார்.

"அது எங்கே யிருக்கிறது? மாஸ்கோவுக்கும் அப்பாலா?"

"ஆம். குறைந்த பட்சம் முன்னூறு மைல்கள் இருக்கக் கூடும்."

"சரி. அங்கு எப்படி இருக்கிறது நிலைமை? பொதுவான நிகழ்ச்சி விபரம் என்ன?"

இந்தக் கேள்வியைக் கேட்டதும், பேச்சுப் பொருள் வேறு துறைக்கு மாறியதை யுணர்ந்து பியோடார் மகிழ்ந்தான். இவானோவா நகரில் நெசவுத் தொழிலாளர்கள் எத்தகைய கடுமையான பட்டினி வாழ்வை மேற்கொண்டு



துன்புற்றார்கள் என்பதை உணர்ச்சி பொங்கச் சப்பாயேவிற்கு விவரித்தான் பியோடார். ஏன் நெசவாளர்களை மட்டும் சொல்ல வேண்டும்? அங்கென்ன நெசவாளர்கள் மட்டும்தானா துன்புற்றார்கள்?—கிளிக்கோவ் பியோடாரின் மனநிலையையும், தொழிலாளர்பால் அவனுக்குள்ள ஈடுபாட்டையுமே இது காட்டுகிறது. இவானோவா வோஸ்னெஸென்க்கைப்பற்றிப் பேச்செடுத்தால், பியோடாரின் கண்களுக்கு முன்னர் தொழிலாளர் தொகுதியே தோன்றும்; மற்றெல்லாம் மறைந்துவிடும்.

"அப்படியானால் பஞ்சத்தின் காரணமாக எல்லோரும் மோசமான அவல நிலையில் வாழ்ந்தார்கள் என்றுதானே சொல்கிறாய்" என்றான் சப்பாயேவ், அமைதியுடன். மீண்டும் தொடங்கினான். "அப்படியே பஞ்சமேதும் இல்லாவிட்டாலும் எல்லாம் மாறாகத்தான் நடக்கும். ஏன்! தங்களையே இழிவுபடுத்தித் தூற்றிக்கொள்ளவும் தயங்க மாட்டார்கள், அந்த இழி மக்கள். அவர்கள் இதை யெல்லாம் எண்ணிக்கூடப் பார்ப்பதில்லை என்பதை நீ...."

"ஏன் அவர்கள் தங்களையே தூற்றிக்கொள்ள வேண்டும்?" என்று ஒன்றும் புரியாமல் இடை மறித்தான் பியோடார்.

"நான் அந்தக் கொஸாக்கியர்களைக் குறிப்பிடுகிறேன். எதையும் இகழ்ந்து பேச அவர்கள் தயங்குவதில்லை."

"என்றாலும் எல்லாக் கொஸாக்கியர்களும் அப்படியில்லை!"

"எல்லோரும் அப்படித்தான். உனக்கொன்றும் தெரியாது. அவர்களைப்பற்றி நான் சொல்லுகிறேன். எல்லோரும் அப்படித்தான். வேறே மாதிரியாக இன்னொரு முறை என்னிடமே சொல்லாதே" என்று கத்திய வண்ணம் ம்சணத்தின்மீது எவ்விக் குதித்தான் சப்பாயேவ்.

"எல்லோருமே அப்படி ஒருபோதும் இருக்க முடியாது. அவர்களில் ஒருசிலர் கொடியவர்களாக இருக்கலா

ஆனால் நம்மைச் சேர்ந்த கொஸாக்கியர்களும் இருப்பதை மறுக்க முடியுமா? ஏன் ரொம்ப விளக்க வேண்டும். ஒரு நிமிஷம் பொறுங்கள்...'' என்று மறுத்த வண்ணம் எதையோ நினைவுக்குக் கொண்டுவர முயன்றான் பியோடார்.

''ஏன் ரொம்பத் தூரம் போக வேண்டும்? நம்ப ராணுவப் பகுதியில் உள்ள குதிரைச் சாரணர்கள் யார்? அனைவரும் கொஸாக்கியர்கள்தானே!''

''எங்கே? நமது ராணுவப் பகுதியிலா?'' என்று கேட்டபடி யோசித்தான் சப்பாயேவ்.

''ஏன்! ஆமாம்! நம்மோடுதான் இருக்கிறார்கள்; நமது பகுதியில்தான்.''

'' அவர்கள் நகர்ப்புறத்திலிருந்து வந்து சேர்ந்தவர்களாயிருக்க வேண்டும். இந்தச் சுற்றுப்புறத்துக் கிராமப் பகுதியைச் சேர்ந்தவர்கள் யாரும் அதில் இருக்க முடியாது'' என்று தீர்க்கமாக விவாதித்தான் சப்பாயேவ்.

''அவர்கள் நகர்ப்புறத்திலிருந்து வந்தார்களோ, இல்லையோ. அதெல்லாம் எனக்குத் தெரியாது. ஆனால் அவர்கள் அனைவரும் நம்மோடுதான் இருக்கிறார்கள். எனவே, தோழர், சப்பாயேவ்! அவர்கள் ஒவ்வொருவரும், எல்லாக் கொஸாக்கியரும் நமக்கு எதிரிகளாக இருக்கவே முடியாது. எந்த வகையாலும் எல்லோரும் நமக்கு மாறுபட்டவர்களாக ஒருபோதும் இருக்க முடியாது!''

''ஏன் இருக்கமுடியாது? நீ கொஞ்ச நாள் எங்களுடன் தங்கிப்பார். அப்புறம்—''

'' நான் எத்தனை நாள் தங்கினால்தான் என்ன? என்றாலும் எல்லோரும் என்றென்றும் நம் எதிரிகளாகவே இருப்பார்கள் என்பதை என்னால் ஏற்கவும் முடியாது, நம்பவும் முடியாது'' என்று துணிவாகக் கடுகடுத்த குரலில் மறுத்தான் பியோடார்.

'' தனிப்பட்ட ஒருசிலரை வைத்துக்கொண்டு ஏன் பேச வேண்டும்?'' என்று சப்பாயேவே பின்னிடத் தொடங்கினான். அவனுடைய உறுதிப்பாடு கட்டுவிடத் தொடங்கியது. '' அவர்களில் அங்கும் இங்குமாக ஓரிரு நல்லவர்கள் இருக்க முடியும். என்றாலும் மிகுதியாகப்பார்க்க முடியாது, இருக்கவும் முடியாது'' என்று மீண்டும் சவால்விட்டான் சப்பாயேவ்.



'' இல்லை. தனிப்பட்டவர்கள் மட்டும் இல்லை. நீ நினைப்பது தவறு. துருக்கிஸ்தானிலிருந்தே பல கொஸாக்கியர்கள் எழுதியுள்ளார்கள். அங்குள்ள பல கொஸாக்கியப் படையினர் தாங்களாகவே சோவியத் ஆட்சியை அமைத்துப் பிராந்தியம் முழுவதும் நிலை நாட்டியுள்ளார்கள். அங்கு மட்டும் அல்ல உக்கிரேனிலும், டான் பகுதியிலும்கூட.''

''சரி சரி. இப்படி நல்ல நம்பிக்கைக் கோட்டையைக் கட்டிக்கிட்டே போ....'' என்றான் சப்பாயேவ் ஏகத்தாளமாக.

'' நான் ஒன்றும் நம்பிக்கைக் கோட்டை கட்டவில்லை சப்பாயேவ்! என்னுடைய கருத்துக்களில் ஏராளமான உண்மைகள் பொதிந்துள்ளன. கொஸாக்கியர்கள் கொடிய வல்லூறுகள் என்பது உண்மைதான். யாராலும் அதை மறுக்க முடியாது. நானும் அதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஒன்றுமில்லாமைக்காக ஜார் அரசாட்சி அவர்களை அப்படிப் படுத்தி வைக்கவில்லை! ஆனால் புதிய கொஸாக்கியப் பரம்பரையைப் பார்! அரும்பிவரும் இளைஞர் இயக்கத்தைப் பார்! அவர்கள் முற்றிலும் முந்திய கொஸாக்கியர்களுக்கு முரண்பட்டவர்கள். அந்த இளைஞர்கள் நம்மிடம் அடிக்கடி வருகிறார்கள். சோவியத் அரசாட்சி அமைப்பை ஏற்றுக் கொள்ளுவதற்குத் தாடிநரைத்த பல கிழட்டுக் கொஸாக்கியர்களுக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும்; புதிய அரசியல் அமைப்பைச் சரிவர உணரும்வரை அவர்களுக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும். ஏன்! அவர்கள் நம்மைப்பற்றி எப்படியெல்லாம் எண்ணுகிறார்கள், எல்லாவற்றையும் நம்புகிறார்கள், கண்மூடி நம்புகிறார்கள் என்பது தெரியுமா?

தேவாலயங்களை யெல்லாம் நாம் மாட்டுத் தொழுவங்களாக மாற்றுவதாகவும், நமது பெண்டிரெல்லாம் பொதுமகளிராக வாழ்வதாகவும், நாம் அனைவரையும் கட்டாயப்படுத்தி ஒன்றுசேர்த்து வாழவைப்பதாகவும், ஒரே இடத்தில் அமர்ந்து ஒன்றாக உண்டு உறங்க வேண்டுமென்று தொல்லைப்படுத்துவதாகவும், ஈவிரக்கமின்றி நடத்துவதாகவும் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். பரம்பரையாகக் கோவிலுக்கு முறையாகச் சென்றுவந்த கொஸாக்கியன், தன்னுடைய கொழுத்த பண்ணையில் நிறைந்த விளைவை வரம்பின்றிப் பெறும் ஒரு கொஸாக்கியன், தனக்காகப் பிறரை வாட்டி வேலைவாங்கும் ஒரு கொஸாக்கியன், கேட்பாரற்ற ஏக போக வாழ்விலே திளைக்கும் ஒரு கொஸாக்கியன்-நமது புதிய ஆட்சிமுறையைப் புரிந்துகொள்ள முடியாமல், ஏற்றுக்கொள்ள இசையாமல் மறுக்கக் கூடும். எதிர்க்கக் கூடும்" என்றான் பியோடார் விளக்கமாக.

"சுரண்டர்கள்!" என்று அழுத்தம் திருத்தமாக உணர்ச்சிஉந்த வாய்விட்டுச் சொன்னான் சப்பாயேவ்

"நிச்சயமாக" என்று புன்சிரிப்புடன் ஒப்புக்கொண்டான் பியோடார். "சுரண்டல்தான் அவர்களுடைய அடிப்படை. பணம்படைத்த கொஸாக்கியர்கள், கிர்கிஷியர்கள், ருஷ்யர்கள் முதலியோரைச் சுரண்டுவதோடு மட்டும் திருப்தியடைந்துவிடுவதில்லை, தங்களுடைய இனத்தவரான ஏழைக் கொஸாக்கியர்களையும் விட்டுவைக்க மாட்டார்கள். அந்த விஷயத்தில்தான் அவர்களிடையயே பிளவு தோன்றுகிறது. அந்தச் சுரண்டப்படுவர்களிலும் உள்ள கிழடுகள்தான் எல்லாம் கடவுள் சித்தம் என்று பேசாமல் வாயடங்கிப் பணிந்து போகிறார்கள். மேலும் சுரண்டிக்கொள்ள இடம் தருகிறார்கள். ஆனால் இளைஞர்களோ வெனில் எல்லாவற்றையும் துணிவுடனும் நேர்மையுடனும் புதிய கண்ணோட்டத்தில் காணுகின்றனர். அதனால்தான் அவர்களில் பலர் நம்மிடம் அடிக்கடி வருகின்



றனர். அந்தக் கிழடுகளை மாற்ற நம்மால் முடியாது. துப்பாக்கியைக் கொண்டுதான் அவர்களைச் சரிக்கட்ட வேண்டும்!" என்றான் பியோடார.

"துப்பாக்கி. துப்பாக்கியால் மட்டும் எல்லாவற்றையும் சரிக்கட்டிவிட முடியாது. கடுமையாகப் போரிட வேண்டும் நாமெல்லோரும். அப்படி இல்லையென்றால்" என்றவாறே தலையை அசைத்தான் சப்பாயேவ்.

சப்பாயேவ் ஏன் அவ்விதம் சொன்னானென்று பியோடாருக்குப் புரியவில்லை. ஆனால் வெறுமனே அவன் இவ்விதம் சொல்லியிருக்க முடியாது. அதில் ஏதேனும் வேறு கருத்துப் பொதிந்திருக்கக் கூடும். எனவே அவன் தன் கருத்தை விளக்கிச் சொல்லும் வரை பேசாதிருந்தான்.

"அதுதான்; நமது இடங்கள் அதுதான். அது என்ன!" என்றபடியே பொருள் விளங்காமலும் என்ன என்று இடைமறித்துக் கேட்கத் தூண்டுவதுபோலும் சொற்களை உதிர்த்தான் சப்பாயேவ்.

"நமது இடங்களா! என்ன இடங்கள்?"

"ஏன்? எல்லா முறைகெட்ட துறைகளிலும் அவர்கள் ஒட்டிக்கொள்ளத் தயங்குவதில்லை" என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான் சப்பாயேவ். உடனே பியோரிடம் "பல சமயங்களில் போதுமான வெடி மருந்துகளுடன் என்னை வைத்திருந்தார்கள். கடுமையான குளிர் வீசிக்கொண்டிருந்தபொழுது அப்படி. ஆனால் இப்பொழுது வெறுங்கைகளுடன் அவர்களை வரவேற்கிறார்கள்: இங்கே நல்ல நாற்காலி இருக்கிறது. ஜெனரல் தயவுசெய்து அமருங்கள். எப்படி வேண்டுமானாலும் கட்டளையிடுங்கள், போரை நடத்துங்கள். விருப்பமில்லையென்றால் நீங்கள் அவர்களுக்கு வெடி மருந்தொன்றும் தர வேண்டாம். கம்புகளைக் கொண்டே சண்டையிடட்டும் என்றுகூடச் சொல்லிவிடுவார்கள்."

அந்தக் காலத்தில் ராணுவத்தினர் எவரும் தங்கள் வாக்குகளை நிறைவேற்றுவதில்லை என்ற மனக்குறை நீண்ட நாட்களாகவே சப்பாயேவிடமும், அவனைப்போன்ற பிறரிடமும் இருந்து வந்தது. அந்தக் குறை பெரிய பிரச்னையாகவும் உருவாகி வந்தது.

"என்னதான் இருந்தாலும், ஜெனரல்கள் இல்லாமல் காலம் கடத்த முடியுமா? ஜெனரல்கள் இல்லாமல் எப்படிப் போரை நடத்த முடியும்?" என்றான் பியோடார் மெதுவாகவும் துணிவாகவும்.

"அவர்கள் இல்லாமலே நாங்கள் போரை நடத்தியிருக்கிறோம்" என்று அழுத்தம் திருத்தமாகக் கூறியவாறே கடிவாளத்தைச் சுண்டினான் சப்பாயேவ்.

"ஆனால், எங்களால் ஜெனரல்கள் இல்லாமல் எதுவும் செய்ய முடியவில்லை தோழர் சப்பாயேவ்! துணிச்சல் இருப்பதால் மட்டும் எதையும் நன்றாக நிறைவேற்றிவிட முடியாது—அதற்குப் போதிய அறிவு வளம் வேண்டும். நம்மிடம் என்ன அறிவுத் திறம் இருக்கிறது? ஜெனரல்களைத் தவிர வேறு யாரால் நமக்கு அதை வழங்க முடியும்? அவர்கள் எல்லா விஷயங்களையும் நுணுகித் தெரிந்தவர்கள்; நமக்கும் சொல்லக் கடமைப்பட்டவர்கள். நமக்கு வேண்டிய போதுமான ஆசான்கள் ஏராளமாகப் பெருகும் காலம் வரும். இப்பொழுது போதுமானவர்கள் நம்மிடையே இல்லை. அல்லது ஒரு வேளை அப்படி யாரேனும் இருக்கிறார்களா? இல்லை இல்லை யென்பது தான் உண்மை. எனவே நம்மிடம் அப்படி யாரும் இல்லாதபோது, நாமே பிறரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டுமல்லவா?"

"ஆம்! கற்றுக்கொள்ள வேண்டும்! ஆனால் அவர்கள் எதைப் புதிதாக நமக்குப் போதிக்கப் போகிறார்கள்?" என்றபடி மறுத்துரைத்தான் சப்பாயேவ். மீண்டும் தொடர்ந்தான்—" என்னென்ன செய்ய வேண்டுமென்ப



தையெல்லாம் அவர்களே சொல்லுவார்கள் என்று நீ நினைக்கிறாய்? சற்றுப் பொறுத்துப் பார்! சொல்லுவார்கள்; சொல்லுவார்கள். நான் அவர்களுடைய கலைக் கழகத்திலேயே இரண்டு மாதங்கள் இருந்தேன். கரையில் எடுத்தெறியப்பட்ட மீன்போலத் தத்தளித்தேன். எதுவுமே எனக்குப் புரியவில்லை. எனவே அவர்களுடைய போதனைகளைக் காறியுமிழ்ந்துவிட்டு வெளிக் கிளம்பி இங்கே வந்துவிட்டேன். என்னைப் போன்றவர்கள் புதிதாகத் தெரிந்து கொள்ளுவதற்கு அப்படி யொன்றும் அங்கே இல்லை. அங்கு பெச்கின் என்ற பேராசிரியர் ஒருவர் இருந்தார். நமது முழங்கால் போலச் சுருக்கம் விழுந்த வழுக்கைத் தலையர் அவர். அவர் என்னிடம் பரீட்சையில் சில கேள்விகளைக் கேட்டார்.

"ரைன் நதியைத் தெரியுமா உனக்கு?"

"ஜெர்மானியப் போரில் அந்தப் பிராந்தியம் முழுவதும் அலசி வந்தவன் நான். எனக்கெப்படி ரைன் நதி தெரியாமல் இருக்கும்? இருந்தாலும் அந்தக் கேள்விக்கு ஏன் விடை சொல்ல வேண்டும்" என்ற எண்ணம் என்னிடம் உதித்தது.

"எனக்குத் தெரியாது. அது சரி ஐயா, உங்களுக்கு சொல்யாங்கா நதி தெரியுமா?" என்று நான் ஒரு எதிர்க் கேள்வி போட்டேன். அதை அவர் எதிர்பார்க்கவே இல்லை. கண்களை அகல விரித்தார்.

"எனக்குத் தெரியாது. ஏன் அதைப்பற்றி என்ன?" என்றார் அந்தப் பேராசிரியர் என்றபடி பியோடாரிடம் திரும்பினான்.

"அப்படியானால் வெறுமனே கேள்விகள் கேட்டுக் கொண்டிருப்பதிலும் பயனில்லை. நான் சொல்யாங்கா நதி தீரத்தில் படுகாயப்படுத்தப்பட்டேன். என்றாலும் அதை ஐந்து முறைகளுக்கு மேல் துணிவுடன் தாண்டினேன். அப்படியிருக்க ரைன் நதியைப்பற்றி நான் ஏன் தெரிந்திருக்க

வேண்டும்? அப்படித் தெரிந்திருந்தாலும் எனக்கென்ன அதனால் பயன்? ஆனால் சொல்யாங்கா நதிப் பகுதியின் ஒவ்வொரு அடி நிலமும் எனக்கு முக்கியம். தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமும் இருந்தது. ஏனெனில் அங்குதான் கொஸாக்கியர்களுடன் கடுமையாகப் போரிட்டுக்கொண்டிருந்தோம்'' என்று நிறுத்தினான் சப்பாயேவ்.

சப்பாயேவின் பேச்சுப் பாணியைக் கண்ட பியோடாருக்கு ஆனந்தம் பொத்துக்கொண்டு கிளம்பியது. எவ்வளவு நகைச்சுவை நிறைந்தவனாக இருக்கிறான் இந்தச் சப்பாயேவ். அவன் கருத்துக்கள் ஒவ்வொன்றும் தனித் திறம் உடையவை; நுணுகியவை; அறிவு நலம் கனிந்தவை. அறிவு நலத்தை ஒரு சிலர்தான் தேடிச் சென்று அடைய முடியும். எல்லோராலும் முடியாது. இந்தச் சப்பாயேவ் இரண்டு மாதங்களுக்கு மேல் கலைக் கழகத்தில் கழித்தும் எதுவும் கற்றுக்கொள்ள இவனால் முடியவில்லை; என்றாலும் நல்ல அறிவுத் திறமும் ஆற்றலும் இவனிடம் நிறைய இருக்கின்றன. என்ன, ஒரளவு பதப்படாமல் இருக்கிறான். கொஞ்சம் மெருகு பெற்றுவிட்டானானால் போதும் என்று எண்ணிய வண்ணம். "அப்படி நீ ஒன்றும் கலைக் கழகத்தில் நீண்ட காலம் இருக்கவில்லையே! இருந்த இரண்டு மாதங்களுக்குள் எதைக் கற்றுவிட முடியும்? ரொம்பக் கடினம்தான்'' என்றான் பியோடார்.

"அதுக்கு அங்கு போகாமலே இருந்திருந்தால் நல்லதாகப் போயிருக்கும்'' என்று நம்பிக்கையற்ற முகக் குறிப்புடன் உதட்டைப் பிதுக்கினான் சப்பாயேவ். மேலும் தொடர்ந்தான். "அங்கே எனக்கொன்றும் புதிதாகச் சொல்லிக் கொடுக்க ஏதும் இல்லை. எனக்கு வேண்டிய எல்லாவற்றையும் நானாகவே கற்றுக்கொண்டேன்.''

"என்ன நீ சொல்லுகிறாய்! யாரும் கற்றுக்கொடுக்க வேண்டிய அவசியமே இல்லையா? எவனும் ஒரு புது விஷயத்தை எப்பொழுதும் கற்றுக்கொள்ள முடியும்'' என்று மறுத்து மொழிந்தான் பியோடார்.



"உண்மையே. ஆனால் அங்கே முடியாது. கற்றுக்கொள்ள வேண்டியன ஏராளமாக இருப்பதை நான் அறிவேன். கற்றுணரவும் போகிறேன்'' என்று முத்தாய்ப்பு வைத்தவண்ணம் "அது சரி. உன் பெயரை மறந்துவிட்டேனே!'' என்றான் சப்பாயேவ்.

"கிளிக்கோவ்''

"தோழர் கிளிக்கோவ்! நான் உங்களிடம் ஒன்று சொல்ல விரும்புகிறேன். நான் பெரும் பகுதி கல்வியறிவில்லாதவன். நான்கு ஆண்டுகளுக்கு முன்புதான் அரிச்சுவடி கற்றுக்கொண்டேன். இப்பொழுது எனக்கு முப்பத்திரண்டு வயதாகிறது. என்னுடைய வாழ்நாள் முழுவதும் மூட வாழ்க்கை நடத்திவிட்டேன் என்று நீங்கள் முடிவு கட்டக் கூடும். சரி. அதைப்பற்றியெல்லாம் இப்பொழுது ஏன் பேச வேண்டும்? பின்பு ஒரு முறை சாவதானமாகப் பேசுவோம். அதோ. அங்கு தெரிவது டலோவ்காவாகத்தான் இருக்க வேண்டும்'' என்றபடி குதிரையை உந்தினான் சப்பாயேவ்.

குதிரை பறந்தது; அவனுடன் பின்தொடர்ந்தான் பியோடார். பொடாபோவையும் தாண்டி விரைந்தனர். பத்து நிமிடங்களில் டலோவ்காவின் வாயிலை எட்டிவிட்டனர்!

# 6

# போர் மூள்கிறது : புறப்பட்டுச் செல்கிறார்கள்

டலோவ்கா அழகான சிறு கிராமமாக இருந்தது. இன்று அலங்கோலமாகக் காட்சி தருகிறது. எல்லா வீடுகளும் சுட்டுப் பொசுக்கப்பட்டுவிட்டபடியால், உருக்குலைந்த மூன்றுவீடுகள் மட்டுமே ஊர் ஒன்று இருந்ததற்குச் சான்றாக நின்றன; சப்பாயேவ் குழுவினர் எஞ்சி நின்ற ஒரு சிறு குடிசைக்குள் நுழைந்தனர். அவ்வீடு முழுவதும் செஞ்சேனையினர் குழுமிக் கிடந்தனர். சிலர் குந்திக்கொண்டிருந்தனர், சிலர் கால் நீட்டிச் சயனித்துக் கிடந்தனர். போர் முனை நோக்கிப் புறப்படுவதற்கான உத்தரவுக்காக இங்கே காத்திருந்தனர். புதிதாக நுழைந்த சப்பாயேவ் குழுவினர் அவர்களைக் கவனித்தாகவே தெரியவில்லை; போர் முனைக்குப் புறப்படுமாறு உத்தரவேதும் தரவும் இல்லை. இவர்களைக் கண்டதும் ஏற்கெனவே அடைந்திருந்தவர்கள் நெருக்கிக் கொண்டு இடம் தந்தனர். குறட்டை ஒலியுடன் அயர்ந்த நித்திரையில் ஆழ்ந்திருந்த சிலரைத் தட்டி எழுப்பினர்.

அப்பொழுது அந்தி மயங்கும் நேரம். ஸ்டெப்பிப் பிரதேசத்து மூடுபனிப் படலங்கள் அந்தி நேரத்தை இன்னும் மங்கச் செய்துகொண்டிருந்தன. குடிசைக்குள் இருள் செறிந்து படர்ந்தது. எங்கிருந்தோ சில வீரர்கள் ஒரு மெழுகுதிரி விளக்கைக் கொணர்ந்தனர். அதை மேசைமீது பொருத்தி வைத்தபடியே மேசையைச் சுற்றிப் பலர் அமர்ந்தனர். ஒரு வரைப் படத்தை விரித்து வைத்தபடி மறுநாள் தாக்குதல் முறையைப்பற்றி விவாதிக்கத் தொடங்கினர். தன் இரு கைகளையும் மேசைமீது வைத்தவாறு பெஞ்சின் நடுவில் சப்பாயேவ் அமர்ந்திருந்தான். அவனுடைய ஒரு கரத்தில் காம்பசும், மற்றொரு கரத்தில் கூரான பென்சில் ஒன்றும் அழகு செய்தன. வரைப் படத்தைக் கொண்டு ஒவ்வொரு இலக்கிற்கும் இடையில் உள்ள தூரத்தைக் காம்பசால் அளந்துகொண்டிருந்தான் சப்பாயேவ். துணைப்படைத் தளகர்த்தர்கள், படை வீரர்கள், ராணுவச் சிப்பாய்கள், சாதாரணச் செஞ்சேனையினர் ஆகிய பல தரத்தினரும் அவனைச் சூழ்ந்து அமர்ந்திருந்தனர். கைகளைக் கட்டிக்கொண்டும், மேசைமீது தாடையைத் தாங்கிய வண்ணமும் சப்பாயேவைக் கவனித்துக் கொண்டிருந்தனர். பியோடாரும் பொடாபோவும் அவனுக்குப் பின்னாலிருந்த பெஞ்சில் உட்கார்ந்திருந்தனர். இது ஒரு ராணுவ ஆலோசனை மாநாடோ என்று கருதிவிட வேண்டாம். நடக்கப் போகும் எதிர்த் தாக்குதலில் ஏற்படக்கூடிய நிகழ்ச்சிகளையும், அவற்றைச் சமாளிக்கும் வழிகளையுமே பிறர்க்கு வருணித்துக்கொண்டிருந்தான் சப்பாயேவ். படைத் தளபதிகள் தத்தமது கடமைகளை யுணர்ந்து செயல் புரிய அவர்களுக்கு வழிகாட்டிக்கொண்டிருந்தான்.

எல்லோரும் பேசாது கேட்டுக்கொண்டிருந்தனர். சப்பாயேவின் உத்தரவுகளையும் ஆலோசனைகளையும் பலர் குறித்துக்கொண்டனர். அவர்களது அமைதியைக் குலைத்தவற்றுள் ஒன்று இடையிடையே எழுந்த சப்பாயேவின் ஆணித்தரமான குரல்; மற்றொன்று ஆழ்ந்து உறங்குவோரின் முரட்டுக் குறட்டை ஒலி. மூலையில் படுத்திருந்த ஒருவன் பெரிய நாதசுரம் வாசிப்பது போலப் பெருங்குறட்டை விட்டுக்கொண்டிருந்தான்; அவனுக்குப் பக்கத்தில் சயனித்திருந்த இன்னொருவன் வேண்டுமென்றே மெதுவாகத் தன் பூட்ஷுக் காலைத் தூக்கி அவன் முகத்தில் போட்டுக்கொண்டான். பூட்ஷுக் காலால் தடை செய்யப்பட்ட குறட்டை ஒலி அமுங்கி அமுங்கிப் பேரிரைச்சலுடன்

எழும்பிக்கொண்டிருந்தது. அந்த இரைச்சல் அறையெங்கும் எதிரொலித்தது. சிறிது நேரத்தில் முகத்தில் அமுக்கிக்கொண்டிருந்த பாரம் மூச்சையே தடை செய்ததை உணர்ந்த குறட்டை ஆசாமி துள்ளி எழுந்தான். தூக்கக் கலக்கத்துடன் சுற்று முற்றும் சலிப்புடனும் எரிச்சலுடனும் கண்ணோட்டம் விட்டான். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

“ஏ...அண்டங் காக்கை! பேசாமெப்....படுடா” என்று பக்கத்தில் படுத்திருந்தவர்கள் அதட்டினர்.

“யாரைடா சும்மா படுக்கச் சொல்றீங்க” என்று முனகியபடியே மிரள மிரள விழித்தான் அவன்.

முதுகில் ஒரு மொத்து மொத்தி அவனை உணர்வு நிலைக்குக் கொணர்ந்தனர். கண்களைக் கசக்கிக்கொண்டான். சுற்றுமுற்றும் பார்த்தான். சப்பாயேவ் அங்கிருப்பதைக் கண்டான். இரத்தம் குபீரெனத் தலைக்கு ஏறுவதாக உணர்ந்தான். தன் ஆத்திரத்தை யெல்லாம் அடக்கிக் கொண்டான். மெதுவாக எழுந்து, குதிகால் படாமல் நடந்து வந்து மேசைக்கு அருகில் நின்றான். சப்பாயேவ் சொல்லிக்கொண்டிருந்த ஒவ்வொரு சொல்லையும் ஊன்றிக் கேட்டான். அவற்றில் எதையாவது புரிந்துகொண்டானோ, இல்லையோ வெகு அக்கறையாக எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டான்.

சற்று நேரத்தில் சப்பாயேவின் எஞ்சிய படையினர் ஆல்கையிலிருந்து வந்து சேர்ந்தனர். மூச்சுக்கூட விட முடியாத அளவு குடிசைக்குள் கூட்டம் பெருகிவிட்டது.

என்றாலும் சப்பாயேவ் தன் காரியத்திலேயே கண்ணாயிருந்தான். குறிப்புரைகளும் போர் விளக்கமும் தந்து கொண்டிருந்தான்: “இவை எவ்லாவற்றையும் உடனே நாம் செய்ய வில்லை யென்றால் பிறகு எதுவுமே செய்ய முடியாது. எனவே இவற்றை உடனே எல்லோரும் கூடிச் செய்து முடிக்க வேண்டும். ஒரே சமயத்தில் அனைவரும்



பல முனைகளில் பாய்ந்து, படை யெடுக்க வேண்டும்; ஒரு அங்குலம்கூட எதிரியை அசையவிடாது சூழ்ந்துகொள்ள வேண்டும். இங்கிருக்கும் எல்லோரையும் இன்னும் இரண்டு மணி நேரத்தில் அனுப்பிவிட வேண்டும். நான் சொல்வதெல்லாம் தெரிகிறதா? சூரிய உதயத்திற்குள் அனைவரும் ஆர்தர் துறைமுகத்தைச் சேர்ந்துவிட வேண்டும். இருட்டிலேயே எல்லா முஸ்தீப்புகளையும் முடித்துவிடவேண்டும். தெரிந்ததா?” என்றான் சப்பாயேவ்.

“எல்லாம் தெரிந்துகொண்டோம். ஆமாம். எல்லாவற்றையும் இருட்டில்தான் செய்து முடிக்கக் கூடும். இருட்டுத்தான் நமக்கு வேண்டியதும்” என்றபடி சூழ்ந்திருந்த அனைவரும் தலையசைத்து ஏற்றனர். சப்பாயேவ் தொடர்ந்தான்:

“புறப்படுதற்கான உத்தரவுகளை அனைவரும் பெற்றுக்கொண்டீர்கள். எங்கெங்கே தங்க வேண்டும், எங்கெங்கே முனைந்து தாக்க வேண்டும் என்பதை யெல்லாம் விளக்கமாகக் குறித்துத் தந்துள்ளேன். இதைக் கொண்டு நீங்கள் நம்பிக்கையோடு முன்னேற வேண்டும். முழு வெற்றியும், முடிவான வெற்றியும் நாமே பெறப் போகிறோம் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடன் முனைய வேண்டும். அந்த நம்பிக்கையும் அயராத முயற்சியுமே நமக்கு வேண்டும். அவை யிரண்டும் இல்லாமல் போர் தொடுப்பது பயனற்றது; அழிவையே தருவது. தாக்குதலுக்குரிய இடத்தையும் நேரத்தையும் உங்களுக்குக் குறித்துத் தந்துள்ளேன். அது மட்டும் போதாது. முழு முயற்சியுடன் குறித்த காலத்தில் நீங்கள் முனைந்து தாக்கி முன்னேற வேண்டும். எல்லாவற்றையும்விடப் போர் முனையில் மிக விழிப்புடன் செயல் புரிய வேண்டும். நாம் இப்பொழுதான் முதன் முறையாகத் துப்பாக்கி பிடித்துச் சண்டைக்கு வந்திருக்கிறோம் என்று எவரும் அறியாத வகையில் நாம் பழக வேண்டும். அப்படியே நாம் போர்த் துறைக்குப்

புதியவர்கள் என்பதை எதிரிகள் தெரிந்துகொண்டாலும் பரவாயில்லை. வெற்றி அல்லது வீர மரணம் என்ற ஒரே முடிவுடன் போராடுங்கள். போர்முனைப் பகுதியில், கொஸாக்கியனோ, கிர்கிஷியனோ, அல்லது பிராந்திய விவசாயியோ எதிர்ப்பட்டால் அவனை விட்டுவிடாதீர்கள்; அவனைப் பாதுகாப்பிற்குள் கொண்டுவந்துவிடுங்கள். தீர விசாரித்த பின்னரே அவர்களை விடுதலை செய்ய வேண்டும்.''

''ஏற்கெனவே சிலரைப் பிடித்திருக்கிறோமே!'' என்று ஒரு குரல் மூலையிலிருந்து கிளம்பியது.

''அவர்களைப் பத்திரமாகக் காவலில் வையுங்கள். கொஸாக்கியர்களைப் பொறுத்த மட்டில் கண்ணில் விளக்கெண்ணெயை ஊற்றிக்கொண்டு, விழிப்புடன் அணுக வேண்டும்; அக் கொடுமைக்காரக் கொஸாக்கியர்களைப் பற்றி உங்கள் அனைவருக்கும் தெரியும். நமக்குத் தெரியாமலே குழிபறித்துத் தள்ளிவிடுவார்கள். கூடவே பழகிக் குடியைக் கெடுத்துவிடுவார்கள். அவர்களுடைய சொந்தப் பிராந்தியத்தை நோக்கி நாம் தாக்குதல் நடத்தப் போகிறோம். இங்குள்ள எல்லா வழிகளிலும், பாதைகளிலும் ஏராள அனுபவமும் பிடிப்பும் உள்ளவர்களுடன் முற்றிலும் புதிய முறையில் நாம் போரிடப் போகிறோம். இதையும் நினைவிலே கொள்ளுங்கள். எக்காரணம் கொண்டும் எதிர்ப்பட்டு நயவஞ்சகமாகப் பழகும் எந்தக் கொஸாக்கியனோடும் பேசாதீர்கள். பேசிவிட்டால் போதும். வலைக்குள் உங்களை அவர்கள் வீழ்த்திவிடுவார்கள்.''

''நீர் சொல்வது மிகவும் உண்மை. அதுதான் கொஸாக்கியர்களின் தந்திரம். முதுகுக்குப் பின்னால் மறைந்திருந்து தாக்குவதுதான் அவர்களுடைய போர்த்திட்டம்'' என்றான் இன்னொருவன்.

படையெடுப்பு பற்றிய விவாதம் ஓய்ந்தது. அதற்குள் சிறிது வயிற்றுக்கும் வழங்கத் தயார் செய்துவிட்டான் வல்லமைமிக்க பெட்கா! கொஞ்சம் ரொட்டி, சிறு கெட்டி



லில் கொஞ்சம் சுடு தண்ணீர், பழுப்பு ஏறிய ஆறு சர்க்கரைக் கட்டிகள் இவற்றுடன் எதிர்வந்தான். இதைக் கண்டதும் ஒரே அமர்க்களமாகிவிட்டது; குடிசை முழுவதும் குதூகலப் பேரொலி கொப்புளித்தது. மரக்கட்டை போலத் தூங்கிக் கிடந்த பலர் திடுக்கிட்டு எழுந்தனர். இரைச்சல் கேட்டுச் சிலர் எழுந்தனர்; பூட்ஷூக் கால் உராய்ந்து சிலர் தூக்கம் கலைந்தனர்; சிலர் துப்பாக்கிக் கட்டையால் உதை விழுந்து எழுந்தனர். ஆரவாரம் கேட்டுப் பலர் தூக்கம்கலைந்தனர். எழுந்த பலரும் விரைவாக ஓடிச் சென்று மேசையை இழுத்து நடுக் கூடத்தில் போட்டுக்கொண்டு சுற்றிலும் அமர்ந்தனர். இடமில்லாத சிலர் தரையில் உட்கார்ந்துகொண்டனர். இதுவரை ஒளி தந்துகொண்டிருந்த மெழுகுவர்த்தி ஓயத் துவங்கியது. திரியெல்லாம் கருகி, வரவர மங்கலாகிக்கொண் டிருந்தது; சூழ்ந்திருந்தோர் முகங்கள் எல்லாம் இருளடைந்து வெறும் நிழல்களாகிக்கொண்டிருந்தன.

இந்தப் புதிய சூழ்நிலைக்குத் தகுந்தபடி பழகப் பியோடரால் முடியவில்லை. அங்கிருந்த யாரும் அவனைச் சட்டை செய்ததாகவே அவனுக்குத் தோன்றவில்லை. அப்படி ஏன்தான் பிறர் அவனைப் பொருட்படுத்த வேண்டும்; எல்லா வகை முக்கியத்துவமும் தர வேண்டும். அவன் ஒரு கமிசார்தான்! அதனாலென்ன? ராணுவச் சமாச்சாரங்களில் எதையும் உருப்படியாக விவாதிக்க அவனால் முடியாது; அரசியற் கருத்துக்களைப்பற்றி மணிக் கணக்கில் பேசத்தான் அவனால் முடியும். அந்த அரசியல் விளக்கங்கள் இப்பொழுது யாருக்குத் தேவை? என்றாலும்கூட அவனால் இந்த அசட்டைத்தனத்தைப் பொறுக்க முடியவில்லை. ''இருக்கட்டும், இருக்கட்டும். இவர்கள் அத்தனை பேரும் நம்மிடம் வராமலா போகப்போகிறார்கள். அப்பொழுது ஒருவரை ஒருவர் சரியாகப் புரிந்துகொள்ளுவோம். அதுவரை பேசாமல் பின்னணியில் இருப்பதே நல்லது'' என்று தனக்குள்ளே முடிவு செய்துகொண்டான் பியோடார்.

அவனோடு தோளிணைந்து ஒரு குடும்பமாகப் பழகிய ராணுவத் தோழர்களுடனும் விலகித்தான் பியோடார் இருந்தான். அவர்களது மிடுக்கையும், எடுப்பையும் கண்டு பொறாமைப்படவும் ஆரம்பித்தான். இந்த வறட்டுப் பயல் பெட்கா. அவன்கூட இங்கே பெரிய மனிதனாகிவிட்டான். எல்லாம் தெரிந்தவன்போலப் பகட்டுகிறான். ஆனால் பியோடார் கிளிக்கோவ் வேண்டுவார் அற்று இருக்கிறான். அந்தச் சப்பாயேவை எல்லோரும் இப்படி ஆராதித்துப் பணிகின்றார்களே! யாரிடமாவது ஏதாவது ஒரு வார்த்தை சொல்ல வாயெடுத்தால் எல்லோரும் கூடிநின்று கேட்கிறார்கள்; அவனுடன் பேசுவதே பெருமை என்று கருதுகிறார்கள். அவன் வாய்திறந்து யாரையாவது கொஞ்சம் புகழ்ந்துரைத்துவிட்டால் போதும். அவன் உச்சி குளிர்ந்துவிடுகிறது. மறக்க முடியாத மணிமகுடமாக அப்புகழுரையை ஏற்றுப் புளகாங்கித மடைகிறான். சப்பாயேவுடன் ஒன்றாக அமர்ந்திருப்பதும், மனம்விட்டு உரையாடுவதும், எண்ணம் கலங்கக் கைகுலுக்குவதும் பிறவிப் பெருமைக்குரிய செயல்கள் என்றே அனைவரும் கருதினர்! அந்த நிகழ்ச்சியைப் பின்பு எல்லோரிடமும் சொல்லிச் சொல்லித் தங்கள் திறமையையும் தகுதியையும் விளம்பரப்படுத்திக் கொள்ளுவார்கள். இத்தகையோருடைய சூழ்நிலையில் தாமரை இலைத் தண்ணீராகத் தத்தளித்தான் பியோடார்.

இருண்டு கிடந்த குடிசையைவிட்டு வெளியேறிச் சற்று தொலைவிலுள்ள வயலுக்குப் புறப்பட்டான் பியோடார். அப்பொழுது குடிசைக்குள்ளிருந்து இசை முழக்கம் எழுந்தது. உடனே மீண்டும் திரும்பிவந்தான். ஒரு மேசையில் உட்கார்ந்தபடி பாடலை ரசித்துக்கொண்டிருந்தான்.

அந்தப் பாடலுக்கு இசை யமைத்தவன் சப்பாயேவ்தான்! அவனுடைய தொண்டை வெண்கல ஓசை போன்றது, என்றாலும் எடுத்தவுடன் கரகரப்பாகவே ஒலிக்கும். அந்தக் குரலொலி கேட்டுப் பழகிப்போனவர்களுக்கு அவனுடைய பாடல் அனைத்தும் கற்கண்டாய் இனிக்கும்; உணர்ச்சி பொங்க அவன் பாடும்பொழுது கேட்பார் உள்ளமெல்லாம் பொங்கியெழும். அவனுக்கு மிகவும் பிடித்த ஐந்து பாட்டுக்களையே அவன் அடிக்கடி பாடுவான். அடிக்கடி கேட்ட அப்பாடல்கள் முழுவதையும் எல்லோரும் அறிவர்; உணர்ச்சி உந்தப் பாடும்பொழுது குரல்வளையே தெறித்துவிடுவது போலக் கத்திப் பாடுவான்; என்றாலும் பாட்டின் இனிமை கெட்டுவிடாது; பொருளும் சிதைந்துவிடாது. ஒரு முறை கத்திப் பாடினால் அவனுடைய தொண்டைக் கரகரப்பு நாலைந்து நாட்களுக்கு நீங்காது. பாட முடியாதபொழுது சப்பாயேவ் உணர்ச்சியற்றுத் திரிவான். பொழுதுபோக்கவழிதெரியாது திண்டாடுவான். எத்தகைய இக்கட்டான சூழ்நிலையாயினும், வழிநடைக் களைப்பு எவ்வளவு கொடுமையாயிருப்பினும், போராட்ட எண்ணம் எவ்வளவு பயங்கரமாயிருப்பினும், தொடர்ந்த வேலைக்குப்பின் எவ்வளவு சோர்வுற்றிருப்பினும், பத்து நிமிடங்களாவது வாய்விட்டுப் பாடிவிடுவான் சப்பாயேவ். பாடியவுடன் புத்துணர்ச்சியும் பொலிவும் பெற்றுவிடுவான். பாட்டென்றால் அவனுக்குச் சுவையான ரொட்டி, சுகமான தண்ணீர். வெறியோடு பாடும்பொழுது அவனுக்கு வேறெதுவும் வேண்டாம். பாட்டுமீது இவ்வளவு பிரியமுள்ள வேறு ஒருவனை நாம் காண முடியாது. அவனுடைய நண்பர்களும் அப்படித்தான். இயன்ற அளவு சேர்ந்துபாடி மகிழ்வார்கள். வழிநடைப் பாட்டாலும், போர்ப் பாட்டாலும் களைப்பை மறப்பார்கள்.



மாலுமிப் பையா! அழகிய பையா!
உனக்கு வயது இருபது ஆகிறது.
என்னைக் காதலித்து என் இதயத்தை மகிழ்வி,
இப்பொழுது உன் பதில் எதுவாய் இருக்குமோ?

இந்தப் பாடலைச் சாதாரணமாகவும் குழப்பமாகவும் தொடர்ந்து பாடினார்கள். இந்தப் பாடலை அதன் இசை

நயத்துக்காக சாப்பாயேவ் பெரிதும் விரும்பினுன். அவர்களுடைய அமைதியற்ற போராட்ட வாழ்க்கைக்கும் ஊர் சுற்றித் திரியும் வாழ்க்கைக்கும் இயைந்து இது இருந்தது.

அலேகளின்மீதும் நுரைகளின்மீதும்
ஒருநாள் வீட்டிலும் பிறகு தொலேவிலுமாக இருக்கிறீர்கள்!
நுரைமீது, நுரைமீது, நுரைமீது,
ஒரு நாள் வீட்டிலும் பிறகு தொலேவிலுமாக இருக்கிறீர்கள்!

இந்தப் பாடலே எல்லோரும் சேர்ந்து பாடினுர்கள். நீல வானத்தில் முழங்கும் பேரிடிபோல முழங்கிப் பாடினுர்கள். இந்தப் பாடலின் இசைநாதம் ஸ்டெப்பி முழுதும் எதிரொலித்தது.

அத்தமான் சுர்க்கினேயும் ஸ்டீபன் ராசினேயும்பற்றிய பாடல்களே அவர்கள் விரும்பிப் பாடினுர்கள்.

இரும்புக் கதவுக்குப் பின்னே இருக்கும் சிறைக் கொட்டடியின் முடை நாற்றத்தில்,
மலேயில் வளர்ந்த கழுகு ஏக்கமுற்று வாடி வருந்தியது.

இன்னும் இதுபோன்ற இசைமுழக்கம் எழுந்துவிட்டது. எல்லோரும் பாடினர். நள்ளிரவுவரை தம்மை மறந்து பாடினர். அப்பாட்டிலே எழுந்த உணர்ச்சி நாதம் அவர்களே மயக்கித் துயில்கொள்ளச் செய்துவிட்டது!

பொழுதுபுலரும் முன்னர் ஸ்லோமிகின்ஸ்காயாவை நெருங்கித் தாக்க வேண்டுமென்று திட்டமிடப்பட்டிருந்தது. மூன்று படைப்பகுதிகளாகப் பிரிந்து ஒரே சமயத்தில் மும்முனைத் தாக்குதலே நடத்த வேண்டும். டலோவ்காவில் உள்ள இந்தப் பிரிவினர் நடுவில் நின்று கிராமத்தை நேரடியாகத் தாக்க வேண்டும். இதர இரண்டு பிரிவுப் படைகளும் அரை வட்டமாகச் சூழ்ந்து கிராமத்தை மடக்க வேண்டும்.

டலோவ்காவில் தங்கியுள்ள இப்படையினர் இன்னும் ஓரிரு மணிக்குள் தங்கள் போர்ப் பயணத்தைத் துவங்க



வேண்டும். ஆனுல் எல்லோரும் ஆழ்ந்த நித்திரையில் லயித்துள்ளனர். தலேக்குமேல் நிற்கும் பெரும் போரின் சுவட்டைக்கூட உணராது உறங்கிக்கிடந்தனர்.

பியோடாரால் தூங்க முடியவில்லே. ஒரு கொஸாக்கியக் குதிரைச் சேணத்தின் மீது தலேசாய்த்தவாறு வெறுந்தரையில் முடங்கிக்கிடந்த அவனேத் தூக்கம் தழுவ மறுத்துவிட்டது. போதிய வசதியின்மை ஒரு புறம், மறு நாள் துவங்கப் போகும் போரைப்பற்றிய பயங்கர எண்ணச் சுழல் மற்ெருரு புறம், இவை யிரண்டும் சேர்ந்து அவன் இமைகளே மூடவிடாது தடுத்துவிட்டன.

ஆனுல் மற்றவர்களுக்கோ எத்தகைய எண்ணமும் இல்லே; பீதியும் இல்லே. பல தடவை போர்க்களம் கண்டு விழுப்புண்பட்ட வீரர் பலர் உண்டு; உடலெல்லாம் சல்லடையாகத் துளேக்கப்பட்டு ஊனமாகியும் அயராது போர்முரசம் ஆர்த்துவந்த வீரர் திலகங்கள் பலருண்டு; அவர்களுக்கு இந்த இரவில் ஏதும் புதுமையில்லே; எனவே என்றும் போலவே தூங்கினர். இது போராட்டத்திற்கு முந்திய இரவு இல்லேயா! அதனுல் என்ன? இது ஒன்றுதான் குறட்டைவிட்டுத் தூங்க வசதியான இரவு அவர்களுக்கு. இப்படித் தூங்க இனி என்று வாய்க்குமோ? என்றுலுங்கூட அவர்களில் பலர் முதன்முதலில்போராட்ட முனேக்குச் சென்ற காலத்தில், போருக்கு முதல் நாள் இரவில் இப்படித்தான் அவஸ்தைப்பட்டிருப்பார்கள்; பியோடாரைப்போல எண்ணி எண்ணிக் குமம்பியிருப்பார்கள்; புரண்டு புரண்டு படுத்திருப்பார்கள். புதிதாகப் போர் முனேக்குச் செல்லும் எவருக்கும் ஏற்படும் மனக்கலக்கம் தான் பியோடாருக்கும் ஏற்பட்டிருந்தது.

ஏதோ மனச்சுமை பெரிதாகிவிட்டதுபோல உணர்ந்தான் பியோடார். இதற்கு முன் கண்டறியாத ஒரு வகை உணர்ச்சிவெள்ளம் உடலெங்கும் பரவியதை உணர்ந்தான். சுற்றிலும் கண் சுழற்றிப் பார்த்தான். தரையெங்கும்

அலங்கோலமாகப் படுத்துக் கிடக்கும் ராணுவ வீரர்களின் குவியல்களை மங்கிய விளக்கொளி காட்டியது.

"இப்படித்தானே போர்க்களத்தில் வீரர்களின் சடலங்கள் பின்னிக் குவிந்து கிடக்கும். உடல் சிதைந்து, உருக்குலைந்து, இரத்த வெள்ளத்தில் குவியல் குவியலாகக் கிடக்கும். சுழல் துப்பாக்கிகளால் துளைக்கப்பட்ட சடலங்கள் வரிசை வரிசையாகச் சிதைந்து கிடக்கும்" என்ற எண்ணம் காட்சியாக உருவெடுத்து அவன் கண்களின் முன்னர் நிழலாடியது!

மங்கிய விளக் கொளியில் எல்லோரது முகத்திலும் பிரேதக்களை படர்ந்துள்ளதுபோல உணர்ந்தான்; அவர்கள் விடும் குறட்டை ஒலிகளும் பெருமூச்சொலிகளும் போர்க்களத்துப் புலம்பல்போல அவன் காதுகளில் பாய்ந்தன.

இதற்கு மேல் பியோடாரால் அங்கிருக்க முடியவில்லை; தாங்க முடியாது என்ற உணர்வும் அவனுக்கு இருந்தது. குடிசையைவிட்டு ;மீண்டும் வெளிக்கிளம்பினான். வெளியிலே பனி மூடிய நள்ளிரவின் குளிர் காற்று வீசிக்கொண்டிருந்தது. இருள் செறிந்த சுற்று வெளியில் பரிபூரண அமைதி நிலவியது. வான வெளியில் மங்கலாகக் கண் சிமிட்டின விண்மீன்கள்; இதமான காற்று எங்கும் வீசிக்கொண்டிருந்தது.

நெருப்புக்கு இரையாகிக் கருகி நின்ற வீடுகளைக் கொண்ட அக் கிராமத்தில் இராக் காவல் புரிந்தவர்கள் வெட்ட வெளியில் நின்றுகொண்டிருந்தார்கள். அங்கும் இங்கும் எரிந்து அணைந்துகொண்டிருந்த நெருப்பு மூட்டங்களின் மங்கலொளியில் கூனிக் குறுகி உட்கார்ந்திருந்த சிப்பாய்களின் உருவம் தெரிந்தது. இராக் காவல் புரியும் அவர்கள் அனைவரும் பியோடாரைப்போலவே உறக்கமின்றிப் பொழுதைக் கழித்துக்கொண்டிருந்தனர். சண்டைக்கு முந்திய அந்த நீண்ட இரவைத் தள்ள முடியாது தவித்துக்கொண்டிருந்தனர். உணர்ச்சி யற்றவர்களாகச்



சுள்ளிகளை நெருப்பில் போட்டனர். அனைத்தும் ஈரம் தோய்ந்த பச்சைச் சுள்ளிகள். அந்த ஸ்டெப்பிப் பகுதியில் காய்ந்த விறகே கிடைக்காது. இந்த ஈரச் சுள்ளிகளைப் போட்டதும் எரிந்த நெருப்பு அணைந்துவிடும். உடனே நிலக் கரிகளை அள்ளிப்போடுவார்கள். கரும் புகை எழும்; உடனே நெருப்புப்பற்றி எரியும். அவ்விதம் நன்கு எரிந்துகொண்டிருந்த நெருப்பு மூட்டத்தின் அருகில் மூன்று நான்கு இளைஞர்கள் அமர்ந்து உல்லாசமாகப் பொழுதுபோக்கினர். சூப்பும் தேத்தண்ணீரும் சுடவைத்தபடி வேடிக்கைக் கதைகள் பேசி, விழுந்துவிழுந்து சிரித்துக்கொண்டிருந்தனர்.

அத்தனை நெருப்பு மூட்டங்களாலும் பற்றிக் கிடந்த இருளை அகற்றிவிட முடியவில்லை. இருளின் கருமை பெருகிக்கொண்டே யிருந்தது. ஸ்டெப்பிப் பிரதேசம் முழுவதும் மரண அமைதியை நிலவச் செய்தது, அந்தக் காரிருட்டு வெள்ளம்.

இத்தனை அழிவுகட்கு இடையிலும் ஓங்கி வளர்ந்த ஒட்டகங்கள் பவனி சென்றுகொண்டிருந்தன. தூங்கி எரிந்த நெருப்பொளி பட்டு நிழல் வீசியபடி இருட்டில் கலந்து மறைந்தன. அதைத் தொடர்ந்து சில உருவங்கள் தோன்றின. நொடிப்பொழுதில் எல்லை காண முடியாத இருட் கடலில் இரண்டறக் கலந்துவிட்டன. இவ்விதம் எல்லா வகையிலும், நிலையிலும் ஒரு குறிப்பிட்ட நோக்கமும் செயல்முறையும் புலப்பட்டது. எதையோ எதிர்பார்த்துக் காத்திருக்கும் போக்கு விளங்கியது. தீர்க்கமான ஒரு முடிவு நோக்கிச் செல்ல இருக்கும் திட்டம் தெளிவாகியது. அந்தக் காரிருட்டு உள்பட அத்தனை பேரும் நாளை துவங்கப் போகும் போராட்டத்திற்காகவே காத்திருப்பது வெளியாகியது.

பியோடாரும் அப்படித்தான் காத்திருந்தான். பின்னரும் இப்படி எத்தனையோ முறை அவன் காத்து இருக்கப் போகிறான். தூங்கிக்கிடந்த செஞ்சேனை வீரர்களைத் தாண்

டித் தாண்டி உலாவி வந்தான். இப்படிப்பட்ட ஒரு நாள் இரவில் போராட்ட எல்லை வழியாக அவன் சென்றான். தூங்கிக்கொண்டிருக்கும் செஞ்சேனை வீரர்களின் தலைகளைத் தாண்டிக்கொண்டு அவன் சென்றான். இவர்களின் போராட்டம் பற்றிய சிந்தனை அவன் மூளையில் நிறைந்து இருந்தது. உள்நாட்டுப் போரில் பெயரும் புகழும் இன்றி எத்தனையோ வீரர்கள் இப்படி மடியப் போகின்றனர். அவனது எண்ணம் உலாவத் தொடங்கியது :

“இந்தச் செஞ்சேனைச் செல்வங்கள் எல்லோரும் களைப்பின் மிகுதியால் மெய்ம்மறந்து இங்கே தூங்குகிறார்கள். ஆனால் நாளை, பொழுது புலரும் நேரத்தில், போராட்ட முனையில் தம்மை மறந்து ஈடுபடுவார்கள்; எதிர்த் தாக்குதலை முறியடித்துப் பாய்ந்து முன்னேறுவார்கள். பனிப்பாறை யிடுக்குகளிலும், படுகுழிப் புதர்களிலும் பதுங்கிப் பதுங்கிப் போரிடுவார்கள். இன்று தூங்கும் பலர், நாளைப் போராட்டத்தில் மீளாத் தூக்கத்தில் ஆழக் கூடும். என்றுமே எழமுடியாத வீர மரண நித்திரையில், பனிப்பாலைவனத்தில் ஆழ்ந்துவிடுவார்கள். மிகச் சாதாரணமான ஒவ்வொரு எளிய வீரனும் தன்னால் இயன்ற அளவு தாய் நாட்டுப் பணிபுரிவான்; தன் உயிரையே தந்து உரிமை காத்து நிற்பான். போராட்ட முனையில் திடீரெனத் தோன்றி, இயன்றவரை போரிட்டு, இல்லாதொழிவார்கள் பலர்! நாட்டு நலனுக்காத் தங்களையே அழித்துக்கொள்வார்கள். எந்த அடையாளமும் தெரியாது அழிவுறுவார்கள். தங்களிடமுள்ள எல்லாவற்றையும் இறுதிப் பணயம் வைத்து எவர்க்கும் தெரியாது தங்களையே தியாகமாகத் தருவார்கள். அவர்களை ஏற்றுப் போற்றுவார்க்காகவோ, போற்றிமாலை சூட்டிப் புகழ்வார்க்காகவோ காத்திராது கடமைகளைச் செய்து மடிவார்கள்; கவனிப்பார் இன்றிக் கடலில் கரைத்த காயமாக மறைவார்கள்; அக்கினிக் குழம்பில் பட்ட பஞ்சுத் துகளாவார்கள்.” இந்த நீண்ட



எண்ணத்தால் செயல் மறந்து உலாவி வந்தான் பியோடார்!

சமீபத்தில் எரிந்த நெருப்பின் அருகில் ஒரு இளைஞன் அமர்ந்திருக்கக் கண்டான். சுருண்ட தலைமயிர்கள் நெற்றியில் புரள, குனிந்தபடியே உருளைக் கிழங்குகளைச் சுட்டுக்கொண்டிருந்தான் அவ் விளைஞன். தன்னுடைய துப்பாக்கி முனையால் நெருப்பில் கிடந்த உருளைக் கிழங்குகளைப் புரட்டிப் போட்டான். நன்கு வெந்த கிழங்குகளை அந்த முனையாலேயே குத்தி எடுத்தான். சாம்பலைத் தட்டி ஊதிவிட்டு, வெகு சுவாரசியமாக அதை வாயில் போட்டுக்கொண்டான். உருளைக் கிழங்கைச் சுவைத்துக்கொண்டே நெருப்பைப் பார்த்தபடி அவனும் அசையாது உட்கார்ந்திருந்தான். அவனையும் எண்ண வலைகள் பின்னிக்கொண்டனவோ? அவன் எதைப்பற்றி எண்ண வேண்டும்? தான் பிறந்து வளர்ந்த கிராமத்தையா, தான் மேற்கொண்டு வந்திருக்கும் போர்க் கோலத்தையா, அன்றி நாளைத் துவங்கப் போகும் உயிர்ப் போராட்டத்தையா? எதைப்பற்றி இப்படி நீண்ட சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறான்? என்ன சிந்தனையானாலும் இவனும் போர்க்களம் போய்த்தான் தீருவான். போரில் என்ன நேருமோ? அவன் உடலெல்லாம் துளைக்கப்படக் கூடும்; கரங்கள் துண்டிக்கப்படக் கூடும். தலை நொறுங்கி விடக்கூடும். இரத்தம் கசிய உடல் நலிந்து பிணம் போல் கிடப்பான். கால் கைகளை நீட்ட முடியாது பரிதவித்து முனகுவான். பரிவுடன் பார்ப்பவர்களால்கூட ஏதும் செய்ய வகையின்றி இரக்கமின்றிக் கைவிடப்படுவான். நாட்டுக்காக எல்லாக் கொடுமைகளையும் அவன் ஏற்றுப் பொறுப்பான். அவனுடைய உடம்பு முழுதும் பயங்கரமான ரத்தக் காயங்கள் இருக்கும். அவனுக்கு இருக்கும் நேர்த்தியான சுருட்டை ரோமந்தைக் கத்தரித்து, அவனுடைய உருண்டைத் தலையை மழுங்கச் சிரைத்து விடுவார்கள்; ஊசிகளாலும் கத்திகளாலும் துளைக்கப்

பட்டு ரத்தக் கறை தோய்ந்த உடலைச் சுற்றி அது உருண்டு கிடக்கும்.

அவனுக்கு அடுத்தாற் போல் சிவப்புத் தாடியுள்ள சிறிய குடியானவன் ஒருவன் இருந்தான். அவனை இளைஞன் என்று சொல்ல முடியாது; வயது நாற்பது இருக்கலாம். இவர்கள் இருவரும் ஒருவருடன் ஒருவர் பேசாமல் இருந்தார்கள்; தங்களுடைய எண்ணங்களிலே தோய்ந்து இருந்தார்கள். இந்தக் கணத்தில் தங்களுடைய வாழ்க்கை மற்றவர்களுடன் ஒன்றிக் கிடப்பதாகவும், பிறரிடமிருந்து தனித்து இருப்பதாகவும் விரைவாகவும் படபடப்பாகவும் கருதினார்கள். இப்படிப்பட்ட சிந்தனைகளில் தோய்ந்திருந்த படியால் பேசுவதற்கு அவர்களுக்கு நேரமில்லை. அது அந்த இடத்துக்குப் பொருத்தமாய் இராது. கல்லாய்ச் சமைந்துவிட்டவன் போல, சிவப்புத் தாடியுள்ள அந்தக் குடியானவன் அசையாமல் உட்கார்ந்து இருந்தான். தனது இரு கைகளை வயிற்று அருகே மடக்கி வைத்திருந்தான். குளிர்ந்து போயிருந்த தனது காலை அவன் பக்கமாக நீட்டிக் கண் இமையாமல் தூக்கக் கலக்கத்துடன் நெருப்பைப் பார்த்தபடி இருந்தான். மற்றவர்களின் உடல்களைப் போலவே இவனுடைய உடலும் பனி படிந்த வெளிப் பரப்பில் கிடக்கக் கூடும்; கறுத்தும் சிவந்தும் இறந்தும் சுத்தமான பனிச் சமக்களத்தின் மீது கிடக்கக் கூடும். அவனுடைய பொட்டிலிருந்து ஒழுகிய சிவந்த ரத்தத்தின் சுவட்டைத் தவிர வேறு எதையும் காணமுடியாது போகும்.

தனது மெல்லிய கரங்களை வயிற்றின் முன்னே அவன் மடித்து வைத்துக் கொண்டிருப்பதை இனி நாம் காணமுடியாது. பனி வெளியில், காணமுடியாத ஆணியால், சிலுவையில் அறையப் பெற்றதைப் போன்று அவனுடைய கரங்கள் விறைத்து நீட்டிக்கொண்டு கிடக்கும். அவனுடைய கண்களும் உன்னிப்பாகப் பார்த்துக்கொண்டு இருக்கும்.



ஆனால் இறந்த உடம்பிலிருந்தபடி பார்க்கும். அவன் மட்டிலும் என்ன? அங்குள்ள எல்லோரும் அப்படித்தான் தியாகம் புரிவார்கள். அத்தியாகத்திற்குச் சான்றான சடலங்கள் எங்கும் குவிந்து கிடக்கும்.

இந்த மரணச் சித்திரங்கள் பியோடாரின் நினைவுத் திரைகளில் சுழற்காற்றாய் மோதின. அந்த மோதுதலைத் தாங்காதவனாய்த் திரும்பி வந்துகொண்டிருந்தான்.

"அங்கே யார் போகிறது?" என்று கடுமையாகக் கேட்டான் பாராக்காரன்.

"உங்கள் நண்பன்தான் தோழரே!"

"அப்படியானால் சங்கேத பாஷை யென்ன?"

"அம்புக் குண்டு."

இதைக்கேட்டு பாராக்காரன் தன் வலதுகைத் துப்பாக்கியை இடது கைக்கு மாற்றியவண்ணம் இருட்டில் மறைந்தான்.

பியோடார் மீண்டும் குடிசைக்குள் நுழைந்தான். இன்னும் குறட்டை யொலியும் பெருமூச்சும் எதிரொலித்துக்கொண்டே யிருந்தன. தூங்கிக் கிடப்பவர்களுக்கு இடையில் இருந்த கொஞ்சம் இடை வெளியில் இவனும் சுருண்டு படுத்துக்கொண்டான். இதுவரை வர மறுத்த தூக்கம், அவனும் அறியாமலே அவனை ஆட்கொண்டது!

இன்னும் கரியிருட்டுக் கரையவில்லை. அதற்குள் டலோவ்காவைவிட்டுப் புறப்பட்டனர், வீரர் திருக் கூட்டத்தினர். ஆர்தர் துறைமுகத்தை நோக்கிச் செல்லக் குதிரைகளையும் வாகனங்களையும் தயார் செய்தனர். அவர்கள் உடலெங்கும் உதறல் எடுத்தது; தூக்கக் கலக்கத்தில் பலர் கொட்டாவிவிட்டபடி நெட்டி முறித்தெழுந்தனர். அதிகாலைப் பனிக்காற்று அங்கமெல்லாம் நடுங்கச் செய்தது; ராணுவச் சட்டைகளையும் கம்பளி உடைகளையும் ஊடுருவிப் பாய்ந்தது; அனைவரும் புறப்பட்டனர்.

பேசாது சவாரி சென்றது. துரிதமாகக் குதிரைகள் பாய்ந்து சென்றன. ஆர்தர் துறைமுகத்தை நெருங்கி வந்து கொண்டிருந்தனர். விடியற்காலையின் மந்த இருட்டைக் கிழித்துக்கொண்டு சில வெடிகுண்டுகள் வானில் வெடித்துச் சிதறுவதைக் கண்டனர்.

"போர் மூண்டுவிட்டது!" என்முன் சப்பாயேவ் துடிப்புடன் பியோடாரிடம்.

"ஆம்!" என்முன் பியோடார்.

மீண்டும் பேச்சின்றிக் குதிரைகளைத் தட்டிவிட்டனர். அவர்களது இரத்த ஓட்டத்தைப்போலவே குதிரைகளும் பீறிட்டுப் பாய்ந்தன. அமைதியிழந்த நெஞ்சத்துடன் செய லூக்கம் உந்தப் போர்க்களம் விரைந்தனர். கோழை மனம் படைத்தவனும் கொடுவீரனுக மாறிவிட்டாற் போன்ற உணர்ச்சிபெற்முன். போர்க்களத்திலும் வீடுபற்றி எரியும் போதும் அமைதியாயிருக்க எந்த மனிதனுலும் முடியாது; அப்படி இருப்பதாகப் பகட்டுவதும் வெளி வேடம். இக்கட்டான சூழ்நிலைகளைக் கண்ட பின்னரும் சாவதானமாகயிருக்கவும் சாந்திப்படுத்திக்கொள்ளவும் முயலலாம். தன்னையே கட்டுப்படுத்திக்கொண்டு, உணர்ச்சிகளை யடக்கிக் கொண்டு அமைதியாயிருக்க முயலலாம். அது அவரவர்களுடைய மனோதிடத்தையும் வாழ்க்கை அனுபவத்தையும் பொறுத்தது. எல்லோரும், எல்லாச் சூழ்நிலையிலும் அப்படி இருந்துவிட முடியாது. அதுவும் முன்பின் அறியாத போர்க்களத்துச் சூழலில் அமைதியாக இருக்க எவராலும் இயலாது; என்றென்றும் முடியாது.

பல போர்க்களம் கண்ட சப்பாயேவிற்கும், புதிய வீரனை பியோடாருக்கும் இத்தகைய அனுபவமே ஒரு சேர ஏற்பட்டது. உடலெங்கும் உணர்ச்சி கொப்புளிக்கச் செயலறியாத் திகில் ஒன்று ஏற்பட்டது. அது மரண பயத்தாலோ அழிவுகண்ட அச்சத்தாலோ ஏற்பட்டதன்று. உணர்ச்சிக் கொந்தளிப்பின் உச்ச நிலையாலும்,



எண்ணங்களின் விழுமிய நிலையாலும்,நம்பவும் நிதானிக்கவும் முடியாத விரைவுணர்ச்சியாலும் ஏற்பட்ட உணர்ச்சித் திகில்தான் அப்படி உந்தியது! எதற்காக இவ்வளவு அவசரம்; விநோதமான இந்தப் பரபரப்பு. இதை யாராலும் தெரிந்துகொள்ளமுடியாது.வேகமும்,விரைவும்,சுருக்கமான பேச்சும், அவசரப் பார்வைகளும்; இந்தக் கணத்தில் அவன் அவசரப்படத்தான் வேண்டும் என்பதைக் காட்டுகின்றன.

சப்பாயேவிடம் என்னமோ கேட்க வேண்டு மென்று பியோடார் துடித்தான்; அவனுடைய நினைப்பையும், கருத்தையும், செயல் திட்டத்தையும் அறிய விரும்பினுன். உணர்ச்சியாலும், உக்கிரத்தாலும் கன்றிச் சிவந்திருந்த அவனுடைய முகத்தையும், துடிதுடிக்கும் கண் நோக்கையும், உடலெங்கும் பரவிக் கிடந்த விரைவையும் கண்டவுடன் பேசாது வாய் மூடிக்கொண்டான் பியோடார். கடைசியாக ஆர்தர் துறைமுக நகர் எல்லையை அடைந்தனர். அவர்களுக்கு முன் தளவாட ரயில்கள் வந்து சேர்ந்துவிட்டன. அழிந்து கிடந்த அரை குறை வீடுகளின் அருகில் வண்டிக்காரர்கள் கூடி யமர்ந்திருந்தனர். சிலர் சூடான தேத்தண்ணீரை அவசரம் அவசரமாக வாயில் ஊற்றிக் கொண்டனர்; பலர் போதுமான அளவு காலை யுணவை அடைத்துக்கொண்டனர். அவர்கள் அருகில் வந்ததும் குதிரையினின்று கீழே குதித்தான் சப்பாயேவ். ஓடிச் சென்று பக்கத்தில் இருந்த குட்டிச் சுவரின்மீது ஏறி நின்றபடி தொலை நோக்கிக் கண்ணுடியை எடுத்தான்; வெடிகுண்டுகள் வானில் பாய்ந்துகொண்டிருந்த திசையை நோக்கிக் கண்ணோட்டம் செலுத்தினுன். அப்பொழுது பயங்கர இருள் கழிந்துகொண் டிருந்தது; பகலவன் ஒளி பாய்ந்து வந்தது. இங்குச் சில விநாடிகள் தங்கியபின் மீண்டும் புறப்பட்டனர். வழியில் ஒரு நாட்டுப்புறத்து வண்டி சென்று கொண்டிருந்தது; அதில் ஒரு உருவம் சிதைந்த போர்வையால் மூடப்பட்டுக் கிடந்தது.

"வண்டியிலே என்ன, தோழரே! மூடியிருக்கு?"

"ஒரு காயம்பட்ட வீரன் ஐயா!"

பியோடார் வண்டிக்குள் நிதானமாகப் பார்த்தான். கம்பளிப் போர்வையின்கீழ் சலனமற்றுச் சோர்ந்து கிடக்கும் வீர னொருவனின் உருவம் புலப்பட்டது. பாதையை விட்டுக் குதிரையைத் தட்டிவிட்டபடி சப்பாயேவ் தாண்டிச் சென்றான். பியோடார் வண்டியின் பக்கத்தில் வந்தான்.

"ரொம்பக் காயம் பட்டுவிட்டதோ?"

"ஆம். தலையிலும் காலிலும் பலத்த அடி."

"நல்லாக் காயத்தையெல்லாம் கட்டிவிட்டாயா?"

"ஆமாமாம். முடிஞ்சவரைக்கும் இரத்தம் வழியாது கட்டுப் போட்டிருக்கிறோம்."

அப்பொழுது வண்டிக்குள் கிடந்த மனிதன் பரிதாபமாக முனகினான். நீண்ட பெருமூச்சுடனும் துடிப்புடனும் போர்வையை நீக்கியபடி, இரத்தம் தோய்ந்த தலையை வெளியில் நீட்டினான். அரைகுறையாகக் கண்களைத் திறந்தபடி பியோடாரைக் கெஞ்சும்வண்ணம் பார்த்தான். அவனுடைய பார்வை என்னனென்னவோ பேசுவது போலிருந்தது :

"ஆம்...சகோதரனே! சில மணி நேரத்துக்கு முன் உன்னைப்போல முழு மனிதனாக, உடல் நலம் வாய்ந்த பெரு வீரனாகத்தான் நானும் இருந்தேன். இப்பொழுது என்னைப் பார்...உருக்குலைந்து சிதைந்து முடமாக்கப்பட்ட என்னைப் பார். என்னால் முடிந்தவரை, உடலால் இயன்றவரை, நாட்டு நலம் காக்க ஓடித் தாக்கினேன்; உருக்குலைக்கப்பட்டு பிணம்போலாகி விட்டேன். என்னைப்போலப் பலர் தங்கள் கடமைகளைச் செய்துகொண் டிருக்கிறார்கள் அங்கே! இது அவர்களுடைய முறை; உடல் நலிந்து ஊனமடைந்ததால் நான்கொஞ்சமும் அவமானம் அடையவில்லை; மாறாகப் பெருமிதமும் பெருமையும் கொள்கிறேன். நீயும் அவ்விதமே போராடு; பெருமையடை; இப்பொழுது என்னைச் சுமந்து செல்லுகிறார்கள்."



காயமடைந்த வீரனுடைய கனிவுப்பார்வை இவ்வளவு சிந்தனைகளைப் பியோடாரின் நெஞ்சத்தில் விதைத்தது. குற்றுயிரான வீரனைக் கண்கொண்டு பார்க்க அவனால் முடியவில்லை; நெஞ்சு பொறுக்கவில்லை. இவன்தான் முதலில் வீழ்ந்தவன். இவனைப் போல இன்னும் எத்தனை பேர் இப்படிப் போர்க்களத்தில் துடிக்கிறார்களோ? அவர்களைப் பார்த்துச் சகிப்பதெப்படி? நாலு முறை பார்த்துப் பழகிவிட்டால் அதுவும் சர்வ சாதாரணமாகிவிடும். ஆனால் முதன்முதலில் காணும் இந்த வீரன்,நெஞ்சு தாக்கும் அவன் நிலை'முதலில் தரப்பட்ட அவனது தியாகப் பரிசு, பியோடரால் தாங்க முடியவில்லை!

இது மட்டுமின்றிப் பல பயங்கர எண்ணங்கள் பியோடாரின் தலையைக் கிறங்கச் செய்தன; டலோவ்கா முகாமிலும், பிற இடங்களிலும் அவன் கண்ட காட்சிகள் முந்தி நின்றன. நேற்றிரவு துப்பாக்கி முனையால் உருளைக் கிழங்கைச் சுட்டுத் தின்றுகொண்டிருந்த இளைஞன் உட்படப் பலர் தோன்றித் தோன்றி மறைந்தனர்.

அதற்குள் சப்பாயேவ் வெகு தூரம் போய்விட்டான். பியோடாரும் குதிரையைச் சுண்டினான். அதற்குள் போரெல்லையை நெருங்கிவிட்டனர்.

அங்கு ஏராளமான வண்டிகள் நிறைந்திருந்தன; துப்பாக்கிகளும் குண்டுகளும் ஏற்றிய வண்டிகள் ஒரு புறம் வந்துகொண்டிருந்தன; காயம் அடைந்தவர்களைத் தூக்குவதற்கு வேறு சில வண்டிகள் விரைந்தன. குருதிபாயும் உடலோடு சோர்ந்துகிடந்த மனித உடல்களைக் குவியலாக ஏற்றிக்கொண்டு பல திரும்பிச் சென்றன!

"நம்மவர்கள் வெகு தூரம் சென்றுவிட்டனரா?"

"அவ்வளவு தூரமில்லை; ஐந்தாறு மைல் இருக்கலாம்."

அவர்கள் சென்றுகொண்டிருந்த இடத்திற்கு வலது பக்கத்தில் ஊஷென் நதி ஓடிக்கொண்டிருந்தது. அதன் மறு கரையில் பல கிர்கிஷியக் கிராமங்கள் உள்ளன. அக் கிராமங்களில் மறைந்திருந்த கொஸாக்கியர்கள் துப்பாக்கிப் போரில் விரட்டியடிக்கப்பட்டிருந்தனர். நதிக் கரையோரமாக இரண்டு செஞ்சேனைச் சாரணர்கள், கற்குவியல்களையும் புதர்ச் செடிகளையும் துருவித் துருவித் தேடிக்கொண்டிருந்தனர். காயம்பட்ட வீரர்களின் முனகல் ஒலி கேட்ட பக்கமெல்லாம் ஓடிச்சென்று முதல் உதவி அளித்துக்கொண்டிருந்தனர். மிக அண்மையில் பீரங்கி முழங்கும் சப்தம் எதிரொலித்தது; வான மண்டலத்தையே கிடுகிடுக்கச் செய்யும் பேரொலி ஓங்கிப்பாய்ந்தது. இப்பொழுது போர் நடக்கும் இடம் தெளிவாகத் தெரிந்தது. இதுவா ஐந்து கல் இருக்கும்? இரண்டு கல் தூரங்கூட இல்லையே? வெடிகுண்டு வெளிச்சத்தில் தூரம்கூட நீண்டுதான் தெரியும் போலிருக்கிறது!

பியோடார் இரண்டாவது போரெல்லையின் அருகில் வந்துவிட்டான். சப்பாயேவையும் அருகில் கண்டான். துணைப்படைத் தளபதி சப்பாயேவுடன் ஏதோ வினயமாகப் பேசிக்கொண்டிருந்தான்.

"நான் ஏற்கெனவே ஒரு ஆளை அனுப்பினேன். அவன் இன்னும் திரும்பவில்லையே" என்று கலவரத்துடன் கேட்டான் துணைப்படைத் தளபதி.

"அப்படியானால் இன்னொருவனை அனுப்புங்களேன்!" என்றான் சப்பாயேவ் சாவதானமாக.

"இரண்டாவது ஆளும் போயிட்டானே!"

"அப்படியானால் மூன்றாவதாக ஒரு ஆளை அனுப்பிவிடலாம்!" என்று வற்புறுத்தினான் சப்பாயேவ்.

துணைத் தளபதி பேசாதிருந்தான். சப்பாயேவின் ஆத்திரம் அதிகமாகிக்கொண்டிருந்தது. அவனது புருவங்கள் துடித்தன, கண்கள் பொங்கின! புதரில் மறைந்திருக்கும் விலங்குபோல அவன் உணர்வு பெற்றான்.



"அங்கிருந்து ஒருவரும் வரவில்லையே" என்று கடுகடுத்த குரலில் கேட்டான்.

"ஒருத்தரும் வரவில்லை."

"ரொம்ப நேரம் ஆச்சோ?"

"ஒரு மணி நேரமாக!"

தலையை அசைத்தபடியே புருவங்களைச் சுருக்கிக் கொண்டான். மீண்டும் அமைதி படர்ந்தது. ஏதோ தகவல் அனுப்புவதுபற்றிப் பேசிக்கொள்ளுகின்றனர் என்பதைப் பியோடார் புரிந்துகொண்டான். மும்முனைத் தாக்குதலில் முனைந்திருந்த ஒரு பகுதியுடன் நல்ல தொடர்பிருந்தது; மற்றொன்றுடன் எவ்விதத் தொடர்பும் இல்லை. அப்படைப்பகுதியின் தளபதி ஒரு மாதிரியானவன். முன்பு ஜார் காலத்திய அரசாங்கத்தில் இருந்த ஒரு பச்சோந்தி. படைவீரர்களுக்கு அவனுடைய தலைமையிலும் போர்த் திட்டத்திலும் நம்பிக்கையில்லை. எல்லோரையும் அழிவுக்குக் கொணர்ந்து எதிரிகள் கையில் சிக்கச்செய்ய அவன் முயல்வதாகத் தெரிந்துகொண்டனர். எனவே குறிப்பிட்ட திசையில் முன்னேற மறுத்துப் பின்தங்கிவிட்டனர் பொன்னான நேரத்தில் பின்வாங்கி நின்றனர்! இதுதான் நிலவும் நிலை.

பியோடார் சப்பாயேவின் அருகில் வந்தான். சற்றுத் தூரத்தில் பொடாபோவ் அமைதியாக நின்றுகொண்டிருந்தான். இலியா ட்யோட்கின் இன்னும் செக்கோவும்கூட நின்றனர். அவர்கள் அங்கு எப்படி வந்து சேர்ந்தார்கள் என்பது பியோடாருக்குத் தெரியாது. சப்பாயேவுடன் புறப்பட்ட அவசரத்தில் டலோவ் காவைவிட்டு யார் யார் எப்படியெல்லாம் புறப்பட்டார்கள், யார் யார் தங்கினார்கள் என்றெல்லாம் கவனிக்க அவனால் முடியவில்லை

அங்கிருந்து முதல் போராட்ட எல்லைக்கு அரைக்கல் தொலைவுதான் இருக்கும். அங்குச் செல்வதென்று அவர்கள் தீர்மானித்தார்கள். அப்பொழுது ஒரு கடுங்காற்று வேக

மாக வீசியது. பெரும் பெரும் பனிக் கற்கள் மேலே விசியடிக்கப்பட்டன; முன்னோக்கிச்செல்ல முடியாது முகமெல்லாம் சுளீரெனப் பாய்ந்தன; சற்றுத் தயங்கி நின்றனர். காற்றுக் கொஞ்சம் ஓய்ந்ததும் கடுகிச் சென்றனர். சற்று நேரத்திற்குள் கிளிக்கோவும் சப்பாயேவும் முதல் எல்லைக்கு வந்துவிட்டனர். அங்கிருந்து ஓவ்கின்னிக்கோவ் என்ற குக்கிராமம் தெரிந்தது.

"கொஸாக்கியர்கள் இங்கே மறைந்திருப்பார்கள் என நினைக்கிறேன்" என்றான் சப்பாயேவ். ஆற்றின் வலப்புறத்தில் தெரிந்த குக்கிராமத்தைச் சுட்டியபடி "அந்தக் கிராமத்தில் மறைந்திருந்து அவர்கள் தாக்கக் கூடும்."

இந்த முறை சப்பாயேவ் தப்புக்கணக்குப் போட்டுவிட்டான். பல முனைகளிலும் நெருக்கப்பட்ட கொஸாக்கியர்கள் அந்தக் குக்கிராமத்தில் ஒட்டிக்கொண்டிருக்கவில்லை. சில மணி நேர எதிர்த்தாக்குதலின் பின்னர் ஓடோடிச் சென்றுவிட்டார்கள் என்பதுதான் உண்மை.

ஸ்லோமிகின்ஸ்காயாவை நெருங்கிக்கொண்டிருந்தார்கள்; ஓரிரு கல் தூரமே எஞ்சியிருந்தது. எங்கும் பரந்த சமதள நிலமே விரிந்து கிடந்தது. கிராமங்களுக்கு அப்பால் பரவிக்கிடந்த இந்த இடம் முழுவதும் அமைதி நிலவியது. இங்குள்ள கொஸாக்கியர்களும் பேசாதிருந்தார்கள். ஏன் பேசாமலிருக்க வேண்டும்? முன்னேறித் தாக்குவதைவிட அவர்கள் இப்படிப் பேசாமல் இருப்பது பெரிய விபரீதமாயிற்றே! ஏதாவது ரகசிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் குழிபறித்துக்கொண்டிருப்பார்கள்; அல்லது ஏதாவது தந்திரவலை விரித்துக்கொண்டிருப்பார்கள். ஊஷென் நதியின் ஒரு மருங்கில் மட்டுமே சற்றுச் சலனம் இருந்தது. ஆனால், இந்தப் பரந்த வெளி முழுவதும் சுடுகாட்டு அமைதியே நிலவியது.

போரெல்லைக் கோட்டில், கம்பீரமாகக் குதிரைமீது அமர்ந்தவண்ணம் புகைபிடித்துப் பவனி வந்தான் பியோ-



டார். "எனக்கு எவ்வளவு துணிச்சல் தெரியுமா? நான்தான் மாவீரன். போரெல்லைக் கோட்டின்மீதே எத்தகைய பயமும் இல்லாமல் நிற்கிறேன். கொஸாக்கியர்களின் துப்பாக்கிக் குண்டுகள் பாயுமே என்ற அச்சம் சிறிதும் இன்றி அலட்சியமாக நிற்கிறேன். பார்த்தீர்களா?" என்று தனக்குத் தானே பெருமைப்படுத்திக்கொண்டான். இது சிறுபிள்ளைத்தனமான தற்பெருமையின் விளைவு. இளமைத் துடிப்பும் மிதமிஞ்சிய தன்னம்பிக்கையும் தூண்ட, பியோடாரால் சிறிது நேரமே போர் இலக்கில் நிற்க முடியும். எந்தக் குதிரை வீரனும் போரெல்லையில் எதிர் நிற்கும்போது இப்படி இடம்ப மடித்துக்கொள்வது இயல்புதான். போர் துவங்கும்வரைக்கும் இந்த முனைப்புத் துணிச்சல் முன்னிற்கும். எதிரியின் துப்பாக்கிக் குண்டுகள் சீறிப் பாயத் துவங்கிவிட்டால் துணிச்சல் ஓடிவிடும்; குதிரைமீது அமர்ந்திருப்பது உயிருக்கே ஆபத்தாய் முடியும். இதை உணராத பியோடார் கண நேரம் பெருமையில் மயங்கி நின்றான்.

அணிவகுத்துத் தாக்கத் தயாராயிருந்த எல்லாப் படைப் பகுதிகளுக்கும் ஓடோடிச் சென்று தகவல் தெரிவிப்பதும், வெடிகுண்டுகள் துப்பாக்கிகள் முதலிய தளவாடங்களை வழங்குவதும், தளவாட வண்டிகள் வருகைபற்றி விசாரிப்பதுமாகச் சுழன்றுகொண்டிருந்தான் சப்பாயேவ்.

போரெல்லைக் கோட்டின் ஒரு கோடியிலிருந்து மறு கோடிவரை சென்று திரும்பினான் பியோடார். பின்னர் வடபகுதிக்குத் திரும்பிக் குதிரையினின்று இறங்கினான். குதிரையின் கடிவாளத்தைப் பிடித்தவாறு பிறருடன் சேர்ந்து அவனும் நடந்தான். செஞ்சேனைப் பீரங்கிகள் முழங்கத் துவங்கின. என்றாலும் அந்தக் கிராமம் இன்னும் அசையவில்லை. இந்தப் போர்ச் சமாச்சாரமெல்லாம் மிகவும் பழக்கப்பட்டதுபோல மிகச் சாவதானமாகக் கிராமத்தை

நோக்கி நடந்துகொண் டிருந்தான். வெடிகுண்டுப் புகைகளில் அனுபவம் பெற்றவன் போலக் கம்பீரமாகச் சென்று கொண் டிருந்தான்.

அடுத்த ஐந்து நிமிடத்தில் இந்த அனுபவஸ்தனுக்கு என்ன நேர்ந்ததென்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

கிராமத்திற்கு அறுநூறு கஜ தூரத்தில் வந்துகொண் டிருந்தனர், அதுவரை பேசாது பதுங்கியிருந்த கொஸாக்கியர்கள். செஞ்சேனையினர் மிக நெருங்கி வந்ததும் தாக்க ஆரம்பித்தனர். சுழல் துப்பாக்கிகளும், பெரும் பீரங்கிகளும் கர்ஜித்தன. ஊரின் இரு மருங்கிலும் இருந்த காற்றாலைகளில் (Wind mill) பதுங்கிச் சுட்டனர். எல்லாத் திசைகளிலும் இருந்து குண்டுகள் பாய்ந்து வந்தன. பியோடாருக்கு ஒன்றும் புரியவில்லை. திடீரெனத் தோன்றிய இடி முழக்கமும், பீரங்கி வேட்டுக்களும், புகைமூட்டமும் அவன் கண்களை இருளடையச் செய்தன. உடல் இரத்தமெல்லாம் உறைந்து செயலற்றுப்போனதுபோல உணர்ந்தான். கூடவந்த எவரையும் அடையாளம் தெரிந்துகொள்ள முடியாத கலவரம் ஏற்பட்டது. ஒரு அடி முன்னேக்கி எடுத்துவைத்தான்; அதற்குமேல் முடியவில்லை. இரண்டு அடிகள் பின்னிட்டான். கூடவந்தவர்களை விட்டுப் பிரிந்துவிட்டான். தன் குதிரைக்குப் பின்னல் பதுங்கியபடி போரெல்லையைத் தாண்ட முயன்றான்.

அணிவகுத்துச் சென்ற வீரர் பலரும் எதிர்த்தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் பதுங்குவதும் பாய்வதுமாயிருந்தனர். பனிப்பாறைகளில் ஒளிந்துகொண்டு தலையை மட்டும் நீட்டியவண்ணம் கைக்குண்டுகளை வீசினர். குதிரைக்குப் பின் பதுங்கிப் பதுங்கி வந்த பியோடார் சற்றுத் தொலைவிற்குச் சென்றதும் குதிரைமீது ஏறியமர்ந்து பறந்துவிட்டான்! அவன் எங்கே போகிறான்? அது அவனுக்கே தெரியாது. போராட்டமுனையைவிட்டுப்பயந்துபின்வாங்கி ஓட அவன் நினைத்ததுகூட இல்லை. இந்தச் சமயத்தில் மட்டும் அங்கிருந்து தப்பித்துக்கொள்ள முயன்றான். துப்பாக்கிச் சத்தமும் வெடிகுண்டுகளும் குறைந்தவேறொரு இடத்திற்குச் செல்ல விரும்பினன். குதிரையைத் தூண்டி விரட்டிக்கொண்டு இடது முனைக்கு வந்துவிட்டான்.



அவனுடைய முகத்தோற்றமும், பாவனையும் மிகக் கடுமையாகவும், ஏதோ காரியமாக வந்ததாகவும் தோன்றின. பயந்துகொண்டு ஓடிவந்ததாக எண்ணவே முடியாத உறுதியும் உள்நோக்கமும் புலப்பட்டன. ஏதோ ஒரு முக்கியமான செய்தி சொல்லவோ அல்லது வேறு போராட்ட முனைக்குச் சென்று தகவல் தெரிவிக்கவோ ஓடோடி வந்தது போலவே தோன்றியது.

வழியில் வலது முனை நோக்கிப் பொடாபோவ் சவாரி செய்வதைக் கண்டான். அவன் ஏன் அங்கே விரைகிறான்? எதற்காகப் பியோடார் இடது முனைக்கு வருகிறானே அதே காரணத்திற்காகவே இவனும் வலது முனைக்குச் செல்லுகிறானே? யாருக்குத் தெரியும்! போராட்டக் களத்தில் ஒருவன் ஏதோ காரணமாகத்தான் செல்லுகிறான அல்லது பயந்தோடிப் பதுங்கத்தான் விரைகிறான என்பதையெல்லாம் நிதானிப்பது கஷ்டம். இருவரும் எதிரெதிரே சந்தித்துக்கொண்டனர். குதிரைகளை அடக்கிப் பிடித்த வண்ணம் அவசரம் அவசரமாக விசாரித்துக்கொண்டனர்.

"அங்கே போதுமான ரவைகள் இருக்கின்றனவா? வேண்டிய வெடிகுண்டுகள் கிடைக்குமா? சப்பாயேவ் எங்கேயிருக்கிறான்? அவனை எங்கே பார்க்க முடியும்?"

இந்தக் கேள்விகள் எல்லாம் குருட்டுத்தனமானவை; அந்தச் சமயத்திற்கு அவசியமில்லாதவை.

குதிரைகள் இரண்டும் ஒரு நிலையில் நில்லாமல் குதித்துக்கொண் டிருந்தன. இந்த இரு வீரர்களையும் கிராமத்திலிருந்த சில வெள்ளை வீரர்கள் பார்த்துவிட்டனர். ஏதோ உயர்ந்த ராணுவ உத்தியோகஸ்தர்கள், செஞ்சேனைப் படையினர் என்றே முடிவுகட்டிவிட்டனர். துப்பாக்கிகள்

இவர்களை நோக்கித் திருப்பப்பட்டன. குண்டுகள் சமீப இடமெல்லாம் சல்லடையாகத் துளைத்தன. ஐம்பது கஜ தூரத்தில் ஒன்று வெடித்தது. அடுத்தாற்போல முப்பது கஜத்தில் ஒன்று. அடுத்தாற்போல மிக அருகில் ஒன்று. எல்லாத் துப்பாக்கிகளும் இவர்கள்பால் செலுத்தப்பட்டன. வலைபோலப் பின்னியபடி குண்டுகள் சரமாரி பொழிந்தன.

"இங்கிருந்து உடனே தப்பவேண்டும்" என்று வெடவெடக்கக் கத்தினான் பொடாபோவ்.

அவனுக்கு அருகில் ஒரு குண்டு விழுந்து சிதறியது.

ஒரு வார்த்தையும் சொல்லாமல் பேரெல்லைக் கோட்டைவிட்டு அப்பால் குதிரையைச் சுண்டினான் பியோடார். அவனைத் தொடர்ந்து பொடாபோவும் வந்துகொண்டிருந்தான். சற்று தூரம் வந்ததும் வேறுவழியாகத் திரும்பி வலதுமுனைப் பக்கமே சென்றுவிட்டான். பியோடார் சமீபத்தில் இருந்த ஒரு மேட்டுக்குச் சென்றான். அந்த மேட்டின் மறைவில் ஒரு டசன் வண்டிகள் கிடந்தன. அவற்றுள் ஒன்றில் பதுங்கிக்கொண்டு மெல்ல எட்டிப் பார்த்தான். அவன் சில வினாடிகட்கு முன்னர் பொடாபோவுடன் நின்றுகொண்டிருந்த அதே இடத்தில் பெரும் குண்டொன்று வெடித்துத் தூள் பரப்பியதைக் கண்டு கண்களை மூடிக்கொண்டான். குதிரையை ஒரு வண்டியில் கட்டியவாறு பதுங்கியிருந்து போர்முழக்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்தான். வேட்டுச் சத்தம் மிக நெருங்கிக் கேட்கும்பொழுதெல்லாம் அவன் முகம் வெளிறிவிடும். உடம்பே உறைந்துவிடும், இரத்த ஓட்டம்கூட நின்றுவிடும். எவ்வித அசைவுமின்றிப் படுத்திருப்பான். சற்று நேரம் கடந்ததும் மெதுவாகத் தலையைத் தூக்கிப்பார்ப்பான். ஏதாவது வெடிகுண்டு சமீபத்தில் விழுகிறதா என்று சுற்றிச் சுற்றி விழிப்பான். அவன் எவ்வளவு நேரம் அப்படிப் படுத்துப் பதுங்கியிருந்தானோ தெரியாது! நேரம் கடந்தது. இந்த இடத்தில்தான் அவனோடு பதுங்கியிருந்த மூன்று



நாட்டுப்புறத்தார்கள் குண்டுவீச்சுக்கு இரையாகி மடிந்தார்கள். அவர்கள் உயிரைக் காவுகொண்ட குண்டு பாய்ந்து வருமுன் பியோடார் எழுந்துவிட்டான். குதிரை மீதமர்ந்தவாறு எங்குச் செல்வதென்று ஒரு வினாடி யோசித்தான். அவனுக்கு உதவியாக, ஒரு செஞ்சேனை இளைஞன் வேகமாகப் பறந்துவந்தான். மூச்சுக்கூட விடமுடியாத அவசரத்தில் பொதுப்படையாக, "சுழல் துப்பாக்கிகள் எங்கே? எங்கே இருக்கின்றன?" என்று பதறினான்.

"இங்கே ஏது சுழல் துப்பாக்கிகள்?"

"கட்டாயம் சுழல் துப்பாக்கிகள் வேண்டும். கொஸாக்கியர்கள் இடதுமுனையில் கொடூரமாகத் தாக்குகிறார்கள்."

இவன் செஞ்சேனை வீரன்தான் என்பதை எளிதில் புரிந்துகொண்டான். அவ்விளைஞன் கைகாட்டிச் சொன்ன பக்கத்தில் ஏராளமான உருவங்கள் முன்னேறிச் செல்வது தெரிந்தது. அவனுக்கு மயிர்க் கூச்சமெடுத்தது. உடல் சிலிர்த்தது.

"இதோ தளவாடவண்டிக்குச் சென்று துப்பாக்கிகளை அள்ளி அனுப்புகிறேன்" என்று கத்தியவாறு குதிரையில் பறந்தான் பியோடார்.

தளவாட வண்டிகளை நெருங்கிச் சென்றான். அவனைக் கண்ட வண்டிக்காரர்கள் தங்களுக்குள் ஏளனமாக ஏதோ குறிப்பாகப் பேசிக்கொண்டனர். இந்த வீராதி வீரன் ஏன் இங்கு வர வேண்டும் என்று சந்தேகப்பட்டனர். இப்படித் தோன்றியது பியோடாருக்கு! ஆனால் வண்டிக்காரர்கள் வெறும் அரட்டையடித்துக்கொண்டு வீண்பொழுது போக்குவதில் ஈடுபட்டிருந்தனர். காத்துக்கிடக்கும் கேடுகெட்ட பிழைப்பைவிட்டுப் புறப்படச் சொல்லும் உத்தரவுக்காகக் காத்திருந்தனர். சுற்றிலும் வெடிகுண்டுகள் முழங்கும் நேரத்தில் என்ன செய்வதென்று தெரியாது தங்கள் மனம்போன போக்கில் உல்லாசப்பொழுது போக்கிக்கொண்டிருந்தனர்! அவ்வளவு ஈடுபாடு! சில குண்டுகள்

மிகச் சமீபத்தில் பாய்ந்துவந்தும் அவர்கள் அசையவில்லை; உணர்ச்சியற்ற மரக்கட்டைகளைத்தான் பெரும்பாலும் தளவாட வண்டிக்காரர்களாக அனுப்புவார்கள் போலும்!

தளவாடவண்டிக்குள் ஒரு முறை சென்று பார்த்தால் தெரியும். அந்த வண்டிக்காரர்கள் அனைவரும் எத்தகைய அயோக்கியர்கள் என்பது எளிதில் புரிந்துவிடும். போராட்ட முனையில் முன்னேறிச் செல்லும் வீரர்கள், கையில் துப்பாக்கியுடன் மார்பேந்திச் செல்லுகிறார்கள்; முதல் அணியில் நிற்பவர்கள் சுழல் துப்பாக்கிகளுடன் முந்துகிறார்கள்; அவர்களுக்கு அரணாகப் பின்னணியில் பெரும் பீரங்கிகள் முழங்குகின்றன. போராட்ட எல்லையில் முன்னேறிச் செல்வது மிக எளிதுபோலத் தோன்றுகிறது. அங்கே அரவணைப்பு உண்டு, அபாயத்தின் நடுவிலும் ஆதரவு உண்டு, பாதுகாப்புக்கூட உண்டு. ஆனால் தளவாட வண்டிகளைத் திரும்பிப் பாருங்கள். இரு நூறு வண்டிகள். அவைகளுக்குரிய இரு நூறு வண்டிக்காரர்கள். இரு நூறு பேருக்கும் பாதுகாப்பிற்காக உள்ளன பதினோரு துப்பாக்கிகள் மட்டும்! அந்தத் துப்பாக்கிகளிலும் ரவை கிடையாது. ஒரு சுழல் துப்பாக்கி இருக்கிறது. அதுவும் பழுதடைந்து மூலையில் கிடக்கிறது. மொத்தம் உள்ள இரு நூறு பேரில் நூற்றைம்பது பேருக்குத் துப்பாக்கியே பிடிக்கத் தெரியாது. பிடிக்கத் தெரிந்த எஞ்சியவர்களிலும் இலக்குத்தவறாது சுடக்கூடியவர்கள் ஒருசிலரே. துப்பாக்கியைத் தூக்கித் தோளோடு இணைத்து வைக்கக்கூட முடியாத சோதாக்கள் நிறைய உண்டு. அவர்களுக்குத் தெரிந்த ஒரே காரியம்—சேணம் பூட்டிக் குதிரையோட்டுவதுதான்; இதுதான் தளவாட வண்டிகளின் லட்சணம்!! அதனால்தான் கொஸாக்கியர்கள் தளவாடவண்டிகளின்மீது எப்பொழுதும் ஒரு கண் வைத்திருப்பார்கள். ஆயுதபலம் ஏதுமின்றி எளிதில் ஆக்கிரமித்தும்கொள்ளுவார்கள். திடீரென்று ஒரு கொஸாக்கியப் பட்டாளம் பாய்ந்துவந்தால்



இந்த வண்டிக்காரர்கள் என்ன செய்வார்கள்? எங்கு ஓடித் தப்புவார்கள்? அவர்களுக்கு எங்கிருந்து உதவி வரும்? கொஸாக்கியர்கள் வண்டிகளுக்கு இடையே சாடி வந்து தலைகளைச் சீவி எறிந்துவிடுவார்களே! பதினோரு துப்பாக்கிகள்—அதுவும் ஒன்றுக்கும் உதவாத ஊமைத் துப்பாக்கிகள்! ஒரு நொடிக்குள் அனைத்தையும் தட்டிப் பறித்துக்கொள்ளக் கொஸாக்கியர்களால் முடியும். அதுதான் தளவாட வண்டியின் யோக்கியதை—அயோக்கியர்களின் சுரங்கமாக அது மாறிவிட்டது. கோழைகளின் குகையாகிவிட்டது. போராட்ட எல்லையைப் பற்றிய உணர்ச்சி ஏதுமின்றி வண்டிக்காரர்கள் வம்பளந்துகொண்டிருந்தனர். வகையற்ற கோழைகள்!

அவர்களைக் கோழைகள் என்றுகூடக் கூற முடியாது. கோழைகள் வெறுமனே பயப்பிராந்தி மட்டும்தான் அடைவார்கள். எங்கிருந்தாலும் பய உணர்ச்சி நீங்காது. ஆனால் இவர்கள் பயமில்லாத, செயல் திறமற்ற கோழைகள்!

வண்டிக்காரர்களின் வம்பளப்பைக் கண்ட பியோடார் கிளிக்கோவின் வயிறு எரிந்தது; ஆத்திரம் பொங்கியது; அவமானம் தலைக்கேறியது; எரிச்சல் பீறிட்டது. அமைதியிழந்துவிட்டான். வண்டிக்காரர்களுடன் பேசவும் அவனால் முடியவில்லை. பேசாதிருக்கவும் முடியவில்லை. எதுவும் செய்ய இயலாதவனாய் தளவாட வண்டியைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருந்தான். ஒன்றரை மணி நேரம் கடந்தது. விளக்கு, குதிரைகளுக்குத் தீவனம், வண்டி மசகு, ரொட்டி முதலிய பலவற்றைப்பற்றியும் அவர்களிடம் பேச்சுவாக்கில் கேட்டான். எதற்கும் அவர்களிடமிருந்து சரியான பதில் ஏதும் கிடைக்கவில்லை. கிளிக்கோவின் ஆத்திரம் விநாடிக்கு விநாடி விஷம் கட்டி ஏறிக்கொண்டிருந்தது.

சுற்றுப்புறத்து இடிமுழக்கம் இன்னும் ஓயவில்லை. ஸ்டெப்பிப் பிரதேசம் முழுவதும் ஒரே வெடிகுண்டுச் சத்

தம் எதிரொலித்தது. போராட்ட எல்லையிலிருந்து வீரர்கள் உற்சாகத்துடனும் உறுதியுடனும் முன்னேறிக்கொண்டிருந்தனர். இடிமுழக்கம்போன்ற குண்டு மழைகளைப் பொருட்படுத்தாது அங்குலம் அங்குலமாக முன்னேறிச் சென்றனர். சிவப்புக் கோடுகள் போட்ட கருப்புத் தொப்பியுடன் சப்பாயேவ் ஒரு முனையிலிருந்து மறு முனைவரை பாய்ந்து பாய்ந்து உற்சாகமூட்டிக்கொண்டிருந்தான். நொடிக்கு நொடி இங்கும் அங்கும் தோன்றித் தோன்றி மறைந்து தாக்குதலைத் தீவிரப்படுத்திக்கொண்டிருந்தான். உத்தரவுகளும், தாக்கீதுகளும் பிற செய்திகளும் தந்த வண்ணம் ஊக்கமூட்டிவந்தான்.

"சுழல்துப்பாக்கிகள் எல்லாம் பத்திரமாக இருக்கின்றனவா?" என்று கத்தினான் சப்பாயேவ்.

"எல்லாம் பத்திரம்தான்."

"எத்தனை வண்டி வெடிகுண்டுகள்?"

"ஆறு."

"தளபதி எங்கே?"

"இடது முனையில்"!

உடனே இடதுமுனைக்குக் குதிரையைத் திருப்பினான் சப்பாயேவ்.

அங்கு அணி வகுப்பினர் குரல்வளைப் பிடியில் முன்னேறினர். உடனே கொஸாக்கியர்களின் உக்கிரத் தாக்குதல் அந்த முனைக்குத் திருப்பப்பட்டது. வெடிகள் சீறின. அனைவரும் தரையோடு தரையாகப் பதிந்துவிட்டனர். அடுத்த உத்தரவுக்காக அசையாதிருந்தனர்.

சப்பாயேவ் பின்னணியில் வந்து ஆலோசனைகளை அடிக்கடி சொல்லிவந்தான். பீரங்கிப் படைத் தளபதியின் அருகில் வந்தான்.

"அந்தக் காற்றாலைகளைத் தகர்த்தெறியுங்கள்."

"அங்குள்ள சுழல் துப்பாக்கிகளை நாசஞ் செய்யுங்கள்."



"நான் சொல்லும்வரை கிராமத்திற்குள் நுழைந்துவிடாதீர்கள்" என்று இரைந்த வண்ணம் குதிரையைத் திருப்பி அணிவகுப்பையொட்டி ஓட்டினான். தாக்குதல் வலுத்தது. துப்பாக்கிகள் அகோரமாய் அனல் கக்கின. இரு தரப்பினரும் உயிர்ப்போரில் இறங்கினர். காற்றாலையிலிருந்து சுழல் துப்பாக்கிகள் ஓய்ச்சலின்றி உறுமின. செஞ்சேனையினர் தாக்குதலை வென்றேங்கி வினாடிக்கு வினாடி நெருங்கிக்கொண்டிருந்தனர். ஒரே சமயத்தில் கொஸாக்கியர்களை வளைத்துக்கொள்ள அணு அணுவாக அடியெடுத்து வைத்தனர்.

சப்பாயேவ் பம்பரமாய்ச் சுழன்றுகொண்டிருந்தான். சுழல் துப்பாக்கி முதல் எல்லா வகைத் தளவாடங்களையும் குவிக்குமாறு உத்தரவுகளை வீசிவிட்டான். அப்பொழுது யாரோ ஒரு வீரன் அவனிடம் என்னமோ சொன்னான்:

"எங்கே? இடது முனையிலா?" என்று கேட்டான் சப்பாயேவ்.

"ஆம். இடது முனையில்தான்."

"ஏராளமா?"

"ஆம்."

"சுழல்துப்பாக்கிகளை நிறைக்க வேண்டியதுதானே?"

"ஆம். உதவிக்காக ஆள் அனுப்பியிருக்கிறோம்."

அபாயத்தால் சூழப்பட்டிருந்த இடதுமுனைக்கு விரைந்தான் சப்பாயேவ். அருகே ஒரு பெரும் கொஸாக்கியப்படை பெருந்தாக்குதல் நடத்திக்கொண்டிருந்தது. அவர்களது குதிரைப்படைகள் மிகநெருங்கி வளைத்துச் சூழ்ந்துகொண்டிருந்தன. துணைப்படைத் தளகர்த்தனிடம் ஓடினான் சப்பாயேவ்.

"இந்த இடத்தைவிட்டு அசையாது போராடுங்கள். நமது அணிவகுப்பு வரிசை அரணாகிவிட்டது. வலுவாகத் தாக்குங்கள்." என்றபடி அடுத்தாற்போல் தரையோடு பதுங்கித் தாக்கிக்கொண்டிருந்தோரிடம் சென்றான்.

"குழப்பம் கொள்ள வேண்டாம். இளைஞர்களே! நிதானமாயிருங்கள். அவர்களை அருகில் நெருங்க இடங் கொடுங்கள். நெருங்கிவந்ததும் பொசுக்கித்தள்ளுங்கள்." இந்த உற்சாக மொழிகளைக்கேட்டவீரர்கள் உள்ளுணர்ச்சி பெற்றனர்; உத்வேகம் கொண்டனர். உறுதியுடனும் நம்பிக்கையுடனும் முனைந்து தாக்கினர்.

கொஸாக்கியக் குதிரைப்படை நெருங்கியதும் அனைவரும் உத்வேகமாகத் தாக்கினர், ஒரே பேரிரைச்சல். குதிரைப்படை கலகலத்தது; குதிரைகள் மிரண்டன. குழப்பம் மூண்டது. குதிரைகள் பின்னிட்டு மிரண்டு திரும்பின. ஒரு நொடியில் பின்வாங்கி ஓடின!

தாக்குதல் முறியடிக்கப்பட்டது. விழிப்புடனும் ஜாக்கிரதையுடனும் வெளிறியமுகத்துடன் வீரர்கள் முன்னோக்கிச் சென்றனர். பயங்கலந்த வெற்றிப் புன்னகை அவர்களிடம் ரேகை ஓடிற்று. அணிவகுப்பு அனைத்தும் ஒரு சேரக் கிராமத்தை வளைத்து நெருங்கிவிட்டன. கொஸாக்கியத் துப்பாக்கிகள் மூச்சற்றுப்போயின; ஓரிரு முனகல் வெடி மட்டும் ஓயாது கேட்டுக்கொண்டிருந்தன. செஞ்சேனையினர் முதலில் காற்றாலைகளை முற்றுகையிட்டனர். அனைவரும் கிராமத்திற்குள் புகுந்துவிட்டனர்.

உடனே பெருமுழக்கம் செய்தனர். "தோழர்களே! ஹுர்ரா. ஓ. ஓ." என்று எக்காளமிட்டனர். வெற்றி முரசம் ஆர்த்தனர்.

கொஸாக்கியச் சுழல் துப்பாக்கிகள் ஓய்ந்துவிட்டன. துப்பாக்கி பிடித்த கொஸாக்கியர்கள் சல்லடையாகத்துளைக்கப்பட்டனர். செஞ்சேனையினர் பெரும் முழக்கத்துடன் கிராமம் முழுவதும் வளைத்தனர். தப்பியோடிய கொஸாக்கியர்கள் கண்ணுக்கெட்டாது மறைந்துவிட்டனர். ஸ்லோமிகின்ஸ்காயாக் கிராமம் செஞ்சேனையினர் வசமாயிற்று!

இதுவரை பதுங்கிக்கிடந்த பியோடாரை அவமானமும் இழிவு மனப்பாங்கும் பிய்த்துத் தின்றன. போர்ச் சம



யத்தில் புறத்தில் மறைந்துகிடந்த கேவலம் தாங்க மாட்டாது வெளியேறினான். உள்ளுணர்வு உந்தித்தள்ள மீண்டும் போர் நடந்த எல்லைக்கு வந்தான். போரெல்லாம் ஓய்ந்த பின்னர்தான் வெளிவரும் மனோதிடம் வந்தது! இது வரை என்ன நடந்ததென்றே அவனுக்குப் புரியவில்லை.

"இந்நேரம் நமது வீரர்கள் கிராமத்திற்குள் புகுந்திருக்கக் கூடும், அல்லது வேறு விதமாகவும் நேர்ந்திருக்கலாம். கொஸாக்கியர்களால் சூழப்பட்டு மீள வகையின்றி சரணடைந்தும் இருக்கலாம். சரணடைந்த வீரர்களையெல்லாம் கொஸாக்கியர்கள் படுகொலைகூடச் செய்து போட்டிருப்பார்கள். இன்னும் பத்து நிமிட நேரத்தில் அந்தக் கொடுமைக்காரக் கொஸாக்கியர்கள் தளவாட வண்டிகளை நோக்கிக்கூடப் பாய்ந்து வருவார்கள். கமிசாரான என்னையும் வண்டிகளுடன் கைப்பற்றுவார்கள்!" இப்படியெல்லாம் எண்ணிக் குழம்பினான் பியோடார். எத்தகைய அவமானம், கேவலம்! முதல் போராட்டத்திலேயே உணர்ச்சி மழுங்கி ஒதுங்கிக்கிடந்த மானக்கேட்டை பியோடாரால் தாங்க முடியவில்லை. எலும்பைக் கண்ட கள்ள நாய்போல வாலை ஒடுக்கிப் பயந்துவிட்டான். அவனுடைய நம்பிக்கையும் விழைவும் அவனுக்கே புரியவில்லை. அவனுடைய வீரதீரமும், துணிவும், துடுக்குத்தனமும் போராட்ட எல்லைக்கு வருமுன் கொப்புளித்தனவே! இக்

மனச்சான்று பியோடாரை அணுஅணுவாக அரித்துப்
பொழுது எல்லாம் எங்கே போய் ஒளிந்தனவோ?
கொண்டிருந்தது. சோர்ந்த உடலோடும் கிழிந்தநெஞ்சத்தோடும் உணர்ச்சியற்று புறப்பட்டான். எங்கிருந்து பயந்தோடி வந்தானோ அந்த இடத்திற்கே சென்றான். ஏற்கெனவே ஒரு மேட்டுக்கு அருகில் வண்டிகளுடன் பதுங்கிக் கிடந்த இடத்தையும் தாண்டினான். அங்கே கிடந்த பனிப்பாறையெங்கும் செந்நிறம் தோய்ந்திருந்தது. அங்கே ஏது இரத்தம்? யாருடையது? அவனோடு சற்றுமுன் பதுங்கியிருந்த மூன்று

வண்டிக்காரர்களும் குண்டு வீச்சுக்கிரையாகிக் கோரமாய் மடிந்ததன் சான்றுதான் அந்த 'இரத்த வெள்ளம்!

அந்த மேட்டுக்கு அப்பால் ஒரு பரந்த மைதானம் இருந்தது. அங்கிருந்துதான் செஞ்சேனை அணிவகுப்பினர் போரிட்டுக்கொண் டிருந்தனர். இப்பொழுது அந்த மைதானம் இருந்தது; அந்த வீரர்களைக் காணவில்லை. அவர்கள் எல்லோரும் இப்பொழுது எங்கே? கிராமத்திற்குள் புகுந்து விட்டனரா? அல்லது ஊஷென் நதி தீரத்துக்குவி ஓடிட்டனரா? அல்லது கொஸாக்கியர்களால் புறமுதுகிட விரட்டியடிக்கப்பட்டனரா? அல்லது கிராமத்திற்குள்ளேயே அமுக்கப்பட்டுவிட்டனரா?

பியோடாருக்கு ஒன்றுமே புரியவில்லை.

அப்பொழுது இன்னொரு குதிரை வீரன் வேகமாக அங்கு வந்தான். ஒரு வேளை பியோடார் தேடிச் சென்றது போல, இவனும் "சுழல் துப்பாக்கி தேடிச் சென்று" பதுங்கிக்கொண்டவன்தானோ? சம்பந்தா சம்பந்தமின்றி இவனும் அசம்பாவிதமாக நடந்துகொண்டான். பியோடார் அவனை உற்று நோக்கினான். இருவருக்கும் ஒரே மாதிரியான வியாதிதான் பீடித்திருக்கிறது என்பதை நொடியில் புரிந்துகொண்டான். பாம்புதானே பாம்பின் காலை அறியும்!

"நம்மவர்கள் எங்கே?" என்று அலட்சியமாகக் கேட்டபடி புதிய நபர் பியோடார் அருகில் நெருங்கினான்.

"நானும் அவர்களைத்தான் தேடுகிறேன்" என்று ஏமாற்றமும் அவமானமும் எதிர்நிற்க அரைகுறையாகக் கூறினான் பியோடார். இருவரும் ஒருவரை ஒருவர் நன்கு உணர்ந்துகொண்டனர்.

"ஒருவேளை கிராமத்திற்குள்ளேயே புகுந்திருப்பார்களோ?" என்றபடி கொட்டாவிவிட்டான் புது ஆசாமி.

"இருக்கலாம். இருக்கலாம்" என்றான் பியோடார்.

"அப்படியானால் நாமும் போகலாமே. போகலாமா?"

"எங்கே போவது?"



"அந்தக் கிராமத்திற்குத்தான்."

"ஆனால் அங்கே கொஸாக்கியர்கள் இருந்தால்?"

"அப்படி ஒருக்காலும் இருக்க முடியாது. கட்டாயம் நம்மவர்கள் கிராமத்தைக் கைப்பற்றியிருப்பார்கள். அப்படி ஒருவேளை இல்லையென்றாலும்."

"ம். அதுதான் நானும் சொல்லுகிறேன். கொஸாக்கியர்கள் நம்மைப் பிடித்து விட்டால் நாம் தொலைந்தோம்."

இந்த மாதிரியே இருவரும் பேசினர். கிராமத்திற்குப் போவதே நல்லது என்று ஒருவன் கூறினால் மற்றவன் அபாயத்தையும் கொஸாக்கியர்களது கொடுமையையும் கூறி வேண்டாமென மறுத்துவிடுவான். கடைசியாக, கிராமத்தில் யார் கை ஓங்கியிருக்கிறது என்று அறிய முனைந்தார்கள்.

அந்த முடிவோடு இருவரும் கிராமத்தை நெருங்கி வந்தனர். இன்னும் அரைக் கல் தொலைவுதான் இருக்கும். அவ்வளவு அருகில் வந்துவிட்டனர். ஒருவேளை யாராவது எதிர்த்துத் தாக்கினால் அவர்களால் தப்பி ஓடக்கூட முடியாது. துப்பாக்கி ரவைகள் தப்பாது பாய்ந்துவிடக் கூடிய சமீபத்தில் வந்துவிட்டனர்.

பயமும் திகிலும் பின்னின்று தள்ள எதுவும் புரியாது நெருங்கிவந்தனர்.

கிராமத்தின் புறத்தே சிதறியிருந்த சில வீடுகளின் அருகில் ஒரு பத்துவயதுச் சிறுவனைக் கண்டார்கள்.

"டேய் தம்பி! செஞ்சேனை இந்தப் பக்கமாக வந்ததா இல்லையா?"

"அவுங்க கிராமத்தையே புடிச்சுட்டாங்களே!" என்று மகிழ்ச்சி பொங்கக் கூறியவன் "நீங்க எங்கேயிருந்து வர்றீங்க!" என்றொரு கேள்வி கேட்டான்.

"தம்பி! ஓடிவிளையாடு போ. ஓடு. ராணுவச் சமாசாரமெல்லாம் உனக்குத் தெரிய வேண்டாம்" என்று அமட்டலாகச் சொன்னபடி சிறுவனின் உற்சாகத்தையும் துடுக்குத்தனத்தையும் மட்டுப்படுத்தினான் பியோடார்.

கிராமத்தைச் செஞ்சேனையினரே கைப்பற்றிவிட்டனர் என்றதைக் கேட்ட மறுகணமே விரைந்து குதிரையில் பறந்தான் புதியவன். ஆனால் கிளிக்கோவ் அமைதியுடனும், இழிந்த உணர்ச்சியுடனும், அவமான நெஞ்சத்துடனும் கிராமத்திற்குள் நுழைந்தான். கிராமம் முழுமையும் செஞ்சேனையினர் காத்து நின்றனர். புதிதாகப் போர்க்களம் வந்த எல்லோரும் தன்னைப்போலத்தான் நடந்துகொள்வார்கள் என்றும், ஓரிரு போர்க்களத்தைக் கண்டு அனுபவமடைந்துவிட்டால் தனக்கும் துணிச்சல் வந்துவிடுமென்றும் தன்னைத் தானே திருப்திப்படுத்திக்கொள்ள முயன்றான் பியோடார்.

ஆம். பியோடாரது நம்பிக்கை வீண் போய்விடவில்லை. அடுத்த வருடமே செஞ்சேனையில் ஆற்றிய துணிவிற்குச் சிவப்புப் பதாகை விருதுபெற்றான் பியோடார். ஆனால் இந்த முதற் போர்தான் கடுமையான, மிக முக்கிய பாடத்தை அவனுக்குக் கற்பித்துவிட்டது. ஸ்லோமிகின்ஸ்காயாப் போரில் ஏற்பட்டது போன்ற அசம்பாவித நிகழ்ச்சி, பிற்காலத்தில் அவன் ஈடுபட்ட எந்த உள்நாட்டுப் போரிலும் ஏற்படவில்லை. இதைவிட மோசமான சூழ்நிலையிலும், இக்கட்டான சமயங்களிலும்கூடச் சமாளித்துக்கொண்டான் பியோடார். இந்தத் தோல்விப் போரின் விளைவாகப் பல அனுபவங்களையும் தகுதியையும் அவன் பெற்றான்—நெஞ்சத்தில் துணிவும், புறத்தில் அமைதித் தோற்றமும், தன்னடக்கமும், சூழ்நிலைக்கேற்ற சூட்சும அறிவும் பெற்றான். இந்தப் பண்புகள் அனைத்தும் ஒரேயடியாக அவனிடம் குவிந்துவிடவில்லை. எல்லோரையும் போலவே குழப்பத்திலும் மனமயக்கத்திலும் அலைமோதி, தோல்விப் பாறைகளில் முட்டிக்கொண்டு படிப்படியாகப் பண்புகளை வளர்த்துக்கொண்டான். எல்லோரையும் போலப் பிழை செய்து, உணர்ந்து திருந்திக்கொண்டான்.



ராணுவத்தலைமை நிலையம் எங்கே அமைக்கப்பட்டுள்ளது என்று எதிர்ப்பட்டோரைக் கேட்டான். அவசரம் அவசரமாகப் புரியாத மொழியில் உளறிச் சென்றனர். எங்கோ செல்லும் அவசரத்தில் ஏதேதோ சொல்லிச் சென்றனர். கிராமம் முழுவதும் அவசர உணர்ச்சியும் அலங்கோலமும் பரவிக் கிடந்தன. கொஸாக்கியர்கள் அனைவரும் புறமுதுகிட ஓட்டப்பட்டனர். அவர்களைப் பின்தொடர்ந்து சென்ற படையினர் இன்னும் திரும்பவில்லை. எனவே கிராமத்தில் பெருகியிருந்த உணர்ச்சி வெள்ளத்திற்குக் காரணம் ராணுவ பயமில்லை. அப்படியானால் வேறென்ன காரணம்?

விரைவாகத் தலைமை நிலையத்திற்கு வந்தான். கார்போவ் என்ற வணிகனுடைய பெரும் மாளிகையில் தலைமை நிலையம் அமைந்திருந்தது. சப்பாயேவும், அவனுடைய இளந் தோழர்களான யோஷிகோவ் முதலிய எல்லோரும் அங்கே இருந்தனர். குறிப்பாக யோஷிகோவை நன்கு ஞாபகம் வைத்திருந்தான் பியோடார். யோஷிகோவ் என்ன நடந்திருக்கும் என்பதை ஊகித்தவண்ணம், போரைக் கண்டு பயந்து மறைந்த கள்ளனை பியோடாரைக் கடைக்கண்ணால் பார்த்து ஏளனமாகச் சிரித்தான்.

"என்ன தோழர் கிளிக்கோவ்! கடைசிப் பட்டாளத்தைக் கொண்டாந்துட்டீங்களோ?"

எங்கும் ஏளனம் எதிரொலித்தது.

"ஆம். ம். ம். நான் அங்கேயே அகப்பட்டுக் கிட்டேன்" என்று மென்று விழுங்கியபடி கூறிக்கொண்டே சப்பாயேவிடம் திரும்பி,

"ராணுவத்திற்குத் தகவல் அனுப்பியாகிவிட்டதா?"

"அதுதான் தயாரிக்கப் போகிறேன். உரால்ஸ்கிலிருந்து நல்ல செய்தி வந்திருக்கிறது. அங்கே வேகமாக முன்னேறுகிறார்களாம். லெபிஷ்வான்செங்ஸ்க் செல்வதற்குப் பாதை திறக்கப்பட்டுவிட்டதாம்.

"அது ரொம்பவும் நல்லதுதான். அதைப்போலத்தான் நாம்ப இங்கே இருக்கிறோம்.சாகர்னுயாவைப்பற்றி என்ன?"

பியோடாரின் இந்தக் கேள்வியும் போக்கும் அவனது போர்த்திறத்தைப் போலவே வெறும் சண்டப்பிரசண்டமாகவே இருந்தன. எல்லோரும் இங்கே போர்முனையில் போராடுகிறார்கள் என்பதைத்தான் "அதைப்போலத்தான் நாம்ப" என்று விளங்காமல் சொன்னான். "ஆனால் ஏனைய அனைவரும் தங்கள் உயிரையும் பணயம்வைத்துப் போராடினார்கள், ஆனால் நான் எங்கிருந்தோ இப்பொழுதுதான் வருகிறேன்—உங்கள் அனுமதியோடு இரண்டு மணி கழித்து!" என்று மானக்கேடு அவன் இதயத்தைப் பிய்த்துச் சிதைத்தது; விசனமும் வேதனையும் அவன் நெஞ்சைப் பிழந்தன; அவமானத்தால் அவன் முகமே களையிழந்துவிட்டது.

கிராமத்துப் பெண்கள் பலர் அங்கு வந்துகூட ஆரம்பித்தனர். கைகால்களை நீட்டி அபிநயத் தோரணையில் காவற்காரர்களுடனும், சிப்பாய்களுடனும் எதைப் பற்றியோ விவாதித்த வண்ணம் அலுவலகத்திற்குள் நுழைய முயன்றார்கள். உள்ளிருந்து சன்னல் வழியாகப் பார்த்தால், அவர்களுடைய கெஞ்சுதலும், அதை மறுக்கும் இரும்பு போன்ற உறுதியும், தளராத கட்டுப்பாடும் கொண்ட செஞ்சேனையினர் போக்கும் நன்கு தெரிந்தது. பியோடார் வெளியில் வந்தான்; விஷய மென்ன வென்று விசாரித்தான் அந்தப் பெண்களிடம். புதிதாக வந்துள்ள செஞ்சேனையினர் தங்களுடைய பொருள்களை யெல்லாம் கவர்ந்துகொள்ளுவதாகக் கூக்குரலிட்டனர். உடனே பியோடார் அவர்களுடன் புறப்பட்டுக் குடிசைகளுக்குச் சென்றான். என்னென்ன பொருள்கள் செஞ்சேனையினரால் எடுத்துச் செல்லப்பட்டன என்பதை யெல்லாம் விசாரித்தறிந்தான்; சுற்றிலும் தான் கண்டதை யெல்லாம் குறித்துக்கொண்டான். கவர்ந்து செல்லப்பட்ட எல்லாப் பொருள்களையும் மீட்டுத்தர முயலுவதாக உறுதியளித்தான்.



உண்மையிலேயே பல கையாடல்களும் சிறு களவுகளும் நடந்துதான் இருந்தன என்பதை மறுக்கவே முடியாது. செஞ்சேனை வீரர்களும், எதிரிப் படையினரும் இத்தகைய திருவிளையாடல்களில் துணிந்து இறங்குவதை பியோடாரே கண்டறிந்திருக்கிறான். இம்மாதிரி வலுவந்தமாகப் பொருள்களைக் கவர்ந்து செல்லுவதென்பது போர்க்காலத்தில் இயல்பாக எங்குமே நடக்கத்தான் செய்யும் இப்பழக்கத்தை அடியோடு ஒழித்துவிடுவதென்பது முடியாதது; மிகவும் தொல்லையானது. போர் நிகழும்வரை இத்தகைய முரட்டுச் செயல்களும் நிகழவே செய்யும். சிப்பாய்கள் கொள்ளையிடுவது போர் நின்றால்தான் நிற்கும். இதுதான் உண்மை.எங்கும் நடப்பது என்றாலும் இந்த வெறிச்செயலை வெற்றிகரமாக ஒழித்துக்கட்டிவிட நிச்சயமாக முடியும்!

இதுபோன்ற ஏராளமான திருட்டுக்களை, முட்டாள்தனமான வெறிச் செயல்களை, பேராசை நோக்கமில்லாத களவுகளை, பியோடாரும் கண்டான். செஞ்சேனை வீரனொருவன் எல்லாவிதமான பொருள்களையும் ஒரு வீட்டில் வலுவந்தமாகப் பிடுங்கி மூட்டையாகக் கட்டிவைத்திருந்தான்.

"அதிலே என்ன கட்டிவைத்திருக்கிறாய்? காண்பி. பார்க்கலாம்."

அந்த வீரன் அமைதியாகப் பொட்டலத்தைப் பிரித்துப் பனித்தரையில் பரப்பிவைத்தான்—குழந்தைச் சட்டைகள், பூப்போட்ட சேலைகள், விளையாட்டுச் சாமான்கள், கந்தைத் துணிகள், பழைய உடுப்புகள் எல்லாம் அந்தப் பொட்டலத்துக்குள் இருந்து ஒவ்வொன்றாக வெளிவந்தன.

"ஐயா, கிழட்டுச் சிங்கமே! இதெல்லாம் உனக்கு ஏனய்யா?"

அந்த வீரன் ஏதும் பதில் பேசவில்லை. தனக்கு அவற்றில் எதுவும் பிரயோசனப்படாது என்பது அவனுக்கே நன்கு தெரியும்.

"நான் கேட்கிறேன். இதெல்லாவற்றையும் ஏன்'யா தூக்கிவந்தாய்?"

"ஒவ்வொருத்தரும் எத்தனையோ சாமான்களை ஏன் தூக்கிவர்றாங்க? நாங்க சும்மா பறித்து வந்தோம்."

"பறித்தது சரி! எதற்காக?"

"எதற்காகன்னு எனக்கெப்படித் தெரியும்?"

"யாரோ ஒருத்தி என்னிடம் தன்னுடைய சாமான்களைக் காணோமென்று அழுதுகொண்டே முறையிட்டாள். உன் பொட்டலத்திலே இருக்கிறதெல்லாம் அவளுடைய தாகத்தான் இருக்க வேண்டும்."

"அவளுடையதாக இருக்கலாம்தான். இருக்கட்டுமே அதனால் என்ன? வேணும்னா அவள் எடுத்துக்கொள்ளட்டுமே" என்று எவ்வித வருத்தமும் இன்றி அவன் ஒப்புக் கொண்டான்.

"அதில்லை அப்பனே! அவள் வந்து எடுத்துக்கொண்டு போவதென்ற சமாசாரமே நடக்காது. நீயே எடுத்துச் சென்று கொடுத்துவர வேண்டும்" என்று கண்டிப்போடும் கனிவோடும் கட்டாயப்படுத்தினான் பியோடார்.

"நானே எடுத்துச் சென்று கொடுத்துவிட முடியும். நிச்சயம் செய்ய முடியும்தான். இதைப் போய் ஏன் அந்தப் பெண் ரொம்பப் பெரிதாக்க வேண்டும்—பிரமாதப்படுத்த வேண்டும். கொடுக்கத்தான் வேண்டுமென்றால், நானே கொண்டுபோய்த் தள்ளிவிடுகிறேன். சரிதானே!"

அந்தச் செஞ்சேனை வீரன் எங்கிருந்து அந்தப் பொட்டலத்தைப் பறித்து வந்திருந்தான் என்பதைப் பியோடார் தெரிந்துகொண்டான். அவனுடன் அந்த வீட்டுக்குச் சென்றான். மூச்சுவிடாமல் பொட்டலத்தைக் கொண்டுசேர்த்த பின்னர் பேசாமல் சென்றுவிட்டான் அவன்!

பியோடார் இன்னொரு செஞ்சேனை வீரனையும் சந்தித்தான். இவன் ஒரு தள்ளுவண்டியைச் சுமந்து வந்தான். அடுப்பெரிக்கவோ அல்லது குதிரை தூக்கி விளையாடவோ அதைத் தூக்கிச் சென்றான். இதுபோன்ற பச்சைக் குதிரை விளையாட்டுக்கள் என்றால் சிப்பாய்களுக்கு ரொம்பவும் பிடிக்கும். பொழுதைக் கழிக்க எத்தனையோ விளையாட்டுக்கள் உண்டு. யாராவது ஒரு விவசாய இளைஞனது தலையை மொட்டையடிப்பார்கள், அவனுடைய பூட்ஷுகளில் சகதியை நிரப்பிவைப்பார்கள்! அவனைப் பற்றிப் பிடித்து இழுத்துவந்து ஒரு சிறு நடைவண்டிக்குள் அடைப்பார்கள். அவனுடைய பாரம் கொள்ளாது அந்த வண்டி கிரீச்சிடும். நகர முடியாது அசையும். அவன் பெருமூச்சுவிடுவது போவோர் வருவாரைப் பயமுறுத்தும். இந்தப் பரிதாப விளையாட்டு, ருஷ்யக் கிராமத்திலும் சரி, கொஸாக்கியக் கிராமத்திலும் சரி அடிக்கடி நடக்கும். அகப்பட்ட ஆசாமி எவ்வளவு அவஸ்தைப்பட்டு முனகினாலும் விட மாட்டார்கள், கடைசிவரை அவனைப் படாத பாடு படுத்தித்தான் விடுவார்கள். வேறு பல இளைஞர்களும் ஓடிவந்து அகப்பட்ட ஆசாமியைத் திமிரவிடாது அமுக்கிக்கொள்ளுவார்கள். சிறிய நடைவண்டியில் வலுவாக இருத்திக் கட்டிவிடுவார்கள். செங்குத்தான சரிவில் அந்த வண்டியை உந்தித் தள்ளுவார்கள். தலைகீழாக அந்த வண்டி உருளும்.

ஆசாமி படும் அவஸ்தையைக்கண்டு, "ஆஹா ஊஹூ. அருமையான விளையாட்டு!" என்று அகங்களிப்பார்கள்.

ஆனால் இங்கு — ஸ்லோமிகின்ஸ்காயாவில் இந்தத் தள்ளுவண்டிச் சமாச்சாரம் எளிதில் தீர்ந்துவிட்டது. வண்டியைச் சுமந்து சென்றவன் மரியாதையுடன் பியோடாரிடம் தந்துவிட்டான்—அந்த வண்டியின் வேலைப்பாடுகளால் ஈர்க்கப்பட்டு அதைக் கவர்ந்தானே தவிர, அந்த வண்டியால் வேறு எவ்விதப் பயனும் அவனுக்கு இல்லை!

இப்படி ஏராளமாக வேட்டையாடிப் பொருள்களை மீட்டுச் சொந்தக்காரர்களிடம் சேர்ப்பிக்கப்பட்டது. கிராமம் அமைதியடைந்தது; புகார்கள் குறைந்தன. சப்பா

யேவ் எல்லாத் தளபதிகளையும் அழைத்தான். எல்லோரும் கூடியவுடன், அவர்களிடம், தத்தமது படைவீரர்களைச் சோதனை செய்து திருட்டுச் சொத்து வைத்திருப்போரைக் கைதுசெய்யுமாறு கண்டிப்பாக உத்தரவிட்டான். அதன்படி வலுவந்தமாகக் கையாடப்பட்ட எல்லாப் பொருள்களும் ஓரிடத்தில் சேகரிக்கப்பட வேண்டும்; அவற்றை விசாரித்து முறையாக வழங்குவதற்கு ஒரு குழு அமைக்கப்பட வேண்டும்; பொருள்களைப் பறிகொடுத்தோர் அனைவரும் அழைத்து விசாரிக்கப்பட்டுப் போதுமான நிரூபணத்திற்குப் பின்னர் பொருள்கள் திரும்பவும் சேர்க்கப்படும் ஆனால் ஒன்று; அவர்கள் ஏழைகளாய் இருந்தால்தான் திருப்பித் தரப்படும். பணம்படைத்த எவனுக்கும் ஒரு சல்லிக் சாமான்கூடக் கிடைக்காது. அவர்களுடைய சொத்தெல்லாம் ராணுவ நிதிக்குச் சேர்க்கப்படும்; எல்லாம் உடனடியாக அமுலுக்கு வர வேண்டும்!

களவாடிய பொருள்களைத் தாமாகவே முன்வந்து திருப்பித் தந்த சிப்பாய்களைக் கைது செய்யக் கூடாது. இத்துடன், எல்லாச் சிப்பாய்களும் இரண்டு மணி நேரத்துக்குள் சதுக்கத்தில் வந்து கூடுமாறு அழைக்கப்பட வேண்டும் "சப்பாயேவே பேசப் போகிறார்" என்று அவர்களுக்கு அறிவிக்க வேண்டும். எல்லாம் நடந்தது

இரண்டு மணியும் கடந்தன. எல்லா வீரர்களும் சதுக்கத்தில் கூடிக் காத்திருப்பதாகப் பெட்கா இசையேவ் வந்து தெரிவித்தான். அப்பொழுது ஒரு படைத்தளபதி சப்பாயேவிடம் சென்று அறிவித்தார். இருவரும் சதுக்கத்திற்குப் புறப்பட்டனர். பொதுவாகச் சிப்பாய்களின் மனோநிலை பற்றி வரும் வழியில் சப்பாயேவிடம் சொல்லிக்கொண்டே வந்தார் அந்தத் தளபதி.

சப்பாயேவின் பேச்சைப் பியோடார் இப்பொழுது தான் முதன் முறையாக கேட்டான். இதற்கு முன்னர் இம்மாதிரி வெறியூட்டும் வீரர்களின் உரைகளைக் கேட்டிருக்கிறான். ஒரு பேச்சாளன் என்ற முறையில் சப்பாயேவ் தகுதிக்குறைவானவன்; அதிலும் பாட்டாளி மக்களின் தரமறிந்து பேசத் தெரியாதவன்; சாதாரண நாளில் அவனுடைய பேச்சுப்பாணியை எல்லாம் கைகொட்டி நகைத்திருப்பார்கள். ஆனால் இங்கு அதற்கு நேர் எதிரிடை. அவனுடைய சொற்பொழிவு மகத்தான வெற்றியுடன் முடிவுற்றது. எந்தவிதமான பீடிகையோ, விளக்கமோ இன்றி, எடுத்தவுடன் எதைப்பற்றிப் பேச எல்லோரையும் அழைத்தானோ—அந்தக் கொள்ளையிடலைப்பற்றி நேரடியாகவே பேசத் தொடங்கிவிட்டான். தன்னுடைய பேச்சோட்டத்தில் தேவையில்லாத பல சிக்கல்களையும் குழப்பங்களையும் இழுத்துப் பேசினான். அவனுக்கு என்னென்ன தோன்றியனவோ அவற்றையெல்லாம் சமயத்திற்கேற்றபடி சம்பந்தப்படுத்திப் பேசிக்கொண்டேயிருந்தான். அவனுடைய பேச்சுப்போக்கில் கருத்துச்சாரமோ, கோவையான எண்ண அமைதியோ ஒரே விஷயம்பற்றிய விளக்கமோ அமையவில்லை. அவனுக்குத் தோன்றியவற்றையெல்லாம் கொட்டி வைத்தான். ஆனால், இவைபோன்ற எவ்வளவோ குறைகள் இருப்பினும் அவனுடைய சொற்பொழிவு பெருத்த மாறுதலைத் தோற்றுவித்தது. சாதாரணமாகக் கருதப்படும் வகையில் அது அமையவில்லை. மறுக்க முடியாத, வலுவான மாறுதலை உண்டாக்கக் கூடிய பிரச்னைகளுக்குத் தெளிவான விளக்கமாக அமைந்தது. அச் சொற்பொழிவில், எளிமையும், தெளிவும், உண்மையும், உறுதியும், ஆற்றலும், ஆக்கமும் அழகுறப் பின்னிப் பொழிந்தன. அவனுடைய இந்தத் திடீர்ச் சொற்பொழிவு வெறும் பகட்டு என்றோ, வறட்டு இழுப்பு என்றோ ஒதுக்கிவிட முடியாது. ஒரு பெருந்தகையாளனின், உண்மையும் உணர்ச்சியும்தோய்ந்த வாழ்வியல்; ஒரு மாவீரனின் பெருமுழக்கம்; இதய தாகம்; தெளிவும் திண்மையும் கொண்ட அன்பழைப்பு, அறைகூவல்; வேண்டுமென்றால் அதிகாரக் கட்டளை என்றுகூட

அழைக்கலாம். உண்மை என்ற பெயரில் அவனுக்கு வேண்டுகோள் விடுக்க மட்டுமின்றிக் கட்டளையிடவும் நன்கு தெரியும்:

“இனிமேல் திருடவே கூடாதென்று நான் உங்களுக்கு உத்தரவிடுகிறேன். பாதகர்கள்தான் அந்தப் படுசெயலைச் செய்வார்கள். சரிதானே!”

அமர்ந்திருந்த ஆயிரக்கணக்கான வீரர்கள் அறைகூவலுடனும் இதயத்தினின்றெழுந்த ஆரவார முழக்கத்துடனும் சப்பாயேவின் வேண்டுகோளைக், கட்டளையை ஏற்றுக் கொண்டனர். அவர்களுடைய உற்சாகம் விவரிக்கவொண்ணாதது. செஞ்சேனை வீரர்கள் மிக்க உறுதியுடனும் உண்மையுடனும் வாக்குறுதி பூண்டனர். இனிமேல் கொள்ளையிடுவதைப் பொறுப்பதில்லையென்றும், மீறித் தவறிழைப்போரைக் கண்ட இடத்திலேயே சுட்டுத்தள்ளுவதென்றும் தத்தம் படைத்தலைவர்களிடம் சத்தியம் செய்து கொடுத்தனர்.

போர்க் காலத்தில் கொள்ளையடிப்பதென்பதை அடியோடு நீக்கிவிட முடியாதென்பதை அவர்கள் உணரவில்லை பாவம்! என்றாலும் அவர்கள் மிக உறுதியுடனும் நம்பிக்கையுடனும் வாக்களித்துள்ளனர். மேலும் அதன்படி போர்முனையில் வலுவந்தக் கையாடல்களையெல்லாம் வெகுவாகக் குறைத்துக்கொண்டார்கள் என்பதையும் குறிப்பிடத்தான் வேண்டும்!

சப்பாயேவின் சண்டமாருதப் பிரசங்கத்தின் பலபகுதிகளும் பாவனையும் பியோடாரின் நினைவில் பதிந்துபோயின:

“தோழர்களே! இங்கு நடக்கும் அனியாயங்களையெல்லாம் நான் பொறுக்க மாட்டேன். இனிமேல் கொள்ளையடிப்பவனைப் பிடித்தால் நானே சுட்டுப் பொசுக்கிவிடுவேன். இந்தக் கரங்களால் அந்தக் கொடியவனை நான்தான் முதலில் பொசுக்குவேன்” என்றபடி உரக்கக் கத்தினான் சப்பாயேவ். அவனது குரல் சதுக்கமெங்கும் முழங்கிற்று. பின் தனது வலது முஷ்டியை உயர்த்தியபடி “நான் கொள்ளையிட்டாலும் சரி. என்னைப் பிடித்துச் சுட்டுத் தள்ளுங்கள். சப்பாயேவ் என்று என்மேல் எள்ளளவும் கருணை காட்டாதீர்கள். நான் உங்கள் தளகர்த்தன்; நான் போர்த் துறைக் காலத்தில்தான் உங்கள் தளகர்த்தன. மற்ற நேரங்களில் நான் உங்கள் தோழன், உடன்பழகும் நேயன். நீங்கள் எத்தனை இரவுகளும் என்னிடம் வரலாம். நடுச் சாமமானாலும் வரலாம். நான் தூங்கினால் என்னைத் தட்டி எழுப்புங்கள். நான் எப்பொழுதும் உங்களுடனே இருக்கிறேன். உங்களோடு அளவளாவி வேண்டிய விபரத்தையும் தேவையானால் விளக்குவேன். நான் உண்ணும்பொழுது வந்தால் நீங்களும் சேர்ந்து உண்ணுங்கள். பழகுங்கள், மகிழுங்கள். நான் அந்த மாதிரித் தளகர்த்தன் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்!”



சப்பாயேவின் இந்தப் பகட்டுப் பேச்சைக் கேட்பது பியோடாருக்குச் சங்கடமாயிருந்தது. ஒரு வினாடி தாமதித்த பின் தொடர்ந்து பேசினான் சப்பாயேவ்:

“தோழர்களே! இந்த மாதிரி வாழ்க்கையில் நான் பழகிவிட்டேன். நான் எந்தக் கலைக்கழகத்திலும் நுழைந்ததுகூட இல்லை. எதிலும் தேறியதும் இல்லை. ஆனால் நான் பதினான்கு ரெஜிமெண்டுகளைப் பார்த்துவிட்டேன். அவை எல்லாவற்றிற்கும் நான்தான் தளகர்த்தன். எல்லாவற்றிலும் ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலவிற்று. எதிலும் கொள்ளையடிக்கும் கொடுஞ் செயல் இல்லை. தேவாலயத்துக்குச் சென்று மதகுருவின் புனித உடுப்புகளைப் பிடித்து இழுத்தார் எவருமில்லை. நீ யார், மதகுருவா? இந்த உடுப்பைப் போட்டுக்கொள்ள நீ விரும்புகிறாயா. மூடனே! அப்படியானால் நீ ஏன் அதைப் பறிக்க வேண்டும், திருடனே!” என்று எல்லோரையும் பார்த்தவண்ணம் சப்பாயேவ் கத்தினான்.

முன்னும் பின்னும் திரும்பிப் பார்த்தபடி கூடியிருந்த ஆயிரம் பேரில் எவனோ ஒருவனை எண்ணித் திட்டுவது போல நேரடியாக, வீராவேசமாகத் தாக்கினான்; குமுறினான்; கொட்டி முழக்கினான்.

அடுத்து மிகத் துணிவோடு மதகுருக்களைத் தாக்கினான்: "எல்லா மதகுருக்களும் இயற்கையாகவே புளுகுவார்கள். அவர்கள் ஏமாற்றித்தான் பிழைக்கிறார்கள். ஏமாற்றாத மதகுருவைக் காணவே முடியாது. விரத காலங்களில் மாமிசம் உண்ணக் கூடாது என்று அவர்கள் போதிப்பார்கள்; ஆனால் தாங்கள் மட்டும் வாத்துக்கறிப் பொரியலை வயிற்றுக்குள் தள்ளிக்கொண்டேயிருப்பார்கள். அவர்கள் எலும்புகளைக் கடிக்கும் சப்தம் எங்கும் எதிரொலிக்கும். உன் உடைமையல்லாத பொருள்களை நீ எடுத்துக்கொள்ளாதே என்று பிறர்க்குப் போதிப்பார்கள். ஆனால் அவர்கள் மட்டும் திருடித்தான் பிழைக்கிறார்கள். நாமெல்லாம் மெலிந்து ஓய்ந்து போனதற்குக் காரணம் அவர்கள்தான். அதுதான் உண்மை என்றாலும்கூட, பிறரது விசுவாசமும் நம்பிக்கையும் உங்களைப் பாதிக்காமல் இருந்தால் பேசாமல் விட்டுவிடுங்கள்; அவற்றில் குறுக்கிட வேண்டாம். நான் சொல்வது சரிதானே தோழர்களே!" என்றான் சப்பாயேவ்.

தன் பேச்சு பலன் அளித்துள்ளது என்பதை அறிந்துகொண்ட சப்பாயேவ் தந்திரமாக இந்தக் கேள்வியைக் கேட்டு வைத்தான்.

சப்பாயேவின் பேச்சைக் கேட்ட விவசாயச் செஞ்சேனை வீரர்கள் உணர்ச்சி பெருக ஆரவாரமிட்டனர். இதுகாறும் அமைதியாயிருந்தபொழுது அடக்கி வைத்திருந்த உணர்ச்சியை வெள்ளமாகப் பெருகச் செய்தார்கள். சப்பாயேவும் இதைத்தான் எதிர்பார்த்திருந்தான். படைவீரர்களின் அனுதாபமும் அன்பும் அவன் பக்கமே திரும்பிவிட்டன; இனிமேல் அவன் எப்படிப் பேசினாலும் வெற்றி நிச்சயம். எல்லோரும் அவன் பக்கம்தான்!



"ஒருவனுடைய வீட்டிலிருந்து எதையாவது நீங்கள் தூக்கிச் செல்லுவானேன்! அங்குள்ள எல்லாமே உங்களுடையவைதானே. போர் முடிந்தவுடன் உங்களைத் தவிர வேறு யாரிடம் அவை சரண்புகும்? ஒரு முதலாளி (பூர்ஷ்வா) வீட்டிலிருந்து நூறு பசுக்களை எடுத்துச் சென்றால், அப்பசுக்களை ஒவ்வொரு விவசாயிக்கும் ஒன்றாக நாம் பகிர்ந்தளிப்போம். அதுபோலவே துணிமணிகளைக் கவர்ந்து சென்றாலும் எலலா ஏழைகளுக்கும் பிரித்துக் கொடுப்போம். நான் சொல்வது சரிதானே?"

"சரி...சரி...ரொம்பவும் சரி" என்ற பதில் இடியென முழங்கிற்று.

எல்லோருடைய கண்களும் பொறிகக்கின; முகங்கள் சிவப்பேறியிருந்தன. நமட்டுச் சிரிப்பும், விஷப்பார்வையும், கேலியும், கிண்டலும், பழமொழியும், பாவனைப் பேச்சும் எங்கும் பரவின; தங்களுடைய அபிப்பிராயத்தையும், ஆதரவையும், இசைவையும், திருப்தியையும் பல வழிகளில் புலப்படுத்தினார்கள். தான் எப்படியெல்லாம் விரும்பினானோ அந்தந்த வகைக்கெல்லாம் அப்பெருங் கூட்டத்தை ஆடவைத்துத் தன் கரத்தில் அடக்கிக்கொண்டிருந்தான் சப்பாயேவ். அவனுடைய ஒரு சொல்லுக்கு அனைவரும் ஆடினார்கள்.

"எதையும் களவாடாதீர்கள்!" என்று கத்தினான்; இடது கையை உயர்த்தி அசைத்தான். ஒரு நிமிடம் தயங்கினான்; அடுத்த வார்த்தை வரவில்லை; மீண்டும் சொன்னதையே திருப்பிச் சொன்னான்: "எதையும் களவாடாதீர்கள். நீங்களே எடுத்துச் செல்லாதீர்கள்; பூர்ஷ்வாக்களிடமிருந்து கவர்ந்த அனைத்தையும் ஒன்றாகச் சேகரித்துத் தளபதியிடம் தந்துவிடுங்கள். தளபதி, அப்பொருள்களை விற்று ராணுவ நிதியில் சேர்த்துவிடுவார். போரில் உங்க

ளில் ஒருவர் காயம் அடைந்தால் அந்த நிதியிலிருந்து நூறு ரூபிள்கள் உதவப்படும். போரில் யாரேனும் மடிந்து விட்டால் அவர்கள் குடும்பத்தவர்க்கெல்லாம் அந்த உதவி வழங்கப் பெறும். இந்தத் திட்டம் எப்படி...? நான் சொல்வது ஏற்றதா, இல்லையா?”

இந்தக் கேள்விக்குப் பின் கூட்டத்தவரிடையே ஏற்பட்ட கோலாகலக் காட்சியை விவரிக்க முடியாது. வீரர்களின் உற்சாகம் எல்லை மீறிவிட்டது. ஊளையிடுதலும் சீழ்க்கை யடித்தலுமாக மாறிவிட்டது உற்சாகம்! ஆரவாரம் அடங்கியதும் சப்பாயேவ் தொடர்ந்து பேசினான்:

“எல்லாம் ஒழுங்காக நடக்குமாறு பார்த்துக்கொள்ளுங்கள். உங்களால் கவரப்பட்ட எல்லாப் பொருள்களையும், ஒரு துணுக்குக்கூட மீதமின்றித் திருப்பிக் கொண்டு வாருங்கள். அவற்றில் எவ்வெவற்றைத் திரும்பவும் உடையவர்களிடம் சேர்க்க வேண்டுமெனவும் எவற்றை உங்களுக்காகச் சேமிக்க வேண்டுமெனவும் நாங்கள் தீர்மானிப்போம். புரிகிறதா? சப்பாயேவ் ஒன்றைச் சொன்னால் நன்கு உணர்ந்துதான் அதைச் சொல்லுவான். நான் சொல்லுவதையெல்லாம் நீங்கள் ஒழுங்காக நிறைவேற்றும் வரை நான் உங்கள் நண்பனாயிருப்பேன்; மாறாக நீங்கள் கட்டுப்பாட்டை மீறி நடந்தால், உங்களுக்கு முன்னெச்சரிக்கை கொடுக்காமல் கொடுமை செய்துவிட்டான் என்று பிறகு வருந்தாதீர்கள்!” என்று முடித்துச் சென்றான் சப்பாயேவ்.

தொடர்ந்து கைத்தட்டலும் பேரிரைச்சலும் எழுந்தன.

சப்பாயேவ் நின்று பேசிய மேடைமீது ஒரு செஞ்சேனை வீரன் தாவி ஏறினான்; தன்னுடைய கோட்டைக் கழற்றினான்; ஒரு நொடியில் தன் இடுப்பில் அணிந்திருந்த வெள்ளிப் பட்டையை, கொஸாக்கிய னொருவனிடமிருந்து கவர்ந்த வெள்ளிப் பட்டையைக் கழற்றிக் கையிலெடுத்



தான். அந்த இடுப்புப் பட்டையைத் தூக்கி அசைத்தான்.

“தோழர்களே! இதோ இருக்கிறது பாருங்கள்.—ஏழு மாதமாக இந்தப் பட்டையை அணிந்திருக்கிறேன்—இது எனக்குப்போர்க்களத்தில் கிடைத்தது. அந்தக் கொஸாக்கியனை என் கைகளாலேயே கொன்று இந்தப் பட்டையை எடுத்துக்கொண்டேன். இப்பொழுது இதையும் தந்துவிடுகிறேன். எனக்கு வேண்டாம். இது எனக்கு எம்மாத்திரம்—பொது நிதியில் சேர்ந்து எல்லோர்க்கும் உதவட்டும்; நமது வீரத் தளபதி தோழர் சப்பாயேவுக்கு ‘ஜே’” என்று தொண்டை கிழியக் கத்தினான்.

மீண்டும் கைதட்டலும் ஆரவாரமும் எழுந்தன.

சப்பாயேவின் உற்சாகமான சொற்பொழிவு எத்தகைய மாறுதலை எல்லோரிடமும் ஏற்படுத்தியுள்ளது என்பதைப் பியோடாரும் உணர்ந்துகொண்டான். இது அவனுக்கு மகிழ்ச்சியையே தந்தது. என்றாலும் இன்னொரு கவலையும்அவன் மனத்தில் எழுந்தது. அந்த “நூறு பசுக்களையும், துணிமணிகளையும்” எல்லோர்க்கும் “முறையாகப் பகிர்ந்தளிப்பது” பற்றிய சந்தேகம் ஏற்பட்டது; பிராந்தியக் குழுவினரின் நேர்மையில் அவனுக்கே நம்பிக்கையில்லை!

“தோழர் சப்பாயேவ், செஞ்சேனை வீரர்களுடன் நானும் தொடர்பு கொள்ள விரும்புகின்றேன். இன்று நாட்டில் நிலவும் நடபடிக்கைகளை ஒருசில வார்த்தைகளால் அவர்களுக்கு எடுத்துச் சொல்லவும் விரும்புகின்றேன். தயவு செய்து அவர்களிடம் கமிசார் கிளிக்கோவ் பேசுவார் என்று மட்டும் சொல்லுகிறீர்களா?” என்று சப்பாயேவை வேண்டினான்.

உடனே சப்பாயேவ் மேடை மீதேறி, பியோடாரை எல்லோர்க்கும் அறிமுகப்படுத்தினான். பியோடார் பேசினான். வெவ்வேறு முனைகளில் நடக்கும் போராட்டங்களை, கோல்சாக்கிற்கும், டெனிகினுக்கும், இன்னும் பிற

வெள்ளைப் படைத் தலைவர்கட்கும் எதிராக நடக்கும் போராட்டங்களை விவரித்தான். சர்வதேச நிலையையும், தாய் நாட்டுப் பொருளாதார நிலையையும் தொட்டுப் பேசினான். பல சமயங்களில் சப்பாயேவின் உதாரணங்களையெல்லாம் சான்றாக முன்வைத்துப் பேசினான். சப்பாயேவின் கொள்கைகளையும் திட்டங்களையும் நேரடியாக நிராகரித்துப் பேசாவிட்டாலும், அதில் உள்ள குறைகளை ஒரு மாதிரியாகக் குறிப்பிட்டு " விளக்கினான்."

சப்பாயேவின் திட்டத்தைச் சிதைப்பதில், மட்டம் தட்டுவதில் மிக விழிப்போடு நடந்துகொண்டான் பியோடார். "தோழர் சப்பாயேவின் யோசனையை, நமது பொதுச் சொத்துரிமை பற்றிய அருமையான கருத்தை, நமது எதிரிகள் வேறு வகையாகத் திரித்துப் பொருள் கூறக் கூடும். பொருள்களையெல்லாம் கவர்ந்து, மனம் போலப் பங்கிட்டு வேண்டியவர்க்கு வேண்டும் வண்ணம் நாம் பிரித்துவிடுவோம் என்றுதான் அவர்கள் பறைசாற்றுவார்கள். ஆனால் தோழர் சப்பாயேவோ, நானோ, அன்றி நீங்களோ அப்படியா கருதுகிறோம்? இல்லை!" என்பது போன்ற குழப்பத்தைக் கிளப்பிவிட்டான். பேச்சுப் போக்கில் 'பங்கிடுதல்' என்ற பொருளில் சப்பாயேவ் கருதியதை மட்டம் தட்டிப் பேசினான். "குறைந்த பட்சம், அந்த நூறு பசுக்களையும் ஆளுக்கொன்றாக நூறு பேருக்கு வழங்குதல்" என்பதை அப்படித்தான் உணர்வார்கள், மாறாகப் பொருள் கொள்ளுவார்கள் என்று கூறினான். அத்தகைய திட்டங்களைப் போதிய விளக்கமும் தெளிவுமின்றிப் பொதுக் கூட்டத்தில் பேசக் கூடாதுதான்!

சப்பாயேவ் குழப்பம் விளைவித்த கலகக்காரர்களுடனே வாழ்ந்தவன்—வெகு குறைந்த காலமே தொடர்புகொண்டிருந்தான்—என்றாலும், அவனுடைய விவசாயத் தோற்றம், முரட்டுச் சுபாவம், அடக்க முடியாத ஒழுங்கும் கட்டுப்பாடும் அற்ற துணிச்சல் முதலிய அனைத்தும் அவனிடம் கலகப் பண்புகளையே மிகுவித்தன; கொடுமைச் செயல்களிலேயே அவனை ஊக்குவித்தன.



ஆம்! சொற்கள் மிகவும் ஆற்றல் வாய்ந்தவை. அதற்குப் பின்னர் எத்தகைய பலாத்காரக் கையாடலோ, அவமான நடவடிக்கைகளோ அந்தக் கிராமத்தில் நடக்கவே இல்லை.

கூட்டம் முடிந்ததும் யோஷிகோவைத் தேடினான் பியோடார். உடனடியாக அந்தக் கிராமத்தில் ஒரு புரட்சிக் கமிட்டியை அமைப்பதா அல்லது அடுத்த நாள் வைத்துக் கொள்ளலாமா என்பதைப்பற்றி ஆலோசிக்கவே அவனைத் தேடிக் கேட்டான். ஆனால் யோஷிகோவ் உருப்படியாக ஒன்றும் சொல்ல வில்லை; நேரடியாக விடை யேதும் சொல்லாது தப்பித்துக்கொள்ளப் பார்த்தான். இதை உணர்ந்த பியோடார் தானே முயன்று உருவாக்குவது என்று தீர்மானித்துக்கொண்டான். கிராம நிர்வாக சபைக் கட்டடத்தில் எல்லோரையும் வந்து உடனே கூடுமாறு அறிவித்தான். மூன்று அரசியல் ஊழியர்களைத் தன்னோடு சேர்த்துக்கொண்டு, விவாதிக்க வேண்டிய விஷயங்களை முன்கூட்டியே முடிவு செய்துகொண்டான். இந்தப் புது முயற்சியில் தன்னுடைய வெற்றியையும் அதிர்ஷ்டத்தையும் பரிசோதிக்க விரும்பினான் பியோடார். இதற்கு முந்திய குழப்பக் காலங்களில் இதுபோன்ற குழுக்களை அமைக்க வேண்டிய சந்தர்ப்பமே அவனுக்கு நேரவில்லை. நிர்வாக சபைக் கட்டடம் கொள்ளாத அளவு ஏராளமான கிராம மக்கள் வந்து கூடினர். தான் இல்லாமலே புரட்சிக் கமிட்டியை அமைத்துவிடுவார்கள் என்று தெரிந்ததும் யோஷிகோவ் வலிய வந்து அங்கே தலையை நீட்டினான். யோஷிகோவின் பாவனையும், தந்திரப் போக்கும் முதலில் பியோடாருக்குப் புரியவில்லை; பின்னர்தான் யோஷிகோவின் போக்கில் சந்தேகம் கொள்ளத் துவங்கி உண்மையை அறிந்தான்: பியோடாரின் குறைகளையெல்லாம்

சேகரிக்க வெகு நாட்களாக முயன்றுகொண்டிருந்தான் யோஷிகோவ். அவனுடைய தகுதியின்மை, குறைபாடுகள், முதலியவற்றையெல்லாம் சேகரித்துத் தெரிவித்தால் பியோடாரைத் திரும்ப அழைத்துக்கொள்வார்கள் என்றும் தன்னையே ராணுவப் பகுதியின் கமிசாராக (அமைப்பாளனாக) நியமிப்பார்கள் என்றும் கருதினான். இதற்காக ஏராளமான திட்டமெல்லாம் போட்டிருந்தான். தானே முதலில் புரட்சிக் குழுவை அமைத்துப் பியோடாருக்கு முன் நிற்க வேண்டுமென்று திட்டமிட்டிருந்தான். ஆனால் அவற்றையெல்லாம் உரிய காலத்தில் செய்து முடிக்க அவனால் முடியாது போய்விட்டது.

கூடியிருந்த கிராமத்தவர்களில் அனைவருக்குமே இன்னும் தயக்கமும் தடுமாற்றமும் நீங்கவில்லை. அம் மாதிரியான இக்கட்டான சூழ்நிலைகளில் இது இயல்புதான். அதில் வியப்படைவதற்கொன்றுமில்லை. நேற்று—இங்கு கொஸாக்கியர்கள் இருந்தார்கள். எல்லோரையும் கூட்டித் தங்கள் அரசியலமைப்பை ஏற்கச் செய்தார்கள். இன்று செஞ்சேனையினர் வந்து, புரட்சிக் கமிட்டியை அமைக்கின்றார்கள். நாளைக்குப் பழைய கொஸாக்கியர்களே திரும்பவும் வரக் கூடும். அப்புறம் என்ன நடக்குமோ? கிராம நலன்களைச் செயலாற்றுவதற்கெனத் தேர்ந்தெடுத்து அமைக்கப்பட்ட பிரதிநிதிகளைத் தள்ளிவிடாமல் இருப்பார்களா?

இந்தப் பயத்தினால் புரட்சிக் கமிட்டியில் பொறுப்பேற்கப் பலர் மறுத்துவிட்டார்கள். எல்லா மாறுதல்களையும் நன்கு உணர்ந்து, எதற்கும் அஞ்சாத ஒருசிலரும் ஏற்கெனவே அக்கிராமத்தைவிட்டுக் கிளம்பிச் செஞ்சேனைகளில் சேர்ந்துவிட்டார்கள். எனவே ராணுவத்திலிருந்த அரசியல் ஊழியர்கள் புரட்சிக் கமிட்டிக்கும் நியமிக்கப்பட்டனர்.

தேர்ந்தெடுத்து நியமிக்கப்பட்டவர்கள் கூடினார்கள். வேலைத்திட்டத்தை விவாதித்தார்கள். அடுத்துச் செய்ய



வேண்டுவனவற்றையும், தள்ளிப் போடவேண்டுவனற்றையும் ஆராய்ந்தார்கள். தங்களுடைய திட்டங்களை அமல் நடத்துவதற்குத் தேவையான பணத்தை அங்கு கூடியிருந்தோரிடமே திரட்டினார்கள். அவரவர்களால் இயன்றதை வழங்கிய பின்னர், கிராமம் முழுவதும் அந்த உண்டியல் பெட்டி அனுப்பப்படும். பின்னர் உரால்ஸ்க்குடன் தொடர்பு கொண்டு தாக்கீதுகளும் ஆலோசனைகளும், தேவையானால் பொருளுதவியும் பெற்றுக்கொள்ளக்கூடும்.

புரட்சிக் கமிட்டியின் செயல் திட்டங்களையும், சோவியத் ஆட்சியின் கடமைகளையும் உணர்ச்சி பொங்கப் பேரார்வத்துடன் எல்லோருக்கும் விவரித்தான் பியோடார். அவன் கூறிய அனைத்தையும் ஏற்று, ஆமோதித்தார்கள் கிராம மக்கள். உடனே சோவியத் ஆட்சி அந்தக் கிராமத்தில் அமைக்கப்பட்டது. கொஸாக்கியர்களது நிர்வாக அலுவலகம் இருந்த பழங் கட்டடத்தின்மீது ஒரு சிறு செங்கொடி தொங்கவிடப்பட்டது.

அன்று மாலை, சாரணர்கள் வெறுங் கையுடன் திரும்பினார்கள். அவர்கள் எல்லா வழிகளிலும் சென்று அரும்பாடு பட்டார்கள். சிஷ் நதியில் பெருகிய வெள்ளம், சறுக்கு வண்டி மூலமாகக்கூட உரால்ஸ்க் நெடுஞ்சாலைக்குச் செல்லுவதைத் தடுத்துவிட்டது. இரவெல்லாம் கடும் பனி வீசியது; ஸ்டெப்பிப் பிரதேசம் முழுவதும் ஒட்டிக்கொள்ளும் உறைபனி மூடிக்கிடந்தது. பாதையெல்லாம் பிசுபிசுத்துக் கிடந்தன. எனவே முன்னேறிச் செல்ல முடியாததால் புது உத்தரவுகளுக்காகக் காத்திருக்க நேரிட்டுவிட்டது. எல்லாத் தளபதிகளும் அலுவலகத்தில் கூடினார்கள். அங்கு ஒரு பாதுகாப்புப் படையை நிறுவுமாறு சப்பாயேவ் உத்தரவிட்டான், தளவாட வண்டிகளைக் கொணருமாறு கட்டளையிட்டான். சோவியத் கிராமத்தில் அமைதியும் ஒழுங்கும் என்றும் நிலைபெற ஆவன செய்தான். இந்தச் சமயத்தில் பல கைதிகள் அங்கு கொண்டுவரப் பட்டனர்.

அவர்களில் ஒருவன் கிர்கிஷியன். அவனை நெடுநேரம் குறுக்கு விசாரணை செய்தும் எந்தப் பயனும் கிட்டவில்லை. அங்கிருந்து ஒரு டசன் கல் தூரத்திற்குள் உள்ள ஷில்நயா பால்கா என்ற கிராமத்தைக் கொஸாக்கியர்கள் சுற்றி வளைத்துக்கொண்டார்கள் என்ற அவசரச் செய்தியும் வந்தது. எனவே உடனடியாக ஒரு படைப் பகுதியை அனுப்புவதெனத் தீர்மானிக்கப்பட்டது. இதுபோன்ற எண்ணற்ற செய்திகள் விவாதிக்கப்பட்டன. அவை அனைத்தையும் தொகுத்து எழுதுவதென்றால் இடம் எங்கேயிருக்கிறது?

மாலை மயங்கியது; இருள் கவ்வியது. மூடுபனி செறிந்தது; குளிர் நிறைந்தது. தொடர்ந்த போராட்டத்தாலும், அதற்குப் பின்னர் செய்த ஏராள வேலைகளாலும் களைப்புற்ற தளபதிகள் அனைவரும் ஆழ்ந்து உறங்கினர்; பியோடாரும் தூங்கினான். ஒரு உத்தரவில் கையெழுத்து வாங்குவதற்காக அவனைச் சப்பாயேவ் தட்டி எழுப்பினான். எழுந்து கையெழுத்திட்ட பின் திரும்பவும் படுத்துக்கொண்டான் பியோடார். அவனை மீண்டும் தட்டியெழுப்பினான் சப்பாயேவ். இந்த ஆச்சரிய மனிதன் சப்பாயேவ் தன்னந் தனியாக இரவெல்லாம் விழித்திருந்தான். அவனுக்குப் பக்கத்தில் மங்கலான விளக்கொன்று இரவெல்லாம் எரிந்துகொண்டிருந்ததைக் கண்விழித்த போதெல்லாம் பியோடாரும் கண்டான். தேசப்படத்தைப் பரப்பிவைத்துத் தனது பிரசித்திபெற்ற காம்பசைக் கையில் பிடித்தவண்ணம் அளந்து பார்த்து எழுதிக்கொண்டே இருந்தான் அவன். இதர தளபதிகளின் குறட்டையொலிகட்கு மத்தியில் கோழி கூவும்வரை போராட்ட இலக்குகளின் தூரத்தை அளந்து கணக்கிட்டுக்கொண்டான். ஆனால் வாயிற்படியில் காவலாயிருந்த வீரன் துப்பாக்கியைப் பிடித்தவண்ணம் தூங்கி விழுந்துகொண்டிருந்தான்!

ஸ்லோமின்ஸ்காயாவில் நான்கு நாட்களைக் கழித்தார்கள். அவர்கள் அனைவரையும் ஓரென்பர்க் முனைக்கு



மாற்றியிருப்பதாகத் தந்திமூலம் ப்ரூன்ஷ் நேரடியாகத் தாக்கீது அனுப்பினான். என்றாலும் அதற்கிடையில் இந்த முடிவும் மாற்றப்பட்டு, ஓரென்பர்க்கிற்குப் பதிலாக அனைவரும் புஷுலுக் ஜில்லாவிற்குச் செல்ல நேரிட்டது. சப்பாயேவையும், கிளிக்கோவையும் சமாராவிற்கு ஆலோசனை செய்ய வருமாறு அழைத்திருந்தான் ப்ரூன்ஷ்.

அவர்கள் நான்கே நிமிடங்களில் புறப்படத் தயாராகி விட்டனர். தாங்கள் திரும்பி வரப் போவதில்லை என்பதை நன்கு தெரிந்துகொண்டார்கள். தங்களுடைய மூட்டை முடிச்சுகளைச் சறுக்கு வண்டிக்குள் எறிந்தார்கள். துடிப்புள்ள மூன்று போர்க் குதிரைகளும் புறப்படத் தயாராக விருந்தன.

ஸ்டெப்பிப் பிரதேசப் பயணத்தைத் திறம்படச் செலுத்துதற்கு ஏற்பச் செம்மையாகத் தன் ஆசனத்தில் அமர்ந்திருந்தான் அவெர்கா. வறண்டு விறைத்துப்போன கிழவியின் உதடுகளைப் போன்று கடிவாளக் கயிறுகளை இழுத்துப் பிடித்திருந்தான். வண்டி நின்ற முன் மண்டபத்தில் பொடாபோவ், செகோவ், இலியாட்யோட்கின் முதலிய சப்பாயேவின் நண்பர்கள் வழியனுப்ப வந்து கூடினர்.

“சீக்கிரம் புறப்படுங்கள். நாங்களும் இங்கிருந்து விரைவில் கிளம்ப ஆவன செய்யுங்கள்; சப்பாயேவ்” என்று கேட்டுக் கொண்டனர்.

“நாங்கள் அங்கு சென்றடைந்ததும் உங்களையும் அழைத்துக்கொள்ளுகிறேன்” என்றான் சப்பாயேவ்.

குதிரைகள் அடியெடுத்து வைத்தன. பிரிவு வணக்கங்கள் பறக்கும் பனிப்படலத்தோடு கலந்து மறைந்தன. வருத்தம் தோய அனைவரும் விடை தந்தனர். சிலர் உரக்கக் கூவி வழி அனுப்பினர்; சிலர் தத்தமது கைகளில் இருந்த சவுக்கைச் சுண்டினர்; சிலர் தொப்பிகளைக் கழற்றி ஆகாயத்தில் வீசினர். விரைவில் முன் மண்டபம் மறைந்தது. பனி மூட்டமே தென்பட்டது.

ஸ்டெப்பி! ஓ, ஸ்டெப்பி! எங்கும் பரவியுள்ள இனிய புல்வெளியே! ஸ்டெப்பி! சூரிய அஸ்தமனம் சிவப்புக் கொடிச் சேலை போலப் பரவுகிறது; விழும் பனித் துளிகள் தாழும் வெள்ளையரின் தொட்டிலாகிவிட்டன! காற்று பெருமூச்சுவிடுவதுபோல, குளிரும் பனி மணமும் கலந்து அலை அலையாக எழுந்து வீசியது. வெள்ளைப் பனித் தரையினின்றெழுந்த காற்று, பறந்த வெளி யெங்கும் வீசி, வான மண்டலத்தோடு கலந்தது.

ஸ்லோமின்ஸ்காயாவிலிருந்து புறப்பட்டவர்கள், சில தினங்களுக்கு முன்னர் படைகளுடன் வந்த அதே அலெக்ஸாண்ட்ரோவ்—கை நெடுஞ்சாலைவழியே சென்றனர். அமைதியாகப் பயணம் செய்தனர். சவாரி செய்வோருக்குத் தொட்டிலாக அமைந்து தாலாட்டும் இசைத்தது பரவிக் கிடந்த ஸ்டெப்பிப் புல் வெளி!

இதுதான் டலோவ்கா. சில நாட்களுக்கு முன்னர் இங்கு கூடித்தான் போராட்டத்திற்கு வேண்டிய முயற்சிகளை முடிவு கட்டினர். கொஸாக்கியர்களை நசுக்குவதற்கு வேண்டிய போர்த் திட்டங்களை எல்லாம் உருவாக்கினர். இரவெல்லாம் பாட்டும் கூத்தும் ஒரு புறமும், அலுத்துக் குறட்டைவிட்டுத் தூங்கிய வீரர்கள் ஒரு புறமுமாக இங்குதானே கழித்தார்கள்!

டலோவ்கா வந்ததும்...அன்று இரவு தான் கண்ட முகாம் நெருப்பு மூட்டமும், அதற்குப் பக்கத்தில் இருந்த சிவப்புத் தாடி வீரனும், துப்பாக்கி முனையால் கிழங்கு சுட்டுத்தின்ற இளைஞனும் முதலிய எல்லாம் பியோடாரின் நினைவில் சுழன்றன. அவர்கள் அனைவரும் இப்பொழுது எங்கே? அவர்கள் இன்னும் எங்கே வாழ்கிறார்கள்?

இப்படியாக அலெக்ஸாண்ட்ரோவ்—கை சேரும்வரை பழைய சம்பவங்களும், கடந்து போன எண்ணங்களும், செயல்களுமே அவனுடைய நெஞ்சத்திலும் நினைவிலும் நிறைந்தன."



கடைசியாக ஆல்கை சென்றடைந்தனர். அங்கும் அவர்கள் நீடித்த நேரம் தங்கவில்லை. உணவு உண்டு சிறிது இளைப்பாறிய பின் மீண்டும் புறப்பட்டனர். சமாரா செல்லும் வழியெல்லாம் நீண்டு கிடந்த ஸ்டெப்பிப் புல் வெளிப் பாதையில் குதிரைகளைத் தட்டிவிட்டார்கள்.

# 7

# வழியிலே

எவருடனும் எளிதில் சினேகம் கொள்ளும் தன்மை கொண்டவன் சப்பாயேவ். எவரும் அவனுடன் விரைவில் நட்புக் கொள்ளலாம். அது போலவே அந்த நட்பு வெகு நொடியில் சிதறிவிடுவதும் உண்டு. ஆத்திரமும் அடங்காக் கோபமும் கொண்டால் ஆளே மாறிவிடுவான்; கத்துவான், திட்டுவான், புயலெனச் சீறுவான், புல்லரென இழித்துரைப்பான். எதையும் விட்டுவைக்காது ஏசுவான், கொட்டிக் குலைத்துவிடுவான். அந்தச் சமயத்தில் தன்னையே மறந்து தடுமாறி நிற்பான். ஆனால், ஒரு நொடிக்குள் அனைத்தும் மாறிவிடும்; ஆத்திரம் அடங்கியவுடன் கடந்ததை எண்ணிக் கசிவான், வருந்துவான், தன்னையே நொந்துகொள்ளுவான்; தன் எல்லை மீறிய ஆத்திரத்தில் பொழிந்தவற்றைப் பொறுமையோடு எண்ணிப்பார்ப்பான்; அந்தக் கழிவிலும், முட்புதரிலுமிருந்து நல்ல பகுதிகளும் உண்டு எனச் சலித்தெடுக்க முயல்வான். சலித்தெடுத்த அவற்றைப் பன்முறை உன்னுவான்; சப்பைக்கட்டுக் கட்டித் தான் செய்தது சரிதானே என்று சமாதானம் செய்துகொள்ள முயல்வான். பல சமயங்களில் தவறையும் உணர்வான், ஒப்புக்கொள்ளவும் செய்வான். ஆனால், எல்லோருடனும் அல்ல, எல்லா விஷயத்திலும் அல்ல, அவன் யாரை மதிக்கிறானோ அவர்களுடன், அவன் விரும்பினால் தான் அந்த அளவிற்கும் செல்லுவான். அந்தச் சமயங்களில் மிகவும் வெளிப்படையாக எதையும் மறைக்காது பேசுவான். அவன் அந்தரங்க எண்ணம் அனைத்தும் அப்பொழுது புலனாகும்.



அவன் எப்பொழுதும் சத்தம் போட்டுக் கத்தித்தான் பேசுவான். அவனை நெருங்குகிறவர்கள் மிக நிதானமாகவே பழக வேண்டியிருக்கும். அவனைச்சரிவரத் தெரிந்துகொள்ள யாரேனும் அவனிடம் அணுக வேண்டிய சந்தர்ப்பம் நேரிட்டால், ஒன்றுக்கு இரு முறை நன்கு யோசித்துத்தான் எதையும் பேச வேண்டும். இல்லாவிட்டால் அவனுடைய நாக்கு விஷம் கக்கிவிடும்; வேதனையை விளைவித்துவிடும். அதிலும் பயந்தாங்கொள்ளிப் பேர்வழிகளானால் சப்பாயேவின் ஆத்திரம் அளவைக் கடந்து பொங்கிவிடும். கோழைகளைக் கண்டால் அவனுக்குக் கட்டோடு பிடிக்காது; கண்கொண்டு பார்க்கச் சகிக்க மாட்டான். புதிதாகப் பார்ப்பவர்களுக்கு அவன் ஒரு வெறிபிடித்த மிருகம்; ஆனால் நெருங்கி உறவாடுபவர்களுக்கு அவன் நெஞ்சம் கவர்ந்தவன்; நினைவில் இனிப்பவன், அன்பொழுகும் நண்பன்; ஆர்வ மூட்டும் நேசன்! பிறர் துயர் பொறாத பெருந்தகையோன்; இரக்கச் சித்தம் கொண்ட நல்லோன். பிறர் மகிழ்ச்சியைத் தனதாகக்கொண்டு மகிழும் தூயன். ஒரு குறிப்பிட்ட பிரச்னையைப்பற்றிக் கனல்கக்க அவன் பேசும்பொழுது எதையும் விட்டுவைக்க மாட்டான். ஒரே இலக்கை நோக்கித் தனது ஆத்திரத் தீ அனைத்தையும் வீசிப் பொசுக்கிவிடுவான். ஆனால் அந்தப் பிரச்னையின் அடியையும் முடியையும் அலசி ஆராய்ந்துவிடுவான். எந்த விஷயத்தையும் இரண்டில் ஒன்று பார்த்து முடிவு கட்டிவிடுவான். அவன் ஒரு தீர்ப்பைச் சொல்லிவிட்டால் அது தான் முடிந்த முடிவு!

சப்பாயேவ் தலை நிமிர்ந்து கம்பீரமாக வாழ்ந்தான். அவனுடைய தீரச் செயல்கள் ஸ்டெப்பி வெளியெங்கும் எதிரொலித்தன. இந்தப் பெருமை அவனுடைய பார்வையை மங்கச் செய்தது; தன்னைத் தானே பெரிய வீரனென எண்ணுமாறு செய்தது; தற்பெருமையால் அவன் தலையைச் சுழலச் செய்தது!

சப்பாயேவைச் சூழ்ந்து வாழ்ந்த இளைஞர்கள் சிலரால் தான் அவனுடைய தீரப் பெருமைகள் எல்லாம் பறையடிக் கப்பட்டன. அவனுக்கு முன்னாலும், அவன் இல்லாத போதும் கதை கதையாய்ப் பேசினர். உண்மையாகவே நடந்தவற்றையும் கூறினர், தாங்களாகவே புனைந்து கொண்டதையும் சேர்த்துக்கொண்டனர். சப்பாயேவைப் போற்றிப் புகழ்ந்தனர், தெய்வ மெனக் கொண்டாடினர் ; மாவீரன் எனப் புகழ் பாடித் துதித்தனர் ; எவராலும் வெல்ல முடியாதவன் என விண்டுரைத்தனர்! சப்பாயே விடமே முக ஸ்துதிக்காகப் பாராட்டியோரையும், பன் மடங்கு எல்லை மீறிப் புகழ்ந்தோரையும் அவன் தட்டிக் கொடுத்தான். தானே விளம்பரப்படுத்தியும் கொண்டான். அதே சமயத்தில் அரைகுறையாகப் புளுகத் தெரியாமல் பேசினவர்களை யெல்லாம் மட்டம் தட்டிவிடுவான். தன் னிடம் நெருங்கவே கூடாதென்று நிர்த்தாட்சண்ணியமாகக் கூறியும்விடுவான்.

சப்பாயேவிடம் இன்னொரு குறிப்பிடத்தக்க குணப் பாங்கும் உண்டு. எந்தப் புகாரையும் எளிதில் நம்பிவிடும் குழந்தை மனமே அது! முக்கியச் செய்தியையும், அற்ப விஷயத்தையும் முட்டாள்த்தனமான புகாரையும்கூட வெகு எளிதில் அப்படியே ஏற்றுக்கொள்ளுவான். உதா ரணமாக—ஒரு முறை, சமாராப் பகுதியில் இருந்தோர்க் கெல்லாம் பத்துப் பவுண்டு கம்பளித் துணி வழங்கப்படுகிற தென்றும், போர் முனையில் நலிவோர்க்கு ஒரு அவுன்ஸ் கூடக் கொடுக்கப்படுவதில்லை யென்றும் அவன் நம்பினான். போர்முனைக் காரியாலயங்களிலும், ராணுவக் காரியாலங் களிலும் நாள் முழுதும் குடித்துக் கூத்தாடுவது பெருகி விட்டதென்றும், அங்கு இருப்போர் அனைவரும் வெள்ளைப் படையின் உளவாளிகள் என்றும், அவர்கள் எந்த நிமிட மும் செஞ்சேனையினரைக் காட்டிக் கொடுத்துவிடக் கூடு மென்றும் நம்பினான். போர்முனைக்கு வேண்டிய ஆயுதங்கள்,



தளவாடங்கள், பூட்ஷுகள், ரொட்டி, துப்பாக்கிகள் முதலி யன தாமதமாக அனுப்பப்படுவதற்குக் காரணம் அவற் றின் போதாக் குறையோ, போக்குவரத்து இன்மையோ, பழுதான பாலங்களோ அல்ல வென்றும் ஒருசில தனிப் பட்டவர்களின் சுயநலக் குறுக்கீடும் தடங்கல்களுமே காரண மென்று நம்பினான்.

டைபாய்டு பரவுவது பறவைகளினால்தான் என்றும், பறவைகள் அதிகமாக அதிகம் ஆக அந்த நோயும் அதிகரிக் கும் என்றும் நம்பினான் ; சர்க்கரை என்பது ரொட்டியி லிருந்து கிடைக்கிறது என்று நம்பினான். அடியாத மாடு படி யாது என்று கருதினான்; எல்லாவற்றையும் தனக்கேயுரிய காரண பாணியில் நம்பினான், ஏற்றுக்கொண்டான். எளிமையான தனது திறந்த மனத்தால் அவன் நம்பாத பகுதியே இல்லை எனலாம்!

தன்னுடைய மிக நெருங்கிய நண்பர்களைப் பற்றிய பாதகமான புகார்கள் அனைத்தையும்கூட அப்படியே நம்பினான். சான்றாக, பொடாபோவைப் பற்றியதைக் கூறலாம். பொடாபோவ் துணிவும் தியாகமும் நிறைந்த வீரன் ; ஒரு சிறு ராணுவப் பகுதியின் தலைவன். சப்பா யேவின் நடவடிக்கைகளோடு தொடர்புகொண்டு ஒன்றி வாழ்ந்தவன். எத்தனையோ தாக்குதல்களைக் கண்டவன் ; காயம்பட்டவன். பல முறை உதிரங் கொட்டியவன். பெய ரளவுக்கு மட்டும் தளபதியா யில்லை ; பெயர் உயர்வில் அத்தகுதியைப் பெற்றான்.

போராட்டச் சமயத்தில் ஏதாவது இடையூறு ஏற்பட்டு விடும். குறித்த காலத்தில் தளவாட வண்டிகளைப் பொடா போவினால் கொணர முடியாது போய்விடும்; இன்னொரு படைக்குத் துணையாகச் செல்லுவதில் தாமதமேற்பட்டு விடும். போர்ச் சமயத்தில் பதுங்கிப் பத்துக்கல் முன்னேறு வதற்காக அவன் ஐந்து கல் பின்னிட நேரிடும். இதைச் சாக்கிட்டுப் பெருந்தளபதியான சப்பாயேவிடம் எவனாவது

புகார் சொல்லுவான்—"பொடாபோவ் ஒரு பயந்தாங் கொள்ளி—கோழை—ஓடிவிட்டான். உரிய சமயத்தில் உதவத் தவறிவிட்டான். புத்தியே மழுங்கிப் போச்சு—வாரமெல்லாம் குடித்துக் கூத்தாடினுன். சப்பாயேவ்.... உன்னைப்பற்றிப் பொருமையாகப் பேசிக்கொண்டிருந்தான்" என்றெல்லாம் கிளப்பிவிடுவான்.

இவையனைத்தையும் நம்பிவிடுவான் சப்பாயேவ். ஆத்திரத்தை அனலாக்கிக் கொள்ளுவான்.

"அந்த அயோக்கியனை நான் கவனித்துக்கொள்ளுகிறேன்; அவன் தலையை அப்படியே கிள்ளிவிடுகிறேன். குடிக்கிறுனு...குடிக்கட்டும். கொன்று தீர்த்துவிடுகிறேன். தன்னுடைய களியாட்டத்திற்குப் பலியாக்க என்னுடைய ராணுவ வீரர்கள்தானு அவனுக்குக் கிடைத்தார்கள்? சப்பாயேவை அவன் இன்னும் சரியாகத் தெரிந்துகொள்ளவில்லை....அவனை உடனே கூப்பிடு" என்று வெறி கொப்புளிக்க பொடாபோவின் வருகைக்காகக் காத்திருந்தான்.

வேகமாக வந்த பொடாபோவ், வெளித் தாழ்வாரத்தில் நின்றேரிடம் விசாரித்தான்:

"என்ன ஐயா கோபமோ?"

"உஷ்...அளவு கடந்த கோபம்!"

"என் மேலா?"

"ஆமாமாம்...உன்மேலே மட்டும்தான்."

"யாராவது எதையாவது சொல்லியிருப்பான்?"

"ஆமாம்...அதுவாத்தான் இருக்கும்."

"சரி....சரி....ஒன்றும் வராமல் இருக்கப் பிரார்த்திப்போம்."

இதைக் கேட்டவுடன் அவசரம் அவசரமாக இடுப்பு வாரை இழுத்து நெருக்கிக்கொண்டான்; காற்சட்டையை நிமிர்த்திவிட்டான், ராணுவ நடையுடன் உள்ளே நுழைந்தான் பொடாபோவ்.



சப்பாயேவ் அவனைத் திரும்பிப் பார்க்கவில்லை, பதிலுக்கு வணங்கவும் இல்லை. அனல் கக்கும் விழிகள் வைத்த கண்வாங்காது பார்த்துக்கொண்டிருந்தன. மீசையைத் திருகியவண்ணம் ஒரு விநாடி பேசாதிருந்தான் சப்பாயேவ். போத்தலில் இருந்து அடைப்பான் பிடுங்கிக்கொண்டு கிளம்புவது போலச் சொற்கள் கிளம்பின:

"நீ இன்னும் குடிக்கிருய் அல்லவா...?"

"நான்....நான் அதைத் தொட்டுக்கூட...."

"சத்தம் போடாதே....உன் இஷ்டத்திற்கு ஆடுகிருய் ...மடையா...!

"தோழர் சப்பாயேவ்....நான்...

"சத்தம் போடாதே....உன்னைச் சுட்டுப் பொசுக்குவதுதான் சரியான வழி...அந்த மாதிரியான இக்கட்டான சமயங்களில் போர்முனையில் உன் இஷ்டத்திற்கு ஆட்டம் போடுகிருய். என்ன நினைத்துக்கொண்டாய்?....ம்....நீ என்னதான் எண்ணியிருக்கிருய்?...நான் கேட்கிறேன்... சப்பாயேவிற்கு எதிராக உன்னுல் என்ன செய்துவிட முடியும்?...ம்..."

பொடோபோவ் வாயைத் திறக்கவில்லை. அடைப்பானிருந்தால்தானே போத்தலில் இருந்து கிளம்பும் வாயு சத்தமிடும். அடைப்பானை எடுத்துவிட்டால்...! அதுபோலத்தான் எதிர் பேசாமலிருந்தால் சப்பாயேவ் தானே அடங்கிவிடுவான் அல்லவா? தன் ஆத்திரம் தீரக் கத்தியபின் தானே அடங்கிவிட்டால் பின்னர் நடந்ததைச் சாவதானமாக அவனிடம் சொல்ல முடியும், பிறரது அபவாதங்களையும், துவேஷக் குற்றச்சாட்டுகளையும் விளக்க முடியும் என்பதைப் பொடாபோவ் நன்கு அறிவான். முதலில் சமாதானம் எதையும் ஏற்க மறுக்கும் சப்பாயேவ் பின்னர் பணிந்துவிடுவான். அவன் காதுக்கெட்டிய புகாரில் ஏதேனும் ஒன்று மட்டும் தவறுனது என்று நிரூபித்துவிட்டால் போதும். அவன் ஆத்திரம் மறைந்துவிடும்; மனம் பதமாகி

விடும். அன்பு ததும்பப் பார்த்துக் குற்றம் குறுகுறுக்கக் கேட்பான் :

" புரிந்துகொண்டாயா...நான்..."

" புரிந்துகொண்டேன்..."

" ஆம்...தெரிந்துகொள்...நீ பின்வாங்கி ஓடிவிட்டதாகச் சொன்னார்கள். நீ குடித்தும் இருந்தாயாம்."

" ம்...ம்."

" அதனால் தான் நானும் நம்பினேன். நான் நம்பாமலிருப்பதெப்படி? நீயே என்னிடத்தில் இருந்தாலும் நம்பித்தானே இருப்பாய்? யாராயிருந்தால்தான் என்ன? நம்பித்தான் இருப்பார்கள்!"...என்று சொல்லிக்கொண்டே புன்சிரிப்புச் சிரிப்பான் சப்பாயேவ்.

பொடாபோவின் தோளில் கை சேர்த்துத் தட்டிக்கொடுப்பான்; முன்பு போல் நேசத்துடன் பேசுவான். அவனை உட்காரவைத்துத் தேநீர் தருவான்—இவ்வளவு செய்தாலும் அவன் பேசியதற்குச் சாந்திசெய்ததாகிவிடுமா?

இரண்டு மூன்று நாட்கள் ஓடும். பொடாபோவைப் பற்றி இதைப் போலவே மீண்டும் ஒரு புகார் வந்தால் போதும்; அப்படியே நம்பிவிடுவான் சப்பாயேவ். முன்பு போல் பொங்கித் தீர்த்து அடங்கிவிடுவான்.

குழந்தைபோல எதையும் எளிதில் நம்பி மோசம் போகும் தன்மையுடையவன் சப்பாயேவ். இதனால் அவனுக்கு எவ்வளவோ தொல்லைகள் ஏற்பட்டன. என்றாலும் அவனால் இதைநிவர்த்தித்துக்கொள்ள முடியவில்லை. ஆனால் அவன் முற்றிலும் நம்பி ஏற்றுகொள்ளாத இன்னொரு விஷயமும் இருந்தது. " எதிரி மிகவும் வலிமையுடையவன், அவனை அடக்குவது கடினம்; பின்னிட்டு ஓடச் செய்வது துர்லபம்" போன்ற செய்திகளை ஏற்கவே மாட்டான்.

"எந்த எதிரியும் எனக்கு எதிர் நிற்க முடியாது!" என்று துணிவோடும் கர்வத்தோடும் முழங்குவான். " பின்வாங்குவது எப்படி யென்று சப்பாயேவுக்குத் தெரியாது. சப்பாயேவ் என்றும் பின்னிட்டதே யில்லை. எல்லோருக்கும் இதை அறிவியுங்கள்—எனக்குப் பின்வாங்கத் தெரியாது. நாளைக்குப் போர்முனை முழுவதும் பரவித் தாக்குங்கள். நான் உத்தரவிட்டுள்ளதாகச் சொல்லுங்கள். யாராவது மாறாக நடந்தால் அவனைத் தலைமைக் காரியாலயத்திற்குக் கொண்டு வாருங்கள். எப்படிச் சரியான பாதையில் போவதென்று அந்தக் கழுதைக்கு நான் அறிவுறுத்துகிறேன்!"



அவனுடைய துறையில், அவனைப் பொறுத்தவரை சப்பாயேவ் ஒரு நிபுணன்; தலைசிறந்த வீரன். தன்னுடைய இராணுவப் பிரிவில் உள்ள அனைவரையும் நன்கு தெரிந்து வைத்திருந்தான். ஆனால் அரசியல் அமைப்பைப்பற்றி ஒரு சிறிதே அறிவான்; அதில் அதிக அக்கறையும் காட்டமாட்டான். போர்முனை நடவடிக்கைகளை நன்கு அறிவான். இளமை முதலே அனுபவத்தால் உணர்ந்தான்; பிறரை அண்டிக் கேட்டு அறிந்தான்; தேசப் பட விளக்கத்தால் தெரிந்துகொண்டான். அவனுடைய நினைவாற்றல் பசியது; என்றும் மாறாதது. உண்மைச் செய்திகளை என்றும் பதிய வைக்கும் ஆற்றல் கொண்டது. ஊரில் வாழும் அனைவரையும், குறிப்பாக விவசாயிகளை நன்கு அறிமுகம் கொள்ளுவான். நகர்ப்புறத்தவர்களை அவ்வளவாக அவனுக்குப் பிடிக்காது. விவசாயிகளின் தராதரத்தையும், மனப்போக்கையும் எளிதில் உணர்ந்து அவர்களைக் கொண்டு எதைச் சாதிக்க முடியும், எதைத் தவிர்க்கவேண்டும் என்றெல்லாம் வரையறை செய்துவிடுவான். ஊசிமுதல் துப்பாக்கிவரை எதையும் ஆராய்ந்து விளங்கிக்கொள்ளுவான். எந்தப் பிரச்னையிலும் பின்னிட மாட்டான்.

ஆனால் அரசியல் அமைப்பு, அது பற்றிய அபிப்பிராயம் முதலிய பிரச்னைகள் வந்தால் அவனால் புரிந்துகொள்ள முடியாது. அதுபற்றி அவனுக்கு எதுவும் தெரியாது; தெரிந்துகொள்ளும் விருப்பமும் கிடையாது. அவன் நம்பாத பகுதிகள் அந்தத் துறையில் ஏராளம் இருந்தன!

உலகத் தொழிலாளர் இயக்கம் என்பது வெறும் கட்டுக்கதை என்று கருதினான்; அந்த மாதிரியான ஓரியக்கம் நிலைக்கவே முடியாது என்றும் உறுதிகொண்டான். பத்திரிகையில் இதுபற்றி வெளியான குறிப்பையோ அறிக்கையையோ அவனிடம் சுட்டிக்காட்டினால் "பத்திரிகையா...நாம்தானே பத்திரிக்கையிலும் எழுதுகிறோம்—அவர்களாகவே கற்பனையில் அப்படி வேடிக்கைக்கு எழுதியிருப்பார்கள்..." என்பான்.

"ஒருசிறிதும் இதில் கற்பனை இல்லை—நகரங்கள், மக்களின் பெயர்கள், எண்ணிக்கை, இதர செய்திகள் அனைத்தும் புள்ளி விபரத்துடன் தரப்பட்டுள்ளனவே! மறுக்க முடியாத உண்மைகளாயிற்றே இவை!"

"அதனால் என்ன? நானே புள்ளிவிபரங்களை உண்டாக்க முடியுமே!"

இப்படி முதலில் ஒன்றைக் கண்மூடி நம்பிவிட்டால் பிறகு அவன் கொண்ட அபிப்பிராயத்தை மாற்றுவதென்பது மிகக் கடினம். கொஞ்சம் புன்முறுவலிப்பதோடு சரி! பின்னர் ஒளிக்கோவுடன் நீண்ட நேரம் இதைப்பற்றி விவாதித்த பின்னர், பிற விஷயங்களில் தன் கருத்தை மாற்றிக்கொண்டதுபோல இதிலும் தன் முன் கருத்தை மாற்றிக்கொண்டான்.

அரசியல் வைரிகளின் குழப்பமும் போக்கும் தேவையில்லாதன வென்றும், முட்டாள்தனமானவை யென்றும் கருதினான். "நமது அரசியல் வைரிகள் தம் விருப்பம் போல் நடந்துகொள்ள விட்டுவிட வேண்டும். அவர்களால் நமக்கு எத்தகைய இடையூறும் வந்துவிட முடியாது" என்று கூறினான்.

கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பு அதன் கொள்கை, செயல் திட்டம் பற்றி விரிவாக அவன் அறிந்தானல்லன். சென்ற ஒரு வருடமாகக் கட்சியில் அங்கம் பெற்றும் இதை அறிந்துகொள்ள அவன் முனையவில்லை. அது பற்றிய எதையும்



படிக்கவுமில்லை, கேட்டுத் தெரிந்துகொள்ளவும் இல்லை.

அடுத்தாற்போல மேலிடத்து அலுவலாளர்களைப் பற்றிய அவனுடைய அபிப்பிராயத்தையும் தெரிந்துகொள்ள வேண்டும். உணவு, உடை, உத்தரவுகள், அவசியத் தாக்கீதுகள் ஆகிய அனைத்தும் எங்கிருந்துவருகின்றன என்பதை அவன் நெடிது காலம் அறியவில்லை. மேலிடத்து அலுவலாளர் பலரும் ஜார் பரம்பரையினர் என்றும், செஞ்சேனை அவர்களை நம்பிப் படைகளை அமைப்பது கேடு தருவது என்றும் நம்பினான். எனவே மேலிடத்தார் வசம் படைகளை வைப்பது அவனுக்குப் பிடித்தமில்லை மத்திய அலுவலாளர்களிடம் அவநம்பிக்கை கொள்ளுவதென்பது அவனிடம் பிறவியிலேயே அமைந்துவிட்டது. எனவே புதிதாக ராணுவப் பகுதியில் சேரவந்த இரண்டாந்தர அலுவலாளர்களையெல்லாம் அரைகுறை மனத்தோடே நியமித்தான்; அவர்களது நடத்தையிலும் போக்கிலும் ஒரு கண் வைத்திருந்தான்.

அதுபோலவே இரகசியப் போலீஸையும் மதித்தான். உண்மை ஒருசிறிதும் இன்றி மிகப் பெரிதுபடுத்தி ஒரு விஷயத்தை அவர்கள் மணிக் கணக்கில் பேசுவது அவனுக்குப் பிடிப்பதில்லை. உண்மையிலேயே ஒரு சம்பவத்தைச் சொன்னாலோ, அல்லது செயலை மேற்கொண்டாலோ அது விதிவிலக்கு என்றே கொள்ளுவான். மேலிடத்து அலுவலாளரிடமும், இரகசியப் போலீஸிடமும் இயற்கையாகக் கொண்ட அவநம்பிக்கையால் எல்லா முக்கிய ஸ்தானங்களிலும் தன் ஆட்களையே நியமித்தான் சப்பாயேவ். அவ்விதம் தன்னால் நியமிக்கப்பட்ட அனைவரும் செயல் வீரர்கள் என்றும் நம்பிக்கைக்குரியவர்கள் என்றும் முழுமனதுடன் நம்பினான். இரண்டாவதாக அத்தகையோருடன் சேர்ந்து வேலை செய்வதும் சுலபமானது என்று கருதினான். "விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் சரியான வழியைக் கற்பிக்க வேண்டும். அவர்கள் செயல்முறை அனு

பவத்தால் மட்டுமே எதையும் புரிந்துகொள்ளக் கூடியவர்கள். ஒருவனிடம், உன்னைப் பிரதம தளபதியாக நியமித்திருக்கிறேன் என்றால் அந்த முட்டாள் பயந்துகொண்டு முடியாதென்பான்; அவனது நலத்திற்காகத்தான் சொல்கிறேன் என்பதை உணர மாட்டான். அதே சமயத்தில் அவனுக்கு உத்தரவிட்டு, வலுவந்தமாக அவனை அந்தப் பதவியில் உட்கார வைத்தால், ஒரு வாரம் தொல்லைப்படுவான்; அடுத்த வாரத்தில் முறையாக வேலைசெய்ய முயல்வான்; பின்பு எல்லா உயர்ரக அலுவலாளரையும்விடச் சிறப்பாகப் பணியாற்றுவான்" என்று சப்பாயேவ் அடிக்கடி சொல்லுவான்.

இவ்விதம் தன்னுடைய ஆட்களையே எங்கும் நியமிப்பது அவனுடைய முக்கிய திட்டமாகும். இதனால் எல்லாத் துறையிலும் பணிவும் செயலூக்கமும் மிகுந்தது. அவனைத் தளபதி என ஏற்றுக்கொண்டோரே எங்கும் இருந்ததால் அவனுடைய செல்வாக்கும் மதிப்பும் உயர்ந்தன!

சப்பாயேவின் இந்தக் குணப்பாங்கையெல்லாம் நுணுகி ஆய்ந்து உணர்ந்துகொண்டான் கிளிக்கோவ். முதலில் சப்பாயேவின் முழு நம்பிக்கையைப் பெற வேண்டுமென உணர்ந்தான். அதன் பின்னரே சப்பாயேவின் கண்மூடிக் கருத்துக்களைக் கொஞ்சம் கொஞ்சமாக மாற்ற முடியும், கருத்துலகப் போராட்டத்தில் அவனை ஈடுபடுத்த முடியும், அப்பட்டமாக இதுதான் சரி என்று அவனோடு விவாதிப்பதைவிட தர்க்கரீதியாக இதுவே சிறந்தது என்று ஆராய்ந்து பார்க்கச் செய்ய முடியும். எவ்வளவோ வீர' பிரதாபமும் 'புகழும்' கேட்பதற்கு இனிமையும் பயப்பதாய் இருந்தபோதிலும் கண்மூடித்தனமாக உணர்ச்சிவயப்பட்டு போரிடுவதைக் காட்டிலும், திட்டமிட்டுச் செம்மையாகப் போரிடுவதே சிறந்தது என்பதை உணரச் செய்ய முடியும். இதை நன்கு மனத்துட் கொண்டான் கிளிக்கோவ்.



சப்பாயேவின் மதிப்பைப் பெறுவதெப்படி? அறிவுலகப் போரில் தான் அவனை ஆட்கொள்ள முடியும். எனவே அவன் உள்ளத்தே அறிவுத் தாகத்தையும் சிந்தனைப் பசியையும் தூண்ட வேண்டும். ராணுவச் சமாசாரமில்லாத பிற துறைகளிலும் அவனை ஈடுபாடு கொள்ளுமாறு தூண்ட வேண்டும்.

சப்பாயேவின் பெருமையும் உயர்வும் பியோடாருக்கு நன்கு தெரியும். தன் தகுதியையும் சிறப்பையும் அவன் அறிவான். எனவே சப்பாயேவிடம் இந்த அறிவுப்பசியைத் தூண்டுவதற்கு இடைவிடாது முயன்றான். கொரில்லா வீரன் எனவும், பெரும் கலகக்காரன் எனவும் பரவியிருந்த தன் புகழ்ப் பெருமையில் மயங்கிக் கிடந்த சப்பாயேவைப் பிறதுறையில் ஈடுபடுத்த, அங்கு அவனது சிறுமையையும், போதாக் குறையையும் தெளிவுபடுத்த முனைந்தான். தன்னுடைய தகுதியையும் வல்லமையையும் பியோடார் நன்கு உணர்ந்தவன்தான். எனினும் முயன்றான். சப்பாயேவ் பொதுவாகப் பிறரைவிட முற்றிலும் மாறுபட்டவன். எவருடனும் அவனை ஒப்பிட முடியாது. ஸ்டெப்பிப் பிரதேச முரட்டுக் குதிரையைப் போன்று அவனையும் அடக்கித் திருப்புவது மிகக் கடினம். என்றாலும்கூட அந்த முரட்டுக் குதிரைகளையாவது அடக்கிவிட முடிகிறது! பியோடார் நெஞ்சில் ஒரு பிரச்னை கிளைத்தது- கவர்ச்சியும், காந்தத் தன்மையும், இயல்பூக்கமும் செயல்திறமும் கொண்ட மாவீரன் சப்பாயேவை அப்படியே விதிவசத்திற்கு, அவனே வரையறுத்துக்கொண்ட வாழ்க்கை வழிக்கு விட்டுவிட்டால் என்ன? பல முகம் கொண்ட வைரநகை போல அவனுக்கே உரிய துறையில் அவன் மின்னிப் பொலியட்டுமே, பிரகாசித்து வாழட்டுமே!

இந்த எண்ணம் கிளிக்கோவின் நெஞ்சில் மூண்டது. ஆனால் பெரும் போராட்டச் சூழ்நிலைக்கு முரண்பட்ட

அசட்டுத்தனமாகவும், சிறுபிள்ளைத்தனமாகவுமே இது தோன்றியது.

சப்பாயேவ் கூரிய கண்களைக் கொண்ட கழுகு போன்றவன் அவனது நெஞ்சம் நிலையற்றது. இரத்தம் கொதிப்புற்றது. உணர்ச்சியோட்டங்கள ஒரு நிலையில் நில்லாதன. மாற்ற முடியாத உறுதியும் உள்ளப்பாங்கும் உடைய நெஞ்சம்! என்றாலும்கூடத் தனது வாழ்க்கைப் பாதையைச் சரிவரக் கவனித்துக்கொள்ள அவனால் முடியவில்லை!

இந்தப் பொறுப்பை ஏற்று, அவன் உள்ளத்தில் புத்துணர்வு பூக்கச் செய்து, முடியுமானால் சரியான வாழ்க்கைப் பாதைக்கு வழிகாட்டவும் முனைந்தான் பியோடார். இந்த முயற்சியில் அவன் வெற்றி பெறுவானா என்பது சந்தேகமே! என்றாலும் ஒரு துறையில் முயன்று பார்ப்பது நல்லதுதானே, செயலைச் சீர்குலைப்பதற்கு மாறாக ஓரளவு அந்த முயற்சி செம்மையாகக் கூடுமல்லவா? ஆனால் அம்முயற்சி வெற்றி பெற்றால் - ஆஹா - நாட்டுப் புரட்சிக்கு அதுபோன்று எத்தனையோ பேர் வேண்டுமே! சப்பாயேவும் செம்மை செய்யப்பட்டால் எவ்வளவு நன்மை பயக்கும்!

ஆல்கையைவிட்டுப் புறப்பட்ட பின் அதைப்பற்றிய எண்ணமும் அதற்கு முந்திய ஸ்லோமின்ஸ்காயாப் போராட்ட நிகழ்ச்சிகளும் மனத்திரையில் மங்கத் தொடங்கின. அதற்குப் பதிலாக, சமாராவை நோக்கிச் செல்லுகிறார்களே, அதைப்பற்றிய தீவிர எண்ணங்கள் பரவின. கோல்சாக் போர்முனையில் கவிந்துள்ள ஆபத்துக்களையும், ஊபாப் பகுதியில் அண்மையில் ஏற்பட்ட படுதோல்விகளையும் அவர்கள் இன்னும் நன்கு உணரவில்லை. என்றாலும் கூட வெறும் சாதாரண விஷயத்திற்கு அவர்கள் இவ்வளவு தூரம் அவசரமாக அழைக்கப்படவில்லை யென்பதையும், ஏதோ பெறும் பிரச்னைகளும் திட்டங்களும் அவர்களை எதிர்நோக்குகின்றன வென்பதையும், அத் துறைகளில்



அவர்களது பங்கு பெரிதாகவே இருக்கு மென்பதையும் நன்கு உணர்ந்திருந்தார்கள்.

"நாம் எதற்காக எங்கு போகிறோ மென்று நினைக்கிறாய்"? என்று கேட்டான் கிளிக்கேவ்.

"சமராவிற்குத்தானே!"

"ஆம்"

"அங்கிருந்து நம்மை வேறு எங்காவது அனுப்பிவிடுவார்கள். எங்காவது தேவைப்படுவோம்" என்று உறுதியுடன் பகர்ந்தான் சப்பாயேவ்.

இவருக்கும் எதற்காக அழைக்கப்பட்டுள்ளோம் என்பதுபற்றி ஒன்றும் நிச்சயமாகத் தெரியாது. எனவே புரியாத விஷயத்தில் குட்டை குளப்பி வீணுக்க விரும்பாது பேச்சடங்கினர். தங்களுக்குள்ளே சிந்தித்த வண்ணம் பயணம் செய்தனர்

தங்கள் வழியில் முதல் கிராமத்தை யடைந்து அங்கிருந்த சோவியத்தில் நின்றனர். சப்பாயேவ் வந்துள்ளான் என்பதை அறிந்த மறு கணமே அவனைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையில் விவசாயிகள் அனைவரும் அந்தக் குடிசையில் குழுமினர். ஒரு நொடியில் கிராமம் முழுவதும் அவன் வந்துள்ள செய்தி பரவிவிட்டது. தெருவெல்லாம் ஒரே ஜனநெருக்கம். அங்கிருந்து கிளம்புவதற்குள் சப்பாயேவை ஒரு முறை தரிசிப்பதற்காக, பெண்டிர், குழந்தைகள், தாடி நரைத்த கிழவர்கள், தலை நரைத்த கிழவிகள் ஒட்டி உலர்ந்த பாட்டிகள் அத்தனை பேரும் திரண்டனர். அனைவரும் கூடி, மிக நெருங்கிய நண்பர்கள்போலச் சப்பாயேவை வாழ்த்தினர், நலன் விசாரித்தனர். பலர் அவனைப் பெயர் சொல்லி அழைத்தனர், இன்னும் பலர் 'வாஸிலி இவானோவிச்' என்ற மூதாதையர் பெயர் சூட்டி அழைத்தனர். சமாராவிற்கு மிக நெருங்கிய இந்தக் கிராமங்களில்கூட, அவனுடன் 1918ம் ஆண்டுப் போரில் உடனிருந்து பங்குகொண்ட பலர் இருந்தனர். எங்கு

நோக்கினும் மனதை ஈர்க்கும் புன்சிரிப்பும், நகைமுகமும் ஒளிவீசின. முற்றிலும் புதியவர்களின் முகங்கள்கூட நகைமுகத்தால் விரிந்தன. பலர் வைத்த கண் வாங்காது அவனைப் பார்த்தபடியே மெய்மறந்திருந்தனர். பல பெண் டிர் என்ன நடக்கிறது என்பதை உணர முடியாது தடு மாறித் திகைத்து நின்றனர். எல்லோரும் ஓடிச் சென்று யாரைப் பார்க்கிறார்கள், எதற்காக என்றெல்லாம் அவர்க ளுக்குப் புரியவில்லை. தங்கள் ஆடவரெல்லாம் சோவியத் திற்கு ஓடிச் செல்லுவானேன் என்று புரியாமல் விழித்த வர்கள் தாங்களும் பின் தொடர்ந்துவந்து சேர்ந்தனர்! சிறு சிறு விளையாட்டையும் மறந்து அமைதியாகக் காத்திருந் தனர் இளஞ் சிறுர்கள்! எல்லோரும் எதற்காகவோ காத் திருந்தார்கள் எனத் தெரிந்தது - ஆம்....சப்பாயேவ் என்ன பேசப் போகிறான் என்று கேட்டறியத்தான் காத்துக் கிடந் தார்கள்.

"தாங்கள் ஏதாவது எங்களுக்குக் கூற வேண்டும் தோழர் தளபதி அவர்களே! உங்கள் முன் நிற்கும் விவசாயி கள் தங்கள் நல்லுரையைக் கேட்க விரும்புகிறார்கள்" என்று சப்பாயேவை வேண்டினார் கிராம சோவியத்தின் தலைவர்.

"நான் என்ன சொல்லிவிடப் போகிறேன்" என்று புன்முறுவல் பூத்தான் சப்பாயேவ்.

"ஏன்....நம்மைச் சுற்றிலும் எல்லாம் எப்படி நடக் கின்றன என்று எங்களுக்குச் சொல்லுங்களேன். எதையா வது யோசித்துச் சொல்லுங்கள்."

சப்பாயேவிடம் எதையும் இரண்டாம் முறை கேட்க வேண்டுமென்ற நியதியே இல்லை. அங்கு கூடியிருந்த விவசாயிகள் அவன் பேச்சைக் கேட்க விரும்புகிறார்கள் என்பதும் அவனுக்குத் தெரியும். எனவே அவன் ஏன் ஒரு சில வார்த்தைகள் பேசக் கூடாது?

குதிரைகளுக்குச் சேணத்தைக் கழற்றி மாற்றிக் கொண்டிருந்த இடைவேளை நேரத்தில் தன் பேச்சைத் தொடங்கினான். எதைப்பற்றிப் பேசினான், எந்த அடிப் படையோடு பேசினான் என்பதை யெல்லாம் குறிப்பாக விளக்கிவிட முடியாது. என்றாலும் புரட்சியைப்பற்றிய கேந்திரங்களைக் குறிப்பிட்டான், புரட்சியைக் குலைக்க எண்ணும் தீய சக்திகளையும் பஞ்சப் பேயையும் விவரித் தான். சப்பாயேவ் பேசுகிறானே என்ற ஆர்வத்தில் இந்தச் சாதாரணப் பேச்சைக்கூட அனைவரும் ரசித்தனர். இமை கொட்டாதிருந்து அவனது சொற்பொழிவைக் கேட்டனர். அவன் பேசி முடித்ததும் தங்களது ஒருமுகமான ஆதரவை யும் தெரிவித்துக்கொண்டனர்.

"அவன் பேச்சு...அபாரம்தான்!"

"ஆமா...பின்னே சப்பாயேவிடமிருந்து வேறெப்படி எதிர்பார்க்க முடியும்?"

"ஆசாமி...சரியான ஆளுதான்!"

"நண்பரே! அருமையான பல விஷயங்களை அழகாகச் சொன்னீர்கள். நன்றி, நன்றி!" எனப் பல பேச்சுக்கள் எங்கும் நிறைந்தன.

இதுபோன்று எத்தனை கிராமங்களைக் கடந்து சென்றா லும் சரி, எல்லா இடங்களிலும் ஒரே வகையான மகிழ்ச்சி யோடும் ஆரவாரத்தோடுமே சப்பாயேவ் வரவேற்கப்பட் டான். பல இடங்களில் சொற்பொழிவுக் கூட்டம் மிகத் தடபுடலாகக்கூட ஏற்பாடு செய்யப்பட்டுவிடும். எல்லா இடங்களிலும் முறையாகப் பேசி முடிப்பான். அந்தப் பேச்சு ஒன்றினாலேயே எதிர்பார்த்த வெற்றியும் ஒத் துழைப்பும் ஏராளமாகக் கிட்டிவிடும். அந்தப் பேச்சின் தரம்கூட அவ்வளவு முக்கியமாகக் கருதப்படாது. சப்பா யேவ் பேசினான் என்பதுதான் சிறப்பாகக் கருதப்படும்! இங்ஙனம் அவனுடைய பெயர் மந்திரசக்தியாக மாறிவிட் டது. அவனுடைய சாதாரணச் சொற்பொழிவுகளுக்குப் பின்னால் ஏராளமான ரகசியங்களும் முக்கியச் செய்திகளும் பின்னிக்கிடப்பதாக எல்லோரையும் நம்பச் செய்தது.

மனிதகுலத்திலே ஒரு வியக்கத்தக்க நடைப்பாங்கு உண்டு; "சாதாரணமான" ஒரு மனிதன் கூறும் அறிவு செறிந்த வார்த்தைகளைக் காட்டிலும், புகழ்படைத்த இணையற்ற வீரன் ஒருவன் கூறும் சாதாரண வார்த்தைகளையே விருப்போடு கேட்டு மனிதகுலம் மதிக்கும் இயல்பை உடையது.

பயண வழியில் பியோடாரும் சப்பாயேவும் தங்களைப் பற்றியே பேச்சைப் பறிமாறிக்கொண்டனர். தங்களது சொந்த ஊர் எது, இதற்கு முன்னால் என்ன செய்துகொண்டிருந்தனர், எத்தகைய சூழ்நிலையைச் சார்ந்து வளர்ந்தார்கள்; இது போன்ற எண்ணற்ற சொந்த விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டே வந்தனர். பியோடார், தான் பிறந்து வளர்ந்த பெரும் தொழில் நகரைப்பற்றியும், அங்கு 'வாழ்க்கை ஓர் இடையறாத போராட்டம்' எனத் தான் கண்டு உணர்ந்ததுபற்றியும், அதன் பின்னர் புரட்சி நாள் வரை நாடோடியாக வாழ்ந்தது பற்றியும் ஆதியோடந்தமாகச் சப்பாயேவிற்கு விளக்கினான். அவன் தன்னுடைய சுயசரிதையை முடித்தவுடன் சப்பாயேவும் தன் கதையை அவனுக்குச் சொன்னான். தான் நேரில் கேட்டறிந்த சப்பாயேவின் வரலாற்றை மறந்துவிடாமல் இருப்பதற்காக அடுத்த கிராமம் வந்ததும் தன் குறிப்பேட்டில் எழுதி வைத்துக்கொண்டான் பியோடார்.

## சப்பாயேவின் சரித்திரம்

"சப்பாயேவ் தன்னைப்பற்றியே என்னிடம் சொல்லிக்கொண்டான். அவன் சொன்ன அனைத்தையும் அப்படியே நம்புவதா வேண்டாமா என்பதே எனக்குப் புரியவில்லை. ஒருசில குறிப்பிட்ட அம்சங்களில் எனக்கு நிறையச் சந்தேகம் எழுந்துள்ளது. உதாரணமாக அவனுடைய பெற்றோரைப்பற்றிய செய்தி மிகவும் பூசப்பட்டுள்ளது. இந்த



விஷயத்தில் தன்னுடைய சொந்தக் கற்பனைகளையும் சப்பாயேவ் சேர்த்துவிட்டான் போலத் தெரிகிறது. என்றாலும் அவன் வாயிலாகக் கேட்டவண்ணமே அனைத்தையும் தொகுத்துத் தருகிறேன். இதில் ஏதும் தவறு இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. சரியான செய்திகளை அறிந்து உண்மையைத் தேடிக் கொணர விரும்புவோர்க்கும் வாய்ப்புண்டு. சப்பாயேவின் நெருங்கிய நண்பர்களும் உறவினர்களும் பல இடங்களில் உள்ளனர். இந்த ஸ்டெப்பித் தளபதியைப்பற்றிய வாழ்க்கையையும் போராட்டங்களையும் தாங்கள் கண்டறிந்த வண்ணம் விவரிக்க அவர்களால்தான் முடியும்.

"ஒரு நாள் நாங்கள் இருவரும் சறுக்கு வண்டியில் பிரயாணம் செய்துகொண்டிருந்தபொழுது, தன் கண்களைச் சிமிட்டியவாறே "நான் யார் என்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான் சப்பாயேவ். மேலும் அவனே தொடர்ந்தான்: "என்னுடைய தாய், காஸான் மாகாணக் கவர்னரின் மகள், என் தந்தை ஒரு நாடோடி நடிகன்" என்றான். இதைக் கேட்டவுடன் சப்பாயேவ் வேண்டுமென்றே கேலிக்குச் சொல்லுவதாகவே நான் கருதினேன். என்னிடமிருந்து எத்தகைய வியப்புணர்ச்சியையும் மாறுபாட்டையும் தெரிந்துகொள்ள முனையாமல் சப்பாயேவே பேசத் தொடங்கினான்: "நான் சொல்லுவதை நம்புவது கஷ்டம்தான்; என்றாலும் நான் சொல்லுவதுதான் உண்மை! அந்த நாடோடி நடிகன் என் தாயைக் கண்டான், காதலித்தான். என் தாய் அவனோடு வாழப் பிறந்தாள். சிறிது நாள் சேர்ந்து வாழ்ந்தனர். அவள் தாயாகப்போகும் தருணத்தில் அவளைக் கைவிட்டுவிட்டார் என் தந்தை. தாங்கவியலாத துன்பச் சுமையை எல்லாம் ஏற்றுப் பொறுத்தாள். அவளால் வேறென்ன செய்ய முடியும்? தனியாகப் பாடுபட்டுழைத்து வாழ முடியாமல் தன் தாயகம் திரும்பினாள். அச்சமயம் அவளது தாயாரும் (என் பாட்டி) விதவையாகி

விட்டாள்; என்னுடைய கவர்னர் தாத்தா காலமாகிவிட்டார். தாயகம் போந்த சின்னாளில் என்னைப் பெற்றுவிட்டுக் கண்ணை மூடிவிட்டாள். யாருக்கும் வேண்டாத நாய்க்குட்டிபோல நான் கைவிடப்பட்டேன். என்னை எப்படி வைத்து வளர்ப்பது என்றே அவர்கட்குப் புரியவில்லை. எனவே பலரும் கூடி யோசித்து ஒரு முடிவிற்கு வந்தார்கள். தோட்டக்காரனைக் கூப்பிட்டார்கள். அவனுடைய சகோதரன் கிராமத்தில் இருந்தான். என்னை அவனிடம் சேர்க்குமாறு ஒப்புவித்தனர்; ஏதோ விளையாட்டுப் பொருள்போலத் தானமாக வழங்கிவிட்டனர். எல்லாக் கிராமக் குழந்தைகளையும்போல நானும் வாழ்ந்தேன், வளர்ந்தேன். நான் வளர்ந்த குடும்பத்தில் ஏற்கெனவே ஏராளமாகக் குழந்தைகள் இருந்தனர். வீடு முழுவதும் ஒரே அமளியும் ஆரவாரமும்தான். நான் சிறுவனாயிருந்தபொழுது நடந்ததெதுவும் என் நினைவில் இல்லை. அப்படி ஞாபகத்தில் வைப்பதற்குரிய சம்பவமெதுவும் நடந்துவிடவில்லை. கிராமப்புறத்தில் வளரும் எல்லாருக்கும் இப்படித்தானே!

"எனக்கு ஒன்பது வயதானவுடனே வேலைக்கு அனுப்பிவிட்டார்கள். அன்றுமுதல் பிறர்க்காகவே இடைவிடாது நான் உழைத்து வருகிறேன். முதலில் என்னைப் பன்றி மேய்க்க அனுப்பினார்கள். அதைப் பழகினேன். எடுத்தவுடன் ஒரு மந்தையை மேய்க்க எந்தச் சிறுவனையும் அனுப்பிவிட மாட்டார்கள். அதற்கும் பழகத்தான் வேண்டும். பன்றி மேய்த்துப் பழகிய பின் பசுக்கூட்டத்தையும் மேய்க்கத் துவங்கினேன. பின்னர் சில தச்சர்கள் என்னை அழைத்துச் சென்று தச்சுத் தொழில் சொல்லித் தந்தார்கள். அதையும் ஓரளவு கற்றுப் பல இடங்களுக்கும் சென்றுவந்தேன். அதற்குப் பின்னர் தச்சுத்தொழிலை விட்டு ஒரு கடையில் அமர்ந்து வேலை பார்த்தேன். பொருள்களை விற்கும் வகையை அறிந்தேன்; பலரை ஏமாற்ற முயன்



றேன். அதனால் பெரும் பயனேதும் பெற முடியவில்லை. அதிலும் தானிய வியாபாரத்தில் அளவுக்குமீறி ஏமாற்றினேன். வியாபாரிகள் அனைவரும் பிறரை ஏமாற்றித்தான் பிழைக்கிறார்கள். எந்த ஒரு வியாபாரிக்கும் ஏமாற்றத் தெரியவில்லையென்றால் அவன் வெகு விரைவில் பட்டினிச் சாவிற்குப் பலியாகிவிடுவான். நான் எதற்காகப் பிறரை ஏமாற்றிச் சம்பாதித்துக் கொடுக்க வேண்டுமென்ற சிந்தனை நாளடைவில் எழுந்தது; என் மனச்சாட்சி இந்த இழி தொழிலை ஏற்கவில்லை. மனம் ஒப்பவில்லை. எனவே கடையைவிட்டுக் கிளம்பினேன். நான் இப்பொழுதும் வியாபாரிகளை வெறுப்பதன் காரணமும் அதுவே. அந்தப் பணப்பேய்களின் கோர ரூபத்தை நன்கு என்னால் காண முடிகிறது. இந்தத் துறையில் என்னைவிட்டால், லெனினை விடப் பெரிய சோஷலிஸ்டாக மாறிவிடுவேன். ஏனென்றால் எல்லா வியாபாரிகளின் வேலைத்திறமும் யோக்கியதையும் எனக்கு நன்கு தெரியும். எனவே அவர்களுடைய உடைமைகள் முழுவதையும் பறித்துக்கொண்டுவிட வேண்டும் என்றுதான் நான் மனம் துணிந்து சொல்வேன்!

"எனவே அப்பொழுது நான் வியாபாரத்தைக் காறி உமிழ்ந்து வெளியேறினேன். அனாதையான நான் மேலே என்ன செய்வதென்ற பிரச்னை எழுந்தது. அப்பொழுது என் வயது பதினேழு. பலமுறை சிந்தித்தேன். கடைசியில் வோல்கா தீரமெல்லாம் சுற்றிவர முடிவு கட்டினேன். வோல்கா நதிதீரத்தில் பரவிக்கிடந்த பல நகரங்களையும், மக்களையும் வாழ்க்கை முறையையும் நேரில் கண்டுணர விரும்பினேன். அந்தப் பயணத்திற்கென ஒரு வாத்தியக் குழல் வாங்கினேன். அப்பொழுது என்னோடு ஒரு நங்கையும் இருந்தாள். அவரது பெயர் நாஸ்டியா 'நாஸ்டியா, நாமிருவரும் வோல்கா தீரமெங்கும் பவனி வருவோம். நான் இந்த வாத்தியக் குழலில் இன்னிசை பொழிவேன், நீ இசைக்கேற்ப ஆட வேண்டும். இருவருமாக எல்லா ஊர்

களையும் சுற்றி வந்துவிடுவோம்' என்று அவளிடம் கேட்டேன். அவளும் இசைந்தாள். இருவரும் புறப்பட்டோம். கடுங்குளிர் வீசிய சமயத்திலும் பிறவேளையிலும் பல நகரங்களில் அமைதியாக வாழ்ந்தோம். பசித் துன்பம் இருந்த நேரமெல்லாம் பாடுபட்டுழைத்தோம். என்றாலும் உழைத்துப் பாடுபட வேலை எதுவும் இல்லை. குளிர்காலத்தில் எடுபிடி வேலைதவிர வேறெதுவும் இருந்தால்தானே! குளிர்காலம் நகர்ந்தது. ஏப்ரல் மாதப் புல்வெளிப்பரப்பில் சூரிய ஒளி படர்ந்தது; பருவ காலம் மாறியது. வோல்கா அன்னை, பனிக்கட்டிகளைத் தாங்கிச் சென்று காஸ்பியன் கடலில் கொட்டிக் குவிக்கத் தொடங்கினாள். பசியையும் மறந்து நதிக்கரையில் சுற்றி வந்தோம். எனது வாத்தியம் இன்னிசை எழுப்பும், வானத்தில் பரந்த வானம்பாடிகள் இசை எழுப்பின; இசைக் கேற்றபடி ஆடிவர நாஸ்டியாவும் இருந்தாள். எவ்வளவு இனிமையாகப் பொழுதுபோனது தெரியுமா? இதை யெல்லாம் என்னால் மறக்கவே முடியாது; மறக்கவே முடியாது."

திடீரென்று தன் தலையைத் தாழ்த்திக்கொண்டு துயரந் தோய்ந்த குரலில் பேசத் தொடங்கினான் சப்பாயேவ்.

"ஏப்ரல் மாதத்தில் சூரிய வெப்பம் மிகுந்திருக்கும். வெப்ப மிகுதியால் பூமியிலிருந்து ஆவிகூட எழும்பும். இந்தப் பருவகால மாறுபாட்டால் நலிந்த எனது இதயங் கவர்ந்த எழிலரசி நாஸ்டியாவைக் காப்பாற்ற முடியவில்லை. பொன்தளிர் போலக் கருகிவிட்டாள் அவள்! என்னுடைய வெறும் வாத்தியக் குழல்தான் மிஞ்சியது. அதன் இசை உயிருணர்ச்சி இழந்தது. அவளை வோல்கா நதிப் படுகையில் புதைத்தேன். அந்த வாத்தியக் குழலையும் ஒரு நாடோடிக்கு விற்றுவிட்டேன். நான் மீண்டும் தனியன் ஆனேன்.

"என்னைப் போன்றவர்களை வாழ்க்கைப் பாதை எப்படியோ பொறுக்கி எடுத்துவிடுகிறது. என்னையும் தேர்ந்தெடுத்தது. ஜார் மன்னனுக்குப் பணிந்து ஏவல் புரிய



நானும் தேர்ந்தெடுக்கப்பட்டேன். என்னுடைய முறை வந்தவுடன் நான் ராணுவத்தில் சேர்க்கப்பட்டேன். அந்தச் சமயத்தில் போரும் மூண்டுவிட்டது. அன்று முதல் இன்று வரை ஆயுதபாணியாகவே நான் வாழ்கிறேன். என் வாழ்க்கை அந்த மயமாகவே ஆகிவிட்டது.

"அதன்பின் நீ கலியாணம் செய்துகொள்ளவில்லையா? பேச்சுப்போக்கில் நீ குழந்தைகளைப்பற்றிச் சொன்னது லேசாக நினைவில் இருக்கிறதே!" என்று இடைமறித்தேன் நான்.

"ஓ! ஆம்! ஆம். அது போருக்கும் முன்பு நடந்தது. நான் திருமணம் செய்துகொண்டேன் என்பது உண்மைதான். என்றாலும் அந்த வாழ்க்கை நீடிக்கவில்லை. ஜெர்மானியப் போர் மூண்டதும் என்னை அழைத்துக்கொண்டார்கள். ஒரு முறை விடுமுறை பெற்று வீட்டிற்கு வந்திருந்தேன். அங்கு பலர் என் மனைவியைப்பற்றி அவதூறு பேசுவது காதில் விழுந்தது. எதை நம்புவதென்று எனக்குத் தெரியவில்லை ஒன்றும் ஓடவில்லை. நேரே வீட்டிற்கு வந்தேன். அவளிடம் "என்னவெல்லாம் நடந்ததென ஒளிக்காமல் சொல்லிவிடு" என்று கேட்டேன். 'நான் எதுவும் செய்யவில்லையே வாஸிலி...இதெல்லாம் வீண் ஊர்வம்பு, புரட்டு' என்றாள் அவள். இதுபோல ஏராளமான வம்புச் செய்திகள் என் காதில் விழுந்தன. இவற்றிலிருந்து அவள் மிகவும் மானக்கேடான செயல்களில் ஈடுபட்டிருந்தாள் என்பதை நான் தெரிந்துகொண்டேன். அவள் அனைத்தையும் மறுக்கவே என் ஆத்திரம் எல்லைமீறிவிட்டது. "அடி பச்சைப் பாம்பே, கருநாகமே! வஞ்சகப் பேயே! உன்னை உள்ளமார நேசித்தேன். அது ஒரு காலம். இப்பொழுது இந்த இடத்தைவிட்டு வெளியேறடி நாயே! நான் உயிரோடு இருக்கும்வரை உன் முகத்தில் விழிக்கவே விரும்பவில்லை. குழந்தைகளை நானே வளர்த்துக்கொள்கிறேன், ஓடிப் பிழைத்துக்கொள்" என்று விடாப்பிடியாக அவளை

விரட்டிவிட்டேன். இது என் நெஞ்சத்தை அறுத்தது. இரண்டு ஆண்டுகள் ஓடின, அவளை நான் பார்க்கவில்லை. வேறு எந்தப் பெண்ணையும் நான் அணுகக்கூடவில்லை. என்றாலும் நான் அவளுக்காகவே காத்திருந்தேன். எப்படியும் திரும்பி வருவாள் என்ற நம்பிக்கையில் எதிர் நோக்கியிருந்தேன். என்னைப்போல் எந்த ஆடவனும் இருந்தால் அவனுக்கும் இந்த நிலைதான் ஏற்பட்டிருக்கும். யாருக்குத்தான் ஏற்படாது? அன்பாக ஆண்டாண்டுகளாக ஒருத்தியை நேசித்து வீடு திரும்பும்பொழுது வேதனை தரும் விபரீதத்தில் அவள் இறங்கியிருப்பதைக் கண்டால் யாருக்குத்தான் ஏற்படாது!

"நான் மீண்டும் போர்முனைக்குத் திரும்பினேன். கடுமையான போராட்டத் திருப்பங்களில் என்னை மறந்து நுழைந்தேன். வாழ்வதால் பயனேதும் இல்லாதபோது இறப்பதினால் எந்த நஷ்டமும் வந்துவிடப் போவதில்லை என்று கருதினேன். இந்தத் துணிச்சல் போராட்டங்களால் என்னை யறியாமலே நான் வீரனானேன். புனித ஜார்ஜின் நினைவுச் சிலுவைப் பதக்கங்கள் நான்கை எனக்கு வழங்கினர். பிறகு சார்ஜண்ட் ஆக்கினர், அதற்குப் பிறகு சார்ஜண்ட் மேஜர் ஆக்கினர். அதற்குப் பின்னர் என்னை எதுவும் இன்னும் கொல்லவில்லை. பல போர்முனைகளில் படுகாய முற்றேன். என்றாலுங்கூட நான் உயிர் வாழ்ந்து வருகிறேன்; இருந்தாலும் ஒரு குறை இருந்து வந்தது—எப்படிப் போராடுவ தென்பதை நன்கு அறிவேன்; ஆனால் எழுதப் படிக்கத்தான் தெரியாது. இது என்னைப் பெரிதும் வாதித்தது. அவமானமும் பொறாமையும் பொங்கி எழுந்தன. என்னைச் சுற்றியிருந்த இளைஞர்க ளெல்லாம் எழுதிக்கொண்டும் படித்துக்கொண்டு மிருப்பார்கள். எதுவும் தெரியாமல் நான் கண்பெற்ற குருடனாயிருப்பேன். ஒரு தரம் ஒருவன் என்னை 'முட்டாள் முண்டம்!' என்று கூப்பிட்டான். அவனைத் திட்டி நொறுக்கிவிட்டேன்.



எனக்கு எழுதப் படிக்கத் தெரியாமையால் எனக்களித்த விருதுகளை மறுத்துவிட்டனர். எனவே மீண்டும் ஒரு சாதாரணச் சிப்பாயானேன். என்றாலுங்கூட, நான் அது முதல் எழுதப்படிக்கக் கற்றுக்கொள்ளத் தொடங்கினேன். இந்தச் சமயத்தில் போரும் நீண்டுகொண்டே வந்தது. பின்னர், புரட்சியும் உருவாகிவிட்டது; சராடோவாவில் இருந்த ராணுவப் பகுதியில் பணிபுரியுமாறு என்னைத் தள்ளிவிட்டார்கள்.

"எழுத்தறிவில்லாத பேதை என்று என்னை நானே சபித்துக்கொண்டேன். என்னைச் சுற்றிலும் இருந்தவர்கள், மக்கள் ஏன் போராடுகின்றனர் என்பதைப்பற்றி விளக்கமாகப் பேசிக்கொண் டிருந்தனர். நான் மட்டும் எதுவும் புரியாமல் பேசாதிருந்தேன். எனவே நானும் கட்சியில் சேர்ந்துவிடுவ தெனத் துணிந்தேன். அனுபவஸ்தன் ஒருவனை நான் கேட்டேன்; என்னையும் போர்த்துறைப் பயிற்சி மாணவர்களுடன் இணைத்துப் பயிற்சியளிக்க அவன் முயன்றான். பிறகு விரைவில் நான் சோஷலிசப்புரட்சியாளர்களுடன் சேர்ந்துகொண்டேன். அந்தப் புரட்சிப் படை இளைஞர்கள் உண்மையில் உருப்படியாக ஏதேனும் செய்யப் பாடுபட்டார்கள். அவர்களுடன் நான் பல நாட்கள் பழகினேன், அவர்களுடைய கூட்டங்களில் கலந்துகொண்டேன். அதன் பின்னர் அராஜகவாதிகள் யார் என அறிந்தேன். இந்த இளைஞர்கள் அரும்பாடு படுவதை உணர்ந்தேன். விரைவில் எல்லாவற்றையும் மக்கள் எளிதில் செம்மையாகப் பெறுவார்கள் என்றும், தன்னிச்சையாகத் தலைவிரித்தாடும் போக்கு மாறு மென்றும், கருத இடமேற்பட்டது. அந்தச் சமயத்தில் செர்பியர்களைக் கொண்ட ஒரு ஊழியர் கூட்டத்தை அமைப்பதில் கெரன்ஸ்கி ஈடுபட்டிருந்தான். அதற்குத் தளபதியாக என்னை நியமித்தனர். அந்த ஊழியர் கூட்டம் முழுவதையும் பாழ்படுத்தியவனும் நான்தான் - அவர்கள் அனைவரையும் கெரன்ஸ்கிக்கு

எதிராகவே கிளப்பிவிட்டேன். எனவே அவர்கள் என்னைப் பதவியிலிருந்து கீழிறக்கிவிட்டார்கள். பிறகு என்னை, புகாசோவிற்கு அனுப்பி இன்னொரு படைப் பகுதியைக் கண்காணிக்கச் செய்தனர். அந்தக் காலம் எப்படி இருந்த தென்பதை யெல்லாம் நீ கேள்விப்பட்டிருக்கக் கூடும். புகாசோவில் மக்களின் கமிசார்களைக் கொண்ட குழு ஒன்றை நாங்கள் அமைத்தோம். அந்தக் குழுவின் தலைவனை ஒரே வரியில் மிக உயர்ந்தவன் என்று கூறிவிடலாம். அந்த இளைஞன் என்னை மிகவும் நேசித்தான். எனக்கு ரொம்பவும் இத்யம் கவர்ந்தவனாகிவிட்டான். அவனுடைய பேச்சைக் கவனமாகக் கேட்டேன்; இன்னும் முனைந்து கேட்க வேண்டு மென்ற ஆர்வமும் கொண்டேன். இந்த இளைஞன் எனக்கும் போதிக்கத் துவங்கினான். பல துறைக் கல்விப் பயிற்சியை வழங்கினான். அதுமுதல் எல்லாப் பிரச்னைகளையும் புதிய கோணத்தில் அணுகினேன். அராஜக வெறியை உதறித்தள்ளிப் போல்ஷெவிக் இயக்கத்தில் சேர்ந்தேன். பிறகு பல புத்தகங்களையும் ஆர்வத்துடன் படிக்கத் துவங்கினேன். அந்தப் போரில், படிக்கக் கற்றுக் கொண்டதுமுதல், பாதாளக் குழிகளில் பதுக்கிக் கிடந்த காலத்திலும்கூட இடையீடின்றிப் படித்துக்கொண்டே யிருந்தேன். அப்பொழுது பலர் கூடி நின்று சிரிப்பார்கள். "நீ ரொம்பப் படிக்கிறாயப்பா...சீக்கிரத்தில் பெரிய வேத சாஸ்திர விற்பன்னனாகக்கூட மாறிவிடுவாய்" என்று கேலி செய்வார்கள். எனக்கு ஒன்றும் சிரிப்பு வருவதில்லை! அடாமன் சுர்கின், ராஷின், எமெல்யான் புகாசோவ், எர் மெக்டிமோபோவெய்ச் முதலியோரைப்பற்றிப் படித்தேன். பிறகு ஹானிபால் மாவீரனைப்பற்றிய புத்தகம் ஒன்று கிடைத்தது. இத்தாலியப் பெருவீரன் கரிபால்டியைப்பற்றியும் நெப்போலியனைப்பற்றியும் படித்தேன். இவற்றை யெல்லாம்விட ஒருவன் கட்டாயம் போரிடத் தெரிந்திருக்க வேண்டும் என்பதையும், தேவையானால் தன்னையே பலி



யிடத் தயாராக இருக்க வேண்டு மென்பதை நான் மிகவும் விரும்பினேன். இந்த விருப்பத்தை நான் படித்த மாவீரர்களின் வரலாறுகள் வழங்கின. பிறகு வேறு பல நூல்களையும் கற்றேன். துர்கனேவ் நல்ல கதைகள் எழுதியிருப்பதாகச் சொன்னார்கள், ஆனால் என்னால் அவற்றை வாங்கக்கூட வில்லை. கோகோலின் கதைகளை யெல்லாம் படித்தேன். 'இறந்த ஆத்துமாக்கள்' என்ற நூலில் வரும் சிச்சிக்கோவ் என்ற பாத்திரத்தை இன்னும் நினைவில் வைத்திருக்கிறேன். நான் மட்டும் இன்னும் நிறையப் படித்திருந்தால் என் மூளையே அலாதியாக வேலை செய்யும். ஆனால் என்ன செய்வது? இப்பவும் நான் ஒரு சாதாரண அறிவிலி தானே. இதற்கு முன்னாலும் அப்படித்தான் இருந்தேன். இப்பொழுதும் அப்படியே இருக்கிறேன்!

"புகாசோவில் எந்நேரமும் பாராக் கொடுக்க வேண்டியிருந்தது. இல்லாவிட்டால் கொஸாக்கியர்கள் படையெடுத்துவிடுவார்கள். எனவே படிப்பதற்குப் போதிய நேரம் கிடைக்கவில்லை. அதுவும் தவிரத் தானியங்களை எங்கேனும் அனுப்ப வேண்டியிருந்தாலும், விலையேற்றத்தைத் தடுக்கவேண்டி யிருந்தாலும், என்னைத்தான் அனுப்புவார்கள்.

"சாப்பாயேவ் இங்கு வந்திருக்கிறாராமே?" என்று அவர்கள் கேட்பார்கள்.

"ஆம் இதோ இருக்கிறேன்" என்று நான் சொல்வேன்.

"எப்படி இருக்கிறது?"

"இதை மட்டுமே அவர்கள் கேட்டார்களே யன்றி வேறு எதையும் அவர்கள் எனக்குக் கற்றுத் தரவில்லை. எதையும் நானே தெரிந்து செய்தேன்.

"அக்டோபர் புரட்சிவரை தன் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களைச் சொன்னான் சப்பாயேவ். அவன் சொன்ன படித்தான் அனைத்தும் நடந்தனவா இல்லையா என்று எனக்குத் தெரியாது. தற்பெருமையாகச் சொல்லிக்கொள்வது

அவனுக்கு மிகவும் பிடிக்கும். அது அவனிடமிருந்த ஒரு குறையுமாகும். தான் சொல்லுவது பிறரைக் கவர வேண்டுமென்பதற்காகவே கொஞ்சம் கூட்டிச் சொல்லுவான். அப்படிக் கூட்டிச் சொல்லுவது அவ்வளவு சிறப்பையும் தரவில்லை. உதாரணமாக, சப்பாயேவ் தன்னுடைய தாய் ஒரு கவர்னருடைய மகள் என்று சொன்னது அவனுடைய சொந்தச் சரக்கு; பின்பு எல்லோரும் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

"அவனுடைய வாழ்க்கை வரலாற்றில் சிறப்பாகக் குறிப்பிடுதற்கு ஏதும் இல்லை. என்றாலும் அந்த வாழ்க்கையை உற்று நோக்கும்பொழுது, அவனது வாழ்க்கையில் நிகழ்ந்த எல்லாச் சூழ்நிலைகளும், தேவைகளும், சம்பவங்களும் அவனை எவ்விதம் அதிருப்திக்கும் வெறுப்பிற்கும் உந்தித் தள்ளியிருக்கின்றன என்பதைத் தெரிந்துகொள்ள முடியும்."

இது தவிர இன்னும் பல விஷயங்களைப் பியோடார் குறித்திருந்தான். நமக்கு இத்துடன் போதும். சப்பாயேவைப்பற்றிய பியோடாரின் கருத்துக்கள் நமக்குத் தேவையில்லை. அக்டோபர் புரட்சிக்குப் பின்னர் சப்பாயேவின் வாழ்க்கைச் சம்பவங்களில் பல முரண்பாடுகள் தோன்றுகின்றன. ஸ்டெப்பி வெளியெங்கும் புயல் போலப் பாய்ந்து உழைத்து வந்தான். இன்று ஒரு கிராமத்தில் இருப்பான்; மறு நாள் நூறு கற்களைக் கடந்து எங்கோ ஒரு கிராமத்தில் தீவிரமாக இறங்கியிருப்பான்.

சப்பாயேவின் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் கொஸாக்கியர்கள் நடுங்கினார்கள்; அவனுக்கு எதிராகப் போரிட அஞ்சினார்கள். அவனுடைய கொடுமைப் படையெடுப்புகளையும், தொடர்ந்த வெற்றிகளையும் கேள்விப்பட்டு விதிர்த்துப் போயிருந்தார்கள்.

* * *



சமாராவைச் சென்றடைவதற்குச் சப்பாயேவிற்கும் பியோடாருக்கும் நான்கு நாட்கள் பிடித்தன. இடைவெளியில் எத்தனையோ கிராமங்களையும் சிற்றூர்களையும் தாண்டிச் சென்றார்கள். சப்பாயேவின் பெயர் சொன்ன இடங்களில் எல்லாம் வியத்தகு மாறுதலும் வரவேற்பும் எதிர்கொண்டழைத்தன. தன் ஆற்றலில் சப்பாயேவிற்கே மாறாத தன்னம்பிக்கை இருந்தது. ஒரு சமயம், நடுச் சாமத்தில் ஒரு கிராமத்திற்குள் நுழைந்தனர் அவ்விருவரும். தெருக்களில் எவ்வித நடமாட்டமும் இல்லை; யாரும் எதிர்ப்படவும் இல்லை. சோவியத் எங்கே இருக்கிறது என்று கேட்டு அறியக்கூட ஓர் ஆள் அகப்படவில்லை. ஒரு வீட்டிற்குள் ஏறிக் குதித்து ஆட்களை எழுப்பி விசாரிக்கலாமா என்றுகூட யோசித்தனர். பிறகு கொட்டும் பனியில் சுவர் ஏறத் தயங்கியபடி ஆலயத்தை நோக்கிச் சென்றனர். கடைசியில் ஒருவன் எதிர்ப்பட்டான்.

"தோழரே! சோவியத் எங்கே இருக்கிறது?"

"அதோ அங்கே அந்த வாய்க்காலுக்கு அந்தப் பக்கம்" என்றபடி எதிர்த் திசையில் கையைக் காட்டினான் அவன். குறித்த பக்கத்தில் சென்று ஒரு பெரும் கட்டடத்தை அணுகினர். வெளிப்பார்வைக்குக் கூடாரம்போலிருந்தது; என்றாலும் அது பெரிய கட்டடம். கைவிடப்பட்டதுபோல், புழக்கத்தில் இல்லாததுபோல் தோன்றியது. கதவைத் தட்டினார்கள், தட்டினார்கள், கை நோவத் தட்டினார்கள். கடைசியாக ஒரு செவிட்டுக் கிழம் வெளியில் வந்தான்.

"என்னங்கப்பா...இளஞ் சிங்கங்களே...உங்களுக்கு என்ன வேணும்?"

"பாராக் காத்துக்கொண்டிருக்க வேண்டிய ஆள் எங்கே?" என்று ஆத்திரத்துடன் கேட்டான் சப்பாயேவ்.

"அப்படி யாரும் இங்கே இல்லை. எல்லோரும் வீட்டிற்குச் சென்றுவிட்டார்கள். பகலில்தான் பாரா இருக்கும். இப்ப யாரும் கிடையாது!"

"சோவியத்துத் தலைவனை உடனே இங்கே கூப்பிடு!"

இந்தமாதிரிச் சமயங்களில் கெடுபிடியாகச் சப்பாயேவ் பேசும்பொழுது பியோடார் குறுக்கிட மாட்டான், தலையிட்டு எதையும் மறுக்கவும் மாட்டான். அக்காலச் சூழ்நிலையில் சாதாரணமாகக் கேட்டால் எந்தப்பதிலும் வராது. கெடுபிடியாக, உருட்டலுடனும் அதிகார தோரணையிலும் கேட்டால்தான் எதிர்பார்த்த பதில் கிட்டும்.

சோவியத்துத் தலைவனை அழைத்துவர ஆள் அனுப்பினார்கள். கூப்பிட வந்தவனிடமிருந்து, அழைப்பவன் சப்பாயேவ்தான் என்பதைத் தெரிந்துகொண்டான் தலைவன். வேகமாக வந்து, தொப்பியைக் கழற்றித் தலைதாழ்த்தி வணங்கினான்.

"என்ன நண்பரே! சோவியத்துதான் நீர் தங்கும் இடமா? ஊருக்கு ஒதுக்குப் புறத்தில் நீயும் ஏனய்யா இருக்க வேண்டும்? ஊருக்கு நடுவில் தங்க ஓரிடம் கிடைக்கவில்லையா?" என்றான் சப்பாயேவ்.

"இந்த ஊர் ஜனங்கள் இதைவிட்டால் எனக்கு வேறிடம் தர மாட்டார்கள்" என்று வெட்கத்துடன் பதில் இறுத்தான் வந்தவன்.

"என்ன ஜனங்கள் ஐயா! ஆனால் அவர்கள் மேலும் குற்றமில்லை. இடம்தர மறுப்பது அவர்கள்கூட இல்லை, அந்தக் கொஸாக்கியர்களின் தூண்டுதலே காரணம்."

"ஆனால் நான் விரும்பியது..."

"விரும்பியதாவது. அப்படின்னா என்ன அர்த்தம்? இந்த இடத்தில் எல்லாம் உன் விருப்பத்திற்கு இடமே இல்லை. எதைச் செய்ய வேண்டுமோ அதைக் கட்டாயம் செய்ய வேண்டும். இந்த லட்சணத்தில் நிர்வாகமே நீதான் என்று பெருமை பேசிக்கொள்ளுகிறாய். நாளையே சோவியத்தை ஊருக்கு நடுவில் நகர்த்து, எங்காவது ஒரு நல்ல வீட்டில் இடம்பிடி. சப்பாயேவின் உத்தரவு என்று சொல். புரிகிறதா?" என்றான் கடுமையுடன்.



"புரிந்துகொண்டேன்!" என்று மென்று விழுங்கினான்.

"நான் சமாராவிலிருந்து திரும்பி வரும்பொழுது மீண்டும் உன்னை இந்தப் பொந்தில் கண்டால் என்ன செய்வேன் தெரியுமா?" என்று கண்களை உருட்டினான் சப்பாயேவ்.

இதை யெல்லாம் எதிர்பார்க்காத அந்தத் தலைவன் மெய் விதிர்க்கக் குதிரைகளுக்குப் பின்னால் நழுவினான். அந்த இருட்டு மண்டபத்தில் இரவுப் பொழுதைக் கழிக்கக்கூட அவர்கள் இறங்கவில்லை. அந்த நள்ளிரவில் வேறிடம் நோக்கிக் குதிரைகளைத் திருப்பினர்.

கடைசியாகச் சமாரா வந்தடைந்து ப்ரூன்ஷிடம் சென்றார்கள். நண்பர்கள் என்ற முறையில் சப்பாயேவையும் பியோடாரையும் அன்று மாலை தன்னுடைய கூடாரத்திற்கு அழைத்து, முக்கியமான போர்த்திட்டங்களை விவாதிக்க விரும்பினான் ப்ரூன்ஷ். அவன் அழைப்பிற்கிணங்கி இருவரும் சென்றனர். ப்ரூன்ஷ் அவர்களுக்குப் போர்முனை நிலவரத்தை விவரித்தான். எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும், அந்த இன்றியமையாத சமயத்திற்கு ஏற்ற தளபதிகளின் தராதரத்தையும் விளக்கினான்; ஏதோ காரணமாக சப்பாயேவ் சற்று வெளியே போனான். அப்பொழுது பியோடாரிடம் பேசினான்.

"இது ரொம்பவும் முக்கியமான விஷயம் தோழர் கிளிக்கோவ்! எனவே ஒரு படைப் பகுதிக்குத் தளபதியாகச் சப்பாயேவை நியமித்துவிடலாமென நான் எண்ணியிருக்கிறேன், நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? எனக்கு அவனைப்பற்றி அவ்வளவு அதிகமாகத் தெரியாது. அவனுக்குள்ள செல்வாக்கைப்பற்றி உங்களுக்கு ஓரளவு நன்கு தெரியும். இல்லையா?...அவன் ஆள் எப்படி? அவனோடு ஒருசிறிதாவது உடன் இருந்து உழைத்திருப்பீர்களே! அவன் ஆள் எப்படி? சொல்லுங்கள்."

சப்பாயேவைப்பற்றிய தன் கருத்தை யெல்லாம் ப்ரூன்ஷிற்குத் தெரிவித்தான் பியோடார். அவன்பால்

தனக்குள்ள அளவு கடந்த மதிப்பைச் சொன்னான்; அதே நேரத்தில் அரசியல் துறையில் அவனுக்குள்ள அனுபவக் குறையையும் அழுத்தமாக எடுத்துக்காட்டினான்.

"அதுதான் என் கருத்தும்கூட" என்று தொடர்ந்தான் ப்ரூன்ஷ். சாதாரண வீரர்களைவிட மிகமிக உயர்ந்தவன் சப்பாயேவ். அபாரமாகப் பணியாற்றுவான்; இன்னும் கொரில்லாப் போர்முறைகளில் நல்ல அனுபவமும் தேர்ச்சியும் கொண்டிருக்கிறான். ஆனால் ரொம்பவும் முன்கோபி, ஆத்திரக்காரன். முன்கோபியாக இருப்போரை யெல்லாம் வசியப்படுத்தித் திருத்திவிட முடியும். இல்லையா?"

தான் சப்பாயேவுடன் பழகும் பாங்கையும் நட்புக் கொண்டுள்ள திறத்தையும் விளக்கினான் பியோடார். சப்பாயேவின் நம்பிக்கைக்கும் நல்லெண்ணத்திற்கும் உரியவனைப் பழகுவதை உறுதியாகச்சொல்லிப் பெருமைகொண்டான். வருங்காலத்தில் அவனுடன் இன்னும் நெருங்கிப் பழக வாய்ப்பிருக்கிறது என்று சொல்லி மகிழ்ந்தான்.

இந்த நிலையில், வெளியில் சென்ற சப்பாயேவ் திரும்பி வந்தான். சற்று நேரம் ஏதேதோ பேசிய பின், அவனைப் படைத் தளபதியாக நியமித்திருப்பதாகவும். உடனே உரால்ஸ்க் பகுதிக்குச் சென்று உத்தரவுக்காகக் காத்திருக்க வேண்டுமென்றும் சொன்னான்......! இருவரும் ப்ரூன்ஷிடம் விடைபெற்றுப் பிரிந்தனர். அடுத்த இரண்டு மணி நேரத்திற்குள் சமாராவிலிருந்து புறப்பட்டனர். புறப்படுவதற்கு முன், உரால்ஸ்க் செல்லும் வழியில் உள்ள தன்னுடைய சொந்தக் கிராமமான பியாஷோவ்காவில் தங்குவதற்கு அனுமதி பெற்று வந்தான் சப்பாயேவ். ப்ரூன்ஷும் இசைந்தான். எனவே பியாஷோவ்கா நோக்கிப் புறப்பட்டனர்.

"பியாஷோவ்காவில் உங்களுக்கு வேண்டியவர்கள் இன்னும் இருக்கிறார்களா?" என்று கேட்டான் பியோடார்.



"ஆம்...எல்லோரும் அங்குதான் இருக்கிறார்கள். வயதடைந்த என் தாய், தந்தை, வளர்த்தவர்கள் எல்லோரும் தான். இரு பையன்களும், ஒரு பெண்ணும் ஒரு விதவையுடன் வாழ்கிறார்கள். அந்த விதவைக்கு ஏற்கெனவே இரு குழந்தைகள். எல்லோரும் ஒன்றாகத்தான் இருக்கிறார்கள்."

"அவள் உனக்குச் சினேகிதியா?"

"ஆம்...மிக நல்ல சினேகிதி. என்னுடைய நண்பனின் மனைவி. அவன் இறந்த பின் அவள் கைவிடப்பட்டாள். அவளை என்னிடம் கையளித்து இறந்துவிட்டான் அந்த நண்பன்" என்றபடி புன்சிரிப்பவிழ்த்தான் சப்பாயேவ்.

பியாஷோவ்காவில் தடபுடலாக ஆடம்பரத்துடன் வரவேற்கப்பட்டார்கள். புதிய, பிரதம விருந்தாளியின் சார்பாக ஒரு பெரும் கூட்டத்திற்குக் கிராம சோவியத்துத் தலைவர் ஏற்பாடு செய்தார். அங்கும் வழக்கமான 'தன் பேச்சுகளை' அவிழ்த்துவிட்டான் சப்பாயேவ். அவன் பெயர் சூட்டப்பட்ட நகர் மன்ற அரங்கத்தில் இன்னிசை நிகழ்ச்சிகளும் நாடகங்களும் நடத்தப்பெற்றன. நடிப்பு மிக விறுவிறுப்பாயும் உணர்ச்சிப் பெருக்காயும் அமைந்தது. சப்பாயேவின் பாராட்டுதலைப் பெறக் கஷ்டப்பட்டு நடித்தார்கள். இரவை அங்கே கழித்துவிட்டு மறுநாட் காலையில் உரால்ஸ்க் பயணத்தைத் தொடர்ந்தனர்.

தன் குழந்தைகளிடம் சப்பாயேவ் போதுமான அன்பையும் வாஞ்சையையும் காட்டவில்லை என்று பியோடாருக்குத் தோன்றியது. இதைப்பற்றி அவனைக் கேட்டும்விட்டான்.

"உண்மைதான் பியோடார்! நான் என்ன செய்வது? என் குடும்ப வாழ்க்கையில் ஏற்பட்ட 'அந்தச் சுழலில்' இருந்து எனக்கு எதுவும் பிடிப்பதில்லை, ஏற்பதில்லை, குழந்தைகள்கூடத்தான்! அவர்களை வேறு எவருடைய குழந்தைகளோ என்றுதான் மனம் எண்ணத் தூண்டுகிறதே யொழிய என்னுடையவர்களாக ஏற்க ஒப்பவில்லையே!"

"அப்படியானால் எப்படி அவர்களை வளர்த்து ஆளாக்குவாய்?"

"நானே எப்படி வளர்த்து ஆளாக்க முடியும்? எனக்குப் போதிய நேரமே கிடைப்பதில்லை. இங்கே எப்படி வாழ்கிறார்கள் என்றுகூட நான் கேட்டுக்கொள்ள வில்லை. என்னுடைய சம்பளத்திலிருந்து பணம் அனுப்பிவருகிறேன், அவ்வளவுதான்!"

"பணமே எல்லாவற்றையும் செய்துவிட முடியுமா?"

"அதுவும் எனக்குத் தெரியும். பணம்தான் எல்லாம் என்று கருதுபவனல்லன் நான். அப்படியும்கூட நவம்பர், டிசம்பர் மாதச் சம்பளமே நான் இன்னும் பெறவில்லை. மார்ச்சும் பாதி கழிந்துவிட்டது. இன்னும் சம்பளம் தரவில்லை".

"எல்லாம் மோசமாய்த்தான் போச்சு."

"இப்பொழுதெல்லாம் ஒவ்வொருவரும் கொஞ்சம் கொஞ்சம் இழந்துவிடுகிறார்கள் தெரியுமா, தோழர் கிளிக்கோவ்" என்று கடுமையாகச் சொன்னபடியே தொடர்ந்து கூறினான் சப்பாயேவ். "அத்தகைய இழப்பு ஏதும் இல்லையென்றால் புரட்சியே இருக்க முடியாதென்பதும் உனக்குத் தெரியும், சிலர் தங்கள் பொருள்களை இழக்கிறார்கள், பலர் தங்கள் குடும்பங்களை இழக்கிறார்கள்; இன்னும் சிலர் தங்கள் கல்வியைக் கெடுத்துக்கொள்ளுகிறார்கள், நம்மைப் போன்றவர்கள் உயிரைக்கூட இழக்கத் துணிகிறார்கள்!"

"உண்மைதான் சப்பாயேவ். நம்முடைய உயிரையும் பணயம் வைக்க நேரிடலாம். இந்தப் போராட்டத்திற்கு முடிவேயில்லாது நீண்டு செல்லுவது வேடிக்கையாகத்தான் இருக்கிறது. எல்லாப் பக்கங்களிலும் ஏராளமான எதிரிகள் மிகுந்துவிட்டனர். எல்லாப் பக்கமும் ஆபத்துக் கவிந்துவிட்டது. நீயும் நானுமே இணைந்து நீண்ட தூரம் பயணம் செய்ய முடியுமோ முடியாதோ? யாரால் எதை நிர்ணயித்துச் சொல்ல முடியும்? சென்றவுடன் புதிய



போராட்டங்களும், தாக்குதல்களும் துவங்குமென்பது உனக்குத் தெரியும்" என்றான் பியோடார்.

"அதைப்பற்றிய சிந்தனையே எனக்குக் கிடையாது. எப்பொழுது சாவு வருமென்று யாரால்தான் சொல்ல முடியும்? சில சந்தர்ப்பங்களில் எந்த வகையாலும் தப்ப முடியாத இடுக்கண்ணும் இக்கட்டும் நேர்ந்துவிடுகின்றன; என்றாலும் சாகாமல் தப்பிவிடுகிறோம். எனவே இனிமேல் என்ன நேருமோ என்ற எண்ணமே இல்லாமலிருப்பதுதான் நல்லது. 1918-க்கு முன்பு ஒரு நாள் - என்னையுமறியாமல், செக்கியர்கள் வசமாயிருந்த ஒரு கிராமத்திற்குள் வண்டியில் சென்று அவர்கள் கையில் அகப்பட்டுக்கொண்டேன். அந்தக் கிராமம் நம் வசம் உள்ளதென்றும், சிப்பாய்கள் நம்மவரே என்றும் தவறாகக் கருதி நான் வண்டிக்காரனை ஓட்டச் சொன்னேன். எல்லா வண்டிக்காரர்களையும்போல நாம் சொன்னபடியே அவனும் செய்தான்! கிராமத்திற்குள் புகுந்தோமோ இல்லையோ—கடவுளே! அங்கிருந்த அத்தனை பேரும் செக்கியர்கள். நான் வண்டிக்காரனிடம் சொன்னேன்: "சரி! வண்டிக்காரரே! அகப்பட்டுக்கொண்டோம். எப்படியும் தப்புவிப்பதற்கு முடிந்தவரையும் பிரயாசைப்படுங்கள்" என்று சொன்னபடியே சுழல் துப்பாக்கியைப் பற்றினேன். "வண்டியை ஓட்டியபடியே துப்பாக்கியையும் சுற்றிவிடு. நான் சுட்டுப் பொசுக்கிவிடுகிறேன். தகுந்த சமயத்தில் துப்பாக்கியைச் சுற்றிவிட்டால்தான் நாம் தப்ப முடியும்" என்றேன். நான் சொன்னபடியே துப்பாக்கியைச் சுழற்றிவிட்டான்; நான் சுடத் துவங்கினேன். அவன் அயராது வண்டியை ஓட்டினான். நான் தளராது சுட்டுப் பொசுக்கிக்கொண்டிருந்தேன். குதிரைப்படையைச் சேர்ந்த பதினைந்து வீரர்கள் எங்களைத் துரத்திவந்தனர். அவர்கள் வந்த திசையில் துப்பாக்கியைத் திருப்பினேன். எங்கும் ஒரே புழுதி மயம், எதையும் கண் திறந்து பார்க்க முடியாத பயங்கரப் புழுதி;

குதிரைகளின் குளம்படியைத்தான் கேட்க முடிந்தது. சுட்டபடியே பின்தொடர்ந்து வந்தார்கள்; நானும் அவர்கள் வந்த திசையில் சுட்டுக்கொண் டிருந்தேன். இரண்டு பட்டை ரவைகளைத் தீர்த்துவிட்டேன். வண்டிச் சக்கரம் ஏதேனும் அப்பொழுது தொலைந்திருந்தால் அப்படியே நாங்களும் தொலைந்திருப்போம். அதுவும் தவிர, அச்சமயத்தில் என்னுடைய தலையைக் கொணர்வாருக்குப் பொன் நாணயம் வழங்குவதாகச் செக்கியர்கள் விளம்பரப்படுத்தியிருந்தனர். என்னைச் சேர்ந்த இளைஞர்கள் இந்த விளம்பரத்தைப் படித்துவிட்டுச் செக்கியர்களைப் பார்த்துப் பரிதாபமாகச் சிரித்தார்கள். ஒரு சமயம் அவர்கள் கடிதம் ஒன்றும் எழுதி அனுப்பினார்கள். அதில் "எங்களுடைய ஸ்டெபான் ராஸின் படைக்கு வந்தால் சப்பாயேவின் தலையை இனாமாக வழங்குவோம்!" என்று எழுதியிருந்தார்கள். இதுபோல எத்தனையோ தீரச்செயல்களை யெல்லாம் நான் தாண்டியிருக்கிறேன்!" என்றான் சப்பாயேவ்.

பியோடார் பேசத்தொடங்கினான் :

"என்றாலும் நீ இன்னும் உயிரோடிருக்கிறாய் அல்லவா? நீ ஏன் இன்னும் உயிரோடிருக்க வேண்டும்—நீ உயிரோடிருப்பது விதிவசத்தாலோ அல்லது உன்னுடைய விவேகத்தாலோ என்பது யாருக்குத் தெரியும்? மயிரிழை தப்பினால் மரணம் என்ற நிலையில் பல தடவை அகப்பட்டிருக்கிறாய் என்றே நான் நம்புகிறேன்."

"நீ சொல்வது ரொம்பவும் உண்மை, பியோடார். எத்தனையோ தடவைகள் உயிருக்கே உலைவைக்கும் அலுவல்களில் அகப்பட்டிருந்தேன். அப்பொழு தெல்லாம் இந்தக் கேள்விதான் என் நெஞ்சை நிறைத்தது. சாவது ஏன் மிகக் கடினமா யிருக்கிறது? நான் ஏதோ ஒரு குறிப்பிட்ட காரியத்தை நிறைவேற்ற வாழ வேண்டும் என்பதற்காகவே சாவு வர மறுப்பது போலல்லவா இருக்கிறது! ஏதேனும் ஒரு சிறு குண்டு பட்டவுடன் பலர் துடித்துச் செத்துவிடு



கின்றனர். என்னை மட்டும் நெருங்கச் சாவு பயப்படுகிறதே! அது சரி! பியோடார்...!"

"நீ என்ன நினைக்கிறாய்? நான் அதிர்ஷ்டத்தால் உயிர் தப்பி வாழ்கிறாயா? அல்லது வேறு ஏதேனும் காரணம் இருக்க வேண்டுமா?" என்று கேட்டான் பியோடார்.

இல்லை, இல்லை, அதிர்ஷ்டத்தாலோ, விதிவசத்தாலோ மட்டும் நான் உயிர் தப்பிவிட முடியாது. நான் கட்டாயம் அறிவாற்றலுடன் வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருந்ததுதான் மிக முக்கியமான விஷயம். சில சந்தர்ப்பங்களில் ஒரு வினாடி செயலாற்றத் தாமதித்திருந்தால் அத்தனை பேரும் தொலைந்திருப்போம். ஒரு சமயம் கிராமத்தில் நாங்கள் தூங்கிக்கொண் டிருந்தபொழுது செக்கியர்கள் எங்களைச் சூழ்ந்துகொண்டனர். நான் மட்டும் கிராமத்தின் ஒரு கோடியில் தங்கியிருந்தேன். செய்தி யறிந்ததும் தாவிக் குதித்து ஓலமிட்டேன்; கத்தினேன். எங்களிடம் எத்தகைய ஆயுதமும் இல்லை. என்றாலும் இளைஞர்களிடம் மனத் துணிவு இருந்தது; சாதுரியம் இருந்தது. தந்திரமாகச் செக்கியர்களிடம் சென்று அவர்களிடமிருந்தே பல துப்பாக்கிகளைக் கவர்ந்து வந்தனர்; போரிட்டோம். சிறைப்பட்ட எங்களவர்களை யெல்லாம் மீட்டது மன்றிப் பல செக்கியர்களையும் நாங்கள் சிறைப்பிடித்தோம். தோழர் கிளிக்கோவ்! இதற்கெல்லாம் புத்திசாலித்தனம் வேண்டும், சமயோசித ஆற்றல் வேண்டும். அது இல்லை யென்றால் அனைவரும் போர்க்களத்திலேயே பொசுங்க வேண்டியதுதான்!"

"அதற்காக, இறந்துவிட வேண்டும் என எவரும் விரும்புவதில்லையே!" என்று கிண்டலாகச் சொன்னான் பியோடார்.

அதற்கும் பதில் சொன்னான் சப்பாயேவ்: "அதிலும் எல்லோரும் அப்படியில்லை. உயிரைப் பேணுவதால் மட்டுமே எல்லாம் நடந்துவிடும் என்று எல்லோருமே நினைக்கிறார்கள் என்றா நீ கருதுகிறாய்?" எல்

லோருமே அப்படி நினைக்க மாட்டார்கள். என்னையே உதாரணத்திற்கு எடுத்துக்கொள். நான் ஒரு சாதாரணப் போர் வீரன். என்னை அவர்கள் கொன்றாலும், விட்டு விட்டாலும் எனக்கு இரண்டும் ஒன்றுதான். என்னைப் போன்ற சேலைப்பேனை யார் விரும்புவார்கள்? உங்களைப் போன்றே என்னைப் போன்றவர்களும் நாளெல்லாம் பிறக் கிறார்கள்! என் உயிரை ஒரு செம்புக்காசுக்குக்கூட நான் மதிப்பதில்லை. எதிரிகளின் கிடங்குகளுக்குள்ளேயே துணி வோடு புகுந்து "முடியுமானால் என்னைப் பிடித்துவிடுங்க ளேன்!" என்று கூளுரைப்பேன். என்னைக் கொன்றுவிடு வார்களே என்று நான் எண்ணிக்கூடப் பார்த்ததில்லை; பிறகுதான் நான் பலருடைய கவனத்திலும் விழுவதைக் கண்டேன். எனவே நான் எப்படியோ உயர வேண்டும் என்ற எண்ணம் வலுத்தது. நான் உயரத் தொடங்கிய முதல், தோழர் கிளிக்கோவ், குறித்துக்கொள்ளலாம், நான் என் வாழ்க்கையைப்பற்றிக் கருதத் தொடங்கினேன், பேணத் தொடங்கினேன். நான் எதையும் உன்னிடம் மறைக்க மாட்டேன். உண்மையிலேயே என் உயிர் வாழ்க் கையைப் பெரிதென எண்ணத் தொடங்கினேன். எந்த ஒரு மனிதனும் வாழ விரும்புதுபோலவே நானும் வாழத் துடித்தேன். இதிலிருந்து நான் ஒரு கோழையாக மாறி யிருக்க வேண்டும் என்பது பொருளன்று; மாறாக நான் புத்தி சாதுரியம் பெற்றேன் என்றுதான் கொள்ள வேண் டும். அது முதல் எதிரிகளின் பாசறைக்குள் துணிந்து புகுந்து கண்மூடித் தீரச் செயல்கள் புரிவதை விட்டுவிட் டேன். ஒன்றுமில்லாமைக்காகச் சாவதை நான் விரும்ப வில்லை."

"ஆனால் செயல் துறையில்?" என்று இடைமறித் தான் பியோடார்.

"ஆனால் செயல் துறையைப் பொறுத்த மட்டில் நான் சத்தியம் செய்கிறேன். நான் ஒரு கோழையாகிவிட மாட் டேன். போரில் ஈடுபட்டுள்ளபொழுது வேறெந்த எண் ணத்திற்கும் என் நெஞ்சம் இடம் தராது. நீ என்ன நினைத் தாய்?"

"ஓ, நான் ஆச்சரியப்பட்டுக்கொண் டிருந்தேன்."

"அப்படியா? ஒரு வேளை தலைமைக் காரியாலயத்தில் உள்ளவர்கள் என்னைப்பற்றி ஏதேனும் சொல்லி இருக்கக் கூடும்."

சப்பாயேவ் எதைப்பற்றிப் பேசுகின்றான் என்று பியோடாருக்கு விளங்கவில்லை.

"அந்த முட்டாள்த் தளபதிகள் எதையாவது சொல்லி யிருப்பார்கள்" என்று ஆத்திரத்துடன் சொன்னான் சப்பாயேவ்.

"நான் நிசமாகச் சொல்லுகிறேன். நான் எந்த முட் டாள்த் தளபதியோடும் பேசிக்கொண் டிருக்கவில்லை. அவர் கள் எனக்கு எம்மாத்திரம்?" என்று சப்பாயேவைச் சாந்தப் படுத்தினான் பியோடார்.

"அவர்கள், ஏராளமாக அளந்திருப்பார்கள்."

"உன்னை அவர்கள் விரும்பாமலா?" என்று கேட்டான் பியோடார்.

சப்பாயேவ் மெதுவாகவும் நிதானமாகவும் பேசத் தொடங்கினான். "ஆம்! அவர்கள் என்னை அடியோடு வெறுத்தார்கள். அவர்களுக்கு ஏராளமான தந்திகளும் குறிப்புகளும் அனுப்பி வைத்தேன். எனவே அவர்க ளுடைய விசாரணை மன்றத்தில் என்னை அழைக்க விரும்பி னார்கள். சண்டை குறுக்கிட்டு இராவிட்டால் என்னை விசாரணை மன்றத்தின் முன்னர் கட்டாயம் இழுத்திருப் பார்கள். அவர்கள் விசாரித்து என் கழுத்தை நெறிக்க வேண்டுமென்று பார்த்தார்கள். நானா ஏமாந்துவிடுவேன். தங்களைப் பெரிய தளபதிகளாகப் பெருமையோடு அவர் களே எண்ணிக்கொண்டார்கள். ஆனால் நமக்குத்தோட்டா வேண்டுமென்றால் அங்கு ஏதும் கிடைக்காது. உத்தரவுகள்

தான் தருவார்கள். அதில்தான் கெட்டிக்காரர்கள். அவர்களைச் சரியாகக் கழற்றினேன். என்னைக் கொடியவன் என்றும், கொரில்லா வென்றும் பழித்தார்கள். என்னிடமிருந்து வேறு எதை அவர்களால் எதிர்பார்த்திருக்க முடியும்!"

"ஏன் தோழர் சப்பாயேவ்! நம்முடைய செஞ்சேனையை நடத்துகிறார்களே, அந்தத் தளபதிகளைப் பற்றியா இப்படிச் சொல்லுகிறாய்?" என்று வியப்புடன் கேட்டான் பியோடார்.

"பின்பு யாரை?"

"என்ன....நீ என்னதான் கருதுகிறாய்? யாரு? அவர்களா? அப்படியானால், புரட்சி ராணுவக் குழுவைப்பற்றி என்ன? நம்முடைய கமிசார்களையும் செஞ்சேனைத் தளபதிகளையும்பற்றி என்ன நினைக்கிறாய்?"

"ஆமா....அந்தக் குழுவெல்லாம் எதையும் புரிந்துகொள்ள முடியாமல் பாதிப் பொழுதை வீணாக்கிவிடும். யாராவது ஒரு வண்டி புளுகு மூட்டையை அவிழ்த்துவிட்டால் அப்படியே விழுங்கி ஏப்பம்விட்டுவிடுவார்கள்!"

"எல்லோரும் அப்படி யிருக்க முடியாது, புரட்சி ராணுவக் குழுவைப்பற்றித் தவறான அபிப்பிராயம் கொண்டுள்ளாய். அங்கு இருப்பவர்கள் நம் மக்கள்; எதையும் புரிந்துகொள்ளும் நம்மவர்கள். நீ மாறுபாடாக எண்ணுவது தவறு........"

"சரி....சரி....போராட்டம் துவங்கும்பொழுது நீயே காண்பாய்!" என்று இழுத்தாற்போல் சொன்னான் சப்பாயேவ். அவனுடைய குரலில் நம்பிக்கையோ, உறுதியோ தொனிக்கவில்லை. புரட்சி ராணுவக் குழுக்கள் அமைக்கப்படும் விதத்தையும், அவற்றின் நோக்கங்கள், செயல் திட்டங்கள், கட்டுக்கோப்பு முறைகள் ஆகிய அனைத்தையும் பியோடார் விளங்கச் சொன்னான். இதைப்பற்றிச் சப்பாயேவிற்கு ஒன்றும் தெரியாது என அறிந்தான். இந்தச்



செய்திகள் எல்லாம் ஏதோ புதிய வெளிப்பாடுபோல் அவனுக்குத் தோன்றின. எல்லாவற்றையும் கவனமாகக் கேட்டு நினைவில் பதித்துக்கொண்டான். சப்பாயேவின் நினைவாற்றலைக் கண்டு பியோடாரே வியந்திருக்கிறான். அற்ப விஷயங்களைக்கூட மறக்காது வைத்திருந்து எப்பொழுதாவது பேசும்பொழுது அதைச் சொல்லிவிடுவான். அத்தகையது அவனுடைய ஞாபக சக்தி.

இதுபோன்ற, இடையீடில்லாத சம்பாஷணைகளைப் பியோடார் விரும்பினான். அவன் பேசிக்கொண்டே யிருந்தான். அவனுடைய பேச்சு விதைகள் நல்ல வளமுள்ள நிலத்தில்தான் விதைக்கப்படுகின்றன வென்பதையும் அறிவான். பியோடாரிடமிருந்து கேட்ட விஷயங்களைத் தன் சொந்தக் கருத்துப்போலப் பின்னர் சப்பாயேவ் பேசுவதையும் அவன் குறித்துக்கொண்டான். சப்பாயேவ் எதையும் புரிந்துகொள்ளும் ஆற்றல் உடையவன் என்பதை அறிந்து, பியோடார், அவனோடு தனக்குள்ள தொடர்பை இன்னும் வலுப்படுத்திக்கொள்ள நிச்சயித்தான். ராணுவச் செய்திகளிலிருந்து, சப்பாயேவின் கல்விக் குறைவரைக்கும் உரையாடல் நீண்டது.

சப்பாயேவின் கல்விக் குறை ஒரு உறுத்தலான விஷயம். போதிய நேரம் கிடைக்கும்போதெல்லாம் சப்பாயேவிற்குப் பியோடார் போதிக்க வேண்டுமென்று இருவரும் முடிவு கட்டிக்கொண்டனர். சூதில்லாதவர்கள்—சண்டையின் மத்தியில் க்ஷேத்திர கணிதம் பயிலத் திட்டம் போட்டார்கள். போட்ட திட்டப்படி பாடம் படிக்க அவர்களுக்கு ஒரு நாள்கூடப் பின்னர் கிடைக்கவில்லை. என்றாலும் இதைப்பற்றி மட்டும் பல தடவைகள் பேசிப் பேசி முடிவுகட்டிவிட்டார்கள். போர்முனைப் பகுதியில் இருவருமே குதிரையில் அமர்ந்தவண்ணம் பல விஷயங்களை நேடு நேரம் பேசிய பின் இந்த விஷயத்திற்கும் வருவார்கள்.

"நாம் இருவரும் சேர்ந்து படிக்க முடிவு கட்டியது உனக்கு ஞாபகம் இருக்கிறதல்லவா?" என்று கேட்பான் பியோடார்.

"எத்தனையோ விஷயங்களைச் செய்து முடிக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். விரும்பும் அனைத்தையும் நிறைவேற்றத்தான் முடிவதில்லை" என்று வருத்தம் தோயப் பதிலிறுப்பான் சப்பாயேவ்.

பேசுகின்ற எந்த விஷயத்தைப்பற்றியும் ஒரு வரி விடாது சப்பாயேவ் பதித்துக்கொள்ளுவதைப் பேராசையுடன் கண்டு வியப்பான் பியோடார். புதிதாக எதைக் கேள்விப்பட்டாலும் எளிதில் விட மாட்டான். கடந்த ஒரு வருஷமாகக் கட்சியில் அவன் சேர்ந்துள்ளான். மதத்தைப் பற்றிய கட்சிக் கொள்கைகளையெல்லாம் அவன் நன்கு அறிந்திருந்ததாகவே புலப்பட்டது. ஒரு நாள் சப்பாயேவ் சிலுவை அடையாளம் வரைந்துகொள்ளுவதைக் கண்டான் கிளிக்கோவ்.

"என்ன வாஸிலி இலானோவிச்! என்னய்யா பண்ணுகிறாய்?" என்று சாதாரணமாகப் புதுப் பெயரில் அழைத்துச் சப்பாயேவைக் கேட்டான். "என்ன மதத்தைச் சார்ந்த கம்யூனிஸ்டா? நீ என்ன சரியான நிலையில்தானே இருக்கிறாய்?"

இதைக்கேட்ட சப்பாயேவிற்குச் சங்கடமாகிவிட்டது. என்றாலும் உணர்ச்சியுடன் பதில் தந்தான்.

"ஒரு கம்யூனிஸ்ட் தான் விரும்பும் எதையும் மேற்கொள்ளலாம் என்றுதான் நான் கருதுகிறேன். உனக்கு அதில் நம்பிக்கையில்லாவிட்டால் சரி .. நம்பிக்கைகொள்ள வேண்டாம், எனக்கு அதில் நம்பிக்கையிருந்தால், அதனால் உனக்கென்ன தீங்கு வந்தது?"

"உன் நம்பிக்கையால் எனக்கேதும் தீங்கு வரவில்லை. நான் என்னைப் பொறுத்தவரை இப்பொழுது குறிப்பிடவில்லை. உன்னைப் பார்த்தவுடன் நான் ஏன் திடுக்கிட்டேன் தெரியுமா? உன்னைப்போன்ற ஒரு கம்யூனிஸ்ட் எப்படிக் கடவுள்பேரில் நம்பிக்கை வைக்க முடியும்? என்றுதான் கேட்கிறேன்" என்று விடாப்பிடியாகக் கேட்டான் பியோடார் கிளிகோவ்.



"ஆமாம். எனக்கு நம்பிக்கையில்லைதான்!"

"அப்படியானால், ஏன் சிலுவை அடையாளம் வரைந்துகொண்டாய்?"

"ஏனோ, எதற்கோ வரைந்துகொள்ள விரும்பினேன். அவ்வளவுதான்; சிலுவை அடையாளம் வரைந்துகொண்டேன்!"

"நீ எவ்விதம் அப்படிச் செய்யக் கூடும்? இந்த மாதிரி விஷயங்களில் எல்லாம் கேலியும் விளையாட்டும் இருக்கக் கூடாது" என்று கண்டிப்பாகச் சொன்னான் பியோடார்.

உடனே தன் இளமையில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை விவரித்தான். சப்பாயேவ்:

"நான் சின்னப் பையனாக இருந்தபோது கோவிலிலிருந்த உண்டியலிலிருந்து இரண்டு பைசாக்களைத் திருடிவிட்டேன். அந்த உண்டியல் அதிசயமானது. அந்த இரண்டு பைசாவிற்கு சர்க்கரைக் கொம்மட்டிக்காய் வாங்கித் தின்று வயிற்றை நிரப்பிக்கொண்டேன். நிறையத் தின்றுவிட்டதால் காய்ச்சலாய் விழுந்துவிட்டேன். தொடர்ந்து ஆறு வாரங்கள் படுக்கையில் கிடந்தேன். தொடக்கத்தில் நடுக்கும் குளிர் சுரமும் வயிற்றோட்டமும் மிகுந்தன. செத்துப்போகும் நிலைக்கு வந்துவிட்டேன். நான் இரண்டு பைசாக்களைத் திருடிவிட்டேன் என்பதை அறிந்த என் தாய், தினமும் உண்டியலில் பரிகாரமாக நிறையப் பணம் போட ஆரம்பித்தாள். ஏறத்தாழ மூன்று ரூபிள்கள் போட்டதாக என்னிடம் சொன்னாள். பரிசுத்த கன்னிமாதாவிடம் எனக்காக மன்றாடிப் பலமுறை வேண்டினாள். என் பிழையைப் பொறுத்தருளுமாறு செபித்தாள் அவளுடைய செபத்திற்குப் பலன் கிடைத்தது. ஏழாவது

வாரம் நான் எழுந்தேன். நன்கு நலமடைந்தேன். அது முதல் நமது சக்திக்கும் அப்பாற்பட்ட ஏதோ ஒரு ஆற்றல் இருந்து நம்மைக் கவனிக்கிறது என்று நம்பத் தொடங்கினேன். களவாடுவதையும் கைவிட்டேன். பிறருடைய தோட்டத்திலிருந்து ஒரு ஆப்பிளைக்கூடத் தொட மாட்டேன். அதற்கு வேண்டிய மனோதிடம் என்னிடம் குறைந்துவிட்டதாகத் தோன்றியது. நெருப்பில் உழல்வதைக்கூடப் பொருட்படுத்த மாட்டேன், ஆனால் திருடுவதென்றால், பயம் என்னைச் சூழ்ந்துகொண்டுவிடும். என்னால் எதுவும் செய்ய முடியாது!''

இதைக் கேட்ட பியோடார் மேலே எதும் பேசவில்லை. ஆனால் பின்னால் சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் மதத்தைப்பற்றிப் பேசினான், மதத்தின் தோற்றத்தையும் கடவுளின் நிலையையும் சப்பாயேவிற்கு விளக்கினான். அதற்குப் பின்னர் சப்பாயேவ் சிலுவை அடையாளமே வரைந்து கொள்ளுவதில்லை. பியோடாரியிடமிருந்து தெரிந்து கொள்ளுமுன் தனக்கு மதத்தைப்பற்றி எதுவுமே தெரியாதென்று ஒப்புக்கொண்டான் சப்பாயேவ்!

இதுபோன்ற விவாதங்களின் பயனாக மதம், கடவுள், கோவில், குருமார்கள் ஆகிய அனைத்தையும் வேறு விதமாகப் புரிந்துகொண்டான் சப்பாயேவ். குருக்களைப்பற்றி எண்ணக்கூடப் பயந்த அவன் வெளிப்படையாக அவர்களை வெறுக்கத் தொடங்கினான். ''அவர்கள் எத்தகைய அயோக்கியர்களாக இருந்தாலும் நம்மைவிடக் கடவுளுக்கு அருகில் உள்ளார்கள்'' என்று நம்பி வந்தவன் முற்றிலும் வெறுக்க ஆரம்பித்தான்.

எஃகு போன்ற உறுதியும், சிறந்த மனோவலியும் கொண்ட கொரில்லா வீரனான சப்பாயேவைக் குழந்தை போல நடத்தலாம், கையாளலாம் என்பதைப் பியோடார் புரிந்துகொண்டான். மெழுகுபோல அவனை இளக்க முடியும், உருமாற்ற முடியும் என்பதையும், ஆனால் விழிப்போடும் திறமையோடும் அவனை அணுக வேண்டும் என்பதையும் உணர்ந்துகொண்டான். அவன் எதை ஏற்பான் என்பதையும், உடனடியாக எதை எதிர்ப்பான் என்பதையும் அறிந்துகொள்ள வேண்டும். போதனைத் துறையில் மனம் ஒப்பி அவன் எதையும் அறிந்துகொள்ள இசைவான்; எளிதில் அவனுக்கு எதையும் புகட்டலாம். வேகமான சிந்தனை யோட்டத்திற் கேற்ப விருப்புடன் படிப்பான். அதோடு சரி. பிற துறைகளில் அவன் உறுதியும் முரட்டுப் பிடிப்பும் கொண்டவன். எதற்கும் எளிதில் இணங்கிவிட மாட்டான்; இணங்கிவிட்டால் எளிதில் விட்டுவிடவும் மாட்டான். அவன் வாழ்க்கைச் சூழ்நிலை அவனைக் கல்வியறிவற்றவனாக்கிவிட்டது ஆனால் இப்பொழுது வேறு பல துறைகள் இருப்பதைக்' கண்டுகொண்டான். அப் புதிய துறைகளில் முன்னேறத் துவங்கிவிட்டான். அப்புதிய துறைகளை நோக்கி மெதுவாகவும், அமைதியாகவும் அடியெடுத்து வைத்தான். அப் புதிய வாசல்கள் முற்றிலும் புதியதொரு வாழ்க்கைப் பாதையை அவனுக்குப் புலப்படுத்தின!

# 8

# கோல்சாக்கை எதிர்த்து

பியோடாரும் சப்பாயேவும் உரால்ஸ்க்கில் பத்து நாட்கள் தங்கி உத்தரவுக்காகக் காத்திருந்தனர். வீணாக நாளைக் கழிப்பதை அவர்களால் பொறுக்க முடியவில்லை. உரால்ஸ்க் டிவிசன் படையின் தலைமைக் காரியாலயம் அங்கு அமைக்கப்பட்டிருந்தது; உண்பதும், ஊர் சுற்றுவதுமாகப் பொழுதைப் போக்கினர். அங்கிருந்தபடியே ஸ்லோமிகின்ஸ் காயாவிலிருந்த தங்களுடைய படைப் பகுதியோடு தொடர்புகொண்டனர். அப்படைப் பகுதி இன்றும் புஷுலுக் ஜில்லாவிற்கு மாற்றப்படவில்லை. இந்த நிலையில் எந்த வேலையுமின்றித் தூங்கினர். ஒரு நாள், அதுவும் சில நிமிடங்களுக்கு மட்டும் ஆண்ட்ரேவைக் கண்டான் பியோடார். அவனும் போர்முனையை நோக்கியே சென்றுகொண்டிருந்தான். உரால்ஸ்க்கில் சிறிது தாமதித்துவிட்டுப் புறப்பட்டுவிட்டான். அவன் மிகவும் மெலிந்து நலிந்திருந்தான். அவனுடைய நீலநிறக் கண்கள் வெளிறிச் சாம்பியிருந்தன. அவன் போதுமான அளவு தூங்கவில்லை என்றும், ஏராளமான கவலைகளால் சூழப்பட்டிருந்தான் என்றும், போதுமான உணவுகூடப் பெறவில்லை என்றும் புலப்பட்டது. ராணுவ உடை பூண்டு மீண்டும் புறப்படுவதற்குத் தயாராக டிவிசன் தலைமைக் காரியாலய வராந்தாவில் அவனைக் கண்டான் கிளிக்கோவ். அரை மணி நேரத்துக்கு முன்பே அங்கு வந்தடைந்த அவன் உடனே புறப்பட வேண்டி யிருந்தது. ஒருவரை யொருவர் மேலும் கீழும் கண்ணோட்டிப் பார்த்துக்கொண்டனர். அந்தப் பார்வையில், "சரி, இந்தப் புது வாழ்க்கையால் நீ பெற்ற பயன்



என்ன?" உனக்குக் கிடைத்த லாபம் என்ன? இழப்பு என்ன?" என்று ஒருவரை ஒருவர் கேட்பது தோன்றியது.

போராட்டத்தில் இறங்கியுள்ள ஒவ்வொருவனுடைய நோக்கிலும் செயலிலும் ஏற்படும் மாற்றங்கள், புதிய அழியாத முத்திரையாக முகத் தோற்றத்தில் பதிந்துவிடும் என்பதை இருவருமே உணர்ந்திருந்தனர்.

அவசரம் அவசரமாகச் சில வார்த்தைகளைப் பறிமாறிக்கொண்ட பின், மீண்டும் சந்திக்கும்வரை பிரிவு விடை பெற்றனர்.

சப்பாயேவ் சிடுசிடுப்பா யிருந்தான். எந்த வேலையும் இல்லை யென்றால் இந்தச் சிடுசிடுப்பு அவனை இயல்பாகப் பற்றிக்கொள்ளும். ஏதேனும் ஓரிரு நாட்களுக்கு ஓரிடத்தில் தங்கியிருக்க வேண்டிய கட்டாயம் நேர்ந்தபொழுதெல்லாம் அடையாளமே தெரியாத அளவிற்குச் சப்பாயேவ் மாறிவிடுவான். அந்த மனநிலையில், எல்லோரிடத்தும் ஏதாவது தவறு கண்டுபிடிக்கும் இரக்கமற்ற வேலையில் இறங்கிவிடுவான். சிறு வேறுபாடுகளைக்கூடத் திட்டுவான், கண்டிப்பான், ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்போவதாகப் பயமுறுத்துவான். அவனுடைய அளவு கடந்த உழைப்பாற்றல் ஏதேனும் ஒரு துறையில் முறையாக வெளிப் பாய்ந்துகொண்டே இருக்க வேண்டும்; அவ்விதம் வெளிப்படப் பயனுள்ள வேலைத்திட்டம் ஏதும் இல்லையென்றால் பக்குவமின்றிப் பொங்கிப் பாழாகும் கட்டாயம் பொங்கியே தீரும்!

அந்தச் சமயத்தில், உரால்ஸ் ராணுவ டிவிசன், லிபிஷ்ஷென்ஸ்க்கிற்கு அருகில் போர்முனை அமைந்திருந்தது. போர் நடவடிக்கைகள் வெகு சிறப்பாகவும் நடைபெறவில்லை, மோசமாகவும் போய்விடவில்லை. பெரிய தோல்வி ஏதும் ஏற்பட்டுவிடவில்லை யென்றாலும் குறிப்பிடத்தக்க மாபெரும் வெற்றியும் பெற்றுவிடவில்லை. திடீரென்று அனைவரும் அதிர்ஷ்டமில்லாதவர்களாகிவிட்டனர். ஒரு

குறிப்பிட்ட நாள்த் தாக்குதலில் எதிர்பார்த்தபடி போர் நடைபெறுததால் ஏராளமான வீரர்கள் கொல்லப்பட்டனர். லிபிஸ்ஷென்ஸ்க்கிற்குப் புறத்தே இருந்த போரெல்லே கலகலக்க ஆரம்பித்தது. நவோஷென்ஸ், முஸ்லிம் இவற்றின் ரெஜிமெண்டுகளைச் சேர்ந்தவர்கள் படுமோசமாக நசுக்கப்பட்டனர். அவர்களுக்கு உதவியாக குரிலாவோ வீரர்கள் அவசரமாக அனுப்பப்பட்டனர். உண்மையில் பெரும் அழிவு நேர்ந்துவிட்டது. வெறும் வானத்துப் பேரிடி போல எதிர்பாராத பேரிடி வீழ்ந்துவிட்டது. யாரும் இதை முன்கூட்டி அறியவில்லை. எத்தகைய முன் அறிவிப்பும் கிடைக்கவில்லை. நல்ல அனுபவமும் பயிற்சியும் பெற்ற உரால்ஸ்க் டிவிசனின் பிரதம தளபதியே செயல்மறந்து திகைத்துப் போய்விட்டார். என்ன நேர்ந்தது, மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும் என்று நிதானிக்கவே முடியாத அளவிற்குக் குழம்பிப் போய்விட்டார். அவர் சப்பாயேவிடம் ஆலோசனை கேட்டார். இருவரும் கூடி ஏதேதோ திட்டமிட்டுச் சென்றனர். என்றாலும் போர் முனையில் ராணுவத்தை நிலைநிறுத்த முடியவில்லை. உரால்ஸ்க் குழப்பட்டுவிட்டது; பல மாதங்கள் அப்படியே இருந்தது!

இந்தப் பேரழிவுச் செய்தி மத்திய அலுவலகத்திற்கு எட்டியவுடன், தோல்வியின் காரணத்தை ஆராய்வதற்காக ஒரு விசாரணைக் குழுவை நியமிக்குமாறு ப்ரூன்ஸ் உத்தரவிட்டான். அந்த விசாரணைக் குழுவில் சப்பாயேவும் சேர்க்கப்பட்டான்; குழுவின் தலைவனாகப் பியோடார் நியமிக்கப்பட்டான். விசாரணைக் குழுவின் தலைமைப் பதவியைத் தனக்குத் தராமல் ஒரு சாதாரணக் கமிசாருக்குத் தந்ததால் சப்பாயேவ் மிகவும் வருந்தினான் எனத் தெரிந்தது. இச்செய்தி மிகப் பின்னால்தான் வெளியில் தெரிந்தது. ராணுவச் சூழ்நிலை தவிர, அரசியல் சூழ்நிலையும், அது தழுவிய காரணங்களும் இந்தப் போர்முனை வீழ்ச்சிக்



குக் காரணமாயிருந்திருக்கக் கூடும் என்பதைச் சப்பாயேவால் புரிந்துகொள்ள முடியவில்லை. மத்திய ராணுவக் காரியாலயத்தினர் இதைப்புரிந்துகொண்ட காரணத்தினால் தான் கிளிக்கோவை எல்லாவற்றிற்கும் பொறுப்பாக நியமித்தனர்.

குழுவினர் உடனடியாகத் தம் விசாரணையைத் தொடங்கினர். எல்லாச் செய்திகளையும் சேகரித்தனர். அறிக்கைகள், பத்திரிகைகள், ராணுவ ஆவணங்கள், உத்தரவு நகல்கள், குறிப்புகள், தந்திச் செய்திகள் ஆகிய அனைத்தையும் தொகுத்தனர். மெர்ஜெனெவ்ஸ்கி கிராமத்தைத் தாக்கி தோல்வியுற்றமைக்குரிய துணைப்படை உத்தரவைப் பியோடாரிடமிருந்து சப்பாயேவ் பெற்றுக்கொண்டான். என்ன நடந்ததென்பதைப் புரிந்துகொள்வதற்குச் சரியான பின்னணிப் புலமாக இந்த உத்தரவு அறிக்கை அமைந்தது. என்றாலும் இதற்கும் சிறப்பளித்தான் பியோடார். இந்த அறிக்கையை மிக உன்னிப்பாய்க் கவனித்துப் பல கண்டனக் குறிப்புகளை எழுதிக்கொண்டபின், டைபிஸ்டிடம் தன் கருத்துக்களை எடுத்துக்கொள்ளுமாறு சொல்லிக்கொண்டிருந்தான் சப்பாயேவ். அப்பொழுது பியோடார் உள்ளே வந்தான்.

"அந்த உத்தரவைக் கவனித்தாயா? வாஸிலி இவானோவிச்?"

"ஆமாம். நான் கவனித்தேன். அதற்கென்ன?"

"நானும் அதைப்பற்றி ஏராளமாகச் சிந்தித்துப் பார்த்தேன். நாம் இருவரும் அதைப்பற்றிப் பேசலாமா?" என்று கேட்டான் பியோடார்.

"நீ இதைப் படித்துப் பார்க்கலாம், ஏற்கெனவே எழுதி அச்சாகிவிட்டது."

சப்பாயேவின் குரலும் போக்கும் முரட்டுப் பிடிவாதத்தையும் சிடுசிடுப்பையும் உணர்த்தின. அந்தச் சமயத்தில்

பியோடாரால் இதைச் சகித்துக்கொள்ள முடியவில்லை. அவனே பேசினன் :

"நீயே படி சப்பாயேவ். பிறகு நாம் இதைப்பற்றிக் கூடிப் பேசி வேண்டிய மாறுதல்களைச் செய்யலாம்."

"மாறுதலா? எந்த மாறுதலும் இனிச் செய்ய முடியாது. உன்னுடைய சொந்தச் சரக்கை வேண்டுமானல் நீ மாற்றிக்கொள்ளலாம். என்னுடைய அபிப்பிராயத்தை எழுதியபடியேதான் நான் அனுப்புவேன்."

இணக்கமற்ற இந்த பதிலைக் கேட்ட பியோடார் வியப்புடன் "ஏன் அப்படி?" என்று இடைமறித்தான்.

"ஏனு! அதற்காகத்தான்! நீ விசாரணைக் குழுவின் தலைவன் என்ற முறையில் உன் அபிப்பிராயத்தைக் கொடுக்கலாம். ஆனல், நான் ஒரு சாதாரண போர்த்துறைச் சிப்பாய்தானே!" என்று புண்பட்ட தொனியில் திருப்பித் திருப்பிச் சொன்னன் சப்பாயேவ்.

இதைக் கேட்ட பியோடாரும் ரொம்ப நொந்து போனன். ஆச்சரியமும் ஆருத் துயரும்உந்தக் கேட்டான்.... "என்ன முட்டாள்த்தனம் இது? ஏன் இந்தத் திடீர்ப் போக்கு? நாம் பிரிந்து வேலைசெய்ய வேண்டுமென்ற காரணமே கிடையாதே! நாம் இருவருமே சேர்ந்து இதைப்பற்றி விவாதிப்போம். இருவரும் சேர்ந்தே அறிக்கையை அனுப்புவோம்!"

"இல்லை. நாம் அவ்விதம் செய்ய மாட்டோம்!" என்று விடாப்பிடியாகச் சொன்னன் சப்பாயேவ்.

இந்தப் பிரச்னையில் இதற்குமேல் நேரத்தை வீணக்க விரும்பவில்லை பியோடார் கிளிச்கோவ். ஒரு நீண்ட பெருமூச்சுவிட்ட பின், "சரி . மேலே படி....படி" என்று சொன்னபடி அமர்ந்துகொண்டான்.

உரால்ஸ்க் ராணுவ டிவிசனின் துணைப் படை உத்தரவைப்பற்றிய தன் கண்டனங்களைப் படித்தான் சப்பாயேவ். அவனுடைய விளக்கம் தெளிவாகவும், அலசி ஆராயப்பட்டதாகவும், செயல் நோக்கம் நிறைந்ததாகவும் இருந்தது. அந்த உத்தரவுபற்றிய தன் கருத்துக்களை முன் வைத்து விவாதிக்கப் பியோடார் விரும்பவில்லை. தன்னுடைய அபிப்பிராயத்தைத் தனியாக அனுப்புவதென முடிவுசெய்துகொண்டான்.



"சரி....இந்த அறிக்கையைப்பற்றி நீ என்ன நினைக்கிருய்?" என்று சப்பாயேவ் கேட்டான்.

"ஏன்! இது நன்ருயிருக்கிறது என்பதுதான் என் அபிப்பிராயமும்!" என்று பல்லைக் கடித்தபடி பதிலிறுத்தான் பியோடார்.

"இது மோசமாயிருக்கிறது என்றுகூட நீ சொல்லலாம்! மோசமான விஷயங்கள் ஏராளமாயிருக்கின்றன.... ஆனல் அது என்னல் ஏற்பட்டதன்று. என் தகுதியையும் நோக்கத்தையும் நான் நன்கு அறிவேன், எல்லாம் அந்த அயோக்கியர்களால்தான்" என்று உரக்கச் சொன்னன் சப்பாயேவ்.

யார்மீது இத்தகைய கண்டனக் கணைகளையெல்லாம் சப்பாயேவ் வீசுகின்ருன் என்று பியோடாரால் புரிந்துகொள்ள முடியவில்லை. சப்பாயேவ் ஆத்திரம் உந்தப் பேசினன் :

"படுபாதகர்கள்! ஒரு நல்ல மனிதனுக்கு எத்தகைய வாய்ப்பும் கொடுக்காமல் கீழே தள்ளிவிட முடிவுகட்டிவிட்டார்கள். ஆகட்டும். முறையான நீதிபெற நான் முனைகின்றேன். என் சொற்கள் கட்டாயம் எடுபடும்" என்று ராணுவத் துறையில் மேலிடத்தவர்களாக இருந்து தொல்லையும் வம்பும் செய்துவந்த எல்லோரையும் திட்டினன்.

அவர்கள் அனைவரையும் ஓநாய்கள் கூட்டமென்றும், கோழைகள் தொகுதி யென்றும், சந்தர்ப்பவாதிகளென்றும், எல்லா வகையிலும் கொடியவர்கள் என்றும் அவன் முடிவு கட்டியிருந்தான்.

"சிறிது பொறு, சப்பாயேவ்! உன்னைப்பற்றி நீ ஏன் இப்படிப் பகட்டிக்கொள்கிறாய்? ஒன்றும் இல்லாமல் இப்படிக் கோபமாய் பேசுகிறாயே? என்ன பேய்க் குணம்? நீ மரக்கட்டையாக ஆகியாவிட்டாய்?" என்று பாதி கிண்டலாகக் கேட்டான் பியோடார்.

"என்னையும் இதற்கு முன்னால் ஒரு மரக்கட்டையாகத்தான் மதித்திருந்தார்கள். என்னுடைய சுயநிலை வெளிவரத் தொடங்கிவிட்டது. ஒருவனை மரக்கட்டையாக்கி வைத்தால் போதுமானது. நாளடைவில் எதற்கும் உதவாக்கரையாகிவிடுவான். ஆனால் சப்பாயேவை அப்படி ஏமாற்றிவிட முடியாது, தன்னுடைய செயல் திறத்தை அவன் அறிவான்."

"நீ எதைப்பற்றிப் பேசுகிறாய் சப்பாயேவ்?"

"எதைப்பற்றியா? அதே விஷயத்தைப் பற்றித்தான். அந்தப் பழைய சமாசாரம்தான். நான் எந்தப்பள்ளிக்கூடத்திலும் முறையாகப் படிக்கவில்லை என்கிறார்களே, அந்தச் சமாசாரம்தான். என்றாலும் எந்தப் பல்கலைக் கழகப் படிப்பும் இல்லாமல் செயலாற்ற எனக்குத் தெரியும். நாட்டுப்புறப் போக்கிலே நான் செய்யும் செயலுக்கேற்ற பலனும் கிடைத்துவிடுகிறது. நான் தளபதியின் உடையோ, எடுப்பான பதவிப் பட்டைகளோ பூண்டிருக்கவில்லை. அவையில்லாவிட்டாலும்கூட எல்லோரையும்விட நான் நன்கு பணியாற்றியுள்ளேன் என்பது கடவுளுக்குக்கூடத் தெரியும்."

"நீயே தம்பட்டமடித்து வீண்பெருமை பேசிக்கொள்ளாதே வாஸிலி இவானோவிச். அது நல்லது மில்லை. மற்றவர்கள் உன்னைப்பற்றிப் பெருமையாகப் பேசட்டும். ஆனால் நீயே உன்னைப்பற்றி..." என்றவாறு விரல்களைக் கொண்டு உதடுகளை மடித்துச் சொன்னான் பியோடார். சமீபத்தில் ஏற்பட்ட வேறுபட்ட உணர்ச்சிகளும், மனப்போக்கும் சப்பாயேவை மீண்டும் தன்பால் இழுத்துக்



கொள்ள வேண்டுமென்ற அவசியத்தைத் தூண்டின. ஆனால் எப்படி முயல்வது? சப்பாயேவின் தீரத்தைப் புகழ்வதும், இகழ்வதுமே அவனை மனச்சஞ்சலமோ, மாறுபாடோ கொள்ளச்செய்யும் என்பதையும், ஏனைய ராணுவ உத்தியோகஸ்தர்களைப்பற்றிப் பேசும்பொழுது சப்பாயேவின் திறமையை ஏற்றிச் சொன்னால் அவன் வளைந்துவிடுவான் என்பதையும் பியோடார் தெரிந்திருந்தான். இந்தமாதிரி விஷயங்களில் சப்பாயேவைக் கொஞ்சம் குத்திவிட்டால் போதும்; அவன் தன்னை மறந்துவிடுவான்.

"போர்த்துறையைப்பற்றி நீ ஏதும் பேசாமல் வாய் மூடியிருப்பதே நல்லது" என்று வெளிப்படையாகச் சொன்னான் பியோடார்.

"என்ன சொன்னாய்? வாய் மூடியிருப்பதா? நீ வாய் மூடிக்கொள்!" என்று நடுநடுங்கக் கத்தினான் சப்பாயேவ்.

தன்னைக் கட்டுப்படுத்தியவாறே, அமைதியாக இருப்பதுபோலச் சாந்தப்படுத்திக்கொண்டு கிளிக்கோவ் பேச ஆரம்பித்தான்.

"நான் பேசுவதைக் கவனி சப்பாயேவ். நீ ஒரு நல்ல போர்வீரன், துணிவுடைய படைத்தலைவன். மிக நல்ல ஒருதலைப்பட்சவாதி; அவ்வளவுதான்! நாம் வெளிப்படையாகவே பேசிவிடுவோம். ராணுவத் துறை, ராணுவச் செய்திகள் என்பனவற்றில் உனக்கு ஆற்றல் போதாது என்ற உண்மையாக அப்பட்டமாக ஒப்புக்கொள்ளும் துணிச்சல் உனக்கு இருக்க வேண்டும். நீ எத்தகைய துறையில் வல்லவன், சேனைத்துறை நிபுணன். ஒரு வினாடி நீயே சிந்தித்துப்பார். உனக்கெப்படிப் போர்த்துறை நுணுக்கங்கள் புலப்படும்?"

சப்பாயேவின் முகம் படபடப்பில் சூடேறியிருந்தது; அடக்க முடியாத ஆத்திரத்தில் ஓநாய்போன்று நீலநிறக் கண்கள் வெறியாட்டமாடி அனலைக் கக்கின. பியோடாரிடம் கத்திப் பேசினான்.

"நானா ஒன்றும் தெரியாதவன், சேனாபத்தியமே தெரியாத முட்டாள் நானா? அப்படியானால் நீ ஒரு பிசாசுக்குப் பின்னால் சென்றிருக்கலாமே!" என்று உரக்கக் கத்தினான்.

பியோடார் சாவதானமாகப் பேசினான்: "இப்பொழுது சாந்தமாகிக்கொள் சப்பாயேவ். பொங்காதே. அமைதியாகப் பேசு. ஏன் ஆத்திரப்பட வேண்டும்? நீ உண்மையிலேயே போர்த்துறையில் முழு அறிவும் பெற வேண்டுமானால், போர்த்துறை இயல்புபற்றிய எல்லா நுணுக்கங்களையும், அடிப்படைகளையும் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டுமானால், நீ அவற்றையெல்லாம் முறையாகப் படித்திருக்க வேண்டும். உண்மையில் அதற்கு வேண்டிய நேரம் கிடைக்கவில்லைதான். நான் சொல்லுவது விளங்குகிறதா?"

"எனக்கு எதுவும் விளங்கவில்லை, எதுவும் விளங்கவில்லை" என்று குறுக்கிட்ட சப்பாயேவ், "எந்த ராணுவப் பகுதியையும் எடுத்துத் திறமையுடன் செயலாற்றி நல்ல பெயர் எடுக்க என்னால் முடியும்; நிச்சயம் முடியும்" என்று கர்ஜித்தான்.

"போர்முனையில் நீ வீரத்துடன் போரிட்டுவிடலாம்!" என்றான் பியோடார்.

"போர்முனையில் என்றால், நீ என்ன நினைக்கிறாய்?"

"நீ பிரதம தளபதியாகக்கூட உன்னைக் கருதிக்கொண்டு துணிவோடு போராடக் கூடும்!"

"அப்படியானால், அப்படி என்னால் எதுவும் செய்ய முடியாதென்கிறாயா? ஒரு கண்ணோட்டத்தில் நிலையைப் புரிந்து, எதையும் கொண்டு வெற்றிபெற்றுவிடுவேன் தெரியுமா? மனது வைத்துச் செய்தால் எதிலும் வெற்றிதான், புரிகிறதா?"

"ஓ! இயற்கையிலே, புரிகிறதே!"

சப்பாயேவுடன் உரையாடலைத் துவங்கியபோது இருந்த விபரீத மனநிலையும் வேதனைக் குரலொலியும் இப்



பொழுது மாறிவிட்டன. தன்னுடைய எல்லையற்ற வல்லமையின்மீது சப்பாயேவிற்கிருந்த அளவுகடந்த நம்பிக்கை பியோடரைத் திகைப்புறச் செய்தது!

"உன்னுடைய வல்லமையின்மீது நீ நம்பிக்கை வைப்பது நல்லதுதான். அத்தகைய நம்பிக்கையில்லாவிட்டால் நீ எதுவுமே செய்ய முடியாது. ஆனால், வாஸிலி இவானோவிச் நீ உன்னைப் பற்றியே வீண் பெருமை பேசிப் பகட்டவில்லையா? இந்த வறட்டு ஜம்பம் உன்னிடம் மிகுந்துவிடவில்லையா? உன் இஷ்டத்திற்கு உன் நாக்கையும் ஆடவிட்டுவிட்டாயே! அதுதான் எல்லாக் குழப்பத்திற்கும் காரணம்!" என்றான் பியோடார்.

அவன் பேசிக்கொண்டிருந்தபொழுது வெளியிடப்பட்ட ஒவ்வொரு பகுதியையும் கேட்கக் கேட்கச் சப்பாயேவின் கண்கள் அனல் கக்கின: கோபத்தால் கொதித்தான், என்றாலும் பியோடார் பேசி முடிக்கும்வரை அடக்கிக்கொண்டான்.

"என்ன, நானா? நானா வீண் பெருமையடித்துக் கொள்ளுகிறேன்? நானா? ஸ்டெப்பிப் புல்வெளியில் கொஸாக்கியர்களை எதிர்த்துப் போதிய துப்பாக்கிகளும் தோட்டாக்களும் இன்றி வெறுங்கையுடன் போரிட்டு வென்றது வேறு யார்? நானா வீண் பெருமை அடித்துக் கொள்ளுகிறேன்" என்றபடி பியோடாரை நெருங்கினான். "இதெல்லாம் அவர்களுக்கு எம்மாத்திரம்? பொய்யர்கள்! அயோக்கியர்கள்! முறைகெட்ட முட்டாள்கள்! ஒரு சேனாதிபதியைப்பற்றிய அவர்களுடைய பேச்செல்லாம்..."

"நான் உன்னை ஒரு சேனாதிபதியென்று இன்னும் கருதவில்லைதான். அப்படியானால் நானும் பொய்யனா? அயோக்கியனா?" என்று குறுக்குக் கேள்வி விடுத்தான் பியோடார். சப்பாயேவ் பேசாமல் இருந்தான். அவன் நெஞ்சம் குழம்பிவிட்டது, முகம் இருண்டுவிட்டது! ஏதோ சிறுபிள்ளைக் குறும்பில் அகப்பட்டுக்கொண்டது போன்ற

மனநிலையில் உதவியின்றிப் பேசாது மௌனம் சாதித்தான்.

ராணுவ உத்தியோகஸ்தர்கள் அனைவரையும் சாப்பாயேவ் பொத்தாம் பொதுவாகக் கண்மூடித் திட்டுவதை நிவர்த்திக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் விவாதத்தைக் கிண்டிவிட்டுக் கேள்விப் போக்கை வேறு விதமாக முடுக்கிவிட்டான் பியோடார். இது தவறானது என்பதோடு சப்பாயேவிற்கும் தீங்கானது என்பதை உணர்த்த விரும்பினான். சப்பாயேவ் அவ்விதம் பேசும்பொழுது அவனுடைய எதிரிகள் உற்றுக் கேட்டறிந்துவிடக் கூடும். இதை நினைவிலேயே வைத்திருந்து சாட்சிகளுடனும் சான்றுகளுடனும் அவனைத் தொலைத்துவிடக் கூடும். அந்த நிலையில் அவனுடைய நிலை மகா மோசமாகிவிடும்; அதிலிருந்து மீளுவதென்பதும் முடியாது போய்விடக் கூடும். சப்பாயேவின்மீது ஏதேனும் சிறு அளவு அதிகாரம் செலுத்திய எல்லா உத்தியோகஸ்தர்களையும், புரட்சி ராணுவக் குழுவினர், செக்கா, விசேடத் துறையினர், கமிசார்கள் ஆகிய அனைவரையும் இவ்விதமே சுடச் சுடத் தாக்கி வந்தான். எத்தகைய காரணமும் இன்றியே அவர்களைப் பழிப்பான், இழித்துரைப்பான், சபிப்பான், பயமுறுத்துவான். நிலைமையையும் சூழ்நிலையையும் மட்டும் தெளிவாக அவனுக்கு அறிவுறுத்திவிட்டால் போதும்; எல்லாவற்றையும் புரிந்து கொள்ளுவான். தன்னுடைய அபிப்பிராயத்தைத் திருத்திக்கொண்டு மெதுவாகவும், விருப்பின்றியும் நம்மோடு உடன் பட்டுவிடுவான். தான் முன்னர்க் கூறிய எதிலிருந்தும் பின்வாங்க விரும்ப மாட்டான். தன்னுடைய போக்கைக்கூட மாற்றிக்கொள்ள இசையான்!

இத்தகைய சப்பாயேவைச் சரியாகப் பற்றி இக்கட்டான நிலைக்குக் கொண்டுவந்துவிட்டான் பியோடார். இந்த முறையிலேயே அவனுடைய குறைகளை வெளிப்படுத்தித் தகுந்த பயிற்சியளிக்க முடிவு கட்டினான். இன்று



அந்த அளவோடு சப்பாயேவைத் தனியே விட்டுச் சிந்திக்கச் செய்ய விரும்பினான்.

"அவனுடைய சந்தேகமே அவனைக் குழப்பட்டும். இந்தச் சம்பவம் என்றென்றும் அவன் நினைவில் உறுத்தட்டும்" என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்.

எதிர்பாராத கருத்து மோதலால் இடிந்து போயிருந்த சப்பாயேவ் வெகு நேரம் பேசாதிருந்தான். பின்னர் பியோடாரிடம் தன் நிலையைத் தெளிவுபடுத்தினான்: "அவனை மனத்தில்கொண்டு ஏதும் இழித்துரைக்கவில்லை யென்றும், ராணுவத்து 'மேலிடத்தார்களையே' குறை சொன்னதாகவும் உறுதிப்படுத்த முனைந்தான்....இந்த நிலையில் வணக்கம் என்று சொல்லி, பியோடார் வெளியேறினான்

அன்று நள்ளிரவில், வெளியே சென்று தன் அறைக்குத் திரும்பினான் பியோடார் கிளிக்கோவ். அப்போது சப்பாயேவ் தன் அறையில் அமர்ந்தவண்ணம் ஏதோ ஒரு கடுதாசியை நெருடிக்கொண்டிருந்தான்.

"இதோ இதைப் படி!" என்று பியோடாரின் கையில் ஒரு சிறு டைப் அடித்த காகிதத்தைச் செருகினான். உணர்ச்சி மயமானாலோ, ஆத்திரமூட்டப்பட்டாலோ, அகமதிக்கப்பட்டாலோ சப்பாயேவின் பேச்சுப் பாணியும் செயல்போக்கும் மாறிவிடும். ரொம்பவும் சம்பிரதாயமாகவும் சமத்காரமாகவும் பேசத் தொடங்கிவிடுவான். இந்த மாறுதல் சப்பாயேவ் தன்னிடம் தந்த காகிதத்தில் எழுதப் பட்டுள்ளதிலும் வெளிப்படக் கண்டான் பியோடார். இது தான் காகிதத்தில் கண்டது:

"தோழர் கிளிக்கோவ், என்னுடைய கடிதச் சமாசாரத்தை நன்கு கவனிக்குமாறு வேண்டுகிறேன். நான் உன்னைப்பற்றிச் சொன்னதை மாறாகப் புரிந்துகொண்டு உடனே நீ என்னைவிட்டுப் பிரிந்து சென்றது கண்டு நான் மிகவும் மனம் இடிந்துபோய்விட்டேன். அதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நீ எனக்கு இதுவரை எத்

தகைய தீங்கும் செய்ததில்லை என்பதை உறுதிப்படுத்த விரும்புகிறேன். நான் எவ்வளவோ வெளிப்படையாகப் பேசினாலும், ஆத்திரத்தில் கொட்டினாலும், உன் முன்பு சம்பிரதாயமாக நடந்துகொள்ளத் தவறினாலும், எல்லோரையும்பற்றி எனக்குத்தோன்றியவாறெல்லாம் இழித்துப் பேசினாலும்-அவையெல்லாம் உன்னை அவமதித்தாலும்கூட நீ பொறுத்துக்கொண்டாய். எனக்கு எத்தகைய தீங்கும் செய்யவில்லை! நம்மிருவருக்குமிடையே எத்தகைய மனவேறுபாடும் ஏற்படாதிருப்பதற்காக என் பதவியிலிருந்து விலக்கிவிடுமாறு விண்ணப்பித்திருக்கிறேன். என்னுடைய இணைந்த ஊழியனுடன் மனம் வேறுபட்டிருப்பதைவிட இது நல்லதுதானே! நான் என்றென்றும் உன்னுடைய நண்பன்தான் என்பதை உறுதிப்படுத்த விரும்புகிறேன்.

சப்பாயேவ்."

இதுதான் அந்தக் கடிதம். எத்தகைய மாற்றமும் இன்றி இங்கே தரப்பட்டுள்ளது. இது மிக விபரீதமான முடிவுகளுக்கெல்லாம் வழிகோலியிருக்கும். அந்த ராஜினாமா விண்ணப்பம் ஏற்கெனவே எழுதப்பட்டிருந்தது. அதை அடுத்த நொடியிலேயே பியோடாருக்குக்காட்டினான் சப்பாயேவ். அப்பொழுது தனக்கென்ன என்று பியோடார் பேசாமலிருந்தாலோ அல்லது பெயரளவுக்காவது சரியென்று சொல்லியிருந்தாலோ விஷயம் மிக விபரீதமாகப் போயிருக்கும்; அதன் முடிவும் எவ்வளவு பயங்கரமாயிருந்திருக்கும் என்று ஊகிக்கக்கூட முடியாது! தன்னுடைய படைப்பகுதியில் உள்ளோருக்காகக்கூடச் சப்பாயேவ் அக்கறை எடுத்துக்கொள்ளாதது வியப்புத்தான். அந்தப் படைப்பகுதியில் அவனுக்கு மிகவும் பிடித்தமான புகாசோவ், ராஸின், தொமாஷ்கின் ஆகியவற்றின் இளைஞர்கள் நிறைந்திருந்தும் முன்னோக்கமின்றி நடந்துகொண்டான். இது சப்பாயேவின் ஒரு விசேடக் குணப்பாங்



கையே சுட்டுகிறது. எந்த வகையிலும் முக்கியமல்லாத ஒன்றிற்காகச் சப்பாயேவ் ஒரு நொடியில், எதையும் சிந்தித்துப்பாராது தனக்கு மிகமிக வேண்டிய அனைத்தையும் கூடத் தியாகம் செய்யத் தயங்கமாட்டான் என்பதே அது!

அந்தச் சமயத்தில் மட்டும் அவனைக் கொஞ்சம் கிண்டிவிட்டால் போதும்; முன்னிலும் மோசமாகக்கூட ஈடுபட்டுவிடுவான்.

சப்பாயேவின் கடிதத்தைப் படித்த பின், பியோடார் அவன் பக்கம் திரும்பிப் புன்முறுவலுடனும், பொலிவான முகத்துடனும் பேசினான்: "ஏன்? என்ன சப்பாயேவ் நினைக்கிறாய்? நான் எந்த வகையிலும் வருத்தப்படவில்லை; நான் கொஞ்சம் மனம் நொந்ததுபோல் நடந்துகொண்டேன் என்றால், அதற்கு வேறு காரணங்கள் உண்டு."

அதற்கு மேல் பியோடார் ஏதும் பேசவில்லை. தன் கருத்தையெல்லாம் மறு நாள்தான் தெளிவுபடுத்தினான்.

"இதோ தந்தியொன்று வந்திருக்கிறது" என்று அவனிடம் நீட்டினான் சப்பாயேவ்.

"எங்கிருந்து?"

"நாளை புஷுலுக்குப் புறப்பட்டுச் செல்லுமாறு தலைமைக் காரியாலயத்திலிருந்து உத்தரவு வந்துள்ளது. நாம் ஓரென்பர்க் செல்லப் போவதில்லை. எல்லாவற்றையும் இங்கேயே முடிவுகட்டிவிட்டு நாம் புறப்பட வேண்டும்."

நெடு நேரம் யோசித்தபின் இந்த ஆராய்ச்சி விசாரணையை மறு நாள்வரைக்கும் ஒத்திப்போட அவர்கள் விரும்பவில்லை. எல்லாவற்றையும் உடனடியாக முடித்துவிட்டு அன்று இரவே புறப்பட்டுவிடுவதென்று தீர்மானித்தார்கள். உரால்ஸ்க் ராணுவப் பகுதியின் தோல்விப் போரைப் பற்றி ஒரு நாளைக்குள் விசாரித்து முடிவுகட்டுவதென்பது எவ்வகையிலும் முடியாத காரியம். அவர்களே போர் முனைக்குப் புறப்பட்டுச் சென்று விசாரணையை நடத்த வேண்டியதிருக்கும். மேலும் இன்னும் பல அறிக்கைகளும்

தேடிச் சேர்க்க வேண்டியிருந்தன. என்றாலும் முடித்துவிடுவதென்ற தீர்மானத்துடன் உடனே டிவிசன் தலைமைக் காரியாலயத்திற்கு இருவரும் சென்றார்கள். விசாரணைக்குத் தேவையானவர்களையெல்லாம் அழைத்து விசாரித்தார்கள். ஒன்றரை மணி நேரத்திற்குள் உரால்ஸ்க்கைவிட்டுப் புஷுலுக்கிற்குப் புறப்பட்டுவிட்டார்கள்.

சமராவிற்குச் செல்லும் நெடுஞ் சாலைகளிலும் ரயில் பாதைகளிலும் அக்காலத்தில் என்னென்ன நிகழ்ந்தன என்பதை விவரித்தல் இயலாது. எல்லாத் திசைகளிலும் இருந்து கணக்கற்ற ரயில்கள் பறந்தும் ஊர்ந்தும் வந்தன. ஊபாவிலிருந்தும் ஓரென்பர்க்கிலிருந்தும், அண்மையிலிருந்தும் சேய்மையிலிருந்தும் படைகளுடனும், தளவாடங்களுடனும் ஏராளமான ரயில்கள் வந்து குவிந்த வண்ணமாகவேயிருந்தன. எதிர்த் திசையில் வெறும் வண்டிகளும் மருத்துவ வண்டிகளும் சாரிசாரியாய்ச் சென்றன. உரால்ஸ்க்கைவிட்டு ஏராளமான வண்டிகள் வழியெங்கும் பரவிச் சென்றன. இராணுவ வீரர்கள் அணிவகுத்துத் துரிதமாக முன்னேறிச் சென்றார்கள்.

அவசரம் அவசரமாகப் புதுப் புது படைப் பகுதிகள் அமைக்கப்பட்டன. ஏராளமான வீரர்கள் முன்னணியில் நிறுத்தப்பட்டனர். புதிய துருப்புகள் அனுப்பப்பட்டன; போரிடத் தகுதியற்ற பழைய படைப் பகுதிகள் செம்மை செய்யப்பட்டன. கோல்சாக் ஏற்கெனவே ஊபாவைக் கைப்பற்றிக்கொண்டு வோல்காவை நெருங்கிக்கொண்டிருந்தான். நிலை மிகவும் அபாயமாக மாறிவந்தது. சமாராவும், வோல்கா தீரத்துப் பெரு நகரங்களும் அச்சுறுத்தப்பட்டன. அது ரஷ்யா முழுமைக்குமே ஒரு பேரிடியாக ஏற்பட்டிருக்கும். செஞ்சேனையினர் இங்கிருந்து எக்காரணங்கொண்டும் பின்னிட விரும்பாது முனைப்புடனும் துணிவுடனும் பாதுகாத்து நின்றனர். இக்கட்டான சூழ்நிலை எக்காரணம் கொண்டும் மாற்றியமைக்கப்பட்டுச் சாதகமான



நிலை வர வேண்டும் என உறுதிகொண்டனர். எதிரியின் உதவித் தளவாடங்களைக் கைப்பற்றிக்கொண்டு சோவியத் நாட்டுப் பகுதியின் நடுவிடத்திலிருந்து அவர்களை எவ்வகையிலாயினும் விரட்டியடிக்க வேண்டும். எனவே ஒரு மகத்தான படையொன்று புஷுலுக் ஜில்லாவிலிருந்து திரட்டப்பட்டது. இங்கிருந்துதான் முதல் தாக்குதலைத் தொடங்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. இருபத்தைந்தாவது டிவிசனான சப்பாயேவின் படைப்பகுதிக்கு, மிக முக்கியமான வேலை கொடுக்கப்பட்டது. கோல்சாக்கை நடுவிடத்தில் தாக்குவது அவனது படைப்பகுதியின் பொறுப்பு. பின்பு, பிற படைகளுடன் சேர்ந்து வோல்காவிலிருந்தே அவனை விரட்டியடிக்க வேண்டும். அதில் முதல் பகுதியாக ஊபாவிலிருந்து கிளப்ப வேண்டும்.

ஸ்லோமிகின்ஸ்காயாவிலிருந்து வந்துகொண்டிருந்த படைகளுடன், சிஷோவ் என்ற துணிவுமிக்க நல்லிளைஞனால் தலைமையேற்று நடத்தப்பட்ட படைப்பகுதியொன்றும் புஷுலுக் பகுதிக்குத் திருப்பப்பட்டது. இத்துடன் இருபத்தைந்தாவது படையுடன் இன்னும் சில பகுதிகளும் இணைக்கப்பட்டன. இவ்விதம் சமாராவிற்கு அருகில் உள்ள கிரோடோவ்கா கேந்திரத்தில் குவிக்கப்பட்ட பெரும்படையின் ஒரு பகுதியினர்தான் இவானோவாவோஷ்னெஸென்க் ரெஜிமெண்டைச் சேர்ந்தவர்கள்!

பெர்ம், காஷான், சமாரா என்ற மூன்று பெரும் முனைகளை நோக்கிப் பரவலாக முன்னேறி வந்தான் கோல்சாக். இந்த மூன்று முனைகளிலும் ஒன்றரை இலட்சம் வெள்ளைப் படையினர் அணிவகுத்து வந்தனர். இவர்களை எதிர்த்து நின்ற செஞ்சேனையும் ஏறத்தாழ ஒரே தகுதியும் வல்லமையும் கொண்டிருந்தது; ஓரளவு செஞ்சேனையில் வீரர்கள் தொகை குறைவு என்று வேண்டுமானால் கணிக்கலாம். பெர்ம், வியாட்கா இவற்றின் வழியாகப் பிரிட்டிஷை இணைத்துவிடத் திட்டமிட்டான் கோல்சாக்; பின்னர்

சமாரா வழியாக டெனிகின்னைப் பொருத்திவிட வேண்டும். இங்ஙனம் சோவியத் ரஷ்யா முழுவதையும் பயங்கரமான மரண வளையத்திற்குள் சிக்கவைக்க விரைந்தான் கோல்சாக்.

சமாராப் பாதையில் முதல் பேரடி கோல்சாக்கை எதிர்கொண்டழைத்தது. இங்கு அவனுடைய முனைப்பும் உத்வேகமும் குலைக்கப்பட்டன; ராணுவத்தின் குறிப்பிடத்தக்கதொரு பகுதி இங்கு நசுக்கப்பட்டது. இதிலிருந்து எதிரித் துருப்புகளை அதைரியப்படுத்தும் அலுவல் உடனே தொடங்கிவிட்டதெனலாம். அந்த முதல் அடிக்குப் பின்னர் அவனுடைய ராணுவ மூலபலம் ஆட்டம் கண்டுவிட்டது. தளவாட உதவியும் தாக்கீதும் முறையாக அனுப்பப் பெறுததால் போரில் அசமந்த கதியும் அயர்வும் ஏற்பட்டன. ஊபாவையும் சைபீரியாவையும் மடக்கிவிடுவதெனப் போட்டிருந்த அவனுடைய திட்டம் தரைமட்டமாக்கப்பட்டது. அதுபோல வெள்ளை ராணுவத்தின் நம்பிக்கையாகவும் பேராதரவாகவும் கருதப்பட்ட காப்பெல் ராணுவத்தினர் பெலெபேய்க்கு அருகில் போரிட்டுக்கொண்டிருந்தபொழுது புறமுதுகிட்டோடச் செய்யப்பட்டனர். எல்லா எதிரிப் படைகளையும் போல இந்தப் பகுதியும் சின்னபின்னப்படுத்தப்பட்டது. செஞ்சேனையினரின் அலையெழுந்த முன்னேற்றம், அவதிப்பட்ட எல்லா மக்களாலும் ஆர்வத்தோடும் அகக்களிப்போடும் எதிர்கொண்டு வரவேற்கப்பட்டது!

நாடெங்கும் இருந்த எல்லாச் சிறிய பெரிய ரயில் நிலையங்களெல்லாம் ஒரே நெரிசலில் அவதிப்பட்டன. சீசாக்களுக்குள் எறும்புகளை அடைத்து வைத்திருப்பதுபோல அனைத்தும் காட்சியளித்தன. மக்கள் கூட்டமும், தளவாடங்களும் ஊர்ந்தவண்ணமே இருந்தன; ஓய்வின்றி, ஒழிவின்றிச் சென்றபடியே இருந்தன. எந்தத் திசையிலிருந்து ரயில் வந்தாலும் அனைத்திலும் செஞ்சேனை வீரர்கள் தாவி ஏறிக்கொண்டனர். எல்லாத் திசையை நோக்கியும் விரைந்து சென்றனர். சிகரெட் முதல் வெந்நீர்வரை வேண்டிய பொருள்களை வாங்கிக்கொள்வதற்காக ஆங்காங்கு திரண்டு கிடந்த ராணுவத்தினரின் கூட்டத்தை அளவிடமுடியாது. பாலைவாங்கிப் பருகுவதும் ரொட்டியை வாங்கி ஓடி வருவதுமாக அலைமோதிக் கிடந்தனர். வெறிபிடித்த கூட்டம்போலக் கூச்சலிட்டுக்கொண்டிருந்தனர். போதிய வசதியில்லாமைக்காகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும், அமைப்பு முறைகளையும் சபித்தனர், திட்டினர். கிடைக்காத பொருள்களெல்லாம் வேண்டுமென்று கேட்டனர். வேறு எஞ்சின் வேண்டுமென்பார்கள். அவர்களுடைய தேவைக்கு ஓர் அளவே கிடையாது!



திடீரென்று ஒரு பெரும் மணியோசை கேட்கும்.

"எந்த மணி?"

"மூன்றாவது"

மூன்றாவது மணி யென்றதும் அனைவரும் ஓடிச்சென்று ரயில் பெட்டிகளுக்குள் ஏறி அடைவர். எல்லாவற்றையும் சபித்தவண்ணமே அடங்கிக் கிடப்பர்.

மூன்றாவது மணியும் அடித்துவிடும்; அடுத்த ஊதல் சத்தத்திற்குப் பின்னர் வண்டி புறப்பட்டுவிடும். வண்டியில் இடம் கிடைக்காத பல செஞ்சேனை வீரர்கள் வண்டிக்குப் பின்னாலே நெடுந்தூரம் ஓடிவருவர். பலர் பின்படியில் தொத்தியபடியே வண்டியின் மேலேயே ஏறிவிடுவர். ஓடிக்களைத்தவர்கள் பிடியைத் தளர்த்தியபடி தண்டவாளத்திலேயே அமர்ந்துவிடுவர்; அடுத்த வண்டி வரும்வரை ரயில் நிலையத்தில் மீண்டும் காத்துக் கிடப்பார்கள். ஓரிரு நாட்களாவது காத்திருக்க வேண்டியிருக்கும். எப்பொழுது அடுத்த வண்டி அந்தத் திசையில் போகும் என்பதை யாராலும் நிச்சயமாகச் சொல்ல முடியாது.

சாமான் வண்டிகளில் ஒரே கும்மிருட்டு இருண்டிருந்தது. மெழுகுதிரியோ விளக்கோ லாந்தரோ ஏதும் அங்

கில்லை. பூட்ஸுகளும், இதர சாமான்களும் அடைக்கப் பட்டிருந்த பெரும் பெட்டிகளில் படுத்தபடியே சிகரட் துண்டுகளைக் கரியாக்கிக்கொண் டிருந்தனர் பல செஞ்சேனை வீரர்கள். இரவு முழுமையும், நடுக்கும் குளிரில், போர்த்தப் போதிய வசதியுமின்றி இவ்விதமே சயனித்துக் கிடந்தனர். ரயில் நிலையத்தில் கிடந்த வண்டிகளை யெல்லாம் வெவ்வேறு பாதைகளுக்கு இழுத்து இணைத்தபொழுது இவர்களும் சவுகரியமான வண்டிகளுக்குள் அசையாமல் அடைந்து கிடந்தனர். சின்னஞ் சிறு சிம்னி விளக்குகளை வைத்திருந்தவர்கள் இருட்டில் சபித்தவண்ணம் இருந்தனர். கடைசியாக அந்தச் சாமான் வண்டி புறப்பட்டு விடும். இவர்கள் வேறு வண்டிக்கு மாறிக்கொள்ளுவார்கள். அப்புறம் வேறு வண்டிகள் புதிதாக நிலையத்திற்குள் நுழையும். அவற்றின் சன்னல்களைத் திறந்துகொண்டு தாவிப் பாய்வார்கள். இவ்விதம் இரவானாலும் பகலானாலும் ரயில் நிலையத்துச் சந்தடியும் கூச்சலும் மட்டும் ஓய்வதே யில்லை. உண்மையாகவே வேலை யிருப்பவர்களும், வேலை யில்லாதவர்களுமாகப் போவோரும் வருவோரும் நிறைந்திருந்தனர். பொழுதைப் போக்குவதற்காகவே இரவெல்லாம் அங்கு அடைந்திருந்தோரும் எண்ணற்றவர்கள்!

பல நாள் பயணத்திற்குப் பின்பு, பல தொல்லைகளுக்கும் துன்பங்களுக்கும் பிறகு, போராட்டத்திற்கும் ஓயாத சண்டைகளுக்குப் பிறகு, கடைசியாகத் தங்கள் இடத்தை அனைவரும் சென்றடைவார்கள். சாமான் வண்டிகளுக்குள் இருந்த தங்களுடைய சாமான்களைச் சன்னல்கள் வழியாக வெளியே எறிவார்கள். தங்களுடைய எல்லாச் சாமான்களையும் ஓரிடத்தில் குவித்துவைத்து, ஒரு நபரை உருவிய துப்பாக்கியுடன் நிறுத்திவைத்துப் பிற சாமான்களை இறக்கச் சென்றுவிடுவார்கள். குதிரைகள் எல்லாம் முறையாக வண்டிகளில் இருந்து இறக்கப்பெறும். அவை மிரண்டு ஓடிவிடாமல் இருப்பதற்காக அனைவரும் சூழ்ந்து நின்று



பாதுகாப்பார்கள். துப்பாக்கிகளும், பெரும் மோட்டார் வண்டிகளும் அடுக்கடுக்காக இறக்கப்படும். இங்ஙனம் அவர்களைச் சேர்ந்த எல்லாப் பொருள்களும் இறக்குமதியாகும். எல்லாச் சாமான்களும் இறக்கப்பட்ட பின்னர் வெறும் வண்டிகள் கவனிப்பாரின்றிக் கைவிடப்பட்டுக் கிடக்கும்!

காதைக் குடையும் பேரிரைச்சலும் இடிமுழக்கமும், குழப்பமும் எங்கும் எதிரொலிக்கும். எதற்கும் பணியாமல் தங்கள் இஷ்டம்போலக் கத்தித் திரிவார்கள். கடைசியாக "வரிசையாக நில்லுங்கள்!" என்ற ஆணை பிறக்கும். அனைவரும் தலைதெறிக்கும் வேகத்தில் ஓடிவந்து தத்தமக்குரிய பகுதிகளுடன் சேர்ந்து நிற்பார்கள். பீரங்கி வண்டிகளும் போர்க் குதிரைகளும் அணிவகுப்பின் பின்வரிசையில் நிறுத்தப்படும். குதிரைகள் கனைத்துக்கொண்டே யிருக்கும். பிறகு புறப்படுதற்குரிய வெடி முழங்கப்படும்; முறையாக அனைவரும் வரிசையில் செல்லுவார்கள். வழி நடைப் பாட்டுடன் ராணுவ நடைபோட்டுச் செல்லுவார்கள். நடக்க முடியாதவர்களும், விழுப்புண் பட்டவர்களும் வண்டிகளில் ஏற்றப்பட்டுக் கடைசியாகச் செல்லுவார்கள். சற்றுத் தூரம் சென்றதும் வரிசை கலைந்துவிடும், பாட்டு ஓய்ந்துவிடும், கூச்சலும் குழப்பமும் மலிந்துவிடும். பிறகு எல்லோரது மனத்திலும் ஒரே எண்ணந்தான் முந்தி நிற்கும்; அதுதான் தங்கி இளைப்பாறும் இடத்தைப்பற்றி! கடைசியாக ஓரிடத்தில் தங்குவார்கள். சிறிது நேரத்திற்குள் அயர்ந்து குறட்டை ஒலி முழங்கத் தூங்கிவிடுவார்கள் பலர். களைப்புறாத பலர் பாட்டுப் பாடியும், விளையாடியும், நடனமாடியும், அரட்டையடித்தும் இரவைக் கழிப்பர். இங்ஙனம் தங்கித் தங்கித் தங்கிப் பயணம் செய்வர். கடைசியில் அரண்களை யடைந்து கிடங்குப் போரில் ஈடுபடுவர்.

கிடங்கு வாழ்க்கை பின்னர் துவங்கும்.

புஷுலுக்கிற்கு வந்த தனிப்படை பொடாபோவ் வசம் ஒப்புவிக்கப்பட்டது ; சோரோசின்ஸ்காயாப் படையை சிஷோவ் தலைமையேற்று நடத்தினான். தளபதியை வெள்ளைப் படையினரிடம் பறிகொடுத்த வேறொரு படைக்கு ஷமாரின் தலைமையேற்றான். எல்லாப் பிரிவுப் படைகளும் ஒருசேரக் குவிக்கப்பட்டன. எல்லா ராணுவப் பகுதியும் முதல் தாக்குதலுக்குத் தயாராகத் துடித்து நின்றன.

"வெற்றி பெறுவது அல்லது வீழ்ந்து மடிவது" என்கிற அளவிற்கு முக்கியத்துவத்தை அந்த முதல் தாக்குதலுக்குக் கொடுத்திருந்தார்கள். "எதிரியின் படைப் பகுதிகளை நாம் கவர்ந்துகொள்ளாவிட்டாலோ, அல்லது வோல்காவிற்கு அப்பால் நாம் விரட்டப்பட்டாலோ, அல்லது வடக்கு முனையையும் தெற்கு முனை ராணுவத்தையும் இணைத்துக்கொள்ளும்படி கோல்சாக்கிற்கு இடமளித்து விட்டாலோ எல்லாமே தொலைந்துவிடும். சோவியத் ரஷ்யாவே நிலைத்து நிற்பதா, வீழ்ந்து அழிவதா என்ற நிலை ஏற்பட்டுவிடும்."

ஆம்! இதுபோன்ற எல்லா வகை அபாயங்களும் அப்போது ஒருசேரத் திரண்டிருந்தன ; எல்லோரது எண்ணத்தையும் விஞ்சிக் கேடு சூழ்ந்திருந்தது. மிகப் பெரும் வெள்ளைப் படையின் சிறு சிறு பொறிகளான துணைப்படைகள் ஏற்கெனவே வியாட்கா, காஷான், சமாரா, சராடோவ் முதலிய இலக்குகளை அடைந்துவிட்டன.

ஆனால் கோல்சாக்கின் முன்னேற்றத்திற்கு மிக இன்றியமையாத, முக்கியமான பாதை சமாரா வழியாகச் செல்வதுதான். சோவியத் ரஷ்யாவின் மையத்தைக் கவர இதுதான் சரியான குறுக்குப் பாதை. இதனாலேதான் அவனுடைய ரயில் பெட்டிகள் அனைத்திலும் "ஊபா-மாஸ்கோ!" என்றே பொறிக்கப்பட்டிருந்தன. இரண்டையும் இணைப்பதே அவனுடைய முதல் திட்டம்!

குதிரைப் படைகள் புஷுலுக்கில் ஏற்கெனவே குழுமத் தொடங்கின. கடைசித் தினங்களில் புகுருஸ்லானும் எதிரிகள் வசமாகிவிட்டது! நிலைமை வரவர மோசமாகிக் கொண்டிருந்தது. எதிரி மிக நெருங்கிச் சூழ்ந்தபடி முன்னேறிக்கொண் டிருந்தான். எல்லாத் திசையிலும் பேராபத்துக் கவிந்துகிடந்தது.



செஞ்சேனை தன்னுடைய முஸ்தீபுகளை இன்னும் முடித்துக்கொள்ளவில்லை. வேண்டிய எல்லா வசதிகளும், தளவாட உதவிகளும் வந்து சேரவில்லை; துருப்புகள் இன்னும் வந்தடையவில்லை. போதுமான துப்பாக்கிகளும், வெடி மருந்துகளும் கைவசமில்லை. உருகியோடிய பனிக் கட்டிகள் ராணுவ முன்னேற்றத்தைத் தடை செய்தன. என்றாலும் ஒரு நொடிகூடத் தாமதிக்க முடியாது. நாளுக்கு நாள் வானம் இருண்டுகொண்டே வந்தது. பயங்கரமான இடிக்காற்று வீசுவதற்குரிய சூழ்நிலை பெருகிக் கொண்டிருந்தது.

உற்சாகம் ஊற்றெடுக்கவும், துணிச்சல் தினவெடுக்கவும் போராட்டத்திற்குத் தயாராயினர் செஞ்சேனையினர் படைகளின் துப்பாக்கிகள் துடிதுடித்து நின்றன. ஒரே ஒரு சமிக்ஞைக்காகவே எல்லாம் காத்திருந்தன. அந்தச் சமிக்ஞை கிடைத்ததும் எல்லாத் துப்பாக்கிகளும் கோல்சாக்கிற்கு எதிராகப் போர்முனையில் அனல் கக்கும்; பயங்கரப் போரில் தம்முடைய ஆற்றலைப் பரீட்சிக்கும்!

மிக முக்கியத்துவம்வாய்ந்த மாபெரும் போராட்டம் துவங்கிய நாள் : ஏப்ரல் மாதம் இருபத்தெட்டாம் தேதி; மறக்கவியலாத சிறப்பை அந்த நாள் பெற்றுவிட்டது. அன்றுதான் கோல்சாக்கிற்கு எதிரான உயிர்ப்போராட்டத்தைச் செஞ்சேனை துவக்கிற்று!

# 9

# போர்முனைக்குப் புறப்படு முன்

இவ்வளவு கடும் போராட்டச் சூழ்நிலையிலும் புஷ்லுக்கைவிட்டு வெளியேறும் எண்ணம் எவர்க்கும் ஏற்படவில்லை. மாறாக எல்லாப் படைகளும் தளவாடங்களும் குவிக்கப்பட்டு எதிர்த் தாக்குதலுக்கு முஸ்தீபு செய்யப்பட்டது. புஷ்லுக்கிலிருந்த கட்சிக் குழுவும், செயற் குழுவும், பிற தொழிற் சங்கக் கூட்டங்களும் ஒன்றாக இணைந்து தங்களுடைய ஒருமித்த உதவியை யெல்லாம் செஞ்சேனையினர்க்குப் பக்க பலமாகக் கொடுப்பதென்று முடிவுகட்டினர். "எல்லாமே போர்முனைக்கு!" என்ற வெறிக் கூக்குரல் எங்கும் எக்காளமிட்டது. நூற்றுக் கணக்கான பிற போரிலக்குகளைப்போலவே இங்கும் அந்தப் பேரொலி கடலாய் மிகுந்தது!

புஷ்லுக் அபாயச் சூழ்நிலையில் அச்சுறுத்தப்பட்டது. நகருக்குச் சில கற் தொலைவிற்குள் எதிரிப் படைகள் நெருங்கிவிட்டன. எல்லாத் திசைகளிலும் இருந்து, குறிப்பாக புகுருஸ்லான் பகுதியிலிருந்து தனிப்பட்ட சோவியத்து உறுப்பினர்களும், கட்சி அங்கத்தினர்களும் இங்கு திரண்டோடி வந்திருந்தனர். அவர்களில் பெரும்பான்மையினர் கோல்சாக்கியப் படைகளின் பார்வையில் படாமல் தப்பிவந்தவர்களாயிருக்க வேண்டும். அல்லது உள்ளூர் வெள்ளைப் படைக் கருங்காலிகளால் காட்டிக் கொடுக்கப்படாமல் எஞ்சியவர்களா யிருக்க வேண்டும். அவர்கள் அனைவரும் வெகு விரைவில் ராணுவத்தின் வீரர்களாகப் பதிவு செய்துகொண்டு மீண்டும் தங்கள் உரிமைப்



போராட்டத்திற்கு முந்துற நின்றனர். பலர் தாங்கள் சேர்ந்த படைகளை விட்டுவிலகாமல் பல நகர்களையும் கடந்து இங்கு வந்து சேர்ந்தனர்.

இரத்தப் பெருக்கமும், ஈடற்ற உணர்ச்சி யோட்டமும் பெருகி நின்ற குழப்பமும், மனத்துணிவும் நிறைந்த இத்தகைய தொரு சூழ்நிலையில்— ஒரு புதிய யுகமே உருவாவது புலப்பட்டது—நாட்டரசியலிலும், வாழ்க்கைத் துறையிலும் ஒரு புதிய சகாப்தம் உருவாகப் போவதின் சாயல் தெளிவாயிற்று. படைப்புறப்பாட்டிற்கு வேண்டிய எல்லா இறுதி உத்தரவுகளும் தரப்பட்டன, எல்லாப் படைப் பகுதிகளும் ஒன்றாக இணைக்கப்பட்டு, ஒரு குறிப்பிட்ட முனையை நோக்கி எதிர்த் தாக்குதலுக்கு உந்தப்பட்டன. வழக்கமாக அமைதியாகத் தூங்கி வழிந்துகொண்டிருந்த நகரத் தெருக்களில் தளவாட வண்டிகளின் இரைச்சல் காதைச் செவிடாக்கிற்று. மோட்டார் சைக்கிள்கள் உறுமிச் சென்றன; குதிரைப் படை பாய்ந்து சென்றது; வீரர்கள் அணிவகுப்பு முடிவில்லாத தொடர்போல நீண்டு சென்றது.

இரண்டு முக்கிய தெருக்களின் சந்திப்பு முனையில் ராணுவத் தலைமைக் காரியாலயக் கட்டடங்கள் அமைந்திருந்தன. இந்தக் காரியாலயச் சுற்றுப்புறத்தில் இரவும் பகலும் ஓய்ச்சலின்றி ஏதேதோ சந்தடியாகவே இருந்தன. சலனமும் சத்தமும், அவசரமும் ஆத்திரமும் நிறைந்த அக்கால வாழ்க்கை முழுவதும் ஒருசேர இங்கு குவிக்கப்பட்டுள்ளதுபோலத் தோன்றியது.

சப்பாயேவும், பியோடாரும்—இப்பொழுது நெருங்கிய நண்பர்கள், இணைபிரியாத ஊழியர்கள். தங்கள் அறைக்குக்கூடத் திரும்பாது, தலைமைக் காரியாலத்திலேயே அலுவலில் ஈடுபட்டிருந்தனர். அவர்களுடைய படைப் பகுதிகளைப்பற்றிய செய்திகளும் அறிக்கைகளும் வந்த வண்ணமாயிருந்தன. டெலிபோனில் இடையறாத பேச்சுக்

கள் கேட்டபடியே யிருந்தன ; யார் யாரோ, ஏதேதோ பேசிக்கொண் டிருந்தனர். போதாக் குறையைப்பற்றித் தான் மிகுதியான பேச்சு அடிப்பட்டது. அந்தச் சமயத்தில் எவ்வளவுக்குத் தேவை விரிந்துகொண் டிருந்ததோ அதைப் போலவே போதாக்குறையும் பெருகிக்கொண்டே யிருந்தது. படைப் பகுதிகளிலிருந்து இது வேண்டும், அது வேண்டும் என்ற கூக்குரலும், இல்லை அவ்வளவுதான், உள்ளதைக்கொண்டே முன்னேறுக என்பது போன்ற சமாதானமும், பயமுறுத்தலும், கட்டாயமும், கண்டிப்பும் எல்லாப் பக்கமும் கேட்டன. "பல்வேறு வகைத் தேசியப் பொருளாதாரக் குழுவினரைப் பொறுத்த மட்டில் போதிய தேவையை உணர்த்திவிட வேண்டு மென்றும், வேண்டிய தேவைகள் எல்லாம் ஒரே விநாடியில் மலைபோலப் பெருகி விடுமென்றும், சப்பாயேவிற்கு நன்கு தெரியும். எங்கேனும் இருபது முப்பது வண்டிகள் ஓரிடத்தில் நிற்கின்றன வென்றோ, நான்கு பீப்பாய் வண்டி மசி யெண்ணெயோ, நூறு கஜம் துணியோ, தொப்பிகளோ, பூட்ஷுகளோ, கம்பளிப் போர்வைகளோ, அல்லது வேறு எந்தப் பொருளோ எங்கேனும் இருப்பதாகவோ தவகல் வந்தாலும் சரி, அரைகுறையாகக் கேள்விப்பட்டாலும் சரி, சப்பாயேவ் ஆத்திரத்தில் தாவிக் குதிப்பான். அங்குள்ள அதிகாரிகளிடம் சென்று அத்தனை பொருள்களையும் உடனே ராணுவத்திற்குப் பகிர்ந்தளிக்குமாறு கட்டாயப்படுத்துவான். "எல்லாம் போர்முனைக்கு" என்ற கோஷத்தை அப்படியே நடைமுறைக்குக் கொணர முனைந்துவிடுவான். இங்ஙனம் ஆங்காங்கு சிதறித் தேங்கியிருந்த பொருள்களை யெல்லாம் கொண்டு பல்லாயிரக் கணக்கான செஞ்சேனை வீரர்களது தேவைகளைப் பூர்த்தி செய்துவிட முடியு மென்று சப்பாயேவ் கருதினான். நாடு முழுவதும் நிலவிய பொருளாதாரச் சீர்குலைவையும், தவிர்க்க முடியாத பற்றாக்குறையையும் இவனே பல முறை பலர்க்கு



எடுத்துச் சொல்லுவான். ஆனால் தன்னைப் பொறுத்த மட்டும் இதைக் கொஞ்சமும் புரிந்துகொள்ளாமல் தன் மனம் போன போக்கில் பேசிக்கொண்டே யிருப்பான். இந்தச் சந்தர்ப்பங்களில் எல்லாம் கிளிக்கோவ் தலையிட்டு நிலையைத் தெளிவுபடுத்திய பின்னர்தான் ஓரளவாவது சமாதானம் அடைவான். ஏதாவது குறிப்பிட்ட சில விஷயங்களை மட்டும் தெளிவாக விவாதித்து நிலையை உணர்த்திவிட்டால் போதும்; சப்பாயேவ் பேசாமல் கேட்டுக்கொள்ளுவான். கொஞ்சமும் முணுமுணுக்காது கேட்டுக்கொள்ளுவான். அவனுடைய அபிப்பிராயத்தைத் திருத்திக்கொள்ளுமாறோ, கொண்ட கருத்தைக் கைவிடுமாறோ, பேசியது தவறென்று ஒப்புக்கொள்ளுமாறோ, அந்தத் தவறை வெளிப்படையாக ஒப்புக்கொள்ள வேண்டு மென்றோ—சப்பாயேவை ஒப்புக்கொள்ளச் செய்யவே முடியாது—தன் தலை போனாலும் அந்த நிலைக்கு வரவே மாட்டான். அவனைத் திருத்த வேண்டு மென்றால் எல்லா விஷயங்களையும் தர்க்க ரீதியாக விளக்கினால்தான் மசிவான். இல்லாவிட்டால் யார் என்ன சொன்னாலும் இம்மியும் ஏற்றுக்கொள்ள மாட்டான்.

உறுதியும் தீர்மானமுமான சொற்களையே விரும்பும் இயல்பினன் சப்பாயேவ். அதைவிடத் துணிவும், தீர்மானமும், புத்திசாலித்தனமும் நிறைந்த செயல்களையே அவன் விரும்புவான் !

இரண்டு நாட்களில் சிஷோவின் படை தாக்க வேண்டும். அவனுடைய படை புஷுலுக்கிலிருந்து நாற்பது கல் தொலைவிற்குள்ளேயே இருந்தமையால் அதையும் சென்று கவனிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

தொடர்ந்த போராட்டங்களால் துவைந்துபோன உடல், இரு முறை படுகாயம்பட்டு நலிந்த தேகம், எதையும் அமைதியாக எண்ணவோ, பேசவோ முடியாத உள்ளப் பாங்கு—இத்தகையவன் அந்தத் துணைப்படைத் தளபதி

சிஷோவ். இருபத்து இரண்டு வயதே கடந்த அவன், கிழவன் போலத் தோன்றினான்.

1917க்கு முன்னால் தன்னுடைய பண்ணை வேலைக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டுச் செஞ்சேனையில் சேர்ந்தான் சிஷோவ். விதிவசத்தால் சப்பாயேவின் தொடர்பு அவனுக்கு ஏற்பட்டது. சிஷோவின் விவேகத்தையும், துணிவுள்ள நடவடிக்கையையும், வியத்தகும் வீரத்தையும் சப்பாயேவ் பெரிதும் விரும்பினான். ராணுவச் சாரணப் படைகளின் துணைத் தளபதியாக அவனை நியமித்தான் சப்பாயேவ். சிஷோவும், இன்னும் சிலரும் சேர்ந்துகொண்டு தூங்கி வழிந்த கொஸாக்கியர்கள்மீதும் செக்கோஸ்லோவேகியர்கள்மீதும் திடீரெனப் பாய்ந்து, ஆயுதங்களைப் பிடுங்கிக்கொண்டு பலரைக் கைது செய்து திரும்புவர். இம்மாதிரிச் சம்பவங்களில் ஈடுபட்டுப் பழகிப் போயிருந்த சப்பாயேவிற்கு இவையெல்லாம் ரொம்பவும் பிடித்திருந்தன. ஒரு முறை இர்கிஷ் நதிப் படுகையில் உள்ள குஷிகாவில் செக்கோஸ்லோவேகியப் படைகளுடன் பொருதியபொழுது சிஷோவின் காலில் குண்டு ஒன்று பாய்ந்துவிட்டது. பல நாள் படுக்கையாகக் கிடந்து பின்னர் குணமடைந்தான். காயம் ஆறிய மறு கணமே மீண்டும் போராட்டத்தில் இறங்கிவிட்டான்! மற்றொரு போரில் கையில் குண்டு பாய்ந்தது. காயம் பட்டதை ஒரு பொருட்டாகவே அவன் கருதவில்லை. கடுமையான சத்திர சிகிட்சை செய்து, குண்டை வெளியே எடுத்தபோது எத்தகைய உபாதையாலும் வருந்தவில்லை. உயிர் நடுக்கும் இந்த வாதனையெல்லாம் அவனுக்குச் சர்வசாதாரணம். ஆனால் போர்முனையில் போராடிக்கொண்டிருக்கும் நண்பர்களை விட்டுப் பிரிவது மாத்திரம் அவனால் பொறுக்க முடியாத காரியம்; உயிர்போனாலும் தானாக நகர மாட்டான். குருதி தோயப் படுக்கையில் அழுக்கி வைத்திருந்தாலும் அரைகுறை நலத்துடன் போர்முனைக்கு வந்துவிடுவான்.



உரால்ஸ்க் முனையில் நடந்த கடுமையான தொடர்ந்த போராட்டங்கள் அவனுடைய வல்லமையைக் குறைத்துவிட்டன, ஏற்கெனவே கட்டுவிட்டுப் போயிருந்த நரம்புகளை நெகிழச் செய்துவிட்டன. அவனுடைய உடலெல்லாம் மாறிவிட்டது; உறுப்புக்களெல்லாம் பொலிவிழந்துவிட்டன. முகமெங்கும் சுருக்கம்; விரிந்த மூக்கு, கொடிய மிருகம் போல அனல் கக்கிற்று. சிக்கல் பிடித்த தலைமயிர் அலங்கோலமாய் விரிந்து கிடந்தது. விழிகள் உணர்ச்சியற்று வெளிறித் தோன்றின. வலிய, பாட்டாளிக் கரங்கள் வன்மையாயும், கரடுமுரடாயும் இருந்தன. அவனுடைய சட்டையின் கழுத்துப் பட்டைகள் எப்போதும் திறந்தபடியே இருந்தன. மூச்சுத் திணறுபவன்போல நீண்ட சுவாசம் விட்டுக்கொண்டிருந்தான். நடுங்கும் கரகரப்பான குரலில் பேசினான். அவ்விதம் பேசும்பொழுது உடலெங்கும் நடுங்க, குழறிக் குழறிப் பேசினான். சிஷோவ் தன்னுடைய தகுதியறிந்தவன்; அத் தகுதிக்கேற்ப நடந்துகொள்பவன். தன்னுடைய படையின் பிரதமதளபதிக்கெதிராகக்கூடத் தன் கருத்தை வலியுறுத்தத் தயங்காதவன்.

ஸ்டெப்பி வெளியெங்கும் எதிரொலித்து நின்ற சப்பாயேவின் பெரும் புகழையும், இயல்பான கீர்த்தியையும் கேள்விப்பட்டு, சிஷோவும் ஓரளவு கலங்கியிருந்தான்; அவன் உள்ளத்தில் சலனமும் துடிப்பும் ஏற்பட்டன. பொறாமையால் அவன் தலை கனத்தது. பேராசையாலும் அளவு கடந்த நம்பிக்கையாலும் எல்லையற்ற விருப்பத்தாலும் அவன் விம்மினான். "நான் இன்னொரு சப்பாயேவாக ஏன் ஆக முடியாது?" என்ற எண்ணமும் உணர்ச்சியும் அவனிடம் பெருகியமையால், சப்பாயேவுடன் அவன் கொண்டிருந்த தூய உறவும், பண்புள்ள தொடர்பும் மங்க ஆரம்பித்தன; பிரிக்க வியலாத நட்பில் தீய மேகங்களாகக் கவிந்தன. சிஷோவிடம் ஏற்பட்ட இந்த மாறுதலைச் சப்பாயேவும் புரிந்துகொண்டான். என்றாலும்கூட, சிஷோவ்

வேறு டிவிசனுக்கு மாறிப் போவதை அவன் ஏற்றுக் கொள்ள வில்லை. தன்னுடைய சொந்தப் புகழும் பெருமையும் சிஷோவ் போன்றவர்களால்தான் நிலைக்கிறதென்றும், வளர்க்கப்படுகிறதென்றும் சப்பாயேவிற்கு நன்கு தெரியும். அதைப் போலவே சப்பாயேவைவிட்டுப் பிரிய, சிஷோவும் விரும்பவில்லை. சப்பாயேவின் புகழ்ச் சூரியக் கிரணங்களின் ஒளிக்கற்றைகள் தன்மீதும் ஓரளவு வீழ்வதைப் பெருமையாகக் கொண்டான். புகழும் செம்மையும் நிறைந்த பெரும் பாதையில் தம்மை யெல்லாம் வெகு விரைவாக இட்டுச் செல்லும் சப்பாயேவின் பாணியையும் திறத்தையும் ஏற்றுக்கொண்டான். என்றாலும் பிரிந்துவிட்டார்கள்!

இன்றைய அவர்களது சந்திப்பு முன்பு போலவே நட்புத்திறத்துடன் அமைந்தது. ஒரு நிமிடத்தையும் வீணாக்காது ஒரு மேசையருகில் அமர்ந்து தேசப்படத்தை முன் வைத்தபடி உத்தரவிட ஆரம்பித்தனர். தந்தியடித்தனர், டெலிபோனில் பேசினர். ரெஜிமெண்ட் தளபதிகளுக்கும், பிரதம கமிசார்களுக்கும், மருத்துவர்களுக்கும், அரசியல் இயக்கக் கமிசார்களுக்கும் தூதுவர்கள் அனுப்பப் பட்டனர். போரின் பரிபூரண நிலைமை தெளிவாக்கப் பட்டது. அசம்பாவிதச் சம்பவங்கள் ஏற்பட்டால் சமாளிப்பதற்குரிய திட்டங்கள் எல்லாம் வகுக்கப்பட்டன. சில்லறைச் சமாச்சாரங்கள்கூட உன்னிப்பாய்க் கவனிக்கப் பட்டன. போர்ச் சமயத்தே அணிவகுப்பில் பாட வேண்டிய பாடல்கள் அனைத்தும் எழுதப்பட்டன. எழுதிய படியே அழகாகப் பாடினால் எதுவும் தப்பிவிடாது. அவ்வண்ணமே பாடும் திறமை கொண்டவன் சிஷோவ்; இப்பொழுது சிஷோவும் சப்பாயேவும் அமர்ந்து போர்த்துறை விவகாரங்களை அலசி விவாதித்துக்கொண் டிருக்கின்றனர்; பல விஷயங்களில் இருவருமே ஒத்துப்போக மாட்டார்கள்; ஒருவரை ஒருவர் எச்சரித்துக்கொள்ளுவார்கள். என்றாலும் கடைசியில் ஒருமுகமான, எல்லோருக்கும் இசைவான முடிவிற்கே வருவார்கள்.



"இப்பொழுது நாம் கட்டாயம் ரெஜிமெண்டுகளைப் பார்க்க வேண்டும்; சில விஷயங்களை நாம் அவர்களுக்கு விளக்க நேரிடலாம்" என்றான் சப்பாயேவ்.

"சரி" என்றபடி சிஷோவ் எழுந்தான்.

தன்னுடைய துணைத் தளபதிகள் அனைவரையும் அழைத்து, அவரவர்களுடைய படை வீரர்களை உடனடியாக அங்கிருந்த திரைப் படக் கட்டடத்தில் கூடுமாறு ஆணையிட்டான் சிஷோவ். தோழர் சப்பாயேவ் பேசப்போவதாகவும், அனைவரும்கேட்கத் தயாராகும்படியும் கத்தினான்!

சப்பாயேவ் பேசப்போகிறான், கட்டாயம் வரவேண்டுமென்பதை ஏன் இவ்வளவு உரக்க அவன் தெரிவிக்க வேண்டும்? சப்பாயேவ் எப்படிச் சொற்பொழிவாற்றுவான் என்பதைத் தெரிந்து கிண்டலாகச் சொன்னானா, அல்லது இயல்பாகவே சொன்னானா என்பதை அவனுடைய குரலிலிருந்து தெளிவாக்க முடியவில்லை. கிண்டல் ஒலி போலவும் கட்டளை போலவும் ஒரே மாதிரியாகத்தான் தோன்றியது.

அரை மணி நேரத்திற்குள், அந்தப் பெரிய, ஆனால் வசதியற்ற கட்டடம் முழுமையும் செஞ்சேனை வீரர்கள் குழுமினார்கள். இடம் கிடைக்காது, பலர் வெளியிலே நின்றுகொண டிருந்தார்கள். மேடைமீது ஒரு மேசை போடப்பட்டிருந்தது. அதன்மீது வழக்கம் போலக் கண்ணாடி டம்ளர்களும், மேசை மணியும் இருந்தன. சப்பாயேவ் மேடைமீது தோன்றியதும் அனைவரும் தொண்டைக் கரகரப்பை நீக்குவதுபோலக் கனைத்தபடி தங்கள் தொப்பிகளை வலது புறம் சரிப்படுத்தி மாட்டிக்கொண்டனர். தங்களைச் சரியான ராணுவ வீரர்களாகக் காட்டிக்கொள்ள விரும்பினார்கள். "தோழர்களே!" என்ற முதல் சொல்லைக் கேட்டதும் அனைவரும் நெருக்கி யடித்த வண்ணம் அடுத்து வரும் சொற்களை ஆழ்ந்து கவனிக்கத் தொடங்கினர்.

சப்பாயேவ் பேசத் தொடங்கினான்: "தோழர்களே! கோல்சாக்கிற்கு எதிராக நாம் அனைவரும் புறப்படப் போகிறோம். நாம் அனைவரும் சேர்ந்து ஸ்டெப்பி வெளியிலே கொஸாக்கியர்களைப் புறமுதுகிட்டோடச் செய்திருக்கிறோம். நாம் வெற்றியிலே பழகிப் போனவர்கள். அட்மிரல் கோல்சாக் நம்மிடமிருந்து எவ்வகையேனும் தப்பிவிட முடியாது?"

இதுவரை அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த கூட்டத்தினரால் இதற்கு மேல் தங்கள் ஆர்வத்தையும் உற்சாகத்தையும் அடக்கிக்கொள்ள முடியாமல் கைகொட்டிப் பெரு முழக்கமிட்டனர். சில சமயங்களில் உணர்ச்சியின் சிகரத்தையே எட்டிவிட்டாற் போன்ற பேரொலி எழுந்தது. இரண்டு நிமிடங்களில் விலைமதிக்க முடியாத சொற்கள் சரமாரியாகப் புறப்பட்டு உணர்ச்சித் தீயைக் கிளறிவிட்டன. சப்பாயேவிடம் நல்ல சொல்லோட்டம் இருந்தது; ஏற்ற சமயத்தில் தகுந்த வகையில் அச் சொல்லாட்சியைப் பயன்படுத்த அவன் தவற மாட்டான். அச் சொற்களெல்லாம் கவர்ச்சியுடையன இல்லையென்றாலும்கூடக் கேட்டுக்கொண்டிருந்த பண்படாத, ஆர்வமுடைய, இரக்கம் நிறைந்த வீரர்களிடையே எதிர்பார்த்த மாறுதலைத் தோற்றுவிக்கத் தவறவில்லை.

"தோழர்களே! உங்களுடைய பழைய பிரதம தளபதிகளைப் போன்றவனில்லை நான்! போர்முனைக்கு முன்னூறு மைல்களுக்கு அப்பாலிருந்தபடியே ஒரு சிறிய மேட்டை எப்படியும் பிடித்துவிடும்படி உத்தரவிட்டுக் கொண்டிருப்பார் அந்தப் பழைய பிரதம தளபதி. அந்த மேட்டைச் சுற்றிலும் கம்பி வேலி வளையப்பட்டிருப்பதால் போதுமான தளவாட வசதியின்றிக் கைப்பற்ற முடியாதென்று நீங்கள் நிலைமையைத் தெரிவித்தால் அந்தக் கிழட்டுப் பிரதம தளபதி வேறொரு உத்தரவை அனுப்புவார்; "உங்களுக்குத்தான் குட்டிக்கரணம் முதல் உயரம் தாண்



டுவதுவரை எல்லா மற்போர் முறைகளும் சொல்லித் தரப்பட்டுள்ளனவே? உங்களுக்குத்தான் தாவிக் குதிக்கத் தெரியுமே? அப்படியானால் கம்பி வேலியைத் தாண்டிக் குதிப்பதற்கு என்ன கேடு வந்தது?" என்று படபடப்பார்.

இந்த இடத்தில் கூட்டத்தவரிடையே சிரிப்பலை மோதும்; பேச்சாளருடைய கண்டனக் கருத்துக்களைத் தாமும் ஏற்று ஆமோதிப்பர்... அவர்கள் ரசிக்கக் கூடிய முறையில் அந்த நகைச்சுவை அமைந்திருந்தது.

தன்னுடைய உதடுகளைப் பிதுக்கியபடி, மீசையை முறுக்கியவண்ணம் சப்பாயேவ் தொடர்ந்தான்: "ஆனால் நான் அதுபோன்ற பிரதம தளபதியில்லை. நான் எப்போதும் உங்களுடனேயே எல்லோர்க்கும் எதிரில் இருக்கிறேன். ஏதேனும் ஆபத்து வருவதாயிருந்தால், என்னைத்தான் முதலில் அது சநிக்க வேண்டும்-முதல் குண்டு என் மேல்தான் பாயும். இறப்பதென்பதும் அவ்வளவு எளிதன்று. யார்தான் செத்துமடிய விரும்புவார்கள்? அதனால்தான் எல்லோர்க்கும் பாதுகாப்பாகவும், ஒன்றுமில்லாமைக்காக நான் கொல்லப்படாமலும் இருக்கக்கூடிய ஓரிடமாக நான் தேர்ந்தெடுப்பதற்குரிய காரணம் இதுதான். நாம் போராடும் முறையே இதுதான் தோழர்களே!"

அவனுடைய பேச்சு முழுவதும் ஒரே மாதிரியாகவே இருந்தது. ஏற்றத்தாழ்வற்ற குரல், அதே உணர்ச்சிமுறை. ஆனால் நீண்ட நேரம் வளவளவென்று பேசுவதை ஒருபோதும் விரும்ப மாட்டான். அவனால் நீண்ட நேரம் பேச முடியாதென்பதன்று. அதற்குரிய காரணம். பேச்சின் பயனை அவன் நன்குணர்ந்திருந்ததே சரியான காரணம்.

சப்பாயேவ்பேசி முடிந்ததும், சிஷோவினால் நன்குபேச முடியவில்லை. பியோடார்கூட அதிகமாக உணர்த்தக் கூடிய அளவு பேசிவிடவில்லை. பேச்செல்லாம் முடிந்த பிறகு ஏதோ வேறு நிகழ்ச்சிகள் இருந்தன. இத்தகைய நிகழ்ச்சிகள் போர்முனை முகாம்களில்தான் நடக்க முடியும்.

கடைசிப் பேச்சாளர் தன்னுடைய இறுதி வார்த்தையை முடித்து இறங்கியதும் கூட்டத்தில் நிசப்தம் நிலவியது. எல்லோரும் அடுத்த சொற்பொழிவாளரை எதிர்பார்த்திருந்த சமயத்தில் அக்கார்டியன் என்னும் வாத்தியப் பெட்டியின் இன்னிசை எழுந்தது. அந்த வாத்தியத்தை வாசித்தவன் எங்கிருந்து வந்தான், எப்பொழுது மேடை மீதேறினான். என்பதெல்லாம் யாருக்கும் தெரியாது. ஆனால் அவன் யாரோ ஒருவருடைய உத்தரவைப் பெற்றுத்தான் மேடைக்கு வந்திருக்க வேண்டும். அவன் அபூர்வமாக வாசித்தான். கேட்டவர் கால்களெல்லாம் தன்னையறியாமலே கூத்தாடத் தொடங்கும்வண்ணம் அற்புதமாக மீட்டினான். சப்பாயேவ் தன்னையும் மறந்து மேடையின் நடுவில் நின்று ஆடத் தொடங்கிவிட்டான். முதலில் மெதுவாக ஆடியவன், வாத்திய இன்னிசைச் சுருதி ஏற ஏறச் சுழன்று சுழன்று ஆட ஆரம்பித்தான். இதைக் கண்ட பல்லாயிரக் கணக்கான வீரர்கள் தம்மையும் மறந்து கைகொட்டி ஆர்ப்பரித்தனர். சப்பாயேவே தன் இசைக்கேற்ப ஆடுகிறானே என்ற மகிழ்ச்சியில் அந்த வியாட்காவிலிருந்து வந்திருந்த சிறந்த அந்த வாத்தியக்காரன் அமுத கானத்தைப் பொழிந்துகொண்டிருந்தான்.

கடையாக ஒரு முத்தாய்ப்பு வைத்தபொழுது, ஒரு புறத்தே தாவிக் குதித்தான் சப்பாயேவ். ஒரு அழகான கைக்குட்டையை எடுத்து வியர்வை படிந்திருந்த தனது ஒளி முகத்தைத் துடைத்துக்கொண்டான்.

இந்தக் களியாட்டம் ஒரு மணி நேரம் நடந்தது. பலர் தனித் தனியாகவும், பலரோடு இணைந்தும் மேடையிலேறி ஆடிப் பழகினர். நெடு நேரம் ஆடிக்கொண்டிருந்தவர்கள், பிறருக்கு இடம் தருவதற்காக ஓட்டப்பட்டனர்.

களியாட்டம் முடிந்ததும் கதை சொல்லும் கட்டம் தொடங்கியது. அவர்கள் சொன்ன அபத்தக் கதைகளைக் கேட்டால் மேல்மூச்சுக் கீழ்மூச்சு வாங்கிச் சாகவேண்டியது



தான். அந்தக் காலத்தில் நல்ல கதைப் புத்தகங்களோ, வரலாற்றுத் தொகுப்பு நூல்களோ, புரட்சிப் பாடல்களோ போர்முனைக்குக் கிட்டுவதில்லை. இதனால் செஞ்சேனையினர் தங்களது சொந்தச் சரக்கான நாட்டுப்புறப் பாடல்களிலேயே தங்கள் கைவரிசையைக் காட்டத் துவங்கினர். கதைகள் முடிந்ததும், பாடகர்கள் தொண்டை கிழியக் கத்தினார்கள். பாட்டின் நுணுக்கமே தெரியாமல் வாய்க்கு வந்தபடியெல்லாம் இராகம் போட்டுப் பாடினார்கள்.

உயர்ந்தவை தரமானவை என்றில்லாவிட்டாலும்கூட இந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் நெஞ்சம் கவரும் தன்மையனவாய் அமைந்தன; அயராத அணிவகுப்பிற்குப் பின்னர், போர்முனைக் கடும் வாழ்க்கைக்குப் பிறகு, உயிரோட்டமோ, களிப்போ இல்லாத அரைப்பட்டினி வாழ்க்கையில் ஈடுபட்டிருந்த எல்லா வீரர்களுக்கும் இந்த நிகழ்ச்சிகள் தேனமிர்தமாகத் திகழ்ந்தன; கற்கண்டாய் இனித்தன. அந்த நிகழ்ச்சிக்குப் பின்னர், அவர்களுடைய கூடாரங்களிலும், தெருக்களிலும், சாப்பாட்டு அறையிலும், பிற இடங்களிலும் சந்தித்தபோதெல்லாம் இதைப்பற்றியே பேசிக்கொள்ளுவார்கள். "சப்பாயேவ் எத்தகைய தீரன், தலைசிறந்த தளபதி, தங்கள் மனங்கவர்ந்த மாவீரன்!" என்பதே அவர்களுடைய பேச்சிலும் எண்ணத்திலும் பின்னணியாய் இலங்கும். பொழுது புலர்ந்தால், உறைந்த பனிக்கட்டிப் பாதைகளின் குறுக்கே படை வீரர்களைத் தலைமைதாங்கி நடத்திச் சென்று போர்முனையில் துணிவோடு ஈடுபடுகிறான்; அயராது முன்னணியில் உழைக்கிறான்; மாலை நேரத்தில் எல்லோருடனும் சேர்ந்து வாத்திய இசைக்கேற்றபடி நாட்டியமாடுகிறான்!

உண்மையாகவே, அந்தச் சமயத்தில் அந்த மாதிரியான ஒரு தளபதியே தேவைப்பட்டான். அந்தப் பகுதி விவசாய மக்களுடனே தோன்றி, வாழ்ந்து, உயர்ந்து, அவர்களுக்கேயுரிய எண்ண வோட்டங்களையும், பண்புகளையும் பிரதி

பலிக்கக் கூடிய அத்தகையதொரு தளபதியே அவசியம் தேவைப்பட்டான். மக்களின் தரம் உயர்ந்து அனுபவமும் பெருகிவிட்டால் இத்தகைய தளபதி வேண்டியிருக்காது. இவானோவா-வோஷ்னெஸென்க் நெசவாளர்களின் ரெஜிமெண்ட் போன்ற படைகளுக்குச் சப்பாயேவ் போன்ற தளபதியே வேண்டியதில்லை. சப்பாயேவினுடைய ஆழமற்ற சொற்பொழிவு அவர்களிடம் எடுபடாது. அவர்களிடம் பேய்க்கூச்சலைவிட அமைதியான அறிவுரையே நல்ல விளைவையும் மாறுதலையும் ஏற்படுத்தும். நாட்டியம் ஆடுவதைவிடத் தொடர்ந்து சொற்பொழிவுகளைக் கேட்பதைத்தான் அவர்கள் விரும்புவார்கள். அப்படியே சப்பாயேவ் பேசினாலும் அதைப் பிரமாதமாகக் கருதி அவனுக்குத் தனிச் சிறப்பேதும் தர மாட்டார்கள்; கைதட்டி ஆரவாரித்து மகிழமாட்டார்கள், சப்பாயேவைத் தங்களுக்குச் சமானமானவனாகவே மதிப்பார்கள். இந்தக் காரணத்திற்காகத்தான் இவானோவா நெசவாளர்களின் படைப் பகுதியைச் சென்று பார்க்கச் சப்பாயேவ் பெரிதும் விரும்பவில்லை!

அந்த ஊரிலிருந்த படைப்பகுதி அரசியல் அலுவலகத்திற்குள் பியோடார் நுழைந்தான். அங்கிருந்தோர் தன்பால் கொண்டிருந்த இணக்கமற்ற மனோநிலையையும் பொருமைப் போக்கையும் அவன் புரிந்துகொண்டான். அங்கிருந்த அத்தனை பேரும் சப்பாயேவின்மீது கொண்டிருந்த வெறுப்பை, "சப்பாயேவின் கமிசார்" என்று இவன் மேலும் திருப்பிவிட்டனர் என்பதை உணராமல், 'என்ன கோளாறு?' என்று தனக்குள்ளே வியந்துகொண்டான் பியோடார்.

அது மட்டும் அல்ல அரசியல் அலுவலகத்தில் உள்ள அனைவரும் கிளிக்கோவிற்கும் சப்பாயேவிற்கும் இடையேயுள்ள நெருங்கிய நட்பை நன்கு அறிவார்கள்; அதை மிகச் சாதாரணமாகவே அவர்கள் கருதினர். ஒன்று "நம்முடைய கமிசார்" சப்பாயேவின் பிடியில் விழுந்திருக்க வேண்டும்.



அதனால் அந்த வீரனுடன் பின்னிக்கொண்டு இன்னொருவனுடைய விருப்பத்தையெல்லாம் சுமந்து செல்லும் பொம்மையாய் இருக்க வேண்டும். அல்லது நமது கமிசாரும் சப்பாயேவைப் போலவே ஒரு பயங்கரப் பேயாகவும், கொடுமைக் கொரில்லாவாகவும் ஏற்கெனவே இருந்திருக்க வேண்டும், எனவேதான் தானாகவே செல்வாக்குத் தேடிக் கொள்ளாது இன்னொருவனுடைய நிழலிலேயே அடங்கிக் கிடக்கிறார்" என்றெல்லாம் பேசிக்கொண்டனர்.

இன்னும் பலர் வேறு விதமாகவும் கருதினர். என்றாலும் அனைவரும், தங்களுடைய கமிசாரைத் தன் முனைப்புள்ள தனிப்பட்டவராக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டனர். இந்தச் சமயத்தில்தான் பியோடார் அலுவலகத்துள் நுழைந்தான், அவன் அமர்ந்ததும். அலுவலகத் தலைமையாள் அலுவல், தேவை, திட்டங்கள் முதலிய பிற எதையும் பற்றிப் பேசாமல் ஒரு கற்றைக் காகிதத்தை அவன் கையில் செருகிவிட்டு வெறிப்பாகப் பார்த்தவண்ணம் சென்றுவிட்டான். தூரத்தில் நின்றபடியே பியோடார் முகத்தில் ஏற்பட்ட மாறுதல்களைக் கவனித்துக்கொண்டிருந்தான். கையில் திணிக்கப்பட்ட அந்தக் காகிதங்களெல்லாம் ஏதோ சம்மன்கள் போலத் தோன்றின. நீதிமன்றத்தில் கிளிக்கோவை ஒரு பிரதிவாதியாக விசாரிக்க அழைத்திருந்தார்கள். முதலில் கிளிக்கோவிற்கு ஒன்றும் புரியவில்லை; பின்னால் நினைவிற்கு வந்ததும் வாய்விட்டுச் சிரித்துவிட்டான். முற்றிலும் மாறுபாடான தோற்றத்தை எதிர்பார்த்திருந்த அலுவலகத் தலைமையாளான ரிஷிகோவ், பியோடார் வாய்விட்டுக் குலுங்கச் சிரித்ததை எரிச்சலுடன் பார்த்துக்கொண்டிருந்தான்.

"ஏதோ விஷயமாக நீதிமன்றத்தின் முன்னர் விசாரணைக்கு வரும்படி தாங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்!" என்று பல்லைக் கடித்துக்கொண்டு சொன்னான்.

"தெரியும், தெரியும். இது ஒரு பிரமாத விஷயமில்லை.

சர்வசாதாரணமான காரியம்தான். நான் போகப் போவதில்லை. இந்தச் சம்பவம் எப்படி நடந்தது தெரியுமா? .. கடைசி முறையாக நாங்கள் சமாராவில் இருந்தோம். நான் சப்பாயேவுடன் தெருவில் சென்றுகொண் டிருந்தேன். தெருவின் இரு மருங்கிலும் பனிமேடுகள் செங்குத்தாய் உயர்ந்திருந்தன. ஒடுக்கமான அந்தப் பாதையைவிட்டு விலகினால் பனிக்கட்டிமீதுதான் விழ வேண்டும். இந்தச் சமயத்தில் திடீரென்று சறுக்குவண்டி யொன்று பூட்டிய குதிரை நாலுகால் பாய்ச்சலில் வந்தது. அதை ஓட்டி வந்தவன் ஒரு செய்தித்துறைக் கமிசார் போலத் தோன்றியது. அப்படித்தான் நான் கருதுகிறேன்...எனக்கு நன்றாக நினைவில் இல்லை ; ஆனால் அவனிடம் ஒரு அலட்சியப் பார்வை இருந்தது. அந்தப் பார்வையைக்கொண்டே அவன் ஏதோ தவறுதலாகக் கட்சிக்குள் நுழைந்தவன் என்பதைத் தெரிந்துகொள்ளலாம். நாங்கள் எதிரே வருவதைக்கூடப் பொருட்படுத்தாது குதிரையைப் படுவேகமாக நடுப்பாதையில் விரட்டிவந்தான். விலக வேறு வழியில்லாத எங்களைப் பனிக்கட்டிமீது விழச் செய்தான். கீழே விழுந்த நான் பொறுமையை இழந்துவிட்டேன். மட்டரகமான இந்த வெறிச் செயலுக்காக அவன் காதைத் திருகச் செய்வதாக ஆத்திரத்துடன் கூறினேன். இதைக் கேட்ட அந்த வீராதி வீரன் குதிரையை நிறுத்தினான், கீழே இறங்கி நெருங்கி வந்தான். நாங்கள் யார் என்று கேட்டான். என்னுடைய பெயரையும், சப்பாயேவின் பெயரையும் குறித்துக்கொண்டான்; பேசாது சென்றுவிட்டான். கடைசியில், நீதிமன்றத்தில் புகார் செய்திருக்கிறான் !''

இந்தச் சாதாரணச் சம்பவத்தைப்பற்றிய பியோடாரின் விளக்கத்தைக் கேட்ட ரிஷிகோவின் முகத்தில் துள்ளிய பொறாமையும், ஆத்திரமும் அடங்கின. "நம்முடைய கமிசார் சப்பாயேவுடன் சேர்ந்து ஏதோ தவறு செய்துவிட்டான் போலிருக்கிறது. அதனால்தான் நீதிமன்றத்



திற்கு வருமாறு அழைத்திருக்கிறார்கள்'' என்று விபரீதமாக எண்ணிக்கொண் டிருந்தவர்கள், இந்த அற்பச் சம்பவத்தைக் கேட்ட பின்பும் ஆத்திரப்படக் காரணம் ஏதும் இல்லை. அதுவும் தவிர, பியோடாரின் தோற்றமும், போக்கும், பேச்சும், நடத்தையும் அவனை ஒரு கொரில்லாவாகவோ, முரடனாகவோ காட்டவில்லை. பியோடாரைப் பற்றி ரிஷிகோவ் கொண்டிருந்த மாறுபாடான எண்ணம் அனைத்தும் அவனை முதலில் சந்தித்த அந்தக் கணமே கலையத் தொடங்கின. நாளடைவில் அடியோடு மாறியும் விட்டன. அவனை முன்பு எவ்வளவு தூரம் அவநம்பிக்கை கொண்டு வெறுத்தானோ அவ்வளவிற்கு இப்பொழுது நம்பிக்கையுடன் விரும்பத் தொடங்கினான்.

பியோடார் நீதிமன்றத்துக்கு ஒரு கடிதம் எழுதினான். அதில், தன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் சாமானியமானவை என்றும், இப்பொழுது சமாராவிற்கு வர வாய்ப்பில்லை என்றும், அதைவிட அவன் இங்கேயே தங்க வேண்டியது அவசியம் என்றும் குறிப்பிட்டான். அத்துடன், அவன் இல்லாத சமயத்தில் நீதிமன்றத்தார் தரும் எந்த முடிவையும் ஏற்றுக்கொள்ளுவது தன்னுடைய கடமை யென்று கருதுவதாகவும், உண்மையாகவே நடந்த நிகழ்ச்சியை முறையாக விவரிப்பதாகவும் குறித்திருந்தான்.

அதன்படி ஆதிமுதல் நடந்த அனைத்தையும் விளக்கமாக எழுதி அனுப்பினான். நியாய மன்றத்தினர் வழக்கின் அடிப்படையை நன்கு புரிந்துகொண்டனர். பியோடாரின் சாட்சியத்தை நம்பி அவனது கருத்தையே ஏற்றுக்கொண்டனர். அதற்குமேல் பியோடாரைத் தொந்தரவு செய்யவில்லை. வழக்குத் தொடுத்த அந்த அசட்டுக் கமிசார் பின்பு ஒரு சமயம் வேறொரு குற்றத்திற்காகக் கட்சியை விட்டே வெளியேற்றப்பட்டான் என்ற செய்தியைப் பின்னால் அறிந்தான் பியோடார்.

கிளிக்கோவிற்கும் ரிஷிகோவிற்கும் இடையே இணக்க

மான தொடர்பு ஏற்பட்டது. ரிஷிகோவின் மூலம் இதர அரசியல் இயக்க ஊழியர்களுடன் இந்தத் தொடர்பு வலுத்தது. சப்பாயேவைப்பற்றி முட்டாள்தனமான விபரீத அபிப்பிராயங்கள் பரப்பப்பட்டுள்ளதாகவும், அவர்கள் மாறுபாடாக எண்ணுவது போன்று சப்பாயேவ் முரட்டுச் சுபாவம் கொண்டவனல்லன் என்றும் அவர்களுக்குத் தெளிவுபடுத்தினான் பியோடார்!

தொடக்கத்தில் கிளிக்கோவிற்கும் ரிஷிகோவிற்கும் இடையே திறமையைப் பற்றிய காரசாரமான பேச்சுக்கள் ஒரே ஒரு முறை தோன்றி மறைந்தன. உள்நாட்டு விடுதலைப் போர் நிகழ்ந்த காலம் அனைத்தும், கமிசாருக்கும், அந்தந்தப் படைப்பகுதி அரசியல் அலுவலகத்தினருக்கும் இடையே, தகுதியைப்பற்றியும், வேலைப் பங்கீட்டைப் பற்றியும் ஓயாத வாக்குவாதமும் புகைச்சலும் இருந்தன. தீர்க்கமுடியாத குழப்பம் நிறைந்த சிக்கலாக இது வளர்ந்து கொண்டேயிருந்தது. எனவே கிளிக்கோவிற்கும் இடையே இந்தச் சலசலப்பு கொஞ்சப் பொழுதேனும் ஏற்பட்டதில் வியப்பேதும் கொள்ளுதற்கிடல்லை.

அரசியல் அலுவலகம் சுயேச்சையாய் இயங்க வேண்டுமென்றும், ராணுவத்தினருடன் நேரடித் தொடர்பு கொள்ள வேண்டுமென்றும், கமிசாருக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியதில்லையென்றும் ரிஷிகோவ் வற்புறுத்தினான். நடவடிக்கைகளையும், சூழ்நிலையையும் மட்டுமே கமிசாருக்கு அவ்வப்போது பெயரளவில் தெரிவித்தாலே போதுமானது என்பது அவன் அபிப்பிராயம். ஆனால் பியோடாரின் கருத்து இதற்கு முற்றிலும் மாறுபட்டது; அவன் வேறு கோணத்திலிருந்து இந்தப் பிரச்னையை அணுகினான். கமிசாருக்கும் அரசியல் அலுவலகத்திற்கும் இருக்க வேண்டிய நேரிய தொடர்ப்பை வலியுறுத்தினான். தான் சமாராவில் இருந்தபொழுதே ஏராளமாகச் சேகரித்திருந்த குறிப்புகளையும் தாக்கீதுகளையும் சான்று காட்டிப் பேசினான்.



அந்தப் பகுதியில் இருந்த அரசியல் அலுவலகத்தினருக்கெல்லாம் திறமையுடன் தலைமையேற்றுச் செவ்வனே கவனித்தான். எனவே ரிஷிகோவின் கருத்துக்களை 'நியாய பூர்வமாக' மறுத்துவிட்டான். பின்னர் உண்மையான ராணுவ வாழ்க்கையின் அடிப்படைக் கூறுகளை முன் வைத்து மேற்கொண்டு விவாதிக்கப்பட்டு அந்தப் பிரச்னைக்கு ஒரு முடிவுகட்டினர். தொடக்கத்தில் ஒரு தனிப்பட்ட மனிதனே எல்லாப் பொறுப்புகளையும் ஏற்றுச் செய்வதென்பது தொல்லையாகத் தோன்றியது பியோடாருக்கு. கிளர்ச்சி செய்தலும், பிரச்சாரம் செய்தலும் ஒரு புறம்; அரசியல் இயக்க வேலைகளைப்பற்றிய செயல் முறைத் திட்டங்கள், நேரடியாகப் பொதுமக்களுடன் அரசியல் நீதியாகத் தொடர்பு கொள்ள முறையான அடிப்படைகள் முதலிய இவையெல்லாம் மற்றொரு புறம்; சரியான அறிக்கைகள் நாள்தோறும் சேகரிக்கப்படுகின்றனவா என்றும் புள்ளி விபரப் பகுதியினரும் தத்தம் அலுவலைச் செய்கின்றனரா என்றும் பார்ப்பது, கட்சிக் கிளைகளுடன் தொடர்பு கொள்வது, கல்வி கலாசார நிகழ்ச்சிகளை முறையாக நடத்துவது முதலிய இவையெல்லாம் இன்னொரு புறம். இத்தனை வேலைகளிலும் மூழ்க்கிடந்தான் பியோடார்.

மேலே கண்ட அத்தனை அலுவல்களும் அரசியல் இயக்கத்தையும் அதன் தலைவரையும் சேர்ந்த நேடிரப் பொறுப்பாகும். அரசியல் இயக்கத் தலைமை அலுவலகத்தைவிட்டுப் படைப்பகுதிகளைப் பார்ப்பதற்கென ஆறேழு நாட்களுக்குச் சேர்ந்தாற்போல் வெளியூரில் தங்கிவிடுவார் கமிசார். அடிப்படையில் இயக்க வேலைகள் எவ்வாறு நடைபெறுகின்றனவென்றும், எந்த முறையில் செய்யப்படுகின்றனவென்றும், எவ்விதம் மேற்கொண்டு செயல் திட்டம் வகுக்க வேண்டுமென்றும், முக்கியத்துவமுடைய சமாசாரம் இன்னின்னவென்றும், ராணுவத்தினர் உடனடியாக எங்கு தேவைப்படுகின்றனர் என்று அறிவதும்-

முதலிய எல்லாவற்றையும் அப்பொழுதுதான் அவரால் நேரடியாகக் கண்டுணர முடியும்

ஆனால் டிவிசன் ரீதியாக நிலையைத் தெளிவாக்குவதில் தன்னுடைய அலுவலை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் பியோடார் வரையறை செய்துகொண்டான். முக்கியமான பிரச்னைகளைக் குறித்தல், அவசரமான விஷயங்களைத் தொகுத்தல்-ஆகியவற்றை உடனடியாக அரசியல் இயக்க அலுவலகத்திற்கு அனுப்புதல்-இதுதான் அவனுடைய வேலைத்திட்டம். அரசியல் இயக்க அலுவலகத்தில் அவனுடைய அறிக்கை நன்கு பரிசீலிக்கப்பட்டுத் தேவையான இடங்களுக்கு வேண்டிய சாதனங்களும் உதவிகளும் முறையாகச் சென்றடைய ஏற்பாடு செய்யப்பெற்றது. இந்த நடைமுறை அனுபவத்தையுணர்ந்த பியோடார் எத்தகைப் பிணக்குமின்றி அரசியல் இயக்க அலுவலகத்தினருடன் நெருங்கித் தொடர்புகொண்டு பணியாற்றினான். அதன் பின்னர் கிஞ்சித்தேனும் அபிப்பிராயபேதம் கிளைக்கவில்லை. அரசியல் இயக்கத் துறையினரை அதிகாரம் பண்ணும் வேலை மட்டும் கமிசாருக்கு இல்லையென்றும், அவர்களுடைய வேலைகளைக் கண்காணிப்பதே அவருடைய வேலையென்றும் பியோடார் புரிந்துகொண்டான்!

அரசியல் இயக்கத் துறையின் வேலைத் திட்டம் இதுதான்; பெரும் கடற்பஞ்சுபோல, சுற்றுப்புற மக்களிடமிருந்தும் பெற்ற அனுபவங்களையும், உண்மை நிகழ்ச்சிகளையும், குறிப்புகளையும் தொகுத்து வைத்துக்கொள்ளுதல். இவ்விதம் தொகுக்கப்பட்ட செய்திகளையெல்லாம் அடுத்து வரும் கட்சிக் கூட்டங்களிலும், செயல் அரங்கங்களிலும் முன்வைத்து விவாதித்து மேற்கொண்ட முடிவுகளைக் கிளர்ச்சிக்காரர்கள், பிரசாரகர்கள் வழியாகவும், துண்டுப் பிரசுரங்கள், அறிக்கைகள், வேண்டுகோள்கள், சிறு நூல்கள் மூலமாகவும் நாடெங்கும் பரப்புதல் - இவையெல்லாம் அரசியல் இயக்கத் துறை அலுவல்கள்.



இதனால் ராணுவத்தினர் மட்டுமின்றிச் சூழ்ந்திருந்த பொதுமக்களும் அரசியல் அறிவு பெற்றனர்; நாட்டு நிலையை விழிப்புடன் கவனித்தனர். இது ஓரளவு பயனும் தந்தது; கம்யூனிஸ்ட் இயக்கத்தினர் சிறு சிறு பகுதியாகப் பிரிந்து கிராமம் கிராமமாகச் சென்றனர். குதிரைகளிலும், சிவப்பு வண்டிகளிலும், இதர வசதிகளிலும் குறிப்பிட்ட இடங்களுக் கெல்லாம் சென்றனர். செஞ்சேனையினர் எங்கே, எதற்காகப் போரிடுகிறார்கள், செஞ்சேனை எதற்காக அமைக்கப்பட்டது, சோவியத் ருஷ்யாவிலும் அதன் எல்லைப்புறங்களிலும் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் எவை என்றெல்லாம் பொதுமக்களுக்கு விளக்கிப் பேசினார்கள், அவர்களுக்கே போதிய செய்திகள் உரிய காலத்தே கிடைப்பதில்லையாதலால் அரைகுறை விஷய ஞானத்தோடு 'காமா சோமா' வென்று பேசி முடிப்பார்கள். நன்கு தெரிந்த விஷயத்தைக்கூட நன்கு பதியவைத்துப் பேசும் ஆற்றல் அவர்களில் பலருக்கு இருக்காது. என்றாலும்கூடத் தங்களது பொறுப்பை யுணர்ந்து செவ்வனே கடமை புரிந்தார்கள். அவர்கள்தான் பொதுமக்களின் அரசியல் ஆசான்கள், கல்வித் துறையினர், உரிமைச் செல்வர்கள். சில சமயங்களில் விளக்கொளியைக் கொண்டு வேடிக்கையான படங்களைக் காட்டி விளக்குவர். இந்தப் படங்களெல்லாம் வெகு ஆச்சரியமாயிருக்கும், அங்கு துண்டிக்கப்பட்டுப் புற உலகத் தொடர்பின்றி வாழ்ந்த தத்தாரிய மக்களுக்கு! கூட்டம் கூட்டமாகத் திரண்டு இவற்றைக் கண்டு களிப்பார்கள் அவர்கள்.

செஞ்சேனை வீரர்களுடன் வேலை செய்வதென்பது வெகு எளிது. அவர்கள் எப்பொழுதும் நல்ல கட்டுக்கோப்பிலும், தகுந்த பிணைப்பிலும் அமைந்திருந்தார்கள். மேலும் நாட்டுப்புற மக்களுக்கும் அவர்களுக்கும் மன வளர்ச்சியிலும் அறிவுத்திறத்திலும் பெருத்த வேறுபாடு ஏதுமில்லை. எனவே மனம் ஒப்பி மகிழ்வுடன் பணியாற்றி

னார்கள். அரசியல் இயக்கத் துறையில்லாவிட்டாலும் கூடக் கட்சிக் கிளைகள் தமது பிரச்சார வேலையைச் செஞ்சேனை வீரர்களுடன் சேர்ந்து செய்துகொண்டுதான் இருந்தார்கள். அவர்களுக்குத் தேவையா யிருந்ததெல்லாம் போதிய பிரச்சார வசதிக்கு வேண்டிய அறிக்கைகளும் பிற பொருள்களும்தான். இந்த உதவியையே அரசியல் இயக்கத் துறையிலிருந்து எதிர்பார்த்தார்கள்.

.ரெஜிமெண்டுகளில் எத்தகைய வேலை நடந்தது? வெவ்வேறு வகையான வேலைகள் - அந்த வேலைப் பகுப்பு, ரெஜிமெண்டுகள் தங்கியிருந்த இடத்தையும், அவற்றின் வேலைத் திறத்தையும் பொறுத்தே வழங்கப்பட்டது. போர்முனைக்கு அப்பால் தங்கி யிருந்தபொழுது ஏராளமான சொற்பொழிவுகளும், நூல்களும் அவர்கட்கு வழங்கப்படும். பாமர மக்களுக்கு அரசியல் அறிவு புகட்டப் போதிய பயிற்சி யளிக்கப்படும், இம்மாதிரி ஏராளமான திட்டங்களை அமுலாக்க முடியும். ஆனால் போர் நடந்துகொண்டிருந்தபொழுதும், யுத்த களத்தில் இருக்கும்பொழுதும் இதற்கு எல்லாம் நேரமிருக்காது. பல வாரங்களுக்குப் பத்திரிக்கையே பார்க்க முடியாது; சொற்பொழிவிற்கோ பொதுக் கூட்டங்களுக்கோ நேரம் கிடைக்காது. போர்க்களத்தில், போரிடுவதைத் தவிர வேறெதற்கும் நேரமிராது. போர்ப் பயண வழியில் எங்கேனும் இடைவெளியில் தங்க நேர்ந்தால் ஒரே தூக்கம்தான்! நடந்து நடந்து களைத்துப்போன உடலுக்கு ஓரிரவேனும் ஓய்வு தந்து மறுநாள் பயணத்திற்கு ஆவன செய்யக்கூடப் போதுமான அவகாசம் கிடைக்காது!

இங்ஙனம் ரெஜிமெண்டுகள் பலவற்றையும் பார்த்து வந்தபொழுது அவ்வவற்றின் தளபதிகள் அனைவரும் சந்தித்துப்பேச, பியோடாருக்குப்போதிய நேரமில்லை. அதே போலச் சப்பாயேவிற்கும் கட்சிக் கிளைகளுடனும் அரசியல் இயக்க அலுவலுடனும் தொடர்புகொள்ளப் போதிய



நேரமில்லாவிட்டாலும், வேண்டிய ஓய்வில்லாவிட்டாலும் என்ன கெட்டுவிடப் போகிறது? - அவர்கள் அனைவரும் ஒரே இலட்சியத்திற்காக ஓரிணைப்பின் வெவ்வேறு அங்கங்களாக வாழ்கிறார்கள். அன்பிலும், ஒருமித்த கருத்துலகிலும் இணைந்து இன்புறுகிறார்கள்; அதுபோலவே நீடித்த நட்போடும், நிலைபெற்ற இணைப்போடும் செயலாற்றினார்கள்!

கோல்சாக்கிற்கு எதிராகப் படை திரட்டிய சமயம் முதல் பருவ காலம் மாறிவிட்டது; உறைந்துகிடந்த பனிக் கட்டிகள் உருகியோடும் பருவம் வந்துவிட்டது. நதிகளில் உறைந்து பாறையா யிருந்த பனி மூட்டங்கள் மோதியுடைத்து நிறை வெள்ளமாகக் கக்கின. மேட்டு நிலங்களை மூடியிருந்த பனிப்படலங்கள் உருகியமையால் பூமியின் நிர்வாணத் தோற்றம் புலனாகியது: விரைவில் சமவெளிகளும் பளிச்சென்று விளங்கின. சிற்றாறுகளும், வாய்க்கால்களும் பெருக்கெடுத்தோடிப் பாதைகளை அரித்துச் சென்றுவிட்டன. சேறும் சகதியுமாய்ப்போன பாதைகளில் தளவாட வண்டிகளை இழுத்துச் செல்ல முடியாது; அதைப் போலவே குதிரைப் படைகளும். ஒருசில இடங்களில் ஓர் அடிகூட எடுத்துவைக்க முடியாத அளவு வழுக்கலாகிக் கிடந்தன! சேனைகளின் முன்னேற்றம் பெரிதும் பாதிக்கப்பட்டது. செஞ்சேனையினரின் தாமதமான போக்கிற்கு இதுவும் ஒரு காரணமாகக் கூடும். என்றாலும் இது ஒரு பகுதிதான். செஞ்சேனையின் அந்த முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையிட்ட பிற காரணங்களும் உண்டு.

எடுத்த உடனே எதிர்பாராமல் ஏற்பட்ட திடீர்த் தாக்குதல்களாலும், அதிர்ச்சிதரும் அடிகளாலும் கோல்சாக்கியத் துருப்புகள் தயங்கி நின்றன. அதன் பின்னர் பல திசைகளிலுமிருந்து பாய்ந்துவந்த புதுத் தாக்குதல்கள் அவர்களைத் திணறடித்தன. அத்துடன் தாராஸின் ஷெவ்சென்கோ ரெஜிமெண்டும் செஞ்சேனையுடன் சேர்ந்து

கொண்டதால், கோல்சாக்கின் போர்முனைத் திட்டங்க ளெல்லாம் குலைக்கப்பட்டன; முன்னணியில் படைகள் செயல்திறம் அறியாது திகைத்து நின்றன. இதனால் செஞ் சேனையினரின் முன்னேற்றம் துரித கதியை எட்டிற்று; எதிரிக்குப் புத்துணர்வும் புதுவலிவும் வருவதற்குள் எல் லாச் செஞ்சேனைப் படைகளும் ஒருமுகமாகத் திணிக்கப் பட்டன. ஒரே சமயத்தில் எல்லா இலக்குகளையும் ஒரு சேரத் தாக்கித் திக்குமுக்காடச் செய்தார்கள். எதிரியின் முன்னணிப் படைகள் கலகலத்தன. செஞ்சேனைப் படை கள் கேந்திர இலக்கை வளைத்துக்கொண்டன. போர்ப் போக்கில் ஒரு புதுத் திருப்பம் ஏற்படப்போகிறதென்பது வெளிப்படையாகத் தெரிந்தது. நம்பிக்கை விண்ணெட்ட உயர்ந்தது; ஆற்றலும் வலிவும் அதிகரித்துக்கொண்டே யிருந்தன. முன்னேறிக்கொண் டிருந்த எதிர்த் தாக்குதல் முழு வெற்றியுடன் முடியப்போகிறது என்பது உறுதியாகி விட்டது!

# 10

## புகுருஸ்லான்மீது படையெடுப்பு

போர்முனையில் ஒருமித்த போராட்டம் துவங்கிய அந்த நாள் மிகவும் மகத்தானது; ஆனால் அதற்கு முன்னர் இரு தரப்பு வீரர்களிடையேயும் சிறு சிறு சண்டைகள் நடந்தவண்ணமேயிருந்தன; போராட்டம் துவங்கிய பின்பு இடையீடேதும் ஏற்படவில்லை!

ஏப்ரல் மாதம் இருபதாம் தேதி வாக்கில், ஈஸ்டர் தின விழா எதிரியுடன் முதல் பெரும் போர் அன்றுதான் மூண் டது. அச் சமயத்தில் எதிரிப் படைகள் புகுருஸ்லானி லிருந்து புஷுலுக்கை நோக்கி வெற்றியுடன் முன்னேறிக் கொண் டிருந்தன. சிஷோவின் தலைமையில் இயங்கிய பெரும் படையொன்று, சிறு சிறு பகுதிகளாகப் பிரிந்து பொரோவ்கா நதியின் இடது கரையோரமெங்கும் பரவி நின்று, எதிரிகள் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போட்டுக்கொண் டிருந்தது. தத்தமக்கென ஒதுக்கப்பட்ட இலக்குகளை அடைந்து எதிர்த்து நிற்பதற்கு முடியாமல் செஞ்சேனைப் படைகள் பெரிதும் அல்லலுற்றன. சகதியும் சேறும் நிறைந்த மோசமான பாதைகளாலும், ஆழமும் வேகமும் நிறைந்த ஊற்று நீர் ஓட்டத்தாலும் அவர்களது முன்னேற்றம் பெரிதும் பாதிக்கப்பட்டது. பாரமான துப் பாக்கிகளையும் இதர தளவாடங்களையும் நகர்த்த முடியாமல் தனித் தனியாகப் பிரித்துக் கோணிப் பைகளில் பொதிந்து தள்ளிச் செல்ல வேண்டியிருந்தது. எல்லாப் போர்ப்படை களும் தளவாடங்களும் பொரோவ்கா நதி தீரத்தைச் சென் றடைந்தவுடன் மூண்ட போர் ஊபாவரைக்கும் ஓயவில்லை.

புகுருஸ்லானுக்கு அருகில் நடந்த போரில் வெள்ளைப் படைகளின் இடுக்கிப் பிடிக்குள் சிஷோவே வீழ்ந்துவிட இருந்தான். நல்ல வேளையாகச் சமயத்தில் காப்பாற்றப் பட்டான். போர் நிகழ்ந்துகொண் டிருந்தபொழுது எதிரிப் படையின் அணிவகுப்பு அரங்கத்தில் ஒரு பெரும் பீரங்கி வண்டியொன்று பள்ளப் பிரதேசத்தை நோக்கி இழுத்துச் செல்லப்படுவதைக் கண்டான் சிஷோவ். உடனே விக்கோருடன், எழுபது குதிரைப் படையினரை அழைத்துக் கொண்டு எதிரியின் அணிவகுப்பு எல்லைக்குள் துணிந்து புகுந்தான் சிஷோவ். ஒரே பாய்ச்சலில் அந்த இடத்தை அடைந்ததும், இந்தக் குதிரைப் படையினரை இன்னார் எனத் தெரிந்துகொண்ட பீரங்கிப் படைத் தலைவர்கள் செஞ்சேனையினரை நோக்கிச் சுட ஆரம்பித்தனர். அவர்களது படையைச் சார்ந்த வீரர்கள் சுடமறுப்பதும் கண்ணில் பட்டது. அவ்விதம் மறுத்தவர்களைத் துப்பாக்கியின் பின்புறக் கட்டையாலும், உடைவாள் பட்டையாலும் நையப் புடைத்தார்கள்; என்றாலும்கூட அவர்கள் சுட மறுத்து விட்டார்கள். இந்த நிலையை நன்கு புரிந்துகொண்ட சிஷோவ், தன் படைவீரர்களில் பலரை வேறொரு புறம் அனுப்பி எதிரியின் கவனத்தை அவர்கள்மீது திரும்பச் செய்துவிட்டு, விக்கோருடன் ஒருசில வீரர்களை மட்டும் அழைத்துக்கொண்டு, வேறொரு பள்ளத்தில் பதுங்கித் திடீரெனப் பீரங்கிகள்மீதே பாய்ந்து அதைப் பற்றிக்கொண்டான். பீரங்கிப் படைத் தலைவர்கள் இந்தத் திடீர்ப் பாய்ச்சலைக் கண்டு திடுக்கிட்டுப் பின்னிட்டுவிட்டார்கள். தங்கள் கைத் துப்பாக்கிகளை எடுத்து நீட்டினார்கள். என்றாலும் காலந் தாழ்ந்துவிட்டது. விக்கோர் அதற்குள் அவர்களில் ஒருவனது மண்டையைப் பிளந்துவிட்டான். இன்னொருவன் குதிரையின் காலடியில் துவம்சம் செய்யப்பட்டான்; எஞ்சிய தலைவர்கள் தத்தமது படைவீரர்களாலேயே கீழே தூக்கி எறியப்பட்டுப் புறங்கை மடித்துக் கட்டப்பட்



டனர். ஒரு நொடியில் அனைத்தும் நடந்துவிட்டது அந்தத் துப்பாக்கி வீரர்கள் எல்லோரும் குதிரைப் படைவீரர்கள் பீரங்கிகளை நெருங்கி வருவதற்காகவே திட்டமிட்டுக் காத்திருந்தது போலவே தோன்றியது. துப்பாக்கிப் படைத் தலைவர்களைப் பிடித்துக்கொண்டிருந்த அந்த வீரர்களே மன்னித்துவிடுமாறு வேண்டுவதுபோலப் பரிதாபமாகப் பார்த்தனர். எஞ்சியவர்கள் தங்கள் கரங்களை உயர்த்தியபடியே சரணடைந்து நின்றனர். எல்லோரும் சுற்றி வளைக்கப்பட்டனர். இந்த நிலையில் தூரத்திலிருந்த பீரங்கிப் படை இவர்களை நோக்கிச் சுடத் தொடங்கியது. உடனே அங்கு நிலவிய பாதகமான நிலையைப் புரிந்துகொண்டு அவர்களும் சரணடைந்துவிட்டனர். விக்கோரே தலைமையேற்று இக் காரியங்களைக் கவனித்துக்கொண்டான். சிஷோவ், தன்னுடன் ஒரு டசன் வீரர்களை அழைத்துக்கொண்டு வெள்ளைப் படையினரின் தளவாட வண்டிக்குள் புகுந்தான். பூட்ஸுகளும், சிப்பாய் உடைகளும் நிறைந்திருந்த வண்டிகளைப் பார்த்ததும் அவனுடைய முகம் மலர்ந்தது. எல்லாப் பொருள்களும் செஞ்சேனை வீரர்களுக்குச் சேர்ந்துவிடும் என்ற மகிழ்ச்சி பொங்கியது. வண்டிக்காரர்கள் எத்தகைய எதிர்ப்பையும் காட்டவில்லை. திடுக்கிட்டால் பலர் அயர்ந்துவிட்டனர்: இன்னும் பலருக்கு என்னதான் நடக்கிறதென்றே புரிந்துகொள்ள முடியவில்லை. பாய்ந்துவந்த குதிரைவீரர்களைத் தம்மவராகவே கருதிக்கொண்டனர். ஏதோ வேறிடத்திற்குத் தளவாடங்களைக் கொண்டு செல்லுமாறு உத்தரவிட வந்தவர்களென்றே கருதினர். இந்தக் குழப்பத்தில் மூழ்கிய வண்டிக்காரர்கள் பல நூற்றுக்கணக்கான வண்டிகளையும் ஒரு நொடிப் பொழுதில் செஞ்சேனைப் படையினரிடம் ஓட்டிச் சென்று ஒப்புவிக்கத் தயாராகிவிட்டனர்!

தளவாட வண்டிகள் நின்ற இடத்திற்கு அருகாமையிலேயே அமைந்திருந்த வெள்ளைப் படைத் தலைமைத் காரி

யாலயத்தில் பெரும் குழப்பம் மூண்டது. இம்மாதிரிச் சமயங்களில் நடந்த நிகழ்ச்சியைப் பெரிதாகப் பேசுவது இயல்புதான். இத்தகைய மிகைப் பேச்சால் செயல்மறந்த குழப்பம் ஏற்பட்டுவிடுவதைப் பயன்படுத்திக்கொண்டு படையெடுப்போர் மிகுதியான பொருள்களைக் கவர்ந்து சென்றுவிடுவர். இந்த விஷயத்திலும் அப்படித்தான் நடந்தது. கூடியிருந்த எல்லோரும் மனம்போன போக்கில் பேசிக்கொண்டிருந்தார்களே தவிர யாரேனும் முன்வந்து இனிமேல் ஆவதற்கு ஏதேனும் திட்டமிட்டுச் செயலாற்றுவதாகத் தெரியவில்லை. நிலையைத் தெளிவாகப் புரிந்துகொண்டு மேற்கொள்ள வேண்டிய நடைமுறைக்கு வழி வகுக்கும் திராணி எவர்க்கும் ஏற்படவில்லை. ஒவ்வொருவரும் தன்னைத்தான் எப்படிக் காத்துக்கொள்ளுவது என்பதைப்பற்றித்தான் தீவிரமாகச் சிந்தித்துக்கொண்டிருந்தனர். குழம்பிக் கிடந்த தலைமைக் காரியாலயத்தைவிட்டு முதன் முதல் வெளிப் போந்தான் கர்னல் ஷொலொடோஜூபோவ். அவன் ஒரு டிவிசன் தளபதி. தனது டிவிசன் மதகுருவுடன் காத்திருந்த ஒருவண்டியில் பாய்ந்தேறிப் புறப்பட்டுச் சென்றான். எங்கும் ஓட்டமும் நடையுமாகவே இருந்தன. குழப்பமும் மூச்சுவிட வியலாத தடுமாற்றமும், சபித்தலும், பயமுறுத்தலும் எல்லோரிடமிருந்தும் புறப்பட்டன.

இந்தச் சமயத்தில், ஏற்கெனவே குழம்பிக்கிடந்த தலைமைக் காரியாலயத்தை நோக்கிச் செஞ்சேனைக் குதிரைப் படை ஒன்று வந்தது. காரியாலய உத்தியோகஸ்தர்களை ஒரு டசன் வீரர்கள் நெருங்கியபடியே பணிந்துவிடுமாறு உரக்கக் கத்தினர். பல திக்குகளிலும் சுட்டனர். இது ஏற்கெனவே இருந்த குழப்பத்தை மேலும் பெருக்கிவிட்டது. காரியாலயத்தைவிட்டுத் தப்பிச் சென்ற டிவிசன் தளபதியைப் பின்தொடர்ந்தான் சிஷோவ். மிக அருகில் நெருங்கியதும் உடைவாளை உருவி, அவனைத் தாக்கப்போன சம



யத்தில், உடன்சென்ற டிவிசன் மதகுரு இதைக் கண்டுவிட்டான். பின்புறம் திரும்பி, சிஷோவைக் குறிபார்த்துச் சுட ஆரம்பித்துவிட்டான். ஒரு குண்டு சிஷோவ் ஏறிவந்த குதிரையின் முன்னங் காலில் பாய்ந்தது; உடனே குதிரை தடுமாறிப் பின்னிட ஆரம்பித்தது. இதையறிந்த கர்னல் வண்டியை நிறுத்திக் கீழே குதித்தான். வண்டியோடு பதுங்கியபடியே சிஷோவைக் குறிபார்த்துச் சுட்டான். இன்னொரு குண்டு குதிரையின் தலையில் பட்டது. அது சுருண்டு வீழ்ந்துவிட்டது. குதிரை கீழே விழுந்ததும் ஒரு நொடியில் சேணக் கயிற்றில் சிக்கியிருந்த தன் கால்களை விடுவித்துக்கொண்டு அருகில் இருந்த புதரில் பதுங்கினான். அந்தச் சமயத்தில் ஒரு விவசாயி இரண்டு பண்ணைக் குதிரைகள் பூட்டிய வண்டியில் எங்கோ அவசரமாகச் சென்றுகொண்டிருந்தான். அந்த வண்டி புதருக்கு அருகில் சென்றபொழுது வண்டிக்காரன் பின்னாலே ஓடினான் சிஷோவ். வண்டிக்காரனுடன் விவரமாகப் பேசி அனுமதி வாங்கவே நேரமில்லை. தன்னுடைய கைத் துப்பாக்கியை எடுத்து நீட்டியவாறே வண்டியில் ஏறிக்கொண்டான். ஒரு நொடிக்குள் முன்னே பூட்டியிருந்த குதிரைமீது பாய்ந்தமர்ந்து சேணத்தை அவிழ்த்துவிட்டான். வண்டியுடன் பிணைத்திருந்த கயிற்றை அறுத்துவிட்டான். குதிரை பஞ்சாய்ப் பறந்தது. தன்னுடைய சினேகிதர்கள் இருந்த இடத்திற்குப் பாய்ந்து வந்தான் சிஷோவ். இதற்குள் அங்கு நிலவிய குழப்பம் அமர்ந்துவிட்டது. படையெடுக்க வந்தவர்கள் பயங்கரவாதிகள் அல்லர் என்பதைப் புரிந்துகொண்டனர். எனவே அமைதியடைந்தனர். எதிர்பாராத இந்த அமைதியைக் கண்ட சிஷோவ் தன்னுடன் வந்த வீரர்கள் அனைவரும் எதிரிகள் பிடியில் சிக்கி மடிந்துவிட்டனர் போலும் அல்லது விரட்டியடிக்கப்பட்டனர் போலும் என்று முடிவு கட்டிவிட்டான். தலைமைக் காரியாலயமாக அமைக்கப்பட்டிருந்த குடிசையை நெருங்கி

வந்தபொழுது, தன்னுடைய படைவீரர்களில் ஒருவன் தன் குதிரையுமின்றி, தாடையில் இரத்தக் கறைபடிய நிற்பதைக் கண்டான். அவனருகில் வந்ததும் தன்னுடைய குதிரையின் பின்புறத்தில் ஏறிக்கொள்ளுமாறு கத்தினான். அவனும் ஒரே பாய்ச்சலில் பாய்ந்து ஏறிக்கொண்டான்.

குடிசைக்கு அப்பாலிருந்த தளவாட வண்டிகளைப் பின்தொடர்ந்தோடினர் அவர்கள். தங்கள்மீது பொறிக்கப்பட்டிருந்த செஞ்சேனைச் சின்னங்களைக் கிழித்துவிட்டனர். வெகு தூரத்தில் ஒரு கூட்டம் தென்பட்டது. அது எதிரிகளின் படையாகத்தான் இருக்கவேண்டுமென்று சிஷோவ் தீர்மானித்துக்கொண்டான். அந்தப் பாதையை விட்டு விலகி வேறு பக்கமாகச் செல்ல முடியாததால் துணிவுடன் பயணம் செய்தனர். தூரத்தில் தென்பட்ட குதிரைப் படையினர் நெருங்கிவந்துவிட்டனர். இவர்கள் யார்? வேறு யாருமில்லை. தளவாட வண்டியைக் கண்காணித்து அனுப்புமாறு சிஷோவ் விட்டுவந்த செஞ்சேனை வீரர்கள்தான். போர் நடந்துகொண்டிருந்த சமவெளிக்கு அப்பாலிருந்த செஞ்சேனைப் படைகளிடம் பத்திரமாக எல்லாவண்டிகளையும் கொண்டு சேர்க்கும் வகையறியாது இவர்கள் திரும்பி வந்திருந்தனர். சிஷோவ் ஏறியமர்ந்திருந்தது வலுவான பண்ணைக் குதிரைதான்; என்றாலும் இத்தகைய போர் நடவடிக்கைகளுக்கெல்லாம் அது லாயக்கானதில்லை. அவனோடு வந்த யாஷ்கா கலாக் இதைப் புரிந்துகொண்டான்

“தோழர், தளபதி அவர்களே. என்னுடைய குதிரையில் ஏறிக்கொள்ளுங்கள். நான் நடந்து வருகிறேன். என்னை அவர்கள் பிடித்துக்கொண்டால் நான் அவர்கள் பக்கம் மாறிவிட்டதாகச் சொல்லி ஏமாற்றிவிடுவேன். சில சமயங்களில் பிடித்துக்கொண்டாலும் ஏதும் கேடு செய்யமாட்டார்கள்” என்றான் யாஷ்கா கலாக்.

யோசிக்கவே அப்போது நேரமில்லை. தான் ஏறியிருந்த பண்ணைக் குதிரைமீது தனக்குப் பின்னால் அமர்ந்திருந்த



வனை இழுத்துவிட்டு யாஷ்காவின் போர்க் குதிரையில் தாவியமர்ந்தான் சிஷோவ். சிறிது தூரம் ஒன்றாக வந்ததும் பிரிந்துவிட்டனர். யாஷ்கா கலாக் மட்டும் தனிமையில் விடப்பட்டான். தளவாட வண்டிகளை நோக்கி மீண்டும் திரும்பினான். (அவன் மூன்று வாரங்களுக்கு அப்புறம் இப்பொழுதுதான் திரும்பி வந்திருக்கிறான். இத்தனை நாளும் எதிர்களின் தளவாட வண்டிகளுக்குள்ளேயே இவனும் பதுக்கி வைக்கப்பட்டிருந்தான். அந்த வண்டிகளைக் காத்து நின்ற விவசாய வீரர்கள் தங்களுக்குத் தெரிந்தும் அவனைக் காட்டிக் கொடுக்கவில்லை. அவன் ஏறியிருந்த வண்டி வெகு நாள்வரைக்கும் எதிரியின் வசமே இருந்தமையால் அவனால் தப்பித்து வர முடியவில்லை...இப்பொழுது தப்பித்துவிட்டான்!)

போர் நிகழ்ந்துகொண்டிருந்த பெருஞ் சமவெளியின் குறுக்கே புகுந்தனர். தேனீக்களைப் போல வெடிகுண்டுகள் சீறிப் பாய்ந்தன. அவர்களுடன் வந்துகொண்டிருந்த இரண்டு வீரர்கள் காயம்பட்டுப் பின்னிட நேர்ந்தது. எஞ்சியவர்கள் காயம்படாமல் சென்றுகொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன் சிஷோவ். இந்தச் சமயத்தில் குதிரைப் படைச் சாரணர்கள் வேறொரு திசையிலிருந்து அழைக்கப்பட்டனர். பின்னிட்டுக்கொண்டிருந்த தளவாட வண்டிகளை மீட்குமாறு தூண்டப்பட்டனர். பல தளவாட வண்டிகள் எதிரிகளின் உக்கிரத் தாக்குதலால் பின்னிட நேர்ந்தது. என்றாலும் பெரும் பகுதி செஞ்சேனைப் படையிலக்கைச் சென்றடைந்துவிட்டது. இங்ஙனம் கைப்பற்றப்பட்ட தளவாடங்களும் உடைகளும் சிஷோவின் பற்றுக்குறைப் படைக்கே சென்றடைந்தன.

* * *

இந்தச் சமயத்தில் நாம் ஒன்றைத் தெளிவாக்க வேண்டும். படையின் பல்வேறு பகுதியினரும் தம்மிடமுள்ள எஞ்சிய தளவாடங்களை மேலிடத்திற்கு அனுப்பி எல்லோ

ருக்கும் பொதுவாக அவற்றைப் பங்கிடச் செய்வதில்லை. கிடைத்த எல்லாவற்றையும் தங்களுக் கெனவே பதுக்கி வைத்துக்கொள்ளுவர்; தங்களது தேவைக்குப் போக எஞ்சியதைக்கூடப் பங்கிட மனம் ஒப்ப மாட்டார்கள். அவர்களால் எவ்வெவற்றை எக்காலத்தும் உபயோகிக்க முடியாதோ அத்தகைய குப்பைச் சுமைகளைத்தான் மேலிடத்துப் பங்கீட்டிற்கு அனுப்புவார்கள். பூட்ஷுகள், உடைகள், உணவுப் பொருள்கள் மட்டுமின்றித் துப்பாக்கிகள், வெடி மருந்துகள், இதர தளவாடங்கள் ஆகிய அனைத்தும் இப்படித்தான் குவிந்து கிடந்தன. இதனுல். ஒரு குறிப்பிட்ட படைப் பகுதிக்குப் பத்துப் பன்னிரண்டு சுழல் துப்பாக்கிகள்கூடக் கிடைக்காத சமயத்தில் இன்னெரு படைப் பகுதியிடம் நூற்றுக் கணக்கில் சுழல் துப்பாக்கிகள் பயனின்றிக் குவிந்து கிடக்கும். சில சமயங்களில் பரிசோதனை செய்து பார்க்கும்பொழுது தங்களிடம் உள்ள அளவுக்கு மிஞ்சிய தளவாடங்கள் அனைத்தையும் பதுக்கிவிடுவார்கள்! பொய்க்கணக் கெழுதிக் காட்டிக் கையிருப்பே இல்லையென்று கைவிரித்துவிடுவார்கள். எல்லா ராணுவப் பகுதிகளும் இத்தகை ரகசிய நடவடிக்கையில் இருந்தன. எந்தத் துணைப்படைத் தளபதியும் உண்மையான தளவாடக் கையிருப்பைச் சப்பாயேவிடம்கூடக் கூறுவதில்லை. சப்பாயேவ் உண்மையைச் சொல்லுமாறு அவர்களை வற்புறுத்த மாட்டான். ஆனுல், பொதுவாக உத்தரவிடும்பொழுது அந்தக் குறிப்பிட்ட ராணுவப் பகுதியினரிடம் கூடவே இருபது முப்பது சுழல் துப்பாக்கிகள் இருக்கு மென்று சேர்த்துக் கணக்கிட்டுக்கொள்ளுவான். சில சமயங்களில் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்படும் துப்பாக்கிகளையும் சேர்த்து வைத்துக்கொள்ளுவார்கள். இதைச் சப்பாயேவே பல முறை கண்டிருக்கிறுன், சில சமயங்களில் அந்தப் படையைச் சேர்ந்த ஏமாளிகளே சொல்லியும் விடுவார்கள். ஆனுல் கையிருப்பு அறிக்கையில் மட்டும் தளவாடங்களின் எண்ணிக்கை நெடுங்காலம் அப்படியே இருக்கும். அப்படியாஞல் கையிருப்பிலிருந்து ஏதுமே குறையவில்லை என்றும் அர்த்தம் இல்லை; அவ்விதம் உண்மையைச் சொல்லுவது கூடாது என்பதுதான் அவர்கள் நோக்கம்; மேலும் துப்பாக்கிகளைக் காணவில்லை என்று வெளியிடுவது அவமானமானது என்றும் கருதினுர்கள். நாளடைவில் இவ்விதம் காணுமற் போனவைகளுக்குப் பதிலாக, வேறு துப்பாக்கிகள், ரகசிய இருப்பிலிருந்து எடுத்துச் சேர்த்துக்கொள்ளப்படும். இந்த ரகசிய இருப்புத் தொகையைப் பெரிதாக்குவதற்காகவே, எதிரிகளிடமிருந்து கைப்பற்றிய துப்பாக்கிகளைப் பொய்க்கணக்கு கெழுதிக் குறைவாகக் காட்டுவார்கள்.

இங்ஙனம் குவிந்து போன தளவாடங்களை யெல்லாம் எப்படித்தான கழித்துக் கட்டுவது? எப்படிக் கணக்கெழுதிக் காட்டுவது? என்ற தொல்லை ஒரு புறம் இருக்க, இவ்விதம் சேர்ந்தவை யெல்லாம் பழுதான தளவாடங்களாகவும், உபயோகமற்றவையாகவும் நாளடைவில் போய்விடுவதும் உண்டு. இவ்விதம் முற்றிலும் பயன்படாமல் போகும் தளவாடங்கள் மட்டுமே தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பப் பெறும். ஓரளவு பயன்படுத்தக் கூடியதாக இருந்தாலும் தமக்கெனப் பதுக்கிக்கொள்ளுவார்கள்.

இந்தத் தந்திரத்தைப் புரிந்துகொண்ட பியோடார், ஏதேனும் பற்ருக் குறை என்று சொன்னுலும் அவ்வளவாகப் பொருட்படுத்த மாட்டான். இந்தப் போதாக் குறைப் புலம்பல் எல்லாம் வேண்டு மென்றே செய்யப்படுவ தென்பதைத் தெரிந்துகொள்ளுவான். அப்படிக் கூக்குரலிட்டால் அதை "உதவுக, உதவுக...எங்கள் டிவிசனுக்கு உதவுங்கள்...எஙகளுடைய ரகசியச் சேமிப்புக்கெல்லாம் ஆபத்து வந்துள்ளது" என்றுதான் புரிந்துகொள்ள வேண்டும், இந்தப் புலம்பல் எல்லாம் முடிந்து

நெடு நாளாகி, ரகசியக் கையிருப்பும் காலியான பின்னர் தான் உண்மையான உதவிக்கு அவசியம் ஏற்படும்!

கைப்பற்றிய தளவாடங்கள் அனைத்தையும் சிஷோவின் படையின் பல்வேறு பகுதியினர் தமக்குள் பகிர்ந்து கொண்டனர். இந்தப் பகுதியினர்க்கு ஏற்கெனவே போதாக் குறை மிகுந்திருந்ததால் அவர்களுக்கே சரியாகி விட்டது. டிவிசனுக்கு எஞ்சிய கொஞ்சப் பகுதி கிடைத்தது. ஆனால் ராணுவம் முழுமைக்கும் அது உறைபோடக் கூடக் காணாது!

சிஷோவின் அபரிதமான வெற்றிக்குப் பின்னர், இந்தச் செய்தியை நன்கு புரிந்துகொண்ட பியோடார் கீழ்க் கண்ட முடிவிற்கு வந்தான்.

"படையினரின் கையிருப்புத் தளவாடங்களைக் கணக்கிடும்போதெல்லாம் இந்தச் சம்பவத்தை ஞாபகத்தில் வைத்திருப்பேன். மேலும் தளபதிகள் போதவில்லை போதவில்லை என்று புளுகுவதையெல்லாம் மட்டம் தட்டுவேன்" என்று முடிவுகட்டினான்.

அவ்விதமே ஆறு மாதத்திற்குள் பல ரகசியக் கையிருப்புகளைக் கணக்கிடுவதில் வெற்றி பெற்றான் பியோடார்.

அத்துடன் இன்னொரு சூழ்நிலைப் போக்கையும் பியோடார் குறித்துக்கொண்டான்: "துணைப்படைத் தளபதி சிஷோவ் எதிரிப் படையிலக்கிற்குள் பல படை வீரர்களுடன் வெற்றியுடன் புகுந்து ஒரு பீரங்கியைப் பற்றினான். எதிர்ப் படைகளைத் துவம்சம் செய்தான். தளவாட வண்டிகளைத் தாறுமாறாக்கினான். வெள்ளைப் படைத் தளபதியைப் பற்றிப் பிடித்தார்கள். இவையெல்லாம் மிக நன்றாகவே செய்யப்பட்டன; என்றாலும் .. இந்த "என்றாலும்" என்ற சொல் பியோடாரை ரொம்பவும் குழப்பிவிட்டது. இந்தக் குழப்பத்தின் பயனாகத் தன் மனத்தில் உறுதியான ஒரு தீர்மானத்தைச் செய்துகொண்டான். தாறுமாறான புள்ளி விவரங்களைக் கொடுத்துப் படைத் தளபதியை



ஏமாற்றிவிடுவது தவறு, உண்மையான விஷயங்களையும், விவரங்களையும் தெரிவிப்பதே முறை என்று முடிவுகட்டினான். தளபதிக்கு எல்லாமே பரிபூரணமாக ஒளிவு மறைவின்றித் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

சிஷோவ் ஒருவனது தனித் திறமையாலும் துணிவாலும் எதிரிப் படைகள் அனைத்தும் தாறுமாறாகக் குலைக்கப்பட் டிருக்கலாம்; என்றாலும் ஷொலொடோஜபோவின் துப்பாக்கிக்கு இரையாகி அவன் வீழ்ந்திருந்தால் படைப் பலத்தின் உண்மை நிலை தெரியாமலே போய்விடுமல்லவா? எனவேதான் எல்லா விவரமும் படையின் பிரதம தளபதிக்குத் தெரிவிக்கப்பட் டிருத்தல் வேண்டும் என்ற முடிவைச் செய்தான் பியோடார். ஆனால் அவனே பல முறை இதற்கு மாறாக நடந்து பல செய்திகளை மறைத்திருக்கிறான். எனவே வலுத்தாக்குதலில் அபரிமித வெற்றி பெற்றவர்களிடம் சென்று விளக்கம் ஏதும் கேட்பதில்லை; வெற்றிகரமாக முடிந்துவிட்டால் எந்த மோசமான தாக்குதலும் சரியாகிவிடும் என்று அவனும் சமாதனப்படுத்திக் கொண்டான். இங்ஙனம் எதற்கும் அஞ்சாது துணிந்து எதிரிகளிடம் பாய்ந்து கொள்ளையிட்டு வெற்றியுடன் மீள்வது அவ்வளவு பெரிதாக அப்பொழுது பாராட்டப் பெற்றது!

சிஷோவின் துணைப்படையில் எல்லாவித முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுவிட்டன என்பதைக் கேள்விப்பட்டவுடன் சப்பாயேவும் பியோடாரும் அவனைப் பார்க்கச் சென்றனர். அவர்களுடன் கோச்னேவ், பெட்கா இஸாயேவ் முதலிய பதினைந்து குதிரை வீரர்களும் உடன் சென்றனர். எதிரிப்படைகள் எங்கும் கண்ணிவைத்து அலைந்துகொண்டிருந்த சமயத்தில் அவர்கள் மட்டும் தனியே போவதென்பது முடியாது. எதிரிகள் எந்தச் சமயத்திலும், எந்த இடத்திலும் எதிர் நின்று மடக்கிக்கொள்ளக் கூடும். தவிரவும் கிராமக் குலாக்கியர்களில் பலர் செஞ்சேனையினர்பால்,

சிறப்பாக அவர்களுடைய தலைவர்கள்பால் அவ்வளவு ஈடுபாடோ, இரக்கமோ காட்டவில்லை

அன்று விடுமுறை தினம். வானவெளி யெங்கும் ஒளி படர்ந்திருந்தது. கிராமப் புறத்து இளைஞர்கள் உல்லாசமாக நல்லுடை அணிந்து சுற்றி வந்தனர். ஆடலும் பாடலும் அளவுகடந்து குலுங்கின. பெண்கள் கண்கவரும் வனப்புடைய உடை பூண்டிருந்தனர், ஆண்கள் மிக நன்கு உடுத்தியிருந்தனர். கூனிக் குறுகிப்போன கிழவிகள் தம் வீட்டு வாயிலில் குந்தியவாறே திணறித் திணறி இருமிக்கொண்டிருந்தனர். இந்த விடுமுறை நாளைச் சிறப்பிப்பது போன்று கனமான கம்பளிக் கோட்டுகளை எடுத்துப் போர்த்திய வண்ணம்,பொந்திலிருந்து தவளைகள் கிளம்புவதுபோல வெளிக்கிளம்பி அவர்கள் வந்தனர். தெருக்களில் அங்கும் இங்கும் கும்பலாகக் கூடி நின்றனர். கிராமச் சோவியத்தின் அருகிலும் பலர் திரண்டிருந்தனர். என்ன செய்வதென்றே புரியாமல் விழித்துக்கொண்டிருந்தனர். இந்தச் சமயத்தில், விடுமுறை நாள் சோம்பலிலிருந்து விடுபட வழி காட்டினான் சப்பாயேவ். கிராமத்திலும், அதைச் சார்ந்த சுற்றுப்புறத்திலும் உள்ள பாதைகள் அனைத்தையும் கால்வாய்ப் பெருக்கு நீர் ஓட்டங்கள் அரித்துச் சென்றுவிட்டதால் அங்கும் இங்கும் பெரும் பள்ளங்களாய்விட்டன. அந்த வழிகளில் சென்ற தளவாட வண்டிகளில் எதுவுமே அந்தப் பள்ளங்களில் சிக்காது சென்றதில்லை வண்டிச் சக்கரமும் அச்சும் முறியாத வண்டிகளே இல்லை யென்னலாம். இதைச் செம்மைப்படுத்தத் தூண்டினான் சப்பாயேவ். ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று, கிராமச் சோவியத்துத் தலைவனை அழைத்து, விரைவில் கிராமப்புற மக்களை யெல்லாம் கூட்டிச் சீர்கெட்ட பாதைகளைச் செப்பனிடுமாறு உத்தரவிட்டான். இந்த உத்தரவு பெரும் அமளியையும் ஆர்ப்பாட்டத்தையும் கிளப்பிவிட்டது. கிராமவாசிகளில் பலர் இதை எதிர்த்தார்கள், செப்பனிடும்



வேலைக்குச் செல்ல மறுத்தார்கள். என்றாலும் பலர் ஈடுபட முனைந்தனர். ஆதலால் சில நாட் கழித்து அந்தப் பாதைகளில் சென்ற அனைவரும், எல்லாம் சிறந்த முறையில் ஒழுங்குபடுத்தப்பட் டிருப்பதைக் கண்டார்கள். இங்ஙனம் கிராமத்திற்குக் கிராமம் இணைப்பாய் அமைந்திருந்த எல்லாப் பாதைகளும் செம்மை யடைந்தன. வருகிற வழியெங்கும் உற்சாகமான இந்த வேலைத்திட்டத்தைத் தொடக்கி வந்தான் சப்பாயேவ்.

சப்பாயேவும், அவனுடன் வந்தவர்களும், சிஷோவைத் தலைமைக் காரியாலயத்தில் கண்டனர். வழக்கமாகச் செய்வது போலவே சிஷோவும் தன் அலுவலைத் தொடங்கினான். வர்ணம் பூசப்பட்ட தேசப்பட மொன்றை எடுத்து மேசை மீது விரித்தான். அப்படத்தின் பலஇடங்களில் வெவ்வேறு வகையான குறியீடுகளும் அடையாளங்களும் இடப்பட்டிருந்தன. அவ் அடையாளங்களைச் சுட்டியபடியே, வெவ்வேறு பகுதிகளில் போரிட்டுக்கொண்டிருக்கும் இலக்குகளைக் குறிப்பிட்டான். அண்மையில் வந்த அறிக்கை பூர்வமான விளக்கங்களின் அடிப்படையில் எதிரியின் இலக்குகளை விளக்கினான். இந்தச் சமயத்தில் பத்துக் குதிரை வீரர்கள் அங்கு வந்தனர்; நன்கு நனைந்திருந்தனர்; உடையெங்கும் சகதி வாரி யிறைக்கப்பட்டிருந்தது; மிகவும் களைப்புற்றிருந்தனர். இந்தக் குழுவினர், பிரிகேட் கமிசார், பிரோவின் தலைமையில் வேவுபார்த்துத் திரும்பியிருந்தனர். நதிப்புறத்தே யிருந்த நான்கு கிராமங்களுக்குள் துணிவோடு புகுந்து பல முக்கியமான செய்திகளைச் சேகரித்திருந்தனர். உள்ளே நுழைந்ததும் தன் கழுத்துப் பட்டிக்குள் செருகிவைத்திருந்த சிறு நோட் புத்தகத்தை உருவி எடுத்தான் புரோவ். அதில் கண்ட குறிப்புகளின் அடிப்படையில் நதிக்கரைக்கு அப்பால் நடப்பனவற்றை வெளியிட்டான். "செஞ்சேனையினரின் முன்னேற்றத்தைக் குலைக்கப் பெரும் அளவில் எதிரிப் படைகள் முயற்சி செய்

கின்றன. ஏராளமான தளவாடங்கள் சேகரிக்கப்படுகின்றன. படைப் பகுதிகள் அனைத்தும் திருத்தியமைக்கப்படுகின்றன. எல்லாப் பக்கங்களிலுமிருந்து ஏராளமான தளவாட வண்டிகள் திரட்டப்படுகின்றன." புரோவின் நோட் புத்தகக் குறிப்புகள் பெரும் அளவில் நடக்கும் எதிரிப் படை முயற்சிகளைத் தெளிவுறுத்தின. இவ்விதம் பெற்ற செய்தி உடனடியாக டிவிசன் தலைமைக் காரியாலயத்திற்கும் ராணுவத் தலைமை நிலையத்திற்கும் அனுப்பப்பட்டது.

சேறும் சகதியும் படிந்திருந்த முகத்துடன் வந்திருந்த கமிசாரின் தோற்றத்தையும், உருவத்தையும் கண்டு பெருமையாலும் மகிழ்ச்சியாலும் பியோடாரின் உள்ளம் மலர்ந்தது. அந்தக் கமிசார் பெட்ரோகிராடைச் சேர்ந்த ஓர் இயந்திரத் தொழிலாளி. 1918 க்கு முன்பு தானே விருப்புற்றுப் போர் முனையில் பணியாற்றச் சேர்ந்தான். கமிசாரை அழைத்துக்கொண்டு சற்று விலகிச் சென்றான் பியோடார்.

"சரி....அரசியல் அலுவல்கள் எப்படி இருக்கின்றன?" என்றான் பியோடார்.

"ஓ...அதுவா ..." என்றபடி விழியைப் பிதுக்கிய கமிசார் மேலே தொடர்ந்தான் "தோழர் கிளிக்கோவ், உங்களிடம் அனைத்தையும் வெளிப்படையாகச் சொல்லி விடுகின்றேன். நான் ஒரு வேலைகூட உருப்படியாகச் செய்யவில்லை. கடவுளே என்னைக் காப்பாற்றும், ஒரு சிறு அம்சத்தைக்கூடச் சரியாக நிறைவேற்ற வில்லை, இதற்காக நீங்கள் எனக்கு எந்தத் தண்டனையும் தரலாம். நான் தான் என்ன செய்வேன்? அரசியல் அலுவலை மேற்கொள்ளுதற்கு வேண்டிய நேரம் கொஞ்சமும் கிடைக்கவில்லையே. அப்படியே ஏதாவது செய்யத் திட்டமிட்டிருந்தாலும் உடனே புது உத்தரவும் திட்டமும் வந்துவிடுகின்றன: நதிப் படுகைக்கு அப்பால் போ, அல்லது வேலைத் திட்



டத்தை விளக்கு என்ற உத்தரவுகள் சுமந்துவிடுகின்றன. இதில் நதியைத் தாண்டிச் செல்லுவதுதான் மிகவும் அவசியமாகத் தோன்றிவிடுகிறது!"

"அது உண்மைதான். நான் அதைப்பற்றியே பேசவில்லை. சூழ்நிலை எதற்கும் அனுமதிக்காதபோது ஏன் அதைச் செய்யவில்லை என்று யாரும் கேட்க முடியாது. என்றாலும்கூட நீ வேலை செய்வதற்கும் வேண்டிய சமயங்கள் இருந்திருக்க வேண்டுமே; அந்தச் சமயங்கள் கொஞ்சம்கூடவா இல்லது போய்விட்டன?"

"இல்லவே இல்லை!" என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னபடியே, ஒரு சிகரெட்டை எடுத்து விரற்கிடையில் சுழற்றினான் புரோவ்.

"இதிலேதான் நீ மிகைப்படுத்தி அளக்கிறாய்! சில சமயங்களில் போதிய நேரமில்லாது போய்விடுவது உண்மைதான். என்றாலும் அந்த நேரத்திலேயே எப்படிப் பயனுள்ள அரசியல்இயக்க அலுவல்களில் ஈடுபடுவது என்பதையும் நீ தெரிந்திருக்க வேண்டும்" என்று முகத்திலடித்தாற் போன்று பியோடார் சொன்னான்.

"அப்படியானால் என்னுடன் இருக்கும் இளைஞர்களைக்கொண்டு ஏதாவது செய்ய முடியுமா என்று நீங்களே முயன்று பாருங்கள்" என்று சிரித்தபடியே சொன்னான் புரோவ்.

"அது வேறு விஷயம் .."

"இதில் வேறு விஷயம் என்ற வேறுபாட்டிற்கே இடமில்லை. நீங்கள் சும்மா முயன்று பாருங்களேன்" என்று வற்புறுத்தினான் புரோவ். "அது சாதாரண வேலை இல்லை. நான் சொல்லுகிறேன். மிகக் கடினமான வேலை" என்று சொன்னபடியே ஒரு விரலை உயர்த்தி விடுகதைக்கு விடை எதிர்பார்ப்பதுபோல நிறுத்தினான் புரோவ்.

"கஷ்டம்தான்" என்று அனுதாபத்துடன் பியோடார் விடையளித்தான்.

புரோவ் தலையாட்டியபடியே பேசத் துவங்கினான்:

"கஷ்டமானது மட்டுமல்ல, செயல் முறையில் நிறைவேற்றவே முடியாது. நிச்சயம் முடியாது! நாங்கள் போரிடத்தான் வந்தோம். எனவே போர் முடிந்தவுடன் தான் புத்தகங்கள் படிப்போம் என்று அவர்கள் மறுக்கிறார்கள். எப்பொழுது சண்டை முடிகிறதோ அதற்கு அப்புறம்தான் புத்தகங்கள் படிக்கவும் பொழுதிருக்கும். அதுதான்..."

"அது தான் என்ன? அவ்விதம் அவர்கள் மறுக்கும் பொழுதுதான் உன்னுடைய அலுவல் தொடங்குகிறது. அவ்விதம் அவ் விளைஞர்கள் பேசுவது தவறு என்று உணர்த்தி அவர்களைத் திருத்த வேண்டுவது கமிசாரின் முதல் கடமை. அரசியல் அறிவு பெறாமல் போரிடுவதென்பது முடியாது என்று அவர்களுக்கு உணர்த்த வேண்டும். எங்கே போகிறோம், எதற்காகப் போரிடுகிறோம் என்றெல்லாம் தெரியாத ராணுவத்தினால் என்ன பயன் விளைய முடியும்? நீங்கள் முயன்றால் இதற்கும் நேரம் கிடைக்கும். முடியவே முடியாது என்பதை நான் ஏற்க மாட்டேன்; நம்பவும் முடியாது. இனி முயன்று பாருங்கள். இது நடைமுறையில் சாத்தியமானதுதான் என்பதை நீங்களே அடுத்த முறை ஒப்புக்கொள்ளுவீர்கள். நீங்கள் செய்ய வேண்டியது பிரமாதமாக ஒன்றும் இல்லை. முதலில் இங்குள்ள ரெஜிமெண்ட் கமிசார்களுக்கும், கட்சிக் கிளைகளுக்கும் கொஞ்சம் ஊக்கமும் உற்சாகமும் ஊட்டி உயிர்த் துடிப்புடன் இயங்கச் செய்ய வேண்டும்...அதற்கு அப்புறம் உங்கள் வசம் எவ்வளவு சிறப்புகள் சார்ந்து கிடக்கும் என்பதை உங்களாலும்கூடக் கண்டுணர முடியாது உயர்ந்து விடும்..."

"நான்...நான்தானே; ஓ நீங்களே பார்க்கலாமே!" என்றபடி ஈரத்தாலும் சகதியாலும் உருமாறியிருந்த தனது உடைகளைச் சுட்டிக்காட்டினான் புரோவ்.



"அது மட்டு மல்ல!" என்று தனது விவாதத்தை மீண்டும் தொடர்ந்தான் பியோடார். "அது மட்டும் போதாது, அந்த இடத்தில்தான் ஒரு தளபதியின் அலுவலில் இருந்து உம் அலுவலுக்கு உள்ள வேறுபாடு தொடங்குகிறது. அது மட்டு மல்ல. நீங்கள் ஒரு நல்ல போர்வீரன் என்று மட்டுமே கருதுவார்களே யன்றி வேறு விதமாகக் கருத மாட்டார்கள்."

"அப்படிப் போர்வீரன் என்று மட்டும் பெயரெடுப்பதைத்தான் அவர்கள் பெரிதாகக் கருதுகிறார்கள்' என்று பியோடாரைத் திருப்திப்படுத்த முயன்றான் புரோவ். "அவர்களோடு இணங்கிப் போகாவிட்டால் நமது பாடு அவ்வளவுதான். நம்மை எதற்கும் அவர்கள் சீண்டுவதில்லை, மதிப்பதும் இல்லை; நீங்கள் பிரமாதமாகப் பேசிவிடுகிறீர்களே தவிரச் செயல்முறைக்கு ஒவ்வாதவற்றையே தருகிறீர்கள் என்று நம்மையே திருப்பிக் குற்றம் சாட்டிவிடுகிறார்கள். இந்த நிலையில் நீங்கள் சொல்லுவதென்ன வென்றால்.."

"பொறுங்கள், பொறுங்கள், சற்றுப் பொறுங்கள். நான் திரும்பவும் அதைத்தான் சொல்லுகிறேன். அதுவும் அவசியம்தான், போரிடுவதும் மிக மிக அவசியம்தான். ஆனால் அவசரமான காரியம் அது ஒன்று மட்டும் இல்லை. நாமே ராணுவத்தினருக்குப் பொது அரசியல் கருத்துக்களைப் போதிக்காவிட்டால் வேறு யார்தான் வந்து போதித்துவிடப் போகிறார்கள்? ஒரு சிறந்த போர்வீரனாக இருப்பது மட்டும் போதாது; எதற்காகப் போரிடுகிறோம் என்றும் கட்டாயம் உணர்ந்திருக்க வேண்டும் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள முடியவில்லையா?"

பாதகமான சூழ்நிலையிலும், இயலாத சமயங்களிலும் கூட ராணுவத்தினரிடையே அரசியல் இயக்க அலுவல்களை நடத்த முடியு மென்றும், அவ்விதம் நடத்த வேண்டிய அவசியத்தையும் புரோவிற்கு நன்கு விளக்கினான் பியோடார்.

புரோவ் அதற்குப் பின் ஏதும் மறுக்கவில்லை. என்றாலும் கூடத் தன்னால் அதற்குமேல் ஏதும் செய்ய முடியாது என்பதுபோலப் பேசாதிருந்தான். என்றாலும் அவன் ஒரு சிறந்த தளபதியாக நன்கு பணியாற்ற முடியும். எனவே சின்னாட்களில் இந்தத் தோழருக்குத் தளபதி உத்தியோகம் வழங்கப்பட்டது; இவருடைய கமிசார் வேலைக்கு வேறொருவர் நியமிக்கப்பட்டார்.

பியோடாரும் புரோவும் தங்களது பேச்சை முடித்த பின்னர் மீண்டும் மேசைக்குத் திரும்பினர். அதற்கு முந்திய நாள் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றை விவரித்துக்கொண்டிருந்தான் சிஷோவ்:

"பதினைந்து பேர்கள். எப்படி உடை யணிந்திருக்க வேண்டுமோ அப்படி அணிந்திருந்தார்கள். ராணுவப் பட்டயம் ஏதும் இல்லை. ராணுவ வீரர்கள் போலிருந்தனர்; அவ்வளவுதான். தளபதி மட்டும் ஒரு சிவப்பு நட்சத்திரத்தைத் தன் சட்டைப் பைக்குள் வைத்திருந்தான். அவர்கள் ஒரு கிராமத்திற்குள் நுழைந்து நேரே கிராமச் சோவியத்திற்கு வந்து "தலைவர் எங்கே?" என்று உரக்கக் கேட்டார்கள்; அங்கிருந்த ஐம்பது விவசாயிகள் எதுவும் புரியாது கசமுசவென்று தங்களுக்குள்ளே பேசிக்கொண்டார்கள். அவர்கள் அனைவரும் பயந்துவிட்டார்கள். ஏதாவது ஒரு பக்கத்தை மட்டும் சார்ந்துவிடத் தீர்மானித்துவிட்டார்கள்.

"நீங்கள் எல்லோரும் கோல்சாக்கின் வீரர்களா?" என்று கேட்டார்கள்.

"ஆம்...கோல்சாக்கின் வீரர்கள்தான்!" என்று வந்த இளைஞர்கள் கூறினர். கோல்சாக்கின் வீரர்களைப் போன்று நடித்து என்ன நடக்கிறது என்று வேடிக்கை பார்க்க முடிவு கட்டினார்கள் அவர்கள்.

"நீங்கள் எதற்காக இங்கே வந்தீர்கள்? போரிடுகின்றீர்களா?"



"ஆம்...சகோதரர்களே...நாங்கள் செஞ்சேனையர்களைத் தேடிக்கொண்டிருக்கிறோம். அவர்களில் யாராவது இந்தப் பக்கங்களில் இருக்கின்றார்களா? யாருக்குத் தெரியும்?"

"பின்னர் அங்கிருந்த விவசாயிகளிடம், அங்குள்ள செஞ்சேனைக் கிளைகளின் தரத்தையும், எங்கே அமைந்துள்ளது என்ற விபரத்தையும், அவர்கள் எங்கே போகப் போகிறார்கள், விவசாயிகளை எப்படி நடத்தினார்கள் என்பதையும் கேட்டார்கள்.

"ஆனால் அவர்கள் எதுவும் உருப்படியாகச் சொல்லவில்லை. தட்டிக் கழித்தார்கள்.

"ஐவான் பார்வ்யோனிச்சே சொல்லட்டும். அவனுக்கு எல்லாம் தெரியும். அவன் தான் சோவியத்துத் தலைவன்."

"ஐவான் பார்வ்யோனிச் உள்ளிருந்து வந்தான். பெரும் உருவம்: பதினொரு கல் எடை யிருப்பான்" என்றபடி தன் கைகளை வயிற்றுக்கு முன் இணைத்து நீட்டிக் காட்டினான் சிஷோவ்.

எல்லோரும் விழுந்து சிரித்தார்கள்.

"ஆமா...இந்த மாதிரி ஆட்கள் எத்தனைபேரை வேண்டுமானாலும் இங்கே உள்ள சோவியத்துகளில் காணலாம். இந்த விவசாயிகள் விஷயம் புரியாமல் ஆளைப் பார்த்தே பயந்துவிடுகிறார்கள். இப்படிப் பொதி மூட்டைகளையே தேர்ந்தெடுத்துவிடுகிறார்கள்...

"இந்த ஐவான் பார்வ்யோனிச் மெதுவாக நடந்து முன் மண்டபத்திற்குக் கண்களைச் சிமிட்டியபடியே வந்தான். ஆசாமி கொஞ்சங்கூடப் பயப்படவில்லை. "கோல்சாக் வீரர்களிடம்" மிக உல்லாசமாக நெருங்கினான். குனிந்து குனிந்து வணங்கியபடியே அருகில், வந்து "எப்படி இருக்கிறீர்கள்?" என்று நலம் விசாரித்தான்.

"நீங்கள்தான் சோவியத்தின் தலைவரா?" என்று கேட்டார்கள் இளைஞர்கள்.

"நானேதான்" என்று சொல்லிவிட்டுப் பல்லெல்லாம் தெரியக் காட்டி நின்றான் அந்தப் பாடாவதி. "அந்த அயோக்கியர்கள்தான் என்னைப் பொறுக்கினார்கள், எனவே நான் தலைவனாகிவிட்டேன். நாங்கள் சென்ற வாரத்திலிருந்தே உங்களை எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். சகோதரர்களே நல்ல வேளை இப்பொழுது நீங்கள் வந்துவிட்டீர்கள், கடவுளுக்கு நன்றி. அந்தச் சிவப்புப் படையர்கள் எங்கள் பிராணனை வாங்கிவிட்டார்கள்."

ஆனால் இதை நம்பாதவர்கள்போல அந்த இளைஞர்கள் நடிக்கத் தொடங்கினர்.

"எதற்காக ஐயா விளையாடுறே அறிவோடு பேசு... எங்கே உன் நண்பாகள் ?"

இதைக் கேட்ட சோவியத்துத் தலைவன், இடுங்கிப் போன கண்களுடன் அவர்களை வெறித்துப் பார்த்துவிட்டு, "என்ன நண்பர்களே! இப்படிப் பேசுகிறீர்கள்? ஏன் இப்படி...." என்று கேட்டான்.

"நாங்கள் ஏன் இப்படிப் பேசுகிறோம் என்பதுதான் உனக்குத் தெரியுமேய்யா....எங்கே அந்தச் சிவப்பர்கள். உடனே ஒளிக்காமல் சொல். ஏய்... சிவப்புப் பிசாசே..."

உடனே தலைவன் அவர்கள் காலடியில் விழுந்து தான் ஒன்றும் அறியாத நிரபராதி என்று வேண்டினான். இதை நிரூபிக்கக் கூட்டத்திலிருந்து மூன்று சாட்சிகளையும் அழைத்தான். அந்த மூவரும் அவன் பக்கத்தில் சார்ந்து பேசினார்கள்.

..."ஏன்! நீங்கள் என்ன நினைத்தீர்கள்? ஐவான் பார்வ்யோனிச் ரொம்பவும் மதிப்புள்ள நல்ல மனிதர். சிவப்பர்களோடு இவருக்கு எந்தவிதத் தொடர்பும் எப்பொழுதும் இருந்ததில்லை. விவசாயிகள்தான் இவரைச் சோவியத்துக்குத் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள்."

பின்னர் அந்த இளைஞர்கள் குதிரைகளை விட்டுவிட்டுச் சோவியத்திற்குள் நுழைந்தார்கள். ஒரு காகிதத்தில்



பார்வ்யோனிச் சொன்னவற்றையெல்லாம் எழுதி, அவனைக் கையெழுத்திடுமாறு சொன்னார்கள். தங்களுடைய மேலிடத்து அலுவலர்க்கு எல்லாச் சாட்சியங்களையும் கொண்டு செல்ல வேண்டுமென்று சொன்னார்கள்.

"இந்த வஞ்சகன் எல்லாவற்றிலும் கையெழுத்திட்டான். உடனே அவனையும் அவனுக்குப் பக்கபலமாகச் சாட்சி சொன்ன மூவரையும் வண்டியிலேற்றி இங்கு கொண்டுவந்தார்கள், இங்கு வந்து நிலைமையைப் புரிந்து கொண்டதும் அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. "கடவுளே காப்பாற்றும் நான் உண்மையில் போல்ஷெவிக்குகளையே சேர்ந்தவன்" என்று கதற ஆரம்பித்துவிட்டான். உடன் வந்தவர்கள் பயத்தால் செத்துப் போனதுபோல் ஒன்றும் பேசாது விதிர்த்துப் போயிருந்தார்கள். எல்லோரும் இப்படிப் பயங்காளிகளாக, கோழைகளாகப் போய்விடுகிறார்கள்!" என்றபடி கையை அசைத்தான் சிஷோவ்.

"அவர்கள் இப்பொழுது எங்கிருக்கிறார்கள்?" என்று கேட்டான் பியோடார்.

'அவர்களை நாங்கள் நீதிமன்றத்துக்கு அனுப்பிவிட்டோம். போர்முனை எல்லையில் வாழும் மக்களெல்லாம் குழம்பிப் போய்விடுகிறார்கள் என்பது உண்மைதான். வாரத்துக்கு நான்கு முறை அவர்களிடம் வெள்ளைப் படையினரும், செஞ்சேனையினரும் மாறி மாறி வருவார்கள். யார் முதலில் வந்தது, யார் கடைசியில் வந்தது என்பதே அவாகள் நினைவில் தங்காது. யார் அவர்களை நரகக் குழியில் தள்ளுவதுபோலக் கொடுமை செய்தது, யார் அவர்களைப் பேசாது விட்டுச் சென்றது என்பதைக்கூட ஒப்பிட்டு அறிய அவர்களால் முடியாது. அவர்களிடமிருந்து எத்தனை குதிரைகள் பறித்துச் செல்லப்பட்டன, எத்தனை வண்டிகள் உடைந்து போயின, எத்தனை வீடுகள் எரிக்கப்பட்டன, எவ்வளவுபொருள்கள் பறிக்கப்பட்டன, அல்லது

கவர்ந்து செல்லப் பட்டன என்பதைக்கூட அவர்களால் கணக்கிட்டுச் சொல்ல முடியாது. விவசாயிகளின் கால்நடைகளைக் காப்பதற்கெல்லாம் நாம்தான் வழி சொல்லித் தர வேண்டும். தங்களுடைய மந்தைகளை யெல்லாம் வெகு தூரத்தில் உள்ள அடர்ந்த காடுகளுக்குள் ஓட்டிச் சென்று பதுங்கிக் கொள்ளுவார்கள். இரவோடு இரவாக ஊருக்குத் திரும்பி உணவெடுத்துச் செல்லுவார்கள். ராணுவத்தினர் கிராமத்தில் நுழைந்ததும் முதலில் கேட்பது, "குதிரைகள் எங்கே? ப க்கள் எங்கே?" என்பதுதான்.

"அவர்கள் எல்லாவற்றையும் கவர்ந்து சென்றுவிட்டார்கள். எதையும் விட்டுச் செல்லவில்லை".

"யார் தூக்கிச் சென்றது?"

"கேட்பது வெள்ளைப் படையினராக இருந்தால் செஞ்சேனையினரைப்பற்றி விவசாயிகள் புகார் செய்வார்கள்; செஞ்சேனையினர் கேட்டால் வெள்ளைப் படையினரைக் குற்றம் சாட்டுவார்கள். இப்படியே ஏமாற்றிச் சொல்லித் தப்பித்து வந்தார்கள். ஆனால் எல்லாச் சமயத்திலும்ஏமாற்றிவிட முடிவதில்லை. சில சமயங்களில் விவசாயிகள் மறைத்துப் பேசுவதைப் புரிந்து கொண்டவர்கள், தமது சாரணப் படைகளைக் காட்டுக்குள் சென்று தேட அனுப்பி விடுவார்கள். அவர்கள் காட்டிற்குள் புகுந்து எல்லா மந்தைகளையும் ஓட்டிச் சென்று விடுவார்கள். கிராமம் முழுவதும் உடனே ஓலமிட்டு அலறும். இரத்தத்தைச் சிந்தி, உரிமையைக்காக்கத் தெரியாத கோழைகள் கண்ணீர் மட்டும் வடிப்பதால் என்ன சாதிக்க முடியும்? எதற்கும் பயனின்றிக் கண்ணீர் விட்டுக் கதறுவதுதான் கண்ட பலன்!" என்று முடித்தான் சிஷோவ்.

எல்லாத் துணைப் படைகளையும் சுற்றிப்பார்த்துவந்த சப்பாயேவும், அவனுடைய துணைவர்களும் ஒரு பெரிய கிராமத்திற்குள் புகுந்தனர்.

"இங்கே ஏதாவது சோவியத் இருக்கிறதா?"



"சோவியத்தா...ஒரு சோவியத் ஒரு சமயத்தில் இங்கே இருந்தது" என்றனர் கிராமவாசிகள்.

"எங்கே இருந்தது?"

"அந்த வீடாகத்தான் இருக்க வேண்டும்" என்று ஒரு பெரிய வீட்டைக் காட்டினார்கள்.

"சரி. இப்பொழுது எங்கே இருக்கிறது?"

"இப்பவா அது யாருக்குத் தெரியும். கிராமத்தின் ஏதாவது ஒரு மூலையில் இருக்கும்."

"ஏன் என்னய்யா சமாசாரம். உங்களுக்கு நிசமாவே ஒண்ணும் தெரியாதா?"

"அப்படித் தெரிஞ்சுக்கிறதுனாலே எங்களுக்கு என்னய்யா பிரயோசனம்? எங்களுக்கு ஒன்றும் தெரியாது. குதிரை மேலே ஏறி அந்தக் கடைசியிலே போய்க் கேளுங்க. அங்கே இருக்கிறவங்க இடத்தைச் சொல்லலாம்."

"ஆனால் நீங்க இங்கேதானே வாழ்கிறீர்கள்?"

"சந்தேகமில்லாம நாங்க இங்கேதான் வாழ்கிறோம்".

"அப்படி யிருந்தும் இங்கே ஒரு சோவியத் இருக்கா இல்லியாங்றது உங்களுக்குத் தெரியாது. இல்லையா?"

"கட்டாயம் இங்கே ஒருசோவியத் இருக்க வேண்டுமே',

"அப்படியானால் அதற்குத் தலையாரி உண்டா?"

"ஆமாம். ஒரு தலையாரி இருக்கான்."

"அங்கே ஏதாவது பால் கிடைக்குமா?"

"கிடைக்கும்,"

"அப்படியானால் எங்களுக்கு ஒரு பானை பால் தாருங்கள். சீக்கிரம் ஏற்பாடு செய்யுங்கள். உண்மையில் குளிருகிறது."

"ஏய் இவான்! இங்கே வா" என்று ஒரு இளைஞனைக் கூப்பிட்டுப் பால் கொண்டு வருமாறு அனுப்பினார்கள். எப்படி நடந்துகொள்ளுவது, எப்படிப் பேசுவது என்றெல்லாம் அவர்களுக்குத் தெரியாது. இரண்டு பேர் வந்து, சப்பாயேவை அடையாளம் கண்டுகொண்டனர். புதிதாக

வந்திருப்பவர்கள் மேலிடத்து அலுவலர்களிடமிருந்து வந்தவர்கள் இல்லை யென்பதை வெகுநேரம்வரைக்கும் அந்தக் கிராமவாசிகள் நம்ப மறுத்துவிட்டார்கள். பல விஷயங்களை எடுத்துச் சொல்லிச் சைகைகளால் உணர்த்திய பின்னர்தான் புரிந்துகொண்டனர். அதன் பின்னர் சரளமாக மனம்விட்டுப் பேசிப் பழகத் தொடங்கினர். அவர்களது பேச்சுப் போக்கிலிருந்து அவர்கள் நெஞ்சில் நிறைந்து கிடக்கும் அளவு கடந்த அனுதாபத்தையும், அச்சத்தையும், சொல்ல முடியாத பயப் பிராந்தியையும் உணர முடிந்தது.

கிராமவாசிகள் எல்லோராலும் கசந்துபோய்விட்டார்கள். யாருமே வேண்டாம், தங்களைத் 'தனியே விட்டுவிட்டால் போதும்'' என்ற நிலைக்கு வந்துவிட்டார்கள். பிறர் எப்படிக் கருதினாலும் போர் தொடங்கியது அவர்களுக்கு ஒரு பெருஞ் சுமையாகிவிட்டது.

வந்தவர்கள் ஒரு மணி நேரத்துக்கு மேல் அவர்களுடன் உரையாடிக்கொண்டிருந்தனர். கடைசியாக அவர்கள் பிரிந்தபொழுது தோழமைப் பரிவுடன் கிராமவாசிகள் விடை கொடுத்தனுப்பினார்கள்.

மிக்கைலாவின் ரெஜிமெண்ட், பொரொவ்கா நதிப் படுகையில் இலக்குகளை அமைத்து நின்றது. அந்த இடத்திற்குச் செல்ல வேண்டுமானால் நதிக் கரை வழியாகவே நடந்து செல்ல வேண்டும். அதற்கு அப்பால் உள்ள சிறு குன்றுக்குப் பின்னால் எதிரியின் போரெல்லை இருந்தது. அங்கு இடையறாது குண்டுகள் முழங்கிக்கொண்டிருந்தன. யாராவது கடந்து செல்லுவதைக் கண்டுவிட்டால் உடனே பழி வாங்கிக்கொள்ளுவதுபோல எதிரிப் படையினர் கொன்று தீர்த்துவிடுவார்கள். சப்பாயேவும், அவனுடைய துணைவர்களும் வந்துகொண்டிருந்தனர். கிராமத்திற்கு இன்னும் கொஞ்ச தூரம்தான் இருந்தது, கிராமத்துக் களஞ்சியங்கள்கூடக் கண்ணில் பட்டன. இந்தச் சமயத்தில் எதிரிப் படைகளின் தாக்குதல் வலுத்தது. தோட்டாக்



கள் ஊளையிட்டுப் பாய்ந்து சென்றன. குதிரையில் வந்த ஒருவருடைய காலைத் துளைத்துச் சென்றது ஒரு குண்டு. கடிவாளங்களைச் சுண்டிப் பாய்ந்து சென்றார்கள் அனைவரும். கூட்டமாகத் திரண்டு செல்லாமல் தனித் தனியாகப் பிரிந்து, ஒருவர்க்கு ஒருவர் இருபது கஜ இடை வெளி விட்டுப் பறந்தனர். பியோடாரின் மனத் திரையில் பழைய சம்பவமொன்று நிழலாடியது. ஸ்லோமிகின்ஸ்காயாப் போரில் தான் மட்டும் வெருண்டு ஓடிச் சென்ற வெட்கக் கேட்டை எண்ணிப் பார்த்தான். உடனே உள்ளத்தில் ஒரு மாறுபாடு எழுவதை உணர்ந்தான். அது போன்ற மனக் குழப்பம் ஏதும் இப்பொழுது அவனுக்கு ஏற்படவில்லை. அப்பொழுது பீரங்கிகள் முழங்கின, இப்பொழுது தோட்டாக்கள்தான் வெடிக்கின்றன. என்றாலும் சில சமயங்களில் பீரங்கிக் குண்டுகளைவிடத் தோட்டாக்களின் பாய்ச்சல் பயங்கரமாக இருக்கும். ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் பயங்கரமானதுதான். "தோட்டாக்கள் உடம்பைத் துளைக்கும், பீரங்கிக் குண்டு முழக்கம் உள்ளத்தையே சிதைக்கும்.'' இந்த எண்ணங்கள் உந்தக் குதிரையை வேகமாகச் சுண்டினான். தன்மீது ஏதாவது வெடிகுண்டு பாய்ந்துவிடும் என்ற எண்ணமே பியோடாருக்கு இருக்கவில்லை...'' ஒரு வேளை எனக்கும் பக்கத்தில் வருபவன்மீது பாயலாம்...ஆனால் என்மீது அனேகமாய்ப் பாய்ந்து விடாது'' என்று சமாதானப்படுத்திக்கொண்டான். இந்த மாதிரியான அசட்டு எண்ணங்கள் ஏன் அவனிடம் இப்பொழுது தோன்ற வேண்டும் என்பது அவனுக்கே புரியவில்லை!

இந்தப் பாய்ச்சலில் இரண்டு குதிரைகள் படுகாயமுற்றன, உடன்வந்த துணைவரின் தலைக்கு வந்த தோட்டா தலைப்பாகையைத் தட்டிப் பறித்துச் சென்றுவிட்டது! குண்டுவீச்சு மிகுதியானதும் குதிரையை விட்டிறங்கிப் பெரிய வைக்கோற் படப்புகளுக்குப் பின்னால் பதுங்கிக்

கொண்டனர். பின்னர் ஒருவர் பின் ஒருவராக, வைக்கோற் படப்பிலிருந்து இன்னொரு படப்பிற்கும், களஞ்சியங்களுக்கும் பதுங்கிப் பதுங்கிச் சென்று கிராமத்திற்குள்ளேயே புகுந்துவிட்டனர். சப்பாயேவ்தான் கடைசியில் வந்தவன். பியோடார், தான் ஒளிந்திருந்த இடத்திலிருந்து சப்பாயேவின் முயற்சிகளைக் கவனித்தான். சப்பாயேவ் ஒரு வைக்கோற் படப்பிலிருந்து இன்னொன்றுக்குத் துரிதமாக ஓட்டமும் நடையுமாக ஓடுவதும், சட்டென நின்று குனிந்துப் பதுங்குவதும் பியோடாரின் கண்களில் பட்டன. நேரடியாகவே ஓடிக் கிராமத்தில் புகுவது இயலாதெனச் சப்பாயேவிற்குத் தோன்றியது. எனவே துப்பாக்கி முழக்கம் ஓயட்டும் என்று சற்றுத் தாமதித்த பின், எதிர்த் திசையில் திரும்பிச் சுற்று வழியாகச் சென்று கிராமத் தலைமைக் காரியாலயத்திற்கு வந்துவிட்டான். அவன்தான் கடைசியில் வந்தவன்.

பியோடாருக்குச் சப்பாயேவ் வந்த விதத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல் எழுந்தது.

"என்ன வாஸிலி இவானோவிச்! என்னய்யா சமாசாரம்? வாலைத் திருப்பிப் பதுங்குவதுபோல அல்லவா ஒடுங்கிவிட்டாய். களஞ்சியங்களுக்குப் பின்னால் வெருவி அஞ்சி நடுங்குவதுபோல் அல்லவா பதுங்கி யிருந்தாய்!"

"தனியாய்ப் பாய்ந்துவரும் தோட்டாக்கள் என்றால் எப்பொழுதும் எனக்குப் பயந்தான். நான் அவற்றை வெறுக்கிறேன். ஒன்றும் இல்லாமைக்காக வீணில் உயிரைப் பலி கொடுப்பதை நான் விரும்பவில்லை. போர்க்களத்தில் சாவதற்குக் கொஞ்சமும் தயங்க மாட்டேன், ஆனால் இங்கு சாவது வேறு விஷயம்" என்று சொன்னபடியே காறித் துப்பினான் சப்பாயேவ்.

தலைமைக் காரியாலயத்தை யடைவது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. நதிக்கு அப்பாலிருந்த குன்றிலிருந்து கிராமம்வரைக்கும் ஒரே நெருப்பு மயமாக இருந்தது.



இரண்டு வீடுகளுக்கிடையே யாராவது தென்பட்டால் உடனே எதிரிகள் பல தோட்டாக்களைச் சுட்டுத் தள்ளிவிடுவார்கள். செஞ்சேனை வீரர்களும் தங்களது கை வரிசையைக் காட்டத் தவறவில்லை. களஞ்சியங்களின் மீதே ஏறிக் கூரை முகடுகளுக்கும், முள்வேலிகளுக்கும் பின் புறங்களில் பதுங்கிக்கொண்டனர். இடிந்த வீட்டுச் சுவர்களுக்குப் பின்னால் பதுங்கிக்கொண்டு, சுவரில் துளையிட்டு எதிர்க் கரையில் நிகழ்வனவற்றைக் கூர்ந்து கண்காணித்து வந்தார்கள். குன்றுக்கு அப்பாலிருந்து ஏதேனும் ஓர் உருவம் கருப்பாகத் தென்பட்டாலோ, நகர்ந்தாலோ, அல்லது தலையை நீட்டினாலோ போதும், உடனே சரமாரியாகக் குண்டுகளைப் பாய்ச்சினார்கள். இது உண்மையிலேயே பெரும் போரில்லை என்றாலும் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் மாறிமாறி வேட்டையாடும் பந்தயம் போன்றிருந்தது. இதில் வியத்தகு செய்தி என்னவென்றால், பெண்கள் அழகாக உடையுடுத்திக் கிராமத்தில் இங்கும் அங்கும் சுற்றி வந்துகொண்டிருந்ததுதான். சில இடங்களில் ஆடிப்பாடி உல்லாசமாகக் கழித்தனர். சிறுவர்களும் இந்த வாய்ப்பை விட்டுவிடாது பெண்களைச் சூழ்ந்து ஆட்டத்திலும் பாட்டிலும் கலந்துகொண்டனர். ஒரு இளைஞன் தன்னுடைய அக்கார்டியன் வாத்தியத்தில் அதி தீவிரமாக வாசித்துக்கொண்டிருந்தான். சண்டையைப்பற்றி யாருமே பொருட்படுத்தவில்லை!

இந்தக் கிராமத்தின் அருகில் ஓடிய நதி அவ்வளவு அகலமானதன்று என்பதையும் நினைவில்கொள்ள வேண்டும். குன்றுக்குப் பின்னால் இருந்தபடியே, எதிர்ப்புறத்தில் வருவது செஞ்சேனை வீரனா, அல்லது விவசாயியா, அல்லது கிராமத்துப் பெண்களா விளையாடிச் செல்லுவது என்பதையெல்லாம் வெள்ளைப் படையர் வெகு எளிதில் கண்டுபிடித்துவிடலாம். செஞ்சேனை வீரர்களைக் கண்டால் மட்டுமே வெடிகுண்டு வீசப்பட்டது. எனவே எதுவுமே நடக்

காதது போலத் தமது வேலைகளில் கிராமவாசிகள் அத்தனை பேரும் அமைதியோடு அவசரமின்றி ஈடுபட்டிருந்தனர் தொடர்ந்த துப்பாக்கிச் சத்தங்களின் பரிமாற்றம் இரு திசைகளிலுமிருந்து எதிரொலிக்காவிட்டால் உயிருக்கு எந்தக் கணமும் ஆபத்திருக்கிறது என்பதை நம்புவதுகூடக் கடினமாக இருக்கும்; அவ்வளவு கவலையின்றிக் கிராமவாசிகள் அனைவரும் ஈஸ்டர் பெருவிழாவை அமைதியாக எங்கோ ஒரு மூலையில் கொண்டாடி மகிழ்ந்தார்கள்.

சூழ்நிலை யனைத்தையும் அறிந்துவந்த சப்பாயேவ், குழுவினர், நதிக்கு அப்பால் சென்று உளவறிந்து கண்ணோட்டம் பார்த்துவர ஆள் அனுப்புமாறு மிக்கைலாவிடம் ஆலோசனை சொல்ல விழைந்தார்கள். ஆனால் அன்று காலையில்தான் ஒரு சாரணப் படையை அவன் அனுப்பியுள்ளான் என்றும் அந்தப் படையினர் எந்த நிமிஷமும் திரும்பிவரக் கூடுமென்றும் பின்னரே தெரியவந்தது. நோட்டம் பார்க்கச் சென்றவர்கள் விரைவில் திரும்பிவிட்டனர், என்றாலும் தங்களுடன் வந்த இருவரை ஆற்றின் அக் கரையிலேயே புதைத்துவிட்டு வந்திருந்தார்கள்! ஆழமில்லாத கரை யோரமாகச் சென்றபொழுது அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்களாம். மாற்றாக ஏதேனும் பணயம் தராமல் போர்க் களத்தில் எதையும் சாதித்துத் திரும்புவது கடினம்தான்! உளவறிந்துவந்தவர்கள் தங்கள் அறிக்கையைச் சமர்ப்பித்தவுடன் ஒரு ஆலோசனைக் குழு கூட்டப்பட்டது. அன்று இரவே படையெடுத்துப் பாய்வது என்று முடிவு செய்யப்பட்டது. ஆழமில்லாத நீர்த் துறைப் பகுதிகளில் எல்லாம் எதிரில் படையின் காவல் கடுமையாய் இருக்கும் என்பது அவர்களுக்குத் தெரியும். எனவே பொழுது போவதற்குள் வேறு இலகுவான பகுதியொன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. படையெடுப்பைத் தானே தலைமையேற்று நடத்த மிக்கைலாவ் முனைந்தான். எப்படியும் முழு வெற்றி கிடைத்துவிடு



என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது. ஏனென்றால் இதற்கு முன்னர் தொடர்ந்து நடந்த சிறு சிறு கிளர்ச்சிப் போர்களிலேயே வெள்ளைப் படையினர்மீது ஓரளவு வெற்றி பெற்றிருந்தனர். இந்தக் கிளர்ச்சிகளும் இடையீடின்றி ஆங்காங்கு தொடர்ந்து நடத்தப்பெற்றன. குறிப்பிட்ட பத்துக் கம்யூனிஸ்டு ஊழியர்கள் வயிற்றால் நகர்ந்தபடியே கிராமத்தின் நடு மையத்திற்கு வந்துவிடுவார்கள். செஞ்சேனையினர் நின்று சுட்டுக்கொண்டிருந்த இடைவெளிகளுக்குள் பதுங்கிப் பதுங்கி முன்னேறி வருவார்கள். எல்லோரும் ஒரே திசையை நோக்கியபடியே தலையைக் கூடத் தூக்காது மெதுவாக நகர்ந்தபடியே முன்னேறுவார்கள். முந்திய இரவில் துளையிடப்பட்டிருந்த கிராதிகளுக்கும், சுவர்களுக்கும் பின்னால் பதுங்கிக்கொள்ளுவார்கள். இந்தப் பொந்துகளுக்குள் நுழைந்தபடியே நதிக் கரையை அடைந்துவிடுவார்கள். கிராதிகளுக்குள் நுழையும் முன்னர் சிறிது சிறிது வேற்றுருவம் காட்டி மறைந்துகொள்ளுவார்கள். இத்தகைய வேற்றுருவம் கொள்ளுவது அப்படிப் பெரிய விந்தையல்ல! சிறு சிறு குச்சிகளையும், தேவதாரு மரக் கிளைகளையும் உடைகளோடு பொருந்திக்கொள்ளுவார்கள். அதன்மீது பெருத்த கம்பளிப் போர்வைகளை எடுத்துப் போர்த்திக்கொண்டு மனித உருவம் என்று சந்தேகிக்காதவண்ணம் சுருண்டுகொள்ளுவார்கள் இந்த முண்டங்கள் நதிக் கரையை நோக்கிச் சாரிசாரியாக உருண்டு செல்லும்! சில சமயங்களில் தத்தமக்குப் பிடித்தபடி, வைக்கோலையும், உலர்ந்த சருகுகளையும், இதர போர்வைகளையும் போர்த்திக்கொள்ளுவார்கள். ஒரே சமயத்தில் பத்து அல்லது பதினைந்து பூதங்கள் போல பல்வேறு திசைகளிலிருந்து ஆற்றங் கரையை நோக்கி ஊர்ந்து வருவார்கள். கரையோரமாயுள்ள மணல் திட்டுகளிலும், புதர்களிலும், இதர மறைவிடங்களிலும் இருந்து ஒரே சமயத்தில் பாய்ந்து வந்து உரக்கக் கத்துவார்கள்.

"வீரர்களே! வெள்ளைப் படைவீரர்களே! எங்கள் தோழர்களே! உங்களுடைய படைத் தலைவர்களைக் கொன்று தீர்த்துவிடுங்கள். எங்களுடன் வந்துவிடுங்கள்! உங்களை ஏமாற்றி வைத்திருக்கிறார்கள். கிராமவாசிகளோடு கிராமவாசிகளைப் போரிட்டு மடியத் தூண்டிவிட்டிருக்கிறார்கள். படைத் தலைவர்கள் அத்தனை பேரும் கனதனவான்களின் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள்தான் உங்களது எதிரிகள்; நாங்கள் உங்களது சகோதரர்கள். வந்துவிடுங்கள்; தோழர்களே! வந்துவிடுங்கள் உங்கள் படைத் தலைவர்களை ஒரு நொடியில் கொன்று குவித்துவிட்டு எங்களுடன் வந்துவிடுங்கள்" என்று அழைப்பார்கள்.

இந்த மாதிரி இடங்களில் ஆறு அகலமாயிராது; எனவே பனித் திவலைகள் வீழ்ந்துகொண்டிருக்கும்பொழுது இக்கரையிலிருந்து பேசுவது அக்கரைக்கு கேட்கும்; இங்ஙனம் தங்களோடு வந்துவிடுமாறு தூண்டிக் கிளர்ச்சி செய்பவர்கள் எவரும் காண முடியாத சமயத்தில், இருள் மயங்கிய காலையிலோ அல்லது அந்தியிலோதான் பதுங்கி வருவார்கள். எதிர்க் கரையிலிருந்து இவற்றை அரைகுறையாய்க் கேள்விப்படும் படைத் தலைவர்கள் அனைவரும் இந்தப் போல்ஷெவிக்குப் போதகர்களை இழி சொல்லாலும் சுடு சொல்லாலும் நிந்திப்பார்கள், பழிப்பார்கள், வாய்க்கு வந்தவாறெல்லாம் திட்டுவார்கள். சில சமயங்களில் எதிர்க் கரையில் இருந்தவாறே சுட்டுத் தள்ளுவார்கள். நேரடியாக யாரும் எதிர்ப்படாத சமயத்தில் கண்ட கண்ட இடங்களில் சுட்டுத் தள்ளுவதால் என்ன பயன் நேரப்போகிறது என்பதைக்கூடச் சிந்திக்கும் திறன் அப்பொழுது எவ்விதம் அவர்களுக்கு இருக்கும்!

வெள்ளைப் படையினர் செஞ்சேனைக்கு வந்துவிடுவதாக உறுதியளித்தார்கள்; என்றாலும்கூடக் கரையோரத்தில் அமைக்கப்பட்டிருந்த தமது படைப்பகுதியை விட்டுத்



தப்பி வர அஞ்சினார்கள். செஞ்சேனைப் படையைச் சேர்ந்த உளவாளிகள் அவர்களது மனத்தை மாற்றிவிட்டார்கள்; என்றாலும்கூடத் தங்களது படைப்பகுதிக்குள்ளேயே ஏதேனும் பயங்கர விளைவுகள் ஏற்பட்டுவிடக் கூடும் என்ற திகில் அவர்களை எப்பொழுதும் பயமுறுத்தியே வந்தது. நதிக்கு எதிர்க் கரையிலிருந்து செஞ்சேனையினர் கூறிய எளிய வேண்டுகோள்களைக் கேட்டுப் பல வெள்ளைப் படையினர் திருப்தியடைந்தனர்; மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டனர். "போல்ஷெவிக் சகோதரர்களோடு" பேசிக்கொண்டிருந்த பல வெள்ளைப் படையினரைக் கொன்றுவிட்டார்கள் என்ற செய்திகூடப் பின்னால் வெளியானது. நாட் செல்லச் செல்ல, வெள்ளைப் படையினரே தமக்குள் ஒற்று வேலை பார்க்கும் பரிதாப நிலை பரவிவிட்டது! அந்தக் கிராமப்புறத்து வெள்ளைப் படையினர் தங்களது பரிதாப நிலையை உணரத் தொடங்கினர். தங்களது சகோதர உழைப்பாளர்களுக்கு எதிராகவே தங்களைப் போரிடுமாறு கட்டாயப்படுத்தி இழுத்து வந்துள்ள கொடுமையை எண்ணிப் பார்த்தார்கள். தங்களது நலத்திற்கு எதிராகத் தாங்களே போரிட நேர்ந்துள்ள இழிநிலையைச் சிந்தித்தார்கள். இந்த எண்ணமும் சிந்தனையும், செஞ்சேனைக்கு எதிரான அவர்களது தாக்குதல்களை ஓரளவு தளர்த்தின. போல்ஷெவிக் கிளர்ச்சிக்காரர்களின் துணிந்த முயற்சி வெள்ளைப் படைப் பகுதியினரின் நெஞ்சத்தில் அலைமோதச் செய்து, மனமாற்றத்திற்கும் வழி வகுத்தது.

சிறிது நேரம் தொடர்ந்து சுட்டபின், வெள்ளைப்படைத் தலைவர்கள் சோர்ந்து நிறுத்திவிடுவார்கள். கிளர்ச்சிக்காரர்கள் மெதுவாக நகர்ந்து சந்தடியின்றி வந்ததுபோலவே மீண்டும் கிராமத்திற்குத் திரும்பிவிடுவார்கள். படையெடுப்பதற்கெனத் தீர்மானித்திருந்த இரவுக்கு முந்திய நாள் மாலையில் செய்யப்பட்ட கிளர்ச்சி மிகவும் வெற்றிகரமாக முடிந்திருந்தது. சில இடங்களில் இருந்த வெள்ளைப்

படைவீரர்கள் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாது, எதிர்க் கரையில் இருந்தவாறே உரக்கப் பல கேள்விகளைப் போல்ஷெவிக் கிளர்ச்சியாளர்களிடம் கேட்டனர். வெள்ளைப் படையைக் கைவிட்டு வருவது மிகவும் கடினமானதென்றும், அவர்களை நுணுக்கமாக மேலதிகாரிகள் கண்காணித்து வருகிறார்கள் என்றும், தவறு செய்வோருக்குத் தரப்படும் தண்டனை மிகக் கொடியது என்றும் தெளிவாக விளக்கிச் சொன்னார்கள்!

குறிப்பிட்ட அந்த இரவில், திட்டமிட்டபடியே ஒரு படையைத் திரட்டிக் கொண்டு மிக்கைலாவ் புறப்பட்டான். அதற்கு மறு நாள், அவனிடமிருந்த துணைப்படைத் தலைமைக் காரியாலயத்திற்குக் கீழ்க்கண்ட தந்தியொன்று வந்தது: "இரவோடு இரவாக இருநூறு வீரர்களுடன் ஆழமில்லாத துறைகளின் மூலமாயும், கட்டுமரங்கள் வழியாகவும் பொரோவ்காவைத் தாண்டினோம். தூங்கிக்கொண்டிருந்த எதிரிகள் மீது திடீரெனப் பாய்ந்து தாக்கினோம். நூற்றைம்பது வீரர்களையும், நான்கு சுழல் துப்பாக்கிகளையும், பல சாதாரணத் துப்பாக்கிகளையும் வெடி மருந்துகளையும், தளவாட வண்டிகளையும் கைப்பற்றிக்கொண்டோம்."

தந்தியைப் படித்ததும் சப்பாயேவ் பேச ஆரம்பித்தான். "அவன் நூற்றைம்பது பேர்களைச் சிறைப்படுத்தியிருக்கிறான். ஆனால் எத்தனை பேரைக் கொன்று தீர்த்தான்? அதை எழுதுங்கள்!" என்று படையெடுப்பைப் பற்றிய அறிக்கையை எழுதிக்கொண்டிருந்த அதிகாரியிடம் திரும்பி "நூற்றைம்பது பேர் கைது செய்யப்பட்டனர், இருநூறு பேர் துண்டு துண்டாய்ச் சிதைக்கப் பட்டனர்" என்று எழுதுங்கள் என்றான்.

"என்னய்யா பொறுங்கள். நீர் என்ன நினைக்கிறீர்? எப்படி இரு நூறு" என்று வியப்புடன் இடை மறித்தான் பியோடார்.



"அதைவிடக் குறைவாயிருக்க முடியாது!" என்று அழுத்தம் திருத்தமாகவும் சாவகாசமாகவும் சப்பாயேவ் சொன்னான்.

"எப்படி இருநூறு என்றுதான் நான் கேட்கிறேன். என்னய்யா பெரிய மனுசனே இப்படிச் சரிக்கட்டுறீங்க?" என்று கிண்டலாகக் கேட்டான் பியோடார்

"நான் ஒண்ணும் சரிக்கட்டலைய்யா. அந்த முட்டாள்தான் இதை நினைத்துப் பார்த்தெழுதவில்லை யென்றால், நானுமா அதைக் குறிப்பிடாது விட்டுவிட வேண்டும்?" என்று சமாதானமாகக் கேட்டான் சப்பாயேவ்.

"என்றாலும்கூட அதைப்பற்றி இப்பொழுது குறித்துக்கொள்ள வேண்டாம். தேவையானால் நாமே விசாரித்துச் சரியாகப் பிறகு எழுதி அனுப்புவோம். அதைவிட்டு எதற்காக ஐயா, கற்பனை பண்ணி நாமே எழுத வேண்டும், வாஸிலி இவானோவிச்?" என்று பியோடார் எகத்தாளமாகக் கேட்டான்.

"சரி, அதனாலே என்ன போச்சு" என்று சொன்னான். இளித்தபடி. "நாம் அவர்களையும் சந்தோஷப்படுத்த வேண்டுமே!" என்றான் சப்பாயேவ்.

"யாரைச் சந்தோஷப்படுத்த வேண்டும்? அது எதிலே சேர்ந்த சந்தோஷமய்யா? உண்மையான புள்ளிவிபரத்தைக் கண்டுபிடித்துவிட்டால் உன்னை அதற்கப்புறம் ஒரு காசுக்கும் நம்ப மாட்டார்களே ஐயா" என்று மீண்டும் பியோடார் மறுத்து மொழிந்தான்.

"இதையெல்லாம் அவர்கள் கண்டுபிடிக்க முடியாது" என்று வேடிக்கையாகச் சொன்னபடியே எழுதிவிட முயன்றான் சப்பாயேவ். என்றாலும் இறந்த இந்த இரு நூறு உடல்களையும், அறிக்கையில் சேர்க்கக் கூடாதென்று பியோடார் விடாப்பிடியாய் வாதாடினான். எனவே சமாதானமின்றி அரை மனத்துடன் இதற்கும் சப்பாயேவ் இசைய நேர்ந்தது!

தலைமைக் காரியாலயத்திற்குத் திரும்பியவுடன் அவர்களுக்கான உத்தரவு ஒன்று எதிர்நோக்கியிருந்தது. தங்களுடைய சாமான்களையெல்லாம் எடுத்துக்கொண்டு அவர்கள் புறப்பட வேண்டியிருந்தது. அவர்களுடைய படைப் பகுதி இன்னொரு செஞ்சேனை ராணுவப் பிரிவிற்கு மாற்றப்படவிருந்தது. போராட்டக் காலத்தில் இது போன்று எத்தனையோ மாற்றங்கள் இருந்தன. பல படைப் பகுதிகள் இணைத்தும் பிணைத்தும் உருவாக்கப்படும். தேவைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றபடி படைப்பகுதிகளைப் பிரித்து இணைக்க நேரிட்டது. இத்தகைய திடீர்ப் பிரிப்புகளும் மாற்றங்களும் சப்பாயேவிற்குக் கட்டோடு பிடிப்பதில்லை; வெளிப்படையாகத் திட்டவும் முனைவான். இவ்விதம் செய்வதைத் தற்செயலான தென்றோ, அல்லது "எதிரிகளின்" விபரீதத் தூண்டுதலுக்கு இசைந்துசெய்யும் மட்டரகமான வேலையென்றோதான் சப்பாயேவ் கருதினான். இது போன்ற விஷயங்களில் அவன் கொண்ட அபிப்பிராயங்கள் கிஞ்சித்தும் சூதில்லாதவை. காரசாரமான விவாதங்களின்றி இயல்பாக இத்தகையதொரு கருத்தை அவன் வெளியிட்டால், அதை வேடிக்கைப் பேச்சாகக் கருதியே பலர் மகிழ்வார்கள்!

புதிய ராணுவப் படையோடு இணைந்துவிட்டனர். இந்தப் புதிய படையில் எந்தச் சூழ்நிலையும் அவர்களுக்குப் புதிதாகத் தோன்றவில்லை. குறிப்பிடத்தக்க மாற்றமேதும் புலப்படவில்லை. எல்லாப் படைப் பகுதிகளும் அருகருகாகவே அமைக்கப்பட்டு ஒரே இணைந்த முனையாக விளங்கியதால் வெகு தூரம் நடக்க வேண்டிய தேவைகூட இவர்களுக்கு ஏற்படவில்லை. இதனால் ஒரு தனிப்பட்ட படைப் பகுதியின்முன்னேற்றமும் பின்வாங்கலும் எல்லாப் படைப் பகுதிகளையுமே பாதித்தன. இதனால் அறிக்கைகளும் செய்திகளும் விரைவில் பரவும் வாய்ப்பும் வசதியும் இருந்தன. உதவி வேண்டும் விண்ணப்பங்களும், முன்னேற்றத்



தைப் பற்றிய நம்பிக்கைச் செய்திகளும் படைப்பகுதிகளுக்குள் விரைவில் பரவின. சிஷோவின் பிரிகேட் வெற்றியடைந்த செய்தியைக் கேள்விப்பட்டவுடன் சப்பாயேவ் பெரிதும் மகிழ்ந்தான்.

"இந்த ராஸ்கல் சரியான ஆளய்யா. வீணாகப் போய்விடுவதற்காக இவ்வளவு பாடுபட்டு இவனுக்கு எல்லாம் சொல்லிக் கொடுத்தோம்?" என்று சிஷோவைப்பற்றித் தலைமைக் காரியாலயத்தில் பேசும்பொழுது பெருமையோடும் வெற்றிப் பெருமிதத்தோடும் சப்பாயேவ் சொல்லிக்கொண்டான். தனக்கேயுரிய பாணியில் தன்னுடைய திருப்தியைத் தெரிவித்துத் தந்தியொன்றும் அனுப்பி வைத்தான். வெறும் பாராட்டுத் தந்திகளை மட்டும் அனுப்புவது கூடாதென்பது அப்பொழுதிருந்த நியதி!

எதிர்த் தாக்குதலுக்குச் சென்ற படைகள் வெற்றியுடன் முன்னேறிக்கொண்டிருந்தன. ஏராளமான கேந்திர இலக்குகள் கைப்பற்றப்பட்டன. போர்முனையில் சப்பாயேவும் பியோடாரும் மாறி மாறி ஓடிக்கொண்டிருந்தனர். ஊக்கமூட்டவும், உற்சாகப்படுத்தவும், எச்சரிக்கை செய்யவும், உதவிகளை அனுப்பவும், ஆலோசனைகள் கூறவும் எல்லாத் திசைகளிலும் இவர்களது உதவி அனைவருக்கும் தேவைப்பட்டது. பல சமயங்களில் இவர்களும் போராட்டத்தில் தீவிரமாகக் கலந்துகொண்டார்கள். பில்யூஜினேவில் நடந்த போரைப்பற்றிப் பியோடார் தனது குறிப்பேட்டில் விபரமாக எழுதி வைத்திருக்கிறான். அவனுடைய குறிப்புகளை அப்படியே தருகிறோம்:

பேசிக்கொண்டார்கள். "பிறகு திரும்பவும் வெள்ளைப் படையினர், அப்புறம் செஞ்சேனையினர்; இதற்கு ஒரு முடிவே இருக்காது. அவர்கள் யாராயிருந்தாலும் நம்முடைய குதிரைகளையும் கால்நடைகளையும் ஓட்டிச் சென்றுவிடுகிறார்கள். நம்மை அடியோடு உருத் தெரியாமல் பாழாக்கிவிடுகிறார்கள்" என்று தங்களது புறங்கழுத்தைச் சொரிந்தபடி தத்துவரீதியாக விளக்கம்தர ஆரம்பித்தனர். "பார்க்கப்போனால் இது போர்ச் சமயம் என்பதை நாம் புரிந்துதான் இருக்கிறோம். நாம் ஏதும் புகார் செய்ய முடியாது. என்றாலும்கூட நம் பாடு மிகவும் பரிதாபமாகப் போய்க்கொண்டிருக்கிறது. நாம் எங்கோ ஒரு மூலையில் இருக்கிறோம். எதைச் சொல்லிஎன்ன செய்வது? இந்தப் பாழாப்போன யுத்தம் எப்பத்தான் நிற்குமோ? எப்படியானாலும் நம்மை ஓய்ந்திருக்கவிட்டால் போதும் போதும் என்றாகிவிட்டது."

"எப்ப யுத்தம் நிற்குமோ? நாம் எப்பொழுது வெற்றியடைவோமோ அப்பொழுது நிற்கும். அதற்கு முன்னாலே எப்படி நிறுத்த முடியும்?" என்று நாங்கள் கேட்டோம்.

"எப்படித்தானய்யா நீங்க வெற்றி யடைவது?" என்று சோர்ந்துபோன, சோகம்கப்பிய கண்களுடன் எங்களைப் பார்த்தனர்.

"அது எங்களுக்கே தெரியாதே. நீங்கள் அனைவரும் சேர்ந்து ஒரு மனதாய் எங்களுக்கு உதவினால் வெகு விரைவில் முடிவு சமீபித்துவிடும். நாம் எல்லோரும் இணைந்து எதிர்த்தால் கோல்சாக்கினால் எவ்வளவு நாட்களுக்குத்தான் ஈடுகொடுத்து நிற்க முடியும்?"

"அதுவும் சரிதான்!" என்று கிராமவாசிகள் ஒப்புக்கொண்டனர்.

"அப்படி என்றால் நீங்கள் முழு மனதோடு எங்களுக்கு உதவ வேண்டும்!"



"ஆமாமாம். நாங்கள் ஒவ்வொருவருமே உதவவேண்டியிருக்கும். முடியுமா வென்று முயன்று பார்க்கிறோம். நாங்கள் வெள்ளைப் படையினர்க்கு உதவி செய்து முடிந்ததும் நீங்கள் கிராமத்தைப் பிடித்துக்கொள்ளுகிறீர்கள். உங்களுக்கு இயன்ற உதவியெல்லாம் செய்து முடித்ததும் அவர்கள் திரும்பவும் கிராமத்தைக் கவர்ந்துகொள்ளுகிறார்கள். எனவே நாங்கள் ஜாக்கிரதையுடன் நிதானித்துத்தான் உதவிசெய்ய வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் ஒரே சமயத்தில் இரு புறத்திலுமிருந்து கடுமையான தண்டனைகளுக்கு நாங்கள் ஆளாக நேரிடும். எங்கள் ஸ்கோபெலெவோவில் எல்லாப் பிரிவையும் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். உங்கள் செஞ்சேனை வீரர்கள்கூட நிறைய இருக்கிறார்கள். அவர்கள் பல தடவை எங்களைப் பின்தொடர்ந்து வேட்டையாடி விட்டார்கள். எனவே எங்கள் குச்சுகளுக்குள் பதுங்கிக்கொண்டு எவர்க்கும் உதவாமல் பேசாமல் இருந்துவிடுவதே நல்லதென்று தோன்றுகிறது" என்று அங்கலாய்த்தனர்.

அந்தக் கிராமத்தைக் கடந்து சென்றுவிட்ட எங்களது முன்னணிப் படையினரைத் தாண்டிச் செல்வதற்கு முன்னர் கிராமவாசிகள் தவறாகப் புரிந்துகொண்டுள்ளதைத் தெளிவுபடுத்தினோம். கோல்சாக்கியப் படையினருடைய கொடுமைப் போக்கையும், சோவியத் ஆட்சியின் சிறப்பையும் அவர்களுக்கு விளக்கினோம். சிலர் எங்கள் விளக்கத்தைப் புரிந்துகொண்டனர், ஒப்புக்கொள்ளவும் செய்தனர். ஆனால் பலருக்கு எதுவுமே விளங்கவில்லை. நடக்கின்ற நிகழ்ச்சிகளைப்பற்றி ஆய்ந்தறியும் ஆற்றலை அவர்களிடம் இல்லை. அவர்களுக்கு இருந்த ஒரே ஆசையும் ஏக்கமும் "எங்களை அமைதியாக வாழவிட்டுவிடுங்கள்!" என்ற பேச்சிலேதான் தொக்கி நின்றன.

இந்த மனோநிலை எல்லாப் பகுதிகளிலும் வாழ்ந்த கிராமவாசிகளிடம் இல்லை; எல்லோராலும் கைவிடப்

பட்டு ஒதுங்கியிருந்த ஸ்கோபெலேவோ போன்ற கிராமவாசிகளிடம்தான் நிலவியது. பல பெருங் கிராமங்கள் வழக்கமாக இரு பெரும் எதிர்க் கட்சிகளாகவே பிளவுபட்டுக் கிடந்தன. வெள்ளைப் படையினர் ஒரு குறிப்பிட்ட கிராமத்திற்குள் புகுந்துவிட்டால் அவர்களது ஆதரவாளர்களா யிருப்பவர்கள் ஆரவாரம் செய்வார்கள். தங்களது எதிரிகள்மீது பழி வாங்கிக்கொள்ளுவார்கள். அவர்களை வெள்ளைப் படையினரிடம் காட்டிக் கொடுத்துத் துவம்சம் செய்யச் சொல்லுவார்கள். அதுபோலவே செஞ்சேனையினர் அந்தக் கிராமத்திற்குள் புகுந்துவிட்டால் மற்றொரு பகுதியினர் வெற்றி முழக்கம் செய்வார்கள், அவர்களும் பதிலுக்குத் தங்கள் நியதிப்படி எதிரிகளை வஞ்சம் தீர்க்காதுவிட மாட்டார்கள்.

எங்களது படைகள் கிராமத்தைத் தாண்டிச் சென்றன. கிராமத்திற்கு அப்பாலிருந்த சிறு பாலத்தை ஒருவர் பின்னொருவராகக் கடந்து ஒரு பெரிய புல்வெளியில் இலக்கு அமைத்துப் பரவினர். இதைக் கண்ட எதிரிகள் பில்யூஜினோவிலிருந்து குண்டுமாரி பொழிந்தனர். இந்தக் குண்டுவீச்சுக்கு ஆட்படாமல் எங்களது படைகள் சங்கிலித் தொடர்போலப் பதுங்கிப் பதுங்கி முன்னேறினர். குண்டுவீச்சால் ஏற்பட்ட சேதம் வெகு குறைவுதான்!

நானும் சப்பாயேவும் கிராமத்தின் கோடியிலிருந்த ஒரு குடிசைக்குள் நுழைந்து கொஞ்சம் பால் தருமாறு கேட்டோம். நோய்வாய்ப்பட்டு மெலிந்திருந்த அந்த வீட்டுக்கார அம்மாள் வெளியில் வந்தாள். குண்டுவீச்சு முழக்கங் கேட்டு அஞ்சிப் பதுங்கிக்கிடந்தவள் எங்களைக் கண்டதும் துணிவோடு வெளியில் வந்தாள். ஒரு பானை பாலும் ஒரு பெரிய ரொட்டித் துண்டும் கொணர்ந்து மேசைமீது வைத்தாள். சூழ்ந்திருந்த பல செஞ்சேனை வீரர்களுக்கும் அன்போடு உபசாரம் செய்தாள். குண்டுவீச்சுச் சமயத்தில் தன் மனது பட்டபாட்டை எல்லோருக்கும் விவரித்துக்



கொண்டிருந்தாள். அவளது தாராள உதவிக்காக நாங்கள் கொஞ்சம் பணத்தை எடுத்துக் கொடுத்தபொழுது வாங்கிக் கொள்ள மறுத்துவிட்டாள்.

"இந்தப் பணம் இல்லாமலே நான் வாழ்ந்துவிடுவேன். ஆனால் பாவம் நீங்கள் இன்னும் எவ்வளவு காலத்திற்குப் போரிட வேண்டுமோ?"

பணத்தை அவள் வாங்கிக்கொள்ளமறுத்துவிட்டதால் அவளுடைய குழந்தைகளின் கைகளில் வைத்துத் திணித்தோம். அவளுடைய இந்த அழகுச் செல்வங்கள் அவளுடைய உடைக்குள் பதுங்கியவண்ணம் தொங்கும் துப்பாக்கிகளோடும் ராணுவ உடையோடும் வந்து அன்புடன் பேசிக்கொண்டிருந்த எங்களை வியப்புடன் பார்த்துத் திகைத்தனர். அந்த அம்மாள் பேசினாள்:

"எப்படியும் பணத்தைக் கொடுத்துவிட நீங்கள் பார்க்கிறீர்கள். எனக்குத் தேவையில்லை என்றாலும் பரவாயில்லை. உங்கள் விருப்பப்படியே ஆகட்டும்; வைக்கோலாயிருந்தாலும் சரி, தானியமாயிருந்தாலும் சரி நீங்கள் எதை எடுத்துக்கொண்டாலும் பணத்தைத் தந்துவிடுகிறீர்கள். ஆனால் அந்த வெள்ளைப் படைக் கொடுமைக்காரர்கள் வந்தால் எங்களை எலும்போடு துடைத்துவிடுகிறார்கள். ஒரு துரும்புகூடத் தருவதில்லை. என் மகன் ஐவானை எங்கள் குதிரையுடன் வண்டிக்காரனாகக் கூட்டிச் சென்றுவிட்டார்கள். அவன் திரும்பி வருவானா இல்லையா வென்பது கடவுளுக்குத்தான் தெரியும்" என்று வருத்தம் தோயக் கூறினாள்.

அவளுடைய பேச்சிலோ, போக்கிலோ கொஞ்சமும் அடிமைத்தனமும், கோழைத்தனமும்கூடத் தொனிக்கவில்லை. நிகழ்ந்த உண்மையைத் துணிவோடு அப்பட்டமாகச் சொன்னாள். எங்களுடைய வீரர்கள் கவர்ந்து கொள்ளும் பொருள்களுக்கு எல்லா இடங்களிலும் எல்லாச் சமயங்களிலும் பணம் தருவதில்லை யென்பது அவளுக்குத்

தெரியாது; ஆனல் கோல்சாக்கியப் படைகளைப்பற்றி மட்டும் நன்கு தெரிந்திருந்தாள். அவர்களும் எல்லா யிடங்களிலும் இவ்வளவு கேவலமாகவும் மிருகத்தனமாகவும் தான் நடந்துகொண்டார்கள். எல்லாப் பொருள்களையும் அபகரித்துக்கொண்டு கிராம மக்களைக் கொடுமைக்காளாக்கிச் சென்றனர்.

அந்தக் குடிசையில் இருந்தபடியே இரு நூறு கஜத்திற்கு அப்பாலிருந்த புல்வெளியில் குண்டுகள் வீழ்வது எங்கள் கண்களில் பட்டது. குண்டு முழக்கத்தைத் தொடர்ந்து புகைமூட்டங்கள் வானில் படர்ந்தன. ஒவ்வொரு புகைப் படலத்தையும் தொடர்ந்து வானமே அதிர்ந்தது, இந்த அதிர்ச்சியால் வீட்டுக் கதவுகளும் சன்னல் நிலைகளும் தம்புரா வாத்தியம் போலத் தகர்ந்தன. போரெல்லையை நோக்கி வீசப்பட்ட எதிரிப் படைக்குண்டுகள் எதிர்பார்த்த சேதத்தைத் தரவில்லை; பயனின்றி வெற்றிடத்தில் வீழ்ந்து வெடித்துச் சிதறின. எங்களுடைய பீரங்கிப் படைகள் வந்து சேருமட்டும் எங்கள் முன்னேற்றத்தைச் சற்று நிறுத்தி வைத்திருந்தோம். எல்லாப் பீரங்கியும் வந்தவுடன் ஒரே மூச்சில் தாக்கவேண்டுமெனத் திட்டமிட்டிருந்தோம்.

நான் வீட்டைவிட்டுக் கிளம்பி, ஒரு மணல் திட்டின் மீது தரையோடு தரையாகப் படுத்திருந்தேன். அப்பொழுது ஒரு பெண் ஓடி வந்தாள். திகிலுடன் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு தன் மடியிலிருந்து எதையோ எடுத்து "இந்தா, இதைச் சீக்கிரம் எடுத்துக்கொள்!" என்று என் கைக்குள் திணித்தாள்.

நான் கையைப் பார்த்தேன். அது ஒரு கோழிமுட்டை! அவள் எதற்காக என்னிடம் தர வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ள முடியாமல் வியப்புடன் அவளைப்பார்த்தபடியே, "இதற்கு எவ்வளவுவேண்டும்?" என்று கேட்டேன்.

"ஏன் என்னங்க இது?" என்று மனம் புண்பட்டவள் போலச் சிணுங்கிக்கொண்டாள். "நீங்கள் அரைப்



பட்டினியாய்க் கிடப்பது எனக்குத் தெரியும். பணத்திற்கும் பசிக்கும் என்ன சம்பந்தம்? ஊம், சாப்பிடுங்கள். பேசாது விழுங்குங்கள்" என்று உற்சாகமூட்டினள்.

அவளுடைய பேச்சிலும் போக்கிலும் இருந்து விரைவில் அந்த இடத்தைவிட்டுப் போக அவசரப்படுவது தெரிந்தது. ஏதாவது பேசும்பொழுது, கிராமவாசிகள் பார்த்துவிடுவார்களோ என்ற பயம் உந்தச் சுற்று முற்றும் பார்த்துக்கொண்டாள். வெள்ளைப் படையினர் மீண்டும் அந்தக் கிராமத்துக்கு வந்தால் கிராமவாசிகள் தன்னையும் காட்டிக்கொடுத்துவிடுவார்களோ என்ற அச்சம் அவள் நெஞ்சைத் தீயாகப் பிடித்தது.

"அது சரி, நீ ஏன் எனக்கு மட்டும் இதைத் தர வேண்டும்?" என்று நான் கேட்டேன்.

"ஏனா? என்னுடைய சகோதரனும் உங்களுடன் செஞ்சேனையில்தான் போரிட்டுக்கொண் டிருக்கிறன். வெள்ளையர்கள் உங்களை உதைத்துவிட்டுச் சமாராவைக் கவர்ந்துகொண்டுவிட்டதாகச் சொன்னர்களே, அது உண்மையா?"

"இல்லை சகோதரி! கொஞ்சமும் உண்மை யில்லை. சரியாக உதை கொடுப்பதென்பது உனக்கே தெரியுமே!" என்று பகர்ந்தேன் நான்.

"அதுதான் எனக்குத் தெரியுமே. சரி, அன்புடைய நேச, உடலை நன்கு பேணிக்கொள்ளுங்கள்" என்றபடி தாவிக் குதித்தோடிக் குடிசைக்குள் சென்று பதுங்கிவிட்டாள். விவரிக்க முடியாத மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியவாறே என்னை மறந்து நான் அங்கேயே உட்கார்ந்திருந்தேன். கையிலிருந்த முட்டையைக் கண் சிமிட்டாது பார்த்தேன். அந்த எளிய பெண்மணியின் களங்கமற்ற தோற்றத்தையும் கபடமற்ற பேச்சையும் நினைத்துப் பார்த்தவுடன் நானே சிரித்துக்கொண்டேன். நமக்கு வேண்டியவர்கள் எல்லா இடத்திலும் இருக்கிறர்கள். ஸ்கோபெலெவோ போன்ற இந்தப் பொந்துகளில்கூட நம்மைச்

சார்ந்த நாலு பேர் இருக்கத்தான் செய்கிறார்கள். நமது இயக்கத்தின் போக்கை அப்படியே புரிந்துகொள்ள இயலா விட்டாலும், யார் எதற்காகப் போரிடுகிறார்கள் என்ற அளவிற்காவது உணர்ந்திருக்கிறார்கள். இந்தப் பெண்ணையே எடுத்துக்கொள்வோம். இவள் நமக்காக நெடு நாள் காத்திருந்திருக்கிறாள். கடைசியில் அந்த நல்ல நாளும் வந்தது; அவள் அபரிமிதமாக ஆனந்தம் அடைந்தாள். அந்த மகிழ்ச்சியை எப்படிப் புலப்படுத்திக்கொள்ளுவ தென்று அவளுக்கே புரியவில்லை. எனவேதான் எனக்கு இந்த முட்டையைத் தந்து தன்னைத் திருப்திப்படுத்திக்கொண்டாள் போலும்" என்றெல்லாம் சிந்தனைகள் என் எண்ணப் பெருங்கடலில் எதிர் நீச்சலிட்டன.

## 2

## போரெல்லைக் கோட்டிலே

பீரங்கிப் படைகள் வந்ததும் உரிய இடத்திலே நிறுத்தப்பட்டன. கனமான பெரும் துப்பாக்கி வண்டிகளை முக்கி முக்கி இழுத்து வந்தன. போரெல்லைக் கோட்டுக்குப் புறத்திலிருந்து 'திடும் திடும்' என்ற பேரோசையுடன் முதல் முழக்கம் எழுந்தது. இடைவெளி யேதுமின்றித் தொடர்ந்து வெடிச் சத்தம் கிளம்பிற்று. போரெல்லைக் கோட்டிலே நின்ற செஞ்சேனை வீரர்கள் தங்களுக்குப் பக்க பலமாக முழங்கும் பீரங்கி யோசைகளைக் கேட்டவுடன் புத்துணர்ச்சியும் ஊக்கமும்கொண்டு போரிடத் துவங்கினர். நாங்கள் குதிரைகளில் தாவியமர்ந்து துணைவர்கள் பின்தொடர முன்னேறிச் சென்றோம். ஒரு மலையுச்சியை அடைந்தோம். எங்கள் காலடிக்குக் கீழே பில்யூஜினோ பரவிக்கிடப்பதை அங்கிருந்தவாறே கண்டோம்.



இங்கிருந்து மூன்று கல் தூரம்தான் இருக்க முடியும். நாங்களிருவரும் பிரிந்து போரெல்லைக் கோட்டிற்குப் புறப்பட்டோம். சப்பாயேவ் வலது பக்க வாட்டிலும் நான் இடது புறத்திலும் பிரிந்து சென்றோம்.

என்னுடன் வந்த படைத் துணைவன் ஒருவன், "தோழரே! அங்கே என்ன நடக்கிறது? அங்கே பாருங்கள். நம்மவர்கள் பின்னிட்டு ஓடி வருகின்றார்களே. இந்தப் பக்கம்தான் வருகிறார்கள் போலிருக்கிறது" என்று படபடப்புடன் சொன்னான்.

நான் ஏறிட்டுப் பார்த்தேன். ஏதோ ஒருவகைக் குழப்பம் புலப்பட்டது. ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குத் தலை தெறிக்க ஓடிக்கொண் டிருந்தார்கள்; போரெல்லைக் கோட்டிலே ஒரு விநாடி கூடிக் குவிவதும் பிறகு சிதறிப் பிரிவதும் புலப்பட்டது. நாங்களும் குதிரையில் ஏறிப் புறப்பட்டோம். அங்குச் சென்றதும் ஏதும் விபரீதம் நிகழ்ந்துவிட வில்லை யென்பது புலப்பட்டது. புதுக் கோணத்தில் தாக்குதலை வலுப்படுத்துவதாகப் படைப் பகுதிகளைப் பிரித்து அமைத்ததனால்தான் அந்தச் சிறு சலசலப்பு ஏற்பட்டதெனத் தெரிந்தது.

நாங்கள் சூரியகாந்திப் பூச்செடிகள் நிறைந்திருந்த தோட்டங்களின் குறுக்கே நுழைந்து வந்தோம். குற்றுச் செடிகளும், புதர்களும் எங்களது வேகத்தைத் தடைசெய்தன. ஒரு வழியாக முதல் அணியை அடைந்து குதிரையை விட்டு இறங்கினோம். என்னுடன் வந்த படைத் துணைவன் என்னுடைய குதிரையை முப்பது அடிகளுக்கு அப்பால் இழுத்துச் சென்றான். நான் போரெல்லைக் கோட்டின் முன்னணியிலேயே படுத்துப் பதுங்கிக்கொண்டேன். எனக்கு இரு புறத்திலும் வெம்மையால் கருத்துப்போன முகத் தோற்றமுடைய இரு இளைஞர்கள் பதுங்கி யிருந்தனர். இருவரும் நல்ல வலுவான தோள்களும், நல்ல உடற்கட்டும் கொண்டவர்கள். அவர்களது பெயர்கள் செர்

ஜெயேவ்; கிளிமோவ் என்பன; முன்னேறிப் போரிட்ட பொழுது போரெல்லைக் கோட்டில் பேச்சேதும் கேட்கவில்லை; ஏதேனும் உத்தரவோ, அல்லது இருமலோ, தும்மலோ இருந்தால் அன்றி மனிதக் குரல் ஏதும் எழவில்லை; அல்லது ஏதேனும் அவசியம் நேர்ந்தால் ஓரிரு வார்த்தைகள் மட்டும் காதில் விழும். இந்த மாதிரியான சமயம் இக்கட்டும் உணர்ச்சிப் பெருக்கமும் வாய்ந்த சோதனை நேரங்கள். போர் முனையில் தீவிரமாகப் போராடிக்கொண்டிருக்கும்பொழுது, நம்மைச் சுற்றிலும் எதிரியின் துப்பாக்கி ரவைகள் ஊளையிட்டுப் பறக்கும். அந்தச் சரமாரியான ரவைகளில் ஏதேனும் ஒன்று எந்த வினாடியும் நமது உடலின் எப்பகுதியிலும் பாயக் கூடும் என்ற பயம் நமது உடலை நடுங்கச் செய்யும், இரத்தத்தை உறையவைக்கும். இந்த மாதிரியான அபாயச் சூழலில் அர்த்தமற்ற பேச்சுக்கோ, அமைதியான உரையாடலுக்கோ ஒரு வினாடியும் கிடைக்காது; அப்படியே கிடைத்தாலும் பேச வாய் பிராது; சிந்தையும் செயலும் போர்முனையிலேயே பதிந்து நிற்கும். குழம்பிய எண்ணங்களும், மாறி மாறி வரும் பல தரப்பட்ட சிந்தனைகளும், தெளிவில்லாத நோக்கங்களும் நம் எண்ண வோட்டத்தில் பாய்ந்து சுழலும். இதனால் பேசும் திறனின்றி அமைதியாகச் செயலிலேயே கவனம் செலுத்தும் நிலை இயல்பாகவே ஏற்பட்டுவிடும். எவ்வளவு விஷயங்களை நினைவில் பதித்துக்கொள்ள வேண்டுமோ அவ்வளவையும் அவசரம் அவசரமாக நினைத்துப் பார்ப்போம்; எதையும் மறந்துவிடாமலும் விட்டுவிடாமலும் எண்ணிப் பார்க்க முயலுவோம். ஆனால் கடைசியில் எதுவுமே மனத்தில் தங்காது, நெஞ்சத்தில் பதியாது, நினைவில் நிற்காது. எனவே அவசரக் கோலத்துடன் என்னென்னவோ செய்வோம்.

போரெல்லைக் கோட்டிலிருந்து ஒன்றன்பின் ஒன்றாய்ப் படைப் பகுதிகள் முன்னேறிச் சென்றன. எதிரிப் படை



யிலக்குகள் மிகவும் சமீபித்துவிட்டன. மிக அண்மையில் நெருங்கிவிட்டன. உடனே முன்னேற்றம் சற்று நிற்கும். எல்லோரும் ஒருசேர அணிவகுப்புக் கோட்டில் தயாரானவுடன் இறுதித் தாக்குதல் உக்கிரமாகத் தொடங்கும். இந்த உக்கிரத் தாக்குதலின் பயங்கரமான நேரத்தில்தான் எல்லா விஷயங்களையும் நினைவிற் கொண்டு சாதுரியத்துடன் தீவிரமாக நடந்துகொள்ள வேண்டும். அதோ தெரிகிறது விளிம்பின் எல்லை; கறுமையான பாதாளப் படுகுழி அதோ தென்படுகிறது!

நான் வீரர்களுக்கு இடையே பேசாதிருந்தேன். என்னிடம் எதுவும் கேளாது முறைத்துப் பார்த்தவண்ணம் உடனிருந்த வீரர்கள் அப்பால் நகர்ந்தனர். எனக்குச் சற்று முன்பு படுத்தபடி பேசாதிருந்தனர். நானும் பேசாதிருந்தேன். சூழ்ந்திருந்த அமைதி என்னைத் தொளைத்தது. எனவே சுருட்டுக் குழாயை எடுத்து ஒரு பிடி புகையிலைக் கற்றையை அதற்குள் திணித்துப் பற்றவைத்தேன்.

"தோழரே! நீங்களும் புகை பிடிக்கிறீர்களா?" என்று எனக்குப் பக்கத்தில் படுத்திருந்தவரைக் கேட்டேன்.

அந்த ஆசாமி என் கேள்வியைக் கேட்டதும் ஆச்சரியத்தால் எதுவும் புரியாது தலையைத் தூக்கினான். எப்போதாவது இப்படி ஒரு குரல் கேட்கிறதே என்ற வியப்பில்ஒன்றும் புரியாமல் விழித்தான். ஒரு வினாடி நினைத்துப்பார்த்ததும் அவன் கண்கள் மகிழ்ச்சியால் மலர்வதைக் கண்டேன்.

"ரொம்ப நல்லது; நானும் புகை பிடிக்கிறேன்" என்றபடி புகையிலைப் பையருகில் நகர்ந்தான். செர்ஜெயேவைத் திரும்பிப் பார்த்து, "ஏய் நண்பரே? என்ன அசிங்கத்தை மென்றுகொண்டு இருக்கிறீர்? அதைத் துப்பிவிட்டு வாரும். நாம் கொஞ்சம் சுகமாகப் புகை பிடிக்கலாம்" என்று கத்தினான்.

கிளிமோவைப்போலவே செர்ஜெயேவும் தலையைத் தூக்கிக் கண்களை விரித்துப் பார்த்தான். அவனும் அருகில்

வந்து கொஞ்சம் புகையிலையைச் சுருட்டிப் பற்றவைத்துக் கொண்டான். அப்பொழுது எங்களுக்குள் தொடர்ந்த பேச்சேதும் இல்லை. இடைநேரத்தில் "இங்கே ரொம்பவும் பனியாயிருக்கிறது" "ஊசிபோல் குத்துகிறது", "சிகரெட் காலியாகிவிட்டது" "அதோ ஒரு பீரங்கி" என்பது போன்ற ஓரிரு சொற்களே பரிமாறிக்கொள்ளப் பட்டன.

"தயாராகுக!" என்ற ஆணை பிறந்தது.

உடனே குதித்தெழுந்தோம்; ரப்பர் பலூன் காற்றில் பறப்பதுபோலப் போரெல்லையில் அணிவகுத்துக் குவிந்து கிடந்த படை யத்தனையும் தாவிச் சென்றன. நானும் ஓட்டம் ஓட்டமாய்ச் சேர்ந்து புறப்பட்டேன். எதிரியின் சுழல் துப்பாக்கிகள் மூச்சுக்கூட விடாது பொழிந்து தள்ளின. அதிர்வெடிகள் அனல் கக்கின.

"படுங்கள்" என்ற உத்தரவு அடுத்த கணமே கேட்டது. உடனே தரையோடு தரையாகப் பல விநாடிகள் பதுங்கிக்கொண்டோம். பிறகு மிக எச்சரிக்கையுடன் முன்னணியில் நின்ற வீரர்கள் மெதுவாக நகர்ந்தனர். தலையைத் தூக்கிச் சுற்றிலும் பார்த்தபடியே வீரர்கள் நகர்ந்து முன்னேறினர். கொஞ்சம் முன்கூட்டி நகர்ந்தவர்கள் சற்றுத் தயங்கி நின்றனர்; பின்தங்கிவிட்டவர்கள் துரிதமாக நகர்ந்து, அணிவகுப்போடு சேர்ந்துகொண்டனர். இவ்விதம் போரெல்லைக் கோட்டிலும் சரி, பிற இடங்களிலும் சரி, எவரும் தனிமையில் தங்கிவிட விரும்பவில்லை. எல்லாவற்றிற்கும் எல்லோரும் இணைந்து நின்றனர்.

எங்களுக்கு முன்னால் நகர்ந்து சென்ற கிளிமோவும் ஓரே வரிசையில் சேர்ந்துகொள்ளத் திடீரென நண்டு போலப் பின்னிட்டான். நான் வேறு புறமாக விலகிக் கொள்ளாதிருந்தால், தான் அணிந்திருந்த வலுவான அமெரிக்க ராணுவப் பூட்ஷால் என் முகத்தை அவன் பதம் பார்த்திருப்பான். நல்ல வேளை, நான் தப்பித்துக்கொண்



டேன்! அடுத்த உத்தரவை எதிர்பார்த்துப் பேசாமல் அந்த இடத்திலேயே படுத்திருந்தோம். அப்பொழுதெல்லாம் புகை பிடிக்கும் ஆசையே எழவில்லை. நேரமிருந்தால்தானே ஆசைக்கு இடமிருக்கும்? செர்ஜெயேவுக்குப் பக்கத்தில் கிளிமோவ் படுத்திருந்தான். அப்படிக் குப்புறப் பதுங்கியிருந்தபொழுது ஏதேனும் பேசிக்கொண்டிருப்பது அவனுக்குச் சுலபமாகத் தோன்றியது. செர்ஜெயேவுடன் ஏதோ பேசுவது என் காதில் விழுந்தது.

"செர்ஜெயேவ்!"

"உனக்கென்னப்பா வேணும்?"

"இதோ ஒரு மூட்டைப் பூச்சி!" என்றபடி தன் மூக்கைப் புல்லின்மீது தென்பட்ட ஏதோ ஒன்றின்மீது சிராய்த்தான்.

செர்ஜெயேவ் பதில் ஏதும் சொல்லவில்லை. கடுகடுத்தபடியே முகத்தைச் சுருக்கிவிட்டுப் பேசாதிருந்துவிட்டான்.

"செர்ஜெயேவ்!" என்று திரும்பவும் கூப்பிட்டான் கிளிமோவ்.

"என்ன?" என்று சிடுசிடுக்கக் கேட்டான் அவன்.

கிளிமோவ் ஏதும் பேசவில்லை. ஒரு பெருமூச்சுவிட்டபடியே எதையோ நினைவிற்குக் கொணர்ந்தவன்போல மெதுவாக "உனக்குத் தெரியுமா லையூபாவை? புரோனினோவில் யாருக்கோ கலியாணம் செய்து கொடுத்துவிட்டார்களாமே!" என்றான் ஏக்கத்துடன்.

தன் கிராமத்தைச் சேர்ந்த யாரோ ஒரு பெண்ணைப் பற்றிய நினைவு அவனுக்கு வந்துவிட்டதுபோல் தோன்றிற்று. ஒரு வேளை அவளை அவன் மிகவும் நேசித்திருக்கக் கூடும். இப்பொழுதுகூட செர்ஜெயேவ் வாய்திறக்கவில்லை. இதற்குமேல் அவனோடு பேசுவதில் பயனில்லை என்றுணர்ந்த கிளிமோவும் வாயடங்கினான். தன் உடல் முழுவதையும் பரப்பிப் படுத்தபடி புல் நுனியை விரலால் கிள்ளிக்கொண்டிருந்தான். தன்னுடைய வலிய விரற்

இடையில் புல்லைக் கசக்குவான், பிறகு கொஞ்சம் மண்ணை எடுத்துப் பொடிப் பொடி யாக்குவான். இப்படியே பொழுது போய்க்கொண்டிருந்தது.

“ரெடி! ஓடுங்கள்” என்ற உத்தரவு பிறந்தது.

நாங்கள் பாய்ந்து முன்னேறினோம். கண்களில் வெறியேறிற்று, முகம் வெளிறியது, நாசி படபடத்தது. ஓடிக்கொண்டே மறு உத்தரவுக்காகக் காத்திருந்தோம். நெடுநேரம் எதிர்பார்த்திருந்த நாங்கள் ‘படுங்கள்’ என்ற உத்தரவு வரும்வரை ஓடிக்கொண்டிருந்தோம்.

உடனே பிரேதங்கள் போல விறைத்துப் படுத்தோம். தரையோடு உறைந்துவிட்டோம்; ஆமைகள் போலத் தலையைப் புதைத்துக்கொண்டோம். பிறகு மெதுவாகச் சுற்றிலும் பார்த்தபடி கொஞ்சங் கொஞ்சமாக நகர்ந்தோம்.

அப்போது எங்களோடு பதுங்கி யிருந்தாள், பத்தொன்பது வயதேயான பருவக் குமரி யொருத்தி. அவள் பெயர் மருஸ்யா ரையாபினினா; அவளும் ஒரு துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு, பின்தங்க விருப்பின்றிப் பெருமையுடன் நகர்ந்துகொண்டிருந்தாள். இன்னும் சில நாட்களில் நடைபெறப் போகும் போராட்டத்தில் அவளும் கலந்துகொள்ளுவா ளென்பது இப்பொழுது அவளுக்கே தெரியாது. அந்தப் போராட்டத்தில் ஆற்றிடைக் குறையைத் தாண்டிச் சென்றபொழுது எதிரியின் குண்டுகளை நெற்றியில் ஏந்தி வீழ்வாள் என்பதும் இப்பொழுது தெரியாது. அவளுடைய உணர்ச்சி பொங்கிய உடலை, குருதியலைகளை வீசிச் சென்ற கினெல் ஆறு ஏந்திச் சென்றுவிட்டது! ஆனால், இப்பொழுதோ உற்சாகமாகக் கத்திக் கத்தி என்னிடம் பேசினாள்; அவள் பேசிய தொன்றும் எனக்கு விளங்க வில்லை.

என்னுடைய சொந்த ஊரிலிருந்து என்னுடன் புறப்பட்டு இடையில் பிரிந்த நண்பர்கள் யாரையும் இந்த இரண்டு மாத காலத்தில் நான் சந்திக்கவில்லை. நிகிதா



லோபாரும், டெரெண்டி போக்சினும் இந்த ரெஜிமெண்டில்தான் இருக்கிறார்கள் என்பதைக்கூட நான் இதற்குமுன் கேள்விப்படவில்லை. இதற்கு முன்னர் இணைந்திருந்த ரெஜிமெண்டுகளில் இருந்து போரிட்டுக் களைத்துப் போய், உரால்ஸ்க் பகுதி ராணுவத்தினின்று தாங்களே மாற்றிக்கொண்டு இங்கே வந்துவிட்டார்கள். நான் டெரெண்டியை இங்கும் இதுவரை பார்க்கவில்லை. ஆனால் லோபாரை மட்டும் சேற்று நிலத்தின் இன்னொரு கோடியில் கண்டேன். செஞ்சேனைத் தலைக் கவசத்தை அசைத்தபடி, கனமான சிவப்பு உடைகளை உதறிக்கொண்டிருக்கும்பொழுது கண்டேன்.

என்னைச் சுற்றிலும் அறிமுகமானவர்களே தென்பட்டார்கள். என்றாலும் எவருடனும் பேசுவதற்கு வேண்டிய நேரம் கிட்டவில்லை. இங்கிருந்து நூறு கஜ தூரத்திற்குள்தான் கிராமப் பண்டகசாலைகள் இருந்தன. அவற்றிற்குப் பின்னால் பதுங்கியபடியே எந்த வினாடியும் எதிரிகள் தாக்க முற்படக் கூடும். போர்முனையில் இது ஒரு வகையான தந்திரம். சில சமயங்களில் எதிர்த் தாக்குதல் ஏதும் செய்யாமல் சற்று நேரம் மறைவில் பதுங்கி ஓய்ந்திருப்பார்கள். எதிரிப் படைகள் சமீபித்ததும், இலகுவில் ஒரேயடியாய்த் தாக்குவதற்காகப் பாய்ந்து எல்லா வகையான தளவாடங்களையும் ஒரே சமயத்தில் செலுத்துவார்கள். ஈவிரக்கமின்றி ஏராளமான மனித உயிர்களை ஒரே வரிசையில் ஒரு நொடிக்குள் கொன்று குவித்துவிடுவார்கள். இந்தத் திடீர்த் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் எதிரி பின்னிட்டோடும்போது முனைந்துமுனைந்து விடாமல் சுட்டுப் பொசுக்குவார்கள். இதற்குள் மறைவில் நிறுத்தப்பட்டிருந்த குதிரைப் படையினர் பின்வாங்கி ஓடும் படைகளை மறித்துக்கொண்டு, சின்னாபின்னப்படுத்தி விடுவார்கள்.

இதைப் போன்ற பரிதாப நிலைகள் எந்தச் சமயமும் நேரிடக் கூடும். திடீரென்று வலப் புறத்திலிருந்து

சுழல் துப்பாக்கிகள் உறும ஆரம்பித்தன. என்ன நடக்கிறது என்பதையறியத் துணைவர்கள் முன்னோக்கிச் சென்றனர். சில வினாடிகளில் அவர்கள் திரும்பி வந்து, வலப்புறத்தில் சுட்டுக்கொண்டிருப்பவர்கள் செஞ்சேனையினரே என்றும், எதிரியின் கவனத்தைத் தங்கள் பக்கம் ஈர்த்துச் சிதறடிப்பதற்காகச் சுடுகிறார்கள் என்றும் தெரிவித்தனர். ஆனால் எதிரிகளிடமிருந்து தாக்குதலேதும் திரும்பவில்லை. ஒரு வேளை கிராமம் முழுவதுமே காலி செய்துவிட்டார்களோ என்ற ஐயப்பாடு ஏற்பட்டது. ஆனாலும் கூடப் பழைய அனுபவங்களை நினைவில்கொண்டு வெகு ஜாக்கிரதையுடன் பண்டகசாலைகளை நோக்கிச் சாரியாகப் புகுந்தனர் செஞ்சேனையினர்; சுழல் துப்பாக்கி வீரர்கள் பலர், தகுந்த துணைப் படையுடன் முன்னதாகச் சென்று களஞ்சியத்தை யொட்டிக் கிடந்த பீரங்கிகளைக் கைப்பற்றிக்கொண்டனர். கைப்பற்றிய பீரங்கியின் மீதேறியமர்ந்துகொண்டு சுடத் தயாராயினர். ஆனாலும் கூட எல்லாம் அமைதியாகவே இருந்தது. வலப் புறத்திலிருந்து மட்டும் எங்கள் படைவீரர்களில் 'உர்...உர்' என்ற உறுமல் ஓயாது ஒலித்துக்கொண்டிருந்தது. எத்தகைய பெருந் தாக்குதலுமின்றிக் கிராமத்தைப் பார்த்துக் கொள்ள எதிரிகள் விட்டுச்சென்றிருந்த சிறு படைப்பகுதியினரை நொடிப் பொழுதில் சூழ்ந்துகொண்டனர். இடது புறத்து மலையோரத்திலிருந்து பீரங்கிகளில் முழக்கம் மூன்று முறை மட்டும் எதிரொலித்து. மிக விரைவில் ஓய்ந்தது. கிராமத்திற்குள் ஓரிரு இடங்களில் துப்பாக்கி வெடிப்பதின் இலேசான எதிரொலிகள் காற்றோடு கலந்தன. பில்யூஜினோவை எங்கள் படை தாக்கும் முழக்கமன்று இது, கைவிட்டுச் செல்லும் எதிரிகள் சில முக்கியமான இலக்குகளைத் தகர்க்கும் பெரு முழக்கம்தான் இது! அத்துடன் அவர்களது படையைத் துண்டிக்கப் பாய்ந்த இடது புறத்துச் செஞ்சேனையினரைத் தாக்கியோடும்



முழக்கமும் இத்துடன் கலந்தது. எதிர்த்து நிற்கும் ஆற்றல் அழிந்தமையால் அவசரமாகப் பின்னிட்டு ஓடினர். ஒருசில படையினரை மட்டும் எங்களுக்குக் காவு தந்துவிட்டு மின்னலெனப் பின்னிட்டனர். இப்பொழுது எதிரிகள் குழம்பிச் சிதறி யோடிவிட்டாலும் எந்த வினாடியும் மறுதாக்குதலைத் தொடங்கக் கூடும் என்ற அச்சமும் எங்களுக்கு இருந்துகொண்டே யிருந்தது. சுழல் துப்பாக்கிப் படையினர் பண்டகசாலைகளைக் கவர்ந்துகொண்டதும், யாரேனும் எதிரிகள் தென்படுகிறார்களா என்று பார்ப்பதற்கு நானும் துணைப் படைத் தளபதியும் குரைமீதேறிச் சென்றோம். வெள்ளைப் படையினரையும் காணோம், கிராமவாசிகளையும் காணோம். எங்கும் பரிபூரண அமைதி நிலவியது. கைவிடப்பட்டுச் சலனமற்றுக் கிடப்பதுபோலக் கிராமம் பொலிவற்று இருந்தது. கிராமத்தை யொட்டியிருந்த வைக்கோற் படப்புகளையும், களஞ்சியங்களையும், சுற்றுச் சுவர்களையும் உற்று உற்றுப் பார்த்து மிக எச்சரிக்கையுடன் நாங்கள் முன்னேறிச் சென்றோம். சிறிதளவுகூடச் சத்தமோ சலனமோ இல்லை. யாரும் ஒரு வார்த்தை பேசவில்லை, ஒரு துப்பாக்கியும் வெடிக்கவில்லை. வெடிகுண்டு வீச்சுகளின் ஓயாத இரைச்சலின் நடுவே இருப்பதைவிட இந்த அமைதி மிகவும் பயங்கரமாகத் தோன்றியது. போர்முனையில் அமைதி நிலவுவதென்பது நெஞ்சு நடுக்குறச் செய்வது, உடலையும் திடுக்கிடச் செய்வதாகும்!

எங்களைத் தொடர்ந்தே இவானோவா - வோஸ்னெஸென்க் ரெஜிமெண்டைச் சேர்ந்த வீரர்களும் வந்துவிட்டனர். வைக்கோற் படப்புகளுக்கும், களஞ்சியங்களுக்கும் இடையிடையே அவர்கள் அணிந்திருந்த சிவப்பு நட்சத்திரங்கள் பளபளத்தன. அவர்களும் அமைதியோடு வெகு விரைவாக திடீர் தாக்குதல் எதையோ எதிர்பார்த்து வருவதுபோல நடந்து வந்தனர்.

சற்றுத் தூரத்தில் ஒரு பெண்ணின் உருவம் சட்டெனத் தோன்றி மறைந்தது. இது யார்? விவசாயப் பெண்ணா? அவள் யாரென உடனே கண்டுபிடிக்கவேண்டியது மிகவும் அவசியம்.

எனவே அவள் தோன்றி மறைந்த திக்கில் என் குதிரையைச் செலுத்தினேன்.

## 3

## கிராமத்திற்குள் நுழைதல்

அந்தக் கிராமத்துப் பெண் தன் குடிசையின் அருகில் நின்றபடி குழம்பிய நெஞ்சத்தோடும் வெருவிய கண்களோடும் என்னை விறைத்துப் பார்த்துக்கொண்டிருந்தாள். சற்று நேரத்திற்கு முன்னர் அவள் அனுபவித்த ஆறாத் துயரங்களையெல்லாம் அந்தப் பார்வையொன்றே கதையாக விரித்தது; தாள முடியாத தொல்லைகளையேற்றுத் துவண்டுபோன சோகக் கதையை அவளது தோற்றம் புலப்படுத்தியது. ஏதோ ஒரு பொறுக்க முடியாத பிரச்னையொன்றை எதிர்நோக்குவது போலத் தோன்றினாள். தவிர்க்க முடியாத தாக்குதலினின்று தப்ப முயன்றும் முடியாமல் அகப்பட்டுக்கொண்ட அதிர்ஷ்டமின்மையைப் போல, மீண்டும் ஒரு முறை நேர்ந்துவிடுமோ என்ற கிலி அவளைப் பற்றிக்கொண்டது. தான் எதிர்பார்த்த தாக்குதல் தன்மேலின்றி எதிரிகள்மீது விரைவில் பாய்ச்சப்படவேண்டும் என்ற ஆசைத் தீ கொழுந்துவிட்டெறியச் சோர்ந்துபோய் நின்றாள்.

அவளது குடிசைக்குப் பக்கத்திலிருந்த களஞ்சிய வீட்டின் செருகு கதவு இலேசாகத் தூக்கப்பட்டது. அதற்குள்ளிருந்து அரைச் சாவினை எய்திய வயதான கிழவியொருத்தியின் சுருக்கம் படிந்த முகம் வெளிப்பட்டது. அவளுடைய விழிகளுக்குக் கீழே கருமையான கோடுகள்



விழுந்திருந்தன: உதடுகள் பசையற்று வறண்டிருந்தன: தலைமுடி அலங்கோலமாகச் செருகப்பட்டிருந்தது. அவளது துயரப்பார்வை எதையோ கெஞ்சிக் கேட்பதுபோலத் தோன்றியது.

“வெள்ளைப் படையினர் யாரேனும் இங்கிருக்கிறார்களா? அல்லது ஓடிவிட்டார்களா?” என்று நான் அவர்களைக் கேட்டேன்.

“அவர்கள் போய்விட்டார்கள், ஓடி ஒழிந்துவிட்டார்கள் அன்பரே!” என்றாள் களஞ்சியக் கதவிடுக்கில் இருந்த கிழவி. “நாங்கள் இனி வெளியில் வரலாமா ஐயா! இன்னும் சண்டையிருக்குமா?” என்று பரிதாபக் குரலில் கேட்டாள்.

“இல்லை, இல்லை, இனிமேல் சண்டையேதும் இருக்காது. வெளியில் வாருங்கள்.”

ஒருவர் பின் ஒருவராக அந்தக் களஞ்சியத்து நிலவறையிலிருந்து ஏராளமான பெண்கள் வெளியில் குதித்தனர். ஆண்கள் யாரும் அதற்குள் இல்லை. அதன் பின்னர் குழந்தைகள் வெளியில் வந்தனர். சாக்குகளாலும், போர்வைகளாலும், கம்பளிகளாலும் தங்கள் குழந்தைகளைப் போர்த்திப் பதுக்கி வைத்தனர். பீரங்கிக் குண்டுகளின் பேராபத்திலிருந்து குழந்தைகளைக் காப்பாற்றப் போர்வையால் மட்டும் மூடினால் போதும் என்று கிராமத்துப் பெண்கள் நம்பியிருந்தனர். அதற்கப்புறம் நீர் கசிந்த கண்களும் நரைத்த தாடியும் கொண்ட கிழவர் ஒருவரை வெளியில் அரும்பாடுபட்டு வெளியில் நான் இழுத்தேன். எனது இடுப்பிலிருந்து ஒரு பெரிய கயிறு தொங்கிற்று. அதைப் பற்றியபடியே ஒவ்வொருவராக வெளியில் வந்தபொழுது என்னையே உள்ளுக்கு இழுத்துவிடுவது போலத் தொங்கினர்.

எல்லோரும் வெளியில் வந்தவுடன் தங்கள் தங்களுடைய குடிசைகளுக்குப் பிரிந்து, முள் வேலி வழியாகவே

சென்றார்கள். அந்த வேலிப் பாதை வழியாக அச்சமும் அயர்வும் கொப்புளிக்க நிழல்கள் போலச் செயலற்றுச் சென்ற காட்சி சிந்தையை அறுப்பதாக அமைந்தது.

ஊரின் ஒரு மூலையில் பல கிராமவாசிகள் கூடி நின்றனர். அவர்களும் எதையோ இழந்துவிட்டது போலத்தான் காட்சி யளித்தார்கள். போர் நின்றுவிட்டதா இல்லையா, இனி மேலும் பதுக்கல் கிடங்குகளுக்குள் ஒளிந்திருக்க வேண்டுமா, அல்லது வெளியே இருக்கலாமா என்ற பல பயங்கரக் கேள்விகள் அவர்களைக் குழப்பமடையச் செய்தன.

"என்ன தோழர்களே! எப்படி யிருக்கிறீர்கள்?" என்று அவர்களை நோக்கி உரக்கக் கத்தினேன்.

"நல்ல நாள்தான்; கடைசியாக நீங்களே வந்து சேர்ந்துவிட்டீர்கள், கடவுளுக்கு நன்றி!" என்று எல்லோரும் ஒரே குரலில் கத்தினார்கள்.

இந்த வரவேற்புரைகளை அப்படியே நம்பி ஏற்றுக்கொள்ளலாமா வேண்டாமா என்று எனக்குப் புரியவில்லை. இவர்களும் வெள்ளைப்படையினரின் தாளமுடியாத கொடுமைகட்கு ஆட்படுத்தப்பட்டுத் தொல்லைப்பட்டவர்கள் என்றும், எப்படியாவது தப்பித்தால் போதும் என்ற நிலைக்கு வந்தவர்கள் என்றும் நான் கருதினேன். ஆனால் அவர்களிடம் நெருங்கிச் சென்றபொழுது அந்தக் கிராமவாசிகளின் முகமண்டலங்களில் தூய, களங்கமற்ற மகிழ்ச்சி பொங்கக் கண்டேன். என்னை யறியாத இன்பம் என் உள்ளத்தில் பெருக்கெடுத்தது.

நாங்கள் அனைவரும் ஊரின் மையத்திற்குச் சென்றோம். இங்கும் ஒரு கூட்டம் இருந்தது. இவர்கள் கிராமவாசிகள் இல்லையென்பதை நான் உடனே தெரிந்துகொண்டேன்.

"நீங்கள் எல்லோரும் கைதிகளா?"

"ஆம். கைதிகள்தான்"



"நீங்கள் திருந்திவிட்டீர்கள் இல்லையா?"

"ஆம். திருந்திவிட்டோம்."

"நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?"

"அக்மோலின்ஸ்க் பிரதேசத்திலிருந்து."

"நீங்கள் எத்தனை பேர்?"

"இங்கே முப்பது பேர் இருக்கிறோம். இன்னும் பலர் ஒளிந்துகொண் டிருக்கிறார்கள். பலர் தோட்டங்களுக்குள் பதுங்கியிருந்து ஓடிவிட்டார்கள்."

"எனவே, நீங்கள் மட்டும் பின்தங்கிவிட்டீர்களோ?"

"ஆம், நாங்களாகவே பின்தங்கிவிட்டோம்."

"சரி, உங்களுடைய துப்பாக்கிகளெல்லாம் எங்கே?"

"அதோ அந்த வேலிக்கு அப்பால் மறைத்து வைத்திருக்கிறோம்."

அவர்கள் குறிப்பிட்ட வேலியருகில் சென்று பார்த்தேன். உண்மையிலேயே ஏராளமான துப்பாக்கிகள் குவித்து வைக்கப்பட்டிருந்தன. உடனே எங்களது ராணுவத்தினரை அவ்விடத்தில் நிறுத்தி, எதிரிகளின் தளவாடங்களையும், கைது செய்யப்பட்டவர்களையும் தலைமை நிலையத்திற்குக் கொண்டுசெல்லும்வரை பாதுகாக்குமாறு உத்திரவிட்டோம்.

இந்தக் கைதிகளைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது. மிகக் கேவலமாக உடுத்தி யிருந்தார்கள். கிழிந்த சட்டைகளும், நைந்த கோட்டுகளும் அவலட்சணமாய்த் தொங்கின. அவர்கள் அணிந்திருந்த காலுறைகளும் அப்படித்தான் இருந்தன. கிழிந்து நாசமான பலவகைப் பூட்ஸுகளை ஏதோ பெயருக்கு மாட்டியிருந்தார்கள். அவர்களைப் பார்த்தால் ராணுவத்தினராகவே தோன்றவில்லை; கந்தலுடுத்த ஆண்டிகளைப்போலக் காட்சியளித்தனர். கோல்சாக்கியப் படையினர்க்கெல்லாம் வெளிநாடுகளிலிருந்து வேண்டிய மட்டும் ராணுவ வசதிகளை யளித்திருந்தும், இவர்கள் மட்டிலும் ஏன் இவ்வளவு பரிதாபமாக உடுத்தி

யிருக்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்கவே வியப்பா யிருந்தது.

"உங்களுக்கு வேண்டிய உடைகளைத் தருவதில்கூடக் கோல்சாக்கின் அதிகாரிகள் போதிய அக்கறை காட்ட வில்லைபோ லிருக்கிறது. அல்லது எல்லோருக்கும் இதே கதிதானா?" என்று நான் கேட்டேன்.

"இல்லை. நாங்கள் மட்டும்தான் இந்தக் கோலத்தில் இருக்கிறோம்."

"உங்களை மட்டும் ஏன் அவர்கள் இப்படி நடத்த வேண்டும்?"

"நாங்கள் சண்டையிட விரும்பவில்லை. எங்களில் பலர் கோல்சாக்கியப் படையை விட்டுப் பிரிந்துவிட் டோம். பிரிந்தவர்களுள் ஒரு பகுதியினர் தங்கள் வீடு களுக்குச் சென்றுவிட்டனர், எஞ்சிய பகுதியினர் செஞ் சேனையில் சேர்ந்துகொண்டனர்."

"அப்படியானால் கோல்சாக்கியப் படையோடு சேர்ந்து போரிடுவதை நீங்கள் விரும்ப வில்லையாக்கும்!"

"ஆம். கோல்சாக் எங்களுக்கு எம்மாத்திரம்? தனக்கு வேண்டியவர்களுக்கு மட்டும் தேவைக்கு மிஞ்சிய உடைகளைச் சுமத்திவிட்டு எங்களுக்கு உடுத்திக்கொள் ளத் தந்துள்ள உடைகளின் இலட்சணத்தை நீங்களே பாருங்கள்" என்று தாங்கள் அணிந்திருந்த கந்தல்களைச் சுட்டிக்காட்டினார்கள். "இந்த அழகான உடையைத் தந்தது மல்லாமல், எங்களைக் கொணர்ந்து முன்னணித் தாக்குதலுக்கு முதற் பலி கொடுக்க நிறுத்திவிட்டான். முதற் குண்டு வீச்சுக்கு நாங்களே பலியாக வேண்டும் என்ற தாராளச் சிந்தை அவருக்கு. அத்தகைய அயோக்கியனைப்பற்றி நாங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்?"

"நீங்கள் ரொம்ப நாளைக்கு முன்னதாகவே பிரிந்து சென்றிருக்க வேண்டும்?"



"அப்படியும் எங்களால் தப்பிச் செல்ல முடிய வில்லையே. அவனது கையாட்களை நிறுத்தி எங்களை எப் பொழுதும் பின்தொடரச் செய்திருந்தான். போர்முனை யில் அவர்கள் போரிடுவதே யில்லை. நாங்கள் தப்பி ஓடி விடாமல் பார்த்துக்கொள்ளுவதுதான் அவர்களுக்கு எந் நேரமும் வேலையா யிருந்தது."

"சரி, அப்படியானால் இப்பொழுது மட்டும் எப்படித் தப்பினீர்கள்?"

"நாங்கள் அந்தத் தோட்டத்தில் இருந்த செடி மறை வில் பதுங்கிக்கொண்டோம். இந்தக் கிராமத்தைவிட்டு அவர்கள் வெளியேறி ஓடும்வரை காத்திருந்தோம். பின்னர் வெளியில் வந்தோம்."

"இப்பொழுது என்ன செய்யலா மென்று கருதுகிறீர் கள்? செஞ்சேனையில் சேர்ந்து எங்களுடன் இணைந்து போரிட விரும்புகிறீர்களா?"

"ஆம். செஞ்சேனையுடன் சேர்ந்துகொள்ள வேண் டும் என்பதற்காகத்தான் நாங்கள் பின்தங்கிவிட்டோம். அதைவிட வேறெதை நாங்கள் விரும்பப் போகிறோம்?"

அத்துடன் எங்களது பேச்சும் முடிந்தது.

எதிரி புறமுதுகிட்டோடிய திசையை நோக்கி நாங் களும் புறப்பட்டு ஒரு மலையருகில் வந்து சேர்ந்தோம். எங்களது துருப்பினர் ஒரு சிறு பாலத்தருகில் கூடி நின்று செங்குத்தான ஒரு அணையில் ஏற முயல்வது கண்ணில் பட்டது.

செல்லும் வழியில் எதிர்ப்பட்ட கிராமவாசிகளிடம் "இங்கு ஏராளமான வெள்ளைப் படையினர் இருந்தார் களா?" என்று கேட்டேன்.

"உம். ஆயிரம் பேருக்கு மேலே இருக்கும்" என்ற பதில் வந்தது.

இவர்கள் கூறும் "ஆயிரங்களை" யெல்லாம் சரியான தென்று அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாது. ஆயிரம்

என்றால் ஐந்தாறு ஆயிரமாகவும் இருக்கலாம், அல்லது சில நூறு பேர்களே ஆயிரம் பேரென்று அவர்களால் கணக்கிடப்படுவார்கள். கிராமவாசிகளின் கணக்கையும், கைது செய்யப்பட்டவர்களின் சாட்சியத்தையும் ஒப்பிட்டுப் பார்த்த பின்னரே, ஏறக்குறைய எத்தனை பேர் வந்திருக்கக் கூடுமென்பதைக் கணக்கிட முடியும். போக்குவரத்துத் தடங்களினின்று இக்கிராமத்தில் பெரிய அளவில் அவர்கள் தங்கியிருக்கக் கூடுமென்பது தெளிவாகிவிட்டது. இடதுபுறப் படைப்பகுதியில் ஏற்பட்ட சரிவினால் எதிரிகள் பில்யூஜினோவில் வெகு நேரம் நீடித்திருக்கக் கூடவில்லை. "வெள்ளைப் படையினர் ரொம்பவும் முந்தியே ஓடிவிட்டார்களோ?"

"இல்லை, நீங்கள் நுழைவதற்குச் சற்று முன்புதான் போனார்கள். ஊருக்குப் புறத்தேயுள்ள மலையைக்கூட இன்னும் தாண்டியிருக்க மாட்டார்கள்" என்று கிராமவாசிகள் கூறினர்.

சோர்ந்து போன எங்களது படை வீரர்களால் அவர்களைத் தொடர்ந்து செல்ல முடியவில்லை. குதிரைப் படையைக் கொண்டு நாங்கள் முயன்றிருக்கலாம் என்றாலும் கூட, எங்களது குதிரைப் படை மிகவும் சிறியது. எனவே அவர்களைக் கொண்டு அதிகமாக எதுவும் சாதித்துவிட முடியாது. எங்களுக்கு முந்திச் சென்ற படைப்பகுதியினர் மலையுச்சியை அடைந்துவிட்டார்கள். எதிரியின் போக்குவரத்துச் சாதனங்களைக் கைப்பற்றிவிட முடியும் என்ற நம்பிக்கையுடன் முன்னேறினார்கள். என்றாலும் அவர்களால் பின்தங்கிப் போன ஒருசில தளவாட வண்டிகளைத்தான் பிடிக்க முடிந்தது. எஞ்சிய அனைத்தும் வெகு தூரம் கடந்துவிட்டன.

ஒரு உயர்ந்த மலையடிவாரத்தில் பில்யூஜினோ கிராமம் இருக்கிறது. பாலத்திலிருந்து உச்சிக்குச் செல்லுவது கடினமானது. இவ்விடத்தில் மறக்க முடியாத நிகழ்ச்சியொன்று



நடந்தது. மலைச் சரிவின் உச்சியை அடைந்துவிட்ட எங்கள் துருப்பினர் எதிர்த் திசையில் பலர் நகர்ந்து செல்வதைக் கண்டதும் சுட ஆரம்பித்தனர். அங்கிருந்து எதிர்த் தாக்குதலும் கிளம்பியது. தங்களுடைய தோழர்களை நோக்கியே சுடுகிறோம் என்பதை அறியாமல் எங்களவர்கள் அபாரமாகப் பொழிந்தார்கள். இதில் இருவர் பலியானார்கள், ஐவர் படுகாயமடைந்தார்கள். மலையின் இடதுபுறமாக வந்துகொண்டிருந்த துணைப்படைத் தளபதி இதைக் கவனித்திராவிட்டால் நிலைமை படுமோசமாகி யிருக்கும். நிலையைத் தெரிந்துகொண்டவுடன் தன் உயிரையும் பொருட்படுத்தாது சுட்டுக்கொண்டிருந்தவர்களின் எதிரே ஓடி நின்று, தன்னுடைய கைக்குட்டையையும் தொப்பியையும் அசைத்தான். சுட்டவர்கள் சற்றுத் தயங்கியதும் ஓடோடிச் சென்று நிலையைத் தெளிவாக்கிப் போரை நிறுத்தினான்!

அறுபது குதிரைவீரர்கள் மலை உச்சியில், நுரை தள்ளிக் களைத்துப் போயிருந்த தங்களது குதிரைகளின் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தனர். அவர்களை இரு பிரிவாகப் பிரித்தோம். ஒரு சாராரை இடதுபுறமாக அனுப்பிச்சுற்றி வளைத்து வந்த எங்களது செஞ்சேனைகள் முன்னேறுகின்றனவா என்று பார்க்க வேண்டுமென்றும், மற்றொரு சாரார் பின்வாங்கி யோடிய எதிரிகளின் போக்குவரத்துச் சாதனங்களைத் தொடர வேண்டுமென்றும் உத்தரவிட்டோம். சுற்றி வளைத்து வந்த படைகளோடு தொடர்பு கொள்ள முடியவில்லை. அவர்கள் வந்த வழியில் யாரோ நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டதால் அவர்களைக் கைது செய்து நீதி மன்றத்துக்கு அனுப்ப வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டதென்று பின்னர்தான் தெரியவந்தது. ஆனால் இப்பொழுது நாங்கள் இதைப்பற்றி ஏதும் சந்தேகம்கொள்ள முடியவில்லை. எதிரியின்மீது இலேசாகத் தாக்கத் துவங்கினாலே அபரிமிதமான வெற்றி கிட்டி

விடும் என்றே இன்னும் நம்பினோம். இந்தப் படைப்பகுதியினர் கண்ணில் தென்படவேயில்லை. எதிரிகள் தங்களது தளவாடங்களுடன் வெகு எளிதில் பின்வாங்கித் தப்பித்துக்கொண்டார்கள். இவ்வளவு பாடுபட்டும் அவர்களைச் சரியாகத் தண்டிக்க முடியாது போய்விட்டது. வலது புறமாக அனுப்பப்பட்ட சாரணப் படையினர் இரு நூறு கஜ தூரம்தான் முன்னேறியிருப்பார்கள். பின்வாங்கிச் சென்ற வீரர்களது தொடர்ந்த தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் புதர்களுக்குள் பதுங்கிப் பதுங்கிக் கணவாய் வழியாகச் செல்ல நேர்ந்தது.

பெரும் பீரங்கி வண்டியொன்று மலையுச்சிக்குக் கொணரப்பட்டது. இந்தப் பீரங்கியைக் கையாளும் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டேன். எதிரிப் படைகள் அசைந்து செல்லுவது தெரியும் அளவிற்குப் பீரங்கி வண்டியை முன்னால் இழுத்து நிறுத்தினேன். அவர்கள் காட்டை நோக்கி வெகு வேகமாகப் பின்வாங்கி ஓடுவது தெரிந்தது. எங்களுடைய குதிரைப் படைகள் பின்தொடர்ந்து தாக்கக் கூடும் என்ற அச்சத்தால் விரைந்து பதுங்கினார்கள். ஆனால் அந்த அளவிற்கு வேண்டிய குதிரைப் படையே எங்களிடம் இல்லை. மலை யுச்சியிலிருந்த நாங்களும் பிரமாதமாக ஏதும் செய்ய முடியாது, என்றாலும் கூட எதிரிப் படைகளைத் துரத்திச் செல்லும் எங்கள் வீரர்கள் அவர்களை நெருங்கிச் சுடக் கூடும் என்ற அரைகுறை எண்ணம் இன்னும் இருந்தது. அந்தச் சமயத்தில் நாங்கள் மலையுச்சியிலிருந்து சுட்டால் எதிரிகளிடையே பெருங் குழப்பத்தை உண்டாக்க முடியும்; அக்குழப்பத்தில் தலைதெறித்தோடும் எதிரிகள் வசமுள்ள தளவாட வண்டிகளை எளிதில் கவர்ந்துகொள்ள முடியும் என்பது எங்கள் நம்பிக்கை. இந்த நம்பிக்கையெல்லாம் வீணாகிவிட்டது. ஒன்றரைக் கல் தூரம் அவர்களை விரட்டிச் சென்று வீணில் திரும்பினோம். தொடர்ந்து சுட்டதனாலும் பயன் ஏதும்



கிட்டவில்லை. எதிரிகளும் திருப்பிச் சுட்டபடியே பின்வாங்கி, செறிந்த மரக் காட்டிற்குள் புகுந்து தப்பிவிட்டனர். எனவே வெறுங் கையர்களாகத் திரும்பி வந்தோம்!

இவானோவா வோஷ்னெஸென்க் ரெஜிமெண்ட் அந்த மலைப் பகுதியிலேயே நிறுத்தப்பட்டிருந்தது. சுழல் துப்பாக்கி வீரனும் நானும் நெருங்கி வந்தபொழுது, தூரத்தில் தென்பட்ட அப்படைப் பகுதியினர் தங்களது துப்பாக்கிகளைக் கையிலெடுத்து முழங்காலில் சாய்த்தபடி எங்களை நோக்கிக் குறி வைக்கத் தொடங்கினர். இதைக் கண்ட நான் வியர்த்துப் போய் என்னால் முடிந்த மட்டும் உரக்கக் கத்தினேன். நாங்கள் அவர்களுடைய நண்பர்கள்தான் என்று கத்தியபடி கைக்குட்டையை அசைத்துப் பேரழிவு ஒன்றைத் தடுக்க முனைந்தோம். இதைக் கண்ட பலர் எங்களிடம் நெருங்கி வந்தார்கள். இன்னார் எனத் தெரிந்துகொண்டதும் தலையை அசைத்தபடி, ஏமாற்றத்தால் முகம் சுருங்கித் தங்கள் தவறுதலுக்காகத் தங்களையே சபித்துக் கொண்டனர். நாங்கள் மலையைவிட்டிறங்கிக் கிராமத்திற்குள் புகுந்தோம். அங்கு படைப் பகுதிகளைப் பரிசோதித்துக்கொண்டிருந்த சப்பாயேவைக் கண்டேன். தானே களஞ்சியத்தில் பதுங்கிப் போரிட்ட பின்னர், அவன் கிராமத்திற்குள் புகுந்திருந்தான். சப்பாயேவையும் அழைத்துக்கொண்டு மீண்டும் மலையுச்சிக்குக் குதிரையைத் திருப்பினேன்.

கிராமம் மீண்டும் புத்துயிர் பெற்றுவிட்டது. எல்லா வீடுகளிலும் விருந்தினராகச் செஞ்சேனை வீரர்கள் இருந்தனர். கிராமத்துப் பெண்கள் கிணறுகளைச் சூழ்ந்துகொண்டு தண்ணீர் இறைத்தோடினர். தங்கள் வீட்டுக்கு வந்துள்ள புதிய நண்பர்களுக்குத் தேத்தண்ணீர் வழங்குவதற்காக ஓடியோடித் திரிந்தனர். வெட்கமோ, அச்சமோ ஏதுமின்றிச் சாதாரணமாகப் பழகினர். சிறுவர்களின் உற்சாகப் பெருக்கத்திற்கு அளவே கிடையாது. கிராமத்துப் பெண்

கள் செஞ்சேனையினரை நன்கு புரிந்துகொண்டு வியப்புடன் உற்றுப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தனர்.

எங்களுடைய அணிவகுப்புப் படையின் ஒரு பகுதியினர் மலையுச்சியில் இன்னும் இருக்கின்றனர். அதற்கு வெகு சமீபத்தில் உள்ள காட்டிற்குள் எதிரிகள் பின்வாங்கி மறைந்திருக்கிறார்கள், வானத்தில் படிந்த வெடிகுண்டுப் புகைமூட்டங்கள் இன்னும் கலையவில்லை. ஆனால் கிராமத்திலிருந்த ஒரு வீட்டுச் சாரத்தின் வழியாக அக்கார்டியன் வாத்திய இசை எழும்பிப் படர்ந்தது. இந்த மகிழ்ச்சிக்கு எப்போதும் விதிவிலக்கு இருந்ததில்லை. இந்த வாத்திய இசையைக் கேட்டு மகிழப் படை வீரர்களும், பருவ மங்கையரும் திரண்டனர்! கேட்பானேன். வெகு சீக்கிரத்தில் நாட்டியம்கூட ஆரம்பமாகிவிடும். இந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில் தவறாமல் நடனமும் நிகழ்ந்துவிடும்.

செஞ்சேனையினர்க்கு இத்தகைய மனம் மகிழ்ந்த வரவேற்பைக் கிராமவாசிகள் தருவதற்கு அடிப்படையான காரணம் யாதெனில், செஞ்சேனையினர் கொள்ளையிடவும் இல்லை, கொடுமைப்படுத்தவும் இல்லை. குழப்பமூட்டியதாகவோ, இழிவுபடுத்தியதாகவோ எத்தகைய அசம்பாவிதத்திலும் அவர்கள் ஈடுபடவில்லை. நண்பர்களாக வந்தார்கள். நண்பர்களாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். பரஸ்பரம் மதிப்பும், ஆன்மீக ஒருமைப்பாடும் நிலைபெற மனம்விட்டுப் பழகினார்கள்.

பெரும்பான்மை வீரர்களுக்குக் குடிசையில் இடம் கிடைக்காததால் தளவாட வண்டிகள் அமர்த்தப்பட்டிருந்த பரந்த திடலிலேயே அவர்களும் விழித்துக் காவல் புரிய நேரிட்டது.

நன்கு கட்டப்பட்ட ஒரு பெரிய குடிசையைத் தேடிக் கண்டுபிடித்து எங்கள் படையின் தலைமைக் காரியாலயத்தையும், டிவிசன் செயல் துறையையும் அதில் நிறுவினோம்.



தந்திப் போக்கு வரத்துச் சாதனக் கம்பிகள் பொருத்தப்பட்டு உடனே இயங்கின. இங்கும் சிறு ஆலோசனைக் கூட்டம் அமைக்கப்பட்டது. தளபதிகளும் அரசியல் இயக்க ஊழியர்களும் ஒருசேர அமர்ந்தனர். தத்தமது துறையில் என்னென்ன செய்து முடிக்கப்பட்டதென்றும் போர்ச் சமயத்தில் எவ்வெவற்றைக் கண்டுணர்ந்தார்களென்றும் அவசரமாகப் பரிவர்த்தனை செய்துகொண்டனர். ஒருவரது அபிப்பிராயத்தை இன்னொருவர் எடுத்துச் சொல்லுவதும், அதை வேறு விதமாக மற்றொருவர் புரிந்துகொள்ளுவதும், அதை மறுத்து இன்னொருவர் மொழிவதுமாகப் பெரும் இரைச்சலிட்டனர். எவருமே கவனிக்கத் தயாராயில்லாதபோது கவனியுங்கள் கவனியுங்கள் என்று உரக்கக் கத்தியவண்ணமேயிருந்தனர்.

போர்க்களத்துப் புது அனுபவங்கள் அவர்கள் நெஞ்சத்தில் ததும்பியிருந்ததால் ஒவ்வொருவரும் ஒரே சமயத்தில் பேசத் துடித்தனர்.. அவர்களுக்கு இருந்த உடற்சோர்வுகூட ஓடி மறைந்துவிட்டது. அரை மணி நேரம் இந்த இரைச்சலிலும், பேச்சிலும் கழிந்தது.

உடனே இடி போன்ற பெரு முழக்கம் மும்முறை எதிரொலித்தது. ஒருவர்மீது ஒருவர் விழுந்தடித்துக்கொண்டு வாசற்படிக்கு ஓடினர். யாரேனும் எறிகுண்டை எறிந்தார்களோ? அப்படியானால் தொடர்ந்து மூன்று முறை வெடிச் சத்தம் கேட்டதே. இது ஒரு வேளை பீரங்கி முழக்கமாகவும் இருக்கலாம். எங்கிருந்து சுட்டிருப்பார்கள்? எதுவும் புரியவில்லை!

அந்தச் சமயத்தில் துப்பாக்கிச் சத்தம் தொடர்ந்தெழுந்தது. கைத் துப்பாக்கிகளும் விட்டு விட்டு ஒலித்தன. தளவாட வண்டிகளுக்குள் இருந்த செஞ்சேனை வீரர்கள் கீழே குதித்து நாலா பக்கமும் ஓடினார்கள். அந்தப் பெருந் திடல் ஒரு நொடிக்குள் காலியாகிவிட்டது. எங்கள் தலைக்கு மேலே எதிரியின் ஆகாய விமானம் ஒன்று

மெதுவாகவும் அமைதியாகவும் வெள்ளை அன்னம் போல வானில் மிதந்து நெடுந் தூரம் சென்று மறைந்தது. இந்த விமானத்திலிருந்து வீசப்பட்ட குண்டுகள் ஊருக்குப் புறத்தே யுள்ள பெரும் பழத்தோட்டத்தில் விழுந்து சிதறின. அங்கு ஒரு செஞ்சேனை வீரன்கூட இல்லை.

விமானம் மறைந்த மறு கணமே கிராமவாசிகள் எதுவுமே நிகழாதது போலத் தங்கள் அலுவல்களை வழக்கம் போலக் கவனிக்கத் தொடங்கினர். இப்பொழுது அந்தி மயங்கிவிட்டது. சற்று நேரத்திற்குள் அமைதி தோய்ந்த வசந்த கால இரவு வளைந்து கவிந்தது. கிராமம் முழுவதும் மோன நிலை படர்ந்தது. இப்பொழுதுதான் இங்கு போர் ஓய்ந்த தென்றும், கடுமையும் கொடுமையும் நிறைந்த சாவு எல்லோரையும் எதிர்நோக்கி யிருக்கிறதென்றும் யாருக்கும் சிந்தனையின்றித் தூங்கினர். நாளை பொழுது விடிவதற்குள் நாங்கள் மீண்டும் அணிவகுத்துப் புறப்பட்டுவிடுவோம். விளக்கைச் சுற்றி வீழ்ந்து மாயும் விட்டில்கள் போல மரணத்தையும், வாழ்வையும் சுற்றிச் சுற்றி வளைய வருவோம்.

"சரி, இன்று விடிந்துவிட்டது..." என்று ஒவ்வொருவரும் பின்வரும் கேள்விகளைத் துன்பமும் துயரமும் பெருக எங்களுக்குள்ளேயே கேட்டுக்கொள்ளுவோம்...: "இன்று நடக்கப்போகும் போரில் யார் உயிர் தப்புவார்களோ? யார் செத்து மடிவார்களோ? நாளை அணிவகுப்பில் நான் யாருக்குப் பக்கத்தில் அணிவகுப்புடன் நடந்து செல்வேனோ? எனக்குப் பக்கத்தில் வரும் யார் யாரை இனிவரும் போராட்டங்களில் நான் பார்க்கவே முடியாது போகுமோ? எங்களுக்கு முன்னால் எண்ணத் தொலையாத போராட்டங்கள் காத்திருந்தன. ஒவ்வொரு நாளும் உடல் நடுக்கும் பெரும் போர்கள் நிகழ விருந்தன. இது வசந்த காலம்...இப்பொழுதுதான் துவங்கி யிருக்கிறது. அது போலவே இதுவரை கோல்சாக்கின் முன்னணிப் படைகள் மட்டும்தான்



சிதைக்கப்பட்டுள்ளன. பல்லாயிரக் கணக்கான வீரர்கள் நிறைந்த அவனுடைய மாபெரும் வெள்ளைப் படை முழுவதையும் நாங்கள் நிர்மூலமாக்க வேண்டும். அதற்கு எவ்வளவு பாடுகள் படவேண்டி யிருக்கும்? அடுத்த இலையுதிர் காலத் தொடக்கத்தில் எத்தனை ஆயிரம் பேர்கள் பலியாக வேண்டி யிருக்கும்? என்னோடு சுதந்திர தாகம் உந்த நடந்து வரும் எத்தனை மாவீரர்கள் அதற்குள் தங்கள் தாகம் தீருவதற்குள் மண்ணுகப் படிந்து சோவியத் மண்ணிற்கு வளமும் உரமும் தருவார்கள்" என்ற சிந்தனைகள் எல்லோரது நெஞ்சத்தையும் அறுத்தன.

கிராமப் பகுதியைக் கவர நடந்ததாக மேலே சொல்லப்பட்ட போரில் செஞ்சேனையினர் வெற்றி பெற்றவுடன், புகுருஸ்லான் செல்லுதற்குரிய பாதை திறக்கப்பட்டது. எங்கள் படையினர் தீவிரமாக முன்னேறி—சுற்றி வளைத்துப் பிடிக்கும் முறையால் சுதந்திரப் போர்க் காலத்தில் எல்லா நகரங்களையும் கைப்பற்றியது போல—இந்தப் புகுருஸ்லான் நகரையும் எளிதில் கைப்பற்றிக்கொண்டனர். இத்தகைய பெரிய நகரத் தெருக்களில் பெரும் சண்டையேதும் செய்ய வேண்டி யிருக்காது. முக்கியமானதும், தீர்மானமானதுமான பெரும் போர் நகரின் நுழையுமிடத்திலேயே செய்யப்படும். போர் தமக்குப் பாதகமாவதை யறிந்த எதிரிகள் விரைவில் நகரத்தைக் காலி செய்து, வழக்கம்போலப் பின்வாங்கி ஓடித் தப்பி விடுவார்கள். புகுருஸ்லான் நகரப் போரும் இப்படித்தான் முடிந்தது!

# 11

## பெலெப்பேமீது படையெடுப்பு

செஞ்சேனைப் படைகள் முன்னேறிக்கொண் டிருந்தன. சப்பாயேவின் படைப் பகுதி எல்லாப் பகுதிகளையும்விட மிகவும் முன்னதாகச் சென்றுகொண் டிருந்தது. எல்லாப் படைப் பகுதிகளும் இணைந்து ஒருசேரத் தாக்குவது என்ற திட்டம் பல காரணங்களால் கைகூட முடியாமல் போய்விட்டது. இதர படைப் பகுதிகள் மந்தமாகப் பின்தங்கி நகர்ந்தன. எல்லாவற்றிற்கும் முன்னதாகச் சென்ற சப்பாயேவின் படை எதிர்ப்பட்ட எதிரிப் படைகளை உக்கிரமாகத் தாக்கி விரட்டிற்று. ஆனால் எதிரிப் படைகளை முழுவதாக அழிக்கவோ, அப்படியே கைது செய்யவோ கூடவில்லை. எத்தகைய இக்கட்டான சூழ்நிலையிலும், இரவு பகல் எந்த நேரத்திலும் எங்கெங்கு தேவைப்பட்டாலும் பாய்ந்து தாக்கும் ஒரு திறலும், துணிவும், வல்லமையும் நிறைந்து செஞ்சேனையினர் விளங்கினர். பல கல் தொலைவுகள் அணிவகுத்துச் சோர்ந்து ஓரிடத்தில் களைத்துத் தங்குவார்கள். உடனே அங்கும் ஒரு போர் துவங்கிவிடும். இம்மாதிரி எத்தனையோ தடவைகள் நடந்துவிட்டன. உடனே அவர்களது மனச் சோர்வும் உடற்களைப்பும் பறந்துவிடும். எதிரியின் திடீர் தாக்குதலைச் சமாளித்துக்கொண்டே எதிர்த் தாக்குதலை விடாப்பிடியாய் நடத்திப் பின்னிட்டோடும் எதிரிகளையும் ஓட ஓட விரட்டுவார்கள். ஓயாத போராட்டங்களாலும், அயராத அணிவகுப்புகளாலும் அடியோடு களைத்துச் சோர்ந்து போன சமயங்களும் உண்டு. அந்தச் சமயங்களில் முதலில் தங்குமிடத்திலேயே சவங்கள்போல வீழ்ந்து



அசைவின்றி உறங்குவார்கள். காவலாளரும், தளபதியும், சேனைவீரர்களும் ஒருசேரத் தூங்கிவிடுவார்கள்.

கிராமம் கிராமமாக வெற்றியுடன் முன்னேறினார்கள். மலைப்பகுதிகள், ஒற்றையடிப் பாதைகள், சிதைந்த நதிகள், உடைந்த பாலங்கள், சேறும் சகதியும் நிறைந்த நெடுவழிகள், காலைப் பனியும் மாலை மூட்டமும் கவிந்த நேரங்கள், ஓரிரு நாள் பட்டினியும் ஓயாத உழைப்பும் மலிந்த நேரங்கள், போதாத உடைகள், ஒட்டிய வயிறுகள், இரத்தம் கொட்டும் பாதங்கள், இதயம் நோவும் காயங்கள், இப்படியாக அமைந்தன, அவர்கள் சென்ற வழியும், நேரமும், நிலையும்! என்றாலும்கூடத் தளராத உறுதியும், தயங்காத முனைப்பும் உந்த, சுதந்திர தாகம் தீர்த்துக்கொள்ள எத்தகைய முணுமுணுப்புமின்றிப் பொறுமையோடு முன்னேறிக்கொண்டே யிருந்தார்கள். பாதுகாப்புப் போர் புரியும்பொழுது நிறைந்த வல்லமையும் பொறுமையும் காட்டினார்கள். எதிர்த் தாக்குதல் புரியும்பொழுது பெரும் துணிவையும், ஆர்வத்தையும் பாய்ச்சினார்கள். எதிரிகளைத் துரத்திச் சென்றபொழுது விடா முயற்சியோடும் ஆத்திரத்தோடும் பாய்ந்தார்கள். மாவீரர்களாகப் போரிட்டார்கள், செஞ்சேனைச் சிங்கங்களாக உயிர்விட்டார்கள். எதிரிகள் கையில் சிக்கியபொழுதெல்லாம் கொடுமைக்கும், கொடூரத்திற்கும் ஆட்பட்டு, தியாகிகளாக வீரமரணம் எய்தினார்கள். இத்தகைய நம்பிக்கைக்குரிய பெரும்படையைக் கொண்டு வெல்ல முடியாதது என எதுவும் இருக்க முடியாது. இந்தப் படைக்கு வேண்டியதெல்லாம் ஆணையிட்டு வழிகாட்டி வேலை வாங்கும் சரியான தளகர்த்தன் ஒருவன்தான். சப்பாயேவிடம் இந்தத் திறமைகள் இயல்பாக மண்டிக் கிடந்தன. எந்த நிலையிலும் போர்ப் படைகளைக் கட்டுப்படுத்தி இயக்கும் பேராற்றல் அவனிடம் பெருஞ் செல்வமாகப் பெருகி யிருந்தது. இந்தப் பெரும் படை துணிவு நிறைந்ததுதான், என்றாலும் நன்கு பண்படுத்தப்

படாதது. பெரும் போர் உக்கிரமாக நடந்தபோதெல்லாம் பல முறை தவறு செய்துவிடுவார்கள். அவற்றைக் கண்டும் காணாதது போல் இருந்துவிடுவார்கள், அல்லது கண்டாலும் மன்னித்துவிடுவார்கள். சூழ்நிலைக்கு ஏற்ப நடந்து கொண்டது சரிதான் என்று சமாதானமும் சொல்லிவிடுவார்கள். இந்தப் பெரும் படை புகழின் உச்சியை எட்டிக் கொண் டிருந்தது. இந்த நிலையில் அதன் பெருமிதப் பாங்கையும் மேம்பாட்டுச் சிறப்பையும் வார்த்தைகளால் வருணித்துவிட முடியாது. இந்தச் சிறப்பிற்குக் காரணம் சுதந்திரப் போர்க் காலத்தும் அதற்கு முன்னரும் நிகழ்ந்த பல சம்பவங்களின் விளைவாக ஏற்பட்ட நிலைதான். வோல்கா நதி மீண்டும் பின்னால் திரும்பிப் பாய்வதில்லை. அதன் இயல்பான ஆற்றொழுக்கு எதிர்த் திசையில் திரும்பாது. அது போலவே ஒரு முறை ஏற்பட்ட அமைப்பும் நிகழ்ச்சியும் மீண்டும் திரும்பாது. இனிமேலும் அற்புதமும், காம்பீரியமும் நிறைந்த சம்பவங்களும், புதிய நிகழ்ச்சிகளும் ஏராளமாக ஏற்படும். என்றாலும் அவற்றின் போக்கும் முடிவும் வெவ்வேறு வகையாகத்தான் இருக்கும்.

அந்த மாதிரியான சூழ்நிலைகளில்தான் சப்பாயேவ்களும் தோன்றுவார்கள். அதற்குப் பிந்திய சந்தர்ப்பங்களில் சப்பாயேவ்கள் தோன்றவில்லை, தோன்றவும் முடியாது. சப்பாயேவ் அத்தகைய மக்களிடையே, அத்தகைய தேவையான சூழ்நிலையில் தோன்றினான். அதனால்தான் தன்னுடைய படையை வெகு திறமையுடன் நடத்த அவனால் முடிந்தது. தான் தலைமை யேற்ற இருபத்தைந்தாவது படைப் பகுதிக்குச் சப்பாயேவின் படை என்று தானே பெயரிட்டுக்கொண்டது, எவ்வளவு சரியானது என்பதை அவனால்கூட அந்தச் சமயத்தில் உணர முடியவில்லை.

எல்லாச் செஞ்சேனைத் துருப்புகளையும் போன்று, ஆற்றலும், அளவுகடந்த திறமையும், தியாக உணர்வும் ஒருங்கே கொண்டு விளங்கிற்று, சப்பாயேவின் படை.



சப்பாயேவின் செயல்களில் பிரமாதமாகக் குறிப்பிடத்தக்க பண்பேதும் புலப்படாவிட்டாலும்கூட அவனை வீரச் செயல்களின் கொள்கலம் என்று படை வீரர்கள் கருதினர். சப்பாயேவ் செய்த செயல்களைப் போன்று மற்றும் பலர் சாதாரணமாகச் செய்துதான் இருந்தார்கள். என்றாலும் அவர்கள் செய்த ஒரு பகுதியேனும் எல்லோருக்கும் தெரியாது, ஆனால் சப்பாயேவ் செய்த செயல் அனைத்தையும் எல்லோரும் அறிவர். விளக்கமாகவும், விபரமாகவும் எல்லாச் சம்பவங்களையும் நினைவில் இறுத்திக்கொண்டனர். 1918-ல் சப்பாயேவ் சிறந்த போர்வீரனாக மட்டுமே இருந்தான். 1919-ல் மாவீரனாகவும் சிறந்த அமைப்பாளனாகவும் புகழ் பெற்றுவிட்டான். திறமையுள்ள அமைப்பாளன் என்று ஒரே கோணத்தில்தான் அவனைக் குறிப்பிட முடியும். துப்பாக்கி பிடித்துப் போர்செய்ய முடியாத மேலிடத்து உத்தியோகஸ்தர்களது மிடுக்கையும் அதிகார ஆணவத்தையும் அவனால் பொறுக்க முடியாது. அவன் கமிசாராயிருந்தாலும் சரி, தளபதியின் அலுவலக மேலாளாய் இருந்தாலும் சரி, அவனுக்கு வேறுபாடே கிடையாது. கையில் துப்பாக்கி யேந்திப் போரிடுபவன் ஒருவனே எல்லா வெற்றிக்கும் காரணம் என்பது அவனுடைய அசைக்கமுடியாத கருத்து. அந்த அலுவலக உத்தியோகஸ்தர்களைத் தன் விருப்பம்போல் கட்டுப்படுத்தவும் இவனால் முடிவதில்லை. எனவே அவர்களையும் வெறுத்தான். அவன் தலைமைக் காரியாலயத்திற்கு வந்தால் எதையும் கண்டித்துப் பேசுவானே தவிர, இதமாக அறிவுறுத்திப் பேசும் பொறுமை இருக்காது.

தன்னுடைய தோற்றப் பொலிவாலும், அதிகாரத் தொனியாலும் தன்னுடைய படைப் பகுதியினரை நன்கு இணைத்து வைத்திருந்தான் சப்பாயேவ். வீரப் பண்பாலும் தியாக உணர்வாலும் திரண்டெழச் செய்தான். முன்னேறும் துணிவும், முனைந்து தாக்கும் வல்லமையும் பெருகத்

தாண்டினான். தன்னுடைய படை வீரர்களிடம் வீரப் பண்பு பாரம்பரியமாக நிலைக்க வகை செய்தான். இந்தப் பண்புகள் பிற படைகளுக்கும் பரவின. ராஷின், புகாகோவ், தொமாஷ்கின் முதலிய ரெஜிமெண்டுகளிலிருந்த படை வீரர்கள் பாதகமான சூழ்நிலையிலும் எதிரியின் தாக்குதலுக்குச் சளையாது ஈடுகொடுத்து நின்றார்கள். போர்க்களத்தையெல்லாம் வெற்றிப் பாசறைகளாக மாற்றினார்கள். எப்பொழுதும் பின்வாங்கியதே யில்லை. ஸ்டெபான் ராஷின் ரெஜிமெண்ட் வீரர்களுக்குப் பின்னிடுவதைக் காட்டிலும் வெட்கக்கேடான வேறு நிலையிருந்ததில்லை.

இந்தத் துணிவு எவ்வளவு மகத்தானது; ஆனாலும் அதன் உறுதியும் போக்கும் எவ்வளவோ அபாயகரமானது!

போர்க்களத்தில் மட்டுமே சப்பாயேவ் தன் முழு உணர்வோடு விளங்குவான். போர்க்களத்தில் சிறு தயக்கமோ தடுமாற்றமோ ஏற்படுவதைக் கண்டால் கோபத்தால் கொப்புளிப்பான், பயங்கர எண்ணங்களால் விம்முவான். போர்முனையின் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்குப் பாய்ந்து செல்லுவதுதான் அவனுக்கு மிக மிகப் பிடித்த வேலை. சில சமயங்களில் இவ்வித வேலைக்கு அவசியம் இல்லாதபோது ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லிப் பின்னணியில் தங்கிவிடுவான். ஒவ்வொரு துணைப் படையாகத் தாண்டிச் செல்லுவான். ஒரு துணைப் படையருகில் நிற்பதைக் கண்ட இன்னொரு படையினர் டெலிபோனில், 'அவசரம், விரைவில் இங்கு வருக' என்று அழைப்பார்கள். உடனே சப்பாயேவ் அங்கு புறப்படுவான். ஆனால் உண்மையினால் எத்தகைய அவசரத்திற்கும் அங்கு இடமிருக்காது! அவனோடு மகிழ்ச்சியோடு சற்று நேரம் பேசுவதற்காகத்தான் அந்தத் தளபதி நண்பர்கள் அப்படி அழைப்பார்கள். இவர்களைப் போன்றவர்கள்தான் சப்பாயேவின் வீரச் செயல்களுக்குப் பெரும் விளம்பரம் தந்து அவனது புகழை எங்கும் எக்காளமிடச் செய்தவர்



கள். இவர்களின்றேல் சப்பாயேவால் இவ்வளவு புகழ்ச் சுமையைத் தாங்கியிருக்க முடியாது, எவராலும் முடியாது! பெருமையும், மகிமையும் நிறைந்த செயல்களைச் செய்துவிடுவதால் மட்டும் புகழ்ந்துவிடாது. அந்தச் செயல்களைப் பரப்பப் போதிய தம்பட்டமும், பின் பற்றிப் பெருமையாகப் பேசும் தொண்டர் திருக் கூட்டமும் மிகுந்தால்தான் புகழும் வளரும். அத் திருக்கூட்டத்தினர் நமது புகழைப் பாடும்பொழுது அடையும் மகிழ்ச்சிப் பெருக்கந்தான் நாம் பெறும் புகழை நிலைநிறுத்தும்.

சப்பாயேவின் புகழைப் பெருக்கியவர்கள் இன்னொரு வகையிலும் அதிர்ஷ்டசாலிகள். அவன்மீது வீசிப் படர்ந்த புகழொளி இவர்கள்மீதும் பாய்ந்தது, ஸ்டெபான் ராஷின் ரெஜிமெண்டைச் சேர்ந்த இரு வீரர்கள் போர்க்களத்தில் தமது கால்களை இழந்துவிட்டனர். கவைக் கம்புகளை ஊன்றிக்கொண்டு தடுமாறி நகர்ந்தனர். தமது ரெஜிமெண்டை விட்டுப் பிரிந்து செல்ல இருவருக்குமே விருப்பம் இல்லை; ரெஜிமெண்டைக் காணவந்த சப்பாயேவ் தங்களோடும் சில நிமிஷங்கள் பேசவே, பெரு மகிழ்ச்சி கொண்டனர். நடமாட முடியாவிட்டாலும் படையின் முன்னேற்றத்திற்கு அவர்கள் தடையாக இருக்கவில்லை. இருவரும் பீரங்கி வண்டிகளில் அமர்ந்து அவற்றை இயக்கினர்.

நமது வீரப்பிரதாப சகாப்தம் ஓடி மறைந்துவிடும்; நமது செயல்களும் நாளடைவில் மங்கத் தொடங்கும். இனி வரும் மக்கள் இவற்றை அப்படியே நம்ப மாட்டார்கள். ஏதோ புராணக் கதைகள் போலத்தான் ஏற்பார்கள். என்றாலும்கூட இத்தகைய சம்பவங்கள் அழிக்க முடியாத வரலாற்றுச் சித்திரங்களாக நெஞ்சில் பதிந்த உண்மைகளாகிவிட்டன. ஒரு முழுக் குருடன் இருந்தான். தன்னுடைய நண்பர்கள் மூலமாக டிவிசன் பத்திரிகைக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினான். இந்தக் கடிதம் இன்னும் எங்களிடம் இருக்கிறது. அதைக் கீழே தருகிறேன்:

## குருட்டு ராணுவ வீரனின் கடிதம்

ஆசிரியத் தோழரே,

"எனக்கு நேர்ந்த பரிதாபமான சம்பவத்தைத் தங்களுடைய பத்திரிகையில் பிரசுரிக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன். ஊரல் பகுதிக் கொஸாக்கியர்களிடமிருந்து தப்பி, போல்ஷெவிக்குத் தோழர்களை நான் அடைந்த சம்பவம்தான் அது! உரால்ஸ்க் ரயில் நிலையத்தில் கொஸாக்கியர்களுக்கும், செஞ்சேனையினர்க்கும் இடையில் நாங்கள் உயிர் வாழ்ந்தோம் என்பதை மட்டும் சுருக்கமாக விளக்க விரும்புகிறேன். இரு தரப்பினர்க்கும் கொடிய போர் நடந்தபொழுது என்னுடைய இரு சகோதரர்களும் இரயில் வேலை செய்து கொண்டிருந்தார்கள். தோழர் எர்மோஸ்ஷென்கோ ஏப்ரல் 20ம் தேதி வாக்கில் உரால்ஸ்க்கைத் தாக்கத் தொடங்கியதும், உரால்ஸ்க் பகுதியைச் சேர்க்குமாறு கொஸாக்கிய அரசாங்கம் ஒரு அவசர உத்தரவைப் பிரகடனம் செய்தது. என்னுடைய சகோதரர்கள் செஞ்சேனைக்கு எதிராகப் போரிட மறுத்துவிட்டார்கள். கொஸாக்கியர்கள் படையைத் திரட்டிப் போர்முனைக்கு அனுப்பிக்கொண்டிருந்தபொழுது போல்ஷெவிக்குத் தோழர்களுக்கு எதிராகத் துப்பாக்கி பிடிக்க மறுத்த என்னுடைய இரு சகோதரர்களும் சுட்டுத் தள்ளப்பட்டார்கள். இது ஜூன் மாதம் 23ம் தேதி நள்ளிரவில் நடந்தது. கவனிப்பார் யாருமின்றி நான் அனாதையாகக் கைவிடப்பட்டேன். என்னுடைய தாயும் தந்தையும் இறந்து ஐந்து ஆண்டுகளாய்விட்டன. வேறு நெருங்கிய உறவினர் யாரும் எனக்கு இல்லை. தவிரவும் நான்



பிறவிக் குருடன். என்னுடைய சகோதரர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட தகவலறிந்ததும் நான் கொஸாக்கிய அரசாங்கத்தினரிடம் சென்று உதவிக்காக மன்றாடினேன். என்னுடைய சகோதரர்கள் செஞ்சேனையிர்க் கெதிராகப் போரிட மறுத்துவிட்டார்கள் என்றும், எனவே நானும் போல்ஷெவிக்குத் தோழர்களிடம்சென்றே உதவி பெற்றுக்கொள்ளலா மென்றும் உதாசீனமாக அவர்கள் பதில் சொன்னார்கள், எனக்கு ஆத்திரம் பீறிட்டு வந்தது. 'இரத்தவெறி பிடித்த மிருகங்களே, இனிமேலும் நிரபராதி மக்களைக் கொன்று புனித இரத்தத்தை உங்களால் பருக முடியாது!' என்று கத்தினேன். இதற்காக என்னையும் பிடித்துச் சிறையில் தள்ளிவிட்டார்கள். சுட்டுப் பொசுக்குவதற்கென ஒரு நாளையும் குறித்திருந்தார்கள். ஆனால் பதினைந்து நாட்களுப் பின்னர் என்னை விடுவித்தார்கள். உண்பதற்கு ஒரு கவளமும் கிடைக்காது நகரத் தெருக்களில் பல நாட்கள் சுற்றித் திரிந்தேன். கடைசியில் போல்ஷெவிக் தோழர்களிடம் சென்றே உதவி கேட்பதென்று முடிவு கட்டினேன். எவ்வளவுதான் பிறவிக் குருடனாயிருந்தாலும் எப்படியும் வழி விசாரித்துச் செல்லுவது அல்லது வழியிலேயே செத்துவிடுவதென்று துணிந்தேன். கொஸாக்கியர்களுக்கு அடிமைப்பட்டுக் கேடுகெட்டு வாழ்வதைவிடச் செத்து மடிவது மிக உயர்ந்ததாகத் தோன்றியது. உரால்ஸ்க்கிலிருந்து ஒரு நண்பன் என்னை ரகசியமாக வெளியே கூட்டிவந்து நெடுஞ்சாலையில் நிறுத்தினான். ஒரு குறிப்பிட்ட திசை நோக்கி என்னை நிற்கவைத்து முதுகில் சூரிய ஒளிபடுமாறு நேரே நடந்து சென்றால் ருஷ்யாவிற்குள்

நுழைந்துவிடலாம் என்று வழிகாட்டிச் சென்றான். அந்த நண்பனுக்கு நன்றி தெரிவித்து நானும் புறப்பட்டேன். சில கல் தொலைவு கடந்தவுடன் வழி தவறிவிட்டேன். எங்கே போகிறோம் என்பது தெரியாமல் நடந்துகொண் டிருந்தேன். அப்பொழுது என் சகோதரர்களின் சாவு, எனக்கு நேர்ந்த இடுக்கண்கள், தொல்லைகள் ஆகிய அனைத்தும் நினைவில் மோதி நடையைத் தளர்த்தின. புல்வெளிப் பிரதேசத்து நெடுஞ்சாலையில் நடுக்கும் குளிரில், ஒட்டிய வயிறோடு ஆறு நாட்கள் நடந்தேன். ஆறாவது நாளில் என்னுடைய சக்தி முழுவதும் செலவாகிவிட்டது. என் உதடுகள் இரத்தம் உறைந்து படுத்துவிட்டன, உணவேதும் கிடைக்காத வயிறு சுருண்டுவிட்டது. ஆறாத் துயரடைந்தேன். நிலம் நனையக் கண்ணீர்விட்டேன். இனிமேலும் உயிர்வாழ முடியும் என்ற நம்பிக்கை சிறிதும் இன்றி நடந்தேன். 'என் அருமைச் சகோதரர்களே! என்னைத் தவிக்க விட்டுநீங்கள் மட்டும் மண்ணில் புதைந்து அமைதியாகிவிட்டீர்களே! என்னையும் உங்களோடு சேர்த்துக்கொண்டு என் துயரத்துக்கு முடிவு கட்டுங்கள். புல்வெளியிலே பசியால் துவண்டு நான் சாகிறேன். எங்கும் யாரும் கண்ணில் படவில்லையே? யார் என்னுடைய கண்ணீரைத் துடைக்க வருவார்கள்!' என்று கேவிக் கேவிக் கத்தினேன். அப்பொழுது நாய் குரைக்கும் சத்தமும் அதைத் தொடர்ந்து சில குழந்தைகளின் ஒலியும் கேட்டன. அந்தச் சத்தத்தைத் தொடர்ந்து நான் நெருங்கிச் சென்று, அக் குழந்தைகளிடம் அது கொஸாக்கியக் கிராமமா அல்லது கிராமவாசிகளது ஆளுகையில் உள்ள கிராமமா? என்று



விசாரித்தேன். கிராஸ்னிடாலி என்ற அந்தக் கிராமம் கொஸாக்கிய எல்லைக்கு ஏழு கற்களுக்கு அப்பால் இருக்கிறதென்றும், கிராமவாசிகளது பிடிப்பில் உள்ளதுதான் என்றும் அந்தக் குழந்தைகள் சொன்னார்கள். அப்போது அங்கு வந்த கிராமவாசியொருவன் என்னைக் கூட்டிச் சென்று உண்ணுவதற்குக் கொஞ்சம் வழங்கினான், என்னுடைய பசி கொஞ்சம் அடங்கியது. மறு நாள் என்னை மலாக்கோங்கா என்ற வேறொரு கிராமத்திற்குக் கூட்டிச் சென்றான். அங்கிருந்து பல தொல்லைக்குப் பின்னர் பெட்ரோவ்ஸ்க் ஜில்லாவை அடைந்தேன்."

பிறகு தனக்குச் சோவியத் ருஷ்யாவில் எத்தகைய வரவேற்புக் கிடைத்ததென்றும், எவ்வளவு பரிவுடன் பாதுகாத்துப் பேணினார்கள் என்றும் விவரித்திருந்தான்.

"கிராம சோவியத் தலைவர் என்னை அன்புடன் வரவேற்றார். இந்த வரவேற்பால் நான் பெரிதும் அக மகிழ்ந்தேன். என்னுடைய போல்ஷெவிக்குத் தோழர்களோடு இருந்தபொழுது என்னுடைய துன்பமெல்லாம் மறைந்து போயின. நானும் பாதுகாப்பான இடத்தில் இருந்தேன். என்னை ஒரு பெரிய அறையில் தங்கச் செய்து வேண்டிய உணவும், உடைகளும் தந்து பேணினார்கள். நான் இப்பொழுது "கனதனவான்" போல வாழ்கிறேன். என்னுடைய நன்றியுணர்ச்சியையும் விசுவாசப் பெருக்கத்தையும் தெரிவிக்க விரும்புகிறேன்."

கடிதத்தின் இந்த இடத்தில் தனக்கு இந்த உதவி செய்தவர்களுடைய பெயர்ப் பட்டியலைத் தந்திருந்தான்

அதன் பின்னர் கீழ்க்கண்ட வரிகளுடன் கடிதத்தை முடித்திருக்கிறான் :

" ருஷ்ய சோவியத் குடியரசுகளும், தோழர் லெனினும் வாழ்க! எப்பொழுதும் வெற்றியே பெற்ற மாவீரன் சப்பாயேவ் வாழ்க! ஜில்லா சோவியத்துக்களும் அவற்றின் பொருளாதாரப் பங்கீட்டு நிலையங்களும் நீடூழி வாழ்க!"

இது வெறும் கடிதம் மட்டும் அன்று, உன்னதமான கவிதையும்கூட. இந்தக் குருட்டுச் செஞ்சேனை வீரன் சப்பாயேவின் செயல்களைப் புனிதமாகப் போற்றினான். அவனுடைய தீரச்செயல்களைத் திசையெட்டும் பரப்பியவர்களுள் தலைசிறந்தவனாக விளங்கினான்.

இதனால் சப்பாயேவின் புகழ் செஞ்சேனைகளுக்கு அப்பாலும் எதிரொலித்தது.

நாங்கள் இன்னொரு கடிதத்தையும் பாதுகாத்து வைத்திருந்தோம். இது நவோஷென்ஸ்க்கி லிருந்த சோவியத் ஊழியன் எழுதியது. சப்பாயேவின் சர்வ வல்லமைமீது மக்கள் எத்தகைய நம்பிக்கை வைத்திருந்தார்கள் என்று தெரிந்துகொள்ளுவதற்கு இதை மட்டும் படித்தால் போதும். சப்பாயேவின் படைகள் போரிட்டுச் சென்ற இடங்களில் எல்லாம் அவனை ஒரு தளபதியாக மட்டும் மதிக்கவில்லை. எல்லாவகை ஆற்றலும் கொண்ட பெருந் தலைவனாகவும் போற்றினார்கள். இந்தக் கடிதம் மெழுகுத் தாளின்மீது 'டைப்' அடிக்கப்பட்டிருந்தது. வெகு ஜாக்கிரதையுடன் உறைக்குள்ளிட்டு மூடிச் சப்பாயேவுக்குக் கடிதத்தை அனுப்பியிருந்தான் அந்த ஊழியன். அவன் பெயர் ஸ்பிக்கின். அந்தக் கடிதத்தில் நவோஷென்ஸ்க் அதிகாரிகளின் அதர்மப் போக்கைக் குறித்துச் சப்பாயேவிற்குப் புகார் செய்திருந்தான். தனக்குப் போதிய உதவி தருமாறு வேண்டிக்கொண்டான். இந்தப் புகாரைப் பொறுத்த



மட்டில் சப்பாயேவ்தான் முறையான நியாயம் விரைவில் வழங்குவான் என்று அவன் நம்பினான். அந்தக் கடிதம் இதுதான் :

" மிகவும் அவசரம்.

" டிவிசன் தளபதி, தோழர் வாஸிலி இவானோவிச் சப்பாயேவ் அவர்களுக்கு,

நவோஷென்ஸ்க் நகர மக்கள் நியாயாதிபதிக் குழுத் தலைவன் ஸ்பிக்கின் எழுதுவது :

" அவமானம் நிறைந்த புகார்.

" தோழர் சப்பாயேவ் அவர்களே,

என்னுடைய இந்தப் புகாரின்மீது தங்களுடைய வல்லமை நிறைந்த பிரத்தியேகக் கவனத்தைச் செலுத்துமாறு பணிவுடன் வேண்டுகிறேன். இரண்டு ஆண்டுகள் உரால்ஸ்க் முனையில் நேர்மையுள்ள சோவியத் ஊழியன் எனப் பெயரெடுத்திருந்தேன். ஆனால் நவோஷென்ஸ்க்கில் உள்ள திருடர்களும், குற்றவாளிகளும் பொறாமையினால் என்னைப் பழித்துத் தூற்றுகிறார்கள். அந்தத் திருடர்களது ஊழலை வெளிப்படுத்தி உண்மைச் சொரூபத்தை நான் வெளிக்காட்டுவதைத் தடுப்பதற்காக என்னை சித்தஸ்வாதீனமில்லாதவன் என்று கதை திரித்து இகழ்கிறார்கள். விஷயம் இதுதான்...16 (அதிகாரிகள்) திருடர்கள்; (அத்தனை பேருடைய பெயரையும் இங்கு குறித்திருந்தான்.) பல பொருள்களைத் திருடிக்கொண்டார்

கள். இந்தக் கொள்ளையைப்பற்றிய புகாரொன்றை நான் சமாராவிற்கு அனுப்பி வைத்தேன். (இரு திருடர்கள் முன்னரே கைதாக்கப்பட்டனர்.) கைது செய்யப்படாத 14 திருடர்களும் எனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென்றும், டாக்டரைக் கொண்டு சோதிக்க வேண்டுமென்றும் மேலதிகாரிகளுக்குக் கடிதம் எழுதிப் போட்டனர். என்னைப் பரிசோதித்த டாக்டர்கள் நான் அறிவு நலத்தோடுதான் இருக்கிறேன் என்று தீர்ப்பளித்துவிட்டார்கள். அந்த 14 திருடர்களும், பகற் கொள்ளைக்காரர்களும் இதை நம்ப முடியாதென்று மறுத்துவிட்டார்கள். என்னைச் சமாராவில் உள்ள மாகாணக் கமிட்டிக்கு அனுப்பி மூளைக் கோளாறு நிபுணர்களைக் கொண்டு பரிசோதிக்க ஏற்பாடு செய்துள்ளார்கள். இன்று போர்முனைப் பகுதியில் எல்லா உண்மையும் நீதியும் உம்மைப் போன்ற வீரத் தளபதிகளிடமும், செஞ்சேனை வீரர்களிடமும்தான் இருக்கிறதென்பதை நினைவில் கொண்டு, தோழர் சப்பாயேவ், நான் உங்களைப் பணிவோடு வேண்டுகிறேன். நவோஷென்ஸ்க்கில் உள்ள, மேலே குறிப்பிடப்பட்டுள்ள 14 திருட்டு அதிகாரிகளையும் உடனே கைது செய்து, புரட்சி நியாய மன்றத்தில் விசாரிக்கச் சமாராவுக்கு அனுப்ப உத்தரவிடுமாறு பணிவுடன் மன்றாடுகிறேன். இந்தச் செயலுக்கு எல்லா மக்களும் மனம் நிறைய நன்றி செலுத்துவார்கள். தன்னலம் துறந்த மாவீரன் என்றும், குடியரசையும், சுதந்திரத்தையும் பேணி நிற்கும் காவலன் என்றும் எல்லோராலும் நீர் போற்றப்படுகிறீர். தோழர் சப்பாயேவ் அவர்களே! உங்களிடம் எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. அந்தப் பதினாறு கொள்ளைக்காரர்களுக்கு எதிராக என்னைப் பாதுகாத்து நியாயம் வழங்குமாறு ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன்.



"ஏப்பிரல், 25-1919.

இங்ஙனம்.

ஒப்பம்: திமோபோ ஸ்பிக்கின்"

அடுத்தபடி ஒரு அடிக் குறிப்பும் எழுதி யிருந்தான். அதிகாரிகளின் கையாடல் பற்றிய துப்புகள் எங்கெங்கு கிடைக்குமென்று அதில் குறித்திருந்தான்.

"எஞ்சியிருக்கிற திருட்டு அதிகாரிகளையெல்லாம் கொஞ்சமும் தயக்கமின்றி உடனே கைது செய்யும்படி மிகவும் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த நச்சுப் பூச்சிகளிடமிருந்து மக்களைத் தக்க சமயத்தில் காப்பாற்றுவதற்காகத் தங்களுடைய மங்காப் புகழ் இன்னும் ஓங்கும்."

இந்த வேண்டுகோள் பகுதியில் "அந்த நச்சுப் பூச்சிகளாலும் கொடிய சிலந்திகளாலும்" ஸ்பிக்கின் அனுபவித்த துயரங்கள் புலப்பட்டன:

"தோழர் சப்பாயேவ் அவர்களே! தலைசிறந்த வீரரென்று எல்லா மக்களாலும் நீர் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறீர். உமது புகழ் எல்லோரது நாவிலும் துதிக்கப்படுகிறது. சிறு குழந்தைகள்கூட உம்மைப்பற்றியே பேசுகிறார்கள். நானும் ஒரு வீரன் என ஏற்றுக்கொள்ளப்பட்டவன்தான். போர்க்கலை வீரனல்ல; நாட்டாளுகை நிர்வாகக் கலையில் வீரன். நானும் புகழாலும் போற்றுதலாலும் பாராட்டப்பட்டவன்தான். இதை முழுக்க நம்பும்படி நான் வேண்டுகிறேன். என்னுடைய செயல்களிலிருந்தே நீர்

திருப்தியுறலாம். மிகுந்த ஆற்றலுக்கும் அயராத உழைப்பிற்கும் நான் கொஞ்சங்கூடத் தயங்காதவன். நான் தங்களைச் சந்திக்க முடிந்தால் பெரிதும் மகிழ்வேன். என்னுடன் தாங்கள் நேரிய தொடர்புகொண்டால் மிகவும் இன்புறுவேன். நான் இயல்பாகவே நேர்மைத் திறமும் நேசப் பாங்கும் கொண்டவன். மக்களுக்காக என் வாழ்வையே அர்ப்பணித்தவன். (என்னுடைய தீரச் செயல்களை நேரில் தங்களுக்குத் தெரிவிப்பேன்.) நான் உங்களுடைய வலது கரத்தானாக அமைந்து, என் திறமையையெல்லாம் உங்களுடைய போர்க் காரியங்களில் செலுத்தி கொள்ளைக்காரக் கோல்சாக்கை,—எல்லோராலும் வெறுக்கப்படும் கொடியவனை-தொலைத்துக்கட்ட உதவிபுரிவேன்.

மகிமைபெற்ற ஸ்டெபான் ராஷினின் பெயர் சூட்டப்பட்ட செஞ்சேனைப் படையில் ஒரு ஊழியனாக என்னைச் சேர்த்துக்கொள்ளுமாறு மன்றாடுகிறேன்."

ஒப்பம். டிமோலேம் ஸ்பிக்கின்

மேலே கண்ட ஸ்பிக்கினுடைய புகார்க் கடிதத்திலும், விண்ணப்பக் குறிப்பிலும் கண்டவற்றுள் பல முரண்பாடுள்ளனவாகவும் நம்பவியலாதனவாகவும் இருந்தன. பித்தன் ஒருவனுடைய குழறல் போலவும் தோன்றின. இந்தக் கடிதத்தில் மிகைப்படுத்திச் சொல்லப்பட்டுள்ள நிகழ்ச்சிகளில் பல, சிறிது வேறுபாட்டுடன் சப்பாயேவின் படைப் பகுதியிலும் நிகழ்ந்துள்ளன. இம்மாதிரி விஷயங்களில் எப்போதும் தலையிட மாட்டேன் என்று தள்ளிவிடுவது சப்பாயேவின் இயல்பில்லை; ஆனால் எல்லாவற்றையும் தானே ஆராய்ந்து, புலன் விசாரணை செய்து, உண்மை



களைக் கண்டுபிடித்து அயோக்கியர்களையும் உதவாக்கரைகளையும் வெளிப்படுத்துவதில் அவனுக்கே ஒரு தனி இன்பமும் மகிழ்ச்சியும் ஏற்படும். எதிரிப் படையை விரட்டி முன்னேறிக்கொண்டிருந்த இக்கட்டான சமயத்தில் இந்தக் கடிதம் கிட்டியதால் அவனால் ஏதும் செய்ய முடியவில்லை; என்றாலும் அவனை உறுத்திக்கொண்டேயிருந்தது; இதை வெகு நாட்கள் நினைவில் வைத்திருந்தான். தானே நேரில் சென்று எல்லாவற்றையும் விசாரித்து நீதி வழங்க வேண்டுமென்ற ஆசையிருந்தது. ஆனால், "குற்றம் செய்தவர்களை" இடியாக இடித்து மின்னலாகப் பாய்ந்து, திட்டிக் கடுமையான கடிதம் ஒன்று மட்டும்தான் அவனால் எழுத முடிந்தது! அடப் பாவமே! விசாரணை ஏதும் இன்றி, ஸ்பிக்கின் குறிப்பிட்ட அந்தப் பதினான்கு நச்சுப் பூச்சிகளும், சப்பாயேவினால் ஈவிரக்கமற்ற அயோக்கியர்கள் என்று கண்டிக்கப்பட்டனர். அவன் எதையும் எளிதில் நம்பும் தன்மையுடையவன். அதைவிட எளிதில் தன்னுடைய மனத்தையும் அபிப்பிராயத்தையும், ராணுவச் சமாசாரமில்லாத பிறவற்றில், மாற்றிக்கொள்ளும் இயல்புடையவன். இந்த விஷயத்தைப் பொறுத்த மட்டும் எதிர்மாறாக இருந்தான்; வேறு யாருடைய கருத்தையும் நம்பி ஏற்றுக்கொள்ளாது, தன்னுடைய சாமர்த்தியத்தையே சார்ந்திருந்தான்.

"மாவீரன்" என்ற மங்காத பெருமை பெற்ற சப்பாயேவிடம் ஏதேனும் மனித சக்தியை விஞ்சிய சக்திகள் பெருகியிருந்தனவோ என்று தேடிப் பார்த்தால், அவனிடம் சாதாரண மனித இயல்புக்குரிய சக்திகளைத்தான் காண முடியும். பல உயர்ந்த பண்புகளைக் கொஞ்சம்கூடக் கொண்டிராத குறையும் அவனிடம் இருந்தது; என்றாலும் அவனிடம் அமைந்திருந்த ஆற்றல்கள் என்றும் மங்காதவை, என்றென்றும் புதியவை. இந்த ஆற்றலை அவன் நன்கு பயன்படுத்திக்கொண்டான். பண்படாத கொரில்

லாப் போக்குடைய விவசாயக் கூட்டத்தில் தோன்றியமையால், தன்னுடைய சக்திகளை யெல்லாம் பக்குவப்படுத்தி, தேவைக்கேற்ப உணர்ச்சித் தீயில் கனன்றெழச் செய்து, தன்னையே நடுநாயகமாக்கிக்கொள்ளும் ஆற்றல் அவனிடம் இயற்கையில் நிலைத்திருந்தது.

சப்பாயேவின் புகழ் அவனுடைய வீரச் செயல்களில் வேரூன்றியதைவிட அவனைச் சூழ்ந்திருந்தோரிடமே பெரிதும் சார்ந்திருந்தது. உள்நாட்டுச் சுதந்திரப் போரில் சப்பாயேவ் செய்த சாகசத் தீரச் செயல்களின் சிறப்பிலிருந்து குன்ற மதிப்பதாக எண்ணக் கூடாது. ஒரு உண்மையைத் தெளிவுபடுத்திக்கொள்ள உதவும் சான்றாகவே இதையும் கருத வேண்டும். ஒரு வீரனின் பெயரைச் சார்ந்து சரித்திர நிகழ்ச்சிகளைவிடக் கட்டுக்கதைகளே மிகுதியாக விரைவில் பரவிவிடுகின்றன என்ற உண்மையை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். பிறரைவிடச் சப்பாயேவைச் சார்ந்து மட்டும் ஏன் கட்டுக் கதைகள் உற்பத்தியாக வேண்டும்? அவனுடைய பெயர் மட்டும் இவ்வளவு பிரபலமடையக் காரணம் என்ன? என்ற கேள்விகளைப் பொதுமக்கள் கேட்கத்தான் செய்வார்கள்.

ஏனென்றால்...

துணிவும் தீரமும் நிறைந்த வீரப்படையினரின் இயல்புகளை யெல்லாம் தானே கொண்டிலங்கி உருவகிக்கும் ஆற்றல் சப்பாயேவிடம் மட்டுமே பொலிந்தது! இவன் எவற்றைச் செய்தானோ அவை யெல்லாம் அவர்களுக்கும் ஏற்புடையனவா யிருந்தன. வீரம், அஞ்சாமை, துணிவு, தெளிவு ஆகிய படை வீரர்க்குரிய பண்புகள் அனைத்தும் இவனிடம் ததும்பி யிருந்தன. இவனைக் காட்டிலும் மிகுதியாகப் பிறரிடம் இத்தப் பண்புகள் பெருகி யிருந்தாலும் தகுந்த சமயத்தில் இவற்றைப் பயன்படுத்தும் சூட்சுமம் சப்பாயேவுக்கு மட்டுமே தெரியும். இவனை எப்போதும் சூழ்ந்திருந்த நண்பர்களின் உதவி இவனுக்கு எல்லாச்



சமயத்தும் கிடைத்தமையால் தன்னுடைய முயற்சிகளில் வெற்றி பெறுவதும் எளிதாயிருந்தது. இவனைவிட வீரமும், புத்திசாலித்தனமும் கொண்ட பலர் இருந்தார்கள்—மிகு திறமையுடைய தளபதிகளும், அறிவு பெருகிய தலைவர்களும் இருந்தார்கள்—என்றாலும் அவர்கள் பெயர்கள் எல்லாம் மறந்து போயின. காலப் போக்கில் மறைந்தும் போயின. சூழ்நிலைக்கேற்ப நடக்கும் பக்குவமும், பிறரிடம் சிதறிக் கிடந்த ஆற்றல் அனைத்தையும் ஒருசேரக் கொண்டு செயலாற்றும் திறமும் சப்பாயேவிடம் அமைந்திருந்ததால் அவன் பெயர் மட்டும் எல்லோரது நினைவிலும் தங்கிற்று!

கொஸாக்கியர்களை எதிர்த்துச் செஞ்சேனையினர் இனி மேற்கொள்ளப் போகும் படையெடுப்புகளைப்பற்றிய முழு விபரங்களையும் ஒன்றன் பின் ஒன்றாக விளக்க வேண்டிய அவசியம் இல்லை. படையெடுப்பு உத்தரவுகளைப் பற்றியும், அவற்றால் விளைந்த நன்மை தீமைகளைப் பற்றியும், போரில் ஏற்பட்ட வெற்றி தோல்விகளைப் பற்றியும் விளக்கமாகக் குறிப்பிட வேண்டிய தேவையும் இல்லை. முழுக்க முழுக்க ராணுவச் சமாசாரங்களைப் பற்றிய புத்தகங்கள் எழுதுவோர் அவற்றை விளக்கமாக எழுதிக் கொள்ளட்டும். இந்த நூலில் அத்தகைய தொடர்ந்த போர் நடவடிக்கை விபரங்களையோ, போர் நிகழ்ந்த தேதிகள், ஈடுபட்ட நபர்கள், இடங்கள் ஆகியவைகளையோ எழுதும் நோக்கம் எனக்கில்லை. இந்த நூலின் மையக் கருத்தாக வைத்து எழுதப்படுவது...உள் நாட்டுச் சுதந்திரப் போர்க் காலத்தில் தோன்றிய அந்தக் காலத்திற்கே உரிய மகத்தான வாழ்க்கை யொன்றைப்பற்றிய பண்புகளை மட்டும் கொண்ட பல கோணப் பார்வையும், படப் பிடிப்பும் தான். உதாரணமாகச் செஞ்சேனைப் படையினர் பெலெப்பே நெடுஞ்சாலையில் அணிவகுப்பில் அவர்கள் மேற்கொண்ட ராணுவ நடவடிக்கைகளைமட்டும் விளக்குவதோடு அமையா

மல், அன்றாட வாழ்க்கைச் சம்பவங்களைப்பற்றிய ஓரிரு காட்சிகளையும் ஆங்காங்கே விளங்கிச் செல்லுவேன்.

புகுரூஸ்லானுக்கு அப்பால் உள்ள டிமிட்ரோவ்ஸ் கோயி என்ற கிராமத்திலிருந்து சிஷோவின் படைகள் டாடார்ஸ்கிகோண்டின் தலைமையில் உள்ள எதிரிகளை நோக்கிச் சென்றுகொண்டிருந்தன. வழியெல்லாம் கடும் போர்கள் நிகழ்ந்தன. புகுரூஸ்லான் கேந்திரத்தைவிட்டுப் பின்னிட்டதால் முன்னேறித்தாக்கும் வல்லமை போய்விட்டதென்றும் வெற்றிப் பாதைக்கு நிரந்தர முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளதென்றும், இனிமேல் செஞ்சேனையினரால் தொடர்ந்து விரட்டப்பட நேருமென்றும், இந்தத் தாக்குதலைச் சமாளித்துச் சாமர்த்தியமாகப் பின்வாங்கிவிட வேண்டுமென்றும், கொஸாக்கியப் படைத் தலைவன் டாடார்ஸ்கி உணரவில்லை. தன்னுடைய படைகளைத் திரட்டிக் கொண்டு, விரட்டிவந்த செஞ்சேனைப் படையினருக்கு எதிர்நிற்க முடிவு கட்டினான்...என்றாலும் காலம் கடந்த முயற்சி இது! வெற்றி பெற முடியும் என்ற உறுதியான நம்பிக்கை வெள்ளைப் படையினரை விட்டுச் சென்று செஞ்சேனையினரிடம் அடைக்கலம் புகுந்துவிட்டது. புது நம்பிக்கையால் உந்தப்பட்ட செஞ்சேனையினர் எதிரியின் முயற்சிகளை யெல்லாம் முறியடித்து முரசம் ஆர்த்து முன்னேறிக்கொண்டேயிருந்தனர்.

போர்ச் சமயத்தில் இத்தகைய நம்பிக்கை ஒரு கட்சியிலிருந்து இன்னொரு கட்சிக்கு மாறிவிடுவது மிகவும் குறிப்பிடத்தக்கது. இதன் விளைவும் நீடித்து நிற்கக் கூடியது. இந்த மாறுதலைக் கவனிக்காதிருப்பவர்கள் குருடர்களாகத் தானிருக்க வேண்டும். திடீரென்று ஒரு கட்சி வலுக்குன்றிச் சரிவடையத் தொடங்கியவுடன் எதிர்க் கட்சி ஏதோ ஜீவரசம் பருகியதுபோல் உணர்ச்சியும் ஊக்கமும் கொண்டு எழுகின்றது. கண்கள் சிவக்க, கைகள் துடிக்க, நெஞ்சம் பொறும, நினைவெல்லாம் பொங்க எதிர்பாராத சந்தர்ப்பத்



தைப் பயன்படுத்திக்கொண்டு முன்னேறும் இந்தச் சமயத்
தில் வலுக் குறைந்த கட்சி எல்லாவற்றையும் இழந்து-சாவ
தைத் தவிர வேறு வழியின்றிச் செயல் இழந்து, நிற்கும்.
கடைசியில் அறிவின் முகட்டில் கறைந்துவிடும். கொஞ்ச
காலத்திற்கு முன்னர் புகுரூஸ்லானில் வீரதீரப் படையாக
விளங்கிய கொஸாக்கியர்கள் இன்று உயிரோடுள்ள சவங்க
ளாகிவிட்டனர். மரணத்தை ஏற்பதைத் தவிர வேறு
வழியின்றித் தடுமாறி நிற்கின்றனர். அவர்களின் குற்றம்
படிந்த நெற்றியில், இழிவான சாவின் அவமானச் சின்
னத்தைச் சரித்திரத்தின் வலிய கரங்கள் பட்டையாகத்
தீட்டிவிட்டன!

அதே சமயத்தில் செஞ்சேனைப் படையினர் அபரிமித
வெற்றிகளாலும் அளவுகடந்த உதவிகளாலும் ஊக்கு
விக்கப்பட்டு வெற்றி நடைபோட்டுச் சென்றனர். தொழிற்
சங்கங்கள், கட்சிக் கிளைகள் ஆகியவற்றின் உதவிகளைப்
பெற்று முன்னேறி வந்தனர். இதிகாச வீரர்கள்போலப்
புத்துணர்வும் வெல்ல முடியாத வல்லமையும் கொண்டு
பொலிந்தனர். அவர்களது காலடிபட்ட இடமெல்லாம்
அடிமைத்தளை தெறித்து, சுதந்திர தாகம் பெருகியது. புது
வாழ்வு பூத்தது.

சப்பாயேவின் படை வீரர்களிடத்தும் இந்த மாபெரும்
பண்புகள் பரவிக் கிடந்தன. இந்தப் பண்புகளால் உந்தப்
பட்டே சிஷோவின் படைகள் எதிரிகளை நிர்மூலமாக்கி
வெற்றிக்கொடி யேற்றின.

பெருந் தளபதி புருன்ஷ் படைத்தலைமைக் காரியால
யத்திற்கு வந்து சேர்ந்தான். உடனே போர் நிலவரத்தைப்
புரிந்துகொண்டான். சிஷோவின் படைகள் அண்மையில்
பெற்ற வெற்றிச் செய்திகளைக் கேள்விப்பட்டான்; அந்தக்
குடிசைக் காரியாலயத்திலேயே அமர்ந்து நன்றி தெரிவிக்
கும் அறிக்கை யொன்றையும் எழுதிவிட்டான். இந்த
நன்றிக் கடிதம் சிஷோவையும், படைவீரர்களையும் மேலும்

ஊக்குவித்தது. வெற்றியுணர்ச்சியை வீறுகொள்ளச் செய்தது; புதிய வெற்றிகளைப் பெறத் துணிந்து முன்னேறும் மனோதிடத்தைத் தந்தது!

சப்பாயேவ் சிஷோவுடன் பேசிக்கொண்டிருந்தான்.

"சரி. விஷயம் அப்படியென்றால் ஏதாவது தீர்க்கமான முடிவிற்கு வருதல் நல்லது. அந்த மலைகளைப் பார்" என்று சன்னலைத் திறந்து பொதுவாக ஒரு இடத்தைக் குறிப்பிட்டுச் சொன்னான். குறிப்பிட்ட இடங்களின் பெயர்களையோ, அங்குள்ள நதிகளையோ, கிராமங்களையோ சொல்லவில்லை. "நீ அவற்றை எடுத்துக்கொண்டால் என்னுடைய வெள்ளிப் பட்டாக் கத்தியைப் பரிசளிப்பேன் என்று சத்தியம் செய்கிறேன்" என்றான் சப்பாயேவ்.

"அப்படியா உன் சத்தியப்படியே கட்டுப்பட்டிரு" என்று சொல்லிக் குலுங்கச் சிரித்தான் சிஷோவ்.

இந்தச் சத்தியச் சம்பிரதாயங்கள் முடிந்த மூன்று நாட்களுக்குள் அவர்கள் இருவருமே ஒருவரை ஒருவர் சுட்டுக்கொள்ளும்படி நேரிட்டுவிட்டது! அந்தச் சமயத்தில் கடுமையான சளியால் பிடிக்கப்பட்டுப் படுக்கையில் கிடந்தான் பியோடார் கிளிக்கோவ். தனக்குப் பதிலாகப் போர்முனைக்குச் சப்பாயேவுடன் செல்லுமாறு தன்னுடைய உதவியாளனான கிரெய்னுகோவை அனுப்பி வைத்தான். மூன்றாவது திருப்புப் பயணத்தில்தான் இந்த அசம்பாவித நிகழ்ச்சி நடந்தது. ஆனால் கிளிக்கோவிற்கு இதைப்பற்றியே தெரிவிக்கவில்லை; தெளிவில்லாத வதந்திகள் மட்டுமே அவன் காதிற்கெட்டின. சப்பாயேவும் மௌனம் சாதித்தான். இதைப்பற்றிய பேச்சேதும் வந்தால் வருத்தத்துடன் பேச்சை வேறு விஷயத்திற்குத் திருப்பிவிடுவான். ஆனால் இதற்கு நேர்மாறாக, தலைமைக் காரியாலயத்திற்குப் பியோடார் வந்ததும் நடந்ததனைத்தையும் அவனிடம் விளக்கமாகச் சொல்லத் துடித்து நின்றான் சிஷோவ்.



சிஷோவ், கிளிக்கோவிடம் இதைப்பற்றிப் பேசினான்.

"தோழர் கிளிக்கோவ். அது ஒரு சாதாரணத் தவறுதான். அசட்டுத்தனமான முட்டாள்தனமான தவறு. நாங்கள் இருவருமே நிதானம் இழந்து பொங்கிவிட்டோம். இந்தப் பேதமை நிறைந்த, எதற்குப் பயனில்லாத விஷயத்திற்காக இருவருமே பொறுமையிழந்து தவறு செய்துவிட்டோம். இது பேசுவதற்கே லாயக்கில்லாத சமாசாரம்; என்றாலும் சொல்லிவிடுகிறேன்—இத்தகைய முட்டாள்தனமான விஷயங்களையெல்லாம் ஞாபகத்தில் வைத்திருப்பதற்காக நான் வெட்கப்படவில்லை. அவனைப்பற்றி உனக்கு நன்றாகத் தெரியும்—நெருப்புப் பிண்டம்! அவனிடமிருந்து எதுவும் புறப்படலாம்! உடல் எல்லாம் பற்றியெறிவதுபோல ஆத்திரத்தில் பொங்கி தன்னையே சாம்பலாக்கிக்கொள்ளக் கூடிய கோபவெறி பிடித்தவன். அவனை எப்போதும் கண்காணித்து அடக்கிவைக்க வேண்டிய நீயும் அன்று அங்கு இல்லை; உன்னுடைய உதவியாள் இருக்கிறானே, அந்த ஆசாமி, அவன் எதைச் சொன்னாலும் பல்லைக் காட்டிச் சிரிக்கிறார்களே தவிர, அவனோடு விவாதித்து அடக்கும் சக்திகொண்டவன் இல்லை. அத்துடன் சப்பாயேவ் எவர் பேச்சையும் கவனித்து ஏற்கக் கூடியவனில்லை. நாங்கள் இருவரும் முட்டாள்தனமாய் நடந்துகொள்ளும்படி நேரிட்டுவிட்டது. நடந்தும்கொண்டோம்; ஆனால் எத்தகைய விபரீதமும் ஆபத்தும் நடந்துவிடவில்லை. அந்தச் சம்பவம் அப்படியே என் நினைவில் பதிந்திருக்கிறது. அன்று நான் ரொம்பவும் களைத்திருந்தேன். இன்று விழுவதுபோல் என் கால்கள் வலியெடுத்தன. சக்தியெல்லாம் செலவாகிச் சோர்ந்து போய்விட்டேன். கொஞ்சம் படுத்துத் தூங்கினால் எல்லாம் சரியாகப் போய்விடும் என்று நினைத்தேன். உடனே தரையில் படுத்ததும் உலகத்தையே மறந்து உறங்கிவிடுவேன் என்பதும் தெரியும். அந்தப் பயல், படு போக்கிரி வாஸ்கா இருக்கிறானே—அவன்தான் எனக்குப்

பணியாளாக இருந்தான். அவன் ஒரு தத்தாரியக் குடிசை
யொன்றைத் தேடிக் கண்டுபிடித்துச் சொன்னான். அந்தக்
குடிசையில் இருந்த ஒரு அழுக்குப்படிந்த அறையில் சுவ
ரோடு ஒட்டிப் பெஞ்சொன்று கிடந்தது. அந்தப் பெஞ்சின்
மீது மரக்கட்டை போலக் கிடந்து உறங்கினேன். தூங்குவ
தற்கு முன் அந்தப் பயல் வாஸ்காவிடம் எனக்காக ஒரு
கோழியைக் காலையுணவிற்குத் தயாராக வைத்திருக்குமாறு
சொன்னேன். அவனும் சரி யென்றான். நானும் அயர்ந்து
உறங்கிவிட்டேன். என்னென்ன கனவுகளோ தோன்றின.
கோழிக்குப் பதிலாக ஒரு கொஸாக்கியனை முள் கரண்டியி
னால் குத்தினேன். நான் ஒரு புறம் குத்தினால் அவன் மறு
புரத்தில் வளைந்து கொடுப்பான். அந்தப் பக்கத்தில் குத்தி
னால் பதுங்கிக்கொள்ளுவான். பிறகு அந்த வேசிமகன்
தலையைத் தூக்கிச் சிணுங்குவான். இதைக் கண்ட எனக்கு
வெறி பிடித்துவிட்டது. முள் கரண்டியினால் ஆத்திரம் தீர
ஓங்கித் தலையில் குத்தினேன். அது இரண்டாக முறிந்து
விட்டது. உற்றுப் பார்த்தால் அது கரண்டி யில்லை. என்
னுடைய பட்டாக் கத்தி; உடனே ஒரு கம்பைப் பிடுங்கி
அவன் தலையில் ஓங்கி அடிக்கப் போனேன். ஆனால் அவ
னது தலைக்குப் பதிலாகத் தந்தி மரத்தின்மீது தாக்கிக்
கொண்டிருந்தேன்! விழித்துக்கொண்டேன் ......உடனே
கடிதங்கள் ஏராளமாக என்னிடம் வந்துகுவிந்தன. இவை
யெல்லாம் சப்பாயேவ் அதற்கு முதல் நான் அனுப்பிய உத்
தரவுகள் என்றும் அதற்கு நான் கீழ்ப்படிய மறுத்ததும்
நினைவிற்கு வந்தன. "எதிரிகளை நசுக்குங்கள்; உங்களுக்
குத் துணையாக இன்னும் ஒரு படை வரும்" என்று அவன்
உத்தரவிட்டிருந்தான். சப்பாயேவ் எக்கேடாவது கெட்டுப்
போகட்டும் என்று நான் எண்ணிக்கொண்டேன். செஞ்
சேனையினர்க்கு எதிரிப் படைகளால் ஏற்பட்ட நஷ்டத்
தை யெல்லாம் நான் ஈடு செய்வதா இல்லையா? மலையில்
எதிரிகளின் கையில்விட்டு வந்தோமே நூறு வீரர்களை.



இதற்கு யார் ஈடு செய்வது? எனக்கு ஆத்திரம் பொங்கி
யது. "குர்ஜின் இந்த உத்தரவை எழுது" என்று கத்தி
னேன். குர்ஜின் எப்போதும் சில தாள்களைக் கையில்
வைத்திருப்பான்; ஒரு பென்சிலைக் காதில் செருகி யிருப்
பான். புயல் போல எழுதுவான். என் தொண்டையைச்
சரிப்படுத்திக்கொண்டு சொல்ல ஆரம்பிப்பதற்குள் உத்தர
வுக்குரிய தலைப்பை எழுதிவிட்டான். 'உத்தரவில் இதை
எழுது' என்றேன்.

"எதிரிகளைத் தாக்கியவுடன் அவர்களைப் பதினைந்து
கல் தொலைவுக்கு அப்பால் விரட்டிவிட வேண்டும். புரி
கிறதா?" "புரிகிறது ஐயா" என்றான். இந்தக் குர்ஜினும்,
வாஸ்காவும் நான் சொல்லும் எதையும் புரிந்துகொள்ளக்
கூடிய பிசாசுகள். எனக்குத் தெரியும் சப்பாயேவிடமிருந்து
சரியாகக் கிடைக்குமென்று! ஆனால் அவனே இத்தகைய
தவறைச் செய்தபின் நான்தான் என்ன செய்ய முடியும்?
சப்பாயேவைப் போனில் அழைத்து எல்லாவற்றையும்
நேரடியாகப் பேசி முடிவுசெய்துவிட விரும்பினேன். ஆனால்
அந்த அயோக்கியன் பிளெஸ்கோவ் இருக்கிறானே அவன்
தான் டிவிசன் காரியாலயத் தலைமை அலுவலாள்—அந்த
அயோக்கியன் சப்பாயேவைக் கூப்பிடக்கூட மறுத்து
விட்டான். "உத்தரவுகள் ஏற்கெனவே அனுப்பியாகி
விட்டது. இனிமேல் ஏதேனும் மாற்றம் செய்யும்படி எது
வும் பேச முடியாது" என்று அவனே சொல்லிவிட்டான்.

சரி, பேச முடியாதென்றால் வேண்டாம். ஆனால் எனக்
கும் பொறுப்பிருக்கிறதே, என் கடமையை நான் செய்ய
வேண்டுமே! எனக்கும் மூளை இருக்கிறதே! குர்ஜினே
உத்தரவை எழுதிக் கையெழுத்திட்டுவிட்டான். உடனே
வேடிக்கை ஆரம்பித்தது. நான் சொன்னபடியே நடக்கும்
என்று எண்ணினேன். தன்னுடைய உத்தரவுகள் மாற்றப்
படுவதைச் சப்பாயேவ் விரும்ப மாட்டான் என்பதும் தெரி
யும். எனவே நான் மீண்டும் படுத்து உறங்கினேன். மீண்

டும் என்னென்னவோ கனவுகள் தோன்றின. திடீரென விழித்து உட்கார்ந்தேன். அப்பொழுது சூரியன் உதயமாகும் சமயம். இன்னும் வைகறை இரவு மங்கலாக மூடியிருந்தது. ஆனால் இங்கு சப்பாயேவே நிற்கிறான். எங்குமே தாமதிக்கமுடியாமல் இரவெல்லாம் சவாரி செய்திருக்கிறான்.

"வேசி மகனே! நீ என்ன நினைத்துக்கொண்டாய்?" என்று கேட்கிறான்.

"நான் ஒன்றும் வேசி மகனில்லை தோழர் சப்பாயேவ் நிதானமாகவே பேசு!" என்று கடுகடுக்கிறேன் நான்.

"நான் உன்னைச் சுட்டுப் பொசுக்கிவிடுவேன்" என்று சொல்லிக்கொண்டே தன்னுடைய கைத்துப்பாக்கியைத் தடவினான். உறையைக் கழற்றி உருவுவதற்குள் என்னுடைய துப்பாக்கியை நான் நீட்டிப் பிடித்துவிட்டேன். "ம்...சுடு ..சுடு பார்க்கலாம்" என்று நான் உறுமுகிறேன்.

"உடனே படைத்தலைமையை விட்டுப் போய்விடு. உனக்குப் பதிலாக நான் வேறு ஆளை நியமித்துக்கொள்ளுகிறேன். ஒரு உத்தரவெழுதி மிக்கைலோவை உன்னிடத்தில் வைத்துவிடுகிறேன். நீ வெளியேறிவிடு. தெரிந்ததா? நீ என்ன தளபதியப்பா? உருப்படாத தளபதி. அவர்கள் பதினைந்து கல் தொலைவையும் தாண்டி ஓடிக்கொண்டிருக்கிறார்கள். நிறுத்துமாறு அவர்களுக்கு உத்தரவிட்டுவிடுகிறேன். இந்த மாதிரி துரத்தி ஓடச் சொல்லுவது எதிலே சேர்ந்த விஷயம்? நான் கேட்கிறேன். இது எதிலே சேர்ந்த போர்முறை? இதுதான் பணிபுரியும் யோக்கியதையா?" என்று உக்கிரமாகப் பொரிந்து தள்ளினான்.

ஆனால் அவன் கைத்துப்பாக்கியை மட்டும் வெளியில் எடுக்கவில்லை. எனவே நானும் என் துப்பாக்கியை உறைக்குள் போட்டுக்கொண்டேன். அவனோடு இனியும் பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை. எனவே குர்ஜியைக் கூப்பிட்டு உத்தரவெழுதுமாறு சொன்னேன். எப்படி எழுத வேண்டுமோ அப்படியே அவனும் எழுதினான்.



"நான்கு தூதுவர்களை உடனே அனுப்பு."

நான்கு தூதுவர்கள் உடனே வந்தார்கள்.

"இதோ மிக்கைலோவிற்குக் கடிதங்கள். உடனே கொண்டு செல்லுங்கள்" என்று நான் சொல்லி முடிப்பதற்குள் குதிரையில் ஏறிப்பாய்ந்தார்கள். நானும் சப்பாயேவும் ஒன்றும் பேசாது ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டிருந்தோம். இருவரும் அமைதியானோம். நான் பெஞ்சின் மீது உட்கார்ந்திருந்தேன். சப்பாயேவும் உட்கார்ந்து கொள்ள அதில் இடமில்லை. எனவே அவன் சுவரோடு சாய்ந்து நின்றுகொண்டிருந்தான். கோபத்தால் சிவந்த அவனுடைய கண்களிலிருந்து ஆத்திரப் பொறிகள் சிதறிக்கொண்டிருந்தன. "நடந்ததெல்லாம் சரி. ஆத்திரமடங்கிவிடுவாய் என்று நினைத்தேன். பொங்கிவிட்டாய். சரி சரி!" என்று சமாதானப்படுத்திக்கொண்டிருந்த நேரத்தில் அந்தப் பாடாவதிப் பயல் வாஸ்கா தலையை நீட்டி, "கோழி தயார்!" என்று முனங்கினான்.

இதுவரைக்கும் சண்டை போட்டுக்கொண்டிருந்த நான் சாப்பிட வருமாறு சப்பாயேவையும் கூப்பிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

"தோழர் சப்பாயேவ், என்னோடு காலையுணவு சாப்பிடத் தோட்டப் பக்கம் வருகிறீர்களா?" என்று கேட்டேன்.

அங்கொரு சிறிய தோட்டமும் இருந்தது.

"சரி" என்றான் சப்பாயேவ்.

அவனுடைய குரலில் நேசமும் தோன்றவில்லை, கோபமும் தொனிக்கவில்லை. அவன் சிரிக்கவும் இல்லை. சிரிக்க வெட்கப்பட்டிருக்கக் கூடும்.

இருவரும் தோட்டத்திற்குச் சென்று அமர்ந்தோம். இப்பொழுதும் பேசவில்லை.

திடீரென்று சப்பாயேவ் பேசினான்:

"சிஷோவ் தூதர்களை நிறுத்திவிடு."

"அவர்களை நிறுத்துவது இயலாத காரியம் தோழர் சப்பாயேவ்! குதிரையில் புறப்பட்டுச் சென்றவர்களை எப்படி நிறுத்த முடியும்?" என்று நான் கேட்டேன்.

"இன்னும் வேகமாய்ப்போகும் குதிரைகளை அனுப்பு" என்று உரக்கக் கத்தினன். திரும்பவும் அவனுடைய முகம் சிவந்துவிட்டது.

"அவற்றைவிட வேறு நல்ல குதிரைகள் கிடையாது. அவைதான் மிக வேகமாகச் செல்லக்கூடியவை."

"எப்படியாவது இருக்கிற குதிரைகளுள் நல்ல தொன்றை உடனே அனுப்பு. நான் சொல்வது புரிய வில்லையா?"

எப்படி எனக்குப் புரியாமலிருக்கும். எல்லாம் தெளிவாகப் புரிந்தது. என்றாலும் எனக்குள்ளே சொல்லிக் கொண்டேன். இதை இன்னும் கிளறிவிட வேண்டும் அவன் என்னை வேசிமகன் என்று ஏன் திட்ட வேண்டும் என்றெல்லாம் ஆத்திரம் வந்தது.

"என்னை ஏன் 'வேசிமகனே என்று அழைத்தாய். எனக்கும் சுய கவுரவம் உண்டு. நான் ஏதேனும் தவறு செய்திருந்தால் என்னை ஏன் இன்னும் வைத்துக்கொண் டிருக்கிறாய்? ராணுவ நீதிமன்றத்துக்கே அனுப்பிவிட வேண்டியதுதானே! என்னை அவர்கள் சுட்டுப் பொசுக்கட்டும். ஆனால் வேசிமகனே என்று மட்டும் இனிமேலும் கூப்பிடாதே" என்று படபடத்தேன்.

"நான் ஆத்திரத்தில் சொல்லிவிட்டேன். இதை யெல்லாம் மனதிலே வைத்துக்கொள்ளாதே" என்று கனிவாகச் சொன்னான் சப்பாயேவ்.

சமாதானமடைந்த நாங்கள் இன்னும் ஆறு பேரைக் குதிரைகளில் ஏற்றி அனுப்பினோம். ஒரு மணி நேரத்திற்குள் எல்லோரும் திரும்பிவிட்டார்கள். வெகு தூரத்தில் இருந்தவாறே வானத்தில் சுட்டுச் சமிக்ஞை செய்து முன்னே சென்றவர்களை நிறுத்திவிட்டார்கள்.



எழுதி அனுப்பிய எல்லா உத்தரவுகளையும் கிழித் தெறிந்தோம்.

"உன்னுடைய உத்தரவுகளையும் கிழித்துவிடாதே! உன் உத்தரவுப்படி அவர்கள் எதிரிகளை விரட்டிச் செல்லட்டும். ஒரு தரம் அனுப்பிய உத்தரவுகளைத் திரும்பவும் மாற்றுவது நல்லதன்று. வேறு ஏதேனும் மாறுதல் செய்ய வேண்டுமென்றால் நானே செய்துகொள்ளுகிறேன்!" என்றான் சப்பாயேவ்.

"எங்கள் சண்டையும் அத்துடன் முடிந்தது. இருவரும் சேர்ந்து வறுத்த கோழியைத் தின்றோம். இருவருக்குள் மனக்கசப்புத் தரும் வார்த்தை யேதும் பரிமாறிக் கொள்ள வில்லை. இப்படித்தான் நாங்கள் பழகினோம் தோழர் கிளிக் கோவ்" என்று சிஷோவ் முடித்தான். "இப்பொழுதெல்லாம் இருவரும் சந்திக்கும்பொழுது உரக்கக் கத்திச் சண்டையிட்டுக்கொள்ளுவோம். அதன் பின்னர் இருவரும் அமர்ந்து தேத்தண்ணீர் குடித்துச் சாவதானமாகப் பேசிக் கொள்ளுவோம்" என்று பெருமையாகச் சொல்லிக்கொண் டான் சிஷோவ்.

"சரி. அப்புறம் என்னவாயிற்று!" என்று பியோடார் சிரித்தபடியே கேட்டான்.

"வேறு என்னவாக முடியும்? நான் போர் முனையில் இருந்து எல்லாவற்றையும் முடித்துவிட்டு, மலைப் பகுதிகளைக் கைப்பற்றி எதிரிகளைக் கைது செய்து, திரும்பி வந்துகொண் டிருந்தேன். சப்பாயேவ் எனக்குப் பின்னர் வேகமாக வந்தான்."

"ஹலோ சிஷோவ்" என்று மகிழ்ச்சி பொங்க அழைத்தான்.

"ஹலோ சப்பாயேவ்! நலம்தானே?" என்று நானும் திருப்பிக் கேட்டேன்.

அதற்கு எதுவும்பதில்சொல்லாமல், என் அருகில்வந்து என்னைக் கட்டிப் பிடித்து மூன்று முறை முத்தமிட்டான்.

"நீதான் ஜெயித்துவிட்டாய். பந்தயத்தில் நான் தோற்றுவிட்டேன். இதோ எடுத்துக்கொள்" என்று தன்னுடைய வெள்ளிப் பட்டாக் கத்தியை எடுத்து என் தோள்பட்டையில் மாட்டிவிட்டு, எதுவும் பேசாது எதிரே நின்றான். உடை வாளின்றி எனக்கு எதிரே அவன் நிற்பதைக் கண்டு நான் மிகவும் நெஞ்சங் கவன்றேன். நான் அணிந்திருந்த சாதாரணக் கத்தியை எடுத்தேன்.

"இதோ இதை அணிந்து என்னையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்" என்று அவனுக்கு அணிவித்தேன். அன்று அவன் செய்த சத்தியப்படியே, தன் வாக்கை நிறைவேற்றிவிட்டான் சப்பாயேவ். அவன் ஏதேனும் வாக்களித்தால் எப்பாடு பட்டேனும் அதை நிறைவேற்றியே தீருவான். அவனுடைய குணப்பாங்கு முழுவதும் உனக்குத்தான் தெரியுமே!" என்றான் சிஷோவ்.

இத்துடன் அவர்களுடைய பேச்சு முடிந்ததும் சிஷோவைப் போனில் யாரோ அழைத்தார்கள். படை வீரர்கள் அவனிடம் ஏதோ விபரம் கேட்டார்கள். அதற்குப் பிறகு இதைப்பற்றிப் பியோடார் மேற்கொண்டு ஏதும் விசாரிக்கவில்லை. நடந்த விஷயங்களைப்பற்றி முழு விபரமும் தந்துவிட்டான் சிஷோவ். இது ஒரு பெரிய விஷயமில்லை. அவ்வளவு முக்கியமான விஷயமும் இல்லை; இருந்தாலும் சப்பாயேவும், சிஷோவும் ஆத்திரவயப்பட்டிருந்த பொழுது எல்லை மீறி யிருந்தால் பல விபரீதங்களுக்கு வித்திட்டிருக்க முடியும். அவர்கள் இருவரையும் எப்போதும் கண்காணித்து வர யாரேனும் ஒருவர் தேவைப்பட்டது. அந்த நபரின் பார்வை கொஞ்சம் தளர்விட்டு விலகிவிட்டால் போதும்; இவர்கள் இருவரும் கழுத்தை நெறித்துக் கொள்ளுவதோடு பிறரது கழுத்திற்கும் கத்தி கொணர்ந்துவிடுவார்கள்!

செஞ்சேனையின் 220-வது ரெஜிமெண்டைச் சேர்ந்தவர்கள் புயல் போலப் பாய்ந்து டிரிவோனுவ்காவைப் பிடித்



துக்கொண்டனர். பிறகு ஓய்வெடுத்துத் தங்கி யிருந்தார்கள். சில செஞ்சேனை வீரர்கள் ஊருக்குக் கடைசியில் இருந்த ஒரு குடிசைப் பக்கம் சென்றபொழுது தரை முழுவதும் இரத்தக் கறை படிந்திருக்கக் கண்டார்கள். என்ன நடந்ததென்றறிய ஆசைப்பட்டு, அது யாருடைய குடிசையென்று விசாரித்தார்கள். அந்தக் குடிசைக்குச் சொந்தக்காரன் எதுவும் சொல்ல மறுத்து மவுனம் சாதித்தான். அவனுக்கு எவ்வித ஆபத்தும் வராமல் பார்த்துக்கொள்ளுவதாகவும் உண்மையைச் சொல்லிவிடும்படியும் கேட்டார்கள். ராணுவத் தளபதிகளிடம் அவனுக்காகப் பரிந்து பேசித் தண்டனை ஏதும் இல்லாமல் செய்துவிடுவதாகக் கூறினார்கள். இதுவரை பேசாதிருந்த அந்தக் கிராமவாசி அவர்களைத் திறந்து கிடந்த கூடத்திற்கு அழைத்துச் சென்றான். குவியலாகக் கிடந்த எருக்களை அள்ளிச் சிதறியபடி "அதோ!" என்று இரத்தம் தோய உருச் சிதைந்து கிடந்த சிவப்புக் குவியலைக் காட்டினான்.

இதைக் கண்ட வீரர்கள் வியப்புப் பெருக இன்னும் நெருங்கிச் சென்றார்கள். உருச் சிதைந்து இரத்தம் தோயக் கிடந்தவை மனித உருவங்களே எனத் தெளிந்தார்கள். கைகளாலும், கத்தியாலும், துப்பாக்கி முனையாலும் மூடிக் கிடந்த எருக் குவியலைத் தள்ளினார்கள். கடைசியில் கதகதப்புள்ள இரண்டு சடலங்களை வெளியில் இழுத்தார்கள்; அவர்கள் செஞ்சேனை வீரர்கள்!

இறந்தாற் போலக் கிடந்த ஒரு சடலத்தின் கை லேசாக அசைய ஆரம்பித்தது. அந்த உடலைத் தூக்கி நின்றவர்கள் உடனே எருக் குவியலின்மீது கிடத்திவிட்டு விலகி நின்றார்கள். அப்பொழுது அந்தச் சடலம் ஒரு காலை மடக்கி மடக்கி நீட்டியது. இரத்தம் தோய்ந்துபோன கண்ணிமைகள் சிறிது திறந்தன. சாவை எதிர் நோக்கிய அந்தப் பரிதாபப் பார்வை, சுய உணர்வற்ற நிலையைக் காட்டியது.

பயங்கரமான இந்தக் கண்டுபிடிப்புச் செய்தி காட்டுத் தீபோல ரெஜிமெண்ட் முழுவதும் பரவியது; எல்லாச் செஞ்சேனை வீரர்களும் இதைப் பார்க்க ஓடினார்கள்; ஆனால் என்ன நடந்தது என்று மட்டும் யாருக்கும் தெரியாது. அவரவர்களுக்குத் தோன்றியபடி கற்பனை செய்து பேசிக் கொண்டனர். மீண்டும் கிராமவாசியிடம் பல கேள்விகள் கேட்கப்பட்டன. அவன் எதையும் மறைக்க முயலாது நடந்தவற்றை அப்படியே சொல்லிவிட்டான்.

சில மணி நேரத்திற்கு முன்பு செஞ்சேனைப் படைப் பிரிவைச் சேர்ந்த இரு சமையற்காரர்கள் டிரிவோனேவ்காவிற்கு வந்திருக்கிறார்கள். அந்தக் கிராமம் தங்கள் படையினர் வசம்தான் இருக்க வேண்டும் எனத் தப்புக் கணக்குப் போட்டு உள்ளே புகுந்துவிட்டனர். ஆனால் அந்தக் கிராமம் வெள்ளைப் படையினரால் அப்பொழுது ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. அந்தக் குடிசைக்கு வந்து கமிசாரின் அலுவலகம் எங்கே யிருக்கிறது என விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அந்தக் குடிசையினுள் உட்கார்ந்திருந்த கொஸாக்கியர்கள் இவர்களைக் கண்டதும் வெளியே பாய்ந்தோடிவந்து, வெறிக் கூச்சலிட்டவாறே பற்றிப் பிடித்துக் குடிசைக்குள் இழுத்துச் சென்றார்கள். திடீர்த் தாக்குதலுக்கு ஆளாகித் திகைத்துப் போயிருந்த செஞ்சேனையினரைப் பல கேள்விகள் கேட்டனர். 'எங்கே யிருந்து வருகிறீர்கள்? எந்த ஊருக்குப் போகிறீர்கள்? எந்தப் படைப் பகுதியைச் சேர்ந்தவர்கள்? சமீபத்தில் எந்த செஞ்சேனைப் படை தங்கி யிருக்கிறது?'' என்றெல்லாம் கேட்டார்கள். இக் கேள்விகளுக்கெல்லாம் உண்மையைச் சொல்லிவிட்டால் பரிபூரண மன்னிப்புத் தந்து விடுவித்துவிடுவதாக ஆசை காட்டினார்கள். அகப்பட்ட சமையற்காரர்கள் சில கேள்விகளுக்குப் பதில் அளித்தார்கள். அந்தப் பதில்கள் எவ்வளவு தூரத்திற்கு உண்மையானவை என்பதை யாரும் தீர்க்கமாகச் சொல்ல முடியாது. கொஸாக்கியர்கள்



எல்லாப் பதிலையும் விபரமாகக் குறித்துக்கொண்டார்கள் இந்த விசாரணை பத்து நிமிடம்வரை நடந்தது.

" இதற்கு மேலே உங்களுக்கு ஒன்றும் தெரியாதா ?" என்று உட்கார்ந்திருந்த கொஸாக்கியன் ஒருவன் ஏளனத்தோடு கேட்டான்.

" ஒன்றும் இல்லை " என்று இரு கைதிகளும் பதில் இறுத்தனர்.

" உங்கள் தொப்பியிலே அணிந்திருக்கிறீர்களே—ஒரு நட்சத்திரச் சின்னம்—அது எதற்காக ? நீங்கள் சோவியத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காகவா ? வேசி மக்களே ! உங்கள்மீது கேவலமான எந்த அடையாளத்தை ஒட்டி அனுப்பி யிருக்கிறார்கள் எனப் பாருங்கள் " என்றார்கள் ஏளனமாக.

செஞ்சேனை வீரர் இருவரும் எதுவும் பேசாது நின்றுகொண்டிருந்தனர். விஷயம் மோசமாகிக்கொண்டிருப்பதை உணர்ந்துவிட்டனர். உடனே கொஸாக்கியர்களின் ஏளனம் திசை மாறிவிட்டது; முதலில் அவர்களைக் கைது செய்து விசாரித்தபொழுதெல்லாம் கேலி யேதும் செய்யவில்லை. அவர்களது தொப்பியில் நட்சத்திர அடையாளத்தைக் கண்டதும் பயமுறுத்தவும், சபிக்கவும் தொடங்கிவிட்டார்கள். ஒருவனைப் பக்கத்தில் நெட்டித் தள்ளியபடி,

" நீ ஒரு சமையற்காரனுக்கும் !" என்றார்கள்.

" ஆம். சமையற்காரன்தான் " என்று அவன் அமைதியாகப் பதில் சொன்னான்.

" அயோக்கியப் பயலே ! போல்ஷெவிக்குகளுக்குப் பொங்கிப்போட்டாய் இல்லையா ?"

" நான் எல்லோருக்கும்தான் பொங்கிப் போட்டேன்" என்று இன்னும் அமைதியாகச் சொன்னான்.

" எல்லோருக்குமா ?" என்றபடி கேள்வி கேட்டுக்கொண்டிருந்த கொஸாக்கியன் எழும்பிக் குதித்தான் "எல்

லோருக்கும் சமைத்துப் போட்டா யென்றுதான் எங்களுக்கும் தெரியுமே பன்றிப் பயலே "

"நீ சமைத்துச் சமைத்துத்தான் நாடு முழுவதையும் நாசமாக்கிவிட்டாயே " என்று கேவலமாகப் பழித்த வண்ணம் அவனைப் பின்னால் இழுத்து முகத்தில் பலம் கொண்ட மட்டும் ஓங்கி அறைந்தான். அந்தச் செஞ்சேனைக் கைதியின் மூக்கிலிருந்து இரத்தம் பீறிட்டு வடிந்தது. இந்த இரத்தம் பாயும் அடையாளத்திற்காகத்தான் காத்திருந்தவர்கள் போல, எல்லோரது கையும் துருதுருத்தன. இரத்தத்தைக் கண்டதும் அவர்களுடைய இரத்த வெறி தலை விரித்தாடத் தொடங்கியது. தத்தம் கையில் அகப்பட்டவற்றை யெல்லாம் எடுத்துத் தாவிச் செஞ்சேனை வீரர்களை நையப் புடைத்தார்கள்; மேலே தள்ளி மிதித்தார்கள், ஈவிரக்கமின்றிக் கொடுமைப்படுத்தினார்கள், காறி யுமிழ்ந்தார்கள்.

அதோடு விடவில்லை. இன்னும் கொடுமையான தண்டனைக்குள்ளாக்க வேண்டு மென்று ஒரு கொடியவன் எண்ணினான். பரிதாபத்துக்குரிய அந்த இரு வீரர்களும் மீண்டும் இழுத்து நாற்காலிகள்மீது கிடத்தப்பட்டனர். நாற்காலிகளோடு இரு கயிற்றால் இறுகக் கட்டப்பட்டனர். முனங்கக்கூடச் சக்தியின்றிச் சோர்ந்து கிடந்த அவர்களை இன்னும் கொடுமைப்படுத்தத் துவங்கினர். கழுத்தைச் சுற்றியுள்ள சதைப் பகுதிகளைக் கொஞ்சம் கொஞ்சமாக வெட்டினார்கள். வெட்டுப்பட்ட இடமெல்லாம் இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது. உடனே கொஞ்சம் உப்பை அள்ளி அந்தக் காயத்தில் அப்பிவிட்டு வேறிடத்தில் வெட்டினார்கள். பிறகு அந்தக் காயத்திலும் உப்பைப் பூசினார்கள் தாங்கமுடியாத வேதனையால் அகப்பட்டுத் துடித்தார்கள் செஞ்சேனையின் துர்ப்பாக்கிய வீரர்கள். அவர்களுடைய துடிப்பு கொஸாக்கியர்களுக்கு வேடிக்கையாக இருந்தது; வெறியைத் தூண்டியது. இங்ஙனம் அகப்பட்ட வீரர்களைச் சித்திரவதை செய்து உப்புக் கண்டம் போட்டுக்



கொண்டிருந்தார்கள். பிறகு ஒரு கைதியின் மார்பில் தன்னுடைய துப்பாக்கி முனையைத் துணிந்து செலுத்தினான் ஒரு கொஸாக்கிய வெறியன். இன்னொருவனும் பெருமிதத்தோடு அதைத் தொடர்ந்து செய்தான். அங்ஙனம் ஒரேயடியாகக் குத்திக் கொல்லுவதால் பயனில்லை யென்றும் அணு அணுவாகத் துண்டித்துச் சாகடிக்க வேண்டு மென்றும் பிறர் அந்த வெறியர்களைத் தடுத்துவிட்டார்கள். என்றாலும்கூட ஒரு கைதி சாகடிக்கப்பட்டான். எஞ்சிய இன்னொருவன் மூச்சுத் திணறி அவதிப்பட்டான். அந்த அபாக்கிய வீரன்தான், இப்பொழுது செஞ்சேனை வீரர்களின் பொற் கரங்களிலே தங்கி தன்னுடைய உயிரைத் தருபவன்!

சற்று நேரத்துக்கு முன்னால் எதிர்பாராத தாக்குதலால் டிரிவோனேவ்காவை விட்டுக் கொஸாக்கியர்கள் வெளியேற நேர்ந்தது; வெளியேறும் முன்னர் தங்களால் சித்திரவதைக் குள்ளாக்கப்பட்ட இரண்டு செஞ்சேனை வீரர்களையும் இந்தக் கொட்டத்திற்கு இழுத்து வந்து எருக்களைப் போட்டு மூடி மறைத்துச் சென்றுவிட்டனர். இது தான் நடந்த கதை!

ஆத்திரம் பொங்கும் அமைதியுடன், இந்தப் பயங்கரக் கொலையை எல்லாப் படை வீரர்களும் கேட்டனர் எல்லோரது கண்ணிலும் படக்கூடிய இடத்தில் இரு வீரர்களது சடலங்களும் கிடத்தப்பட்டன. பிறகு தேவையான எல்லா ஏற்பாடுகளும் செய்த பின்னர் சகல மரியாதைகளுடன் சவ அடக்கத்திற்கு ஆயத்தம் செய்யப்பட்டது.

அச் சமயத்தில் பியோடார், சப்பாயேவுடன் சவாரி செய்துகொண் டிருந்தான். இந்தக் கோர நிகழ்ச்சியைக் கேள்விப்பட்டதும் அவர்கள் எல்லாப் படை வீரர்களையும் அழைத்து, இத்தகைய கொடுமை செய்யும் முட்டாள்தனத்தைக் கண்டித்து, இவர்களும் எதிரிகளை இவ்விதம் பழி வாங்கக் கூடாது என்று அறிவுறுத்தினார்கள். என்

றாலும் செஞ்சேனையினரது ஆத்திரத்திற்கும், படபடப்பிற்கும் அளவே யில்லை. கொடுமைக்குட்பட்டு மாண்ட வீரர்களின் சடலங்கள் புதைகுழியில் இறக்கப்பட்டன; அப்பொழுது வானத்தில் மூன்று தடவை மரியாதைக் குண்டு முழக்கிய பின்னர் எல்லோரும் கலைந்தனர். அதற்கு மறு நாள் போர்க்குப் பின்னர் எந்த எதிரிக் கைதியும் ராணுவத் தலைமைக் காரியாலயத்திற்குக் கொணரப்படவில்லை. எந்த அறுவுறுத்தல் பேச்சும், புத்திமதியும் போர்க்களத்தில் பழிக்குப் பழி வாங்குவதென்று ராணுவ வீரர்களைத் தடுத்துவிட முடியாது. பழிக்குப் பழி, இரத்தத்திற்கு இரத்தம், வாங்கித்தான் தீருவார்கள். பியோடாரிடம்கூட இந்த நிகழ்ச்சி ஒரு வகையான விபரீத மாறுதலைச் செய்யத் தவறவில்லை. மறு நாள் ஒரு வெள்ளைப் படைத் தலைவனுக்கு மரண தண்டனை விதித்து அவனை கையெழுத்திடவும் செய்தான்.

இந்த நிகழ்ச்சியை வேறு ஒரு சம்பவத்துடன் ஒப்பிடுவது தவறாகாதெனவே நான் எண்ணுகிறேன். அதையும் விளக்கிவிடலாம். அவர்கள் ரூஸ்கி கோண்டிஷ் என்னுமிடத்தில் இருந்த சிஷோவிடம் சென்றார்கள். அன்று காலை நிகழ்ந்த ஒரு தாக்குதலில் அவன் எண்ணூறு பேரைக் கைது செய்திருந்தான். அக்கைதிகளை கண்காணிக்க எந்தக் காவலாளையும் நியமித்திருக்க வில்லை.

"அவர்கள் ஓடிவிடுவார்களோ என்ற கவலை வேண்டாம். வெறும் கம்புகளைத் தூக்கிக்கொண்டு அவர்கள் கோல்சாக்கிடம் சென்றுவிட மாட்டார்கள். அதற்குப் பதிலாகக் கைதிகளாக இருப்பதைத்தான் விரும்புவார்கள்."

"சரி. திரும்பவும் நீ அப்படியே செய்துவிட்டாய் சிஷோவ்" என்றபடி கைதிகளைச் சுட்டிக் காட்டினான் பியோடார்.

"ஆமாம். நான் அவர்களை ஏதும் கொடுமை செய்யவில்லை. துப்பாக்கி முனையினால் கொஞ்சம் பதம் பார்க்க



லாம் என்றுதான் நானும் விரும்பினேன். ஆனால் அருகில் நெருங்கியதும் அவர்கள் அலறித் துடித்தார்கள். 'நாங்கள் சரணடைந்துவிடுகிறோம். கடவுளுக்குப் பொதுவாக எங்களைத் தொடாதீர்கள், இம்சிக்காதீர்கள், நாங்கள் உங்களது கைதிகள்' என்று மன்றாடினார்கள். எனவே ஒன்றும் செய்யாது இங்கு விரட்டிக் கொணர்ந்திருக்கிறோம்" என்றான் சிஷோவ்.

"அப்படியானால் ராணுவ உத்தியோகஸ்தர்கள் என்ன ஆனார்கள்?"

"ஆம். கொஞ்சம் உத்தியோகஸ்தர்களும் இருந்தார்கள். ஆனால் இங்கே வந்து கைதிகளா யிருப்பதை அவர்கள் விரும்பவில்லை" என்று ஏதோ குறிப்புடன் பியோடாரைப் பார்த்தான் சிஷோவ்.

பியோடார் அதற்குமேல் எதுவும் கேட்கவில்லை. "அப்படியானால் கொஞ்சம் பேரைவிட்டு வந்திருப்பீர்கள் போலும்?"

"ஆம். ஆனால் அவர்கள் கீழே விழுந்து படுத்துவிட்டார்கள்."

"என்றாலும் நமது வீரர்கள் விட்டு வந்திருக்க மாட்டார்களே?"

"பியோடார்! இதைக் கவனியுங்கள். இந்தக் கைதிகள் அனைவரும் வெள்ளைப் படையின் பல பகுதிகளைச் சேர்ந்தவர்கள். ஒருவர் முகத்தை ஒருவர் அறியாதவர்கள். ஏதோ அவசரடியாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள்.

"அது சரி. சிஷோவ்! என்றாலும் அவர்களை இணைத்து வைக்க நாமாவது முயல்வோம். முதலில் அந்தக் கைதிகளுடன் நான் பேச விரும்புகிறேன். அவர்களிடம் இதைத் தெரிவியுங்கள்" என்றான் பியோடார்.

பியோடார் பேசத் தொடங்கியதும் எல்லாக் கைதிகளும் மிகக் கவனத்துடனும் ஆர்வத்துடனும் கேட்டனர். அவர்கள் முகத்தில் நம்பிக்கையின்மையும் வியப்பும் மாறி

மாறித் தோன்றின; கலங்கிய கண்கள் படபடத்தன. வியப்பால் விரிந்தன. பல விஷயங்களை இப்பொழுதுதான் முதன் முதலாகக் கேள்விப்படுகிறார்கள்போலத் தோன்றியது. பியோடார் முடிவுக் கட்டத்திற்கு வந்துவிட்டான்:

"எல்லா விஷயங்களையும் விபரமாக உங்களுக்குச் சொல்லிவிட்டேன். எதையும் குறைக்காமலும் கூட்டாமலும் எல்லா உண்மைகளையும் அப்படியே சொல்லிவிட்டேன். இனி நிலையை நீங்களே உணர்ந்து முடிவு செய்துகொள்ள வேண்டியதுதான். எது உங்களுக்கு நெருங்கிய தொடர்புடையது, எது உங்களுக்கு அத்தியாவசியமாய் வேண்டியது. கோல்சாக்கின் கொடுங் கரங்களில் சிக்கி நீங்கள் கண்டவைகளையும், காணாதவைகளையும், நான் சொன்னவற்றுடன் ஒப்பிட்டு எது சிறந்ததென' நீங்களே முடிவு கட்டுங்கள். ஆனால் எங்களுக்குத் தேவை ..சோவியத்து ஆட்சியின் அதிகார வரம்பைக் கட்டிக் காக்கும் தயங்காத வீரர்கள். தாங்கள் எந்த உன்னத லட்சியத்திற்காகப் போரிடுகிறோம் என்பதை உணர்ந்த வீரர்கள்; அத்தகைய வீரர்களைச் சார்ந்துதான் நாம் வாழ முடியும் என்பதையெல்லாம் நினைவில் கொள்ளுங்கள் இன்னும் ஒரு முறை எண்ணிப் பாருங்கள். உங்களில் யாரேனும் எங்களுடன் சேர்ந்து போரிட விரும்பினால், அதைத் துணிவுடன் முன்வந்து சொல்லுங்கள். கோல்சாக்குத் துணையாகப் போர் புரியுமாறு உங்களையெல்லாம் ஏமாற்றி விரட்டிச் சென்றார்களே அதுபோலச் செஞ்சேனையுடன் சேர்ந்து போரிட்டே ஆக வேண்டுமென்று நாங்கள் யாரையும் கட்டாயப்படுத்த மாட்டோம்" என்று முடித்தான் பியோடார்.

அதைத் தொடர்ந்து செஞ்சேனையில் சேருவது சம்பந்தமாகப் பல அரசியல், ராணுவப் பிரச்னைகளை விளக்குமாறு கேள்விகள் கேட்கப்பட்டுத் தகுந்த பதில்கள் தரப்பட்டன. இங்ஙனம் கூடியிருந்த கைதிகளில் பெரும்பகுதியினர் மனம் உவந்து செஞ்சேனையில் சேர்த்துக்கொள்ளப்



பட்டனர். இத்தகைய எதிரிகளையே தன் படையில் சேர்த்துக்கொண்டமைக்காக சிஷோவ் என்றுமே வருந்தியதில்லை.

கைதிகள் இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டனர். அவர்கள் அணிந்திருந்த உடைகள், பூட்ஷுகள் இவற்றையெல்லாம் பரிசோதித்துக் குறித்துக்கொள்ளுவதில் பியோடார் முனைந்தான். எந்தவித ராணுவப் பயிற்சியும் இல்லாத கிராமத்து இளைஞர்கள் பலரும் அங்கு கைதிகளாகச் சிக்கியிருப்பது அவனுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அவர்களைத் தனியாகத் தலைமைக் காரியாலயத்திற்கு அழைத்துச் சென்று அவர்களுடைய முழு விவரங்களையும் விசாரித்து விளக்கமாகக் குறித்துக்கொண்டனர். அவர்கள் ஒருவனுடைய போக்கு சந்தேகத்தைத் தூண்டியது. கேள்வி கேட்டுக்கொண்டிருந்தபொழுதெல்லாம் அலட்சியமாகவும், ஏளனமாகவும் நமிட்டுச் சிரிப்புச் சிரித்தபடி பதில் சொல்லி வந்தான். "எங்களைக் கேள்வி கேட்க, முட்டாள்களே! உங்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது" என்று கேட்பதுபோலத் தோன்றியது அவன் பார்வையும் போக்கும்.

அவன் அணிந்திருந்த உடையில் பாதி, அவனைச் சாதாரண ராணுவ வீரனாகக் காட்டிற்று. என்றாலும் அதிலும் கொஞ்சம் சந்தேகத்திற்கு இடம் இருந்தது. அவனுடைய காற்சட்டையையும், பூட்ஷும் விலை உயர்ந்தனவாகத் தோன்றின. ஆனால் சட்டை மிகப் பழையதாகவும், அளவில் சிறியதாகவும் இருந்தது. ஒருவேளை அது அவனுடையதில்லையோ என்று ஐயப்படவும் இடம் இருந்தது. அந்தச் சட்டைக்குள் கொள்ளாது உடம்பு பிதுங்கியிருந்தது, கழுத்துப் பக்கம் சதை துருத்திக்கொண்டிருந்தது. அவனுடைய தலைத் தொப்பியும் சரியாக இல்லை, அதை முறையாக மாட்டிக்கொள்ளவும் அவனுக்குத் தெரியவில்லை. இதையெல்லாம் பார்க்கும்போது ஒரு சாதாரண ராணுவத்தினன் போலவே அவன் தோன்றவில்லை.

பியோடார் எதுவும் பேசாது வேகமாக அவனிடம் சென்றான். பிறகு அவனுக்கு எதிரில் நின்று கேட்கத் தொடங்கினான்.

"நீ ஒரு ராணுவ உத்தியோகஸ்தன் இல்லையா?"

"நான் இல்லை...இல்...இல்லவே யில்லை. நான் ஒரு தனிப்பட்டவன்" என்று குழம்பிப் பதில் சொன்னான். "ஏன் அப்படி நினைக்கிறீர்கள்?"

"ஏனா? உன்னை எனக்குத் தெரியும்" என்று தந்திரமாக உறுமினான் பியோடார்.

"என்னைத் தெரியுமா! என்னை எங்கே பார்த்திருக்கிறீர்கள்?" என்று பயப்பிராந்தியுடன் கேட்டான் அவன்.

"உன்னை எனக்குத் தெரியும்னா தெரியும். இதோ பார். இது கடந்த கால நிகழ்ச்சிகளை நினைச்சுப் பார்க்கிறதுக்கு இடம் இல்லே. நான் திரும்பவும் கேட்கிறேன். நீ ஒரு ராணுவ உத்தியோகஸ்தனா இல்லையா?"

"நான் திரும்பவும் இல்லை யென்றுதான் சொல்லுகிறேன்" என்றபடி தலையை உயர்த்திக்கொண்டான் அவன்.

"சரி. பிறகு நீயே உன்னை நொந்துகொண்டு வருந்துவாய்" என்றபடி அவனையும் இன்னும் சிலரையும் அழைத்துச் சென்று, ஆத்திரமும் உணர்ச்சியும் பொங்கச் சொற்பொழிவாற்றி, விஷயத்தைத் தெளிவுபடுத்தினான். பாட்டாளி மக்களும், விவசாயத் தோழர்களும் உரிமை வேண்டிக் கிளர்ச்சி செய்தபொழுது வெள்ளைப் படை அதிகாரிகள் செய்த கொடுமைகளையும், மிருகத்தனமான செய்கைகளையும் விவரித்தான். சோவியத் ஆட்சிக்கே எதிராகச் சதி செய்யும் அந்தச் சண்டாளர்களை ஒழித்துக்கட்ட வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினான்.

உடனே சந்தேகத்திற்கிடமான நபர்களை அழைத்துக்கொண்டு எஞ்சிய கைதிகளிடம் சென்று இவர்களில் யாராவது ராணுவ உத்தியோகஸ்தர்களாக இருந்ததாக அடையாளம் கண்டு சொல்ல முடியுமா என்று கேட்டான். நன்கு



கொளுத்துப் போயிருந்த பெருமகனார் இதுவரை மறுத்து மொழிந்தாரே, அவருடைய தலைத் தொப்பியும் கழற்றப்பட்டது. உடனே பல வீரர்கள் அவரைக் கண்டுகொண்டார்கள்.

"இவரை எங்களுக்குத் தெரியுமே. இவர் ஒரு ராணுவ உத்தியோகஸ்தர்தான்; அதுக்கு சந்தேகமே இல்லை" என்று அவன் இருந்த படைப் பகுதியின் பெயரையும் சொன்னார்கள்.

"இவரை இரண்டு நாளைக்கு முன்தானே பார்த்தோம். அப்படியிருக்க எப்படி அடையாளம் தெரியாமெப் போய்விடும். முதல்லே கழுத்துப் பட்டையைத் தூக்கிவிட்டுத் தொப்பியை இழுத்துவிட்டுக்கொண்டு இருந்ததால் எவருக்கும் தெரியாமல் போய்விட்டது. இப்பத்தான் தெரியுதே. ஆசாமி அவருதான்."

அவனை அடையாளம் கண்டுபிடித்ததில் பெரிதும் திருப்தி யடைந்தார்கள் வீரர்கள். இன்னும் பலரையும் அடையாளம் காட்டினார்கள்; என்றாலும் அவர்களில் ராணுவ உத்தியோகஸ்தன் இவன் ஒருவனே. மற்றவர்கள் படைக் காரியாலய அலுவாளர்களும், இதர சிப்பந்திகளும்.

பியோடார் மீண்டும் அவனிடம் திரும்பினான். "சரி இப்பொழுது என்ன சொல்லுகிறாய்?"

அவன் தலையைக் குனிந்துகொண்டு பேசாதிருந்தான்.

"என்ன படை வீரர்கள் சொல்லுவது உண்மைதானா?...ம்...ம்" என்றான் பியோடார் மீண்டும்.

"ஆம். உண்மைதான். அதனால் என்ன?" நிலையைப் புரிந்துகொண்டு, தொடக்கத்தில் இருந்ததுபோல வறட்டுச் சம்பமும் அலட்சியமும் தொனிக்கப் பதில் சொன்னான்.

"நான் முதலில் கேட்டபொழுதே உண்மையைச் சொல்லிவிடும்படி எச்சரித்தேன்."

"நான் உன்னை லட்சியம் செய்து பதில் சொல்ல விரும்பவில்லை" என்று துடுக்காகச் சொன்னான் அவன்.

பிறகு அலுவலாளருடன் அவனையும் ராணுவத் தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பிவிடுவதென்று பியோடார் முடிவு செய்துவிட்டான். அப்பொழுதுதான் அவனை முழுக்கப் பரிசோதிக்கவில்லையென்பது அவன் நினைவிற்கு வந்தது.

தனக்குப் பக்கத்தில் நின்ற சிஷோவிடம் "இவனைப் பரிசோதித்துப் பார்க்கும்படி உத்தரவிடு" என்றான்.

"ஏன் உத்தரவிட வேண்டும். நானே பரிசோதித்து விடுகிறேன்" என்று அவனுடைய சட்டைப் பைகளையும் இதர மடிப்புகளையும் துழாவிச் சில பயனற்ற கற்றைகளை எடுத்தான்.

"வேறு ஏதேனும் இருக்கிறதா?"

"வேறு ஏதும் இல்லை."

"வேறு ஏதாவது இருக்க வேண்டுமே?" என்றான் திரும்பவும் சிஷோவ்.

"நான் இல்லையென்று சொன்னால் இல்லைதான்" என்று கடுகடுப்பாய்ப் பதில் சொன்னான் அவன்!

கர்வமும்கடுகடுப்பும் நிறைந்த அவனுடைய துடுக்கான பதில் அவர்களது ஆத்திரத்தைக் கிளறிவிட்டது. அந்தச் சமயத்தில் அவனிடமிருந்து இன்னொரு கடிதத்தை வெளியில் எடுத்துப் பியோடாரிடம் கொடுத்தான் சிஷோவ். அந்தக் கடிதத்திலிருந்து அந்த ராணுவ உத்தியோகஸ்தன் ஒரு குருமட மாணவன் என்றும், ஒரு மதகுருவின் மகன் என்றும், கடந்த ஒரு வருடமாக சோவியத் ஆட்சிக்கு எதிராகத் தீவினை சூழ்ந்து வருபவன் என்றும் தெரியவந்தன. அந்தக் கடிதத்தை அவனுடைய கள்ளக் காதலி எழுதியிருந்தாளெனச் சந்தேகிக்க இடம் இருந்தது. வெள்ளைப் படையினர்,செஞ்சேனைத்தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் காலிசெய்துவிட்டுப் போன ஒரு கிராமத்திலிருந்த இவனுக்கு, பக்கத்துக் கிராமத்திலிருந்து எழுதியிருந்தாள். "வெள்ளைப் படைவீரர்கள் திரும்பவும் வெகு சீக்



கிரத்தில் வந்துவிடுவார்கள். பொறுமையோடு இருங்கள்... சிவப்பர்கள் எங்களுக்குக் கொஞ்சம்கூட நிம்மதி கொடுப்பதில்லை. கடவுள் உம்மைப் பத்திரமாகக் காப்பாற்றிவ்டட்டும். பிறகு போல்ஷெவிக்குகள்மீது நீரே வஞ்சம் தீர்த்துக்கொள்ளலாம்" என்று எழுதியிருந்தாள்.

பியோடாரின் முகத்தில் இரத்தம் தெறித்தது. "போதும்! இவனை அப்பால் கொண்டு போங்கள்!" என்று கத்தினான்.

"சுட்டுவிடத்தானே?" என்று சுருக்கமாகவும் ஆத்திரம் பொங்கவும் சிஷோவ் சாவதானமாகக் கேட்டான்.

"ஆமாம்...உடனே கொண்டு போங்கள்."

அந்த உத்தியோகஸ்தன் கூட்டிச் செல்லப்பட்டான். சில நிமிடங்களில் துப்பாக்கிச் சத்தம் கேட்டு ஓய்ந்தது.

இன்னொரு முறையும் பியோடார் பொறுமையாக விட்டுக்கொடுத்துப் பெருந்தன்மை காட்டியிருக்கலாம். ஆனால் கொடுமைக்காளாகிக் குற்றுயிராக்கப்பட்டுச் செத்த அந்த இரண்டு செஞ்சேனை வீரர்களை இவனால் மறக்க முடியவில்லை. அங்கம் அங்கமாய்ச் சிதைக்கப்பட்ட அவர்களது உடலைத் துண்டம் துண்டமாக அறுத்து எடுத்து உப்புத் தூவிய உடலை இன்னும் கண்ணெதிரே காணும் பிரமை அவனை உறுத்திக்கொண்டே இருந்தது.

அதுவும் தவிர, அந்த உத்தியோகஸ்தனின் பிடிவாதமும், திமிரான பதிலும், அவனுடைய கள்ளக் காதலியின் கடிதமும், சுய உருவத்தைக் காட்டிவிட்டன.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர், கிளிக்கோவ் நிலைதடுமாறியிருந்தான். நாள் முழுவதும் சோகத்துடனும் விசனமும் கப்பியிருந்தான். பேசவும் இல்லை, சிரிக்கவும் இல்லை. அவசியம் நேர்ந்தபொழுது மட்டும் விருப்பின்றி ஓரிரு சொற்களை உதிர்த்து மவுனம் சாதித்தான். அன்று முழுவதும் அப்படியிருந்தான். அதோடு சரி. அதற்கு அடுத்த நாள் எதுவுமே நடக்காதது போன்று வழக்கம்போலக் காரியங்களைக்

கவனிக்கத் தொடங்கினுன். போர்முனையில் நெஞ்சு நடுங்குறும் சம்பவங்களைப் பார்த்துவிட்டு மனங்குலைவதென்பது வியப்பானது. அங்கு மணிக்கு மணி, நாளுக்கு நாள் ஒரு மனிதனை மட்டுமல்ல, பல ஆயிரம் பேரைக் கொடுமைச் சேற்றில் அமிழ்த்திக் கொடுமைப்படுத்துவதைக் காணும் போது மனமலைவிற்கே இடம் இல்லை.

போரினுல் ஏற்படும் இந்த அழிவுகள்-அழுகிப்போன பிணங்கள், உருக்குலைந்த உடல்கள், எரிந்துபோன கிராமங்கள், வீடின்றி பட்டினியால் துடிக்கும் மக்கள்—(சேனை செல்லும் வழியெல்லாம் சிதறிக்கிடக்கும் இக்காட்சிகளும், இவற்றின் ஊடே தொடர்ந்து நடக்கும் இரத்த விசாரணைகளும் உடன் செல்லும் ஆயிரத்தில் ஒருவருக்குக்கூட மனக் கவலையையோ அதிர்ச்சியையோ தருவதில்லை. ஒவ்வொரு காட்சியைத் தொடர்ந்தும் ஆயிரக்கணக்கான சம்பவங்கள் தோன்றி உடனே மறைந்துவிடும். பியோடாருக்கும் இந்த நிலையே ஏற்பட்டது. முந்திய நாள் ஒருவனைச் சுட்டுப் பொசுக்கும்படி முதன் முதலாக உத்தரவிட்டது ஏதோ நினைவில் இருந்தது. மறு நாள் இந்த நிலையைத் தவிர வேறு சோர்வேதும் அவன் நெஞ்சில் புகவில்லை.

"இது உனக்குப் புதிதா!" என்று கேட்டுச் சிரித்தான் சப்பாயேவ் "நீ 1918 வாக்கில் எங்களோடு இருந்திருந்தால் தெரியும். மக்களைச் சுட்டுத் தள்ளாமல் எப்படிக் காலம் தள்ள முடியும்? நாங்கள் பல ராணுவ உத்தியோகஸ்தர்களைக் கைது செய்வோம். அவர்களைக் கண்காணிக்கப் போதிய காவலர்கள் இருக்க மாட்டார்கள். எங்களுடைய வீரர் ஒவ்வொருவரும் போர்முனைக்கு அத்தியாவசியத் தேவையினராக இருந்தார்கள்; வெறும் பாதுகாப்பு வேலைக்கல்ல அவர்கள் வந்தது. எனவே கைதுசெய்த உத்தியோகஸ்தக் கூட்டத்தைக் சுட்டுப் பொசுக்கிவிடுவோம். எதிரிகளும் இதே மாதிரிதான் செய்தார்கள். அவர்கள் எங்களை விட்டுவைத்தார்கள் என்று நீ நினைக்கிருய்?"



"நீ முதன் முறையாகத் தண்டனைக்கு உத்தரவிட்ட சம்பவம் உனக்கு நினைவிருக்கிறதா சப்பாயேவ்?"

"முதல் சம்பவம் என் நினைவில் இல்லைதான். அது போகட்டும். இது மனக் கஷ்டமான காரியம் என்பதை நானும் அறிவேன். முதலில் செய்வது கஷ்டமாகத்தான் இருக்கும். அப்புறம் பழகிப் போய்விடும்."

"எது பழகிப்போய்விடும்? கொன்று குவிக்க உத்தரவிடும் கோரமா?"

"ஆம். கொல்லுவதுதான். உதாரணமாக ஒரு குதிரை வீரன் பயிற்சி முடிந்து நேரே வருகிருன் என்று வைத்துக் கொள்வோம். ஒரு கைதியை வெட்டச் சொன்னுல், இப்படியும் அப்படியும் பாய்ந்து சென்று முறையாகக் காயப்படுத்துவான். ஆனுல் அவனைக் கீழே தள்ளி வெட்டச் சொன்னுல், தான் கற்றதை யெல்லாம் மறந்துவிடுவான். இப்படியும் அப்படியும் பெயருக்குச் சென்றுவிட்டு சும்மா சாய்த்துச் செல்லுவான். ஒழுங்காகக் கத்தியை உபயோகிக்க வராது, எடுத்தவுடன் எதுவும் சரியாக வந்து விடாது" என்றுன் சப்பாயேவ்.

போரில் நெஞ்சம் மரத்துப்போன இதர வீரர்களிடம் இதைப்பற்றியே பியோடார் பேசினுன். அவர்கள் எல்லோரும் ஒரே குரலில் ஒரே அபிப்பிராயத்தைத்தான் சொன்னுர்கள்: ஒரு மனிதன் எவ்வளவு உறுதியான நெஞ்சமும், வலிய சித்தமும் உடலும் கொண்டிருந்தாலும் முதல் தடவையாக ஒருவனைக் கொல்லும்பொழுது வருத்தமும், சோகமும், துயரமும் ஒருசேரப் பெறுவான். அவன் நெஞ்சு துடிக்கும், எண்ணம் இடியும், மனம் கவலும், இரக்கம் பொங்கும். ஒரே வெட்டில் வெட்டி வீழ்த்துவதானுலும், துப்பாக்கி முனையால் பாய்ச்சிக் கொன்ருலும், தலையை வெட்டிவிடுமாறு உத்தரவிட்டாலும், தானே சுட்டுக் கொன்ருலும், இவற்றை முதலில் செய்கிற எவருக்கும் மனக் கஷ்டம் ஏற்படவே செய்யும்; அதுவும் இன்றிப்

போர்ச் சமயத்தில் எப்பொழுதும் இரத்தத்தைக் கண்டு கண்டு பழகிப் போனவன் முதலில் மனம் துடித்தாலும் விரைவில் மனத் துணிவைப் பெற்றுவிடுகிறுன். எதிரியை இப்படியும் அப்படியும் பாய்ந்து சின்னுபின்னப்படுத்தும் போர்க்கலையை இயந்திரம்போல் நிறைவேற்றிவிடுகிறுன்.

சிஷோவ் பேசத்தொடங்கினுன் பியோடாரிடம். "என்னுடைய துணைவன் ஸ்டெப்கின் இருக்கிருனே அவனுக்கு மரண தண்டனை கிடைத்தது. நானேதான் தண்டனை விதித்தேன்."

"என்ன சொல்லுகிருய். அவனுக்கு மரண தண்டனை கிடைத்ததா?" என்று ஆச்சரியமுற்றுக் கேட்டான் பியோடார்.

"ஆம்! இதுதான் கதை" என்று உரால்ஸ்க் போர் முனையில் ஸ்டெப்கின் சாவின் எல்லைக்குச் சென்ற கதையை விவரித்தான் சிஷோவ்.

"ஸ்டெப்கின் சுழல் துப்பாக்கி வீரனுகப் பணியாற்றிக்கொண் டிருந்தான். அவன் மிகவும் நம்பிக்கைக்குப் பாத்திரமானவன். ஒரு கொஸாக்கியக் கிராமத்தில் நாங்கள் தங்கியிருந்தபொழுது இதர செஞ்சேனை வீரர்கள் இவனைப் பிடித்து எங்கோ கொண்டு சென்றுர்கள். அவனுல் கற்பழிக்கப்பட்ட ஒரு பெண்ணிடம் அவனைக் கூட்டிச் சென்றுர்கள் எனத் தெரிந்தது. இதைக் கண்ட நான் அவர்களை அழைத்து, 'நடந்த விஷயம் உண்மைதானு என்று விசாரிப்போம்—முதலில் நீங்கள் மட்டும் சென்று அவளைக் கொணருங்கள்—அவளிடம் விசாரிப்போம். நீ ஸ்டெப்கின் இங்கேயே இரு. இருவரையும் நானே விசாரிக்கிறேன்' என்றேன். எதுவும் பேசாது ஸ்டெப்கின் அங்கே உட்கார்ந்துவிட்டான். அவனை நான் ஏதேனும் கேட்டபொழுதெல்லாம் தலையை மட்டும் ஆட்டிவிட்டு முட்டாள்தனமாக எதுவும் புரியாமல் உளறினுன். ஆனுல் அந்தப் பெண்ணை அங்கு கொண்டுவருவதற்குள் எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டான். 'ஆம் அப்படித்தான் நடந்தது' என்று அவனே ஏற்றுக்கொண்டான். அதற்குள் அவள் வாசற்படிக்கு வந்துவிட்டாள். அந்தப் பயலுக்குப் பெண்கள் என்றுலே ஒரு மோகம்—இருபத்தைந்து வயதான, கச்சணிந்த விலைமகளைப் பொறுக்கியிருந்தான்! அவள் வந்து நின்றுள். கட்சிக் கமிசாரும் இதர உத்தியோகஸ்தர்களும் அங்கு இருந்தனர். பிறருக்குப் பயம் தருவதற்காகவேனும் ஸ்டெப்கினைச் சுட்டுத் தள்ளுவதைத் தவிர வேறு வழி எவர்க்கும் புலப்படவில்லை. நாட்டுக்குச் சுதந்திரம் தேடித் தர அரும்பாடுபட்டு முன்னேறி வருகிறது செஞ்சேனை. அந்த உன்னத லட்சியத்தை உயிரியக்கமாகக் கொண்டு முன்னேறும் சேனையின் ஒரு உலுத்தன் கிராமப் பெண்ணெருத்தியைக் கற்பழித்தான் என்றுல், அந்தக் கொடுமைக்கு இது ஒன்றுதான் சரியான தண்டனை. விரும்பினுலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி—இதுவே ஏற்ற தண்டனை. எங்களுடைய செஞ்சேனை வீரர்களைச் சுட்டுப் பொசுக்க வேண்டிய வழக்குகளும், சம்பவங்களும் இதற்கு முன் பல நடந்திருக்கின்றன. அப்படியிருக்கும் பொழுது ஸ்டெப்கினை மட்டும் ஏன் எளிதில் விட்டுவிட வேண்டும்? நாங்கள் இல்லாதபொழுது ஸ்டெப்கினுக்கு மன்னிப்புத் தந்துவிட்டால் விபரீதமாகிவிடும். 'சரி, நாமும் செய்வோம். நமக்கும் தண்டனை கிடைக்காது' என்று எல்லோரும் துணிந்துவிடுவார்கள். இதையெல்லாம் எண்ணிப்பார்த்தபொழுது கடுமையான கொலைத் தண்டனை தருவதைத் தவிர வேறு வழி புலப்படவில்லை. ஆனுல் ஸ்டெப்கினின் முகத்தைப் பார்த்ததும் எனக்கு வருத்தம் பொங்கிவிட்டது. போர்க்களத்தில் அவன் அசகாய சூரன், என்றுலும் என்ன செய்வது? சுட்டுத் தண்டனை நிறைவேற்றுதற்குரிய படைகளுக்கு ஏற்கெனவே கமிசார் ஆளனுப்பிவிட்டார். அவையும் உள்ளே வந்து

'நாங்கள் யாரை இழுத்துச் செல்ல வேண்டும்?' என்று கேட்டார்கள்.

"கொஞ்சம் பொறுங்கள். நான் கொஞ்சம் கேள்வி கேட்க விரும்புகிறேன்" என்று கையமர்த்திவிட்டு ஸ்டெப்கினிடம் நான் நெருங்கினேன்.

"ஸ்டெப்கின்! அவளைப் பலவந்தமாக நீ கற்பழித்தாயா? இதை நீ ஒப்புக்கொள்ளுகிருயா?"

"ஏன்...நான்தான் முன்னிலே ஒப்புக்கொண்டுவிட்டேனே!"

"ஏன் இப்படிச் செய்தாய்?" என்று கோபம் கொப்புளிக்கக் கத்தினேன்.

"எனக்கு எப்படித் தெரியும்? ஏன் செய்தேன் என்று எனக்கே ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை."

"ஸ்டெப்கின் நீ செய்த இந்தக் கோரச் செயலுக்கு உனக்கு என்ன தண்டனை கிடைக்கும் தெரியுமா?"

"எனக்குத் தெரியாது, தோழர் தளபதி அவர்களே!"

"உன்னைத் தலை சிதறச் சுட்டுப் பொசுக்க வேண்டும் புரிகிறதா? உன்னைச் சுட வேண்டும்."

இதைக் கேட்ட அவன் மிக அமைதியுடன், பயங்கர அமைதியுடன், பதில் சொன்னான்.

"இந்தத் தண்டனையை விதிக்க வேண்டியவர் நீங்கள் ஒருவர்தான்! தளபதி அவர்களே, நீங்கள் ஒருவர்தான்; இந்தத் தண்டனையைத்தான் விதிக்க வேண்டுமென்றாலும் ஏன் விதிக்க வேண்டும் என்று கேட்க வேண்டியவரும் நீங்கள்தான்."

நான் அவனுக்கு நடந்ததை ஞாபகப்படுத்த முயன்றேன்.

"ஸ்டெப்கின்! நாங்கள் உன்னைச் சுட வேண்டிய நிலையில் இருக்கிறோம். கிராமம் முழுவதுமே இந்த இழி செயலுக்காக நம் அனைவரையும் கொடிய பாதகர்கள் என்று தூற்றும். அப்படித் தூற்றுவதும் சரிதான். பெண்களிடத்தில் ஒழுக்கமாய் நடந்துகொள்ள முடியவில்லை



யென்றால் நாம் என்ன செஞ்சேனையைச் சேர்ந்தவர்கள். அப்படிச் சொல்லிக்கொள்ள என்னதான் யோக்கியதை உள்ளவர்கள்?"

அவன் எதுவுமே பேசாது இன்னும் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டிருந்தான். "இப்பொழுது உன்னைத் தண்டிக்காது விட்டுவிட்டால் இம்மாதிரிக் குற்றம் செய்யும் எல்லோரையுமே நான் விட்டுவிட வேண்டியிருக்கும் இல்லையா?" என்று நான் அவனைக் கேட்டேன்.

"அதுவும் உண்மைதான்."

"நிலைமை எவ்வளவு மோசமானதென்று இப்பொழுது உனக்குத் தெரிகிறதா?"

"ஆம்...தெரிந்துகொண்டேன்."

என் ஆத்திரம் எல்லை மீறிவிட்டது. பொறுமையும் நிதானமும் இழந்து நான் கத்தத் துவங்கிவிட்டேன்.

"ஸ்டெப்கின்...அட அறிவுகெட்ட அடிமுட்டாளே, நீ ஏன் அவளைப் போய்த் தொட்டாய்? நீ இருக்க வேண்டிய சுழல் துப்பாக்கி வண்டியிலேயே இருந்து தொலைந்திருந்திருந்தால் எதுவுமே நடந்திருக்காதே...இப்பப் பார்...நீ என்ன செய்திருக்கிறு யென்று."

தன்னுடைய தலையைச் சொரிந்தபடியே அவன் எதுவும் பேசாதிருந்தான். உடனே அந்தப் பெண்ணிடம் திரும்பி, "அவன் எப்படி உன்னைப் போய்ப் பிடித்தான்?" என்று கேட்டேன். அழகு நிறைந்த ஒரு விலைமகள் அவள். அவளும் பேசத் துடித்துக்கொண்டிருந்தாள்.

"என்னை எப்படி பிடிச்சாருன்று கேட்டா....நான் எப்படியய்யா பதில் சொல்றது. என்னைப் பற்றிப் பிடித்துக் கொண்டாரு....நான் எவ்வளவோ திமிறினேன்...நான் கதறினேன், காறித் துப்பினேன்...என்றாலும் விடவில்லை. நீங்களே பாருங்கள். எவ்வளவு மிருகத்தனமான ஆளுன்னு; எப்படிங்க இந்த மனுசன் பிடியிலேருந்து நான் தப்பிக்கிறது?"

"இதுதான் உன் அபிப்பிராயமா?"

"ஆமாம், அதுதான்."

"நாங்கள் அவனைத் தண்டிக்கப் போகிறோம்."

"இவ் வஞ்சகனுக்கு அதுதான் சரி....பாருங்கள் அவன் வெறித்துப் பார்ப்பதை; சரியான குடுகுடுத்தாப் புத்தி வந்துடும்" என்றாள் அவள்.

"வெறும் உதை மட்டும் அல்ல. நாங்கள் அவனைச் சுட்டுவிடப் போகிறோம்."

அந்தப் பெண்ணுக்கு இதைக் கேட்டதும் மயக்கம் வந்துவிடும்போல் ஆகிவிட்டது. தன் கைகளைத் தொங்கப் போட்டபடி வாயைப் பிளந்துவிட்டாள். அவளுடைய கண்கள் மூடி மூடித் திறந்தன.

"ஆம். நாங்கள் அவனைச் சுட்டுவிடப் போகிறோம்" என்று நான் திரும்பவும் சொன்னேன்.

"என்ன சொன்னீங்க!" என்றபடி கையைப் பிசைந்து கொண்டாள். "ஐயோ கடவுளே! ஒரு மனிசன் உயிரை அப்படி வாங்கலாமா...கடவுளே....இதெல்லாம் என்ன?" என்றபடி விக்கிவிக்கி அழுதபடி மேசைமீது சாய்ந்துவிட்டாள்.

"நீதானே புகார் செய்தாய்? இப்பொழுது எதுவும் செய்ய முடியாது. காலம் கடந்துவிட்டது" என்று நான் சொன்னேன்.

"யார் புகார் செய்தது? நான் புகாரா செய்தேன்? அவர் என்னைத் துரத்தி வந்தார் என்றுதானே சொன்னேன். என்னைப் பிடித்துக்கொண்டார். ஆனால் விபரீதமாக ஏதும் செய்துவிடவில்லை."

"நீ என்ன சொல்லுகிறாய்?"

"என்ன சொல்லுகிறேனா? அவர் என்னைப் பற்றிப் பிடிக்கவில்லை...என்னிடத்தில் எதற்கு வந்தார் என்பதெல்லாம் எனக்கெப்படித் தெரியும்? அவருடைய நோக்கத்தை என்னால் அறிந்துகொள்ள முடிவில்லை" என்று படபடவென்று பொரிந்தாள்.



"நான் அவளது கண்களை ஏறிட்டுப் பார்த்தேன். அவள் பொய் சொல்லுகிறாள் என்பது தெரிந்தது. என்றாலும் அவள் பேச்சில் நான் குறுக்கிடவில்லை. அவள் பொய் சொல்லட்டும். ஸ்டெப்கின் உயிர் பிழைத்துத் தானே போவான், போகட்டும் என்று நான் நினைத்தேன். ஆனால் அவள் உரக்கக் கத்தி எங்களையெல்லாம் அவமானப் படுத்தியதைத்தான் பொறுக்க முடியவில்லை. அவர்கள் இருவருக்குள்ளும் என்ன நடந்தால்தான் எனக்கென்ன அக்கறை? அவளேகூட அவனை இழுத்திருக்கலாமல்லவா? அவனுக்காக அவள் பரிந்துபேசி மன்றாடுகிறாள் என்றால், அவளே ஸ்டெப்கினைச் சங்கடத்திற்குள்ளாக்கவே பொய் புளுகுவதாக ஊர் முழுவதும் பரப்பிவிடுவாள். எனவே நான் அவளை முடுக்கிவிட்டேன்.

"போதும்மா...போதும்...எல்லாம் புரிந்தது. சரி, நாங்கள் அவனை வெளியில் அனுப்பிவிடுகிறோம்" என்றேன் நான்.

"எங்கே அவரைக் கொண்டுபோகப் போகிறீர்கள்? அவரை எங்கும் கொண்டுபோக நான் விட மாட்டேன், விடவே மாட்டேன்" என்று திரும்பவும் பிடிவாதமாகக் கத்தத் தொடங்கினாள்.

"உடனே அவள் அவனிடம் ஓடினாள்; அவனது கழுத்தைச் சுற்றிக் கட்டிப் பிடித்தபடி அவனோடு ஒட்டிக் கொண்டாள். எல்லோரையும் திட்டினாள், சபித்தாள். அவள் அவனை எங்கும் நகரவிட மாட்டாள் எனத் தோன்றியது.

"ஆம். நீயே அவனைக் காப்பாற்ற முடியும். ஆனால் அதற்கும் உனக்கு விருப்ப மிருப்பதாகத் தெரியவில்லை. உன் கணவன் போய் இரண்டு வருடமாகிவிட்டது. நீயும் நன்கு அழகாய், உடற்கட்டோடு இருக்கிறாய். நீ இப்பொழுது அவனைக் கலியாணம் செய்துகொண்டால் இந்த விஷயத்தை மறந்து அவனை மன்னித்தும்விடலாம். இல்லையென்றால்..."

"நான் ஏன் அவரைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டும்? கலியாணம் செய்துகொள்ள எனக்கு விருப்பமில்லை."

"சரி. உனக்கு விருப்பமில்லையென்றால் நாங்கள் எங்கள் வேலையைச் செய்வோம்" என்றபடி அறையைவிட்டு வெளியே கிளம்புவதுபோல மேசையிலிருந்து எழுந்தேன்.

"ஆனால் அவர் கோவிலுக்கு வந்து கலியாணம் செய்து கொள்ள மாட்டாரே. உங்களுக்குத் தெரியுமே அவருக்குக் கடவுளிடத்திலே நம்பிக்கையே இல்லை" என்று ஸ்டெப்கினைச் சுற்றிப் போட்டிருந்த தன் கரங்களை விடுவிக்காமலே பேசினாள். கன்றுக் குட்டிபோல, எதுவும் பேசாமல், தனக்குச் சம்பந்தமில்லாததுபோல அவன் இருந்தான்.

"அதைப்பற்றி உன் விருப்பம்போலவே செய்து கொள்ளலாம். ஆனால் என்னிடம் முடிவாகச் சொல்லிவிட வேண்டும். நீ இனிமேல் சண்டையின்றிச் சமாதானமாக இருப்பாயா? மாட்டாயா?" என்று கேட்டேன்.

அவள் தன் கைகளை விடுவித்துக்கொண்டாள். அவள் முகத்தில் மகிழ்ச்சி விரிந்தது.

"நாங்கள் ஏன் சண்டை போடப் போகிறோம்?" என்று திருப்பிக் கேட்டாள்.

உடனே அந்தச் சனிப் பயலும் சிரிக்க ஆரம்பித்தான். வழக்கு வேறு விதமாக மாறிவிட்டதைப் புரிந்துகொண்டான்.

எல்லாவற்றையும் ஒரு முடிவுக்கு கொண்டுவந்தோம். புது மணத் தம்பதிகளைக் கலாட்டாச் செய்து அறையை விட்டு விரட்டினோம். பலரும் அவர்களைப் பார்த்துச் சிரித்தபடி பல புத்திமதிகளைச் சொல்லிக்கொண்டிருந்தனர். அன்று முழுவதும் ஸ்டெப்கின் மகிழ்ச்சியோடு இருந்தான். மறு நாள் அவனைக் கூப்பிட்டனுப்பினேன்.

"ஸ்டெப்கின்! கவனமாகக் கேள். உன் கலியாணத்தை வேடிக்கையாக முடித்துவிட்டோம். நாளை நீ மீண்டும் அணி வகுத்துப் புறப்பட்டுவிடுவாய். உன்னோடு அவளையும் கூட்டிச் செல்ல முடியாது, தெரிந்துகொள். நீ செய்த இந்த அவமானச் செயலை மறக்க வேண்டுமானால் நான் உனக்கொரு வேலை தருகிறேன். போர் துவங்கியதும் அரும்பாடுபட்டு வீரப் பரிசு பெற்று விடு; இல்லாவிட்டால் நான் உன்னை மன்னிக்க மாட்டேன். நீ வேறு துறையில் வீரத்தைக் காட்டாதவரைக்கும் உன்னை ஒரு வஞ்சகன் என்றே மதிப்பேன்."



"புரிந்துகொண்டேன்; கட்டாயம் பரிசு பெறுவேன்" என்றான் அவன்.

இதுவரை கேட்டுக்கொண்டிருந்த பியோடார் இடைமறித்து "அப்படியே பரிசு பெற்றானா?" என்று கேட்டான்.

"ஆம். பெற்றான். ஒரு வெள்ளி சிகரெட் பெட்டி கிடைத்தது, அவன் சுழல் துப்பாக்கியைச் சாமர்த்தியமாகக் கையாண்டதால்தான் ஒரே சமயத்தில் இரு நூறு பேரை எங்களால் கைது செய்ய முடிந்தது. அந்தப் போரில் தன் காலிலேயே தவறுதலாகச் சுட்டுக்கொண்டான். பிறகுதான் போரிட முடியாத கூட்டத்துடன் சேர்க்கப்பட்டு எனக்குத் துணைவனாக நியமனம் பெற்றான். இப்பொழுது ஏதாவது செய்து பொழுதைக் கழிக்கிறான்."

"அந்தக் கொஸாக்கியப் பெண்ணை என்ன செய்தான்?" என்று கேட்டான் பியோடர்.

"அவளை இவனால் என்ன செய்ய முடியும்? அன்று இரவு அவள் வீட்டுக்குப் போயிருந்தான். அவனுக்காக ரொட்டி சுட்டுக் கொடுத்துப் போர் முனைக்கும் அனுப்பினாள். தேத்தண்ணீரும் கொடுத்தாள்" என்று சிரித்தான் சிஷோவ்.

"கலியாணம் என்ன ஆயிற்று?" என்று பியோடார் சிரித்தான்.

"கலியாணமே நடக்கவில்லை. அதைப்பற்றிய பேச்சுக் கூடக் கிளம்பவில்லை. அவனை மரண தண்டனையிலிருந்து

விடுவித்துத்தான் எப்படிக் காப்பாற்றினேன் என்று பெருமையாகச் சொல்லிக்கொண்டிருந்தாள் அவள். அவன் எதுவும் பேசாது அவள் சொன்னதெல்லாம் கேட்டுக்கொண்டே தின்று தீர்த்தான். மறுநாள் காலையில் கிராமத்தைவிட்டுக் கிளம்பி நாங்கள் அணி வகுத்து நின்றபொழுது சரியான சமயத்தில் ஓடிவந்துவிட்டான்."

பிறகு போர்முனையில் வீரர்களுக்கு முற்படும் காமப்பசி பற்றியும், இத்தகைய குருட்டுச் செயல்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாததென்றும் பேசினர். பல உதாரணங்களையும் நினைவில் நின்ற சம்பவங்களையும் பரிமாறிக்கொண்டனர். சப்பாயேவ், இதை யெல்லாம் வெகு தீவிரமாகக் கேட்டுக்கொண்டான். "தொடர்ந்தார்போல் இரண்டு, மூன்று வருடங்கள் போர்முனையிலேயே கிடக்கும் ஒருவன் பெண்ணைத் தேடாது இருப்பதென்பது சாத்தியமா என்று கேட்டுக்கொண்டே யிருந்தான். அவனே ஒரு முடிவிற்கு வந்தான். "ஆம். அப்படித்தான் இருக்க வேண்டும். அவ்வளவு அடக்கம்கூட இல்லாதவன் படைவீரனே ஆக மாட்டான்!" என்பதுதான் அவனுடைய அபிப்பிராயம்.

நீண்ட கதையைக் கேட்ட பின் பியோடாரும், சப்பாயேவும் சிஷோவின் படையை விட்டு ஷ்மாரினுடைய படைக்குச் சென்றனர். சிஷோவ், சப்பாயேவின் புகழைக் கேட்டுப் பெருமை கொண்டிருந்தால் தானும் அவனுக்குச் சமதையாக வந்திருக்க முடியும். அவனும் பெருமை பேசிக்கொள்ளுவதற்குப் போதிய சம்பவங்கள் இருந்தன; அவன் உண்மையிலேயே பெரிய வீரனும்கூட. ஆனால் ஷ்மாரின் தன்னையே முட்டாளாக்கிக்கொண்டான். ஒரு விநாடிகூட ஓய்வெடுத்துக்கொள்ளாது இங்கும் அங்குமாக ஓடிக்கொண்டே யிருந்தான். எதைப்பற்றியோ தீவிரமாக ஈடுபட்டிருந்தான். அவன் தூங்கும்பொழுதும் அவனுடைய முகத்தில் இந்தத் தீவிர ஈடுபாட்டால் ஏற்படும் மாறுபாடுகளைக் காண முடியும். தான் செய்யாத தீரச் செயல்களைக்



கற்பனை செய்து அபாரமாக டம்பம் அடித்துக்கொள்ளுவது மிகவும் பயங்கரமா யிருக்கும். தான் சந்திக்கும் எல்லோரிடமும் தன்னுடைய வீரப் பிரதாபங்களை அளந்துவிடத் துடிப்பான். அவனும் சில சமயங்களில் தாக்குதலுக்கு உள்ளாகிக் காயம் பட்டான் என்பதெல்லாம் ஓரளவு உண்மைதான். ஆனால் பொதுவாக அவன் ஈடுபட்டதாக ஆறு, ஏழு சம்பவங்களைத் திருப்பித் திருப்பிச் சொல்லித் திருப்தி யடைவான். ஒரு சம்பவத்தை விவரிக்கும்பொழுது, அவ்வப்போது தனக்குத் தோன்றும் கற்பனையை எல்லாம் சேர்த்துக்கொண்டு பொழிந்து தள்ளுவான். தன்னுடைய பிரதாபங்களை வருணிக்கும்பொழுது தனக்கே யுரிய பாணியில் மேசைமீது சாய்ந்துகொள்ளுவான், தலைமயிரை நெருடிக்கொள்ளுவான். மேசைமீது அடித்து அடித்து ஆக்ரோசத்துடன் பேசுவான். அதைப் பார்க்கும்பொழுது எதிரே இருப்பவரோடு பேசுவதாகத் தோன்றாது. மேசைக்காக ஏதோ கதாப் பிரசங்கம் செய்வது போலத் தோன்றும்.

முதலில் ஷ்மாரின் சொல்லுவதை யெல்லாம் கேட்டார்கள், முழுக்க நம்பினார்கள். பிற்பாடு, அவன் பேச்சில் உண்மையைவிடக் கட்டுக்கதையே மிகுதி என்பதைத் தெரிந்துகொண்டார்கள். அவன் பேச்சைக் கேட்பதுமில்லை, ஒரு பகுதிகூட நம்புவதும் இல்லை. ஆனால் அவன் வெறும் 'அளப்பு' ஆசாமி என்று மட்டும் கருதிவிடக் கூடாது. அதற்கு நேர்மாறாக, உண்மையிலேயே நடைபெற்ற நிகழ்ச்சிகளை, கருத்து வேறுபாடில்லாத, மறுக்க முடியாத சம்பவங்களை யெல்லாம் விளக்குவான். அதில் என்ன சங்கட மென்றால், குறிப்பிட்ட ஒரு சம்பவத்தில் ஈடுபட்டுத் தீரச் செயல்களை யாராவது செய்திருப்பதாகச் செய்தி வந்தால், அந்தத் தீரச் செயலைச் செய்தது தானே என்று தம்பட்டமடித்துக்கொள்ளுவான் ஷ்மாரின். ஒரு சம்பவம் போரெல்லைக் கோட்டின் இடது புறத்தில் நடந்திருக்கும்; ஆனால் ஷ்மாரின் வலது புறத்தில் இருந்தான்.

எனவே அவனுக்கும் நிகழ்ச்சிக்கும் தொடர்பில்லை என்ற செய்தி பின்னர் வெளிவரும். இன்னொருவர் செய்த அருஞ்செயலுக்கு வரவேண்டிய பெயரையும், புகழையும் தன் பேரில் ஏற்றிக்கொள்ள அரும்பாடு படுவான். ஷ்மாரின் மட்டும்தான் இந்த ஆசை கொண்டவன் என்று கருத வேண்டாம். இன்னும் பலரிடமும் இந்த எண்ணம் இருந்ததைப் பியோடாரே கவனித்திருக்கிறான். பிறர் செய்த செயலுக்குத் தாம் புகழ் பெறத் துடித்த பலரைக் கண்டிருக்கிறான். யாராவது ஷ்மாரினைப் பார்க்க வந்தால் போதும்—ஆரம்பித்துவிடுவான் தனது சுய புராணத்தையும், திரப் பிரதாபங்களையும்; இன்று மாலை ஆரம்பித்தால் மறு நாள் காலைவரை பொழிந்து தள்ளிவிடுவான். பேசாமல் கேட்டுக்கொண்டிருக்கும் பொறுமைதான் இருக்க வேண்டும். போர் நடவடிக்கையில் அவனுடைய படை ஒரு குறிப்பிட்ட நாளில் ஈடுபடவில்லை என்பதை எல்லோரும் தெரிந்திருப்பார்கள். அன்றுகூடத் தான் தீவிரமாய் போரிட்டதாகவும், எதிரிப் படைகளால் சூழப்பட்டதாகவும், துணிந்து வெளியேறியதாகவும் அப்பட்டமாகப் புளுகுவான். அவனுடைய படைக்கு எப்போதும் ஆபத்து இருந்ததென்றும், அவனுடைய பக்கத்தில் போரிட்டவர்கள்கூட உதவிக்கு வரவில்லையென்றும், கடைசியில் இவனுடைய முயற்சியால் வெற்றி பெறுவது எளிதாயிற்றென்றும், ஆனால் பேரும் புகழும் இதர படைப் பகுதியினர்க்குச் சென்றுவிட்டதென்றும் வருத்தப்படுவான். 'இவனுடைய முயற்சியில்' பிற படைப் பகுதிகள் பாராட்டப்பட்டபொழுது இவன் மட்டும் எல்லோராலும் மறக்கடிக்கப்பட்டான்; இவனை யாரும் கவனிக்கவும் இல்லை, பாராட்டிப் பரிசளிக்கவும் இல்லையென்று குறைப்படுவான். தன்னைச் சாதாரணமானவனாகக் கருதி நடத்துவதாகவும், எல்லா வெற்றிக்கும் காரணமான தன்னை ஒதுக்கிவிட்டுப் பிறர் பாராட்டுகளைத் திருடிக்கொள்ளுவதாகவும் ஆத்திரப்படுவான்.



இன்று பியோடாரும், சப்பாயேவும் அவனைச் சந்திக்கச் சிஷோவிடமிருந்து வந்திருந்தார்கள். அவனிடம் பேசிக்கொண்டிருந்தபொழுது சிஷோவ் ஏராளமான எதிரிகளைக் கைதுசெய்துவிட்டானென்று பாராட்டிச் சொன்னார்கள். ஷ்மாரின் கவனமாக இதைக் கேட்டான். பிறகு அழுக்குப் படிந்த தன்னுடைய முஷ்டியைக் கன்னத்தில் வைத்தபடி, ஏதோ நினைவாகப் பேசுபவன் போல,

"ஓ அப்படியா நடந்தது? வேறு அவர்களால் என்ன செய்ய முடியும்? அவர்களுக்கு வேறு வழியிருக்க முடியாதென்றுதான் எனக்குத் தெரியுமே!" என்றான் ஷ்மாரின்.

"வேறு வழி யாருக்கு இல்லை?"

"யாருக்கா? சிஷோவ் கைதியாக்கினாரே அவர்களுக்குத்தான் தோழர் சப்பாயேவ்! அவர்கள் எல்லோரும் எப்பேர்ப்பட்ட கைதிகள் என்று உமக்குத் தெரியுமா? அதுக்கு முன்னாலே நான் சரியாக் கொடுத்துவிட்டேன் அவர்களுக்கு—என்னுடைய வலது பக்கப் படையோடு பெரும் போர் நடந்ததே உமக்கு அது ஞாபகமில்லை?... அந்தச் சமயத்தில் நடந்த கிடுக்கித் தாக்குதலில் எதிரிகளால் வேறு என்ன செய்ய முடியும்?—நைந்து போனார்கள்; சரணடைவதைத் தவிர வேறு என்ன செய்வார்கள் பாவம்!" என்றான் குத்தலாக ஷ்மாரின்!

பிறருடைய வெற்றிச் செயல்களை மட்டம் தட்டிப் பேசுவது ஷ்மாரினுடைய வழக்கம். அவ்விதம் செய்வதால் தனக்கு எவ்விதப் பயனும் இருக்காது என்று தெரிந்தும் அந்த வழக்கம் அவனை விட்டுப் போகவில்லை.

'நேற்றுத் தான் பெற்ற வெற்றியைப் பற்றி' ஷ்மாரின் பேசத்தொடங்கியதும், தவிர்க்க முடியாத மிக முக்கியமான, அவசரமான தகவலொன்றை அவனிடம் கேட்டான் சப்பாயேவ்.

"உன்னுடைய துணைப் படையில் உள்ள புதுமை என்ன?" என்று கேட்டான்.

துணைப் படைத் தலைமைக் காரியாலயம் ஆக்கப்பட்டிருந்த ஒரு சிறு அறைக்குள் நுழைந்தார்கள். ஒரு மாதிரியான நெடி நாற்றம் வீசியது. எங்கு பார்த்தாலும் ஒரே சுருட்டுப் புகையும் நாற்றமும்தான். அங்கு இருந்த எல்லோருமே சுருட்டுப் புகையால் காற்றைக் கறுமையாக்கும் வேலை மட்டும் பார்ப்பது போலத் தோன்றியது; ஷ்மாரினுடைய துணைப் படைக் காரியாலய அலுவல்களாயிருந்த எல்லா இளைஞர்களும் நல்ல உழைப்பாளிகள், பொறுப்புணர்ந்து வேலை பார்ப்பவர்கள். ஷ்மாரின் வெறும் கதையளப்பிலே நாட்டம் கொண்டவனா யிருந்தாலும், துணைப் படை நிர்வாக வேலைகளை மட்டும் நன்கும் செம்மையாக்கியிருந்தான். மேலிடத்து உத்தரவுகளையெல்லாம் முறையாக நிறைவேற்றிவிடுவான்; ஆனால் தானே ஒன்றைச் செய்யும்பொழுதுதான் பாழ்படுத்திவிடுவான்; தானாக முனைந்து எதையும் செய்ய மாட்டான்; யாராவது வழிகாட்டட்டும் என்று பேசாதிருப்பான்; பாதகமான ஒரு சூழ்நிலையில் எதைத் தக்க சமயத்தில் முன்னதாகச் செய்ய வேண்டும் என்றெல்லாம் சீர்தூக்கி அறியும் ஆற்றலும், முன்னோக்கமும் அவனிடம் கிடையாது.

அந்தத் தலைமைக் காரியாலயம் அலுவஸ்தர்கள் அனைவரும் நன்கு பயிற்சி பெற்றவர்கள். சப்பாயேவிற்கு என்னென்ன பிடிக்கும் என்பதையும் அறிந்தவர்கள். சப்பாயேவிற்கு வேண்டிய விபரங்களையெல்லாம் அவர்களே தந்துவிட்டார்கள்; ஷ்மாரினுக்கு ரொம்ப வேலையின்றிச் செய்துவிட்டார்கள். நிலையைத் தெளிவாக உணர்ந்த பின், ஷ்மாரினுடைய துணைப் படையைப் பார்த்துவரத் தீர்மானித்தான் சப்பாயேவ். அப்பொழுது அந்தப் படை ஏதோ போர் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது. ஷ்மாரின், தனது துணைத் தளபதியைக் காரியாலயத்தில் இருத்திவிட்டுச் சப்பாயேவுடனும் பியோடாருடனும் புறப்படத் தயாரானான்.



சப்பாயேவ், நம்முடைய வீரர்களது தொகையையும், எதிரிப் படையின் எண்ணிக்கையையும் நன்கு அறிவான். வரைப் படத்தில் தான் கண்டபடி நதிகளையும், ரோடுகளையும் அப்படியே நினைவில் வைத்திருப்பான். பச்சை மை தீட்டப்பட்ட இடங்களில் உள்ள காடுகளின் பெயரையும் பழுப்பு நிறம் பூசப்பட்ட இடங்களில் உள்ள மலைகளின் பெயரையும் மனப் பாடமாகச் சொல்லுவான். சவாரி செய்துகொண் டிருந்தபொழுதே, ஷ்மாரினிடம், ஒரு மணல் திட்டுக்கு அப்பால் என்ன இருக்கிறதென்றும், ஒரு குறிப்பிட்ட காட்டுக்குள் எவ்வளவு படையினரை மறைத்து வைக்க முடியும் என்றும் விளக்குவான். எல்லா இடங்களையும் நன்கு நினைவில் பதித்து வைத்திருந்தான். அவர்கள் மூன்று பாதைகள் பிரியும் சந்திப்பிற்கு வந்தபொழுது, எவ்விதத் தயக்கமுமின்றிச் செல்ல வேண்டிய பாதையில் முன்னதாகச் சென்றான் சப்பாயேவ். அந்தப் பாதையில் அடிக்கடி சென்று பழகியவன் போலச் சாவதானமாகச் சென்றான். இந்த விஷயங்களில் அவன் எப்பொழுதும் தவறியதே யில்லை. எந்த இடமா யிருந்தாலும் சரியாகச் சொல்லிவிடுவான். முன்பின் தெரியாத இடங்களில், லாவகமாக வழிகாட்டிச் செல்லும் திறமை அவனுக்கு இருந்தது. அவன் ஒரு வழியைத் தேர்ந்தெடுத்துவிட்டால், மற்றவர்கள் பேசாது பின்பற்றிச் செல்லுவார்கள்.

அவர்கள் முதல் ரெஜிமெண்டுக்குச் சென்றார்கள். அப்பொழுதுதான் தோண்டப்பட்ட ஆழமில்லாத அரண்களில் படை வீரர்கள் இருந்தனர். அதை ஒரு வலுவான அரண், அல்லது பதுக்கிடம் என்று சொல்ல முடியாது. சிறு எலிவளை போலத் தோன்றியது. கொஞ்சம் பள்ளம் பறித்துவிட்டு ஒரு பெரிய பைன் மரக் கிளையை ஊன்றிக்கொள்ளுவார்கள். அந்தக் கிளைக்குள் மறைந்துகொள்ள வசதியாயிருக்கும். இப்படிப்பட்ட கிடங்குகளை உண்மையிலேயே புதர்கள் என்று எதிரிகள் நம்பிவிடவும் இல்லை, அல்லது

போரை மூட்டித் துப்பாக்கி ரவைகளை வீணாக்கவும் விரும்பவில்லை. இந்த அரண்களுக்குப் பக்கத்தில் இருந்த மலைக்கு அப்பால் இருந்தாலும், பேசாதிருந்து விட்டார்கள்.

இந்தப் பதுக்கல் கிடங்குகளுக்கு உணவைக் கொண்டு சென்றார்கள். போர்முனைச் சமையலிடத்திலிருந்து எல்லா உணவுப் பதார்த்தங்களையும் நீட்டிய கரங்களில் ஏந்தியபடி முட்டிக் காலால் புழுக்கள்போல நகர்ந்து நகர்ந்து சென்றார்கள். பல தோழர்கள் உண்டபின் ஓய்வெடுத்துக் கொண்டார்கள்; உண்டு முடித்த இதரர் தாக்குதலை நடத்திக்கொண்டிருந்தார்கள். சிலர் நைந்து கிழிந்து போன புத்தகங்களையும், பத்திரிக்கைகளையும் ஒளித்துக்கொண்டு சென்றிருந்தார்கள். ஒருவன், மரக்கிளை மறைவில் பதுக்கல் கிடங்கிற்குள் குப்புறப் படுத்துக்கொண்டு, தான் கொண்டு சென்றிருந்த புத்தகத்தை மூக்கிற்கு நேரே வைத்துப்படித்தான்-ஏதோவிடுமுறைக்காகக்கிராமப்புறத்துக்குச்சென்று விசராந்தியாக இருப்பதுபோலக் கவலையின்றிப் படித்தான்.

சப்பாயேவ், பியோடார், ஷ்மாரின்—மூவரும் போரெல்லைக் கோட்டின் பின்புறமாகச் சென்றனர். இன்னும் அங்கு போர் ஆரம்பமாக வில்லை. இது சப்பாயேவிற்கு ஆச்சரியத்தை மூட்டியது.

"வெள்ளைப் படையினர் மலைக்குப் புறத்தே இருக்கிறார்களா? இல்லையா?—யாருக்குத் தெரியும்? அவர்கள் அதைவிட்டுக் கிளம்பியு மிருக்கலாம். ஷ்மாரின், அதைக் கண்டறியுங்கள்" என்றான் சப்பாயேவ்.

உளவறியும் சாரணர்கள் எல்லாத் திசைகளிலும் ஊர்ந்து சென்றார்கள். 'இருவர் மலையை அடைந்து அதன் உச்சிக்குச் சென்றுவிட்டார்கள். அங்கிருந்து திரும்பி வந்து, 'மலைமுகட்டின் அந்தப் பக்கத்தில் ஒரு ஆள்கூடக் கிடையாது' என்று தெரிவித்தார்கள். மலையை அடுத்திருந்த சிறு புதர்க் காடு வழியாக எதிரிகள் அத்தனை பேரும் நழுவிச் சென்றிருக்க வேண்டும்.



சப்பாயேவும், பிறரும் மலையுச்சிக்கு ஏறித் தொலை நோக்கிக் கண்ணாடிகள் வழியாக எல்லாப் புறமும் துருவிப் பார்த்தனர்.

"இந்தக் காடு எவ்வளவு தூரம் பரவியிருக்கிறதெனப் பார்த்தீர்களா? நம்மைச் சற்றி வளைத்துக்கொள்ளுவதற்காகவே நழுவியிருக்கிறார்கள்" என்றான் சப்பாயேவ்.

"அவர்கள் நம்மைச் சுற்றி வளைத்துக்கொள்ள முடியவே முடியாது. கடந்த மூன்று நாட்களாகச் சரியாக விரட்டி யடித்திருக்கிறேன். அப்படி யிருக்கையில் அவர்களால் எப்படித் திரும்பி வர முடியும்? அவர்களாலே சீக்கிரத்திலே தப்பி ஓட முடியாததால்தான் நமக்கு இவ்வளவு சங்கடமெல்லாம்!" என்று ஷ்மாரின் அலட்சியமாகச் சொன்னான்.

"ஆமாம்; நாலாவது நாள் திரும்பிவந்து சரியா மொத்திவிடுவாங்க" என்று கடுகடுப்போடு சொன்னபடி கண்ணாடி வழியாக இப்படியும் அப்படியும் பார்த்துக்கொண்டிருந்தான் சப்பாயேவ்.

"அவர்கள் ஒன்றும் திரும்ப மாட்டார்கள்!" என்று வாய்த்துடுக்காய் உறுதி கூறினான் ஷ்மாரின்.

"அப்படியே ஒரு வேளை அவர்கள் திரும்பி வந்துவிட்டால்!" என்று மீண்டும் கேட்டான் சப்பாயேவ். "எதிரித் தளபதி அப்படி யொன்றும் அடிமுட்டாளாய் இருக்க மாட்டான். இதைவிட்டு நழுவிஓடுவது சுலப மென்றால் அதுபோலத் திரும்பிவருவதும் சுலபமாகத்தான் இருக்கும். நீ போருக்குத் தயாராய் இருக்கும்பொழுது அவன் எங்கே போயிருப்பான்? மரமண்டையே? என்ன நடக்கிறதென்று மூளையைச் செலுத்திப் புரிந்து கொள்ளப் பார். உன் மூக்குக்கு முன்னாலே பட்டாணிக் கடலையாக உருண்டு லேசில் எதிரி வீழ்ந்துவிடுவான் என்று நினைத்துக்கொண்டிருக்கிறாயா?" என்றான்.

ஷ்மாரின் வாய் பேசவில்லை. அவன் பதில் சொல்லுவ தற்கும் விஷயமில்லை. எதிரி சூழ்ந்துக்கொள்ள நேரிடு மானல் அதை எப்படித் தடுத்துச் சிதைக்க வேண்டுமென்று விளக்கிவிட்டு, நிலைமை தெளிவாகும்வரை அங்கேயே படைகளை நிறுத்தி வைக்குமாறு சப்பாயேவ் உத்தரவிட் டான். பிறகு பியோடரை அழைத்துக்கொண்டு இதர இரு ரெஜிமெண்டுகளையும் பார்க்கச் சென்றான்.

அவன் எங்கே சென்றாலும் சரி, எதோடு தொடர்பு பூண்டாலும் சரி, எதை எப்படிச் சரிபடுத்தி ஒழுங்கு செய்ய வேண்டுமென்றும், எங்கே எத்தகைய உதவி தேவையென்றும் எளிதில் புரிந்துகொண்டான். அவனும், பியோடாரும் மூன்றாவது ரெஜிமெண்டைப் பார்வையிட்டுக் கொண் டிருந்தபொழுது, துணைப்படையின் வலதுபுறத்து அணிக்கு ஒரு தூதனை ஷ்மாரின் அனுப்பிச் சுற்றி வளைத்து வந்த எதிரிப் படைகளைக் கண்டுபிடித்துவிட்டதாகவும், இதையறிந்த எதிரிப்படைகள் முன்பு சென்ற வழியே பின் வாங்கிவிட்டதாகவும் தெரிவித்திருந்தான். இந்தச் செய் திக் குறிப்பையும் ஒரு வெற்றிச் செய்தியோடுதான் முடித் திருந்தான். "ஒரு ஆள்க்கூடச் சேதமின்றி எதிரியின் பயங் கரச் சூழ்ச்சியை முறியடித்துவிட்டேன்!"

ஆனல் அவன் "முறியடிக்குமாப்போல!" எதுவும் நிகழ்ந்துவிட வில்லை. எதிரிகள் தாங்களாகவே பின்வாங் கிச் சென்றதுதான் நடந்த விஷயம்!

சப்பாயேவும், பியோடாரும் அந்த இரவை மூன்றாவது ரெஜிமெண்டு வீரர்களுடனே கழித்தார்கள். தலைமைக் காரியாலயங்கள் கிராமத்தில் அமைக்கப்பட்டன. காவலா ளர்கள் சுற்றிலும் நிறுத்தப்பட்டனர். எதிரிப் படை இலக்கை நோக்கிய திசையில், கிராமத்துக்கு வெளிப்புறத் தில் அரை வட்டமாகப் பதுக்கல் கிடங்குகள் தோண்டப் பட்டுப் படைவீரர்கள் பதுங்கியிருந்தனர்; தலைமைக் காரியாலயமாக விளங்கிய குடிசையில் கரிபடிந்த சிறு



சிம்னி விளக்கொன்று, ஆள் முகங்கூடத் தெரிய முடியாத அளவு மங்கலாக எரிந்துகொண் டிருந்தது. எல்லோரும் சோர்ந்து போயிருந்ததால் பேசக்கூட மனமின்றி இருந்த னர். அந்தக் குடிசையின் மூலையில் சிலர் சுருண்டு படுத் திருந்தார்கள். சிலர் பெஞ்சுகளில் சாய்ந்தார்கள், பலர் படுக் கச் சௌகரியமான இடம் தேடிச் சென்றனர். அரைகுறை யிருட்டில் கரும் பூதங்கள் போலப் திரிந்தனர்.

அந்தச் சமயத்தில் பதினன்கு வயதான ஓர் இளைஞனை விசாரிக்கக் கொணர்ந்தார்கள். அவனை ஒரு உளவாளி எனச் சந்தேகித்துத் தளபதிகள் பல கேள்விகளைக் கேட் டார்கள். முதலில் அவன் யார் என்றும், எங்கிருந்து வரு கிற னென்றும், அங்கு எதற்காக வந்தா னென்றும் கேட் டார்கள். அந்தப் பையன், தனக்குத் தாயுமில்லை, தந்தையு மில்லை யென்றான். அவர்கள் முதல் போரிலேயே செத்து விட்டதாகச் சொன்னான். தான் ஒரு போலந்து நாட்டு அகதி யென்றும், இப்பொழுது மூன்றாவது செஞ்சேனைப் பட்டாளத்தில் ஊழியனகச் சேர்ந்திருப்பதாகவும் கூறி ஞன். அவன் குறிப்பிட்ட பட்டாளத்தைப்பற்றி இது வரை யாருமே கேள்விப்பட்டதில்லை. எனவே அவர் களுடைய சந்தேகம் வலுத்தது.

"உன் பெயர் என்ன?"

"ஜென்யா"

"நீ...கொஞ்சம் முந்தி 'அல்யோஷா'ன்னு சொல்லலே" என்று ஒருவர் குறுக்கிட்டு, அவனைக் குழம்பச் செய்யக் கேட்டார்.

"தயவுசெய்து அப்படியெல்லாம் நீங்களே சொல்லா தீர்கள்" என்று உறுதியோடும், இயல்பான பெருமிதத் தோடும் அந்தப் பையன் மொழிந்தான். "என் பெயர் அல் யோஷா என்று நான் சொல்லவே யில்லை. நீங்களாக அந் தப் பெயரைச் சொல்லுகிறீர்கள்."

"தம்பி, ரொம்ப நல்லாப் பேசுறியே!"

"நான் ஏன் பேசக் கூடாது?"

"சரி. முட்டாள்தனமாக வேண்டாததை நீ பேச வேண்டாம். விஷயத்துக்கு வா. நீ வெள்ளையர்களிட மிருந்துதானே வந்தாய்? ம்...சொல்லு...எதையும் மழுப் பாதே, மறைக்காதே. எல்லாவற்றையும் எங்களிடம் நீ அப்படியே சொல்லிவிட்டால் உனக்கு ஒரு கெடுதலும் செய்ய மாட்டோம்."

"நான் உங்களிடம் எதுவுமே சொல்ல மாட்டேன். ஏனென்றால் உங்களிடம் சொல்லுவதற்கும் விஷயமேதும் இல்லை." அவனது குரல் குமுறியது; நடுங்கியது; ஈன ஸ்தாயியில் பேசியது.

"அப்படிச் சொல்லு. பொய் சொல்லக் கூடாது. நீ சொன்ன மாதிரி எந்தப் பட்டாளமும் கிடையாது. நீயாகக் கண்டுபிடிச்சிருக்கே இல்லே...நீ எங்கே, எதுக்காகப் போகிறாய் என்கிறதை ஒழுங்காகச் சொல்லிவிட்டால் நல்லது."

இவ்வாறு அவனிடம் விடாமல் கேட்டுக்கொண்டே யிருந்தார்கள். "அவன் யார், எதற்காக எங்கே அனுப்பப் பட்டிருக்கிறான்" என்பதை எப்படியும் அறிந்துகொள்ள விரும்பினார்கள். அவனைப் பயமுறுத்துவதற்காக எல்லாப் பிரயத்தனங்களும் செய்துவிட்டார்கள். அவனைச் சுட்டு விடுவதாகக்கூடப் பயமுறுத்தினார்கள்.

"சரி. அப்படியானால் என்னைச் சுட்டுவிடுங்கள்" என்று அழுதபடியே சொன்னான் ஜென்யா. "இதெல்லாம் சும்மாதான். நான் உங்கள் பக்கம். நீங்கள் தப்பாக எண்ணிக்கொண்டு என்னை இந்தப் பாடு படுத்துகிறீர்கள்" என்று விம்மினான்.

பியோடார் இந்த விசாரணையில் தலையிட முடிவு செய்தான். அவன் இதுவரை பக்கத்தில் படுத்தவாறே, இந்தக் குறுக்கு விசாரணை எப்படி முடிகிறதெனப் பார்ப்பதற்காகக் கவனித்திருந்தான். அந்தப் பையன் செஞ்சேயினாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் அவனுக்கு எல்லாம் ஒன்றுதான். அந்தப் பையனைக் காப்பாற்றிப் பேணி, தேவையானால் புதிதாகப் பயிற்றுவிக்கவும் அவன் விரும்பினான். உடனே எழுந்து குறுக்கு விசாரணையை நிறுத்தச் சொன்னான். அந்தப் பையனைத் தனக்குப் பக்கத்திலேயே படுக்கவைத்துக்கொண்டான். (பிறகு அந்தப் பையன் தலைசிறந்த ஊழியனாகிப் போர்த்துறையில் நல்ல பணியாற்றினான்.)



எல்லோரும் இன்னும் தலைமைக் காரியாலயத்தில்தான் அடைந்து கிடந்தார்கள். சிம்னி விளக்கு இன்னும் புகையைக் கக்கிக்கொண் டிருந்தது. மூலைகளில் உறங்கியோரெல்லாம் குறட்டையொலி கிளப்பினர். வெளியிலிருந்து, சன்னல் வழியாகக் குதிரைகளின் குளம்போசை கேட்டது. எல்லோரும் தூங்க ஆரம்பிக்கு முன்பு, எல்லாம் சரியாக இருக்கிறதா என்று சுற்றிப் பார்த்துவந்த ஷ்மாரின், அங்கும் வந்து பார்த்துச் சென்றுவிட்டான். எப்படிப் பொழுது போயிற்றென்றே யாருக்கும் தெரியாது....பொழுது புலரும் சமயத்தில் ஷ்மாரின் மூச்சு முட்ட ஓடிவந்து 'புறப்படுங்கள், புறப்படுங்கள்; எதிரிகள் தாக்குகிறார்கள்!" என்று கத்தியபடி கதவைத் தட்டினான்.

எல்லோரும் பதறி எழுந்தார்கள். சில வினாடிக்குள் குதிரைமீதேறிப் புறப்பட்டுவிட்டார்கள்.

"அவர்கள் மலையைத் தாண்டி வந்துவிட்டார்கள். இன்னும் கொஞ்சதூரம்தான் இருநூறு கஜம்தான் இருக்கும்" என்றபடி குதிரைமீது பாய்ந்தான் ஷ்மாரின். அவனது கால்கள் வழுக்கின. ஊக்கம் வாய்ந்த அவனுடைய குதிரை அவன் ஏறுவதற்குள் தாவிப் புறப்பட்டது. அதன் தாடையில் இரண்டு அடிவைத்து, நிறுத்தித் தாவி ஏறினான் ஷ்மாரின்.

வாசற்படி வழியாக எல்லோரும் சவாரியாகப் புறப்பட்டார்கள். வைகறை இருட்டில் எல்லாப் புறத்திலிருந்

தும் பலர் ஓடிக்கொண்டிருந்தனர். அவர்கள் எங்கே ஓடுகிறார்கள் என்று சொல்லுவது கஷ்டம். அவர்கள் அனைவரும் ஒரு பக்கமாக ஓடவில்லை. எல்லாப் பக்கங்களிலும் தலைதெறிக்க ஓடிக்கொண்டிருந்தார்கள். சவாரி சென்றவர்களும் ஒரு வார்த்தைகூடப் பேசாது பாய்ந்தார்கள். எதுவும் பேச அப்போது நேரமில்லை. பலர் தங்களது உயிரைக் காத்துக்கொள்வதற்காகப் பாதையைவிட்டு விலகி ஓடினார்கள். இந்தக் குழப்பமான சமயத்தில் என்ன செய்ய வேண்டுமென்பதைச் சப்பாயேவ் உடனே நிதானித்துக்கொண்டான். கைவசம் தயாராக வைத்திருந்த துருப்புகள் இருந்த இடத்திற்குச் சென்றான். ஷ்மாரினும், இளிக்கோவும், முன்னணியில் போராடிக்கொண்டிருந்த இடத்திற்கு விரைந்தார்கள். அங்கிருந்துதான் செஞ்சேனையினர் பின்வாங்கி வருகிறார்கள் என்ற செய்தி அவர்களுக்கு எட்டியது. பின்வாங்கி வருவோரைத் தடுத்து நிறுத்தித் தானே எதிர்நின்று முன்னேறி வழிகாட்ட முனைந்தான். உரால்ஸ்க் பகுதியில் போரிட்ட சமயத்தில், இத்தகைய குழப்பமான நிலை ஏற்பட்டது. அப்பொழுது போர் முனையில் எப்படிச் சமாளிப்பதென்பதைப்பற்றி ஒரு சமயம் ஆண்ட்ரேவிடம் விவாதித்திருந்தான். அந்த நிகழ்ச்சி இப்பொழுது அவனுக்கு உதித்தது. உடனே மகிழ்ச்சியும் கர்வமும் பொங்க எழுந்தான்.

"தவறான எச்சரிக்கை! பொய்யான அபாய அறிவிப்பு! ஒரு தவறு நடந்துவிட்டது. மலையுச்சியில் நிற்பது நமது வீரர்கள்."

"சொல்வது சரி!" என்றான் ஷ்மாரின்.

யாருக்காக இந்த உற்சாக மொழிகள். சொல்லப்பட்டன என்றே புரியவில்லை. ஏனென்றால் சுற்றிலும் சிதறிப்போன ஒரு சில செஞ்சேனை வீரர்கள்தான் நின்றார்கள். ரோட்டைவிட்டு விலகிச்சென்ற சப்பாயேவிற்கும், இதரர்களுக்கும் உடனே ஆள் அனுப்பப்பட்டது. வானத்தில் சுட்டும், கத்திக் கூப்பிட்டும் அவர்கள் நிறுத்தப்பட்டார்கள். பத்து நிமிடத்தில் எல்லோரும் திரும்பக் கூடிவிட்டார்கள்.



இந்தக் குழப்பமும், கூச்சலும், வெடிச் சத்தமும் ரெஜிமெண்டு வீரர்களுக்கும் எட்டிப் பெரும் கலகத்தை உண்டாக்கியது. தங்களுடைய சோதர வீரர்களிடமிருந்து தாம் துண்டிக்கப்பட்டதாக உணர்ந்தனர். உடனடியாகத் தீவிர நடவடிக்கை எடுக்க முனைந்தனர். எல்லோரும் எதிர்த் தாக்குதலுக்குத் தயாராயினர். பல திசைகளிலும் உளவாளிகளையும், தூதுவர்களையும் அனுப்பிக்கொண்டிருந்தனர். அப்பொழுது ஏற்பட்டது வெறும் அறிவிப்பு, அபாயத்திற்கிடமில்லை என்ற செய்தி அவர்கட்கு எட்டியது. உடனே மீண்டும் எல்லா வீரர்களும் அந்தக் குடிசையில் கூடினார்கள். இன்னும் விடிவதற்கு நேரமிருந்தாலும் தூங்குவதற்கு யாரும் விரும்பவில்லை. மேசையைச் சுற்றிலும் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். யாரையோ திட்டிக்கொண்டிருந்தார்கள். அது யாரென்றுதான் தெரியவில்லை. ஷ்மாரினாக இருக்கக் கூடுமோ? இல்லை. அவனுடைய வேலை, ஆபத்து வருகிறது என்று அறிந்ததும், எல்லோர்க்கும் அதை அறிவித்துத் தூண்டிவிடுவதுதானே. ஆபத்து செய்தி அறிந்தும் அவன் அடங்கியிருக்க முடியாதே. ஒரு வேளை அவர்களேதானா? இல்லை...அவர்களும் கண்டனத்துக்கு உரியவர்கள் அல்லர். எதிரி தாக்குகிறான் என்ற செய்தி கேட்டதும் எந்த முட்டாள்தான் குடிசைக்குள் அடங்கியிருப்பான்.

இவ்விதம் குழப்பம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது என்றும், ஏற்பட்டாலும் பரவாயில்லை என்றும் இறுதியில் முடிவு செய்தார்கள். யாரைக் கண்டிப்பது என்று புரியவில்லை. என்றாலும் ஏதே ஒரு வகை அவமான உணர்ச்சியும், மனக்குறையும் அவர்களிடம் நிறைந்திருந்தன. அவர்களுடைய பேச்சில் உற்சாகம் குறைந்தது. ஒருவரை ஒருவர் பார்க்கக்கூடக் கூசினர். எங்

கெங்கோ பார்த்தபடி ஒருசில வார்த்தைகள் மட்டுமே பேசினர்.

"அந்தச் சமயத்தில் ஒரு பெரும் குழப்பமே நேர இருந்தது" என்றபடி ஷ்மாரின் விளக்கை ஏற்றிக் கொண்டே, "நம்மை ஏமாற்றியது யாரென்று கண்டுபிடிக்க வேண்டும்" என்றான்.

"யார் உன்னிடம் அப்படிச் சொன்னது?" என்றான் சப்பாயேவ்.

"ரெஜிமெண்டு அலுவலாளர்கள் சற்று முன் சந்தித்துச் சொன்னார்கள்."

"அது சரி. அவர்களில் யார் சொன்னது?"

"யாருன்னு நினைவில்லை, சொன்ன ஆளும் தெரியவில்லை. அவன் சொல்லிவிட்டுக் குதிரையில் வேகமாய்ப் பரந்துவிட்டான்; அந்தச் சமயத்தில் போரெல்லை அணிவகுப்பும் நகர்ந்துகொண்டிருந்ததைப் பார்க்க முடிந்தது. எனவேதான் நானும் அப்படியே நினைத்தேன்..."

"நினைப்பதெல்லாம் கூடாது. முழுவதையும் தெளிவாக நீ சென்று அறிந்திருக்க வேண்டும்" என்றான் சப்பாயேவ். "எங்களுக்கெல்லாம் இப்படித்தான், ஒரு சமயம் என்ன நடந்ததென்று உனக்குத் தெரியுமா? இப்பொழுது நடந்ததில்லை—ஜெர்மானியப் போரில் நடந்த சம்பவம் அது. அங்கு இருந்த மலைகள், இங்கு இருப்பதைப் போன்று சிறு குன்றுகள் இல்லை. மலையுச்சியில் ஏறிவிட்டால் விரைவில் கீழே இறங்கிவர முடியாது.நாங்கள் மலையுச்சியை அடைந்துவிட்டோம். ஆஸ்திரியர்கள் எல்லாப் புதர்களிலும், மடுக்களிலும் மறைந்திருந்தார்கள். பலர் மணற்பாறைகளுக்குள் பதுங்கிக் கிடந்தார்கள். மிக லாவகமாக எவர்க்கும் தெரியாதபடி ஒளிந்திருந்தார்கள். இது அவர்களுக்கு கைவந்த வித்தை. எங்களை இறுதி முனைகளில் திடீரென்று தாங்கிப் போக்குவரத்துச் சாதனங்களையெல்லாம் வெகு எளிதில் கவர்ந்துகொள்ள அவர்களால் முடியும். எங்களி



டம் பீரங்கிப் படைகள் இருந்திருந்தால் அவற்றையும் கைப்பற்றிருப்பார்கள். ஆனால் இந்த முறை கொஞ்சம் சமாளித்துக்கொண்டோம். போக்குவரத்து சாதனங்களையும், பீரங்கி வண்டிகளையும் நடுவில் வைத்து, அதைச் சூழ்ந்து வீரர்கள் அணிவகுத்துச் சென்றார்கள். எங்களிடம் போதுமான குதிரைகள் இல்லாமையால் எருதுகளை உபயோகித்தோம். அவை இரவு நேரங்களில் உக்காரமிட்டுக் கத்தத் துவங்கிவிடும். துப்பாக்கிப் பட்டையால் அவற்றை அடித்தால் இன்னும் உரக்கச் சத்தமிடும். ஏதேனும் தீனி இருந்தால் அந்தச் சமயத்தில் அவற்றின் வாயில் அடைத்துக் கத்தவிடாமல் செய்யலாம். தீனி தீர்ந்துவிட்டால் பழைய குருடியாகிவிடும்! "ஒரு சமயம் இரவெல்லாம் நாங்கள் அணிவகுத்துச் செல்ல வேண்டியிருந்தது. 'பாதையெல்லாம் செம்மையாக இருக்கிறது. துணிந்து முன்னேறலாம்' என்று படைச் சாரணர்கள் அறிவித்திருந்தார்கள். எனவே முறைப்படி தளவாடங்களையும் எருதுகளையும் நடுவில் அமர்த்தி அணிவகுத்துப் புறப்பட்டோம். அந்த மாதிரி இரவு நேரங்களில், அவைபோன்ற பயங்கர மலைப்பகுதிகளில் பயணம் செய்வதிலுள்ள தொல்லைகளை அனுபவித்துப் பார்த்தால்தான் உணர முடியும். அதைவிட வேறு எதுவும் மோசமாக இருக்க முடியாது. எங்கும் கரும் இருட்டு. அதைத் தவிர வேறு எதையும் காண முடியாது. பேச்சேதுமின்றி நடந்துகொண்டிருந்தோம். காலடிபட்டு உருண்ட கூழாங்கற்களின் ஓசைமட்டுமே எழுந்தது. ஒரே பயப்பிராந்தி சூழ்ந்துகொண்டது. நம்மைச் சுற்றிலும் உள்ள புதர்களில் எதிரிகள் ஒளிந்திருப்பதுபோன்ற அச்சம் ஏற்பட்டது; மரங்களில் எதிரிகள் பதுங்கியிருப்பது போலத் தோன்றியது. அங்கு ஒரு பெரிய பாறாங்கல் தென்பட்டது; அதுகூட மனிதன்போலத் தோன்றியது. எவ்வளவு துணிவான வீரனாயிருந்தாலும் உடல் நடுக்கம்

ஏற்படுவதைத் தடுக்க முடியாது. அந்தப் பயங்கர இருளில், எதை நோக்கிச் சுடுவதென்றும் தெரியாது, எந்தப் பக்கம் ஓடுவதென்றும் புரியாது. எல்லாப் புறங்களிலும் பகைவர்களால் சூழப்பட்டதுபோன்ற திகில் பற்றிக்கொள்ளும். உத்தரவிடுவது? எதையும் கண்ணால் பார்க்க முடியாத இருட்காட்டில் எதைப் பார்த்து உத்தரவிடுவது? எதற்காக உத்தரவிடுவது? யாராவது நமது தலையிலே அடிக்கிற வரைக்கும் பேசாது காத்திருக்க வேண்டியதுதான். சில சமயங்களில் நம்மை நாமே தாக்கிக்கொள்ள வேண்டிய கேலிக் கூத்துக்கும் ஆளாக நேரிடும். நமது துப்பாக்கி முனை காலில் உரசினாலும் ஏதோ எதிரி வந்துவிட்டதுபோன்ற அச்சம் ஏற்பட்டுக் கைகால்கள் நடுநடுங்கத் தொடங்கிவிடும். இருட்டில் மலைப் பகுதிகளில் செல்லுவது இந்தக் கதையாக இருந்தது.

"நாங்களும் நடந்துகொண்டே யிருந்தோம். முன்னணியில் சென்றவர்களில் யாரோ எதிரியைக் கண்டதுபோல எண்ணினார்கள். அவன் உடனே சுட்டான்; எதிர்த் திசையிலிருந்து பதிலுக்கு யாரும் சுடவில்லை. அவன் திரும்பவும் சுட்டான். அதைத் தொடர்ந்து ஒரே களேபரம் ஏற்பட்டுவிட்டது. நாங்கள் சென்ற வழி குறுகியதாக இருந்ததால் ஒருவர் பின் ஒருவராகச் சென்றுகொண்டிருந்தோம். எனவே முன்னணி வீரர் சுடத் தொடங்கியதும், எதிரி எல்லாத் திசைகளிலும் இருந்து தாக்குவதாக எண்ணிக்கொண்டு பின்னணி வரிசையினரும் சுடத் தொடங்கிவிட்டனர். சிறிது நேரத்தில் எல்லோரும் மலையைவிட்டு இறங்கியோடத் தொடங்கினர். எங்கிருந்து துப்பாக்கி ரவைகள் கிளம்புகின்றன என்றுகூட அறிய முடியாத அளவுக்குக் குழப்பம் ஏற்பட்டுவிட்டது. எல்லோரும் பின்வாங்கி ஓட ஆரம்பித்தனர். தளவாட வண்டிகளும், எருதுகளும் தலைதெறிக்கும் வேகத்தில் சறுக்குப் பாதையில் திரும்பி வந்தன. அந்தப் பேரதிர்ச்சியில், குதிரைமீது



ஏறித் தப்பவும் முடியாது, காலால் தொடர்ந்து ஓடவும் முடியாது. வேறு வழியில்லாததால் அகப்பட்ட தளவாட வண்டிகளிலும், இதர சாதனங்களிலும் ஏறி ஓடினோம். மலையடிவாரத்தில் இருந்தவர்கள், நாங்கள் ஓடிவருவதைக் கண்டு, எதிரிகள் வருவதாக எண்ணிக்கொண்டு எங்களை நோக்கியே சுட ஆரம்பித்துவிட்டனர். அவர்களும் ஓடிக்கொண்டே சுட்டார்கள், நாங்களும் சுற்றும் முற்றும் திரும்பித் திரும்பிச் சுட்டோம். கடவுளே! இந்த விபரீதத் தாக்குதலுக்கு ஆளாகி மடிந்தவர்கள் தொகை கணக்கிலடங்காது! இதற்கெல்லாம் காரணம்தான் எது? குழப்பத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை—உண்மையிலேயே திடீரென்று ஏற்பட்ட அர்த்தமற்ற குழப்பமும், அதனால் விளைந்த பயப்பிராந்தியும்தான். போர்முனையில் யாராவது நம்மிடம் சொன்னாலும், அல்லது நாமே எதையும் பார்த்தாலும், நன்கு தெளிவாகத் தெரிந்துகொண்ட பிறகே அதைப்பற்றி பேச வேண்டும். அதைவிட்டு, எடுத்தவுடன் "எதிரி வருகிறான், வருகிறான் என்று கத்திக் குழப்பத்தை விளைவித்துவிடக் கூடாது."

"ஏன் கத்த வேண்டும்? கத்தவே கூடாதே!" எல்லாக் குழப்பமும் விஷயம் தெரியாமல் கத்துவதால் ஏற்படுவதுதான் என்று தன்னையே குறிப்பிட்டுச் சொல்லப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ளாமலே ஷ்மாரினும் ஒத்து ஊதினான்.

"ஆமாமாம். கத்துவதால்தான் வந்தது" என்று ஷ்மானுடைய சாகசத்தைப் பார்த்தபடியே சொன்னான் சப்பாயேவ்.

இந்தச் சமயத்தில் பியோடார் தலையிட்டான். "சில சந்தர்ப்பங்களில் குழப்பம் ஏற்படத்தான் செய்யும். அதை முற்றிலும் தவிர்க்க முடியாது என்று நான் கருதுகிறேன். எங்கிருந்தாலும் சரி, அத்தகைய இக்கட்டான சூழ்நிலைச் சமயத்தில் தடுத்துவிட முடியாது. அதிலும் நீங்கள் சற்று

முன் உதாரணத்திற்குக் குறிப்பிட்டீர்களே, அந்த அணிவகுப்பில் நடந்த குழப்பத்தையும் தவிர்த்திருக்க முடியாது" என்றான் சப்பாயேவிடம்.

"ஆம். உண்மையிலேயே அந்தக் குழப்பம் பேரழிவில்தான் முடிந்தது" என்றான் சப்பாயேவ்.

பியோடார் தன் எண்ணத்தை விளக்க ஆரம்பித்தான்:

"பேரழிவுதான். அந்தப் பேரழிவை நாமே உண்டாக்கிக்கொள்ளுகிறோம். குழப்பம் ஏற்பட்டவுடன் நாம் போராடத் துவங்குகிறோம் அது கூடாது, அதற்கு முன்பே நாம் துணிந்து போரிட வேண்டும். நாம் குழப்பத்தைத் தடுக்கத்தான் வேண்டும். ஆனால் அதை எப்படித் தடுப்பது? சாத்தானுக்குத்தான் தெரியும். ஒவ்வொரு விஷயத்திலும் தனிப்பட்ட அம்சங்கள் பல உண்டு. சப்பாயேவ், குறிப்பிட்ட ஜெர்மானியப் போர்ச் சமயத்தில் ஏற்பட்ட குழப்பச் சமயத்திலும், நன்கு பயிற்சி பெற்ற தேர்ந்தெடுக்கப்பட்ட படை வீரர்களை முன்னணியில் அனுப்பியிருக்க வேண்டும். எஞ்சிய படை வீரர்களும் இரவில் பயமின்றிச் செல்லும் திராணி கொண்டவர்களாயிருக்க வேண்டும். பிறகு எவ்வெப்பொழுது, எப்படித் தாக்குதலைத் தொடர வேண்டும் என்பதெல்லாம் முன்கூட்டியே முடிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். குறிப்பிட்ட ஒரு அடையாளத்தைக் கொண்டே வீரர்கள் சுட வேண்டும் என்பதையும் தெளிவுறுத்த வேண்டும். மனம் போனபடி அவரவர்கள் சுட இடம் தரக் கூடாது" என்று விளக்கினான்.

இந்தச் சமயத்தில் சப்பாயேவ் குறுக்கிட்டான்:

"அந்தச் சமத்தில் அடையாளம் ஏதும் வைத்துக் கொள்ளவில்லை. அடையாளம்—அந்தச் சமயத்தில் அடையாளத்தினால்தான் பயனென்ன? குதிரைகளும் எருதுகளும் வெறித்துப் பாய்ந்து நின்றபொழுது அடையாளங்களைக்கொண்டு அந்தச் சமயத்தில் எதை வரையறுக்க முடியும்? அவற்றை நடுவில் நிறுத்தியிருக்க வேண்டாம் எனத் தோன்றும். ஆனால் இரவில் அதைத் தவிர வேறு நல்ல முறை கிடையாதே! அப்படித்தானே செய்ய வேண்டும்? அப்புறம் பொதுவாகச் சொல்லப் போனால், இரவு நேரத்தில் அணிவகுப்பை வைத்துக்கொள்ளுவதே தவறு எனத்தான் சொல்லத் தோன்றும்."



"ஏன் செய்யக் கூடாது? முன் கூட்டியே திட்டமிட்டு அணிவகுப்பை இயக்கினால் இரவுப் பயணத்தைக்கூடத் தவிர்க்க முடியும்."

"ஓ. அவர்களும் முன்கூட்டியே திட்டமிட்டுத்தான் இருந்தார்கள். ஆனால் திட்டம்தான் உருப்படாமல் போய் விட்டது" என்றபடி ஷ்மாரின் சிரித்தான்.

அவனுடைய வேண்டாத சிரிப்பும், உருப்படாத அபிப்பிராயமும் உரையாடலுக்கே முற்றுப்புள்ளி யிட்டு விட்டது. யாருக்கும் தூங்கவும் விருப்பமில்லை. அங்கு வெறுமனே உட்கார்ந்திருக்கவும் பிடிக்கவில்லை. எனவே இனி அங்கு தங்கியிருக்கவும் தேவையில்லை. அப்பொழுது வைகறை நேரம். ஆனால் இரவுக் குளிர் இன்னும் உடலை நடுங்கச் செய்தது. எங்கும் பரிபூரண அமைதி. இரவு நிகழ்ச்சிகளுக்குப் பின் கிராமம் முழுவதும் அமைதியான உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்தது. சப்பாயேவ் முன் வாசலில் காத்திருந்தான். அவனுடைய குதிரைக்குச் சேணமெல்லாம் பூட்டப்பட்டது. பியோடாரும் தன்னுடைய குதிரைக்குச் சேணத்தை அணிவித்தான். சில வினாடியில், நேற்றுப் புறப்பட்டு வந்த வழியாகவே, மீண்டும் திரும்பிச் சென்றுகொண்டிருந்தனர்.

# 12

## முன்னேற்றம்

சப்பாயேவ் தலைமையில் இயங்கிய ராணுவம் பெலெப்பே நகரைத் தாண்டி வடக்கு நோக்கிச் செல்லுமாறு உத்தரவிடப்பட்டது. இதர படைப்பகுதியினர் அந்த நகரத்தைக் கைப்பற்ற அனுப்பப்பட்டனர். பெரும் பாலான தளபதிகள் பெரிய இடங்களைக் கைப்பற்றுவதுதான் பெருமையென்று எண்ணியிருந்தார்கள்; பிறகு அந்த நகரங்களைக் கைப்பற்றியதில் தாங்கள் செய்த தீரச் செயல்களை வானளாவப் புகழ்ந்து திரிவார்கள்.

இந்த உள்நாட்டுச் சுதந்திரப் போரில் எதிரியின் ஆள் பலத்தைக் குறைப்பது மட்டும் முதல் நோக்கமாக இருந்ததில்லை—எதிரியின் முக்கிய இலக்குகளையும், கேந்திர நகரங்களையும் கவர்ந்துகொள்ளுவதே முக்கிய நோக்கமாகக் கருதப்பட்டது. ராணுவ சவுகரியங்களுக்காக மட்டுமின்றி அரசியல் இயக்க வளர்ச்சிக்கும் இது முக்கியமாகக் கருதப்பட்டது. ஒவ்வொரு பெரிய நகரும், அரசியல் இயக்க வேலைகளின் மைய நிலையமாக, மூல ஸ்தானமாக, அடிப்படை நிறுவனமாக அமைந்து, சுற்றுப்புறங்களுக்கும் அவ்வலுவல்களைப் பரப்ப உதவி செய்தது. அந்த நகரங்களை வெள்ளைப் படையினர் கைப்பற்றினாலும், செஞ்சேனையர் மீட்டுக்கொண்டாலும் அந்தச் செயல், அரசியல் இயக்க வேலைகளையும் பாதித்தது. எனவே இந்த உள்நாட்டுச் சுதந்திரப் போரில் தத்தமது அரசியற் கொள்கைகளை முடிந்த மட்டும் எளிதில் மக்களிடம் புகுத்துவதும், பரப்புவதும் முக்கிய சக்தியாக இயங்கியது.



பெலெப்பே ஒரு முக்கிய நகரமில்லை. என்றாலும் சில குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளின் உறைவிடமாயிருந்தது. சப்பாயேவ் ராணுவத்தின் வடக்குப் பகுதியினர், தாக்குதலுக்குக் குறிப்பிடப்பட்டிருந்த நேரத்தில், இதர ராணுவப் பகுதிகளுடன் நகருக்குள் எளிதில் புகுந்துவிட்டனர். ஆனால் நகருக்குள் முதலில் புகுந்தது எந்த டிவிசன், யார் தீவிரமாகத் தாக்கியது, யார் திறமையும் துணிவும் மிகுதியாகக் காட்டியது என்பதைப்பற்றியெல்லாம் உரத்த கூச்சலும், விவாதமும், எதிர்ப்பும் ஏற்பட்டன. ஒரு குறிப்பிட்ட கேந்திரத்தை ஒரே சமயத்தில் இரு ராணுவப் பகுதிகள் பிடித்தால் இது போலப் பல விவாதங்கள் ஏற்படத்தான் செய்யும்; அவற்றிற்கு ஒரு முடிவும் ஏற்படமாட்டாது. சப்பாயேவ் இந்த மாதிரிச் சில்லரைத் தகராறுகளில் பங்கெடுத்துக்கொள்ளவில்லை. பொடாபோவிடமே இந்தப் பொறுப்பை விட்டுவிட்டான். அவன் தனக்கே புரிய ராஜீய பாணியில் பேசி, சமத்காரமாக விவாதம் புரிந்தான்.

பிறகு ராணுவத்தினர் வடபுறமாக ஊஷென் நதியைத் தாண்டிக் காத்திருந்தனர். நதிக்கு இப்புறத்தில் செஞ்சேனையினரும், எதிர்ப் புறத்தில் வெள்ளைப் படையினரும் இருந்தனர். இம்மாதிரி எத்தனையோ நாட்கள் கடந்தன. எல்லாப் படைகளும் போதிய ஓய்வெடுத்துக் கொண்ட பின்னர் மறு தாக்குதலுக்குத் தயாரானார்கள். ஊஷென் நதி தீரத்தில் அனாவசியமாகப் பல நாட்கள் தங்கியிருந்ததைச் சப்பாயேவ் பலமாகக் கண்டித்தான், இது மாபாதகச் செயல், மட்டரகமான போக்கு என்று சபித்தான், உருப்படாத திட்டம் என்று தன் அதிருப்தியைப் புலப்படுத்தினான். உரக்கக் கத்தினான்.

“ஏன் இந்த ஓய்வு? போர்முனையில் ஓய்வெடுக்க எந்த முட்டாள்தான் முயலுவான்? யாருக்கு ஓய்வு தேவை? ஒரு வேளை ராணுவ உத்தியோகஸ்தர்களுக்கு ஓய்வு தேவையாயிருக்கலாம், இரத்தம் துடிக்கப் போராடும்

வீரர்களுக்கல்ல" என்று கர்ஜித்தான். செஞ்சேனை வீரர்களின் வெகு துரிதமான, வெற்றி முன்னேற்றத்தைத் தடைப்படுத்தத் திட்டப்பட்டுள்ள சதித் திட்டம் இது என்று கருதினன். உண்மையில், ஒரு குறிப்பிட்ட துரித கதியில் முன்னேறிச் செல்லவும் இயலவில்லை. பல தங்குதல்களாலும், மூச்சுவிடும் ஓய்வுகளாலும், புனரமைப்பு வேலைகளாலும் ஒரு நாளைக்குச் சில கல் தொலையே சராசரியாகக் கடந்து செல்ல முடிந்தது. இந்த ஓய்வுப் பொழுதை யெல்லாம் எண்ணி எண்ணிக் கணக்கிட்டுச் சப்பாயேவிடம் சொல்லவும் ஆட்கள் இருந்தார்கள். இதைக் கேட்கக் கேட்கச் சப்பாயேவ் பொங்கி யெழுந்தான்.

தன் கைகளை மேசையில் ஓங்கி அறைந்தபடி பேசினன். "நான் ஒன்றும் களைத்துப் போகவில்லை. நான் ஓய்வு வேண்டுமென்று கேட்டால், அப்பொழுது கொடுக்கலாம். ஆனல் இப்பொழுது நாம் துரிதமாக முன்னேறிச் செல்ல வேண்டும் நமக்குப் பயந்து எதிரிகள் புறமுதுகிட்டு ஓடும்பொழுது நாமும் துரத்திச் சென்று அவனது வாலைப் பற்றி முறுக்க வேண்டுமே தவிர, நதிக் கரையில் ஓய்வெடுத்து உல்லாசப் பொழுது போக்கக் கூடாது."

"அது சரி. வாஸிலி இவானேவிச். நீங்கள் உங்களுடைய படைப்பகுதியைப்பற்றி மட்டுமே கருதிக்கொண்டு பேசுகிறீர்கள். நல்லா யிருக்கு உங்கள் பேச்சு! மற்ற படைப் பகுதிகளைப்பற்றி மறந்துவிட்டீர்கள். பலரை உற்சாகப்படுத்தி, ஊக்கம் தந்து, புதுப்பிக்க வேண்டியிருக்கிறது, புதுப் படையினரை நுழைக்க வேண்டி யிருக்கிறது. இது போல ஏராளமான வேலைகளைப் போர் முனையிலும் செய்ய வேண்டும். உங்களுடைய படையைக் கொண்டே எல்லாவற்றையும் சாதித்துவிட முடியுமானல் நீங்கள் உடனே புறப்படலாம்" என்று கூடியிருந்தவர்கள் பேசினர்கள்.



இதைக் கேட்ட சப்பாயேவின் கண்கள் அனல் சொரிந்தன. "ஓ என் படைகளை மட்டும் கொண்டு சாதிக்க முடியாது என்ற நினைப்பா? மற்ற படைகளால் எங்களுக்கு என்ன உதவி இதுவரை கிடைத்திருக்கிறது. என்னவோ ரொம்ப உதவி செய்துவிட்டதுபோல் அல்லவா பேசுகிறீர்கள். அப்படி உதவினலும் உருப்பட்டுத்தான் போகும். போங்க சரி சரி; என்னுடைய ராணுவத்தைக் கூட்டிக்கொண்டு நான் ஊபாப் பகுதிக்குப் போகிறேன். மற்றவர்கள் யாரும் உதவி செய்து, தலையிட வேண்டாம்....உங்கள் மூக்கை நுழைக்க வேண்டாம்."

"தங்களுடைய மூக்கை நுழைக்காமலிருக்கப்போவது யார்?"

"இல்லை. யாரும் மூக்கை நுழைக்க வேண்டாம். நானே எல்லாவற்றையும் பார்த்துக்கொள்ளுவேன்" என்றபடி தன் குரலைத் தாழ்த்திக்கொண்டான் சப்பாயேவ். தான் அளவுக்கு மீறி ஆத்திர வயப்பட்டுப் பேசிவிட்டதை உணர்ந்தான்.

இந்த மாதிரியான சிறிய, பெரிய வாக்கு வாதங்களும், மனத்தாங்கல்களும் ஏற்படுவது சகஜம். ஊபாவிற்குச் சென்ற பாதை முழுவதும், சப்பாயேவின் படை வெற்றி மேல் வெற்றி பெற்றாலும், போர் முறையை நடத்திச் சென்ற போக்கு அவனுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. தன்னுடைய திட்டங்களுக்கும், நோக்கத்திற்கும் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை யென்றும், தன்னுடைய ஆலோசனைகளையும், போர்முறையையும் அக்கரையுடன் கேட்டுக்கொள்ளவில்லை யென்றும், தன்னுடைய அபிப்பிராயத்தை மதிக்கவில்லை யென்றும் சப்பாயேவ் மிகுந்த மனக்குறையும் அதிருப்தியும் கொண்டான்.

"தேசப் படத்தை வைத்துக்கொண்டு எதைத்தான் உற்றுப் பார்ப்பார்களோ? எதைத்தான் கண்டுபிடிப்பார்களோ? தெரியவில்லை! நாம் சண்டை போடுவது தரை

யில், தேசப் படத்தில் அல்ல. தரையில் சண்டை போடுகிறோம் என்பதை நினைவில் கொள்ளட்டும்" என்று ஆத்திரம் மிகக் கத்துவான். "நாமே இங்கு எல்லாவற்றையும் நேரில் பார்த்து நாமே தெரிந்துகொள்ளுகிறோம். நமக்குச் சுற்றுப்புறத்தைப்பற்றியெல்லாம் எதுவும் சொல்லித்தர வேண்டியதில்லை. நமக்கு உதவி மட்டும் செய்தால் போதுமானது" என்று உரக்கப் பேசினான்.

"வாஸிலி இவானோவிச்! திரும்பவும் நீங்கள் தவறுதலாகவே உணர்ந்து பேசுகிறீர்கள். நமது எல்லாச் செயல்களும் முறையாக இணைக்கப்பட்டு, ஒருசேரச் செலுத்தப்பட வேண்டும்!" என்று சமாதானப்படுத்த முயன்றான் பியோடார்.

"அப்படியானால் உடனே எல்லாப் படைகளையும் இணைக்க வேண்டியதுதானே! யார் உங்களைத் தடுப்பது? எல்லாவற்றிலும் தலையிட்டுத் தடை செய்ய வேண்டாமென்றுதான் நான் கேட்டுக்கொள்ளுகிறேன். நாம் ஓட்டமும் நடையுமாக முன்னேற வேண்டியதிருக்க ஊஷென் நதிக் கரையில் விடுமுறைபோல உல்லாசப் பொழுது போக்கிக்கொண்டிருக்கிறோம். இதுதான் போரிடும் லட்சணம், இல்லையா," என்றான் ஆத்திரத்துடன் சப்பாயேவ்.

பியோடார் இடை மறித்தான். "விடுமுறையா! என்ன சொல்லுகிறோம் என்பதை உணராமலே நீ பேசுகிறாய்? அதி விரைவாக அவசரப்பட்டு முன்னேறி நீயே பல தொல்லைகளுக்கு ஆளாகியிருக்கிறாய். அதுவும் தவிர நமது அனுபவமே இதைத் தெளிவாக்கியிருக்கிறது. என்னவென்றால்—என்னவென்றால் பேசாமல் உட்கார்ந்து காத்துக் கிடக்கவேண்டும். அப்படித்தானே!" என்று சப்பாயேவ் கடுகடுத்தான். "நதிப் படுகை முழுவதும் சந்தோஷமாக இருப்போம்...ம்...அதுவும் கோல்சாக் தப்பிப் பிழைத்து ஓடும்பொழுது நாம் தயாள குணத்தோடு தாளம் போட்டு மகிழ்வோம். சரி...சரி....உங்கள் விருப்பப்படியே



நீங்கள் போரிட்டுக்கொள்ளலாம். ஆனால் எனக்கு இந்தச் சோம்பேறி முறை பழக்கமில்லை. இந்தச் சமயத்தில் ஒரு படைப் பகுதியைக் கலைத்து அனுப்பப் போகிறார்களே... இதுதானா அதற்குச் சமயம் நான் கேட்கிறேன். இதுதானா தகுந்த சமயம்?" என்று துடித்துக் கேட்டான். "தங்களுக்கு ஓய்வு தருமாறு அந்த வீரர்களா வந்து கேட்டார்கள். அல்லது புகார் செய்தார்களா? எல்லாம் நாசமாய்ப் போகட்டும். நான் எல்லாவற்றையும் கை கழுவிவிட்டு, ஒரு சிறு படைப் பகுதிக்குச் சென்றுவிடப் போகிறேன். அங்கே நாமே திட்டமிட்டு ஏதாவது உருப்படியாகச் செய்யலாம். ஆனால் இங்கே..." என்று உணர்ச்சி பொங்க விம்மினான்.

"அப்படியானால் ஓய்வு தருவது கூடாதென்பது உன் கட்சி; இல்லையா?" என்று சப்பாயேவைப் புரியவைக்க மீண்டும் முனைந்தான் பியோடார். "நீ வேடிக்கையான ஆசாமிப்பா. இதற்கும் போதிய காரணங்கள் உண்டு என்பதை நீ உணர்ந்திருக்க வேண்டும். எதிரிப் படைகள் தப்பியோடும் இந்தச் சமயத்தில் காரணமின்றிப் படைகளைத் திருத்தியமைக்க மாட்டார்கள். ஒரு வேளை அந்த வீரர்கள் அனைவரும் சோர்ந்து நலிந்து போயிருக்கக் கூடும்."

"பூ...பூ" என்று சப்பாயேவ் தனது வெறுப்பைக் காட்டிப் பேசத் துவங்கினான். "யாரும் சோர்ந்து போகவில்லை. நேற்று ஒரு செஞ்சேனை வீரனைப் பக்கத்துக் காட்டுக்குள் சந்தித்தேன். அவன் ஒல்லியான உருவினன். உடலெல்லாம் பலமான கட்டுப் போட்டுக்கொண்டு தனியாக நொண்டி நடந்துவந்தான். 'என்ன இது....? எங்கே'ப்பா புறப்பட்டாய்' என்று அவனைக் கேட்டேன். 'ஏன்...என்னுடைய படைப் பகுதிக்குத்தான்?" 'ஏனப்பா' நொண்டி நடக்கிறாய்?' 'என் காலில் குண்டு பாய்ந்துவிட்டது.' 'காயத்தை ஆறவிட்டால் என்ன??' 'அதற்குப் போதிய நேரமில்லை தோழரே! ஓய்வுக்கே நேரமில்லை.

நாள்முழுவதும் நாம் போரிட வேண்டும். எதிரிகள் அப்படி ஒரு வேளை என்னைக் கொன்றுவிட்டால், பிறகு சவக்குழியில் அமைதியாக ஓய்வெடுத்துக்கொள்வேன். அங்கு எனக்கு வேறு வேலையேதும் இருக்காது—என்னுடைய காயம் ஆறுவதற்கும் ஓய்வு இருக்கும்' என்று அலட்சியமாகச் சிரித்தபடி அந்த இளைஞன் பதில்சொன்னான். அந்த இளைஞன் சரியான வீரன், தெளிந்த வீரன் என்ற எண்ணம் என் நெஞ்சில் அவனைப் பார்த்ததும் நிலையாகப் பதிந்துவிட்டது. உடனே என் கையில் கட்டியிருந்த கடிகாரத்தை எடுத்து அவனுக்கு வழங்கினேன். 'இந்தா... இதை அணிந்துகொண்டு, சப்பாயேவை நினைத்துக்கொள்' என்று சொன்னேன். முதலில் என்னை அடையாளம் தெரிந்துகொள்ள அவனால் முடியவில்லை. கடிகாரத்தை வாங்கிக்கொள்ளத் தயங்கினான். கடைசியில் ஏற்றுக்கொண்டான். நானும் என் வழியில் புறப்பட்டேன். நான் திரும்பிப் பார்த்தேன். அவன் அந்த இடத்திலேயே நின்று இன்னும் என்னைப் பார்த்துக்கொண்டிருந்தான். அவனை களைத்துப் போனவன் என்கிறாய் நீ...அத்தகைய களைத்துப் போனவர்கள் மட்டும் என்னிடம் இருந்தால், கோல்சாக்கியத் துருப்புகளை படுநாசம் செய்துவிடுவேன்.''

''ஆம், அது மாதிரித் துணிவுகொண்டவர்கள் பலர் இருக்கிறார்கள்'' என்று பியோடாரும் ஒப்புக்கொண்டான். ''அந்த மாதிரி ரொம்பப் பேர்கூட இருக்கலாம். என்றாலும் கூட அவர்களும் சோர்ந்துபோக நேருமே?''

ஆனால் சப்பாயேவை இக் கருத்திற்கு உடன்படச் செய்வது மிகவும் கடினம். சப்பாயேவால் மிகவும் மதிக்கப்படும் புரூன்ஷைப்பற்றி ஒப்பிட்டுப் பேசியும் பயனில்லை

''அது சரி...ஆனால் புரூன்ஷிற்குப் தெரியாமல் எந்த உத்தரவாவது படைகளுக்கு அனுப்பப்படுவதாகச் சொல்ல முடியுமா? முடியாது. தளபதிகள் மட்டும் அவற்றில் கையெழுத்திட்டுவிடுவதில்லை.''



''அவர்கள் மட்டும் கையெழுத்திடுவதாயிருந்தால்...'' என்று சப்பாயேவ் தாழ்ந்த குரலில் எதிர்ப் பிரச்னையொன்றைக் கிளப்பினான்.

''அது எப்படி நடக்க முடியும்?''

''ஏன்...இப்படியும் நடக்கலாம்—உத்தரவுகளை நாம் தெரிந்துகொள்ளும் முன்பு கோல்சாக் தெரிந்துகொள்கிறானே—அது எப்படி நடக்கிறதோ, அதைப்போல இதுவும் நடக்க முடியும்.''

''அடே...இந்தத் தகவல் உனக்கு எங்கிருந்து வந்தது'' என்று வியப்போடு கேட்டான் பியோடார். ''எப்பொழுதாவது ஓரிரு முறை நமக்கு வரவேண்டிய உத்தரவுகள் கோல்சாக்கின் கையில் சிக்கிவிடுவதைக்கொண்டு பொதுவான ஒரு முடிவிற்கு வரக் கூடாதுவாசிலி இவானோவிச்'' என்றான் நியாயப் பண்புடன்.

என்றாலும்கூடச் சப்பாயேவுடன் விவாதிப்பதில் பயனேதும் விளையாது. தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று தன் கருத்தையே சொல்லிக்கொண்டிருந்தான். அதிலும் ராணுவ அலுவலக ''உத்தியோகஸ்தர்களை''ப் பற்றிய விஷயத்தில் அவன் அபிப்பிராயத்தை மாற்றவே முடியாது. தன் வாழ்நாள் முழுவதும் அவர்கள்மீது அவநம்பிக்கையேகொண்டிருந்தான்.

ஒரு நாள் காலை, பியோடரும் சப்பாயேவும் டவ்லேகானுவோவிற்குக் காட்டுப் பாதையில் சென்றுகொண்டிருந்தார்கள். மலையின்மேலும் கீழும் ஏறியிறங்கினார்கள், வாய்க்கால்களையும், மலையூற்றுக்களையும், நீர்க் கசிவுகளையும் தாண்டினார்கள். பாதை அழகாகவும், அமைதியாகவும் இருந்தது. வசந்த கால விடியற்காலையின் இன்னிசையும், எழில் மணமும் எங்கும் நிறைந்திருந்தன. அந்தக் காட்டைக் கடந்து, பசியாலும் பிணியாலும் வருந்திப் போதிய உடைவசதிகூட இன்றிச் சோர்ந்திருந்த செஞ்சேனைப் படையை அடைந்தனர்.

செஞ்சேனைப் படைகள் ஊபா பிராந்தியத்தை நெருங்க நெருங்க, எதிரிப் படைகளின் தாக்குதலும் உக்கிரமாகிக் கொண்டே யிருந்தது. மலைப் பிளவுகளின் இசைவான எல்லா முடுக்குகளிலும் பதுங்கிக்கொண்டு வலுவான எதிர் தாக்குதலைச் செய்தனர். தங்களுடைய போக்குவரத்து வண்டிகளை உரிய சமயத்தில் முன்கூட்டியே கொணர்ந்து, போதிய பாதுகாப்பில் வைத்திருந்தனர். செஞ்சேனைக்கு எந்தவித போக்குவரத்து வசதியும், தேவைப் பொருளும் கிடைக்காது செய்ய முயன்றனர்.

முன்னேறிச் செல்வதென்பது நாளுக்கு நாள் கடினமாகிக்கொண்டே வந்தது. பெரிய சதிச்செயலொன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. கோல்சாக் தனக்கெனப் பல "கையாள்க் கூட்டத்தை" வைத்திருந்தான். குலாக்கியர் எனப்படும் பெரும் பண்ணையாளர்கள் தவிர தத்தாரியர்களும் அவனுக்கு உதவியாகச் சேர்ந்தனர். போல்ஷெவிக்குகள் என்போர் அவர்களுடைய அல்லாவையும், மசூதிகளையும் பறித்துக்கொள்ள வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன்தான் போரிடுகிறார்கள் என்று பொய் சொல்லி அவர்களை நம்பச்செய்துவிட்டான். தத்தாரியக் கிராமங்களுக்குள் செஞ்சேனை நுழைந்த பல சமயங்களில் அவர்கள்மீது வீட்டுச் சன்னல்கள் வழியாகக் குண்டுகள் வீசப்பட்ட சம்பவங்களும் நிறைய உண்டு. பணம் படைத்தவர்கள் வாழும் கிராமங்களில் மட்டுமின்றி, வறுமையால் பீடிக்கப்பட்ட கிராமங்களிலும் இத்தகைய குண்டு வீச்சுக்கள் நிகழ்ந்தன. இப்பொழுது சதியில் ஈடுபட்டவர்களும் பிடிபட்டனர். அவர்களை என்ன செய்வது? அது சூழ்நிலையையும் சந்தர்ப்பத்தையும் பொறுத்த விஷயம். போர்க்காலத்தில் எந்த நியாய சம்பிரதாயத்திற்காகவும் காத்திருக்க முடியாது. அந்த இடத்திலேயே பலர் சுட்டுப் பொசுக்கப்பட்டார்கள். பலர், செஞ்சேனையில் சேர்ந்திருந்த தத்தாரிய வீரர்களிடம் அனுப்பப்பட்டு, அவர்



களைக் கொண்டே விசாரிக்கப்பட்டனர். அந்தச் செஞ்சேனைத் தத்தாரியர்கள், தமது இனத்தவரிடம், தாங்கள் போரிடும் உயர்ந்த இலட்சியத்தையும் நோக்கத்தையும் விளக்கிச் சொன்னார்கள். அதைத் தொடர்ந்து செஞ்சேனையில் அவர்களில் பலர் மனம் விரும்பிச் சேர்ந்துகொண்ட சம்பவங்களும் உண்டு.

பெரும்பாலும் உளவறிய வருபவர்கள் பிடிபட்டனர்.

டவ்லேகானோவாவில், சில செஞ்சேனை வீரர்கள் பியோடாரிடம் வந்து, தாங்கள் தளவாட வண்டிக்குள் ஒளிந்திருந்த ஒரு பெண்ணைப் பிடித்து வந்திருப்பதாகத் தெரிவித்தார்கள். அவள் செஞ்சேனையினருடன் தன்னையும் ஊபாவுக்கு அருகில் கொண்டுசெல்லுமாறு கேட்டுக்கொண்டாள். தன்னுடைய தாயும், சகோதரியும் இதர உறவினர்களும் ஊபாவிலேயே இருப்பதாகத் தெரிவித்தாள் என்று சொன்னார்கள்.

"அவளை என்னிடம் கொண்டுவாருங்கள்" என்று உத்தரவிட்டான் பியோடார்.

அந்தப் பெண்ணும் உள்ளே கொணரப்பட்டாள். அவளுக்குப் பத்தொன்பது வயதிருக்கும். நொண்டியபடி நடந்து வந்தாள். சமீபத்தில்தான் படித்து முடித்ததாகத் தெரிவித்தாள்; மிகச் சாதாரணமாக எளிய உடையே அணிந்திருந்தாள். ஊபாவைப்பற்றி ஏராளமான விபரங்களைச் சொல்லி, விரைவில் அங்கு கூட்டிச் செல்லுமாறு கேட்டுக்கொண்டாள். அவளிடம் சந்தேகம் கொள்ளுவதற்கு ஏதும் தோன்றவில்லை; சந்தேகம் கொள்ளுவதற்குப் போதிய காரணங்களோ, தடயங்களோ புலப்படவிட்டாலும்கூட, பியோடாருக்கு ஏதோ உள்ளூர ஐயப்பாடு ஏற்பட்டுக்கொண்டேயிருந்தது. ஏதோ தவறு இருக்கிறது என்பதை அவன் நெஞ்சம் உறுத்திக்கொண்டேயிருந்தது. "அப்படியே நான் தெரிந்துகொள்ள முடியாமல் போய்விட்டாலும் பெரிய நஷ்டமேதும் வந்துவிடாது—விசாரணை

முடிவில் அவளை விடுவித்து அனுப்பிவிடுவோம்" என்ற எண்ணத்துடன் அவளை மீண்டும் விசாரிக்கத் தொடங்கினான் பியோடார்.

சற்று நேரம் பற்பல விஷயங்களை அவளுடன் பேசி விட்டுத் திடீரென்று வளைத்துக்கொண்டான் :

"ரொம்ப நாளைக்கு முன்பா காயமடைந்தாய்?"

"ரொம்ப நாளைக்கு முன்பா...அதே கிடையாதே. நான் காயம் அடைந்தேன் என்ற சந்தேகம் ஏன் ஏற்பட்டது?"

"ஏன் என்றால்...நீதான் நொண்டி நடக்கிறாயே!" என்று சொன்னபடி அவள் கண்களை முறைத்துப்பார்த்தான்.

ராணுவ அரசியல் இயக்கத் தலைவனான, தோழர் ட்ராலின், பியோடாருக்குப் பக்கத்தில் அமர்ந்தபடியே இந்த விசாரணையைக் கவனித்துக்கொண்டிருந்தான்.

அந்தப் பெண் குழறிய வண்ணம் "ஆம்...காயம் தான்...என் காலில் காலில்...காயம்...ஆனால்...ம்...அது ரொம்ப நாளைக்கு முன்பு...ம்...ரொம்ப நாளைக்கு முந்தி..."

ஒரு விநாடியும் தாமதிக்காது தொடர்ந்து பல கேள்விகளை மடக்கிக்கேட்டு அவளைத் திகிலடையச்செய்யப் பியோடார் நினைத்தான். நினைத்துப் பார்த்துப் பதில் சொல்ல முடியாதபடி அடுக்கடுக்காய்க் கேள்விகளைக் கேட்டான் :

"எங்கு காயமடைந்தாய்? எப்பொழுது?"

"நான் தலைமைக் காரியாலயத்திற்கு ஒரு தாளை எடுத்துச் சென்றுகொண்டிருந்தேன்...ம்...அப்பொழுது..."

"அப்பொழுது சண்டை மிகச் சமீபத்தில் நடந்துகொண்டிருந்ததா?"

"சமீபத்தில்"

"நீ அவர்களுடைய உளவுப் படையில் வேலை செய்தாயாக்கும்."

"இல்லை...ம்....இல்லை...நான் ஒரு டைபிஸ்டாக இருந்தேன்."



"நீ பொய் சொல்லுகிறாய்" என்று கடுமையாகக் கத்திவிட்டான். "இதோ பார்—எனக்கு எல்லாம் தெரியும். புரிகிறதா? எல்லாம் தெரியும். உன்னைப்பற்றிய எல்லாச் சமாரத்தையும் எங்கள் ஆட்கள் தெரிவித்துவிட்டார்கள். இந்த நிமிஷமே உன்னுடைய அடையாளச் சீட்டை என்னிடம் தந்துவிடு. ஒரு மெல்லிசுக் கடுதாசியிலே எழுதியிருக்குமே. தெரியும்'ல அதைத்தான்."

"எந்த மாதிரிக் கடுதாசியிலே?"

"நல்ல மெல்லிசுத் தாள்—கண்ணாடிபோலே கடுதாசியிலே—தெரிஞ்சதா...ம்.. உடனே எடு வெளியே. உடனே எடு...அந்தக் கடுதாசி உனக்குத்தான் எழுதப்பட்டதென்பது எங்கள் உளவாளிகட்குத் தெரியும். உடனே கொடுத்துவிடு!"

பியோடாரின் உறுத்த விழிகள் அவளைத் துளைத்தன; இந்தப் பார்வையால் ஏற்பட்ட விளைவைக் கண்டு அவனே வியந்துவிட்டான். அந்தப் பெண்ணுக்கு ஒரே குழப்பம். அதிலும் கடுதாசியைப்பற்றிச் சொன்னதும் தடுமாறிப் போய்விட்டாள். உளவாளிகளுக்கெல்லாம் அந்த மாதிரி மிக மெல்லிய கடுதாசிகளில்தான் ரகசிய அடையாளச் சீட்டைத் தருவார்கள். அந்தத் தாளை ஆடைகளுக்குள்ளோ, செருப்பின் குதிப்புறத்திலோ, காதுக்கு மறைவிலோ—கண்ணுக்குத் தெரியாமல் ஒளித்து வைத்துக்கொள்ளுவார்கள். இந்த ரகசியம் எல்லோருக்கும் தெரிந்ததுதான். ஆனால் பியோடார் போட்ட புதிர்க் கேள்விகளால்தான் அந்தப் பெண் தடுமாறிவிட்டாள்.

உடனே ஒரு சிகரெட் டப்பாவை வெளியில் எடுத்து, மூன்று முறை திருகினாள். அந்தக் குழாயோடு பொருந்துமாறு சுருட்டி வைக்கப்பட்டிருந்த சிறு கடுதாசியை வெளியில் எடுத்தாள். அந்தத் தாளில் அவளுடைய உண்மைப் பெயரும், பட்டப்பெயரும், குடும்பப் பெயரும் எழுதப்பட்டிருந்தன.

இது மிக வெற்றியுடன் முடிந்தது. ரெஜிமெண்டுக் காரியாலயத்திலும், ராணுவத் தலைமைக் காரியாலயத்திலும் அதிகாரபூர்வமாக அவள் விசாரிக்கப்பட்டாள். அந்தச் சமயம் அங்கிருந்த தோழர் புருன்ஷும் அவளைப் பல கேள்விகள் கேட்டார். அவள் பல அரிய செய்திகளைச் சொன்னாள். பல செஞ்சேனை வீரர்களே, வெள்ளைப் படையினர்க்கு உளவாளிகளாக வேலை செய்து வரும் விபரீதத் தகவலை வெளியிட்டாள். இந்த மாதிரி 'இரட்டை வேஷதாரிகளை' வெளியேற்ற அவளுடைய சாட்சியம் உதவியது. இது தவிரப் பல முக்கிய தகவல்களையும் வெளியிட்டாள்.

இந்த மாதிரி ஏராள நிகழ்ச்சிகள் உண்டு. ஆனால் எல்லாமே வெற்றிகரமாகவும் அதிர்ஷ்டவசமாகவும் முடிந்து விடுவதில்லை. ஒரு சமயம் கர்னல் ஒருவரின் மனைவியே சதிக் குற்றம் சாட்டப்பட்டாள். வேறு பாதுகாப்பான இடம் இன்மையால் குளிக்கும் அறையிலேயே அவள் அடைத்து வைக்கப்பட்டாள். சாதுரியமான ஒரு கம்யூனிஸ்டு வீரர்—வெள்ளைப் படை உத்தியோகஸ்தர் போல அவளிடம் பதுங்கிச் சென்று பேசியதும் அந்தப் பேதைப் பெண் பல ரகசியச் செய்திகளைத் தன்னையும் அறியாமல் வெளியிட்டு அகப்பட்டுக்கொண்டாள்.

சிஷ்மாவை நோக்கிச் செஞ்சேனைப் படைகள் முன்னேறிக்கொண்டிருந்தன. சிஷ்மா மிக முக்கிய நகரம். சமாரா—ஜ்லாடவ்ஸ்ட், வோல்கா—புகுல்மா என்ற இரு பெரும் ரயில்ப் பாதைகள் சந்திக்கும் இடம். இந்தக் கேந்திர இலக்கைப் பிடிக்கச் செஞ்சேனையினர் பல உயிர்களைப் பலி தர வேண்டுமென்பது தெளிவாகப் புலப்பட்டது. நகருக்குப் பல கல் தொலைவுக்கு வெளியே ஆழமான அகழிகளும், அரண்களும், பதுக்கல் கிடங்குகளும் வெட்டப்பட்டன. பள்ளத் தாக்கிலும், மலைக் குடைவுகளிலும் ரகசிய வழிகள் அமைக்கப்பட்டன. மரக் கிளைகள் அனைத்தும்



வெட்டப்பட்டுக் காலாட்படைகளுக்குப் பதுக்கிடமாகக் குவிக்கப்பட்டன. அந்தப் பதுக்கல் கிடங்குகளைச் சுற்றிப் பாதுகாப்பு வேலிகள் போடப்பட்டன. புகுருஸ்லானையும், பெலெப்பேயையும் கைப்பற்று முன் இதுபோன்ற எவ்விதத் தீவிரத் தாக்குதல் முயற்சிகளைப் பார்க்க முடியவில்லை. இது போன்ற பெரிய பதுக்கற் கிடங்குகளைச் செஞ்சேனையினர் இதுவரை சந்தித்துப் போரிட்டதேயில்லை. எதிரிப் படைகளின் ஏற்பாடு அவ்வளவிற்கு வலுவாய் அமைந்திருந்தது. செஞ்சேனைப் படையை நிர்மூலமாக்க எல்லாவகை ஏற்பாடுகளையும் செய்து தயாராயிருந்தனர் என்பது தெளிவாய்ப் புலப்பட்டது

சிஷ்மாவை நெருங்கி முன்னணியில் வந்துகொண்டிருந்தது சிஷோவின் ராணுவம்—அதைச் சேர்ந்த ஸ்டெபான் ராஷின், தொமாஸ்கின், புகாசோவ் முதலிய துணைப்படைகள் முன்னணியில் நெருங்கி வந்தன. ஊரை யடுத்து நெருங்க நெருங்கத் தொடர்ந்து போர் மூண்டது. சரமாரியாக வெடி முழக்கம் எழுந்தது. சிஷ்மாவை நெருங்கியவுடன் வலுத் தாக்குதல் பெருகிற்று. செஞ்சேனையினரின் தாக்குதலுக்கு நிகராக எதிரியின் தாக்குதலும் வளர்ந்தது.

என்றாலும்கூட ஒரு வகையான பயங்கர உணர்ச்சி எதிரிப் படையினரிடம் ஏற்பட்டது. வெற்றியடைவதற்குத் தேவையான "வெற்றி பெற முடியும்" என்ற உத்வேகமும், நம்பிக்கையும் அவர்களுடைய எதிர்த் தாக்குதலின் வலிமையைக் குன்றச் செய்தன. ஏதோ பெயருக்குத் தாக்குதலைச் சமாளிப்பதற்காகப் போரிடுவதாகத் தோன்றியதே தவிர, வெற்றி பெறும் எண்ணத்தோடு எதிரிப்படைகள் போரிடுவதாகப் புலனாகவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

இதை எப்பொழுதாவது கவனித்திருக்கிறீர்களா? தெருக் கோடியில் ஒரு சோனி நாய் கம்பீரமாகப் பவனி வந்துகொண்டிருக்கும். அந்தச் சமயத்தில் அதைவிடப்

பெரிய இன்னொரு நாய் ஓடி வந்து, வலிமையோடும், தெம்போடும், சோனி நாயின்மீது பாயும். இதைக் கண்டு பயந்து ஓடும் அந்தச் சோனி நாயால் எதிர்த்துச் சண்டைபோட முடியாது—ஆனால் பெரிய நாயின் பிடியில் அகப்படாமல் ஓடிவிடப் பார்க்கும். அந்தச் சமயத்தில் பெரிய நாய் நெருங்கிவிட்டர்ல் தப்பித்துக்கொள்ளுவதற்காகத் தனது வலிமையெல்லாம் கொண்டு உறுமும், கடிக்கும், பாய்ந்து கூடக் கடிக்கும். ஆனாலும் பெரிய நாயுடன் சண்டை போட்டு வென்றுவிட அதால் முடியாதுபோகும். உறுமிக் கொண்டே ஓடிப் பதுங்கிவிடும். அந்தச் சின்னச் சோனி நாய், பெரிய நாயுடன் சண்டை போட்டுப் பதுங்கியோடிய கதைபோலத்தான் கோல்சாக்கியப் படைகளும், செஞ்சேனைக்கெதிராக, சிஷ்மா நகருக்கு வெளிப்புறத்தில் போர் நடத்தினார்கள். ஏதோ பெயரளவில்தான் எதிரிகள் தாக்கினார்கள். ஆனால் உண்மையில், தங்களது பிரதம ராணுவமும், அதைச் சேர்ந்த எல்லாத் தளவாடங்களும் பின்வாங்கிச் செல்லுவதற்காக இழுக்கடித்துப் போரிட்டார்கள். படையின் கடைசிப் பகுதி மட்டுமே போர் புரிவதுபோலத் தோன்றியது. ஆனால் அதுவல்ல உண்மையான நிலை.

எதிரியின் பிரதம ராணுவப் பகுதியே தாக்குதலில் ஈடுபட்டிருந்தது. ஆனால் புகுருஸ்லான் போரில் இழந்த தமது உற்சாகத்தையும் ஊக்கத்தையும் எவ்வளவுதான் முயன்று பார்த்தாலும் அவர்களால் இப்பொழுது திரும்பப் பெற முடியவில்லை.

தோல்வி மனப்பான்மை கோல்சாக்கியப் படையினரிடம் தீ போல் பரவிக்கொண்டிருந்தது, அதைத் தடுத்து நிறுத்தவும் கூடவில்லை. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தவிர்க்க முடியாத இந்த நிகழ்ச்சியைக் கட்டுப்படுத்த முடியவில்லை. பொதுவாக எல்லா வெள்ளைப் படையினரது சீரழிவுக்குக் காரணமான காரணங்கள் தவிர, கோல்சாக்கின் ராணுவத்தின் அழிவுக்குப் பல விசேடக் காரணங்



களும் தோன்றிச் சீரழிவை மிகுதிப்படுத்தின. கோல்சாக் தன்னுடைய வீரர்களின் தரத்தை மதிப்பிடாது, எண்ணிக்கையும் மட்டும் கணக்கிட்டு, ஏராளமான வீரர்களைத் திரட்டி வைத்திருந்தான். அடுத்தபடியாக இந்த வீரர்கள் அனைவரையும் ஒருசேரத் திரட்டி இயக்கும் பொறுப்பை விசுவாசமுள்ள ஒருசில ராணுவத் தலைவர்களிடமே ஒப்புவிக்கவேண்டியிருந்தது. மேலும் ராணுவ நிலையைத் தம் விருப்பம்போலக் கட்டுப்படுத்தத் தேவையான அதிகாரத்தையும் அவர்களுக்கு வழங்கும்படி நேர்ந்தது. படை வீரர்களின் பலவகைப் போராட்ட போக்கும், ராணுவத் தலைவர்களின் கொடுமையும் சேர்ந்து, கோல்சாக்கியத் துருப்புகளின் பேரழிவை மிக அருகில் கொணர்ந்துவிட்டன.

ஒரு போராட்டத்திற்குப் பின் எதிரிகளின் ரகசியத் தஸ்தாவேஜுகள் கிளிக்கோவின் கையில் சிக்கிக்கொண்டன. அவற்றில் கோல்சாக்கியத் தலைமைத் தளபதியிடமிருந்து வந்த தந்திகள், உத்தரவுகள், விசாரணைகள், அறிவிப்புகள் முதலியன அடங்கியிருந்தன. உதாரணமாக "போதுமான பயிற்சி பெறாத எல்லாத் துருப்புகளையும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் சேர்த்து ரயில் மூலம் அனுப்பிவிட வேண்டும். தவறாது, அவர்களோடு வருவதற்கு **ஒரு ராணுவ உத்தியோகஸ்தரையும்** நியமிக்க வேண்டும்." கொட்டை எழுத்தில் போட்டுள்ள இந்த வார்த்தைகள் கோல்சாக்கிய வீரர்களிடையே அவர்களுக்கே நம்பிக்கையின்மையைக் காட்டுகிறது.

ஆனால் கோல்சாக்கின் நிலையும் மிக மோசமாகவும் பரிதாபமாகவும் மாறிக்கொண்டிருந்தது. குறிப்பிட்ட ஒரு சில ராணுவத் தலைவர்களை மட்டும் நம்பியிருப்பது உசிதமில்லை. எந்த நிமிடமும் செஞ்சேனையினரிடம் எல்லாவற்றையும் காட்டிக்கொடுத்துவிடுவார்கள் என்ற பயம் எழுந்துவிட்டது. அதற்கும் ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம். "செஞ்சேனையைச் சேர்ந்த பத்துக் குதிரை வீரர்

கள் எதிரியின் போரெல்லைக் கோட்டை நோக்கித் துணிந்து பாய்ந்தார்கள். அந்த எல்லைக் கோட்டில் எதிரிப் படையைச் சேர்ந்த நூற்றிருபது வீரர்களும், இரு ராணுவ உத்தியோகஸ்தர்களும் ஒரு சுழல் துப்பாக்கியுடன் நின்றார்கள். குதிரை வீரர்களைக் கைது செய்வதோ அல்லது ஒரே குண்டு வீச்சில் தொலைத்துவிடுவதோ இதில் எதுவும் அவர்களுக்கு மிக எளிது; ஆனால் நடந்ததென்னவோ இதுதான்! ராணுவ உத்தியோகஸ்தர்கள் தங்களுடைய வீரர்களைப் பார்த்துக் கத்தினார்கள். "ஒருவரும் சுட்டு விடாதீர்கள்" என்று கூறி, செஞ்சேனைக் குதிரைப் படையினரிடம் ஓடினார்கள். அத்தனை பேரும் செஞ்சேனையினரோடு சேர்ந்துவிடப் போவதாகத் தெரிவித்துவிட்டார்கள். வெள்ளைப் படை ராணுவத் தலைவர்களுக்கு எல்லாவிதக் கொடுமையும் செய்யச் செஞ்சேனையர் தயங்குவதில்லை என்று கேள்விப்பட்டிருந்தும் அவர்கள் மனம் துணிந்து செஞ்சேனையில் சேர விரும்பினார்கள். அந்த இரண்டு உத்தியோகஸ்தர்களும் இது கேட்டு அஞ்சவில்லை. தம் வீரர்களோடு ஒரு நொடியில் செஞ்சேனையினரோடு சேர்ந்து கொண்டார்கள்; இவர்களுக்காகத் தங்களது செஞ்சேனைத் தளபதிகளிடம் அந்தக் குதிரை வீரர்கள் மிகவும் பரிந்து பேசினார்கள்.

அந்த இரு ராணுவ உத்தியோகஸ்தர்களுள் ஒருவன் அலுவலக மேலாளாக இருந்தவன், இன்னொருவன் பள்ளிக்கூட ஆசிரியன். இருவரும் கோல்சாக்கிய ராணுவத்தில் நிலவிய 'கட்டுப்பாடுகளை' விவரித்தார்கள். தமது துணைப் படை வீரர்களுடன் பேசும்பொழுது சம்பிரதாயங்களில் கொஞ்சம் விலகினாலும்கூட ராணுவ உத்தியோகஸ்தர்கள் ஈவிரக்கமின்றிச் சுடப்பட்டனர். ராணுவ வீரர்களிடையே உயர்வு தாழ்வு மனப்பான்மையைச் சார்ந்த மரியாதை தரும் பழக்கமும், சாதிய வெறியும் கொடுமையாகப் பின்பற்றப்பட்டன. தங்களுடைய வீரர்களிடமே தாள



முடியாத அவநம்பிக்கையும், பயமும் கோல்சாக்கியப் படையின் மேலிடத்தவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது. இதனால் ஒரு ராணுவத் தளபதியும் சில வீரர்களும் விளையாட்டுக்காகவாவது காரசாரமாகப் பேசிக்கொண்டிருந்தால் அதையே பெரிய கிளர்ச்சிக்குச் சதி செய்யப்படுகிறது என்று கொடுந் தண்டனை விதித்தார்கள். கீழ்த்தர ராணுவத் தலைவர்களிடையே ஒரு வகையான மனக்கசப்பும் கொந்தளிப்பும் வளர்ந்துகொண்டிருந்தது. அவர்களுக்கும் பிரதம தளபதிகளுக்குமிடையே தோன்றிய வேறுபாடு நாளுக்கு நாள் பெருகிக்கொண்டிருந்தது. இதையெல்லாம் அந்த இரு உத்தியோகஸ்தர்களும் விவரித்தார்கள்.

அவர்கள் விவரித்த அனைத்தும் உண்மையே. பியோடார் இதைக் கேட்டவுடன், தான் ஏற்கெனவே கைப்பற்றப்பட்ட தஸ்தாவேஜுகளில் கண்டவற்றுடன் ஒப்பிட்டு ஏற்றுக்கொண்டான்; "ஒரு குறிப்பிட்ட தளபதி விளாசோவைக் கண்காணிப்பில் வைக்க வேண்டும்" என்று பகுதிப் படையின் ஆணை இருந்தது. "ராணுவ வீரர்களுடன் பேச முயன்ற சில தளபதிகள் மார்க்கோவ், ஸுக், லிசென்டாவ் ஆகியோரைக் கடுமையாகக் கட்டுப்படுத்த வேண்டு" மென்றும் குறிப்பிடப்பட்டிருந்த அறிக்கைகளுடன் இந்த வாக்குமூலங்களையும் ஒப்பு நோக்கித் திருப்தியடைந்தான்.

தனது படைத் தளபதிகளிடமே கட்டுப்பாடும், கண்ணியமும் குலைந்துவிட்டதென்பதிலிருந்து, கோல்சாக்கியப் படையில் எதுவும் முறையாக நடக்கவில்லை என்பது புலனாகிறது. சாதாரண உத்தரவுகளுக்குக் கீழ்ப்படியாமல் மனம்போல நடப்பதைக் கைப்பற்றப்பட்ட பல தந்தி உத்திரவுகளே தெளிவாக்குகின்றன. குலைகின்ற கட்டுப்பாட்டை நிலைநிறுத்தி, ராணுவ நிலையைச் செம்மைப்படுத்துவதற்காக மேல்தரத் தளபதிகள் மேற்கொண்ட கடுமையான நடவடிக்கைகள் மிக விபரீதத்தில் முடிந்தன.

செஞ்சேனையினர் பெற்ற வெற்றிகளைக்கூடத் தாங்கள் பெற்ற வெற்றியாகக் குறிப்பிட்ட பொய்யான அறிக்கைகள் அனுப்பினார்கள் ; பல வாரங்களாகச் செங்கொடி பறந்த இலக்குகளைத் தங்கள் கேந்திரமாக வருணித்திருந்தார்கள். ஆனால் இந்த அறிக்கைகளைப் படித்த அவர்களுடைய ராணுவத்தினரே உண்மையைப் புரிந்துகொண்டனர் ; மேலிடத்து அறிக்கை எதையும் நம்ப மறுத்தனர். உண்மைச் சம்பங்களா யிருந்தாலும் ஏற்க மறுத்தனர்.

கோல்சாக்கியப் படைகள் சிதறத் தொடங்கிவிட்டன என்று சந்தேகமின்றி ஒரே வரியில் கூறிவிடலாம். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு சின்னாபின்னப் படுத்துதற்குரிய எல்லா முயற்சிகளையும் செஞ்சேனையினர் வெகு துரிதமாக மேற்கொண்டனர். பிரச்சார இலக்கியங்கள் வண்டிக் கணக்காக எதிரிப் படைக் கோடிக்குக் கொண்டு செல்லப்பட்டு வினியோகிக்கப்பட்டன. ஏராளமான வேண்டுகோள்களும், விண்ணப்பங்களும், உரிமைப் போர் இலட்சியங்களும் பரப்பப்பட்டன ; ஆகாய விமான வழியாகச் சொரியப்பட்டன. செஞ்சேனைக் கிளர்ச்சிக்காரர்களால் விளம்பரப்படுத்தப்பட்டன. அதிலும் குறிப்பாகச் செஞ்சேனைக் கிளர்ச்சிக்காரர்கள் மிகத் துணிவோடு வெள்ளைப் படையினர்க்குள்ளேயே புகுந்து தங்களுடைய துணிகரமான பிரச்சார வேலையை வெளிப்படையாக நடத்தினார்.

என்றாலும்கூடப் பல சமயங்களில் கொடூரமான போர் நிகழ்த்தான் செய்தது. வெள்ளைப் படைக்குள் வேகமான சீரழிவும் கலகலப்பும் ஏற்படுகிறது என்ற செய்திக்கு மாறாகச் சிந்தை சிலிர்க்கும் கடும் போர்கள் நிகழ்ந்தன. இந்தக் கொலைப் போர்களில் ஈடுபட்டவை வெள்ளை ரெஜிமெண்டுகளின் வெகு துரிதமான படைப் பகுதிகள். வெள்ளைப் படையில் இருந்த, பொதுவான எல்லா வீரர்களையும் விட இவர்களிடம் போதிய தளவாட வசதிகள் இருந்தன.



அவற்றைக் கொண்டு மிக மூர்க்கமாகப் போரிட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

சிஷ்மா நகரை நெருங்கிச் சென்ற சாலையின் பல கேந்திரங்களில் மிக வன்மையான போர் நிகழ்ந்தது. அப் போர்களின் பலனாக, பல செஞ்சேனை ரெஜிமெண்டுகளில் இருபது முப்பது வீரர்களே எஞ்ச முடிந்தது. செஞ்சேனையினர் வீரத்தோடும், துணிவோடும். உணர்ச்சியோடும் போரிட்டார்கள். எறி குண்டுகளை மட்டும் எடுத்துக்கொண்டு, கவசம் பூணப்பட்ட வண்டிகளில் பதுங்கிச் சென்று தங்கள் உயிர் போமளவும் எதிரிகளுக்கு அழிவை விளைவித்தார்கள் "ஐயோ!" என்ற கூக்குரலுடன் பலர் வீழ்ந்து மடிந்தார்கள். எதிரியின் கவச வண்டி தங்களைச் சமீபித்துப் போரெல்லைக் கோட்டை நெருங்கிவிட்டால் அத்தனை வீரர்களும் தரையோடு தரையாகப் பதுங்கிக்கொள்ளுவார்கள். "தரையோடு படுத்திருக்கும் வீரனைக் கவச வண்டியால் தாக்க முடியாது" என்ற ராணுவப் பாடத்தை ஞாபகத்தில் கொண்டு இக்கட்டான அந்தச் சமயங்களிலும் தப்பித்துக் கொண்டார்கள். எதிரிகளின் கவச வண்டிகள் போரெல்லை முழுவதும் உருளும், எதிர்ப்பட்ட எல்லா இடங்களையும் சுட்டுப் பொசுக்கும், தவிடுபொடியாக்கும். ஆனாலும் பயன் குறைவுதான்! கொண்டுவந்த குண்டெல்லாம் காலியானவுடன் கவச வண்டி திரும்பிப்போக ஆரம்பிக்கும். உடனே பதுங்கியிருந்த செஞ்சேனை வீரர்கள் தொடர்ந்து ஓடி எறி குண்டுகளால் அதைத் தகர்த்துவிடுவார்கள். அந்தச் சமயங்களில் அவர்களுடைய வீரம், வெறிச் செயலாக மாறிவிடும். சிஷ்மா எல்லைப்புறத்துப் போரில், கவச ரயில்கள் கவச வண்டிகள், சுழல் துப்பாக்கிகள் ஆகியவற்றின் கொடுந் தாக்குதல்களுக்கு ஆளாகிப் போர்க் களத்திலே புதையுண்ட செஞ்சேனை வீரர்களின் எண்ணிக்கை ஏராளம், ஏராளம்!

கடைசியாகக் கடுமையாக நடந்துகொண்டிருந்த போர்

ஓய்ந்தது. இருபது நிமிடங்கள் கழிந்துவிட்டன. ஆனால் வெடிகுண்டுப் புகை இன்னும் போர்க் களத்தை மூடிக் கிடந்தது. இரு தரப்பிலும் காயம்பட்ட வீரர்களின் கதறலும், முனகலும் வானத்தையே அதிரச் செய்தன. வழக்கம் போல, சிஷ்மா நகரத்து வாழ்வும் தலை தூக்கியது. வெடிகுண்டு முழக்கத்தால் அஞ்சியொடுங்கிப் பதுங்கிக் கிடந்த விவசாயப் பெருமக்கள் அனைவரும் மெதுவாக வெளி வந்து, களைத்துப் போன செஞ்சேனையினரைச் சூழ்ந்துகொண்டனர். பெண்கள் வழக்கம்போலத் தங்களுடைய அடுப்பங்கரை அலுவல்களைக் கவனிக்க ஆரம்பித்தனர். வீடுகளிலிருந்து பேச்சும் உரையாடலும் கிளம்பின. போர்க் களத்தில் தாங்கள் போரிட்டவற்றையும், சாதித்தவற்றையும் கூடியிருந்தோர்க்கெல்லாம் செஞ்சேனை வீரர்கள் விளக்கிக்கொண் டிருந்தனர். தாங்கள் போரிடும் நோக்கையும், சுதந்திர லட்சியத்தையும் தெளிவுபடுத்தினர். அவர்களுக்குக் கொஞ்சம் சாப்பிடக் கிடைத்ததும், பலர் மகிழ்ச்சி பொங்கத் தத்திக் குதிக்கத் தொடங்கிவிட்டனர். அவர்களைப் பார்த்தால் போர்க் களத்திலிருந்து வந்ததாகத் தோன்றவில்லை; ஏதோ திருவிழாவுக்கு வெளியூரிலிருந்து விருந்தினர்களாக வந்தவர்களைப்போலவே ஆட்டத்திலும் பாட்டிலும் அகமகிழ்ந்தார்கள்.

அன்று மாலை, ஸ்டெபான் ராஷின் ரெஜிமெண்டைச் சேர்ந்த இசைக் குழுவினர் பாட அமர்ந்தனர். அந்தக் குழுவில் இருபத்தைந்து பேர் இருந்தனர். பலருக்கு இனிமையான குரல் இருந்தது. ஆனால் தொடர்ந்த அணி வகுப்பாலும், போர்களாலும் முன்னதாக ஒத்திகை பார்க்கப் பொழுதில்லை. என்றாலும்கூட ஏதேனும் கொஞ்ச நேரம் ஓரிடத்தில் தாமதித்தாலும் பாடத் துவங்கிவிடுவார்கள். பாடுவதில் அவர்களுக்கு அவ்வளவு ஆர்வமிருந்தது. பாடத் தொடங்கிவிட்டால் எல்லோரும் சேர்ந்து பாட ஆரம்பித்து விடுவார்கள். ஆகவே இசைக் குழுவினர் தங்களுக்கு மட்



டும் தெரிந்த பாட்டைப் பாட முடியாது. எல்லோருக்கும் தெரிந்த பாட்டாகத் தேர்ந்து பாட வேண்டும். அவர்கள் ஏராளமான பாடல்களைப் பாடினாலும் பெரும்பாலானவை ஸ்டெபான் ராஷினையும் எர்மாக்கையும் சார்ந்தே எழுந்தன. அதற்குப் பின் இனிய நடனப் பாடல்களும் இருந்தன. புருவத்தை நெறித்தபடி உச்ச ஸ்தாயியில் ஒரு வீரன் கலை சொட்டப் பாடினான்.

ஓ துனியூஷ்கா. துனியா!
ஓ துனியூஷ்கா, துனியா!

இதைக் கோஷ்டிப் பாடலாக அவர்கள் சேர்ந்து பாடினர்.

ஓ துனியா, துனியா துனியா
துனியா ஓ துனியூஷ்கா, துனியா துனியூஷ்கா

இந்தப் பாட்டுக்குத் தாளம் போட்டுக்கொண்டு, காலால் தாளம் போட்டுக்கொண்டு, அவர்கள் பாடினர். இரண்டாவது வரியைத் தொடங்கியதும், உணர்ச்சி வயப்பட்டுக் கீழ்வரும் பாடலை உச்ச ஸ்தாயியில் அவர்கள் பாடினர்.

ஓ துனியா, துனியா, துனியா.

இந்த அடிகளைப் பாடத் தொடங்கியதும், பலர் நெஞ்சம் நெகிழ ஆடத் தொடங்கினார்கள். பாட்டும் இனிய கானமாய் உயர்ந்தது; ஆடலும் அழகுக் காட்சியாய்ப் பொலிந்தது. சோர்ந்து மயக்கம் அடையும்வரை ஆடினார்கள். அவர்களுக்குப் பிறகு மற்றோர் ஆடினர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அக்கார்டியன் வாத்தியமும் வந்துவிடும். ராணுவத் துறையைச் சேர்ந்த எல்லோரும் உயர்வு, தாழ்வு, மதிப்பு, மரியாதை முதலிய உணர்ச்சிகளுக்கு இடம் தராது, உள்ளம் இனிக்க ஆடிப்பாடி அகமகிழ்ந்தனர்.

படையிலிருந்த "அறிவாளர் கூட்டம்"—ஆலோசகர்கள், மேற்பார்வையாளர்கள், குமாஸ்தாக்கள் ஆகியோர்—வெறிபிடித்தவர்கள் போல் ஆடத் தொடங்கினர். ஆனால் இவர்களைப் போலவே போர்வீரர்களும் படைத் துணை அதிகாரிகளும் வெறிபிடித்தவர்கள்போல் ஆடினர். அவர்களும் துணிச்சலுடன் நாட்டியம் ஆடினர்.

ஆடுவதும் பாடுவதும் பாடுவதும் ஆடுவதுமாக மாறி மாறிப் பல முறை செய்தார்கள். இயன்ற மட்டும் பாடி ஓய்ந்த பின், ஆடத் தொடங்குவார்கள்; ஆடி ஆடிக் களைத்துப்போன பின், பாடத் தொடங்குவார்கள். காலும் கடுத்து, தொண்டையும் கம்முகிற வரையில் இப்படித் தொடர்ந்து ஆடிப் பாடிக்கொண்டு இருந்தார்கள்.

சில மாதங்களுக்கு இடையில் இரண்டு புதுப் பாடல்கள் நடைமுறைக்கு வந்தன. குறிப்பாக அவற்றின் பல்லவிகளை ஆர்வத்துடனும் உணர்ச்சியுடனும் அவர்கள் பாடினார்கள். மெட்டு பழைய மெட்டுத்தான்; ஆயினும் வார்த்தைகள் புதியவை. முதல் பாட்டின் பல்லவி இந்த வார்த்தைகளுடன் தொடங்கின:

பாடுவோம், வெற்றி யெட்டப் பாடுவோம்
பகைப் புலத்தைப் பணிய வைத்த
பாட்டைப் பாடுவோம்.

ஜனங்களின் மந்திரி சபைக்கு
ஜே ஜே ஜே

இரண்டாவது பாடல், செஞ்சேனை முழுதும் பரவி இருந்தது. அதன் பல்லவியையாவரும் விருப்போடு பாடினர்:

சோவியத்து ஆட்சிக்காகச் சோதனைகள் ஏற்போமே
சொந்த உயிர் பலியாக்கி, சோதரத்தில் வாழ்வோமே.

இந்தப் பாடலின் மற்ற வரிகள் அவ்வளவு முக்கியமாகக் கருதப்பெறாமையால், அவற்றில் அவர்களின் நாட்டம் அதிகமாகச் செல்லவில்லை உண்மையான நல்ல பாட



லுக்கு ஏற்ற பொலிவு அவற்றில் தென்படவில்லை. ஆயினும் பல்லவியை அவர்கள் சிறந்த முறையில் பாடினர்.

சரி...இப்பொழுது "நிலை பெற்ற நினைவு"...என்று கூட்டத்திலிருந்து ஒரு குரல் கேட்டது.

பாடிக்கொண்டிருந்தவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

"தொடங்கலாமா..."

"ஓ...தொடங்கலாமே!"

"யாராவது அந்தப் பாட்டுத் தொடக்கத்தைச் சொல்லட்டும்."

உடனே ஒரு வளர்ந்த வாலிபன் கூட்டத்திலிருந்து முன்னே வந்து, நடு இடத்திற்குச் சென்றான். சுற்று முற்றும் பார்த்துவிட்டுத் தொடங்கினான்.

"நாம் மேற்கொள்ளும் எல்லாச் செயல்களிலும் நமக்கு அபரிமித வெற்றியும், அமைதி வாழ்வும், நிலைத்த நலமும் ஏற்படவும், எங்களது எதிரிகளுக்கு எல்லா வகை அழிவும், குழப்பமும் பெருகவும் இறைவா...அருள் புரியும்!" என்றான்.

உடனே சுற்றிலும் பார்த்தபடி...எல்லோரும் பாடுங்கள் என்பது போலத் தலையை அசைத்தான்.

"கடவுளே...கருணை பொழியும்!" என்று எக்காளமிட்டனர்.

"எல்லா ருஷ்ய சோஷலிச ராணுவங்களுக்கும், அவற்றின் தலைவர் தோழர் லெனினுக்கும், 25வது வீர படைத் தலைமைக்கும், ஸ்டெபான் ராஷின் பெயர் கொண்ட இருநூற்று எண்பதாவது படைப் பகுதிக்கும்...நீ...ண்...ட... வாழ் . வு...!" என்று கத்தினான்.

"நீடு வாழ்க" என்று எல்லோரும் முழங்கினர்.

"பீரங்கி வீரர்கள், பெருங் குதிரைவீரர்கள் சமையல் முதல் சகல வேலையும் செய்யும் நமது வீரர்கள் எல்லாரும் வாழ்க...வாழ்க...நீடு வாழ்க!"

மகிழ்ந்தும் கூச்சலிட்டும் சேர்ந்தும் "நீடு வாழ்க" என்ற கோஷத்தை அவர்கள் ஒலித்தனர். அவர்கள் முகங்களில் மந்தகாசமும் புன்னகையும் தாண்டவமாடின; "இந்தப் பாடலை நாங்கள் எங்கிருந்தோ கொண்டுவரவில்லை. எங்கள் படையினரே இயற்றிக்கொண்ட பாட்டு இது" என்ற பெருமிதம் அவர்கள் கண்களில் பிரதிபலித்தன.

அடுத்தாற்போல வாழ்த்துப் பாட்டை நடத்திக்கொண்டிருந்த இளைஞன் மிகத் தாழ்ந்த குரலில் பயபக்தியோடு பாட ஆரம்பித்தான்...!

"ஓ கடவுளே...சைபீரியப் பேரரசர், பாட்டாளிகளை ஒடுக்கும் தீரர், மகாமேன்மை தங்கிய, வெள்ளைப் படைப் பெரும் தளபதி அட்மிரல் கோல்சாக்கிற்கும், அவருடைய மந்தைகளுக்கும், அடிபணிந்து வாழ்வோர்க்கும், பெரும் பண்ணைப் புள்ளிகட்கும், தொப்பை நிறைந்த முதலாளிகட்கும், செக்கோஸ்லோவாக்கியக் கனதனவான்களுக்கும் மீளாத நித்திரையும், திரும்பாத அமைதிச் சாவும் தருவீராக...நிரந்தர சமாதானம் வருவிப்பீராக?"

"சமாதானம் வருவிப்பீராக" என்று மூக்கொலி கிளப்பி எல்லோரும் முனகினர். ஏதோ நாற்றம் சகிக்காது மூக்கைப் பிடித்துக்கொண்டதுபோல ஒலி எழுப்பினர்.

"காட்டிக் கொடுப்போர்க்கும், எதிர்ப் புரட்சியாளர்கட்கும், கொடியோர்க்கும், குறுமதியாளர்க்கும், துரோகிகளுக்கும், அரசன் அடியார்களுக்கும், பணமூட்டைகளுக்கும், ஏய்த்துப் பிழைப்போருக்கும், கொள்ளை லாபம் அடிப்போருக்கும், பாங்கர்களுக்கும் நாச வேலை செய்வோருக்கும் நிரந்தர சமாதானம் வருக" என்று கடைசியாகக் கத்தினான்.

கூட்டத்தினரும் தங்களது பங்கை முடித்தனர்.

இம்மாதிரி நள்ளிரவுவரை பாடினர். மறு நாள் மீண்டும் அணிவகுத்துச் செல்ல வேண்டியிருந்தாலும்கூடப் பொருட்படுத்தாது களியாட்டத்தில் திளைத்தனர். கொஞ்ச நேரம் தூங்கினால்கூடப் போதும். அவர்களுடைய உற்சாகமும், மகிழ்ச்சியுமே நல்ல உடல் ஓய்வைத் தந்துவிடுமே!



உபாவுக்குச் செல்லும் பாதையின் திறவுகோலாக சிஷ்மா கருதப்பட்டது இப்பொழுது பாதை திறக்கப்பட்டுவிட்டது. எதிரிப் படைகள் பெலாயா நதியைத் தாண்டிப் பின்னிடக் கூடுமென்றும், நதியின் மறு கரையில் பலமான தாக்குதலை நடத்தக்கூடும் என்று சந்தேகிக்க இடமிருந்தது.

பின்வாங்கிச்சென்ற கோல்சாக்கியத் துருப்புகளை இன்னும் ஆக்ரோஷத்துடனும் ஆத்திரத்துடனும் செஞ்சேனையினர் தொடர்ந்து நெருங்கினர்.

"நமது வலதுபுறத்து வீரர்கள் நெகிழாது போரிட்டால் இந்தச் சமயம் ஊபாவைக் கட்டாயம் கைப்பற்றிவிட முடியும்" என்றான் சப்பாயேவ். வலது புறமாக இயங்கிய செஞ்சேனைப் பிரிவின் ஆற்றல் குறைவை மனத்தில் கொண்டே இப்படிச் சொன்னான்.

"அதெப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்ல முடியும்?" என்று கேட்டார்கள் மற்றவர்கள்.

"காலடி வைக்கக்கூடக் கோல்சாக்கிற்கு வேறு இடமில்லை. இனிமேல் சைபீரியாவுக்கே பின்னிட்டோட வேண்டியதுதான்."

"ஏன்...நாம்கூடத்தான் சமாராவில் தொங்கினோம்.... நாமும் எப்படி ஓடிவந்தோம்" என்று அவர்கள் மறுத்தார்கள்...

"ஆம் நாம் தொங்கினோம். அதனால் என்ன?" என்றபடி எப்படியோ அதை மழுப்ப நினைத்தான். தகுந்த சமாதானம் சொல்ல முயன்றான்"; எதுவும் அச் சமயத்தில் அவனுக்கு உதயமாகவில்லை....ம்...நாம் தொங்கினோம். அது வேறு விஷயம்...ஆனால் கோல்சாக் சமாளிக்க முடியாது...நாம் ஊபாவைப் பிடித்துவிடத்தான் போகிறோம்.'

வெற்றியின்மீது இத்தகைய நம்பிக்கை கொள்ளுவது எல்லோருக்கும் இயல்பே! என்றாலும் செஞ்சேனைப் படை

யின் முன்னணி வீரர்களிடம் இந்த நம்பிக்கை அபரிமிதமாகத் தோன்றியது. ஏதேனும் ஒரு தாக்குதலை நடத்துவது, ஒரு இடத்தைக் கைப்பற்றுவது போன்ற பிரச்னைகள் வந்தபொழுதெல்லாம் நாளையும், மணியையும்தான் கணக்கிடுவார்கள். தங்களது ஆற்றலையோ, வீரர்களது எண்ணிக்கையையோ சிந்திக்க மாட்டார்கள். எதிரியின் வலிமையையோ, வசதியையோ, தாக்கும் வன்மையையோ எடைபோட்டுப் பார்க்க மாட்டார்கள். அவர்களது மதிப்பீடெல்லாம் இந்த முறையில்தான் இருக்கும் :

"செவ்வாய்க்கிழமை யன்று காலை அந்த ஊரை அடைந்துவிடுவோம் ..அன்று மாலையே நதிப்புறத்துக்குச் சென்றுவிடலாம். நதிப் பாலம் தகர்க்கப்படாம லிருந்தால் அன்று இரவே நதியையும் கடந்துவிடலாம், இல்லாவிட்டால் மறு நாள் காலைவரையும் தாமதிக்க நேரும். புதன்கிழமை மாலை அங்கு போக வேண்டும், அப்புறம் வியாழக்கிழமை . ..."

ஏதோ தங்களுக்கு முன்னர் எதிரிப் படையே இல்லை என்பதுபோல ஒவ்வொரு இடத்தையும் அடைய வேண்டிய நாளையும், நேரத்தையும் மிக எளிதில் கணித்துக்கொள்ளுவார்கள். பெரும்பாலும் இந்த மதிப்பீட்டில் அவர்கள் தவறியதே கிடையாது. குறித்த நேரத்துக்கு முன்னரே பல கேந்திரங்களை அடைந்துவிடுவதும் உண்டு. ஊபா நகரமும், அவர்கள் போர்த் திட்டத்தில் குறிப்பிட்டிருந்த நாளுக்கு முன்னரே கைக்கொள்ளப்பட்டது!

செஞ்சேனையினரின் முன்னேற்ற வேகமும், தீவிரத் தாக்குதலும் மிகவும் வியப்பூட்டுவன. எந்தக் குறிப்பிட்ட அளவையும் மிஞ்சிப் போரிட்டார்கள். எந்த சக்தியாலும் தங்களைத் தடுக்க முடியும் என்பதை அவர்கள் ஏற்க மறுத்தனர். கவச வண்டிகளில் பதுங்கி எறிகுண்டு வீசி அவர்கள் போரிட்டபொழுது, சிஷ்மா நகரில், அவர்களைத் தடுத்து நிறுத்தும் வன்மையுடைய சக்தி வேறேதும்



இல்லை என்று துணிந்து கூறலாம்.

சிஷ்மாவில் வெற்றியடைந்ததைப் பாராட்டும் அறிகுறியாகப் பல விருதுகள் செஞ்சேனை ரெஜிமெண்டுகளுக்கு வழங்கப்பட விருந்தது. ஆனால் இதிலும் சில தகராறுகள் ஏற்பட்டன. சிஷ்மா நகரைக் கைப்பற்றும் பயங்கரப் போரில் துணிவுடன் போரிட்ட சக்திவாய்ந்த ஒரு ரெஜிமெண்டைச் சேர்ந்தவர்கள் அந்த விருதைப் பெற்றுக் கொள்ள மறுத்துவிட்டனர். ரெஜிமெண்டுகளில் இருந்த சில வீரர்களுக்கு மட்டும் இத்தகைய விருதுகள் வழங்கப்பட்டபொழுது அவற்றை ஏற்க மறுத்துவிட்டார்கள். ரெஜிமெண்டைச் சேர்ந்த எல்லா வீரர்களுமே வேறுபாடின்றித் துணிவுடன் போரிட்டதாகவும், போரிட்ட முறையில் சிறந்த சேவை செய்தது யார், செய்யாதது யார் என றெல்லாம் பிரிக்க முடியாதென்றும், எல்லோரும் சம அந்தஸ்துடன் சோவியத்துக் குடியரசைக் காக்க போரிட்டதாகவும்,அவ்விதம் போரிடாமல் யாரேனும்இருந்தால் அவர்கள் கோழைகளே என்னும் வீராவேசமாகப் பொழிந்தார்கள். "எங்களுக்கு எந்த விருதும் வேண்டாம்,எங்கள் ரெஜிமெண்டில் அனைவரும் சமமானவர்களே" என்று முழங்கினார்கள். இந்த மாதிரி நிகழ்ச்சிகள் அந்தச் சமயத்தில் மிகவும் சாதாரணமானவை. உணர்ச்சி வெள்ளமும், ஊக்கமுடைமையும் கண்டு வியத்தற்கு உரியவை. எனவேதான் செஞ்சேனை வீரர்கள், விருதளித்துப் பாராட்டுவதை மிகச் சாதாரணமானதாகவும், எளியதாகவும், தன்னலச் சார்பற்றதாகவுமே கருதினர்.

"நான் ஏன் முன் நின்று விருது பெற வேண்டும்? எல்லோரையும் போலத்தானே நானும்! என்னுடைய உடன் வீரர்களில் யார் என்னைவிட மோசமானவர்கள் அல்லது உயர்ந்தவர்கள்...? அவர்களில் யாராவது மோசமாக இருந்தால் நாமனைவரும் கூடி அவனுக்கு ஊக்கம் தருவோம், நான் மோசமாக இருந்தால் எல்லோரும் கூடி எனக்கு

ஊக்கம் தாருங்கள். அவ்வளவுதானே!'' என்ற எண்ணம் எல்லோரிடமும் நிலவியது.

புகாசோவ் ரெஜிமெண்டைச் சேர்ந்த முந்நூறு வீரர்கள் தங்களுக்குள்ளேயே ஒரு ஜன சமாசத்தை 1918ல் அமைத்துக்கொண்டனர். உடை முதல் எல்லா உடைமைகளும் எல்லோர்க்கும் பொதுவாகப் பேணப்பட்டன. தனக்கு எது தேவையோ அதை மட்டுமே ஒவ்வொருவரும் எடுத்து அணிந்துகொள்ளுவார்கள். அவர்களுடைய சம்பளம், வீட்டிலிருந்து பெற்ற வரும்படி ஆகிய அனைத்தும் பொது நிதியில் சேர்க்கப்பட்டன. போர்முனையில்கூட, இந்தக் குழுவினர் காட்டிய ஒருமைப்பாடு வியத்தற்குரியது. இந்தப் போரில், அந்தக் குழுவின் வீரர்கள் பெரும்பாலோர் இறந்துவிட்டார்கள். எஞ்சியவர் சிலர் படுகாயமுற்றார்கள். வாழ்விலும் சாவிலும் அத்தகைய இணக்கம் அவர்களிடம் பொலிந்தது.

பாராட்டு விருதுகளை ஒரு குறிப்பிட்ட ரெஜிமெண்டைச் சேர்ந்த வீரர்கள் ஏற்க மறுப்பது, எல்லாச் செஞ்சேனை வீரர்களின் எண்ணப் பாங்கைத்தான் பிரதிபலிக்கிறது; தளபதிகள் முதல் அரசியல் இயக்க ஊழியர்கள் வரை அனைவரது தற்புகழ்ச்சி கருதா நிலையைத்தான் புலப்படுகிறது. அன்று மாலையே, அரசியல் இயக்க அலுவலகத்தைச் சேர்ந்த பலரும், கிளிக்கோவிடம் சென்று, இத்தகைய விருதளிக்கும் முறை வேண்டாம் என்ற தங்களது எதிர்ப்பை கட்சியின் மத்தியக் குழுவிக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டனர். பியோடார் கிளிக்கோவும் இதை ஏற்றுக்கொண்டான். சற்று நேர விவாதத்திற்குப் பின்னர் கீழ்க்கண்ட கடிதம் எழுதப்பட்டது.

" அன்புள்ள தோழர்களே,

"மிகத் துணிவுடன் போராடிய எங்களது ரெஜிமெண்டு வீரர்களிடையே பாராட்டு விருது



களையும், பதக்கங்களையும் நாங்கள் வினியோகித்தபொழுது அனைவரும் அவற்றை ஏற்க மறுத்துவிட்டார்கள். தத்தமது படை வீரர்கள் அனைவருமே சோவியத் ஆட்சியைப் பேணத் தீரத்துடன் போரிட்டதாகவும், இனிமேலும் போரிடப் போவதாகவும் உறுதி தந்து மறுத்தார்கள். தங்களுக்குள் எத்தகைய பாராட்டும், விருதுகளும் வேண்டாமென்றும், அனைவரும் சமநிலையில் வெற்றியையும், தோல்வியையும் ஏற்க விரும்புவதாகவும் தெரிவித்துள்ளனர். அவர்களது இந்தப் பெரிய நியாயவாதம், செஞ்சேனையில் நிலவும் இந்த விருதளிக்கும் முறையைப்பற்றியே தீவிரமாகச் சிந்திக்க வைத்துவிட்டது. மிகச் சிறந்த வீரர்களைப் பொறுக்குவதென்பது முடியாத காரியம். ஏனென்றால் தகுதியை முன்வைத்து ஒரு சில குறுப்பிட்டவர்களை மாத்திரம் ஒதுக்குவதென்பது இயலாது. அதிலும் எந்த ஒரு குறிப்பிட்ட அளவுகோலை வைத்துப் பொறுக்குவதென்பதும் புலப்படவில்லை; ஒரு வீரன் போரில் தீவிர ஊக்கம் காட்டியிருக்கலாம். இன்னொருவன் தன்னுடைய முன்யோசனையால் ஏராளமான பேரைக் காப்பாற்றியிருக்கலாம், மூன்றாமவன் துணிவையுப், திறமையையும் காட்டியிருக்கலாம், நான்காமவன் அஞ்சாத நெஞ்சத்துடன் போரிட்டிருக்கலாம், இன்னொருவன் தமது படை வலிமையை உயர்த்த ஓயாது உழைத்திருக்கலாம்...இது போன்ற ஏராள வேலைகளில் எந்த ஒரு தனிப்பட்ட திறமையை அளவுகோலாக வைத்து விருது வழங்குவதென்பது தெரியவில்லை. அப்படி வழங்கினால் அதற்கொரு முடிவும் இல்லை!

"உண்மையாகச் சொல்லப்போனால், சரியான

மதிப்பீடு இல்லாமல்தான் விருதுகள் வழங்கப்படுகின்றன. பல சமயங்களில் திருவுளச்சீட்டுப் போட்டுக்கூடப் பதக்கங்கள் வழங்கப்பட்டன— இதனால் ஏராளமான மனப்பூசல்களும், போராட்டங்களும் விளைந்ததுண்டு. இவ்விதம் விருதுகள் வழங்குவது வேண்டாத விபரீதத்திற்கும், கட்டுப்பாட்டு அழிவிற்குமே வழிவகுக்கும் என்பது எங்களுடைய அபிப்பிராயம். சிறந்த செஞ்சேனை வீரர்களிடையேகூட இது மனமாச்சரியங்களையும், வெறுப்பையும் விளைவித்துவிடுகின்றன, சந்தேகத்திற்கு இடம் தருகின்றன, புகார் பேச்சுக்கும், வீண் வம்புக்கும் வசதி செய்கின்றன; இன்னும் பழமையையே பற்றிச் சாகிறோம் என்ற உணர்ச்சி முழக்கங்களை உண்டாக்குகின்றன.

"விருது வழங்குதல்—வலுக்குன்றின வீரர்களிடையே அவமான உணர்ச்சியை உண்டாக்குகிறது, இதரரிடையே முகஸ்துதிக்கும் அதிருப்திக்கும் வழியமைக்கிறது. அங்ஙனம் பாராட்டு விருது பெற்ற எந்த வீரனும் அதனால் பேரின்பம் அடைந்ததாகவோ, அல்லது அதைப் பெரிதாகவோ இதுவரை சொல்லவில்லை. ஆனால் அதற்கு நேர்மாறாகத்தான் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் சந்தித்த எல்லா ராணுவ வீரர்களும், தளபதிகளும், இதர அலுவலர்களும் இந்த விருது தரும் வழக்கத்தை விரும்பவில்லை, வெளிப்படையாக வெறுக்கவும் செய்கிறார்கள். இந்த நிலையில் இனிமேலும் பாராட்டு விருதுகள் அனுப்பினால், அவற்றை வினியோகிப்போம்... ஆனால் அப்படி அனுப்பாவிட்டாலும் அதற்காக யாரும் வருந்தமாட்டார்கள், மாறாக, ஆனந்தமும், மகிழ்ச்சியுங் கொண்டு செயலூக்கம் பெறுவார்கள்."



இந்தக் கடிதம் கட்சியின் மத்தியக் குழுவிக்கு அனுப்பப்பட்டது. அங்கிருந்து இதுபற்றி எந்தப் பதிலும் வரவில்லை. மேற்கண்ட கடிதத்தில் கள்ளங்கபடமற்ற அபிப்பிராயங்களும், சரியில்லாத நிகழ்ச்சிகளும் குறிப்பிடப்பட்டிருந்தன. இந்தப் பிரச்னையை அணுகியுள்ள முறை அரசியல் ரீதியில் அமையவில்லை. அதுவும் தவிர வெறுப்பிற்கும் இடம் தரக்கூடியது. என்றாலும்கூட இதில் திறந்த மனப்பான்மையும், வெளிப்படையும் விரவ, அக்காலத்துப் பொது உணர்ச்சி விளக்கப்பட்டிருந்தது.

அதற்குப் பிறகு இன்னும் இரண்டு கடிதங்கள் அனுப்பப்பட்டன. கடைசியாக அனுப்பப்பட்ட ஒரு கடிதத்தைப்பற்றிப் பிறகு பார்ப்போம்.

முதற் கடிதத்தைப் போலவே இரண்டாம் கடிதமும் புதிய சம்பள விகிதங்களைப்பற்றி எழுதப்பட்டது. உண்மையென்னவென்றால், ஊபாவை நோக்கி அணிவகுத்துச் சென்றபொழுது சிலசில சமயங்களில் ஏற்பட்ட போதாக்குறை தவிர உணவுப் பங்கீட்டு முறை மிகச் சிறப்பாகவே அமைந்திருந்தது. அப்படியே போதாக்குறை ஏற்பட்டபொழுதும் பொது மக்களிடமிருந்து உணவு பெறப்பட்டது; ஏதேனும் உணவுப் பொருள்கள் வருகையில் தாமத மேற்பட்டாலோ, அல்லது போர்முனையில் உக்கிரத் தாக்குதலில் ஈடுபட்டு முன்னேற வேண்டியிருந்தாலோ, அல்லது போரால் அழிவுற்றுப் பொட்டற் காட்டில் பிரவேசித்தாலோதான் பட்டினி கிடக்க நேர்ந்தது. அம்மாதிரியிடங்களில் உண்மையிலேயே கடினமாயிருந்தது.

போர்முனையில் பணத்தைச் சேர்த்துவைக்க விரும்பாதவர்களுக்கு இது ஒரு சுமையாகவும் இருந்தது. ஆத்மீக உயர்வும், ஒழுக்க உணர்வும் தலைதூக்கியிருந்த இச்சமயத்தில், பொதுத் துறையில் அங்கம் பெற்ற பலரும், சிறு விஷயங்களில்கூட மிகவும் விழிப்போடும், நிதானத்தோடும் நடந்துகொண்டனர்.

கட்சிக் கமிசார், ஒரு சாதாரணச் செஞ்சேனை வீரனைப் போலவே எளிய உடையைத் தானும் அணிந்துகொள்ளுவான்; அவர்களோடே தங்கியிருப்பான், போர்முனையிலும் முதலில் தன்னுயிரைப் பலிதரவே முந்துறுவான். சிறந்த வீரர்கள் இந்த மாதிரிதான் நடந்துகொண்டார்கள். தவறுதலாக ராணுவத்திற்குள் புகுந்த சில போலிகளும் உண்டு—தங்களுடைய சுயநலன்களுக்காகப் புகுந்தவர்களும், கோழைகளும், போர்க்களத்தில் எதிர்நின்று சமாளிக்கத் திராணியற்றவர்களும்—விரைவில் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டார்கள். அவர்களில் பலர் விரட்டப்பட்டனர், பலர் மாற்றப்பட்டனர், இன்னும் பலர் சட்டபூர்வமாகக் கைவிடப்பட்டனர். ராணுவத்தில் இருந்த கம்யூனிஸ்டுகள் மதிப்பும், தகுதியும் எளிதில் பெறவில்லை. இக்கட்டான சூழ்நிலையிலும், உயிர்ப் போராட்டங்களிலும் கம்யூனிஸ்டுகள்தான் முதலில் நின்று துணிவோடு போரிட்டார்கள். எதிரியின் குண்டு வீச்சுக்கு ஆளாகி மடிந்த முன்னணி வீரர்களில் முக்கால் வாசிப்பேர் கம்யூனிசத் தோழர்களாகத் தானிருப்பார்கள்.

எனவே சம்பள விகிதத்திலும் ஒரே மாதிரியான சம அளவே வேண்டுமென்னும் குரல் ஒலித்தது. தளபதிகளும், கமிசார்களும் தங்களுக்குத் தரப்பட்ட பிரத்தியேகச் சம்பளத்தையும், விசேஷப் பணத்தையும் படைப் பொது நிதிக்கே அனுப்பிவிட்டுச் சாதாரணச் செஞ்சேனை வீரனுக்குத் தரப்பட்ட சம்பளத்தையே தாங்களும் ஏற்றுக் கொண்டனர். இந்தச் சமநோக்கம் பெருவாரியாகப் பரவியிருந்தது. ஒரு நாள் ருஷ்யாவில் நிலவிய பழைய சம்பிரதாய முறைப்படியே ராணுவத்தினர் அனைவரும் தமக்குள்ளே பழக வேண்டும் என்பதுபற்றிப் பியோடாரும் சப்பாயேவும் விவாதித்துக்கொண்டிருந்தனர்.

ராணுவத்தின் மேல் தரத்தினர்—செஞ்சேனையினர்களுடன் சாதாரண முறையிலேயே பழகினர். கூப்பிடும்



பொழுதும் பேசும்பொழுதும் சர்வ சாதாரணமாகப் பழகினர். போர்க்களத்துச் சூழ்நிலையில் இந்த மாதிரி அழைத்துப் பழகுவதுதான் ஏற்றது என்று கருதப்பட்டது. அப்பொழுது சம்பிரதாயமாக உரையாடுவதென்பது நடைமுறைக்கொவ்வாத சமாசாரம். மேலும் படைத் தளபதிகளும், கமிசார்களும் உழைப்பாளர்களாகவே இருந்து உயர்ந்தவர்கள்தான். எனவே தொழிற்சாலையிலும், கிராமத்திலும் பழகுவது போலவே தமக்குக்கீழ் உள்ள செஞ்சேனை வீரர்களுடன் எளிமையாகவும் இயல்பாகவும் பழகினர். அன்பாகப் பேசி, ஆதரவாய் பதில் தந்தனர்.

பொதுவாக, படைப்பகுதிகளில் இருந்த அனைவருமே நடைமுறைப் பழக்கத்தில் சாதாரணமாகவே நடந்து கொண்டனர். சம்பிரதாயத்திற்கே அவர்களிடம் இடம் இல்லை. ஆனால் ரெஜிமெண்டுநிலைக்கு மேற்பட்ட தரத்தினர் இம்மாதிரி பழக முடியவில்லை. அதிலும் குறிப்பாக ராணுவ வீரர்கள் மேல்தரத்துத் தலைவர்களுடன் பேசும்பொழுது தயங்கித் தயங்கிப் பேச நேர்ந்தது. இதையும் சமப்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் பியோடாரும் சப்பாயேவும் விவாதித்தனர். ஆனால் எத்தகைய முடிவிற்கும் வரமுடியவில்லை.

இந்தச் சமயத்தில் சாதாரண வீரர்களைத் தவிரப் பிறருடைய சம்பளமெல்லாம் உயர்த்தப்பட்டது. இதை முதலில் எதிர்த்தவர்கள் அதிகச் சம்பளத்திற்கு ஆட்பட்ட அரசியல் இயக்க ஊழியர்கள்தாம்! இதர செஞ்சேனையினரிடமிருந்து தங்களை மட்டும் சம்பள அடிப்படையில் பிரித்து உயர்த்துவதை அவர்களே விரும்பவில்லை. ஏற்கெனவே உடல் அசையாது வேலை பார்ப்பவர்கள் என்ற பழிச் சொல் வேறு ஊடே பேசப்பட்டு வந்ததால் இந்த வித்தியாசத்தை அவர்கள் ஒரேயடியாக எதிர்த்தனர். "பாருங்கள் ஐயா...சமத்துவம், சகோதரத்துவம் என்று

வாயளவில் பேசுகிறோம், ஆனால் செயல் அளவில் நேர் எதிரிடை” என்று வெளிப்படையாகக் கண்டித்தார்கள். பிற செஞ்சேனை வீரர்களுடைய மனக் குறையோடு அரசியல் இயக்க ஊழியர்களின் எதிர்ப்பும் சேர்ந்தது. எல்லாவற்றையும் மேலதிகாரிகளுக்குத் தெரிவித்து முடிவு காண்பதெனத் தீர்மானித்தனர்.

புதிய சம்பள விகிதம்பற்றி எல்லோருக்கும் செய்தி பரவியவுடன் பெரும் உள்ளக் கொந்தளிப்பு ஏற்பட்டது. அரசியல் இயக்கக் காரியாலயத்திற்கு ஏராளமான கண்டனக் கடிதங்கள் வந்து குவிந்தன. படைப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்துவரப் பியோடார் சென்றபோதெல்லாம் ‘சம்பள உயர்வு’ பற்றிய எதிர்ப்புகள் அவனிடம் மிகுதியும் தெரிவிக்கப்பட்டன. உயர்த்தப்பட்ட புதுச் சம்பள விகிதமும் அவ்வளவு பெரிதன்று; மிகச் சிறிய துண்டுதான்! அந்தச் சமயத்தில் இந்தச் சிறு உயர்வே பெரிதாகக் கருதப்பட்டது

ஊபாவை நெருங்கிக்கொண்டிருந்த சமயத்தில் இத்தகைய பல்வேறு பிரச்னைகளையும் விவாதித்து முடிவு கட்டுவதற்காகக் கட்சி மகாநாடு கூட்டப்பட்டது. இந்த மாநாட்டில் மத்திய குழுவுக்கு மீண்டும் எதிர்ப்பைத் தெரிவிக்குமாறு கிளிக்கோவிற்கு ஆணையிடப்பட்டது. பெரும்பாலான தளபதிகளின் கருத்தும் அதுதான் என்பதை உணர்ந்த கிளிக்கோவ் மீண்டும் ஒரு கண்டனக் கடிதம் அனுப்பினான்:

“அன்புள்ள தோழர்களே,

“எங்கள் ராணுவப் பகுதியின் பொறுப்பு வாய்ந்த தளபதிகள், அரசியல் இயக்க ஊழியர்கள் சார்பாக இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். புதிதாக அமைக்கப்பட்டுள்ள புதிய சம்பள விகித உயர்வில் நாங்கள் அதிருப்தியும், மனவருத்தமும் கொண்டுள்ளோம். திருத்தப்பட்ட இந்தச்



சம்பள விகிதம் மிகப் பெரிது—மிக மிகப் பெரிது. எங்களுக்கு எதற்காக இங்கு பணம் தேவைப்படுகிறது? நாங்கள் இருக்கும் சூழ்நிலையில், சுரண்டலைத் தவிர வேறு எதற்கும் இது பயன்படப் போவதில்லை; விலை யேற்றத்தாலும், போதாக் குறையாலும், பணத்திற்குரிய மதிப்புக் குறைவாலும், வாங்கும் சக்தியின்மையாலும் ஏற்பட்டுள்ள சூழ்நிலை ஒருபுறம் இருக்கட்டும். ஆனால், இந்தத் திடீர்ச் சம்பள உயர்வு எங்களை முதலாளிகளாக நடக்கத் தூண்டுகிறது, பணத்தை வாரியிறைத்துப் பகட்டாக வாழும் மனப்பான்மைக்கு இடம் தருகின்றது. ஏராளமாகப் பணத்தைச் சேகரித்துப்பேராசைக்காரராகும்ஆசைக்கு அடித்தளமிடுகிறது. ஆனால் அதே சமயத்தில் சாதாரண வீரர்களின் அடிப்படைச் சம்பளத்தில் ஒரு பைசாக்கூடக் கூட்டப்படவில்லை. இதுபற்றிக் கட்சிக்குத் தெரியுமா? அல்லது செஞ்சேனை வீரர்களுக்கும், எங்களுக்கும் இடையே இந்த வித்தியாசத்தின் மூலம் மிகுந்த பிளவை ஏற்படுத்த மாற்றுச் சக்திகள் சதிசெய்கின்றனவா? செஞ்சேனை வீரர்களது மனக்குறையும் முணுமுணுப்பும் வெளியரங்கமாகக் கேட்கத் துவங்கிவிட்டது. பெட்ரோகிராடுப் போர்முனையில் உள்ளோர்க்கும், பஞ்சம் சூழ்ந்த பகுதிகளில் உள்ளோர்க்கும் சம்பள உயர்வு தேவைப்படலாம். ஆனால் கேட்ட மாத்திரம் உணவுப் பொருள்களெல்லாம் ஏராளமாகக் கிடைக்கும் இடத்தில் உள்ள எங்களுக்கு ஏன் சம்பள உயர்வை அளித்திருக்க வேண்டும் என்பதுதான் புரியவில்லை. ஒரு வேளை இந்த வேறுபாடு போர் முனையில் ஒருமுகமாகப் போரிடும் எங்களைச் சிதறிவிடச்

செய்யலாம். தவிரவும், நாங்கள் செஞ்சேனை வீரர்களுடைய சம்பள அளவோடு அரசியல் இயக்க ஊழியர்களுடைய சம்பளத்தையும் குறைத்துக்கொள்ளலாம் என்று முயன்று வருகிறோம். இந்த நிலையில் எங்களுக்கு மட்டும் இன்னும் அதிகச் சம்பளம் தரப்படப் போகிறது. ருஷ்யப் பழமொழிப்படி ஓநாய்க்கு எவ்வளவு போட்டாலும் திருப்தி கொள்ளாது; ஆனால் எங்களுக்கு விசேஷப் போஷணை எதுவும் வேண்டியதில்லை. நாங்கள் பட்டினியினால் வாடினாலும் கூடத் தாயகத்திற்காகப் போரிடும் முனைப்பிலிருந்து யாரும் எங்களைத் தடுத்துவிட முடியாது என்பதை உறுதிப்படுத்த விரும்புகிறோம்."

இந்தக் கடிதமும் தெளிந்த நோக்குடனும் சீரிய கருத்துப் பாங்குடனும் அமைந்திருந்தது. சில இடங்களில் மிகையாகவும் சொல்லப்பட்டிருந்தது. குறிப்பாக 'முதலாளிகளைப் போல நடக்கத் தூண்டுகிறது' போன்ற பகுதிகளைச் சொல்லலாம்; போர் முனையிலும் போர்க் களத்திலும் எப்படி முதலாளி போல நடக்க முடியும்?

இந்தச் சம்பள உயர்வு, அரசியல் இயக்க ஊழியர்களுக்கும், தளபதிகளுக்கும் ஓரளவு உயர்ந்த வாழ்க்கைத் தர வசதிகளைப் பெறுவதற்காகவே அளிக்கப்பட்டது. இதைத்தான் 'பெரிய பிரச்னை'யாகப் பேசித் தீர்த்துவிட்டார்கள். கண்டனக் குறிப்புகளெல்லாம் ஏன் கட்சியின் மத்தியக் குழுவிற்கே அனுப்பப்பட வேண்டும். ராணுவத் தலைமைக் காரியாலயங்களுக்கோ இதர போர்ப்படை அலுவலகங்களுக்கோ அனுப்பப்படக் கூடாது. ஏனென்றால் இந்தப் பிரச்னை செஞ்சேனை ராணுவத்தின் எல்லாப் பிரிவுகளையும் சார்ந்த பொதுப் பிரச்னையாகக் கருதப்பட்டது. தவிரவும் கட்சியின் மத்தியக் குழுவின் செயல் திறத்திலும், நடவடிக்கைப் போக்கிலும் எல்லோருக்கும் முழு



நம்பிக்கை இருந்தது. மேலும் தங்களது கண்டனங்களை ஏற்றுக்கொண்டு விரைவில் அங்கிருந்து பதிலும் அனுப்பப்படும் என்று நம்பினர்.

எளிய, வெளிப்படையான இந்த நம்பிக்கையை அந்தக் கடிதத்தின் அடிக்குறிப்பே புலப்படுத்துகிறது. இந்த அடிக்குறிப்பில், ராணுவத்தில் நாடகங்களோ களியாட்டங்களோ நடத்துதற்குப் போதிய வசதியில்லாமை பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது.

"ராணுவத்தின் பல்வேறு படைப்பகுதியினரிடம், புதிய நாடகங்கள், வீரப் பாடல்கள், நல்ல சொற்பொழிவுகள், உரையாடல்கள், கவினுறு காவியங்கள் ஆகிய அனைத்தும் சேர்த்து வைக்கப்பட வேண்டும். அப்படி இதற்கு முன்னரே ஏதேனும் தொகுக்கப்பட்டிருந்தாலும் நாங்கள் இதுவரை ஏதும் பார்க்கக்கூட வில்லை. அத்தொகுதிகளைப் போர்முனைக்கு விரைவில் அனுப்பிவைக்க ஏற்பாடு செய்யுங்கள்."

இதன் மூலம், கட்சி மத்தியக் குழுவினரிடத்தின் வல்லமையில் ராணுவத்தினர்க்கு இருந்த நம்பிக்கையையும், தமக்கு வேண்டிய எதையும் ராணுவ மேலிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளுவதிலுள்ள ஏமாற்றமும் புலப்படுகிறது. இலக்கியத் தொகுப்புகளையெல்லாம் உடனே செய்து அனுப்புங்கள் என்று கள்ளம் கபடின்றிக் கேட்டிருந்தார்கள். அத்தகைய இலக்கியங்களையெல்லாம் ஒரு நொடியில் 'படைத்துவிட முடியாது' என்றும், உரிய காலத்தில் படிப்படியாக வளர வேண்டுமென்பதையும் அவர்கள் உணரவில்லை. அவ்விதம் இலக்கிய உதயம் ஏற்படும்வரை பொறுத்திருக்க அவர்களால் இயலவில்லை. இது தவிரப் பிற விஷயங்களில் ஏதேனும் கோரிக்கைப்படி நடைபெறவில்லையென்றால் ஒருவரை ஒருவர் பழிப்பதும், புகார் செய்வதும் பெருகின. வேலையில் ஒருமைப்

பாடு ஏற்பட முடியவில்லை. ஏசலும் பூசலுமே மிகுந்தன.

செஞ்சேனையில் உள்ள பெண்களைப்பற்றிய பிரச்னையை எடுத்துக்கொண்டாலே போதும். இதைப்பற்றிப் பேசாத நாளோ, எழுதாத விஷயமோ, அனுப்பாத உத்தரவுகளோ கிடையாது; என்றாலும் அவை முழுவதனாலும் விளைந்த பயன்தான் என்ன? ஏதுமில்லை! இதுபோன்ற விஷயங்களில் 'நீங்களே யோசித்துத் தீர்ப்பளியுங்கள்! என்ற பழைய உருப்படாத சம்பிரதாயம்தான் பின்பற்றப் பட்டது. என்றாலும், வெளிப்படையாகவும், அதிகாரபூர்வமாகவும் இல்லாவிட்டாலும்கூட, ராணுவத்தினருடன் உள்ள மனைவியரையும், பொதுவாக எல்லாப் பெண்டிரையுமே அனுப்பிவிடுவதற்கான உத்தரவுகள் அனுப்பப்பட்டன. இதற்கும் தகுந்த காரணங்கள் இருந்தன. சில படைத் தளபதிகளும், கமிசார்களும் மட்டும் தமது மனைவியரை அழைத்து வரவில்லை. செஞ்சேனை வீரர்களில் யார் யாருக்குத் திருமணம் ஆகியிருந்ததோ அவர்களில் பலர் தத்தமது மனைவியருடன், குடும்பத்திற்கு உரிய தட்டுமுட்டுச் சாமான்களுடன் படைப் பயணத்தோடு தொடர்ந்து வந்தனர். இந்தப் பெரிய கூட்டம், ராணுவ வண்டிகளிலேயே சுமந்து செல்லப்பட்டன. இந்தப் பயனில்லாத, ஆக்கமில்லாத வேலைக்காக ஏராளமான வண்டிகள் கட்டாயமாகப் பயன்படுத்தப்பட்டன. தவிரவும் பிற விஷயங்களையும் கருதவேண்டியிருந்தது. ராணுவத்தினரிடையே ஏற்பட்ட பல கலகங்களுக்கும், குழப்பங்களுக்கும் காரணஸ்தர்கள் இந்தப் பெண்கள்தான். ராணுவத்தில் இத்தகைய சிறு சிறு கலகங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. பல ஆண்டுகளுக்கும், மாதங்களுக்கும் தமது குடும்பத்தைத் துறந்து தனிப்பட்ட வாழ்க்கையில் துடிப்பதென்பதும் பலர்க்குக் கஷ்டமானதுதானே! ஆனால் அந்த விஷயத்திலும் தொல்லையிருந்தது. குடும்பத்தோடு வந்த வீரர்கள்



ராணுவ வேலைகளைவிடத் தமது சொந்த அலுவல்களிலே தான் மிகுதியான நேரத்தைச் செலவிட்டார்கள். எல்லாவற்றையும்விடப் பெண்களுக்கிடையில்தான், செஞ்சேனைக்கெதிரான உளவாளிகளும், எதிரியின் கையாட்களும் பல தடவை கண்டுபிடிக்கப்பட்டனர். எனவேதான் பெண்களே ராணுவத்தில் இருக்க வேண்டாம் என்பதற்காகப் பல விசேஷ உத்தரவுகளும் தாக்கீதுகளும் அனுப்பப்பட்டன.

உத்தரவுப்படி அமுல் நடத்தத் தொடங்கியபோது குளவிக் கூட்டைக் கலைத்தது போன்ற பெரும் கொந்தளிப்பு ராணுவத்தினரிடையே ஏற்பட்டது. துணைப் படைக் காரியாலயங்களில் இருந்த பெண்கள் அங்கங்கே நிறுத்திவைக்கப்பட வேண்டும் என்றவுடன் பல படைப் பகுதிகளின் வீரர்கள் கூடாதெனக் கூக்குரலிட்டார்கள். கடைசியில் அவர்களுடைய அமளி இயல்பாக அடங்கிவிட்டது. பிறகு வெவ்வேறு நிறுவனங்களிலும் தொடர்பு பூண்டிருந்த பெண்கள் படிப்படியாக நிறுத்தப்பட்டனர். ஆனால் செஞ்சேனை வீரர்களது மனைவியரை வீட்டுக்கு அனுப்புவது வேறு, செஞ்சேனைக்காக உழைக்கவந்த பெண் ஊழியர்களை அனுப்புவது வேறு விஷயம் எனப் பின்னர் உணர்ந்தனர். அத்தகைய பெண் ஊழியர்களது அலுவலை யேற்றுச் செய்யப் பிறரெவராலும் முடியாதபோது அவர்களை நிறுத்திவிட்டால் பல தொல்லைகள் விளையக் கூடுமென்பது உணரப்பட்டது. மருத்துவப் பணியாளர்களாக உதவி செய்தவர்களை ரெஜிமெண்டுகளிலிருந்து ஏன் விலக்க வேண்டும்? செஞ்சேனை வீரர்களுடன் தோளோடு தோளிணைந்து போரிட்ட பெண் திலகங்களை ஏன் அகற்ற வேண்டும்? அரசியல் இயக்கப் பெண் ஊழியர்களையும், நர்சுகள், மருத்துவத் துணைவர்கள் முதலிய தேவையான துறைகளில் ஈடுபாட்டுடன் பணியாற்றுவோரையும் ஏன் திருப்பி அனுப்ப வேண்டும்? என்ற கேள்வி

கள் பலர் உள்ளத்தில் எழுந்தாலும் கூட, படிப் படியாகப் பெண் ஊழியர்களை நிறுத்துவது உத்தரவுப்படி அமுல் நடத்தப்பட்டே வந்தது.

ஒரு நாள் பல செஞ்சேனைப் பெண்கள்—முன்பு நெசவுத்தொழில் செய்தவர்கள்—மூச்சு முட்டப் பியோடாரிடம் ஓடிச் சென்று, படைப் பகுதிகளிலிருந்து அவர்களைத் திருப்பி அனுப்புவதைத் தலையிட்டு நிறுத்த வேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக்கொண்டனர். அவர்களிடையே 'நான்கு மானங்கெட்ட சிறுக்கிகள்' இருந்தது உண்மைதானென்றும், அவர்களோடு எஞ்சியவர்கள் எத்தகைய தொடர்பும் கொள்ளுவதில்லை யென்றும், அந்த நால்வரும் செய்த தவறுக்காகத் தங்களையும் அனுப்பிவிடக் கூடாதென்றும் வெகுவாய்க் கேட்டுக்கொண்டனர். இதைக் கேட்ட கிளிக்கோவ், தானே படைத்தலைமைக் காரியாலயத்திற்குச் சென்று பெண் ஊழியர்களை விலக்க வேண்டாமென்று விளக்கி வந்தான். எனவே இத்தகைய நிகழ்ச்சிகளில் இருந்து 'பெண்கள் பிரச்னை' செஞ்சேனையில் எவ்விதம் கையாளப்பட்டது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

சிஷ்மா நகரைக் கைப்பற்றும்படி பொடாபோவின் துணைப்படைக்கு விதிக்கப்பட்டிருந்தது...ஆனால் வேறு இலக்கில் போரிட்டுவந்த சிஷோவின் படைகள் தமது துரிதமான வலுத்தாக்குதலால் திடீரென்று சிஷ்மா நகருக்குள் புகுந்துவிட்டனர். பொடாபோவின் படைகள் லேலி-குல் ஏரியைக் கடந்து, டியோமா ஆற்றைத் தாண்டினர். சிஷ்மா நகர் வீழ்ச்சியுற்றபொழுது ஊரை நெருங்கிக்கொண்டிருந்தனர்.

ஒரு படைப் பகுதியினருடைய சிறிய வெற்றியைக் கூட இன்னொரு படைப்பகுதி முன்னால் சென்று கைப்பற்றிக்கொண்டால் அது போர்முனையில் பெரும் கலகலப்பை உண்டாக்கிவிடும். சில தளபதிகள் தம்முடைய



எல்லையையும் கடந்து, திடீரெனத் தாக்க வேண்டுமென்ற முனைப்பில், பிற படைகளுக்கு இடப்பட்டிருந்த வேலைகளையும் தானே செய்து வெற்றி நிலையைக் குழப்பிவிடுவார். யார் வெற்றிக்குக் காரணமானவர் என்பதைப் புரிய விடாமல் செய்துவிடுவார். அந்த வெற்றியை அவர் அடையாமல் விட்டாலும் நன்றா யிருந்திருக்கும்! இவ்விதம் பெறும் வெற்றிகள் பல சமயங்களில் விபரீத முடிவுகளுக்கும் வழி கோலின.

எதிரில் படைகளைச் சுற்றி வளைத்துக் கைது செய்ய வேண்டுமென்ற திட்டப்படி படைப் பகுதிகள் அனுப்பப்பட்டன. இந்தச் சமயத்தில், ஆத்திரங் கொண்ட படைப் பகுதி திடீரென நேரடித் தாக்குதலை நடத்தி எதிரியைப் பயமுறுத்திவிட்டால், எதிரிப் படைகள் சமாளித்துக் கொள்ளும். உடனே தாக்கிய சண்டப் பிரசண்டன் தலைகால் புரியாமல் போரிடுவான், அவனது திடீர்த் தாக்குதல் ஓரளவு வெற்றிகரமாக முடிந்தாலும் ஏற்கெனவே திட்டமிடப்பட்டிருந்த முழு வெற்றிக்கும், போர்முறைக்குமே பெரும் தீங்கை விளைவித்துவிடும். இப்பொழுது இந்தக் கதைதான் நடந்தது! எதிரிப் படைகளை டியோமா ஆற்றங் கரைப் பகுதியில் ஒதுங்க விட்டுவிட்டு, ஒரு இலக்கு வழியாகச் சிஷ்மா நகருக்கும் சிஷோவின் படைகள் புகுந்து விட்டன. திட்டமிட்டபடி எதிரிப் படைகளைச் சூழ்ந்து கொள்ளாது, ஒரு பகுதியில் அவர்களை ஒதுங்கவிட்டு விட்டான். அப்படி ஒதுங்கிய எதிரிப்படைகள் சிஷ்மா நகருக்குள் புகுந்த சிஷோவின் படைகளை நசுக்கியிருக்க முடியும். நல்ல வேளையாக பொடாபோவின் படைகள் அதற்குள் ஆற்றங்கரையைச் சமீபித்துத் தக்க சமயத்தில் எதிரிகளைத் தாக்கினார்கள். படைக்குப் படை பரஸ்பர உதவி செய்துகொள்வது சப்பாயேவின் போர்த்திட்டம். ஏதேனும் இன்னலுக்குட்பட்ட படைப் பகுதியின் உதவிக்கு மற்றொரு படைப் பகுதி பாய்ந்து வர வேண்டுமென்

பது சப்பாயேவின் பொது நியதி. என்றாலும்கூட இந்த நியதி எப்பொழுதும் கடைப்பிடிக்கப்படுவதில்லை. அதனால் கொடுமையான விளைவுகள் ஏற்பட்டுப் பேரழிவில் முடிந்திருக்கின்றன.

பொடாபோவ் போர் நிலையைப் புரிந்துகொண்டவுடன் ஆற்றங்கரைப் பகுதியில் தீவிரமாகத் தாக்கி எதிரியின் கவனம் முழுவதையும் தன் படைப் பக்கமே இழுத்தான். எதிரிப் படைக்குள் ஏற்பட்ட தடுமாற்றத்தைப் புரிந்துகொண்டு, உக்கிரமாகத் தாக்கி அவர்களை ஆற்றுப் பக்கம் நெருங்கினான். தாக்குதலைச் சமாளிக்க முடியாத எதிரிகள் டியோமோ ஆற்றைத் தாண்டிச் சென்று தப்பினர்; தாங்கள் தப்பிச் சென்ற வழியெங்கும் இருந்த பாலங்களையெல்லாம் தகர்த்துச் சென்றனர். ஒருவேளை தாங்கள் இனித் திரும்பி வர மாட்டோம் என்று எண்ணிவிட்டார்கள் போலும்! தங்களுடைய படைகளை பெலாயா நதிதீரத்துக்கு விரைவாகச் செலுத்தினர். இந்தப் பெலாயா நதிப்படுகையில்தான் ஊபா நகரம் அமைந்திருக்கிறது. இடையில் எங்குமே நிற்காது எதிரிப் படைகள் சென்றுகொண்டிருந்தன. ஊபாவுக்கு இப்பால், எதிரிப் படைகளுக்கு நம்பிக்கையூட்டிவந்த ஒரே பிடிப்பு சிஷ்மா நகரம்தான்! அதுவும் வீழ்ந்துவிட்டது!! இந்த வீழ்ச்சி முதல் எதியின் நோக்கமும் போக்கும் நல்ல திசை நோக்கி மாறத் தொடங்கியது—இது முதல் முறையாகப் பின்வாங்கிச் சென்றுகொண்டேயிருந்தார்கள்!!! புஷுலுக்கையும் புகுரூஸ்லானையும் திருப்பு முனைகளாகச் செஞ்சேனை வீரர்கள் கருதியது போன்று எதிரிகள் தமது திருப்பு முனைகளாகக் கருதிய பெலாயா நதிக்கு இந்தப் புரத்தில் உள்ள இடங்களைப் பாதுகாக்க எந்த முயற்சியும் செய்யாது பின்வாங்கிக்கொண்டே சென்றார்கள்!

# 13

## ஊபா

எதிரிப் படைகள் அனைத்தும் பெலாயா நதி வழியாக ஊபாவுக்குப் பின்வாங்கிச் சென்றனர். தாங்கள் பின்னிட்டுச் சென்ற வழிகளில் உள்ள பாலங்களைத் தகர்த்தனர். நதி தீரத்தின் முக்கிய இலக்குகளில் தங்களுடைய ராணுவப் பிரிவுகளை நிறுத்திவைத்தனர். எங்கும் அவர்களுடைய துப்பாக்கிகளின் உறுமல்களே கேட்டன; பெரும் படைகள் இக்கேந்திர இலக்குகளில் வைக்கப்பட்டன. கோல்சாக், ஊபாக் கேந்திரத்தையும் கோட்டைவிட விரும்பவில்லை. எனவே பெலெயா நதியின் வடபுற வழியாகச் செஞ்சேனையினர் பல முனைகளிலும் இருந்து முன்னேறுவதைத் தடுக்கத் தானே முனைந்தான்.

செஞ்சேனையினர், ஊபா நகரைச் சுற்றி வளைத்துப் பிடிக்கத் திட்டம் போட்டனர். வலதுபுறப் படையினர் எதிரியின் பின்னணியில் உள்ள ஆர்க்கேஞ்சல் ஸ்கோயி தொழிற்சாலைகளை முதலில் சென்று தாக்க வேண்டுமெனத் திட்டமிடப்பட்டது. ஆனால் போக்குவரத்துச் சாதனங்களில் ஏற்பட்ட சுணக்கத்தால், பெலாயா நதியைத் தாண்டி ஒரு செஞ்சேனை வீரனைக்கூட அனுப்ப முடியாத மந்தநிலை ஏற்பட்டது. முன்னதாகச் செல்லவேண்டிய வலதுபுறப் படையினர் பெலாயா நதியைத் தாண்டுவதற்குள் இதர படைப் பகுதிகளும் நதிக் கரையை நெருங்கிவிட்டன.

சப்பாயேவின் ராணுவம் ஊபாவுக்கு எதிர் முனையைத் தேர்ந்தெடுத்துக்கொண்டது. அதன் வலதுபுறப் படை ஊபா நகருக்குச் செல்லும் நேர் சாலைமீது அமைந்துள்ள பெரிய பாலமொன்றில் பொடாபோவின் துணைப் படைத்

தலைமையில் இலக்கமமைத்து நின்றது. பெலாயா நதி தீரத்தின் கிழ்ப் புறத்தில் இருபத்தைந்து கல் தொலைவுக்கப்பால் இருந்த கிராஸ்னி யார் என்ற சிறு கிராமத்தைச் சப்பாயேவின் இடதுபுறப் படை சூழ்ந்துகொண்டது. இந்தப் படைத் தலைமையை ஏற்று ஷ்மாரினும், சிஷோவும் சென்றார்கள்.

இடதுபுறப் படை கிராஸ்னி யாரைப்பிடித்து, அந்தக் கிராமத்தின் வழியாக ஆற்றைக் கடந்து, ஊபா நகரை நெருங்கிச் செல்லும்பொழுது, வலது புறப் படைகள் பொடாபோவின் தலைமையில் நெடுஞ்சாலைப் பெரும் பாலத்தைக் கடந்து ஒரே சமயத்தில் நகருக்குள் நுழைய வேண்டுமெனத் தீர்மானிக்கப் பட்டது. அந்தப் பெரிய இரும்புப் பாலம் இன்னும் வலுவாகவே இருந்தது. அந்த முக்கியமான பாலத்தை எதிரிகள் ஒன்றும் செய்யாது விட்டுச் சென்றனர் என்பதை யாராலும் நம்ப முடியவில்லை. நிச்சயம் அந்தப் பாலத்தைத் தகர்த்து, செஞ்சேனை நதியைத் தாண்ட முடியாது எதிரிகள் செய்திருக்க வேண்டுமென்றே நம்பினர். அந்தப் பெரும் பாலத்தின் குறுக்கே ஒரு ரயில்ப் பாலம் பாய்ந்து சென்றது. இந்தப் பாலத்தைச் சில இடங்களில் தகர்த்திருந்தனர். பல வண்டிகள் சரளைக் கற்களைக் கொண்டு பாலத்தின் இடிபாடுகளைச் செம்மை செய்தனர். இந்த இடத்தில் நதியைத் தாண்டி வருவதற்குச் செஞ்சேனையினர்க்கு முதலில் வழியே இல்லாமலிருந்தது. பிறகு எப்படியோ ஆங்காங்கு சிதறிக் கிடந்த படகுகளை யெல்லாம் இணைத்துப் பாலத்தின் இடிபாடுகளைக் கடந்து பிறகு செம்மைப்படுத்தினர்.

என்றாலும்கூட, முதல் பெரும் தாக்குதலைக் கிராஸ்னி யாரிலிருந்து தொடக்க வேண்டுமெனத் திட்டமிடப்பட்டது. கிராஸ்னி யார் கிராமத்திற்கு அருகில், பெலாயா நதிக் கரையில் விக்கோரினுடைய காலாட் படையினர் சேர்ந்து சுற்றி வந்தபொழுது இரண்டு மூன்று நீராவிப்



படகுகள் ஆற்றில் அமைதியாக ஊர்ந்து செல்லக் கண்டனர். அந்தப் படகுகளில் இருந்தவர்களில் இருபதுக்கு மேற்பட்டவர்கள் ராணுவ உத்தியோகஸ்தர்களா யிருந்தாலும் ஒன்றும் புரியாதவர்கள் போல உல்லாசமாகச் சென்றுகொண்டிருந்தனர். அவர்களுடைய இந்தப் போக்கு வியப்பைத் தந்தது ; விளங்காமலும் இருந்தது ! செஞ்சேனைப் படைகள் மிக நெருங்கி வந்திருக்கின்றன, எந்தத் தருணத்திலும் நதிக்கரையிலிருந்து தாக்கக் கூடும் என்றெல்லாம் ஒன்றும் தெரியாதவர்கள் போலப் போய்க்கொண்டிருந்தனர். படகின் மேல் தளத்தில் நின்றவர்களது தோள்களில் ராணுவ வார்க்கச்சையைக் கண்டவுடன், செஞ்சேனைக் குதிரைவீரர்கள் வியப்பால் வாய்திறந்தபடியே இருந்தனர். அதைப் போலவே படகில் பவனிவந்த அந்த வெள்ளைப் படை உத்தியோகஸ்தர்களும் கரையில் நிற்பவர்கள் தங்களது குதிரைப் படையினராகத்தான் இருக்க வேண்டுமெனக் கருதியிருந்தனர் போலும் !

"நிறுத்து !" எனக் கரையிலிருந்து உத்தரவு புறப்பட்டது.

"ஏன் நிறுத்த வேண்டும் ?" என்று படகிலிருந்து ஆத்திரக் குரல் கிளம்பியது.

"படகுகளை நிறுத்து. இல்லாவிட்டால் சுட்டுப் பொசுக்குவோம். கரைக்குக் கொண்டு வாருங்கள்" என்று குதிரைவீரர்கள் கத்தினார்கள். படகில் இருந்தவர்கள் உடனே நிலைமையைப் புரிந்துகொண்டு படகுகளை வேகமாக இயக்கினார்கள். குதிரைப் படையினர் கரையில் நின்று குண்டு வீசினாலும் எட்டாத அளவு ஆற்றின் நடுப் பகுதிக்குச் சென்றுவிட முனைந்தார்கள். இதைக் கண்ட குதிரை வீரர்கள் 'நிறுத்து, நிறுத்து' என இடிக்குரலில் முழங்கினார்கள்.

என்றாலும் படகுகள் போய்க்கொண்டே யிருந்தன. படகின் மேல் தளத்திலிருந்து அவர்களே முதலில் சுட

ஆரம்பித்தனர். குதிரை வீரர்கள் திருப்பிச் சுட்டனர். சரி ஜோடியில்லாத போராட்டம் மூண்டது. பெரிய சுழல் துப்பாக்கி யொன்று ஒரு நொடிக்குள் கரைக்குக் கொணரப்பட்டு அனல் கக்கிற்று. படகுகளில் இருந்தவர்கள் அலறினார்கள், படகின் மேல் தளத்திற்கும் கீழ்த் தளத்திற்கும் வெருண்டோடினார்கள், படகுக்குள் தலைமறைவாகப் பலர் பதுங்கினார்கள். தொடர்ந்த தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் சரணடைந்தனர். படகுகள் கரையோரமாகக் கொணரப்பட்டன. படகில் இருந்த பல உத்தியோகஸ்தர்கள் உயிரோடு செஞ்சேனையினரிடம் சரண்புகுவதை விரும்பாதவர்களாய்த் தாங்களே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டனர், இன்னும் சிலர் ஆற்றுக்குள் குதித்துவிட்டனர். படகுகள் கைப்பற்றப்பட்டன. இது செஞ்சேனையினர்க்கு எதிர்பாராமலே கிடைத்த நல்லதிர்ஷ்டமாகி விட்டது. இந்தப் படகுகள் பிறகு பல வகைகளில் அவர்களுக்கு உதவி செய்தன. செஞ்சேனை வீரர்கள் ஆற்றைத் தாண்டவும், ஒரு பெரும் இக்கட்டிலிருந்து ராணுவத் தளபதிகளை மீட்கவும் பெரும் உதவி செய்தன. செஞ்சேனையினர் கையில் இத்தகைய வலிய படகுகள் சிக்கிவிட்டன என்பதை எதிரிகள் அறியாவண்ணம் அவற்றை மறைத்து வைத்திருந்தனர்.

திட்டமிட்டபடி தாக்குதலைத் தொடங்குவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் பெருந் தளபதி ப்ரூன்ஷும் சப்பாயேவும், பியோடாரும் மோட்டாரில் வந்து சேர்ந்தனர். உடனே தளபதிகள் கட்சிக் கமிசார்கள் முதலிய எல்லா ராணுவத்தினரையும் அழைத்துப் போர் நிலவரத்தைத் தெளிவாக்கிக் கொண்டு, திட்டப்படி போரைத் துவக்குவதற்கு ஆலோசனை செய்தனர். தங்களுடைய படைப் பலத்தை நிதானித்துக்கொண்டனர், எந்தெந்த வகையில் போரிட்டால் வெற்றி கிட்டும் என்று வாதித்தனர்.



மிகக் குழம்பிய கடினமான சிக்கல்களையெல்லாம் வெகு லாகவமாகத் தெளிவாக்கிச் செம்மைசெய்யும் தனித் திறமை ப்ரூன்ஷிடம் இருந்தது. தாக்குதலோடு தொடர்பு கொண்ட எல்லாப் படைப் பகுதியினரையும் அழைத்து சம்பந்தப்பட்ட பிரச்னைகளை முன் வைத்துத் தெளிவுபடுத்துவான். அந்தச் சமயத்தில் இதர வேலைகள் எவற்றிற்கும் முக்கியத்துவம் தராது எடுத்துக்கொண்ட வேலைக்கே சிறப்பும் கவனமும் தந்து ஒரு முடிவிற்குக் கொண்டு வருவான். எல்லோருடைய ஆற்றலையும் திறமையையும் விவாதத்தில் ஒரு துறைப்படுத்திச் சிக்கலுக்குத் தீர்வு காண்பான். இத்தகைய ஆலோசனைக் கூட்டம் முடிந்ததும், எல்லோரது அபிப்பிராயத்தையும் சிந்தித்துத் தன்னுடைய தர்க்க ரீதியான, அனைவரும் ஏற்றுக்கொள்ளத் தக்க முடிவை வெளியிடுவான். பார்க்கப் போனால் இந்த முறை மிகச் சாதாரணமாகவே தோன்றும். ஆனால் எல்லோராலும் இதைக் கடைப்பிடித்து வெற்றி காண முடியாது. ஆனால் இந்த முறையில் தகுதியும் ஆற்றலும் கொண்டவன் ப்ரூன்ஷ் ஒருவன்தான்!

இப்பொழுது பல படைகளையும் சார்ந்த தலைவர்கள் கிராஸ்னி யாரில் கூடியுள்ளனர். இங்கு, செஞ்சேனைப் படைகளது தளவாட வசதி, ஆற்றல் உள்ள வீரர்களது எண்ணிக்கை இவற்றைக் கவனிப்பதுடன் பொதுவாக எல்லா வீரர்களது போராட்டத் திறமையையும், ஊபாவில் மேற்கொள்ள வேண்டிய புதுவகைச் சூழ்நிலையில் அவர்களுக்குள்ள சமாளிக்கும் ஆற்றலையும அளந்தறியவேண்டியிருந்தது. அதன்படி, ஷ்மாரினுடைய ராணுவப் பகுதியில் இணைந்திருந்த இவானோவா-வோஷ்னெஸென்க்கைச்சேர்ந்த நெசவாள வீரர்களே இதற்கும் பொறுக்கப்பட்டார்கள். அவர்களைத் தேர்ந்தெடுத்ததற்குத் தகுந்த காரணங்களும் இருந்தன. சிஷோவின் தலைமையில் இயங்கிய படைகள் ஏற்கெனவே நிலை பெற்ற புகழ்க் கொடிகளைப் பெற்று

விட்டன. ராணுவச் சேவைகளைப் பொறுத்த மட்டில் எல்லாப் படைகளிலும் முதலிடம் பெற்றவை சிஷோவின் படைகளே! ஆனால் இந்தச் சூழ்நிலையில் வர்க்க உணர்ச்சியோடு தீவிரமாகத் தன்னலமறுத்துப் போரிட வேண்டும். இந்தத் தேவையை நிறைவேற்ற நெசவான வீரர்கள் முன் வந்தனர். அவர்களே தகுதியானவர்களும் கூட.

ஆலோசனைக் கூட்டம் முடிந்தது. ப்ரூன்ஷ், சப்பாயேவ், பியோடார் ஆகிய மூவரும் குதிரைகளில் ஏறி, நதியைக் கடப்பதற்குக் குறிப்பிடப்பட்டிருந்த கரைப் பகுதியை நோக்கிச் சென்றனர். கரைக்கு அப்பால் அரைக் கல் தொலைவில் குதிரைகளை நிறுத்திவிட்டு மணல் சரிவில் நடந்து சென்றனர். எதிரிப் படைகள் எந்த நேரமும் தாக்கக் கூடுமென்ற எண்ணத்துடன் ஆற்றின் எதிர்க் கரையைப் பார்த்தார்கள். அங்கு எல்லாம் அமைதியாக இருந்தது. பக்கத்தில் இருந்த மணற் குன்றின் மீதேறி நின்று தொலைநோக்கிக் கண்ணாடிகள் வழியாக எதிர்க் கரையை அலசிப் பார்த்தனர். நதியைக் கடப்பதற்கேற்ற தகுந்த இடத்தைத் தேர்ந்துகொண்டு பிற விஷயங்களையும் முடிவு செய்த பின்னர் புறப்பட்டுத் திரும்பினர். ஏற்கனவே கைப்பற்றப்பட்ட இரண்டு நீராவிப் படகுகள் கடப்பதற்குக் குறிப்பிடப்பட்ட இடத்திற்கு அனுப்பப்பட்டன. கைப்பற்றப்பட்ட மீட்சிப் படகு தரையில் இழுத்துப் பதுக்கப்பட்டது. எல்லா ஏற்பாடுகளும் துரிதமாகச் செய்யப்பட்டன.

மேலும் ஒரு நாளைக்குத் தாக்குதல் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. ஆனால் தீர்மானமான சூழ்நிலை இப்பொழுது சமீபித்துவிட்டது. அவர்கள் மூவரும் பிரியு முன்பு கீழ்க்கண்ட முடிவைச் செய்துகொண்டனர். கிராஸ்னி யாருக்கு அருகில் ஆற்றைக் கடக்கும் முயற்சியைச் சப்பாயேவ் கண்காணிக்க வேண்டும். பொடாபோவின் படைகள் தங்கியுள்ள பாலத்திற்கு பியோடார் புறப்பட்டுச் செல்லவேண்



டும். ஊபா நகரம் கைப்பற்றப்படும்வரை அங்கிருந்தே போர் நடவடிக்கைகளை அவன் மேற்பார்க்க வேண்டும்.

சூரிய அஸ்தமனத்திலிருந்து கிராஸ்னி-யாரை அடுத்த ஆற்றங் கரையில் அபரிமித வேலைகள் நடந்துகொண்டிருந்தன. அத்தகைய வேலை நேரங்களில் சத்தமேதும் இல்லாமலிருப்பது அபூர்வமானது. நிழல்களைப்போலப் பலர் வேகமாக ஓடி ஓரிடத்தில் கூடுவார்கள். பல பகுதிகளாகப் பிரிவார்கள். உடனே மறைந்துவிடுவார்கள். இவை நதியைக் கடப்பதற்கு இவானோவா-வோஷ்னெஸென்க் வீரர்கள் செய்யும் முயற்சிகள் சிறிய படகுகளில் ஏராளமான வீரர்கள் ஏற்றப்பட்டனர். இவர்களை எதிர்க் கரையில் விட்டு மீண்டும் அவை திரும்பும். இந்த மாதிரி எல்லா ராணுவ வீரர்களும் அமைதியாக அந்தகார இருட்டில் ஆற்றைக் கடந்தனர். நள்ளிரவு கடந்துவிட்டது. விடியற்காலை நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது.

கிராஸ்னி யாரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த செஞ்சேனைப் பீரங்கிகள் முழங்கின. எதிரிகளின் முன்னணிப் பதுங்கல் கிடங்குகள் நதிதீரம் முழுவதும் பரவியிருந்தன. அவற்றையெல்லாம் தகர்த்தெறிந்தார்கள். ஒரே சமயத்தில் எண்ணிலடங்காத துப்பாக்கிகள் முழங்கின. முன்கூட்டியே, குண்டு பாயும் இலக்குகளையெல்லாம் அளவிட்டறிந்து சுட்டதால் மிகுந்த பயன் விளைந்தது. செஞ்சேனையினரின் வலிய தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாத கோல்சாக்கியப் படைகள் இனிமேலும் பதுக்கல் கிடங்குகளில் தங்கியிராது, சிதறி ஓட ஆரம்பித்தனர். இரண்டாவது பதுக்கற் கிடங்குகளை நோக்கித் தலைதெறிக்க ஓடினர். இச்செய்தியறிந்த பீரங்கிப் படைகள் சுடுவதை நிறுத்தின. இச் சமயத்தில் இவானோவா-வோஷ்னெஸென்க் வீரர்கள் அங்கு வந்துவிட்டார்கள். செஞ்சேனையினர் கை வலுத்தது. எதிரிகளை நோவியே டர்பாஸ்லி குடியிருப்பு வரை

விரட்டியடித்தனர். எங்கும் எதிர்த்துப்போரிட வியலாத எதிரிப் படைகள் கதிகலங்கிப் பின்னிட்டன.

பின்னிட்டோடிய வெள்ளைப் படைகளைத் தொடர்ந்து இவானேவா—வோஷ்னெஸென்க் வீரர்களும் நோவியே டர்பாஸ்லியை அடைந்தனர். நதியைத் தாண்டி வரவேண்டிய செஞ்சேனைப் படைகள் தம்முடன் சேரும்வரை அங்கு அவர்கள் தாமதிக்க நேர்ந்தது. போர் முனையில் முந்திச் செல்லும் எந்த ஒரு தனிப்பட்ட படைப் பகுதியும்தான் மாத்திரம் முந்திக்கொண்டே செல்வது அபாயகரமானது எனவே எல்லாப் படைகளும் வரும்வரை காத்திருந்து ஒரு. சேரத் தாக்கி முன்னேறுவதே வலியது. அதற்காகவே இவானேவா வீரர்களும் காத்திருந்தனர். இந்தச் சமயத்தில் புகாசோவின் துணைப்படை நதிதீரத்து வழியாக அலெக்ஸாண்ரோவ்காவை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தன.

ஸ்டெபான் ராஷின், தொமாஷ்கின் ஆகிய இரு படைப் பிரிவுகளும் படகுகளில் ஏற்றப்பட்டன. தங்களுக்கு முன்னதாகச் சென்றுகொண்டிருக்கும் செஞ்சேனைப் படைகளுக்கு உதவியாக இவர்களும் சேர்ந்துகொள்ள வேண்டும். நான்கு கவச மோட்டார்களும் நதியைக் கடந்து, கொண்டு வரப்பட்டன. ஆனால் அவற்றுள் மூன்று வழியில் கவிழ்ந்து விட்டதால் அங்கேயே விட்டுவர நேர்ந்தது. பிறகு குதிரைப் படை வீரர்கள் அவற்றை நிறுத்திப் போர்முனைக்கு அனுப்பி வைத்தார்கள்.

இந்தச் சமயத்தில், பின்னிட்டுக்கொண்டே சென்ற எதிரிப் படைகள் சமாளித்துக்கொண்டு இவானேவா-வோஷ்னெஸென்க் ரெஜிமெண்டைத் தாக்கத் துவக்கினர். அப்பொழுது காலை ஏழு அல்லது எட்டு மணியாகிவிட்டது. எதிரிப் படைகளை நோவியே டர்பாஸ்லிக்கு அப்பால் விரட்டுவதற்கும், அவர்களுடைய இலக்குகளைக் கைப்பற்றுவதற்கும், எதிர்த் தாக்குதலை முறியடிப்பதற்கும் இவானேவா வீரர்கள் தங்களுடைய தோட்டாக்களையும்



குண்டுகளையும் செலவழித்து விட்டனர். இப்பொழுது அவர்கள் வெறுங் கையர்களாகப் போரிட்டுக்கொண்டிருந்தனர். புதிதாக வெடிகுண்டு முதலிய சாதனங்கள் வந்து சேரும் என்ற நம்பிக்கையும் சாம்பிவிட்டது. நதியைத் தாண்டிப் போரிட்டுவந்த செஞ்சேனைப்படை அனைத்தையும் நடத்திச் சென்ற தளபதி சிஷோவ் கூறிய வீரச் சூளுரை அவர்களது நினைவில் நிலைத்திருந்தது.

"பின்னிட்டு விடாதீர்கள். உங்களுடைய துப்பாக்கி முனைகள் மட்டும் இருக்கின்றன என்ற நினைப்போடு துணிந்து நில்லுங்கள்" என்ற சிஷோவின் உத்தரவு அவர்களுக்குப் போதிய ஊக்கத்தைத் தந்தது.

ஆம்! இப்பொழுது இந்த நெசவாள வீரர்களிடம் எஞ்சியதெல்லாம் தோட்டா இல்லாத துப்பாக்கி முனைகள் தாம்! ஆனால் இதுவரை பெயரளவுக்கு எதிர்த் தாக்குதலைச் செய்துவந்த எதிரிப் படைகள் தீவிரமாகப் போரிட தொடங்கின. இத் திடீர்த் தாக்குதலைச் சமாளிக்க முடியாத செஞ்சேனையைச் சேர்ந்த முன்னணிப் படைகள் கலகலத்துப் பின்னிட ஆரம்பித்தன. இந்தச் சமயத்தில் படையை நடத்தி நின்றவன் தளபதி புரோவ். தனது கமிசார் அலுவலிலிருந்து இப்பொழுதுதான் மாற்றப்பட்டு இங்கு வந்திருந்தான். இப்பொழுது அவனுடைய கமிசார் நிகிதாலோ பார். இருவரும் போர்முனை வரிசைகளிலோ துணிந்து பாய்ந்தனர். பின்னிடக் கூடாதெனத் தமது வீரர்களை ஊக்குவித்தனர். ஏனென்றால் இனிமேல் பின்னிடுவதற்கு இடமில்லை. அவர்களுக்குப் பின்னால் நதி சமீபித்துவிட்டது. செஞ்சேனை வீரர்களை நதிக்கு இப்பால் உடனே கொண்டுவருவதென்பதும் முடியாத காரியம். அவர்கள் தமது பின்னீட்டை நிறுத்தித் துணிவோடு தாகக் குதலை எப்படியும் சமாளிக்க வேண்டும். இந்தச் சமயத் தில் சில செஞ்சேனைக் குதிரை வீரர்கள் போரெல்லைக் கோட்டை நோக்கிப் பாய்ந்து, கீழே குதித்தனர். அவர்கள்,

ப்ரூன்ஷும், ராணுவ அரசியல் துறையைச் சேர்ந்த டிரால்வினும், இதர சக ஊழியர்களும்தான். ப்ரூன்ஷ் ஒரு துப்பாக்கியைப் பிடித்துக்கொண்டு "ஹூர்ரா... ஹூர்ரா தோழர்களே முன்னேறுங்கள், துணிந்து முன்னேறுங்கள்" என்றபடி முன்னோக்கி ஓடினான். அவனுக்கு அருகில் நின்ற எல்லா வீரர்களும் அவர்களை அடையாளம் தெரிந்துகொண்டனர். ப்ரூன்ஷ் போரெல்லைக்கு வந்துள்ள செய்தி மின்னல் போலப் பரவியது, எல்லா வீரர்களிடத்தும் உற்சாக வெள்ளம் கரை புரண்டது, சுதந்திர தாகம் பீறிட்டது, வெறி கொப்புளிக்கத் துணிந்து பாய்ந்து தாக்க ஆரம்பித்தனர். இந்தச் சம்பவம் எந்த நாளும் மறக்க முடியாதது; துப்பாக்கிகளை வெடிக்காது, முனைகளைக் கொண்டே முன்னேறிவந்த எதிரிகளைச் சின்னாபின்னப் படுத்தினர். உணர்ச்சியால் உந்தப்பட்டு, மூர்க்கமாகப் போரிட்டனர். இப் போரைச் சமாளிக்க முடியாது எதிரிகள் பின்னிட்டுக் கிளம்பிவிட்டனர்.

சிஷோவ் தனது பணியாட்களை அனுப்பி, போர்முனையில் நின்ற ப்ரூன்ஷைப் பாதுகாக்குமாறு உத்தரவிட்டான். "ஒரு வேளை ப்ரூன்ஷ் போர்முனையில் கொல்லப்பட்டால் எப் பாடுபட்டேனும் அவனுடைய சடலத்தை இங்கு கொண்டுவந்துவிடுங்கள். நதியைத் தாண்டுமிடத்தில் உள்ள படகுக்குக் கொண்டுவந்துவிடுங்கள்!" என்று ஆணையிட்டு அனுப்பி யிருந்தான்.

நதிப் புறத்திலிருந்து வண்டிக் கணக்காக வெடிமருந்துகள் துரிதமாக அனுப்பப்பட்டன. நோவியே டர்பாஸ்லியையும் தாண்டிப் போரெல்லைக்கோடு அமைந்ததும், வெடிமருந்துகள் செஞ்சேனையைச் சென்றடைந்தன.

பிற வீரர்களுடன் டிரால்வின் போர்முனையில் முன்னேறி ஓடியபொழுது எதிரியின் குண்டொன்று அவனுடைய மார்பில் தைத்தது. உடனே தாக்கிப் போர்முனையை விட்டு அவன் வெளியே கொண்டுவரப்பட்டான். இப்



பொழுது செங்கொடிப் பதக்கம், நெஞ்சில் காயம்பட்ட அந்த இடத்தில் பிரகாசமாக ஜொலிக்கிறது. கொஞ்சம் தப்பியிருந்தால் அந்தச் சிறு காயமே அவனுடைய உயிருக்கு உலை வைத்திருக்கக் கூடும்!

எதிரிப் படைகளின் தாக்குதல் அலையைச் சாமர்த்தியமாகத் திருப்பிவிட்டுத் தங்களுடைய இலக்குகளைப் பலப்படுத்திக்கொண்டார்கள். ப்ரூன்ஷ் அந்தப் படைப் பகுதியைவிட்டுச் சிஷோவுடன் புறப்பட்டுப் புகாசோவின் படைக்குச் சென்றான். அவர்களிருவரும் வழியில் தென்பட்ட மணற் குன்றுகள்மீதும் திட்டுக்கள்மீதும் ஏறி நின்று நாட்டுப்புற நிலையைக் கண்டறிந்தனர்; நேரடியாகக் கண்டதுடன் தேசப்படத்தையும் ஒப்பிட்டு வெற்றிகரமாகத் தாக்குதலைத் தொடர மேற்கொள்ள வேண்டியன பற்றி விவாதித்தனர். புகாசோவின் படைகள் நதிதீரத்து வழியாகத் தொடர்ந்து முன்னேறி வந்தன. ஸ்டெபான் ராஷின், தொமாஷ்கின் ஆகிய இரு பிரிவுப் படைகளும் நெடுஞ்சாலை வழியாகத் தொடர்ந்து வந்தன. அன்று மாலை, பொதுவான வலுத் தாக்குதலுக்கு உத்தரவிடப்பட்டது. புகாசோவின் படைகள் வலது புறத்தும், ஸ்டெபான் ராஷின், தொமாஷ்கின் ஆகிய இரு படைகளும் நடுவிலும், இவானோவா வீரர்களது படைகள் இடது புறமுமாகப் போரிட்டு முன்னேறவேண்டும். சற்று நேரத்தில் ஸ்டாரியே டர்பாஸ்லியைக் கைப்பற்றி அங்கு பாடியமைத்துத் தங்கினர். அந்தச் சமயத்தில் எதிரிப் படைகளைப்போன்ற ஒரு கூட்டம் அவர்களுக்குப் புலப்பட்டது. அப்படைகள் வடக்குத் திசையிலிருந்து இவானோவா-வோஷ்னெஸென்க் ரெஜிமெண்டின் நடுப் பாகத்தைத் தாக்கும் நோக்கோடு செல்வதாகத் தோன்றியது.

"அது என்னமாவது மாட்டு மந்தையாக இருக்கும்" என்றான் ஒருவன்.

"என்னய்யா, துப்பாக்கி முனைகள் பளிச்சிடுவது கண்

ணில் பட்டுக் கூசுகிறது. அதைவிட்டு மாட்டு மந்தையாவது?" என்று இன்னொரு வீரன் மறுத்துரைத்தான்.

துப்பாக்கி முனைகள் பளிச்சிடுகின்றனவா இல்லையா என்பதைத் துணிந்துகூற ஒருவராலும் முடியாவிட்டாலும் கூட, எதிரிப் படைகள்தாம் முன்னேறி வருகின்றன வென்பதை அனைவரும் ஏற்றுக்கொண்டனர். இனி நடக்கப் போகும் போரைப் பொறுத்துத்தான் வெற்றி தோல்வி நிர்ணயிக்கப்படும் என்பதையும் புரிந்துகொண்டனர். ப்ருன்ஷ் இந்தப் போரிலும் பங்குகொள்ள விரும்பினான். ஆனால் ! அவனது உதவி ஆற்றுப் பகுதியில் வீரர்களைக் கடத்துவிக்கும் வேலைக்குத் தேவையென்று கூறி, சிஷோவ் தடுத்துவிட்டான். ப்ருன்ஷ் ஆற்றைத் தாண்டும் இடத்திற்கே புறப்பட வேண்டுமென எல்லோரும் கருதினர். ப்ருன்ஷும் குதிரையில் ஏறிப் பாய்ந்து புறப்பட்டான். நதிக்கரை யருகில் சமீபித்தபொழுது பாய்ந்துவந்த குண்டு அவனுடைய குதிரையை அவ்விடத்திலேயே மாய்த்துவிட்டது; அதிர்ந்த குண்டு முழக்கத்தால் ப்ருன்ஷே கதி கலங்கிவிட்டான். என்றாலும் நதிக் கரையில் நடந்த வேலையைவிட்டு வரவில்லை. இதர வீரர்களுடன் சூழ்ந்து நின்று புதிய செஞ்சேனைப் படைகள் ஆற்றைக் கடக்க உதவிசெய்துகொண் டிருந்தான்.

பீரங்கிப் படைகளில் பெரும்பகுதி ஆற்றைத் தாண்டி விட்டது. இவானோவா-வோஷ்னெஸென்க் ரெஜிமெண்டுக்குப் பின்னணியில் கிறிப்டாவ் பீரங்கிப் படைகள் நிறுத்தப்பட்டன. எதிரியின் முதல் வலுத் தாக்குதலைச் சமாளிக்க முடியாது செஞ்சேனை வீரர்கள் கலகலக்கத் தொடங்கியபொழுது கிரிப்டாவ் பீரங்கிப் படைகள் முழங்க ஆரம்பித்தன. தங்களுக்கு உதவியாக எழுந்த முழக்கத்தைக் கேட்ட வீரர்கள் முனைந்து தாக்கினார்கள்.

என்றாலும்கூடத் தாக்குதலை முன்னோக்கிச் செலுத்த முடியவில்லை. எதிரிப் படைகள் அனைத்தும் வடக்குத்



திசையிலிருந்து ஒருமுனையாக அனுப்பப்பட்டன. அப்படைகள் ஸ்டெபான் ராஷின், தொமாஷ்கின் படைகளை மோதுவதற்குச் சரியாக முன்னேறி நெருங்கின. எண்ணிக்கையில் பெருகியிருந்த வெள்ளைப் படைகளைக் குலைக்கச் செஞ்சேனை வீரர்களால் முடியவில்லை. ராஷினுடைய படைப்பகுதி குலைந்து பின்னிடத் தொடங்கியது. ஒரு பட்டாளம் அனைத்தும் குழப்படிபட்டுத் தலைவிரி கோலமாய்க் கலைந்தது. அப்படையில் பயிற்சிபெற்ற பல வீரர்கள் இருந்தாலும், புதிய வீரர்களும் நிறைய இருந்தார்கள். இப்புதிய வீரர்கள் எதிர்பாராத பாதகத் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது இலக்கைவிட்டு நதிக் கரையை நோக்கி ஓட ஆரம்பித்தனர். அவர்களைத் தொடர்ந்து விஷயம் புரியாத பல வீரர்களும் ஓடினர். எஞ்சிய வீரர்கள் எதிரியின் வலுத் தாக்குதலைச் சமாளித்தபடி மெதுவாகப் பின்னிட்டு வந்தனர். இவானோவா ரெஜிமெண்ட், டர்பாஸ்லியில் தங்கிவிட்டது. எனவே எதிரியின் குறி அவர்கள்மீதும் திரும்பியது. உடனே சிஷோவ் பீரங்கிப் படைத் தலைவனிடம் சென்றான்.

"ஸ்டெபான் ராஷினுடைய படைகள் பின்னிடுகின்றன. ஓடிச் சென்று உதவுங்கள். அவர்களை விரட்டிவரும் வெள்ளைப் படையைத் தகர்க்கத் துப்பாக்கிகளை வலது புறமாகத் திருப்புங்கள்" என்று கத்தினான்.

பீரங்கிப் படைத் தலைவன் தனது பீரங்கிகளை அத்திசை நோக்கிச் செலுத்தினான் சரமாரியாகக் குண்டுகள் புறப்பட்டு எதிரிப் படைகளைத் துவம்சம் செய்தன. ஏராளமான வீரர்களுடன் முன்னேறி வந்த படைகள் ஈசல்போல மாய்ந்தன. குழப்பம் தலை யெடுத்தது. முன்னேறிவந்த கோல்சாக்கியப் படைகள் அதிர்ச்சிகொண்டு மலைத்து நின்றன. தாக்குதல் உக்கிரமாகவே, முன்னேறிய வேகத்திலே பின்னிட்டோடத் தொடங்கினர். குண்டுகள் புறப்பட்டுப் பாய்ந்து வந்துகொண்டே யிருந்தன. எதிரிகள் பின்னிடப்

பின்னிடச் செஞ்சேனையும் முன்னேறிற்று. செஞ்சேனைக் குண்டுகள் வெள்ளைப் படைகளை உழுது தள்ளிவிட்டன. எதிரிகள் கண்ணுக்கெட்டிய தூரம் ஓடிஒளிந்தனர், தாக்குதல் நிறுத்தப்பட்டது. திடீர்த் தாக்குதலுக்கு ஆளான ஸ்டெபான்ராஷின் படைவீரர்கள் புத்துவுணர்பெற்றனர்!

இந்த நேரத்தில் வீரர்கள் ஆற்றைக் கடப்பதற்குத் துணையாகச் சப்பாயேவுடன் நின்றுகொண்டிருந்தான் மிக்கைலாவ். நதிக்கு அப்புறத்தில் பல செஞ்சேனை வீரர்கள் வேகமாக இந்தச் சமயத்தில் ஓடி வருவதைக் கண்டான். அவர்களுடைய துரிதத்தைக் கண்ட மிக்கைலாவ் ஏதோ விபரீதம் நடந்துள்ளது என்பதை உணர்ந்துகொண்டான். இதைச் சப்பாயேவிடம் தெரிவிப்பதற்காக ஓடினான். என்றாலும்கூட இவையனைத்தும் சப்பாயேவிற்கு ஏற்கெனவே தெரியும். சற்று நேரத்துக்கு முன்னர்தான் சிஷோவுடன் போனில் இதைப்பற்றிப் பேசினான். சப்பாயேவிடம் சொல்வதற்கு மிக்கைலாவ் வாயைத் திறந்தபொழுதே சப்பாயேவ் உத்தரவிடத் தொடங்கிவிட்டான்.

"மிக்கைலாவ் கவனி! இப்பொழுதுதான் இன்னொரு பட்டாளத்தை ஏற்றி ஆற்றைக் கடக்க நாம் அனுப்பியுள்ளோம். நாம் இன்னும் ஏராளமான வீரர்களை அனுப்ப வேண்டியிருக்கிறது. ஆனால் அது மட்டுமல்ல. ஆற்றங்கரைக்கு அண்மையில் ஓடிவந்துள்ள நமது வீரர்களை நாம் திரும்பவும் முன்னேறிச் செல்லுமாறு விரட்ட வேண்டும். புரிகிறதா? அவர்கள் எல்லாவற்றையும் கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நதிக்குக் குறுக்கே பாய்ந்து சென்று, போரெல்லைக் கோட்டிற்கு அவர்களை நடத்திச் செல், தெரிந்ததா?" என்றான் சப்பாயேவ்.

அடுத்த கணத்தில் ஆற்றின் மறு கரைக்குப் பாய்ந்துவிட்டான் மிக்கைலாவ்.

அவன் வார்த்தையேதும் பேசவில்லை. சூழ்நிலையில் அதற்கெல்லாம் நேரமில்லை. ஓடிக்கொண்டிருந்த செஞ்



சேனையினரைத் தனது சாட்டையையும் துப்பாக்கியையும் கொண்டு தடுத்து நிறுத்தினான்.

"ஓடுவதை நிறுத்துங்கள். என்ன ஆளப்பா நீங்க? எங்கே ஓடுகிறீர்கள்? நில்லுங்கள். என்னைப் பின்பற்றி முன்னேறுவதுதான் உங்களுடைய ஒரே திட்டம்! ஒரு வார்த்தையும் பேசாது என்னைப் பின்தொடருங்கள். இனி யாராவது ஓடினால் அவன் தலையில் துப்பாக்கிக் குண்டு செருகப்படும்! உங்களுக்கடுத்த ஆள் ஓடினாலும் நீங்களே சுட்டுவிடுங்கள். தோழர்களே! முன்னேறுங்கள்" என்று கத்தினான்.

மிக்கைலாவ் சரியான சமயத்தில் தலையிட்டதால் குழப்பம் குறைந்தது. ஆற்றங் கரையை நோக்கி ஓடிக்கொண்டிருந்த அனைவரும் நிறுத்தப்பட்டனர். நெருக்கியடித்துக்கொண்டு பயத்துடன் அனைவரும் மிக்கைலாவை நெருங்கினர். "ஒரு வேளை இந்த ஆசாமி நம்மைக் காப்பாற்றக் கூடும்" என்ற நம்பிக்கையுடன் அவனது முகத்தைக் கலக்கத்துடன் உற்றுப் பார்த்தனர்.

உண்மையில் அவர்களை அவன் காப்பாற்றினான்! அந்த மாதிரியான குழப்பச் சூழ்நிலைகளில் அவர்களை ஒரு நிலைப்படுத்தத் தகுந்த கருவி சாட்டை அல்லது துப்பாக்கிதான். சிதறிய செஞ்சேனை வீரர்களையெல்லாம் செம்மை செய்து முன்னேற்றப் பாதையில் தலைமையேற்று நடத்தினான் மிக்கைலாவ். அவர்களிடத்தில் மீண்டும் ஒழுங்கை நிலைநிறுத்தினர். குழம்பி நின்ற கூட்டம் மீண்டும் கட்டுப்பாடான இராணுவமாகிவிட்டது. அவர்களைக் கூட்டிக்கொண்டு பிரதம ராணுவத்தை யடையச் சென்றான். அப்பொழுது பிரதம ராணுவப் பகுதியும் பின்னிட்டுக்கொண்டிருந்தது. இந்த வீரர்கள் நெருங்கி வருவதைக் கண்டதும் 'புதுப் படைகள் வருகின்றன, புதுப் படைகள் வருகின்றன' என்று மகிழ்ச்சியால் முழங்கினார்கள்.

வருவது புதுப்படை யில்லை, ஓடிப்போன பழைய

முத்தண்ணாக்கள்தான் என்று அவர்களை அப்பொழுது திருத்த முயல்வது மகா முட்டாள்த்தனமானது. மாறாக வருவோர் அத்தனை பேரும் புதுப்படையினர்தான் என்று அவர்கள் உற்சாகமூட்டப்பட்டனர். உடனே பின்னிட்டு வந்த பிரதமப் பகுதி முன்னேறித் துணிந்து தாக்கத் துவங்கியது. என்றாலும் கூட வெற்றி கிட்டும் அளவிற்கு முன்னேற முடியவில்லை. எதிரிப் படைகளை மிகவும் கஷ்டப்பட்டுப் பின்னிட வைத்தார்கள். ஆனால் இங்கு பின்னிட்ட எதிரிப் படைகள் இவானோ-வோஷ்னெஸென்க் ரெஜிமெண்டைத் தாக்க ஒருசேரத் திரண்டு சென்றன. பல வெள்ளைப் படைகளின் ஒருமித்த தாக்குதல் அனைத்தையும் திறமையோடும் துணிவோடும் சமாளித்து நெசவாள வீரர்கள் ஈடு கொடுத்திருந்தார்கள். வரம்பு கடந்த வீரத்தையும், சொல்லவொண்ணாத் துணிவையும் முழு மூச்சுடன் காட்டி எதிரிப் படைகளை மலைக்கச் செய்தனர். செஞ்சேனைப் படைகள் தமது உதவிக்கு வந்து சேரு மட்டும் எதிரியின் தாக்குதலுக்கெல்லாம் அசையாது போரெல்லைக் கோட்டில் உறுதியாக நின்றார்கள்.

புகாசோவின் படை நதி தீரத்தையொட்டியே மிகவும் முன்னேறிச் சென்றுவிட்டது. செஞ்சேனையின் இதர படைகளுக்குத் தொடர்பில்லாத தூரத்திற்குச் சென்றுவிட்டது. எனவே பிரதம படைப் பகுதியைவிட்டுத் துண்டிக்கப்படாமல் இருப்பதற்காக அதைப் பின்னுக்கிழுக்க வேண்டியிருந்தது. பின்னிட வேண்டிய உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து புகாசோவின் படைகள் பின்வாங்கின. இதுவரை பேசாதிருந்த எதிரிப் படைகள், இவர்கள் பின்னிடுவதைக் கண்டதும் தொடர்ந்து தாக்க ஆரம்பித்தன. ஏற்பட்ட அழிவையும் பொருட்படுத்தாது உத்திரவுப்படி புகாசோவின் படை பின்வாங்கிக்கொண்டே யிருந்தது. முன் வந்து தாக்கிய எதிரிப் படைகளுக்கு எதிர்த் தாக்குதல் ஏதும் செய்யாது பிற செஞ்சேனைப் படைகளுடன் விரை



வில் சேர்ந்துகொள்ளுவதற்காக இவர்கள் பின்னிட்டு வந்தனர்.

எல்லாப் படைப் பகுதிகளும் மீண்டும் நெடுஞ்சாலையில் அணிவகுத்து ஒருசேர நிறுத்தப்பட்டன. அப்பொழுது...சப்பாயேவிற்குத் தலையில் பலமான காயம்பட்டுவிட்டதென்றும், படைத் தலைமைப் பொறுப்பு சிஷோவுக்கு மாற்றப்பட்டுள்ளதென்றும் செய்தி வந்தது. நெஞ்சொடிக்கும் இந்தச் செய்தி நொடியில் எல்லாப் படைப்பகுதிகளும் பரவிற்று, வீரர்கள் அனைவரும் இதயம் இடிந்து போனார்கள். சப்பாயேவ் போரிடும்பொழுது அவர்களில் யாரும் இதுவரை பார்த்ததில்லை. என்றாலும் அவன் எப்பொழுதும் தங்களுடனே இருப்பதாக அனைவரும் உணர்ந்திருந்தனர். செஞ்சேனையின் எல்லாத் தாக்குதலும், முன்னேற்றமும், பின்வாங்கலும், இதர போர் நடவடிக்கைகளும் அவனுடைய கண்காணிப்பிலேயே நடக்கின்றன என்பதும் அவர்களுக்குத் தெரியும். எத்தகைய இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டாலும், தகுந்த தீர்வைச் சப்பாயேவ் கண்டுபிடித்துவிடுவான் என்று அவர்கள் எப்போதும் நம்பியிருந்தனர். சப்பாயேவ், சிஷோவ் போன்ற சிறந்த தளபதிகள் எப்போதும் அவர்களை அழிவுப் பாதையில் அழைத்துச் சென்றதே யில்லை.

சப்பாயேவிற்குக் காயம் ஏற்பட்டுவிட்டதென்ற செய்தியைக் கேள்விப்பட்டதும் எல்லாம் மந்தமாகிவிட்டது, வருத்தமான சூழ்நிலை பரவியது. இந்தச் சமயத்தில் படைகளின் முன்னேற்றம் தடைப்பட்டது, அந்தி வானத்து மயக்கிருளும் போரை நிறுத்தி விட்டது. படைப் பகுதிகளில், பயங்கர அமைதி சூழ்ந்தது. காவற்காரர்கள் எல்லா இடங்களிலும் நிறுத்தப் பட்டனர். பாதுகாப்புப் படைகள் எல்லாத் திசைகளிலும் அனுப்பப்பட்டன. படைப் பகுதிகள் ஓய்விற்காகத் தாமதித்தன. மறு நாட் காலை சூரியோதயத்திற்கு முன் மீண்டும்

தாக்குதலைத் தொடங்க வேண்டுமென உத்தரவிடப்பட்டது.

ஆற்றைக் கடக்கும் இடத்தில் நின்றபொழுது ஒவ்வொரு பத்து நிமிடத்துக்கும் ஒரு முறை சப்பாயேவ், சிஷோவுடனும் இதர படைத் தளபதிகளுடனும் போன் மூலம் பேசிக்கொண்டேயிருந்தான். செய்திப் போக்குவரத்து வசதிகள் நன்கு செய்யப்பட்டிருந்தன. இல்லாவிட்டால் திட்டமிட்டபடி தாக்குதலை வெற்றிகரமாக நடத்திச் சென்றிருக்க முடியாது. ஆற்றுக்கு அப்பால் நடக்கும் நிகழ்ச்சிகளைப்பற்றிச் சப்பாயேவ் எப்பொழுதும் அறிந்துகொண்டான். போர்முனை வீரர்கள், தளவாடவசதி, வெடி மருந்துகள் முதலியவற்றில் பற்றுக்குறை நிலையை எய்தும்பொழுது, சப்பாயேவிற்கு எது எங்கு தேவையென்பது தெரிந்துவிடும். அடுத்த படகில் வேண்டியவற்றைச் சுணங்காது அனுப்பிவிடுவான். படைப் பகுதிகளின் முன்னேற்றத்தைப்பற்றியும், எதிரிப் படைகளின் போர் முறைபற்றியும், படைப் பலம்பற்றியும் அடிக்கடி விசாரித்துத் தெரிந்துகொண்டான். ஒவ்வொரு விபரத்தையும் விளக்கமாகக் கேட்டறிந்தான். ஒவ்வொன்றையும் சீர்தூக்கிப் பார்த்து நிலையை நிதானித்துக்கொண்டான். சில சமயங்களில் எதிரியின் ஆகாய விமானங்களைக் கண்டு மனத்தை அலட்டிக்கொண்டான். ஆனால் ஆத்திரப்பட்டானே தவிரக் குழப்பமடையவில்லை. நமது விமானங்களுக்குப் போதிய பெட்ரோல் இன்மையால் வானத்தில் எதிரிகளைச் சந்திக்க நம்மால் முடியவில்லை. எதிரிப் படைகளின் தாக்குதல் தரையிலும் வானத்திலும் பொழிந்துகொண்டிருந்த சமயத்தின் ஊடேதான் ஆற்றைக் கடந்து செஞ்சேனையினரைக் கொண்டும் வேலையைத் துரிதமாக நடத்தவேண்டியிருந்தது. மேலும் இதைத் தவிர வேறு மார்க்கமேதும் கிடையாது. நமது பீரங்கிப் படைகளின் தொடர்ந்த முழக்கம் எதிரியின் ஆகாய விமானங்களைத்



தாழப் பறக்கவிடவில்லை. என்றாலும் அவற்றை விரட்டி
விடவும் முடியவில்லை. ஆகாய விமானத் தாக்குதலால்
ஏற்பட்ட இழப்பும் சேதமும் குறிப்பிடத்தக்கவையே. இங்
தத் தாக்குதலின்போதுதான் ஆற்றங் கரையில் சப்பாயே
விற்குக் காயம் ஏற்பட்டது. ஒரு தோட்டா அவனது தலை
யில் பாய்ந்து எலும்பில் தைத்துவிட்டது. சிகிச்சையின்
போது தலையில் பாய்ந்த தோட்டாவை வெளியே எடுக்கும்
பொழுது மருத்துவக் கருவிகள் ஆறு முறை வழுவிவிட்
டன. அப்பொழுது சப்பாயேவ் அமைதியாக உட்கார்ந்
திருந்தான். கொஞ்சங்கூட முனகாது கொடுமையான
வலியைப் பொறுத்துக்கொண்டான். காயத்திற்குக் கட்
டுப் போடப்பட்ட பின், ஊபாவிற்கு இருபது கல் தொலை
வில் உள்ள அவ்டான் என்னும் சிற்றூருக்குச் சப்பாயேவ்
கொண்டு செல்லப்பட்டான். இது எட்டாம் தேதி மாலை
நடந்தது. செஞ்சேனையினரின் திட்டமிட்ட பெருந் தாக்கு
தல் ஒன்பதாம் தேதி யன்று காலை துவங்க இருந்தது.

நதி தீரத்தில் மேற்கொண்ட பாதுகாப்புப் போர்
முறை, பீரங்கிப் படைகளின் திட்டமிட்ட உதவி, செம்
மையான போக்குவரத்து வசதிகள், செய்தித் துறை வசதி
கள், களைப்பின்றி ஆற்றைக் கடந்து வீரர்களை அனுப்பிய
துரிதம்—ஆகிய அனைத்தும் போர்த் துறையில் செஞ்சேனை
யினரின் இணைந்த வேலைத் திட்டத்தையும், தெளிவான
நிறுவன ஒருமைப்பாட்டையும், நிலைத்த சமாளிப்பையும்
தெளிவாக்குகின்றன. இவையனைத்தும் எந்த ஒரு தனிப்
பட்டவனுடைய செயலாலும் நிறைவேறவில்லை. வெற்றி
பெறவேண்டுமென்ற செஞ்சேனை வீரர்கள் அனைவரது
கூட்டுப் பொறுப்பால் விளைந்த அபரிமித உணர்ச்சியால்
நிறைவேறியனவாகும். வெற்றி பெறவேண்டுமென்ற
இந்த ஊக்கம் செஞ்சேனைத் தளபதிகளின் ஒவ்வொரு உத்
தரவிலும், செயலிலும், கமிசார்களின் அலுவலிலும், செஞ்
சேனைவீரர்களின் போர்த் திறத்திலும் துலங்கிற்று.

வெள்ளையர்களிடமிருந்து பிரிந்து வந்த தொழிலாளி ஒருவன் அன்று மாலை சிஷோவிடம் கொண்டுவரப்பட்டான். மறுநாட் காலை எதிரிகள் இரு படைகளை அனுப்பிப் பெரும் போரிடத் தீர்மானித் திருப்பதாகத் தெரிவித்தான். அந்தப் படைகள் புகாசோவின் படைப் பகுதியை நேரடியாகத் தாக்கி, அப்படையை இதர செஞ்சேனை ராணுவத்தினின்று பிரித்து, வடக்கே போரிட்டுவரும் வெள்ளைப் படையோடு சேர்ந்து நிர்மூலமாக்கிவிட வேண்டுமெனத் திட்டமிட்டிருந்தனர் என்றும் தெரிவித்தான். அந்தத் தொழிலாளி, தான் ஊபாவில் ஒரு தொழிற்சாலையிலிருந்து வந்தவனென்றும், சோவியத் ஆட்சியின் அனுதாபியென்றும், எனவே தான் தன் உயிரையும் திரணமாக மதித்துச் செஞ்சேனையினர்க்கு எச்சரிக்கை செய்ய வந்ததாகவும் சத்தியம் செய்தான். தான் ஊபாவில் ஒரு வீட்டில் வேலை செய்துகொண்டிருந்தபொழுது வெள்ளைப் படைகளின் இந்தப் படையெடுப்புத் திட்டத்தைக் கேள்விப்பட்டதாகத் தெரிவித்தான். தான் சத்தியமாக உண்மையே பேசுவதாகவும் அதை எந்த வகையிலும் நிரூபிப்பதாகவும் உறுதி கூறினான். அவனை நம்புவதா இல்லையா என்ற தெளிவு அவர்களுக்கு ஏற்படவில்லை. எப்படியாயினும், சிஷோவ் தனது மறுநாள் தாக்குதலை ஒரு மணி நேரம் ஒத்திப்போட்டான். படைகள் வலுப்படுத்தப்பட்டன. ஏராளமான சுழல் துப்பாக்கிகள் கொணரப்பட்டன. வரப்போகும் எதிரிப் படைகளை வரவேற்க அவை முன்னணியில் நிறுத்தப்பட்டன. அந்தத் தொழிலாளி பாதுகாப்பில் வைக்கப்பட்டான். அவன் சொன்னபடியே வெள்ளைப் படையினர் தாக்காவிட்டால் அவனைச் சுட்டுப்பொசுக்கிவிடப் போவதாக அச்சுறுத்தி வைத்தனர்.

அமைதியற்ற அன்று இரவு மெதுவாக நகர்ந்தது. முந்திய நாளின் பெரும் வேலைக் களைப்பிருந்தும் பல தளபதிகளுக்கு உறக்கமே வரவில்லை. ஊபாவிலிருந்து வந்த



தொழிலாளி தெரிவித்த தகவல் எல்லா வீரர்களுக்கும் அறிவிக்கப்பட்டது. எல்லோரும் எதிரியைச் சந்திக்கத் தயாராயினர். கடைசியாகப் பொன்னான அந்தப் நேரமும் புலர்ந்தது.

எதிரிப் படைகளின் குறிப்பிடப்பட்ட அதிகாரி பகுதியும் காப்பெல் படையும் சந்தடியேதுமின்றிக் கரும் படைகளாக முன்னேறின. யாரும் ஒரு வார்த்தையும் பேசவில்லை. எங்கும் வெடிச் சத்தமே எழவில்லை. அவர்கள் வெகு தூரம்வரைப் பரவலாக அணிவகுத்து முன்னேறி வந்தனர். போரெல்லைக் கோட்டில் சோர்ந்து தூங்கும் செஞ்சேனையினரைத் திடீரெனச் சந்தடியின்றித் தாக்கித் திகிலடையச் செய்ய வேண்டுமென்றும், அத்திகிலடைந்த நிலையிலேயே அனைவரையும் அழித்துவிட வேண்டுமென்றும் திட்டமிட்டு முன்னேறி வந்தனர் எனத் தோன்றியது.

செஞ்சேனையினர் எதிரிகள் மிகச் சமீபத்தில் நெருங்கும்வரை ஒன்றும் அறியாதவர்கள் போலப் பேசாதடங்கியிருந்தனர். தயாராகக் காத்திருந்த சுழல் துப்பாக்கிகள் திடீரென உத்தரவு கேட்டதும் பொழியத் தொடங்கின. பார்க்கப் பொறுக்காத கொடுமைகளைப் பீரங்கிகள் சொரிந்தன. எதிரிப் படைகளை அடியோடு துடைத்துவிட்டன. பகுதி பகுதியாக வெள்ளைப் படைகள் வீழ்ந்து மடிந்தன. தாங்கள் பதுங்கியிருந்த கிடங்குகளிலிருந்து செஞ்சேனை வீரர்கள் அனைவரும் பாய்ந்து புறப்பட்டனர். எதிரிகளின் ஒரு படைப் பகுதியைச் சூழ்ந்துகொண்டனர். இன்னொரு பகுதி பின்வாங்கித் தப்பிவிட்டது, அப்படையைப் பல கல் தொலைவிற்குச் செஞ்சேனையினர் துரத்திச் சென்றனர். இவ்விதம் அவர்கள் எதிர்பாராது அடைந்த வெற்றி பல இனிய நம்பிக்கைகளுக்கும் வழி காட்டியது!

கைது செய்யப்பட்ட அந்தத் தொழிலாளி விடுவிக்கப்பட்டான். சகல ராணுவ மரியாதைகளுடன் படைத் தலை

மைக் காரியாலயத்திற்கும், பிறகு அங்கிருந்த ராணுவ நிலையத்திற்கும் அனுப்பப்பட்டான்.

நதிப் பாலத்தில் தங்கியிருந்த பொடாபோவின் படைகளுடன் தங்கியிருந்த பியோடாரிடம் போர் நடைபெற்ற முழு விபரத்தையும் சிஷோவ் தெரிவித்தான். அந்த வெற்றிக்குப் பின், செஞ்சேனைப் படைகள் எங்கும் தங்காது முன்னேறிச் செல்லுவதாகவும் அறிவித்தான். ஒன்பதாம் தேதியன்று மாலையில் ஊபா நகரையே நெருங்கிவிட்டார்கள் செஞ்சேனைச் சிங்கங்கள்!

பியோடார், தன்னோடு சில தோழர்களை அழைத்துக்கொண்டு சப்பாயேவை விட்டுப் பொடாபோவின் படையை நோக்கிப் புறப்பட்டான். அவ்டான் கிராமத்திலிருந்து மணல் நிறைந்த ஊபா மலைக் குன்று இருபது கல் தொலைவில் இருப்பது கண்ணுக்குத் தெரிந்தது. அந்த மலைக் குன்றின் சரிவில் இருந்த வீடுகளும் கோவில்களும் சூரிய ஒளியில் பளபளத்தன. வேகமாகச் சவாரி செய்து ஒரு பரந்த வெளியை அடைந்தார்கள். அந்த வெளி எதிரியின் கண்ணில் படும்படியாக, அவனுடைய துப்பாக்கி இலக்குக்கு ஏற்ப அமைந்திருந்தது. ஏதாவது சில இயக்கங்களையோ, நடமாட்டங்களையோ புல் வெளியில் கண்டவுடன் எதிரிப் பீரங்கிகள் அனல்கக்க ஆரம்பித்தன. சரவாரியாகச் சென்றவர்கள் தனித் தனியாகச் சிதறிப் பிரிந்து துணைப் படைத் தலைமைக் காரியாலயம் இருந்த திசையை நோக்கிச் சென்றனர். ரயில் பாதைக் குறுக்குச்சாலையொன்றைத் தாண்டினர். அந்த இடத்தில் ஏராளமான தளவாடப் பெட்டிகள் நெருப்புப் பற்றிக் கருகிப் போய்த் தடம் புரண்டு கிடந்தன; சில ரயில்ப் பெட்டிகள் தண்டவாளத்தின் மீதே உருக் குலைந்து நின்றன. மணற் குன்றுக்குப் பின்புறத்தில் எங்கோ ஓரிடத்தில் பதுங்கியிருந்து செஞ்சேனைப் பீரங்கிப் படை ஊபா நகரை நோக்கி முழங்கிக்கொண்டிருந்தது; அம்மணற் குன்றை அடுத்த



காட்டுக்குள்ளிருந்து சுழல் துப்பாக்கிகள் உறுமிக்கொண்டிருந்தன.

ஆற்றுக்கு அப்பால் இரண்டு, மூன்று கல் தொலைவில் உள்ள ஒரு சிறிய ரயில் நிலையத்தில் பொடாபோவ் அமைத்திருந்த துணைப்படைத் தலைமைக்காரியாலயத்தை அவர்கள் அடைந்தனர். அங்கு தளபதிகளின் கூட்டம் நடந்துகொண்டிருந்தது. நதியைக் கடப்பதற்குத் தகுந்த வழி எது என ஆராய்ந்தனர். ஆற்றின் குறுக்கே வலிந்து தாண்டுவது தொல்லை தருவதாகத் தோன்றியது. வேறு வழியாக ஆற்றைக் கடப்பதற்கும் வழியேதும் புலப்படவில்லை. என்றாலும் புதிய வழியைத் தேட முனைந்தனர். கடைசியில் ஒரு வழியாகத் தீர்வும் கண்டனர்.

பெலாயா நதிக்கரையில் இரு சிறு குடிசைகள் இருந்தன. தொலை பேசிக் கம்பிகள் இக் குடிசைகளுக்கு இணைக்கப்பட்டன. பாலத்தின் இரு புறத்துக் கரைகளிலும் வளர்ந்திருந்த புல் கற்றைகளுக்குள் படைகள் பதுங்கிக்கொண்டன. பின்னால் இருந்த காட்டிற்குள் பீரங்கிப் படைகள் ஒளிந்திருந்தன. பாலம் உண்மையிலேயே தகர்க்கப்பட்டதா இல்லையா என்பதை அன்று இரவே தெளிவாக்கிக்கொள்ளத் துணிந்தார்கள். படைக் காரியாலயத்திற்கு ஒரு ரகசியச் செய்தி வந்தது. அதில் ஊபாத் தொழிலாளர்கள், அந்த முக்கியமான பாலத்தை வெள்ளைப் படையினர் செம்மை செய்வதற்கே இடம் தரவில்லை என்பது குறிப்பிடப்பட்டிருந்தது. இரவு பதினொரு மணிக்குத் தொழிலாளர்களின் முதல் பிரிவினர் அங்கு வந்து பாலத்தைத் துவக்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது. பாலத்தைத் துவக்கி, மறைத்துக் கிடந்த ரயில்ப் பெட்டிகளை விலக்கி, தண்டவாளத்தைச் செப்பனிடத் தாங்களே வலிந்து சேவை செய்ய அத் தொழிலாளர்கள் வர இருந்தார்கள். பதினொரு மணி நடந்தது; பன்னிரண்டு மணியும் ஆயிற்று. ஒரு தொழிலாளிகூட வர

வில்லை. இரவு இரண்டு மணிவரைக்கும்கூட யாரும் வரவில்லை.

அதற்குப் பிறகு அத் தொழிலாளர்கள் வரும் செய்தியறிந்ததும், காட்டில் ஒளிந்திருந்த பீரங்கிப் படைகள் அவர்கள் வரும் பாதையைச் செம்மை செய்தன. தொழிலாளர்கள் பாலத்தைத் துவக்கச் செல்லுவதைத் தடுக்க முனைந்த எதிரிப் படைகளை நெருங்கவிடாது பல பீரங்கிகள் நதிப்படுகை முழுவதும் முழக்கமிட்டுக்கொண்டிருந்தன. போரெல்லைக் கோட்டிலிருந்த எதிரிகளின் பதுக்கல் கிடங்குவரை சென்று போரிட்டு, பாலத்தைத் துவக்கும் தொழிலாளர்களின்மீது படாது எதிரியின் கவனத்தை வேறு பக்கத்திற்குத் திருப்ப முயன்றனர். பாலத்தின் குறுக்குச் சுவர்களைச் செம்மை செய்யும் வேலை தொடங்கிய பொழுதே எதிரிப் படைகள் வலிய, பீரங்கிப் படைகளுடன் நெருங்கிவிட்டன. பாலத்துத் தண்டவாளத்தின்மீது முதல் சுத்தியல் அடிபட்டால் போதும், எதிரிப் பீரங்கிப் படைகள் குண்டு பொழியத் துவங்கிவிடும்! செஞ்சேனைப் பட்டாளம் தென்பட்டாலும் துளைத்தெறிவதற்காகப் பீரங்கிப் பாய்ச்சலை ஒத்திகைபார்த்துக் காத்திருந்தனர். பாலத்தின் கோடியில் இருந்த வெள்ளைக் கல் தூணுக்கருகில் இரு குண்டுகள் மாதிரிக்குப் பாய்ந்து சென்று தரையில் வெடித்தன. அடுத்தடுத்த குண்டுகள் எங்கே பாய முடியும் என்று வீராவேசமாக அக்குண்டுகள் பயமுறுத்தின. பீரங்கிப் படைகளுக்குத் தகுந்த யோசனைகள் சொல்லப்பட்டிருந்தன. அதன்படி பாய்ச்சப்பட்ட மூன்றாவது குண்டு பாலத்தின் வலதுபுறக் குறுக்குக் கட்டைகளைத் தகர்த்தெறிந்தது, குறுக்குக் கட்டைகள் நாலா பக்கமும் புறப்பட்டு வருவதைக் கண்ட தொழிலாளர்கள் ரயில் பெட்டிகளுக்கும் இப்பால் பதுங்கிக்கொண்டனர். அவர்கள் சற்று முன்பிருந்து விலகிய அதே இடத்தில் கொப்பாகப் பல குண்டுகள் விழுந்தன. அதைத் தொடர்ந்து வரிசையாகப்



பாய்ந்த குண்டுகள் தண்டவாளம் முழுவதையும் சிதறச் செய்து பாலத்தை உருக்குலைத்துவிட்டன. செப்பனிட வந்த தொழிலாளர்கள் மீண்டு குடிசைக்குப் பின்னால் அழைக்கப்பட்டனர். சிறிது நேரங் கழித்து பாலத்திற்கு மீண்டும் சென்று தங்களது அயராத வேலையைத் தொடங்கினர். இப்பொழுதும் எதிரிகளின் குறுக்கீடு இருந்தாலும் கூட, அவர்களது செப்பனிடும் வேலை தொடர்ந்து நடந்து வந்தது.

எதிரிகளின் தாக்குதல் இலக்கு பாலத்திற்குப் பின் புறம் தாண்டியவுடன் பியோடார், ஜோயா பவ்லோவ்னா, பெண் மருத்துவத் துணைவர்கள் இருவர், இருபது செஞ் சேனையினர்—ஆகியோர் கொண்ட கூட்டம் நதிக் கரையை அடுத்திருந்த சரிவில் தவழ்ந்து தவழ்ந்து ஏறினர். அப் பொழுது ஒருபெரும் குண்டு அவர்களது தலைக்கு நேராகப் பாய்ந்தது; இதைக் கண்ட அனைவரும் வெருண்டோடிக் கீழே குதித்தனர். ஓட்டமாக ஓடிச் சென்று, குடிசைக்குப் பின்னால் பதுங்கிக்கொண்டனர். நல்ல வேளை, இரண்டு பேருக்கு மட்டும்தான் காயம் ஏற்பட்டிருந்தது. இருவருக் கும் உடனே கட்டுப் போட்டார்கள், உடனிருந்த பெண் மருத்துவத் துணைவர்கள். அப்பொழுதும் பீரங்கிகள் தலைக்கு மேல் ஊளையிட்டுப் பாய்ந்து சென்றபடியே இருந் தன. பிறகு சுழல் துப்பாக்கிக் குண்டுகள் குடிசைக் கூரையைச் சல்லடையாகத் துளைத்துக்கொண்டிருந்தன. ஒரு வார்த்தையும் பேசாமல் சுவரோடு சுவராக அனைவரும் அஞ்சிப் பதுங்கிச் செத்தவர்களைப்போல் இருந்தார்கள். அதே சமயத்தில் காட்டுக்குள் மறைந்திருந்த செஞ்சேனைப் பீரங்கிகளும் அவர்கள் தலைக்கு மேலே பாய்ந்து சென்று எதிர் முழக்கமிட்டன. இரண்டுக்கும் நடுவில் பெருமூச்சு விட்டபடி பதுங்கிக் கிடந்தார்கள். அதிலும் எதிரியின் குண்டுகள் வரும்பொழுது மிகக் கவனமாகப் பார்த்துக் கொண்டனர்.

"இந்தக் குண்டு இங்கே விழுமா? அல்லது பறந்து போய்விடுமா?" என்ற பயங்கர எண்ணம் எல்லொரது நினைவையும் திகில் கொள்ளச் செய்தது. அப்பொழுது பக்கத்தில் ஒரு குண்டு விழுந்ததால் ஏற்பட்ட பெரும் பதறல் ஒலியும் திடீர் முழக்கமும் அவர்கள் அடிவயிற்றைக் கலக்கிவிட்டன. அவர்கள் உடம்பைச் சுக்கல் சுக்கலாகப் பிய்த்தெறிவதாகப் பிரமை கொண்டனர். எல்லோரும் ஒருவரோடு ஒருவர் உராய்ந்துகொண்டு ஒட்டிப் போயினர். எல்லோருடைய நெஞ்சும் 'திக்திக்' எனப் பேரொலியுடன் அடித்துக்கொண்டது. கைகளால் முகத்தை மூடிக்கொண்டார்கள். அப்படிச் செய்தால் மட்டும் தப்பிவிட முடியுமென்ற அப்பாவி எண்ணம் அவர்களுக்கு!

அப்பொழுது ஒரு திடீர் முழக்கம். வெடித்துச் சிதறிய குண்டுகள் கூரையைப் பிய்த்து, மரக் கிளைகளைச் சல்லடையாக்கின. நீண்ட பெருமூச்சுவிட்டுப் பேசாது பதுங்கிக் கிடந்தவர்களிடையே ஒரு வேடிக்கைக் குரல் கேட்டது... "இப்பப் பரவாயில்லை—எழுந்திருங்கப்பா!" என்று வேடிக்கையாகச் சொன்னார் ஒரு ஆசாமி!

இவ்வளவு பயங்கரத் தாக்குதலுக்குப் பின் இப்படி வேடிக்கையாகப் பேசுவது பொது இயல்பு. அடுத்த குண்டு முழக்கத்தை எதிர்பார்த்தபடி அனைவரும் எழுந்து நின்றார்கள்.

பொழுது புலரும்வரை இந்த நிகழ்ச்சி ஓயவில்லை. பல தடவைகள் பொடாபோவ் தன்னுடைய குடிசையிலிருந்து அடுத்த குடிசைக்கு ஓடினான், பியோடார் தன் பதுக்கிடத்திலிருந்து பொடாபோவிடம் ஓடினான். பாலம் தகர்க்கப்படவில்லை என்ற செய்தியைத் தெரிந்துகொண்டால் ஊபா நகருக்குள் துணிந்து புகுந்துவிடலாம் என்ற துணிச்சலான எண்ணத்தை அவர்கள் இன்னும் கைவிட்டுவிடவில்லை. திடீரென்று நகருக்குள் புகுந்து தாக்கினால், எதிரிகளிடையே கலக்கத்தையும் குழப்பத்தையும் உண்



டாக்க முடியும். இதனால் கிராஸ்னியாரிலிருந்து நமது படைகள் வருவதற்கும் உதவ முடியும் என்று திட்டமிட்டனர்.

பொழுது விடிந்ததும், தாக்குதலும் ஓய்ந்தது. தலைமைக் காரியாலயத்தை அமைத்திருந்த அந்தச் சிறிய ரயில் நிலையத்திற்கு அனைவரும் சென்றனர். இரவு முழுவதும் விழித்திருந்தால் அங்கு சென்றவுடன் படுத்து நன்கு தூங்கினர். அன்று மாலை இருட்டத் தொடங்கியதும் மீண்டும் புறப்பட்டுப் பாலத்தருகே சென்று, அது தகர்க்கப்பட்டதா இல்லையா என்று தெளிவாய் அறிந்துகொள்ள முயன்றனர். செஞ்சேனைப் படைச் சாரணர்கள் பாலத்தின் நடுவிடத்தை அடைந்ததும் எதிரியின் சுழல் துப்பாக்கிகள் சுழல ஆரம்பித்தன. உடனே பியோடாரும், படைக் கமிசாரும் பாலத்தின்மீது கிடந்த ரயில்ப் பெட்டிகளை நோக்கிப் புறப்பட்டனர். அந்தப் பெட்டிகளைத் தண்டவாளத்திலே தள்ளிச் சென்றபடி, "பொன்னாடே, புகழ் நாடே!" என்று பாடத் தொடங்கிவிட்டனர். இப்பாட்டொலி கோல்சாக்கிய வீரர்களிடையேயும் ஒரு வகைப் புத்துணர்ச்சியை ஊட்டி யிருக்க வேண்டும். சுடுவதற்கு அவர்கள் கை எழவில்லை. பாலத்தின்மீது நின்றபடி பியோடார் உரக்க, "தோழர்களே!" என்று கத்தினான்.

அவன் கத்தத் தொடங்கியதும் சுழல் துப்பாக்கிகள் திரும்பவும் உறும ஆரம்பித்தன. அவர்கள் தண்டவாளங்களுக்கிடையே பதுங்கியபடி நகர்ந்து வந்தனர். யாரும் காயமடையவில்லை. பாலத்துக் கோடியை அடைந்து கீழே குதித்து, குடிசைக்கு ஓடி வந்துவிட்டனர். புல்பற்றைகளுக்குள் பதுங்கி யிருந்த செஞ்சேனை வீரர்கள் ஊர்ந்தபடி காட்டிற்குள் கூடிப் புகைபிடித்திருந்தனர். எஞ்சிய சிலர் குளத்தருகே சென்று வேண்டிய அளவு நீரெடுத்துத் திரும்பினர். பலர் காய்ந்த ரொட்டித் துண்டுகளைத் தண்ணீரில் நனைந்து மெல்ல ஆரம்பித்தனர். திரும்பவும் நதிக்கரைக்கு அருகே பதுங்கி யொடுங்கி யிருந்தனர்.

கடந்த இரவுகளைப் போல இந்த இரவும் கடுமையாகவே இருந்தது. இந்தச் சமயத்தில் கிராஸ்னி யாரில் இருந்து புறப்பட்ட இரண்டு செஞ்சேனைப் படைகள் எதிர்க் கரையை நெருங்கிவிட்டன என்ற செய்தி எட்டியது. எனவே எச் சமயத்திலும் எதிர்க் கரையில் பெரும் போர் மூளக் கூடும் என்று அனைவரும் காத்திருந்தனர். சாரணர்கள் எப்படியாவது பாலத்தைத் தாண்டிவிட முயன்றனர்; அல்லது பாலத்தை மறைத்துக் கிடந்த ரயில் பெட்டிகளையாவது அப்புறப்படுத்த முயன்றனர். ஆனால் வெள்ளைப் படைகள் விட்டபாடில்லை. தொடர்ந்து தாக்கி வந்தனர். இரவு நன்கு சூழ்ந்துவிட்டது. எதிர்க் கரையில் ஆங்காங்கு சிறு சிறு விளக்கொளி மட்டுமே தெரிந்தது. எனவே எதிரிப் படைகள் எதுவரை தங்கியிருக்கிறார்கள் என்பதை அறுதியிட்டுணர முடியவில்லை. இரவு இரண்டு மணியளவில் பீரங்கி முழக்கம் ஓய்ந்தது, அபூர்வ அமைதி பரவியது. சற்று நேரத்தில் பொழுது விடியப் போகிறது என்ற அறிகுறிகள் தெரிந்தன.

அந்த முழக்கத்தோடு பாலமும் தகர்ந்தது. பெரிய பெரிய இரும்புச் சட்டங்கள் ஆற்றுக்குள் தூக்கி யெறியப்பட்டன. அலைகளில் 'சுர்' என்ற ஒலி படர்ந்தது. ஏதோ விடிந்துவிட்டது போன்ற வெளிச்சம் எங்கும் பரவி மூடியது. குடிசைக்குப் பக்கத்தில் இருந்த செஞ்சேனை வீரர்கள் அனைவரும் ஆற்றங்கரைக்கு ஓடிச்சென்று, எதிரிப் படைப் பகுதியில் என்ன மாறுதல் ஏற்பட்டுள்ளதெனப் பார்த்தனர். இதுவரை பாலத்தின் மீது லேசாகத் தாக்கிவந்தவர்கள் ஏன் ஒரே யடியாகத் தாக்கித் தகர்த்தெறிய வேண்டும்? அதுவும் இந்த நேரத்தில் செய்ய வேண்டிய இக்கட்டான சூழ்நிலை என்ன? ஏதேனும் மாறுபாடு ஏற்பட்டிருக்க வேண்டும். ஒருவேளை எதிரிப்படைகள் பின்வாங்க முனைந்துவிட்டனவோ! அனேகமாக ஊபாவைச் செஞ்சேனைப் படைகள் சூழ்ந்துகொள்ளத் தொடங்கிவிட்டனவோ?



எதிரிப் படையினர் அனைவரும் நிலை கலங்கி இருந்தனர். நேரம் கழிந்துகொண்டே யிருந்தது. செஞ்சேனைப் படைகள் ஊபா நகரை நெருங்கிவிட்டன என்ற செய்தி விரைந்து வந்தது. வெள்ளைப் படையினர் ஆற்றங்கரைத் தாக்குதலைக் கைவிட்டு அனைவரும் ஊபாவை நோக்கிப் புறப்பட்டனர். எங்கிருந்தோ சிறு சிறு படகுகளும், மரக்கட்டைகளும் கொணரப்பட்டு ஆற்றில் எறியப்பட்டன. வெள்ளைப் படை வீரர்கள் அவற்றில் விரைந்து ஏறிப் புறப்பட்டனர்.

செஞ்சேனைப் படை இலக்குகளை நோக்கித் தாறுமாறுகச் சுட்டுக்கொண்டே சென்றனர். ஏதோ குழம்பிய மனநிலையோடு போரிடுவது புலப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு செஞ்சேனைப் படைகள் ஆற்றங்கரை யோரமாக இருந்த எதிரியின் பதுக்கல் கிடங்குகளை யெல்லாம் தகர்த்தெறிந்தன. எதிரியின் குண்டு வீச்சையும் பொருட்படுத்தாது. இருவர் இருவராக எதிர்க் கரைக்குச் சென்று, எதிரிகளது பதுக்கல் கிடங்குகளிலேயே இவர்களும் பதுங்கிக்கொண்டனர்.

உச்சி வெயில் கடுமையாகக் காய்ந்தது; கொப்புளிக்கும் அனல் கொதித்துப் பரவியது. வெப்பம் தாங்க முடியாத வீரர்கள் ஆற்றுக்குள் குதித்தனர். தாள முடியாத் தாகத்தை ஆற்று நீரால் தணித்தனர்.

செஞ்சேனைப் போரெல்லைக் கோட்டிற்குப் புது வலுவும் ஆட்பலமும் பெருகிக்கொண்டே யிருந்தது. செஞ்சேனையரது தாக்குதலும் தொடர்ந்து, முறையாகப் பெருகி வந்து, எதிரி முன்னணியைக் குலைத்தும்விட்டது. உடனே 'ஓ ஹோ' என்ற பேரிரைச்சலுடன் ஓடிச் சென்று முதல் பதுக்கல் கிடங்குகளைப் பற்றினர். பல கோல்சாக்கிய வீரர்கள் கைதாயினர். அவர்களுடைய ஆயுதங்கள் பறிமுதலாயின. ஒரு நொடிக்குள் ஆற்றங்கரைப் பகுதியிலிருந்து

கணக்கிலடங்காத செஞ்சேனைப் படைகள் நகரை நெருக்கி முன்னேறின.

பல திசைகளிலிருந்தும் ஒரே சமயத்தில் செஞ்சேனை ஊபா நகருக்குள் புகுந்தது. இதைக் கண்ட தொழிலாளப் பெருமக்கள் ஆனந்தக் கூச்சலிட்டனர்; மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். எங்கும் கூத்தும் கும்மாளியும் கரைபுரண்டன. ஆனந்தக் கண்ணீர் வடித்து அளவிலா உவகை கொண்ட பொது மக்கள் ஓடோடிச் சென்று செஞ்சேனையரைச் சூழ்ந்துகொண்டனர். ஏதோ இதயத்தினியர் போல எல்லோருடனும் நெருங்கி உறவாடினர். விவரிக்க முடியாத இன்பக் காட்சியே எங்கும் நிறைந்தது!

தெருவெல்லாம் வரிசையாகக் கறை படிந்த ஆடைகளுடன் தொழிலாளர்கள் நின்றார்கள். கூட்டங்களுக்கு முன்னால் அவர்கள் வரிசையே நின்றது. இந்த மாபெரும் வெற்றி அவர்களது மகோன்னத வெற்றி! அவர்களுக்குப் பின்னால் நடைபாதைகளிலும், வீட்டு முகப்பிலும், சுவரிலும், கூரைகளிலும், விளக்குக் கம்பங்களிலும், மரங்களிலும் ஏராளமானவர்கள் அமர்ந்திருந்தனர். விடுதலை செய்யப்பட்ட ஊபா நகரத்து மக்கள் செஞ்சேனையர் வருகையைச் சிறப்பிக்க இவ்வாறு கூடியிருந்தனர். அவர்களிலும் செஞ்சேனையைப் பிடிக்காத ஒருசிலர் கோல்சாக்கியத் துருப்புகளோடு ஓடிவிட்டனர். செஞ்சேனைப் படைகள் அணி அணியாக வந்து அழகுக் காட்சியளித்தன!

முதலில் தாமதமேதுமின்றிச் சிறைக்கோட்டத்திற்குச் சென்றார்கள். அங்கே ஓரிருவராவது கோல்சாக்கியப்படைகளால் உயிருடன்விட்டுச் சென்றிருக்கக் கூடுமல்லவா? அல்லது அவர்கள் அனைவரையுமே சுட்டுப் பொசுக்கிவிட்டார்களா? என்பதை யறிய விரைந்தனர். சிறைக்கோட்டத்துப் பெருங் கதவுகள் பேரிரைச்சலுடன் திறந்தன. பொதுச் சுரங்க அறைகளுக்கும், ரகசியச் சுரங்க அறைகளுக்கும் ஓடினார்கள். இங்கொருவரும் அங்கொருவருமா



கப் பலர் தென்பட்டனர். "தோழர்களே! வெங்கொடுமைச் சிறையைவிட்டு விரைவில் வெளி வாருங்கள்" என்று கத்தினர். சிறைக்குள் அடைந்து கிடந்தவர்கள் ஓடோடி வந்து செஞ்சேனை வீரர்களின் கழுத்தைக் கட்டிப்பிடித்துக்கொண்டனர்; பெருங் கொடுமைக்கு ஆளாகி உடல் நலிந்திருந்தவர்கள் செய்வ தொன்றும் அறியாது சோர்ந்து வீழ்ந்தனர்; சிலர் மயக்கமுற்றனர்......எல்லாம் சிந்தை தொடும் சோகக் காட்சிகளாயிருந்தன. சிறைக்கு வெளியே சிரிப்பொலியும் மகிழ்ச்சிக் கண்ணீரும் பொங்கி யெழுந்தன.

ஊபாவைவிட்டு வெளியேறுவதற்கு முன்னர் வெள்ளைப் படைத் தளபதிகளுக்கு, சிறைக்கோட்டத்தில் எஞ்சிய கைதிகளைச் சுட்டுத் தள்ளப் போதிய அவகாசம் கிட்டவில்லை. ஒருசில கைதிகள் மட்டுமே அங்கு எஞ்சியிருந்தனர்! இரவு நேரங்களில் பல கைதிகளை எங்கோ அழைத்துச் செல்லுவார்கள்—ஆனால் அழைத்துச் செல்லப்பட்டவர்களில் யாரும் திரும்ப மாட்டார்கள். வெள்ளைப் படைத் தண்டனை நிறைவேற்றிகளைத் தவிர வேறு யாருக்கும் எதுவும் தெரியாது. சிறையில் எஞ்சியிருந்தவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் என்புருகச் செய்யும், எண்ணம் சிதையச் செய்யும். தங்களையும் அடுத்த இரவே கொண்டு சென்று மீளாத நித்திரையில் ஆழ்த்திவிடக் கூடாதா என்று அந்தக் கைதிகள் பரிதாபஆவல்கொண்டிருந்தனர்!

சிறையிலிருந்து கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட்டபின் எல்லா இடங்களிலும் காவலர்கள் நிறுத்தப்பட்டனர். எங்கும் எத்தகைய இடையூறும் குடிமக்களுக்கு இழைக்கப்படவில்லை. கட்டுப்பாட்டாலும், கடமை காக்கும் பண்பாலும், கண்ணிய மேன்மையாலும் இங்கு இருந்த செஞ்சேனை வீரர்கள், கைப்பற்றப்பட்ட நகரத்தைத் திறமையோடு காவல் புரிந்தனர்.

முதல் நாள்: பலவகைத் தொழிலாளர்கள், இதர ஊழியர்கள் ஆகியோரிடமிருந்து பல தூதுக் குழுக்கள்

கணக்கிலடங்காத செஞ்சேனைப் படைகள் நகரை நெருக்கி
முன்னேறின.

பல திசைகளிலிருந்தும் ஒரே சமயத்தில் செஞ்சேனை
ஊபா நகருக்குள் புகுந்தது. இதைக் கண்ட தொழிலாளப்
பெருமக்கள் ஆனந்தக் கூச்சலிட்டனர்; மகிழ்ச்சி ஆர
வாரம் செய்தனர். எங்கும் கூத்தும் கும்மாளியும் கரை
புரண்டன. ஆனந்தக் கண்ணீர் வடித்து அளவிலா உவகை
கொண்ட பொது மக்கள் ஓடோடிச் சென்று செஞ்சேனை
யரைச் சூழ்ந்துகொண்டனர். ஏதோ இதயத்தினியர் போல
எல்லோருடனும் நெருங்கி உறவாடினர். விவரிக்க முடி
யாத இன்பக் காட்சியே எங்கும் நிறைந்தது!

தெருவெல்லாம் வரிசையாகக் கறை படிந்த ஆடை
களுடன் தொழிலாளர்கள் நின்றார்கள். கூட்டங்களுக்கு
முன்னால் அவர்கள் வரிசையே நின்றது. இந்த மாபெரும்
வெற்றி அவர்களது மகோன்னத வெற்றி! அவர்களுக்குப்
பின்னால் நடைபாதைகளிலும், வீட்டு முகப்பிலும், சுவரி
லும், கூரைகளிலும், விளக்குக் கம்பங்களிலும், மரங்களி
லும் ஏராளமானவர்கள் அமர்ந்திருந்தனர். விடுதலை செய்
யப்பட்ட ஊபா நகரத்து மக்கள் செஞ்சேனையர் வருகை
யைச் சிறப்பிக்க இவ்வாறு கூடியிருந்தனர். அவர்களிலும்
செஞ்சேனையைப் பிடிக்காத ஒருசிலர் கோல்சாக்கியத்
துருப்புகளோடு ஓடிவிட்டனர். செஞ்சேனைப் படைகள்
அணி அணியாக வந்து அழகுக் காட்சி யளித்தன!

முதலில் தாமதமேதுமின்றிச் சிறைக்கோட்டத்திற்குச்
சென்றார்கள். அங்கே ஓரிருவராவது கோல்சாக்கியப்படை
களால் உயிருடன்விட்டுச் சென்றிருக்கக் கூடுமல்லவா?
அல்லது அவர்கள் அனைவரையுமே சுட்டுப் பொசுக்கிவிட்
டார்களா? என்பதை யறிய விரைந்தனர். சிறைக் கோட்
டத்துப் பெருங் கதவுகள் பேரிரைச்சலுடன் திறந்தன.
பொதுச் சுரங்க அறைகளுக்கும், ரகசியச் சுரங்க அறை
களுக்கும் ஓடினார்கள். இங்கொருவரும் அங்கொருவருமா



கப் பலர் தென்பட்டனர். "தோழர்களே! வெங்கொடு
மைச் சிறையைவிட்டு விரைவில் வெளி வாருங்கள்" என்று
கத்தினர். சிறைக்குள் அடைந்து கிடந்தவர்கள் ஓடோடி
வந்து செஞ்சேனை வீரர்களின் கழுத்தைக் கட்டிப்பிடித்
துக்கொண்டனர்; பெருங் கொடுமைக்கு ஆளாகி உடல்
நலிந்திருந்தவர்கள் செய்வ தொன்றும் அறியாது சோர்ந்து
வீழ்ந்தனர்; சிலர் மயக்கமுற்றனர்......எல்லாம் சிந்தை
தொடும் சோகக் காட்சிகளா யிருந்தன. சிறைக்கு வெளியே
சிரிப்பொலியும் மகிழ்ச்சிக் கண்ணீரும் பொங்கி யெழுந்தன.

ஊபாவைவிட்டு வெளியேறுவதற்கு முன்னர் வெள்
ளைப் படைத் தளபதிகளுக்கு, சிறைக்கோட்டத்தில் எஞ்
சிய கைதிகளைச் சுட்டுத் தள்ளப் போதிய அவகாசம் கிட்ட
வில்லை. ஒருசில கைதிகள் மட்டுமே அங்கு எஞ்சி யிருந்
தனர்! இரவு நேரங்களில் பல கைதிகளை எங்கோ அழைத்
துச் செல்லுவார்கள்—ஆனால் அழைத்துச் செல்லப்பட்ட
வர்களில் யாரும் திரும்ப மாட்டார்கள். வெள்ளைப் படைத்
தண்டனை நிறைவேற்றிகளைத் தவிர வேறு யாருக்கும் எது
வும் தெரியாது. சிறையில் எஞ்சியிருந்தவர்களுக்கு இழைக்
கப்பட்ட கொடுமைகள் என்புருகச் செய்யும், எண்ணம்
சிதையச் செய்யும். தங்களையும் அடுத்த இரவே கொண்டு
சென்று மீளாத நித்திரையில் ஆழ்த்திவிடக் கூடாதா
என்று அந்தக் கைதிகள் பரிதாபஆவல் கொண்டிருந்தனர்!

சிறையிலிருந்து கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட்ட
பின் எல்லா இடங்களிலும் காவலர்கள் நிறுத்தப்பட்ட
னர். எங்கும் எத்தகைய இடையூறும் குடிமக்களுக்கு
இழைக்கப்படவில்லை. கட்டுப்பாட்டாலும், கடமை காக்
கும் பண்பாலும், கண்ணிய மேன்மையாலும் இங்கு இருந்த
செஞ்சேனை வீரர்கள், கைப்பற்றப்பட்ட நகரத்தைத்
திறமையோடு காவல் புரிந்தனர்.

முதல் நாள்: பலவகைத் தொழிலாளர்கள், இதர
ஊழியர்கள் ஆகியோரிடமிருந்து பல தூதுக் குழுக்கள்

வந்தன. அவர்கள் செஞ்சேனைக்கு வாழ்த்துரைத்தனர்.
நகரில் அமைதி நிலவச் செய்தமைக்கு நன்றியுரைத்தனர்.
மகிழ்ச்சியைப் புலப்படுத்தினர். யூத குலத்து சோஷலிசக்
கட்சியிடமிருந்து ஒரு தூதுக் குழு வந்தது. கோல்சாக்கியப்
படைகள் யூத குலத்துக்கு இழைத்த கொடுமைகளை யெல்
லாம் விம்மி விம்மி விவரித்தார்கள். வெள்ளைப் படையி
னரது அக்கிரமங்களுக்கு அளவே யில்லை. கேள்வி யேதும்
இன்றிப் பலரைச் சிறையில் தள்ளி வதைத்தனராம்.
சுரண்டிப் பணம் சேர்த்துக் கொழுத்தவனைவிட்டு, யூத
னொருவனைத் தெருவில் போட்டு நையப் புடைத்து ஆரவா
ரம் செய்தனராம்!

"நீங்கள் இந்த நகரத்தைவிட்டு வெளியேறினால் நாங்
கள் அனைவரும் ஒருவர் பாக்கியில்லாமல் உங்களோடு வந்து
விடுவோம். எல்லா வசதியும் நிறைந்துள்ள இந்தக் கேடு
கெட்ட ஊபாவில் வெள்ளைப் படையிடம் சிக்கி நலிவதை
விடப் பட்டினியாகவாவது மாஸ்கோவில் உரிமையோடு
வாழ்வதையே விரும்புகிறோம்" என்று அந்த யூதக் குழுத்
தலைவன் கண்ணீர் கசிய வேண்டினான்.

யூத இளைஞர்கள் அன்றே ஒரு இளைஞர் அணியைத்
திரட்டிச் செஞ்சேனை ஊழியர்களாகச் சேர்ந்தனர்.

ராணுவ அரசியல் இயக்கத்துறையும் தனது அலுவலை
விரிவாக உடனடியாகத் தொடங்கியது. புதிய நிலையை
விளக்கித் துண்டுப்பிரசுரங்கள் ஏராளமாக வெளியிடப்
பெற்றன. நகரெங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.
அதற்கு மறு நாளே படைக்காரியாலயத்திலிருந்து தினசரிச்
செய்திப் பத்திரிகையும் வெளியிடப்பட்டது, சிறு பொதுக்
கூட்டங்கள் நகரின் பல பகுதிகளிலும் முறையாக நடத்தப்
பட்டன. பேச்சாளர்களுக் கெல்லாம் மக்கள் தமது
இதயங் கவிந்த வரவேற்பை எல்லாக் கூட்டங்களிலும்
வழங்கினர். நகரிலிருந்த நாடகக் கழகங்களனைத்தையும்
ராணுவ நடிகர்கள் மேற்கொண்டனர். எதற்கும் சளைக்



காத வீராங்கனை ஜோயா பவ்லோனா நாடக சம்பந்தமான
நடவடிக்கைகளில் ஈடுபட்டாள்; தானே சென்று திரைச்
சீலைகள், உடுப்புகள், ஒப்பனைச் சாதனங்கள் ஆகிய அனைத்
தையும் சேகரித்துவந்தாள். அவளும் பல முறை நடித்தாள்.
செஞ்சேனை வீரர்கள் எல்லாக் காட்சிகளுக்கும் திரண்டு
கூடினர். சில நாட் கழித்து, ஏற்கெனவே காயம் பட்ட
சப்பாயேவ் ஊபாவிற்கு வந்தான். அன்று மாலையே நாடக
அரங்கிற்கு வந்து, செஞ்சேனையர் சார்பாக ஜோயா பவ்
லோனாவிற்கு ஒரு பூச்செண்டைப் பரிசளித்து அவளுடைய
அயராத முயற்சிகளைப் பாராட்டினான். எல்லாச் செஞ்
சேனை வீரர்களும் கை கொட்டி ஆரவாரித்தனர். செஞ்
சேனையினரிடமிருந்து பெற்ற இந்தப் பரிசை அவளால்
என்றுமே மறக்க முடியாது!

ஊபா நகரில் புது வாழ்வு பூத்தது; பொலிவுற்று நகரம்
புன்னகை யரும்பிற்று! வெள்ளைப் படையினரிடம் வேத
னைப்பட்டு நலிந்தவர்களுக்கு இந்த மாறுதல் நன்கு புலப்
பட்டது.

ஊபாவுக்கும் அப்பால் கோல்சாக்கியப் படைகளை பல
செஞ்சேனைப் பிரிவுகள் விரட்டிச் சென்று விட்டன;
ஆனால் செஞ்சேனையின் இருபத்தைந்தாவது ரெஜிமெண்ட்
ஓய்வு பெறுவதற்காக ஊபாவிலேயே தங்கிவிட்டது. ஏறத்
தாழப் பதினைந்து நாட்களுக்கு ஊபா கேந்திரத்திலேயே
நிறுத்தப்பட்டிருந்தது. ஆனால் இதில் எந்த ஒரு நாளும்
வீணில் செலவழிக்கப்படவில்லை. ஓயாத போராட்டத்
திற்குப் பின்னர் உருக்குலைந்திருந்த ராணுவப் படைப்
பகுதிகள் செம்மையுறச் சீர்திருத்தப் பட்டன; போர்க்
காலத்தே குவிந்து கிடந்த இதர அலுவல்கள் அனைத்தும்
ஒழுங்கு செய்யப்பட்டு நிறைவேறின. சோர்வேதும்
இன்றி அரசியல் இயக்கத் துறையினர் அலுவல் புரிந்தனர்.
ரிஷிகோவுக்குப் பதிலாக அரசியல் இயக்க வேலைகளை இப்
பொழுது சுவோரோவ் என்ற இளைஞன் தலைமையேற்று

நடத்தினன். இளமைத் துடிப்பும், சலியாத உழைப்பும் கொண்ட சுவோரோவ் ஒரு பெட்ரோகிரேட் தொழிலாளி இரவில் வெகு நேரம்வரை அரசியல் இயக்கக் காரியால யத்தில் விழித்து வேலை பார்த்தான். பியோடாரின் துணைவ னை கிரெய்னுகோவும் சுவோரோவும் நெருங்கிய நண்பர் களாயினர். இந்த இருவரும் சேர்ந்து எல்லா அரசியல் இயக்கத்து அடிப்படை வேலைகளையும் சிறப்புற முடித்து வைத்தனர். பியோடார் அவ்வப்போது சில ஆலோசனை களைக் கூறுவான்; விவாதக் கூட்டங்களில் விளக்கம் தருவான். பெலெபேய்க்குப் பிறகு, பியோடரும், சப்பா யேவும் மீண்டும் இணைந்து இதரப் படைப் பகுதிகளில் உள்ள பல்வேறு இயக்கங்களைச் செம்மைப்படுத்தினர்கள்.

உரால்ஸக் முனையிலிருந்து நெஞ்சு நடுக்குறும் செய்தி கள் விரைந்துவரத் தொடங்கின. கொஸாக்கியப் படைகள் வெற்றி மேல் வெற்றி யடைந்து முன்னேறினர். அவர்கள் உரால்ஸ்க்கைச் சூழ்ந்துகொண்டாலும் உள்ளே புகுந்து கைப்பற்றிக்கொள்வது இன்னும் முடியவில்லை. செய்தித் தாள்கள், ராணுவச் செய்திகள், தந்திகள் முதலிய பல சாதங்களின் வழியாக அவ்வப்போது போர்முனைச் செய்தி கள் வந்தவண்ணமே யிருந்தன. செஞ்சேனையைச் சேர்ந்த பலருடைய கிராமங்களில் கொஸாக்கியப் படைகள் புகுந்து கிராமங்களைச் சூறையாடி மக்களைக் கொடுமைக்காளாக் கும் செய்திகள் எட்டின. படை வீரர்கள் துடித்தெழுந் தார்கள். எல்லாப் படைகளையும் உடனே உரால்ஸ்க் புல் வெளிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டினர். கொஸாக் கியர்களுக்கு எதிராகத் தீவிரமாகப் போரிட்டு முறியடித்து விடுவதாகச் சூளுரைத்தனர்.

பியோடாரும் சப்பாயேவும் இதைப்பற்றி நீண்ட நேரம் விவாதித்தனர். ஊபாவில் உள்ள தங்கள் படைப் பகுதியை உடனே உரால்ஸ்க் பகுதிக்கு மாற்றுவது நல்ல தும், பயன் தருவதுமாகும்; ஏதேனும் தவிர்க்க முடியாத



காரண மிருந்தால் ஒழிய ஊபாவில் இனிமேலும் படை யினரை வீணில் வைத்திருக்க வேண்டாம் என்று கருதினர். மத்திய ராணுவக் காரியாலயத்தினரிடமும், பெரும் தள பதி ப்ரூன்ஷிடமும் இதைப்பற்றி விளக்கினர்; வீரர்களின் நெஞ்சத் துடிப்பை உணர்த்தினர்; உரால்ஸ்க்கை விட்டு வேறு முனைகளுக்கு இந்த வீரர்களை அனுப்பினல் ஏற் படக்கூடிய இடையூறுகளைத் தெளிவுபடுத்தினர். நாளாக ஆக, செஞ்சேனை வீரர்களின் ஆர்வமும் போர்த்துடிப்பும் பெருகின. உரால்ஸ்க் பகுதியில் போரிட வேண்டுமென்ற உத்வேகம் வளர்ந்தது. மத்திய ராணுவக் காரியாலயத் தினர் நிலைமையைத் தெளிவாக ஆராய்ந்து செஞ்சேனைப் படைகளை உரால்ஸ்க் முனைக்கு மாற்ற உத்தரவளித்தனர். இதைக் கேட்ட படைப்பகுதிகளில் ஏற்பட்ட ஆனந்தத்தை அளவிட்டுரைக்க முடியாது. ஏதோ விடுமுறைக்கு வீடு திரும்புவதுபோல உற்சாகமாக மூட்டை கட்ட ஆரம்பித் தனர். எல்லோரையும் போலச் சப்பாயேவுக்கும் இந்த உத்தரவால் பரிபூரண திருப்தி ஏற்பட்டது. அவனும் ஸ்டெப்பிப் புல்வெளிக்குப் புறப்படப் போகிறன்—எந்த ஸ்டெப்பி வெளியில் எல்லாச் சூழ்நிலைகளையும் அறிந்திருந் தானே, எந்த ஸ்டெப்பி வெளியில் இதயம் இனிக்க ஓடித் திரிந்தானே—அந்த ஸ்டெப்பி வெளிக்கே ராணுவத் தள பதியாக உரிமை காக்கப் போரிட அவனும் புறப்பட்டுவிட் டான்; சுதந்திர தாகம் தீர்க்க அவனும் விரைந்துவிட் டான்! புறப்படுவதற்கான எல்லா ஏற்பாடுகளும் விரை வில் முடிந்தன...சூரத் துணிவுள்ள செஞ்சேனைப் படைப் பகுதிகள் உரால்ஸ்க் முனையை நோக்கி உற்சாகம் உந்தப் புறப்பட்டுவிட்டன!

# 14

## உரால்ஸ்க் நகரம் மீட்கப்பட்டது

வெகு நாட்கள்வரை உரால்ஸ்க் நகரைச் சுற்றி வளைத்துக்கொண்டார்கள் கொஸாக்கியர்கள். சப்பாயேவின் படைகள் வந்த பின்னர்தான் அவர்களுடைய பிடி தளர்ந்தது. அந்த நகரமும் மீட்கப்பட்டது. உள் நாட்டுச் சுதந்திரப் போர் வரலாற்றிலே இந்த நகரத்தைக் காத்து நின்றோரது துணிவு பொன்னெழுத்துக்களிலே பொறிக்கப்படும். புற உலகத் தொடர்புக்கே வழியின்றி நகரைச் சுற்றிக் கொஸாக்கியர்கள் சூழ்ந்துகொண்ட போதும் இணங்கி விடாது வீரத்தோடு நகரத்தைக் காத்து நின்றோர்கள். எதிரியின் தாக்குதலுக்குச் சோர்ந்துவிடாது பல திசைகளிலும் எதிரிக்கு மலைப்பை யுண்டாக்கினார்கள். போதுமான படை பலம் இன்றியே வீராவேசத்துடன் போரிட்டார்கள். சோர்வையும், பசியையும் பொருட்படுத்தாது உரால்ஸ்க் நகரத் தொழிலாளர் அனைவரும் ஒருசேரத் திரண்டு போராடினார்கள். கொடுமைக்காரக் கொஸாக்கியர்களிடம் சரண்புகுவதைவிடச் சாவதே மேல் என்ற உறுதியோடு தாக்குப் பிடித்தார்கள். உரால்ஸ்க் போராட்டம் உயிர்ப் போராட்டமாக மாறிவிட்டது. ஒரு வேளை நகரம் கொஸாக்கியர் வசமானாலும், நகர மக்களுக்கும் அவர்களுக்கும் இடையே எத்தகைய இணக்கமும் ஏற்பட முடியாத வகையில் பகை வலுத்துவிட்டது. நகரம் பணிந்தால் நகர மக்கள் அனைவரையும் கொஸாக்கியர்கள் பழிக்குப் பழி வாங்காதுவிட மாட்டார்கள் என்பது தெரிந்துவிட்டது. நகரத்திற்குள்ளே சதி வேலை செய்தோர் பலர் கண்டுபிடிக்கப்பட்டனர். நகரத்தைச் சேர்ந்த வெள்ளைக் கருங்



காலிகள் திருட்டுத்தனமாக வெளியிலே தகவல் கொடுத்து வந்தார்கள். நகருக்குள் நடைபெறும் எல்லாம் போர்த் திட்டங்களையும் அடிக்கடி வெள்ளைப் படைத் தளபதிகளுக்கு ரகசியச் செய்தி மூலம் தெரிவித்து வந்தனர். இந்த நிலையில் வெடிமருந்தும் குறைந்துவிட்டது. உணவுப் பற்றுக்குறை பெருகிவிட்டது. துணிவோடு நகரைக் காத்து நிற்கும் செஞ்சேனை வீரர்கள் துப்பாக்கி முனையோடு மட்டுமே இனிப் போராட வேண்டும். இந்த நினைவுகூட அவர்களுக்கு அச்சத்தை உண்டாக்கவில்லை. மகிழ்ச்சியோடும் நம்பிக்கையோடும் இருந்தார்கள். சப்பாயேவின் ராணுவம் தங்களது மீட்சிக்கு வருகிறது என்ற தகவலறிந்ததும் எதிரியின் கடைசித் தாக்குதலை உறுதியான மனோவலியோடும், உற்சாகம் நிறைந்த தீரத்தோடும் தவிடுபொடியாக்கினார்கள்.

உரால்ஸ்க் செல்லும் வழியில் பெரும் போர் ஏதும் நிகழவில்லை என்றாலும் சிறு சிறு சில்லரைச் சண்டைகள் இல்லாத நாளே கிடையாது. 1918-ம் ஆண்டுப் போரிலிருந்து சப்பாயேவின் ரெஜிமெண்டைப்பற்றி நன்கு அறிந்த கொஸாக்கியர்கள் எந்த வகைப் பெரும் போரும் நடத்தாமல் அமைதியாகப் பின்வாங்கினார்கள். அப்போதைக்கப்போது ஒருசில சில்லரைச் சண்டைகளை மூட்டிப் பின்வாங்கிச் சென்றனர். கொஸாக்கியக் கிராமமான சொபொலேவ்ஸ்காயாவுக்குச் செல்லும் நெடுஞ் சாலையில் பின்வாங்கிச் சென்ற கொஸாக்கியப் படைகள் இவானோவா-வோஷ்னெஸென்க் படைப் பகுதியைச் சந்தித்தன. இரு கவச மோட்டார்களும் சில குதிரைப் படை வீரர்களையும் கொண்டு இவானோவா வீரர்களைச் சின்னாபின்னப்படுத்திவிட முடியும் என்ற எண்ணத்தோடு மோதினார்கள். கவச மோட்டாரின் வெடிகுண்டு வீச்சைக் கண்டவுடன் செஞ்சேனை கலகலத்துவிடும், உடனே குதிரை வீரர்களை ஏவி அனைவரையும் மடக்கிவிடலாம் என்று திட்டமிட்டுப்

பாய்ந்தார்கள். இந்தத் திட்டப்படியே சாதகமாக முடிவது
போலத்தான் முதலில் தோன்றியது. செஞ்சேனைப் போரிலக்
குப் பகுதி அசைவற்று, ஜீவனற்றுக் கிடந்தது. எதிரியின்
கவச வண்டிகள் அருகில் வரும்வரை அசையாது கிடந்தார்
கள் செஞ்சேனை வீரர்கள். எதிரிப் படை அனைத்தும் மிக
அருகில் வந்ததும் தாக்குதலை உக்கிரப்படுத்தினார்கள்.
ஒளித்துவைக்கப் பட்டிருந்த செஞ்சேனைப் பீரங்கிகள்
செந்தீக் கக்கின. எதிர்பாராத தாக்குதலுக்கு உள்ளான
கொஸாக்கிய வீரர்கள் திக்குமுக்காடிப் போனார்கள். செஞ்
சேனை வீரர்க்கு மிகுந்த சேதம் ஏதுமின்றி வெகு சாதக
மாகப் போர் முடிந்தது.

ஆனால் அதே சொபொலேவ்ஸ்காயாவுக்கு வெகு அரு
கில் சிதறியிருந்த செஞ்சேனை வீரர்கள் கூட்டமொன்றைக்
கொஸாக்கியர்கள் சூழ்ந்துகொண்டு நிர்மூலப்படுத்திவிட்
டார்கள். உடனே சிறு செஞ்சேனைப் படை யொன்று
அனுப்பப்பட்டது. அதுவும் நையப் புடைக்கப்பட்டது.
மூன்றாவதாகச் செஞ்சேனைப் படை யொன்று சென்று
மீண்டும் அந்தக் கதிக்கே ஆளானது. சிறு படைகளைக்
கொண்டு எதிரியின் வலுவான தாக்குதலைச் சமாளிக்க
முடியா தென்பதை அப்பொழுதுதான் உணர்ந்தார்கள்.
உடனே பெரும் படை யொன்று எதிர்பாராதிருந்த
கொஸாக்கியர்களைச் சூழ்ந்து துவம்சம் செய்து வெற்றி
யுடன் மீண்டது. சப்பாயேவ் இதைப்பற்றிக் கேள்வியுற்ற
வுடன் கோபம் தலைக்கேறத் திட்டி நொறுக்கினான், சம்பந்
தப்பட்ட எல்லாச் செஞ்சேனைத் தளபதிகளையும் சபித்
தான்.

"முட்டாள்களே நீங்க ளெல்லாம் தளபதிகள் இல்
லையா! கொஸாக்கியர்களுக்குப் போரிடத் தெரியாது, சிறிய
செஞ்சேனைப் படைகளைத்தான் நசுக்க முடியும் என்ற
உண்மை இதுவரை உங்கள் மூளையில் பதியவில்லை
இல்லையா! சிறு சிறு படையாக அனுப்பி நாசஞ் செய்ய



இடம் தந்து பேசாதிருந்தீர்கள். பெரும் படையைத்தேவை
யான சமயத்தில் அனுப்பாது தூங்கியிருக்கிறீர்கள். இல்
லையா?" என்று கொக்கரித்தான்.

இதுபோல எத்தனையோ சிறு போராட்டங்களைக்
கொஸாக்கியர்கள் நடத்தினாலும், செஞ்சேனைப் படைகள்
நாளொன்றுக்கு ஐம்பது கல் தூரத்துக்கு குறையாமல்
துரிதமாக முன்னேறி வந்தார்கள். அவர்களது முன்னேற்
றப் பாதையில் எதிர்ப்பட்ட கொஸாக்கியக் கிராம மக்கள்,
தங்கள் கிராமங்களை விடுவித்த வெற்றி வீரர்களை மகிழ்
வுடன் வரவேற்று உபசரித்தார்கள். எல்லா வகையாலும்
செஞ்சேனைப் படைகளுக்கு மனம் உவந்து உதவினார்கள்.

ஒரு கிராமத்தில் சப்பாயேவிற்கும் உன்னதமான வர
வேற்பொன்று அளிக்கப்பட்டது; அன்றைய மக்கள் வீர
னாக மாலை சூட்டிப் பாராட்டப்பட்டான்.

"தோழரே! தயவு செய்து எங்களுக்கு உறுதியாகச்
சொல்லுங்கள். கொஸாக்கியக் கொலைக்காரர்கள் மீண்டும்
இங்கு திரும்பி வருவார்களா அல்லது தலைகாட்ட முடியாத
படி அவர்களை விரட்டிவிட்டீர்களா? தயவுசெய்து சொல்
லுங்கள்!" என்று கிராமவாசிகள் அவனிடம் மன்றாடிக்
கேட்டார்கள்.

புன்சிரிப்புவிழ்த்தவண்ணம், தனது மீசையை முறுக்
கிக்கொண்டே சப்பாயேவ் சொன்னான். "நீங்கள் அனை
வரும் ஒன்று சேர்ந்து என்றென்றும் எங்களுக்கு உதவியா
யிருந்தால் கொஸாக்கியர்கள் திரும்பவே மாட்டார்கள்.
ஆனால் பச்சோந்தி மனப்பான்மையில் நீங்களிருந்தால் உங்
களை யாருமே பாதுகாக்க முடியாது" என்றான்.

"எங்களால் என்ன செய்ய முடியும்?"

"ஏன் முடியாது. எங்களைப் பாருங்கள்!" என்று
சூழ்ந்திருந்த செஞ்சேனை வீரர்களைச் சுட்டிக் காட்டினான்
சப்பாயேவ்.

செஞ்சேனையின் வீரச் செயல்களை விவரித்தான்.

சோவியத் ருஷ்யாவிற்குச் செஞ்சேனை வீரர்கள் செய்து வரும் தொண்டுகளை விளக்கினான்; பாட்டாளி மக்களுக்கும் செஞ்சேனைக்கும் உள்ள நேரிய நேசத் தொடர்புகளைத் தெளிவுபடுத்தினான்.

எங்கெங்கோ படித்தும், கேள்விப்பட்டுமிருந்த பல சான்றுகளை முன்வைத்துப் பேசினான். கொஸாக்கியர்களை என்னவென்றும் எதிரிகளாகக் கருதப்போவதில்லையென்றும், மனந் திருந்திய யாரும் செஞ்சேனைக்கு உழைக்கலாமென்றும், தாய் நாட்டு நலமும் சுதந்திர வாழ்வுமே நிலைக்கப் பாடுபட வேண்டுமென்றும் வீராவேசமாகச் சப்பாயேவ் பொழிந்தான்.

சூழ்ந்திருந்த கிராம மக்கள் சப்பாயேவின் பேச்சை உற்றுக் கேட்டனர்; மெய் ஒடுங்கி நிலை மறந்து கவனித்துக் கேட்டனர். பெரும் அளவில் கூட்டுப் பண்ணைகளை நடத்துவதால் விளையும் நன்மைகளை விளக்கினான் சப்பாயேவ். இந்தப் பிரச்னையைக் கிராமவாசிகளுக்குப் புரியும்படி விளக்க அவனால் முடியவில்லை. "சொத்துப் பிரிவினை" "சுயதேவைப் பூர்த்தி" "விளைவுப் பெருக்கம்" என்ற பல சொற்களை வைத்துக்கொண்டு குழப்பிப் பேசினான். கூட்டுப் பண்ணையில் இணைந்து பணியாற்றும் பல குடியானவர்களது பங்கையும் பொறுப்பையும் தெளிவாக்க முடியாது திணறினான்; தனக்கே தெளிவாகத் தெரியாததனால் தடுமாறிப் பேசினான். என்றாலும்கூடக் கிராமவாசிகள் மிக உற்சாகமாக அவன் பேச்சைக் கேட்டனர்; எல்லாவற்றையும் புரிந்துகொண்டது போலக் கை தட்டி ஆரவாரித்தனர். சோம்பித் திரியாது பாடுபட்டுழைக்க வேண்டுமென்றும், பொறாமைக்கோ பேராசைக்கோ இடம் தராது அன்பால் இணைந்துகொண்டு கொடுத்து வாழ வேண்டுமென்றும், அறிவுச் சூனியர்களாக வாழாது வாழ்வொளி பெற்றுக் கிராமப் பொருளாதாரச் செம்மைக்குப் பாடுபட வேண்டுமென்றும் சப்பாயேவ் வலியுறுத்திப் பேசியதைக் கிராம மக்கள்



புரிந்துகொண்டனர். இன்னொரு கிராமத்தில் சப்பாயேவ் பேசியபொழுது நகர்ப் புறங்களில் தொழிலாளர்கள் பட்டினியால் வாடும் பரிதாப நிலையையும், அதே சமயத்தில் கிராமப் புறங்களில் உணவுப் பொருள்கள் குவிந்து கிடக்கும் அநியாயக் கோலத்தையும் சுட்டிக் காட்டினான். இதைக் கேட்ட பிறகே சினேக உணர்ச்சிகொண்ட கிராம மக்கள் ஏராளமாகத் தானியங்களைச் சேகரித்து மாஸ்கோவுக்கு உடனே அனுப்புவதென முடிவு செய்தனர். தங்களால் இயன்ற பொருள்களையெல்லாம் சேமித்து அவ்வப்போது மாஸ்கோவுக்கு அனுப்பி வைப்பதாக அனைவரும் சப்பாயேவுக்கு வாக்களித்தனர்; அப்படி அனுப்புவித்த செய்தியைப் போர்முனைக்கே தெரிவிப்பதாகச் சொன்னார்கள். அந்தச் செய்தி சப்பாயேவின் காதுக்கு எட்டியதா இல்லையா என்றெல்லாம் தெரியாது...ஆனால் அதற்கு முன்னர் அந்த மாவீரனின் வாழ்வு பரிதாபமாக முடிந்துவிட்டது!

இப்படி எல்லாக் கிராமங்களிலும் மகத்தான வரவேற்பைப் பெற்ற செஞ்சேனை உரால்ஸ்க் நகர மதிற்சுவற்றை நெருங்கிவிட்டது. கடைசித் தாக்குதலில் கையிருப்பெல்லாம் தீர்ந்த பின்னர் கொஸாக்கியப் படை புறமுதுகிட்டு ஓடியது. நகரைக் காத்திருந்த மக்கள் படையினர் வெளியேறி, பாண்டு வாத்தியங்கள் முழங்க, பத்துக் கல் தொலைவுக்குச் சென்று சப்பாயேவையும் அவன் படையினரையும் வரவேற்கச் சென்றனர் சப்பாயேவின் படையைக் கண்டு பேரானந்தம் கொண்டனர். கண்ணீர் பெருகக் களிப்புற்றனர்; கட்டித் தழுவிக் கொண்டனர். சர்வ தேசிய கீதம் பாடினர்; இதுவரை நடந்த அனைத்தையும் ஒன்றும் விடாது சொல்லத் துடித்தனர்; எதுவும் சொல்ல முடியாது குழம்பி நின்றனர்!

இளிக்கோவ் ஏறிவந்த மோட்டாரைக் கண்ட யாரோ ஒருவன் "பியோடார்!" என்று உரக்கக் கத்தினான் பியோடார் திரும்பிப் பார்த்தான். அவனைக் கத்திக் கூப்பிட்டது

ஆண்ட்ரேவ் கருப்புக் குதிரைமீது பவனிவந்துகொண்டிருந்தான். பழைய நண்பர்களான இருவரும் மாறி மாறி முத்தமிட்டு மகிழ்ந்தனர். ஆண்ட்ரேவின் தெளிவான கண்களைப் பியோடார் உற்றுப் பார்த்தான். அவனது பார்வையில் ஏதோ புதிதாகத் தோன்றியது. அவநம்பிக்கை பார்வை போல அது புலப்பட்டது. பியோடாரைச் சந்திக்க விரும்பாதவன் போல ஆண்ட்ரேவின் பார்வை விளம்பரப்படுத்தியது. ஏதோ திடீரென்று சந்தித்ததற்காகப் பெயருக்கு வாழ்த்தும் முகமனும் கூறிக்கொண்டானோ என்ற சந்தேகத்திற்கு இடம் தந்தது.

இருவரும் பேசிக்கொண்டனர். உரால்ஸ்க் நகரத் தாக்குதலின்போது, சண்டாளச் சதிக் கூட்டத்தையும் கருங்காலிப் படைகளையும் கண்டுபிடிப்பதில் பெரும் பங்கு கொண்ட ஆண்ட்ரேவின் சேவைத் திறமையை பியோடார் உணர்ந்துகொண்டான். அயோக்கியர்களின் நயவஞ்சகச் செயல்களை நசுக்குவதற்குக் கடுமையான நடவடிக்கைகளை ஆண்ட்ரேவ் எடுக்கவேண்டியிருந்தது. அந்த நடவடிக்கைச் சமயத்தில் கடுமையான தாக்குதல்களுக்கும், போராட்டங்களுக்கும் அவன் ஆளாக நேர்ந்தது. அப் போராட்டங்களின் சுவடுகளும் அடையாளங்களும் அவனுடைய முகத்தில் பதிந்திருந்தன. பிறகு, சூழ்நிலை காரணமாக ஆண்ட்ரேவ் நேரடியாகப் படையில் சேர வேண்டியதாயிற்று. அதை அடுத்துக் கொஸாக்கியப் படைகளோடு உக்கிரமாகப் போரிட்டான். வெறிகொண்ட எதிரிப் படைகளால் பல தடவை சிதறியடிக்கப்பட்டான்...என்றாலும் மனம் குன்றாது போரிட்டான்!

உரால்ஸ்க் நகரத்து நெடுஞ்சாலைகளில் பலதுறைப் பாட்டாளி மக்களும் சூழ்ந்து நின்றனர். யாரும் நுழைந்து செல்லமுடியாத பெருங் கூட்டமாகத் திரண்டிருந்தனர்.

"சப்பாயேவ் வாழ்க, நமது மாவீரன் வாழ்க! சப்பாயேவின் வீரர்கள் வாழ்க! நமது செஞ்சேனைத் தலைவர் தீரர்



சப்பாயேவ் வாழ்க!" என்ற வாழ்த்தொலிகள் விடுவிக்கப்பட்ட உரால்ஸ்க் நகர் முழுவதும் எதிரொலித்தன. பியோடாரும், சப்பாயேவும் அமர்ந்திருந்த மோட்டார் ஊர்வலமாகச் செல்ல முடியாத அளவு கூட்டம் பெருகிவிட்டது. கூடியிருந்த மக்கள் அனைவரும் வியப்போடும் பெருமிதத்தோடும் சப்பாயேவை உற்றுப் பார்த்தனர். தங்கள் தொப்பிகளை வானத்தில் தூக்கியெறிந்து ஆரவாரத்தைப் புலப்படுத்தினர். வெற்றிப் பாடல்கள் எங்கும் எக்காளமிட்டன! நகரம் முழுவதும் செங்கொடிகள் பறக்கவிடப்பட்டன; பேச்சாளர் மேடைகள் போடப்பட்டுச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பெற்றன. சப்பாயேவ் பேச ஆரம்பித்தவுடன் அமைதியாக அனைவரும் கேட்டனர். பேச்சின் இடையே எழுந்த கை தட்டொலி, புயற்காலத்தே கடலில் எழும் இரைச்சல் போல எதிரொலித்தது. தன் பேச்சை முடித்து அவன் காரில் ஏறப்புகு முன் பல தொழிலாளர்கள் அவனைச் சூழ்ந்துகொண்டு கைகுலுக்கினர்; மகிழ்ச்சியைப் பல வகையாகத் தெரிவித்துக்கொண்டனர். அவனுடைய காருக்குப் பின்னாலே வெகு தூரம் ஓடினர், களைக்கும்வரை ஓடினர்.

செஞ்சேனை வீரர்கள் அனைவருக்குமே முகம் மலர்ந்த வரவேற்பு எங்கும் கிடைத்தது. அன்போடும் ஆதரவோடும் உரால்ஸ்க் மக்கள் அவர்களை உபசரித்தார்கள். வேண்டிய உணவு, உறையுள், வசதி தந்தார்கள்; கேளிக்கை, நடன, நாடக விருந்தளித்தார்கள்.

அவர்களது வெற்றிக் கொண்டாட்டம் பல நாட்கள் தொடர்ந்தது; பீரங்கி முழக்கம் அவர்களது தலைக்குமேலே கேட்டுக்கொண்டிருந்தபோதும் வெற்றிக் கொண்டாட்டம் நடந்துகொண்டேயிருந்தது; நிகழ்ச்சியொன்று நடைபெற்றுக்கொண்டிருந்த நாடகக் கொட்டகை மீதே வெடிகுண்டொன்று வெடித்தது. என்றாலும்கூட வழக்கம்போல மன மகிழ்ந்திருந்தனர்!

கொஸாக்கியர்கள் உரால்ஸ்க்கை அடுத்திருந்த ஆற்றங் கரையைத் தாண்டிப் பின்னடைந்துவிட்டார்கள். என்றாலும்கூட அவர்களை உடனே இன்னும் சிறிதுதூரம் விரட்டி வரவேண்டும்; தமது படைகளைச் சேர்க்கவிடாது சிதறடிக்க வேண்டும்; உரால்ஸ்க் நகருக்குக் கேடு பயவாவண்ணம் நிரந்தரமாக விரைவில் தடுத்துவிட வேண்டும். மிக முக்கிய கேந்திர நகரான உரால்ஸ்க்கிற்கும் கொஸாக்கியர்களுக்கும் பெரிய இடை வெளியை ஏற்படுத்த வேண்டும்.

சப்பாயேவைப் பொறுத்த மட்டும், போர்முனையில் அவன் அடையும் புது வெற்றிகளைத் தவிர வேறெதுவும் அவனுக்குத் திருப்தியைத் தந்துவிடாது. எனவே நகரத்து மக்களது வெற்றியாரவாரம் கொஞ்சம் குறையத் தொடங்கியதும் எல்லாப் படைப் பகுதிகளுக்கும் சப்பாயேவ் ஓடோடித் திரிந்தான். நதியைத் தாண்டுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டான். நதிக்குக் குறுக்கே புதிய பாலமொன்று கட்ட ஏற்பாடுகள் நடந்தன. ஆனால் அதற்கும் முன்பே இரண்டு செஞ்சேனைப் படைகள் எப்படியோ ஆற்றைக் கடந்து அக் கரைக்குச் சென்றுவிட்டன. பீரங்கிப் படைகளின்றிக் காலாட் படைகளை மட்டும் அனுப்புவது பயனற்றது என்பதை உணர்ந்தனர். எனவே பீரங்கிப் படைகளை அனுப்புவதற்காகப் பாலத்தை விரைவில் கட்டி முடிப்பதில் அனைவரும் உற்சாகமாக ஈடுபட்டனர். அதே சமயத்தில் படைத் தளபதிகளிடமிருந்து விபரீதமான பல செய்திகள் வரத் தொடங்கின.

உரால்ஸ்க்கிற்கு தான் வந்த மூன்றாம் நாள் அதிகாலையில் இதுவரை நடந்த அலுவல்களையெல்லாம் சப்பாயேவ் எண்ணிப் பார்த்துக்கொண்டிருந்தான். அதற்கு முதல் நாள் இரவு மேற்கொள்ளப்பட்ட வேலைகளைப் பார்க்கப் புறப்பட்டான். பியோடாரும் அவனோடு சேர்ந்துகொண்டான். எல்லாப் புறங்களிலும் இருந்து ஏராளமான செஞ்



சேனை வீரர்கள் புற்றீசல்கள்போலப் புறப்பட்டு வேலை செய்தனர்; ஏராளமான மரக்கட்டைகளை ஆற்றங்கரைக்குக் கொணர்ந்தனர். எல்லா மரக்கட்டைகளையும் இணைத்துப் பாலத்திற்கு ஆதாரவாக முட்டுக் கொடுத்தனர்.

ஒரு வீரனிடம் சப்பாயேவ் நெருங்கி...“உன் மேஸ்திரி எங்கே?” என்று கேட்டான்.

“பாலத்தின்மேலே நிற்கிறார்” என்றான் அவன்.

பியோடாரும் சப்பாயேவும் பாலத்தின் மேலே ஏறினர். அங்கே குவித்துக் கிடந்த மரக்கட்டைகளின்மீது சாவதானமாக அமர்ந்தபடி சுருட்டுப் பிடித்துக்கொண்டிருந்தார் ஒரு எஞ்சீனியர். பாலத்தை விரைவில் கட்டிமுடிக்கும் பொறுப்பு அனைத்தும் இவரிடமே விடப்பட்டிருந்தது. ஆனால் அவர் ‘குஷியாக’ நேரத்தைப் போக்கிக் கொண்டிருந்தார். சப்பாயேவின் தலையைக் கண்டதும் அவசரம் அவசரமாக எழுந்து பாலத்தின் நடுவே போய் நின்றுகொண்டார். நாள் முழுவதும் அங்கேயே நின்று வேலையைக் கவனிப்பதுபோலச் சுற்று முற்றும் சுறுசுறுப்பாக நகர்ந்து நடித்தார். இந்த மாதிரிச் சமயங்களில் சப்பாயேவ் வெறியனாகிவிடுவான்! அதுவும் பொறுப்பை மறந்தவர்களிடம் ஈவிரக்கம் காட்ட மாட்டான். அதிலும் எதிர்க்கரையிலிருந்த செஞ்சேனை வீரர்கள் உதவிக்காக ஏங்கிக் கொண்டிருந்தார்கள். எதிரியின் வலுவான படைகளால் எந்த வினாடியும் நசுக்குண்டு அழியும் நேரத்தில் இருந்தார்கள். பாலத்தைச் செம்மை செய்து சற்றும் தாமதிக்காது படைகளையும் பீரங்கி வண்டிகளையும் அனுப்ப வேண்டும். தாமதிக்கும் ஒவ்வொரு வினாடியும் அபாயகரமானது. பாலத்தைச் செம்மை செய்வதற்கு அதி மனித முயற்சிகள் தேவைப்பட்டன. எனவேதான் பாதிப் படையினரைப் பாலங் கட்டும் வேலைக்கு அனுப்பியிருந்தான். எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் முடிக்க வேண்டுமே என்று துடித்துக்கொண்டிருந்தான். ஆனால் இங்கு

எல்லாம் தலைகீழாக இருந்தது. கட்டுப்பாடோ இணக்கமோ இன்றித் தாறுமாறாக வேலை நடந்துகொண்டிருந்தது. பலர் திட்டமிட்ட வேலை யேதும் பார்க்காது சுற்றிக் கொண்டிருந்தனர். எஞ்சிய சிலரும் அக்கறை யில்லாதவர்கள் போலப் புகை பிடித்துக்கொண்டிருந்தனர்.

இதைக் கண்ட சப்பாயேவின் நெஞ்சம் கொதித்தது. வெறிபிடித்த மிருகம்போல எஞ்சீனியரிடம் சென்றான்; அவனைப் பற்றிப் பிடித்து ஓங்கி அறைந்தான். அடிபட்ட எஞ்சீனியர் மரக்கட்டைகளின்மீது விழுந்து உருண்டு தண்ணீருக்குள் விழுந்தான். பயத்தால் அவன் உடல் வெட வெடத்தது. உடனே சுட்டுப் பொசுக்கிவிடுவார்களே என்ற திகில் அவனைப் பற்றிக்கொண்டது. சப்பாயேவும் தன்னுடைய கைத் துப்பாக்கிப் பட்டையில் கை வைத்துவிட்டான். உடனே பியோடார் தலையிட்டுத் தடுத்துவிட்டான். நடுங்கிக்கொண்டிருந்த எஞ்சீனியரைத் திட்டி நொறுக்கினான் சப்பாயேவ்:

"நாச வேலைக்கார நாய்கள்! என்னுடைய படைவீரர்களைப் பற்றிய அக்கறையே உனக்கில்லை என்பதை நான் அறிவேன். எல்லோரும் கொல்லப்படட்டும் என்பது தானே உன் நோக்கம். நன்றி கெட்ட நயவஞ்சகப்பதரே! மத்தியானச் சாப்பாட்டிற்குள் பாலம் கட்டி முடிக்கப்பட வேண்டும்...தெரிகிறதா? இல்லையானால் நாயைச் சுடுவது போல உன்னைப் பொசுக்கிவிடுவேன்!" என்று பொரிந்து தள்ளினான்.

உடனே எஞ்சீனியர் ஆற்றங்கரையில் தப்பித்தோம் பிழைத்தோம் என இங்கும் அங்கும் ஓடினான். பல இடங்களில் குவிந்து கிடந்த வீரர்களைப் பிரித்துப் பல வேலைகளைக் கொடுத்தான். செஞ்சேனை வீரர்கள் ஈடுபாட்டுடன் வேலையைத் தொடங்கினர். இரண்டரை நாட்களாக முயன்றும் கால்வாசிகூட முடியாத பாலம், மத்தியானச் சாப்பாட்டிற்குள் பூர்த்தியாகிவிட்டது!



யாரிடம் எப்படி வேலை வாங்க வேண்டுமென்பது சப்பாயேவுக்கு நன்கு தெரியும், ஆனால் அவன் மேற்கொண்ட நடவடிக்கைகள் மிகவும் கடுமையானவை, பயங்கரமானவை. எந்த நடவடிக்கையும் நியாயமானதுதான் என்று எண்ணத் தகுந்த சூழ்நிலை வேறு அப்போதிருந்தது. நிலைமையைச் சமாளிப்பதற்காகப் பலரை நையப்புடைப்பதுகூட நியாயமாகவே அப்பொழுது கருதப்பட்டது. ஒரு சமயம் தளபதியொருவன் தன் படைவீரர்கள் அனைவரையும் சாட்டையால் வெளுத்தான். இந்தத் தண்டனை அவனுடைய படை முழுவதையும் பாதுகாத்துத் தந்தது! எனவே காலத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப நடவடிக்கைகளின் தராதரத்தையும் நிர்ணயிக்க வேண்டியதாயிற்று!

சப்பாயேவும், இந்தப் பாலத்தைப் பொறுத்த வரை பலமுறை நேரே வந்து கூறியும் உருப்படியாக எதுவும் நடக்கவில்லை. திட்டமிட்டு நாசவேலை செய்கிறார்களா? அல்லது தெரிந்த லட்சணமே அவ்வளவு தானா? என்றெல்லாம் அவனால் நிதானிக்க முடியவில்லை. அன்று காலை அவன் பொறுமையின் எல்லைக்கே வந்து விட்டான் அதற்கு மேல் அவனால் பொறுக்க முடியவில்லை தன்னையும் மறந்து பொங்கிவிட்டான். நடக்கக் கூடாதது, தவிர்க்க முடியாதபடி நடந்துவிட்டது! அதன் பலனாக மத்தியானத்திற்குள் பாலம் செப்மையாகிவிட்டது. இதுதான் ஏற்க முடியாததும், கடுமை நிறைந்ததுமான போர்க்கால நியாயம்!

அந்த நியாயத்தின் பலனாகச் சேதமடைந்த பாலம் செம்மைசெய்யப்பட்டது. செஞ்சேனைப் படைகள் ஆற்றைக் கடந்து புறப்பட்டுவிட்டன!

# 15

## முடிவு

உரால்ஸ்க் நகரிலிருந்து நூறு கல் தொலைவுக்கு அப்பால் உள்ள லிபிஸ்ஷென்ஸ்க்கை நோக்கிச் செஞ்சேனை புறப்பட்டது. புல்வெளி—எங்கு பார்த்தாலும் ஸ்டெப்பிப் புல்வெளியே விரிந்து கிடந்தது. இந்தப் புல்வெளிப் பிராந்தியம் கொஸாக்கியர்களுக்குச் சொந்த வீடு போல; அவர்களுக்குச் செல்வாக்கும், பிழைப்பும் இந்தப் பகுதியில் நிறைய உண்டு. எந்த கிராமத்திற்குச் சென்றாலும் ஆதரவும் உதவியும் அவர்களுக்கு வலியக் கிடைத்தன. ஆனால் செஞ்சேனையினர்க்கு எங்கு சென்றாலும் வெறுப்பும் வேதனையுமே கிடைத்தன. வெள்ளைப் படைகள் விட்டுச்சென்ற கொஸாக்கியக் கிராமங்களில் எஞ்சி யிருந்த ஒருசிலரிடமிருந்து இதமான சொல்லோ, அன்பான உதவியோ எதிர்பார்க்கமுடியவில்லை பெரும்பாலான கிராமங்கள் கொஸாக்கியப் படைகளுக்குக் குடியேற்றம் அளித்துப் பாதுகாத்து வந்தன. அந்தப் படைகளே பின்வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டதும், வயதான உதவாக்கறைகளை மட்டும் கிராமத்தில் விட்டு எல்லோரும் வெளியேறிவிட்டனர். "போல்ஷெவிக்குகள் கொடுமைக்காரர்கள் - கொள்ளையடிப்பவர்கள் - வெறியர்கள்" என்றெல்லாம் கொஸாக்கியர்கள் செய்த தப்புப் பிரச்சாரத்தில் மயங்கித் தங்களுடைய உடைமைகளையெல்லாம் வெள்ளைப் படை வண்டிகளில் ஏற்றிக் குடி பெயர்ந்துவிட்டனர். எஞ்சியிருந்த கொஞ்சநஞ்சம் தானியங்களை மட்டும் களஞ்சியங்களில் விட்டுச் சென்றனர். அவை கூடக் கருகிக் காய்ந்து, கல்லும் மண்ணும் கலந்து, கோழி கூடத் தின்னலாயக்கின்றி இருந்தன.



ஊரில் இருந்த நல்ல தண்ணீர்க் கிணறுகளையெல்லாம் நஞ்சிட்டுவிட்டனர், அல்லது பாழ்படுத்திவிட்டனர். நீர் இறைக்கும் வாளியைக்கூட விட்டுச் செல்லவில்லை. ராணுவத்திற்குப் பயன்படத்தக்க எல்லாக் கட்டடங்களும் உருக்குலைக்கப்பட்டன. எவ்வெவற்றையெல்லாம் செஞ்சேனைக்குப் பயன்படாமல் நாசமாக்க முடியுமோ அதையனைத்தையும் நாசமாக்கிச் சென்றுவிட்டார்கள். இந்த நாசச் செயல்களைப் பார்க்கும்பொழுது இனிமேல் திரும்பியே வரமாட்டோம் என்ற அவநம்பிக்கை வெறியில் கொஸாக்கிய வெறியர்கள் இப்படிச் செய்து சென்றார்களோ என்ற ஐயம் ஏற்படும். லிபிஸ்ஷென்ஸ்க் பகுதியைச் சுற்றியிருந்த கிராமப் பகுதிகளில் வெள்ளைப் படைகள் பின்வாங்கியபோதெல்லாம் கடுமையாகவும் துணிவாகவும் அவர்கள் போரிடத் தயங்கவில்லை!

சப்பாயேவ் ராணுவத்தின் தலைமைக் காரியாலயம் உரால்ஸ்க் நகரிலேயே இருந்தது. ஆனால் இதர செஞ்சேனைப் படைப் பகுதிகள் மட்டும் பல கல் தொலைவுகள் முன்னேறிச் சென்றுவிட்டன. செஞ்சேனைப் படையினர்க்குப் பற்றாக் குறை பிடித்துக்கொண்டது. போதிய வெடிமருந்துகள், உடை, உணவு ஆகிய எதுவும் கிடைக்கவில்லை. கொஷாக்கியக் கிராமங்களில் எத்தகைய உதவியும் அவர்களால் பெற முடியவில்லை. செஞ்சேனை வீரர்கள் கோதுமை நிறைந்த களஞ்சியப் பிராந்தியங்களிலே சென்றுகொண்டிருந்தார்கள் எங்கு பார்த்தாலும் குற்றி யெடுக்காத கோதுமை மலை மலையாகக் குவிந்து கிடந்தது. என்றாலும் அவர்களுக்கு உணவேதும் கிடைக்கவில்லை. எது கிடைத்தாலும் உண்ணத் தயாராக இருந்தார்கள் போர் முனை வீரர்களுக்கு, வாரத்துக்கு ஒரு முறைகூட அரைவேக்காட்டு ரொட்டி கிடைப்பதில்லை...அரைப் பட்டினியோடு போராடிக் கொண்டிருந்தார்கள்...தாள முடியாத கொடுமை நாட்களாகக் கழிந்து கொண்டிருந்தன!

சப்பாயேவும், பியோடாரும் ஒவ்வொரு நாளும் பல்வேறு படைப் பகுதிகளுக்கு மோட்டாரில் சென்று வந்தனர். சோர்ந்திருந்த வீரர்களுக்குத் துணிவையும் ஊக்கத்தையும் அவ்வப்போது ஊட்டி வந்தனர். பாதைகள் நன்கு அகலமா யிருந்தமையால் வேகமாக எல்லா இடங்களுக்கும் சென்று வருவது சாத்தியமாயிற்று. அவர்களது மோட்டார் இடையில் நின்றுவிட்டால்—எத்தனையோ தடவைகள் பட்டரை போட்டுப் பாதையில் படுத்துக்கொண்டிருக்கிறது!—குதிரையில் ஏறி நாளொன்றுக்கு நூறு கல் தொலைவு பயணம் செய்வார்கள். உரால்ஸ்க் நகரிலிருந்து விடியற்காலையில் கிளம்பி நள்ளிரவில்தான் திரும்புவார்கள். ஸ்டெப்பிப் புல் வெளியில் பாதை கண்டு செல்வது சப்பாயேவுக்குக் கைவந்த வித்தை. கிராமங்களையும், பாதைகளையும் நன்கு அறிந்து சொல்லிவிடுவான். என்றுலும்கூட ஒரு முறை இவனும் வழி தவறித் தடுமாறிவிட நேர்ந்தது. ஸ்டெப்பி வெளியில் பாதை தடுமாறி அலைந்த கதையைத் தன்னுடைய நாட்குறிப்பேட்டில் "இரவில் தோன்றிய வெளிச்சங்கள்" என்ற தலைப்பில் பியோடார் எழுதி வைத்திருந்தான். அந்தப் பகுதியை அப்படியே தர விரும்புகின்றேன்...ஆனால் சப்பாயேவும் செஞ்சேனைப் படையினரும் ஸ்டெப்பி வெளிகளில் பட்ட துயரங்களில் நூற்றில் ஒன்றுகூட இருக்காது பியோடாரின் குறிப்பில் காணப்படுவது! எவ்வளவோ விஷயங்களை பியோடார் தெளிவாக விளக்கவில்லை. என்றுலும் பியோடாரது நாட்குறிப்பேட்டில் கண்டபடியே தருகிறேன்:

## இரவில் தோன்றிய வெளிச்சங்கள்

"நாங்கள் சிம்ஷோவைப் பார்க்க வேண்டி யிருந்தது. சற்று நேரங்கூடத் தாமதிக்காது, நம்பிக்கைக்குரிய பன்னிரண்டு வீரர்களுடன் குதிரைகளில் புறப்பட்டோம். குதிரைகளின் குளம்படிபட்டுச் சீரழிந்து கிடந்த பாதைகளைத்



தவிர்த்து ஒற்றையடிப் பாதைகளில் செலுத்தினோம். ஓங்கி வளர்ந்த புல் புதர்கள், வயல் பாங்கான சரிவுகள், காட்டுச் செடிகள் ஆகியவற்றின் ஊடே சென்றோம். கடைசியில் குழம்பிக் கிடந்த ஒரு நீர் நிலைக்கு வந்து சேர்ந்தோம். அந்த ஏரியின் கரையில் ஏறிக் குதிரைகளைத் தண்ணீர் அருகில் கொணர்ந்தோம். அந்தக் கலங்கிய நீரைக் குதிரைகள் உறிஞ்சிக் குடித்தன; நாங்கள் அள்ளிக் குடித்தோம். எங்களது தாகம் அவ்வளவு கொடுமையா யிருந்தது. அப்பொழுது மாலை 5 மணி இருக்கும். அடுத்த முப்பது கல் தொலைவிலும் ஒரு சிறு குக்கிராமம் கூடக் கண்ணில் தென்படவில்லை. இடையில் ஏதேனும் குடிக்க நீர் கிடைக்குமா என்று பள்ளங்களை யெல்லாம் உற்றுப் பார்த்தோம். எல்லாம் வறண்டு கிடந்தன. எங்கள் நாக்கும் உலர்ந்து விட்டது. அண்மையில் இருந்த குன்றுகளின் உச்சியில் பல குதிரை வீரர்கள் அடிக்கடி தென்பட்டனர். அவர்கள் அனைவரும் கொஸாக்கியப் படைச் சாரணர்களாயிருக்கக் கூடுமென எண்ணினோம். எந்தப் புதரில் இருந்தாவது திடீரென்று கொஸாக்கியர்கள் எந்த வினாடியும் பாய்ந்து தாக்கக் கூடும். இதுதான் அவர்களுடைய போர்த் தந்திரம். எதிர்ப்பேதும் காட்டாது எதிரிப் படைகளை வெகுதூரம் முன்னேறிவிட்டுச் சுற்றி வளைத்துக்கொள்ளுவார்கள்; புயல் போலச் சீறி வெறியாட்ட மாடுவார்கள்; திகிலடைய வைத்துத் திடீர்த் தாக்குதலுக்கு ஆட்படுத்துவார்கள். இதை யெல்லாம் நன்குணர்ந்த நாங்கள் மிக முன்னெச்சரிக்கையுடன், எந்த நிமிடம் எது நேர்ந்தாலும் சமாளிக்க வேண்டு மென்ற துணிவோடு சென்றுகொண்டிருந்தோம்.

வானத்தில் வெண்மையாகப் புகை போலப் படிந்திருந்த மேகத் திரள், செறிந்து கருமையாகி மழை மேகம் போலத் தொங்கி நின்றது. அந்தி மயங்கிவிட்டது. இருட்டும் செறிந்து வளரத் தொடங்கியது. ஸ்டெப்பி வெளியில்

கடுங்காற்று வீச ஆரம்பித்தது. சூழ்ந்திருந்த இருட்டையும், கப்பியிருந்த மேகக் கூட்டத்தையும் பயங்கரமாக்கும் பேரொலியாகக் காற்று ஊதிச் சென்றது. உடனே மழை பொழிந்தது. பெரும் மழையாகக் கொட்டித் தீர்த்துவிட்டது. நாங்கள் அனைவரும் நன்கு நனைந்துவிட்டோம். "நான் மெல்லிய சட்டையே அணிந்திருந்தேன். எனவே எல்லோரையும்விட நான் சீக்கிரத்தில் நனைந்துவிட்டேன். என் கைகள் நடுங்கின, பல் தந்தி யடித்தது. வெப்பமும், குளிரும் மாறி மாறி மூச்சுக் குழலில் சென்றன. நாங்கள் சென்ற வழிப் புறத்தில் பாழடைந்த மண் குடிசைகள் சில தென்பட்டன. அவற்றில் ஆள் நடமாட்டம் இருப்பதும் புலப்பட்டது.

நாங்கள் அனைவரும் அங்கு சென்றோம். எங்களுடைய போக்குவரத்து ஆசாமிகள் இருவரையே அங்கே கண்டோம். முன்னேறிச் சென்ற செஞ்சேனைப் படையைச் சேர்ந்த அவர்கள் இருவரும் பின்தங்க நேரிட்டது. எந்த உதவியும் கிடைக்காத அதிர்ஷ்டக் கட்டைகளாகத் தவித்தார்கள். அவர்கள் ஒரு விபத்துக்கும் ஆளானார்கள். அவர்களது வண்டிச் சக்கரம் முறிந்து அச்சும் தெறித்துவிட்டது. எவ்வளவோ முயன்றும் வண்டியைச் செம்மைப்படுத்த முடியவில்லை. எனவே அங்கிருந்த கேணியருகில் உடைந்த வண்டியைப் போட்டுவிட்டு ஓடிச் சென்றேனும் செஞ்சேனைப் படைகளோடு சேர முடிவு கட்டினர். தாமதித்தால் கொஸாக்கியர்களிடம் அகப்பட நேரும் என்பது அவர்களுக்குத் தெரியும். அவர்களிடமிருந்து ஒரு போத்தலை வாங்கி நீண்ட கயிற்றில் கட்டிக் கேணிக்குள் இறக்கினோம். கேணியில் விஷமிடப்பட்டிருந்தாலும் அதைப் பொருட்படுத்தவில்லை. எங்களுடைய தாகம் அவ்வளவு கொடுமை செய்தது. குறுகிய கழுத்தைக் கொண்ட அந்தப் போத்தல் நிரம்ப வெகு நேரமாயிற்று. எல்லோரும் வயிற்றை நிறைத்துக்கொண்டு புறப்பட்டோம். வழியேதும்



புலப்படவில்லை. என்றாலும் நம்பிக்கையோடு முன்னேறி நாலு கல் கடந்தோம். தூரத்தில் தெரிந்த விளக்கொளியைப் பின்பற்றிச் செல்ல முடிவுகட்டினோம். அந்த விளக்கொளி வரும் இடம் அங்கிருந்து பதினைந்து கல் தூரத்தில் இருக்கக் கூடும். அதை ஒரு மணி நேரத்தில் அடைந்துவிடலாம் என்றெல்லாம் கணக்கிட்டோம். அது என்ன ஒளி என்பதுதான் புரியவில்லை. ஒரு வேளை நமது படையினர் முகாமிட்ட இடத்தில் போடப்பட்ட நெருப்பு மூட்டமாக இருக்கக் கூடுமெனக் கருதினோம். அது ஒரு வேளை நம்மவர்களாக இல்லாமலு மிருக்கக்கூடும் என்றாலும் நம்பிக்கையோடும் துணிவோடும் முன்சென்றோம், பேச்சேதுமின்றிப் போய்க்கொண் டிருந்தோம். எப்படியும் செஞ்சேனைப் படையைப் பிடித்துவிடலாம் என்ற நம்பிக்கை ஒருபுறம் உந்த நேரடியாக வலுவில் சென்று கொஸாக்கியர்களிடம் தான் அகப்பட்டுக் கொள்ளப் போகிறோமோ என்ற பயமும் எங்களைப் பின்னின்று இழுத்தது!

இந்தப் பிராந்தி எங்கள் எண்ணத்தைக் குலைத்தது. தலையைக் கிறுகிறுக்கச் செய்தது. குதிரைப் பிடரியில் வரைப்படத்தை விரித்து வைத்துப் பல நெருப்புக் குச்சிகளை உரசிப் பார்த்தான் சப்பாயெவ். எந்தத் திசையில் போகிறோம் என்றெல்லாம் காம்பசைக்கொண்டு நிர்ணயிக்கப் பார்த்தான். எதுவும் புலப்படவில்லை. நாங்களும் குருட்டாம் போக்கில் போய்க்கொண் டிருந்தோம். தூரத்தில் தோன்றிய ஒளி....பிரகாசமாக எழும்பி எரிவதும், உடனே அமுங்கிவிடுவதுமாக இருந்தது. அதைப் பார்த்தால் முகாம் நெருப்பு மூட்டம்போல் தோன்றவில்லை. ஏதோ மாய விளக்குப்போலவும் தென்பட்டது. எங்களை ஏமாற்றுவது போல உணர்ந்தோம். நாங்களும் இதுவரை ஏறத்தாழ பத்துக் கல் தொலைவு வந்துவிட்டோம். ஆனால் இன்னும் வெளிச்சத்திற்கு அருகில் வரவில்லை. இன்னும் பல கல் தொலைவைக் கடக்கவேண்டி யிருந்தது. அது அணைந்து

அணைந்து உரிவதைப் பார்த்ததும் உண்மையிலேயே நெருப்பு மூட்டந்தானா என்ற சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. ஒருவேளை ஒரு உயர்ந்த கம்பத்தின்மீது தொங்கவிடப் பட்ட லாந்தர் விளக்காக இருக்கக் கூடுமெனத் தோன்றியது. அப்படியிருந்தாலும் அது எங்களுக்கு அப்பால் ஏன் நகர்ந்து கொண்டேயிருக்க வேண்டும்?

இனிமேலும் வெளிச்சத்தைத் தொடர வேண்டாம் என முடிவுகட்டினோம். இதற்கு முன்பே பாதை தவறி விட்டது. நீர்பொழிந்த புல்வெளியில் குதிரைக் குளம் படிகள் பட்டு நீர் தெறித்தன. உடனே வலதுபுறத்தில் இன்னும் ஒரு வெளிச்சம் தோன்றியது. உடனே குதிரைகளை வேகமாகச் செலுத்தினோம். அதுவும் மறைந்து விட்டது. இப்படிப் பல வெளிச்சங்கள் தோன்றித் தோன்றிச் சாலம் செய்தன! புல்வெளியெங்கும் மயான அமைதி நிலவியது. திடீரென்று மழை பெய்து நனைக்கும். பிறகு ஊதற் காற்றடிக்கும். இயற்கையின் கண்ணாம்பூச்சி விளையாட்டைக் கவலையின்றித் தாங்கிச் சலனமின்றி விரிந்து கிடந்தது.

எங்களுடைய உற்சாகம் 'குன்றிவிட்டது. போய்க் கொண்டேயிருந்தோம்—எங்கேதான் போகிறோம் என்பது புரியாமலே போய்க்கொண்டிருந்தோம். சில சமயங்களில் முதலில் கடந்த இடங்களுக்கே திருப்பவும் வந்துவிட்டது போன்ற பிரமை ஏற்பட்டது. திடீரென ஏதேனும் வேற்றொலி கேட்டால் . ஒரு வேளை கொஸாக்கியப் படைகள் தானோ—என்ற அச்சத்தால் எங்கள் கண்கள் விரிந்தன. ஒருவேளை எங்களைக் கண்டுபிடித்துத்தான், பின்தொடர்கிறார்கள் போலும். எந்த வினாடியும் தாக்கக் கூடுமே என்ற அச்சம் உந்திச் சென்றது. சூழ்ந்திருந்த கும்மிருட்டு எங்கள் வலிய நெஞ்சுறுதியைக் குலைத்துப் பயந்தாங்கொள்ளிகளாக்கிவிட்டது.

சற்று நேரங் கழித்தபின்...ஏதோ சற்று தூரத்தில்



கறுப்பாக அசைவது தோன்றியது. இரு குதிரை வீரர்களை அசைவது என்ன என்று பார்த்துவர அனுப்பினோம். இருவரும், இரண்டு திசைகளில் பிரிந்து எதிரியின்மீது பாய்வது போலச் சூழ்ந்து நெருங்கினர். இருவரும் திரும்பி வந்து, அது உமி நீக்கப்படாத கோதுமைக் குமியல் என்றார்கள். அந்தத் தானியக் குவியலுக்குப் பக்கத்தில் தங்கி, சூரிய உதயத்தில் புறப்படலாமென முடிவு கட்டினோம். குதிரைச் சேணத்தைக்கூட அவிழ்க்கவில்லை. ஒவ்வொருவராக விடியும்வரை காவல் காத்திருக்க வேண்டுமென்று நியதி செய்தோம்,

எங்கள் துப்பாக்கிகளில் மருந்து நிறைக்கப்பட்டுத் தயாராக இருந்தன. வைக்கோற் போரில் சிறு பள்ளங்களைப் பறித்துப் பதுங்கிக்கொண்டோம். வானமும் அழுது கொண்டேயிருந்தது. ஏதோ சவுகரியமாக வைக்கோலைப் பரப்பிப் படுக்கை தயார் செய்துகொண்டோம் என்ற மகிழ்ச்சியில் இருந்தேன். ஆனால் நான் படுத்திருந்த இடம் நொடிப்பொழுதில் நீர் நிறைந்த பள்ளமாகிவிட்டது. பக்கத்தில் கிடந்த சாணிக் குவியலில் இருந்து ஊறிய நீர் துர்நாற்றமெடுக்கச் செய்தது, சப்பாயேவ் எனக்குப் பக்கத்தில் தான் அமர்ந்திருந்தான். ஈர வைக்கோலில் முகத்தைப் புதைத்திருந்தவன் திடீரென்று அவனுக்குப் பிடித்த பாட்டொன்றை எடுத்துவிட ஆரம்பித்தான், என்னால் நம்பவே முடியவில்லை! அவன் வாய்க்குள்ளே ஏதோ முனங்குகின்றான் என்றுதான் முதலில் நினைத்தேன். ஆனால் அவன் வாய்விட்டுப் பாட ஆரம்பித்ததைக் கண்டு வியந்துவிட்டேன்.

“என்ன வாஸிலி இவானோவிச் எப்படிப்யப்பா உன்னாலே இப்பப் பாடமுடியுது?”

“ஏன் முடியாது?”

“சரி சரி ஏதாவது வெள்ளைப் படை இருந்தா உன் பாட்டைக் கேட்டால் என்ன ஆகிறது?”

“அவர்களுக்கெல்லாம் கேட்காது, வாய்க்குள்ளே

தானே பாடிக்கொள்ளுகிறேன். இந்த ஈர வைக்கோல்மீது சும்மா உட்கார்ந்திருக்க முடியவில்லை'' என்றான் சப்பாயேவ்.

அவன் நகைச்சுவை குன்றாது பேசியது கேட்ட என் உள்ளம் குளிர்ந்தது.

சப்பாயேவ் ! தொடர்ந்து பேசினான் :

"பியோடார் இன்றைக்கு நாம் வழிதடுமாறி வந்திருப்பதை எண்ணும்பொழுது நான் ஏற்கெனவே கேள்விப்பட்டிருந்த சம்பவமொன்று நினைவுக்கு வருகிறது. நம்மைப்போலவே இரு நண்பர்கள் பாலைவனப் பாதையில் வழி தவறிச் சிக்கிக்கொண்டனர். எப்படிப் போவது என்பதே புரியாமல் தவித்தனர், நமக்காவது இது இரவு—பொழுது விடிந்தால் எப்படியாவது வழி கண்டு சென்றுவிடலாம். பாலைவனத்தில் வழி தவறிச் சிக்கியவர்களுக்கு இரவும் ஒன்றுதான் பகலும் ஒன்றுதான். எங்கு பார்த்தாலும் பாலைவனத்து மணல் பிரதேசத்தைத் தவிர வேறு எதுவும் தென்படாது. அந்த நண்பர்கள் இருவரும் ஒவ்வொரு புட்டி குடிதண்ணீர் வைத்திருந்தார்கள். ஆனால் அதைக் குடித்துத் தீர்த்துவிடவில்லை. கொஞ்சம் கொஞ்சமாகத் தொண்டையை நனைத்துக்கொண்டார்கள். சாக மனமின்றி அலைந்து திரிந்தார்கள். மூன்று நாட்கள் பயனின்றிக் கழிந்தன. நான்காம் நாள்...ஒருவன் சோர்ந்து விழுந்துவிட்டான். "நண்பனே...நான் சாகப்போகிறேன். நீயும் என் அருகில் படுத்துக்கொள். இருவரும் இதுவரை ஒன்றாகவே வாழ்ந்தோம்-ஒன்றாகவே இறப்போம்'' என்று குழறிப் பேசினான். மறு கணமே அவன் ஆவி பிரிந்தது. நண்பனைப் பறிகொடுத்த இன்னொருவன் நெடுநேரம் ஒன்றும் புரியாது பிரமை பிடித்தவன் போல உட்கார்ந்திருந்தான். அவலமாகச் செத்துக்கிடந்த தன் ஆருயிர் நண்பனின் பரிதாப முகத்தைப் பார்க்க அவனுக்குப் பயங்கரமாயிருந்தது. பாலைவனத் தனிமை அவனைப் பற்றிப் பிடித்தது.



நண்பனது சடலத்தை விட்டுத் துணிவோடு புறப்பட்டுச் சற்று தூரம் செல்லுவான். உடனே மனம் கேட்காது திரும்பிவிடுவான். தனிமையில் வழிதேடிச் செல்ல அவனுக்கே அச்சம் ஏற்பட்டது......! சிறிது நேரம் கழிந்தது. சில ஒட்டகங்கள் செல்லுவது அவன் கண்ணில் பட்டது. ஏதோ பாலைவனப் பிரயாணிகள் கூட்டமொன்றுபோவதையுணர்ந்தான். உடனே மனதில் உறுதிகொண்டான். மணலைத் தோண்டி நண்பனைப் புதைத்துக் கையற்று நிலையில் பிரயாணிகளோடு சேர்ந்துகொண்டான். பாலைவனத்தில் வழி தவறினால் அதோகதிதான்!'' என்று முடித்தான் சப்பாயேவ்.

கதையை முடித்த வேகத்தில் .. "என்ன அங்கே ?'' என்று எழும்பிக் குதித்தான் சப்பாயேவ். நானும் வெருண்டு எழுந்தேன். உடனிருந்த பெட்காவும் எழுந்தான். எங்கள் துப்பாக்கிகளை நீட்டிச் சுடத் தயாராகக் காத்திருந்தோம். வேறு யாரும் இல்லை! எங்கள் பணியாள் ஒருவன் இருட்டைக் கிழித்துக்கொண்டு வருவது தெரிந்தது. அவனுக்குப் பின்னால் குதிரை மூக்கைச் சுளித்துக் கனைத்த வண்ணம் வந்துகொண் டிருக்கக் கண்டோம். மீண்டும் 'அந்த ஆசனத்தில்' படுத்துக்கொண்டோம்.

"ஏன் அந்தக் கதையைச் சொன்னாய் சப்பாயேவ்?'' என்று நான் கேட்டேன்.

"ஏனா ?...ஏதோ ஞாபகம் வந்து சொன்னேன், நான் எப்போதாவது இக்கட்டான இடத்தில் தங்கியிருக்க நேர்ந்தால் இடர்ப்பட்டுத் தொல்லைப்பட்டவர்களின் சங்கடத்தையும் கஷ்டத்தையும் ஞாபகப்படுத்திக்கொள்ளுவேன். அவர்கள் மீண்டதுபோல நாமும் ஏன் தப்ப முடியாது என்று உறுதி கொள்ளுவேன். ஒரு முறை கடலில் மூழ்கிய கப்பலில் தப்பிய மாலுமியைப் பற்றிக் கேள்விப்பட்டேன். மரக்கட்டை ஒன்றை விடா பிடியாகப் பற்றிக்கொண்டு மூன்று நாட்கள் கடலில் மிதந்தான். கடைசியில் காப்பாற்

றப்பட்டான். சூழ்ந்திருந்த ஆழ்கடலில் எவ்வித நம்பிக்கையுமின்றி மரணத்தின் பிடியிலே மூன்று நாட்கள் தத்தளித்தும் அவன் உறுதியோடு போராடித் தப்பிவிட்டான். இல்லையா?'' என்றான் சப்பாயேவ்.

சப்பாயேவ் பேசுவதை அனைவரும் விருப்போடு கேட்டோம். பெட்கா மிகக் கூர்ந்து கேட்டான். சப்பாயேவ் முடித்தவுடன், தானும் ஏதோ சொல்லப் பரபரத்தான்; துடித்தெழுந்தான்.

"எனக்கு ஒரு முறை நேர்ந்தது தெரியுமா?'' என்று சப்பாயேவிடம் கேட்டான். சப்பாயேவ் தன் மீசையை முறுக்கியபடியே பேசாது அமர்ந்துவிட்டான். பெட்கா தன் அனுபவத்தைச் சொல்ல ஆரம்பித்தான்:

"இது 1918-ல் டான் நதிக்கரைப் பகுதியில் நடந்தது. எங்களைச் சேர்ந்த இருபது பேரைக் கொஸாக்கியர்கள் ஒரு சிறு கூடத்திற்குள் அடைத்து வைத்தனர். மறுநாள் காலையில் எங்களில் போல்ஷெவிக்குகள் யார் எனக் கண்டு பிடித்துவிடுவதாகச் சொன்னார்கள். நாங்களே ஒப்புக் கொள்ளாவிடில் எல்லோரையுமே போல்ஷெவிக்குகள் என்று சுட்டுப் பொசுக்கிவிடுவதாக பயமுறுத்தினார்கள். எப்படியிருந்தாலும் காலையில் கொன்று தீர்த்துவிடுவார்கள் என்பது தெரியும்; தப்பிவிட முயன்றோம். எங்களை அடைத்து வைத்திருந்த கூடத்தை மூடியிருந்த தட்டியை உந்தித் தள்ளினோம். வலுவாகத் தள்ளியவுடன் தட்டி பெயர்ந்துவிட்டது. அடைத்து வைக்கப்பட்டிருந்த செஞ்சேனையர்களில் நான்தான் உருவத்தில் சிறியவன். எனவே என்னை முதலில் தப்பி வெளியேறச் சொன்னார்கள். ஒருவேளை அகப்பட்டுக் கொண்டாலும் மற்றவர்கள் பேசாதிருந்து விடலாமென்பது திட்டம். நானே தப்பி வெளியில் வந்தேன் என்று மட்டும் நான் சொல்லி மற்றவர்களைக் காப்பாற்றவேண்டும். காவல்காரனைக் கல்லாலெறிந்து ஒரே மூச்சில் முதலில் கொன்றுவிடுமாறும் எனக்கு யோசனை



கூறினார்கள். ஒரே அடியில் எப்படிக் கொல்லுவதென்பதை நான் முயன்று பார்க்கவேண்டும்! ஊர்ந்து வெளியேறத் தயாராகிவிட்டேன், அன்றைக்கும் இப்படித்தான் இருந்தது. மழையும், கும்மிருட்டும் இணைந்திருந்தன. மெல்லத் தட்டியை நெம்பிக் கொண்டு பிதுங்கி வெளியே வந்தேன். கூடத்து வெளிப்புறத்தின் மூலையில் காவற்காரன் இருந்தான். உடனே குப்புறப்படுத்துக் கொண்டேன். காவற்காரன் நிற்கிறானா அல்லது உட்கார்ந்திருக்கிறானா என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளச் சகதியில் ஊர்ந்து நகன்றேன். கூடத்தில் அடைக்கப்பட்டிருந்த வீரர்கள் தலையை நீட்டி என்னை உற்றுப் பார்த்துகொண்டிருந்தார்கள். காவற்காரன் ஒரு மரக்கட்டையில் தலை கவிந்து உட்கார்ந்திருந்தான். ஒருவேளை தூங்கி வழிகிறானே என்று கருதினேன். கூடத்திலிருந்து புறப்பட்ட போது அவர்கள் எடுத்துத் தந்தனுப்பிய செங்கல் ஒன்று என்னிடம் இருந்தது—இச் செங்கல்லால் தாக்குவதற்கு நெருங்கினேன்—நெருங்கியதும் ஒரேயடியாக அவன் பொட்டைச் சேர்த்துத் தாக்கினேன். முனகக்கூடத் திராணியற்றுத் தலைகுப்புறக் கீழே விழுந்துவிட்டான். தொடர்ந்து மூன்று நான்குமுறை இன்னும் வலுவாகத் தாக்கினேன். என் உடலெங்கும் ரத்தம் பீறிட்டுத் தெறித்தது. உடனே செஞ்சேனை வீரர்கள் அனைவரும் துணிந்து வெளியேறினர்.

அந்தக் கூடம் ஊரின் ஒருபுறத்தே அமைந்திருந்தது ரொம்பவும் சௌக்கியமாகி விட்டது. சற்றுத்தூரம் பதுங்கிப் பதுங்கிச் சென்று தப்பினோம். எங்களுடைய பிரதம ராணுவப் பகுதி தங்கி யிருந்த இடத்தைக் கண்டு பிடித்து அடைந்தோம். அதுவும் ஒரு திடுக்கிடத் தக்க சம்பவம்தான்!'' என்று முடித்தான் பெட்கா.

"திடுக்கிடத்தக்க சம்பவம்தான் என்றாலும் நீங்கள்

இன்னும் உயிரோடு இருக்கிறீர்களே!" என்று புதிர்போடுவது போலச் சப்பாயேவ் கேட்டான்.

" உயிரோடு நான் மட்டுமா என்ன ? எல்லோரும் தப்பிவிட்டோம், உண்மையாகவே தப்பிவிட்டோம் !" என்று பெட்கா மீண்டும் வலியுறுத்தினான்.

"நான் நம்புகிறேன் பெட்கா !" என்று சப்பாயேவ் புன்னகை ய்விழ்த்தான். பெட்கா மூக்கி இருமத் தொடங்கினான்.

" இதோ அவர்கள் தூங்குவதைப் பார் ஏதாவது மாறுபாடாகி விட்டால் எனக்குத் தூக்கமே வராது !" என்று சூழ்ந்து உறங்கியவர்களைச் சுட்டிப் பேசினான் சப்பாயேவ்.

எங்களில் பலருக்கு இன்னும் களைப்புத் தீரவில்லை. பேச்சும் ஓய்ந்தது....பொழுது புலர்வதும் சமீபித்துவிட்டது. இரவெல்லாம் வீசிய வாடையும், பெய்த மழையும் இன்னும் உடலை நடுங்கச் செய்தன. தூக்கமில்லாத சோர்வும் சேர்ந்துகொண்டது. வேகமாகச் சவாரி செய்தால் உடற்சூடேற்படும் என்று துணிந்தோம். சப்பாயேவ் தனது வரைப் படத்தைப் பார்த்து எந்த வழியாகப் போவதெனக் கண்டுபிடித்து விட்டான். அண்மையில் இருந்த குன்றையடைந்தோம். இப்பொழுது கொஞ்சம் உற்சாகம் தோன்றியது. புத்துணர்ச்சி பெற்றோம். சூரிய உதயமானதும் எங்கள் சோர்வெல்லாம் போய்விட்டது. தூரத்தில் ஏதோ பல போக்குவரத்து வண்டிகள் செல்லுவதைக் கண்டு வேகமாக அவர்களை நோக்கிச் சென்றோம். நாங்கள் வருவதைக் கண்ட அந்த வழிப் போக்கர்கள் தங்களுடைய குதிரைகளையும் விரட்ட ஆரம்பித்தார்கள். அவர்கள் உண்மையிலேயே வழிப் போக்கர்களா இல்லையா என்பதையறியப் பெட்கா முன்னால் விரைந்தான். எஞ்சிய அனைவரும் பின்னால் வந்துகொண் டிருந்தோம். அந்த வழிப் போக்கர்கள் வேறு யாருமில்லை. சிஷோவின் படையைச் சேர்ந்த எங்களது போக்குவரத்துச் சிப்பந்திகள்தாம் !



அடுத்த அரை மணி நேரத்திற்குள் சிஷோவ் தனது படையினருடன் தங்கியிருந்த குடிசையை அடைந்தோம். அந்தக் குக்கிராமத்தின் பெயர் உஷிகா.

* * * *

அப்பொழுது மணி ஆறுகூட ஆகவில்லை. ஆனால் சிஷோவும் வீரர்களும், கமிசாரும் தங்கள் அலுவல்களில் ஈடுபட்டு விட்டார்கள். தாங்கள் தங்கியிருந்த வீட்டுத் தாரிசில் (Terrace) நின்று தொலை நோக்கிக் கண்ணாடி வழியாகப் பார்த்தபடி ஏதோ விவாதித்துக்கொண் டிருந்தார்கள். சப்பாயேவும் நண்பர்களும் வரக் கண்டதும் கீழே இறங்கினார்கள். இன்னும் இருள் படிந்திருந்த சிறு வீட்டிற்குள் எல்லோரும் நுழைந்தனர். இரு சாராருமே களைத்துச் சோர்ந்திருந்தது புலப்பட்டது. அவர்களது பார்வையில் நம்பிக்கையின்மை தோன்றியது. ஈரமாயிருந்த உடைகளைக் களைந்துவிட்டு கணப்பருகில் சூடு பெற அமர்ந்தனர். சிஷோவ் காலில் எதுவும் அணியவில்லை. அவனுடைய பாதத்தில் படிந்திருந்த அழுக்குத்திரட்டைப் பார்த்தால் அவன் குளித்துப் பல மாதங்கள் ஆகியிருக்கக் கூடும் என்றே எண்ணத் தோன்றும். தூக்கமில்லாது பல இரவுகளைக் கழித்தமையால் அவனது கரங்கள் நடுங்கின, கண்கள் சிறுத்தன. குழறிக் குழறிப் பேசினான். உலர்ந்து போன உதடுகள் பாளமாய் வெடித்துப் போயின. எந்த ஒரு வார்த்தையையும் அமைதியாகப் பேச அவனால் முடியவில்லை. போதிய வெடிமருந்துகள் இல்லாமல் எதுவுமே செய்யமுடியாது என்று உரக்கக் கத்தினான். பரந்த புல்வெளியா யிருந்தமையால் கொஷாக்கிய இலக்குகளைத் தொலை நோக்கியால் பார்த்தபடியே இரைந்து பேசினான் :

"தோழர் சப்பாயேவ், வெடிமருந்துகள் கிடைக்குமா ?" என்று பரிதாபமாகவும் பதட்டமாகவும் சப்பாயேவிடம் கேட்டான்.

"விரைவில் வந்துவிடும். வேண்டிய உத்தரவுகள் சென்றுவிட்டன."

"என்ன உத்தரவுகள் அனுப்பினீர்கள்? இதற்கு மேல் தாக்குப் பிடிக்க என்னால் முடியாது!"

"பொறுங்கள்...தயவு செய்து இன்னும் கொஞ்சம் பொறுங்கள். உங்களுக்கு வேண்டிய வெடி மருந்துகளை மட்டும் எங்கிருந்து வாங்க முடியும்? நான் ஏதும் கொண்டு வரவில்லை...நமது வீரர்கள் வேண்டிய வெடி மருந்துகளை விரைவில் கொணர்வார்கள்!" என்று சமாதானமாக நிலைமையை விளக்கினான் சப்பாயேவ்.

சுற்றியிருந்த எல்லோரையும் பார்த்த வண்ணம் சிஷோவ் ஆரம்பித்தான்: "நானும் கமிசாரும் நாள் முழுவதும் வீட்டுத் தாரிசிலிருந்து கீழே இறங்குவதில்லை. அதை விட்டால் வேறு இடத்திலிருந்து சுற்றுப்புறத்தைக் கவனிக்க ஏற்ற உயர்ந்த இடம் ஏதுமில்லை. எதிரிகள் ஒரு நாளைக்கு நான்கு தடவைகளுக்குக் குறையாமல் தாக்குகிறார்கள். எதிரிகளின் போக்கனைத்தையும் இங்கிருந்தபடியே பார்க்க முடியும். ஆனால் போதிய வெடி மருந்தில்லாத எங்களால் எதுவும் செய்ய முடிவதில்லை. பேசாது பதுங்கி யிருந்து எல்லாவற்றையும் கவனித்திருப்போம். நேற்று எங்கள் பக்கமே தாக்குதல் திரும்பியது. நேற்று அணிவகுப்பு வீரர்களில் மூன்றாவது ஆள் மட்டும் சுட வேண்டுமென்றேன். பிறகு ஐந்தாவது நபர்கள் சுட உத்தரவிட்டேன். இப்பொழுது ஒவ்வொரு பத்தாவது வீரனும் சுடுகிறான். எஞ்சியோர் பேசாதிருக்க வேண்டி யிருக்கிறது. எதிரிகளைச் சில கஜ தூரங்கள் வரை நெருங்க விட்டோம். எங்களிடம் பாதுகாப்பிற்காகச் சில எறி குண்டுகளே இருந்தன. அவற்றைக்கொண்டு சமாளித்தோம். அப்படியும் ஒரு நாளைக்கு நான்கு தாக்குதலைச் சமாளிக்கவேண்டி யிருக்கிறது. ஓடிப் பதுங்கவும் வேறு இடம் இல்லை. எங்கு பார்த்தாலும் ஒரே புல் வெளி!"



"நாளைக்குப் புறப்பட வேண்டிய உத்தரவு வந்து விட்டதா?" என்று சப்பாயேவ் கேட்டான்.

"ஆம்...வந்தது...நமது இளைஞர்கள் துணிவுடையவர்கள் தான். என்றாலும் வெடிமருந்தில்லாமல் வெறுங் கையால் முழம் போட முடியுமா?" என்றான் சிஷோவ். உணவுப் பற்றாக்குறைக் கொடுமையையும் விவரித்தான். இதையெல்லாம் கேட்ட சப்பாயேவ் லாரிகள் மூலம் போதிய உணவுப் பொருள்கள் விரைவில் வந்து சேருமென உறுதியளித்தான். "சரி....இனிமேலும் தாமதிக்க முடியாது. நாங்கள் ஷ்மாரினிடம் செல்ல வேண்டும். சரி...வருகிறோம்!" என்று முடித்தான் சப்பாயேவ்.

சிஷோவை விட்டுப் பிரிந்த போதும் வாடிய உள்ளத்தோடு தான் புறப்பட்டனர். அவர்கள் இன்னும் பதினைந்து கல் தொலைவு செல்ல வேண்டி யிருந்தது. அவர்களுக்கும் உணவில்லை. குதிரைகளுக்கும் உணவில்லை. ஆனால் ஷ்மாரினுக்கு உணவுப் பொருள்களெல்லாம் முதல் நாளே வந்திருக்குமென்று எண்ணினார்கள். ஷ்மாரின் இருந்த இடத்தை அடைந்ததும் அவர்களுக்குக் காலையுணவு வழங்கப்பட்டது. படைப் பகுதி உத்தரவை வைத்துத் தலையை உடைத்துக் கொண்டிருந்தான். ஷ்மாரின் படையெடுப்பு அலுவலை மிக மிகக் கவனமாகவும் விழிப்பாகவும் செய்யவேண்டி யிருந்தது. ஆனால் ஆலோசனை கேட்கக் கூட யாரும் அவனுக்குக் கிட்டவில்லை. ராணுவத் தலைமைக் கணக்கனைக் கூப்பிட்டுக் கேட்டான். அவனிடமிருந்து என்ன ஆலோசனையை எதிர்பார்க்க முடியும்?

தேத்தண்ணீர் பருகியவுடன் சப்பாயேவ், ஷ்மாரின் முதலிய பலரும் கூடிப் போர் நிலவரம் பற்றி விவாதித்தார்கள். எதிரியின் படைபலம் முதல், கிராமச் சூழ்நிலை வரை அனைத்தையும் விளக்கமாக ஆராய்ந்தனர். சாப்பாட்டிற்குப் பிறகு வரைப் படத்தைக் கொண்டு விவாதிக்கக் கூடினர். சப்பாயேவ் எல்லா விபரங்களையும் தெளிவாக்

கிறான். முதலில் இருந்து இறுதிவரை போர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய வகையை விளக்கினான். மிகச் சாதாரண விஷயத்தையும் மிக நுணுகி ஆய்ந்து அவன் தந்த விளக்கங்களை வியப்போடு கேட்டுக் கொண்டிருந்தனர்...“நீங்கள் அப்படிப் போர் செய்தால் முடிவும் இப்படியே அமையும்...அந்தச் சமயத்தில் சிஷோவ் இந்த இலக்கில் இருப்பான். பொடாபோவ் நதியைக் \கடந்து அந்த இலக்கிற்கு வந்து விடுவான்” என்று குறிப்பிட்டுத் தீர்க்கமாகச் சொன்னான். வாடிச் சோர்ந்து வியாதியால் நலிந்து வெறுங் காலுடனும் ஒட்டிய வயிறுடனும் முன்னேறி வரும் செஞ்சேனை வீரர்களின் வேகத்தை அளந்து கொண்டான்; போர்க் காலத்திற்கு வேண்டிய வெடிமருந்துகள், உணவு வகைகள் முதலியவற்றைக் கொணரும் முறையும், காலமும்; தண்ணீர் வசதி; கிராமாந்திர மக்களுக்குப் பாதுகாப்பளிப்பதும், வெளியேற்றுவதும்; சமுதாயப் புனரமைப்பு, அரசியல் இயக்கம் ஆகிய அலுவல் முறைகள்; எதிர்த்துத் தாக்கும் கொஸாக்கியர்களின் படை பலம்; சிஷோவின் படையினரிடமிருந்து பெறக் கூடிய உதவி; சாலைகளின் தன்மை, போக்கு வரத்து வசதி முதலிய எல்லாக் கூறுகளையும் எடைபோட்டுத் தன் முடிவைச் சொன்னான். எவ்வெப்பொழுது எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தினான்.

இந்த ஆலோசனைக் கூட்டம் இரண்டுமணி நேரம்வரை நீடித்தது. கூட்டம் முடிந்ததும் சப்பாயேவும், பியோடாரும் ராணுவத் தலைமைக் காரியாலயத்திற்குத் திரும்பப் புறப்பட்டனர். அப்பொழுது பிரத்தியேகப் படைப் பகுதியைச் சேர்ந்த சில வீரர்கள் அங்கு வந்தனர். ஓரிரு கல் தொலைவுக்கப்பால் உள்ள படைப் பாசறையில் நடக்கவிருக்கும் நாடக நிகழ்ச்சிகளைக் காண வருமாறு அவர்களை அழைத்தனர். இந்த அழைப்பு அசாதரணமானது.... இக்கட்டான சூழ்நிலையிலும் களியாட்டங் காண அழைப்பது விசித்திரமானது. என்றாலும் செஞ்சேனை வீரர்களுக்கு இது இயல்பு. எதிர்ப்புச் சூழ்ந்துள்ள இடத்தில்தான் கவலையின்றி இருப்பார்கள். அவ்வளவு நெஞ்சுரம் கொண்டவர்கள் செஞ்சேனையர். மறுநாள் கடுமையான தாக்குதலைத் தொடங்கச் சற்று முன்புதான் முடிவுவான திட்டங்கள் தீட்டப்பட்டன. எதிரியின் பதுக்கல் கிடங்குகள் மிக அண்மையிலேயே இருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் நாடக நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள், செஞ்சேனை வீரர்கள்!



அப்படித்தான் இங்கு வழக்கம்! நமது வீரர்கள் மேடையில் ஏறிவிட்டால் மிகவும்பழகியவர்கள் போல நடிப்பார்கள். உடனே போர் துவங்கி விட்டாலும் லட்சியம் செய்யாது, தீரத்துடன் போர் புரிவார். எல்லாம் அவர்களுக்குக் கைவந்த வித்தை” என்றான் ஷ்மாரின்

“ஆனால் எதிரிப் படைகள் மிக அருகில் சூழ்ந்திருக்கும்போதா...?”

“அதை யார் லட்சியம் செய்யப்போவது? பதுக்கல் கிடங்குகளில் நிறுத்தப்பட்டுள்ள செஞ்செனை வீரர்கள் எப்படியாவது வந்து ஒவ்வொரு அங்கமாக நாடகத்தைப் பார்த்துச் சென்று விடுவார்கள்.”

“நாடகங்களைப் பதுக்கல் கிடங்குகளுக்குப் பக்கத்திலேயா நடத்துகிறார்கள்?”

“ஆம்....நாடகத்தை நடத்தும் ஜோயா பவ்லோனா எதற்கும் பயப்படமாட்டான். தனியாக எந்த இடத்திற்கும் துணிந்து செல்லுவாள். அவள் அருகிலுள்ள இடங்களுக்கு வருகிறாள் என்பது தெரிந்ததும் வீரர்களே நாடகத்திற்கு வேண்டிய பொருள்களைச் சேகரித்து விடுவார்கள்; நாடக அரங்கத்தைக்கூட நிர்மாணித்து விடுவார்கள். அரங்க நிர்மாணத்திற்காக் கிராமத்து வேலைகளையெல்லாம் வீழ்த்தி விடுவார்கள், வீணர்கள்!”

கடந்த பல வாரங்களாக ஜோயாபல்லோனு சுற்றி வரும் நாடகக் குழுவை அமைத்துப் போர்ப் பகுதிகளில் பல நாடகங்கள் நடத்தி வருகிறுள் என்பது சப்பாயேவுக்கும் பியோடாருக்கும் தெரியும். ஆனுல் பதுக்கல் இடங்களுக்கு அவ்வளவு அருகில் துணிச்சலுடன் நெருங்கிச் செல்லுகிறுள் என்ற செய்தி அவர்களுக்குத் தெரியாது. அவளே இதைப் பிறர்க்குத் தெரிவிக்கவில்லை. படை வீரர்களுக்கு முகாமில் நாடகம் நடத்துவதாக மட்டுமே சொல்லியிருந்தான். அவளுடைய நடவடிக்கைகளைப்பற்றி நுணுகி விசாரிக்கவும் இல்லை. இந்த உரையாடலிலிருந்து இன்னுெரு தகவலும் வெளியானது. ஒருமுறை தனது நாடகக் குழுவினருடன் அவள் ஸ்டெப்பி வெளியைக் கடந்து சென்ற பொழுது தீவிரத் தாக்குதலுக்கு உள்ளானுர்கள். எங்கு நாடகம் நடத்தவேண்டுமோ அங்கு கொடும் போர் நடந்து கொண்டிருந்தது. நடிகர்கள் கொஞ்சமும் யோசிக்காது தாங்களே துப்பாக்கிகளை எடுத்துக்கொண்டு வீரர்களுடன் இணைந்தார்கள். ஜோயா பல்லோனு குதிரைமீது ஏறிப் பறந்தாள். கட்சிக் கமிசார்கள், தளபதிகள் ஆகியோருடன் அடிக்கடி கலந்து பேசி இக்கட்டான இடங்களில் எல்லாம் உக்கிரமாகப் போரிடச் செய்தாள். நடிகர், அமைப்பாளர், அரசியல் ஊழியர், கிளர்ச்சியாளர், கமிசார்—இவையெல்லாவற்றிற்கும் மேலாகச் செஞ்சேனை வீரர்கள்! என்ற விழுமிய எண்ணம் நிலவியது. நாடகங்களில் பங்கு கொண்டவர்களும் வீரர்களா யிருந்தமையால் செஞ்சேனையர் சக நேயத்துடன் பழகினுர்கள், நாடகங்களை விரும்பிப் பார்த்தார்கள்.

நடிப்பு அப்படியொன்றும் பிரமாதமாக இருக்காது; என்ருலும்கூட நல்ல பயனைத் தரவல்லதாயிருந்தது. சூழ்நிலைக்கு ஏற்றபடி ஜோயா பல்லோனு நாடகங்களை அமைத்தாள். பல சமயங்களில் அவளே வேடம் பூண்டிருக்கிறுள். செஞ்சேனையினரது விருப்பமும் போக்கும்



அவளுக்கு நன்கு தெரியும். மிக எளியதும், எல்லோர்க்கும் புரியக் கூடியதுமான, உணர்ச்சி வாய்ந்த நாடகங்களையே தேர்ந்தெடுத்துக் கொண்டாள் என்ருலும் கூடப் பல சமயங்களில் நாடகத்தை நன்கு அமைக்க முடியாது போய் விடும். தொடர்ந்த போராட்டக் காலங்களில் திட்டப்படி எதுவும் செய்யமுடியாது. இருப்பினும் படை வீரர்களுக்கு ஒரே பொழுதுபோக்குச் சாதனமாக நாடகங்கள் பயன் பட்டன.

சப்பாயேவும் அவனுடன் இருந்தவர்களும் புதிய அழைப்பைப் பெற்றுர்கள். அழைக்க வந்தவர்கள் விரைவில் நாடகம் துவங்கி விடுமென்றும், அவர்களுடைய வருகைக்காகவே காத்திருப்பதாகவும் கூறினுர்கள். எப்படியிருந்தாலும் ஷ்மாரினுடைய முகாமிற்குச் சென்று சப்பாயேவும், இதரர்களும் குதிரை மாற்றிச்செல்லவேண்டியிருந்தது. எனவே நாடகம் பார்க்கவர இசைந்தனர்.

நாடகம் பார்க்கக் கூடியிருந்த அனைவரும் அவர்களுடைய வருகைக்காகக் காத்திருந்தனர். அவர்கள் நாடகசாலையை நெருங்கியதும் பலர் “சப்பாயேவ், சப்பாயேவ்” என்று வாய்விட்டு உரக்கக் கத்தினர். பல நூற்றுக்கணக்கானவர்கள் குழுமிக் கிடந்தார்கள்.

சப்பாயேவ், பியோடார், பெட்கா ஆகிய மூவருக்கும் முன்னிடம் தரப்பட்டது முதல் வரிசைக்குச் சென்று தரையில் அமர்ந்தார்கள்.

அன்று நடைபெற இருந்தது மூன்று அங்கங்களில் அமைந்த சிறு ஓரங்க நாடகம். அதை ராணுவத்தைச் சேர்ந்த வீரனுெருவனே எழுதியிருந்தான். சிறிய கருத்தொன்றை மையமாகக் கொண்டு நாடகம் நன்கு பின்னப்பட்டிருந்தது. கொஸாக்கியக் கிராமத்துப் பெண்கள், தங்களது கிராமத்திற்கு வந்த செஞ்சேனையினரை முதலில் சபித்ததையும், பின்பு அவர்களே மனம் உவந்து உபசரித்ததையும் சம்பவமாக நாடகத்திலே அமைத்திருர்தான்.

செஞ்சேனைப் பெண்கள் படைப்பகுதி ஒன்று கிராம மொன்றில் அணிவகுத்து நுழையும் காட்சியுடன் நாடகம் தொடங்கியது. அச்செஞ்சேனைப் பெண்கள் ஆண்களைப் போல உடுத்திக்கொண் டிருந்தார்கள். நீளக்கால் சட்டை, முழுக் கைச் சட்டை, சிவப்புத் தலைக் கவசம், பெரிய பூட்ஷுகள் குறுக்கப்பட்ட தலைமுடி—இதுதான் அப் பெண்டிரின் சாதாரண உடை. அவர்களைக் கண்ட கொஸாக்கியப் பெண்கள் திட்டினார்கள், காறி உமிழ்ந்தார் கள், பல்வேறு வகைச் சாடைகாட்டி இகழ்ந்தார்கள். "முட்டாள்த்தனமே உருவான மூடப் பெண்களே. ஏன் நீளக் கால் சட்டைகளை அணிந்திருக்கிறீர்கள்? அவற்றை அணிந்துகொண்டு என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று வினா எழுப்பினாள் ஒருத்தி.

"ஏய்...பட்டாளத்தம்மா...உங்க கால்சட்டை கண்ணைப் பறிக்கிறது. சகிக்கலை அம்மா...சகிக்கலை. என்று கேலி செய்தாள் இன்னொருத்தி.

"நாய்களே நாசகாரக் கழுதைகளே எல்லாத் தீவினையும் உங்களால் வந்ததுதான். உங்களாலேதான் எல்லாத்தையும் இழந்துவருகிறோம். நாடு முழுவதையும் நாசமாக்கி விட்டீர்கள். ராணுவத்திலே வேசித் தொழில் புரியத்தானே உங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள்? வேறு எதற்கு நீங்கள் லாயக்கானவர்கள்? உங்களைப்போலத் துப்புக் கெட்ட சிறுக்கிகளுக்கு வேறு என்ன வேலை கிடைக்கும்? அதனால்தான் ஆலாப் பறந்து நாயாய் அலைகிறீர்கள். நாசமாகப் போனவர்களே!" என்று சபிக்கத் தொடங்கினார்கள் எல்லோரும்!

செஞ்சேனைப் பெண்கள் சபித்தவர்களைச் சமாதானப் படுத்த முயன்றார்கள். "நீங்கள் எங்களைப்பற்றித் தவறாகக் கேள்விப்பட்டுப் பேசுகிறீர்கள். நீங்கள் எண்ணுவதைப் போல இழிந்த நோக்கமும் கேடுகெட்ட வாழ்க்கையும் கொண்டவர்களில்லை நாங்கள். நாங்கள் அனைவரும்



பணிப் பெண்கள். நாட்டுப்பணிக்காக எங்களையே அர்ப்பணித்துக் கொண்டவர்கள். நாங்களும் உங்களைப் போன்று பாடுபடுவர்கள்தான். நீங்கள் வயலில் உழைக்கிறீர்கள், நாங்கள் தொழிற்சாலைகளில் உழைக்கிறோம்" என்றார்கள்.

"நீங்கள் எல்லோரும் நன்றிகெட்ட காட்டுப் பன்றிகள், கேடு கெட்டவர்கள்!"

"ஏன் காட்டுப் பன்றிகள் என்று இகழ்கிறீர்கள். எங்களுக்கும் குடும்பம் உண்டு, குழந்தைகள் உண்டு."

"உங்கள் குடும்பத்தைப் பற்றியும் குழந்தைகளைப் பற்றியும் எங்களுக்குத் தெரியும். உங்களுக்குப் பிறந்திருக்கிற பிள்ளைகளை எங்களுக்குத் தெரியாதா என்ன?... எல்லாம் முறைகெட்டுப் பிறந்த முண்டங்கள்..."

இவ்வளவு இழிசொல்லை ஏற்றுக்கொண்ட பின்னரும், தாங்கள் துப்புக்கெட்டவர்கள் இல்லையென்றும், நேர்மையான பெண்கள் என்றும், சூழ்நிலை காரணமாகக் குடும்பத்தை விட்டுத் தொழிற் கூடங்களில் வேலைசெய்ய நேர்ந்ததென்றும், தவிர்க்கமுடியாத காரணங்களால் போர் முனைக்கு வந்தவர்கள் என்றும் காரண காரியம் காட்டி கொஸாக்கியப் பெண்களைத் திருப்திப்படுத்த முயன்றனர்.

என்றாலும் அப் பெண்கள் திருப்தியடையவில்லை. "எல்லா இடங்களிலும் ஒழுக்கம் கெட்டு நடந்ததைப் போலத்தான் இங்கும் நடந்து கொள்ளுவீர்கள்...உங்களுக்கு வேண்டிய ஆண்கள் எங்கும் கிடைப்பார்கள். நீங்கள் அனைவரும் ஒழுக்கங்கெட்டவர்கள். அப்படியில்லையென்றால் இங்கு வந்திருக்கமாட்டீர்களே!"

"நாங்கள் ஏன் செஞ்சேனையில் சேர்ந்தோம் என்பதாவது உங்களுக்குத் தெரியுமா?

"ஏன் சேர்ந்தீங்கன்னு தெரிஞ்சுக்கிறதுலே என்ன இருக்கு? எல்லாம் தெரியும் தெரியும்."

"இல்லை. உங்களுக்கு ஒரு துளியும் தெரியாது."

"தெரியாவிட்டால் பரவாயில்லை. தெரிந்துகொள்ளவும் நாங்கள் விரும்பவில்லை. நீங்க எதைச் சொன்னாலும் புளுகு மூட்டைதான் !"

"இது என்ன பதில் ? எதில் சேர்ந்த பதில் இது ? எதையும் மறைக்காது பேசுங்கள்" என்றபடி அப் பெண்களைச் செஞ்சேனை வீராங்கனையர் சுவரோடு நெருக்கினர்.

"வெளிப்படையாகப் பதில் சொல்லவேண்டும் தெரியுமா ? அப்படிச் சொல்லத் தெரியாவிட்டால் நாங்கள் சொல்லித் தருகிறோம்."

"ஓ நீங்கள் சொல்லித் தருவீர்களா ? அடியம்மா. நீங்கதான் சொல்லித் தரணும்...நீங்க சொல்லித்தர என்ன இருக்கு ? எல்லாம் வேசி வீட்டுப் பசப்புப் பேச்சாத்தான் இருக்கும்?" என்று குத்தலாக அந்தக் கொஸாக்கியப் பெண்கள் பேசினார்கள்.

என்றாலும்கூடச் செஞ்சேனைப் பெண்கள் கோபங்கொள்ளாது இயல்பாகவே பேசினார்கள்......

"எங்களிடம் எதுவும் பசப்புவார்த்தை இல்லை. கவனியுங்கள்.......நீங்களும் பெண்கள், நாங்களும் பெண்கள். சரிதானே ?"

"சரியாகவும் இருக்கலாம் மாறாகவும் இருக்கலாம்."

கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருந்த கம்யூனிஸப் பெண்ணுக்கு ஒரே குழப்பமாகி விட்டது.

"நீங்கள் என்ன பேசப் போகிறீர்கள்...நீங்கள் இன்னும் பெண்கள்தானா...இல்லையா ?"

"ஆம் பெண்கள்தான் ..அப்புறம்."

"உங்கள் துணிகளைத் துவைத்துக் கொள்ளுகிறீர்கள் இல்லையா ?"

"எங்கள் துணியை யார் வெளுத்தால்தான் உங்களுக்கு என்ன ? எதையாவது திருடிக்கிட்டுப் போகத்தானே இப்படிக் கேட்கிறீங்க..?"

"உங்களுக்குக் குழந்தைகள் இருக்கின்றன. அவர்



களைப் பராமரிக்க வேண்டும் இல்லையா?" என்று தொடர்ந்து கேள்விகள் கேட்கப்பட்டன.

"என்னமோ மற்றவங்களுக்குப் பிள்ளைகள் இல்லாத மாதிரி. எல்லாருக்கும்தான் பிள்ளைகள் இருக்கு, பராமரிக்கவும் செய்கிறோம். உங்களுடைய சீர்கெட்ட பிள்ளைகளைத்தான் வாய்க்கால் கரையிலேயும் வேலிக் கரையிலேயும் பார்க்கலாம்."

கொஸாக்கியப் பெண்களின் இந்தத் துடுக்கான பதில்களால் கம்யூனிசப் பெண்கள் சிறிதும் மனம் புண்படவில்லை. எதையும் தாங்கும் இதயங்கொண்ட அவர்களது மனஉறுதியை எதுவும் அசைத்துவிட முடியாது.

"பசுக்களைப் பாதுகாக்கிறீர்கள். அடுப்பு வேலைகளைப் பார்க்கிறீர்கள். இதற்கெல்லாம் ஒரு முடிவு உண்டா ?"

"ஏதாவது பேசணும்னா நேரடியாக விஷயத்துக்கு வாங்க. உங்களைவிட வீட்டு வேலையெல்லாம் நூறு மடங்கு நல்லாச் செய்வோம்" என்று இடைமறித்தாள் ஒரு பெண்.

"ம்...அப்படிச் சொல்லு. நீங்கள்தான் வீட்டு வேலையனைத்தையும் செய்கிறீர்கள். எவ்வளவோ பாடுபட்டு உழைக்கிறீர்கள் ? பொழுதுபுலர்ந்து பொழுதுபோவது தெரியாமல் மாடாய் உழைத்து ஓடாய்த் தேய்கிறீர்கள். என்றாலும் மகிழ்ச்சியாக வாழ்க்கையை அனுபவிக்கிறீர்களா ? பெண்களே சொல்லுங்கள் உங்கள் வாழ்வில் மகிழ்ச்சி உண்டா ?"

"ஓ எல்லாம் மகிழ்ச்சிதான். அதுக்கென்ன" என்ற கொஸாக்கியப் பெண்களின் வீம்புப் பேச்சுத் தளர ஆரம்பித்தது. கொஞ்சம் சிந்திக்க ஆரம்பித்தவுடன் செஞ்சேனைப் பெண்கள் தொடர்ந்து பேசினர்.

"ஆம். உங்கள் வாழ்வில் மகிழ்ச்சிக்கு இடம் ஏது ? வாதும் வம்பும் நிறைந்த வாழ்வில் மகிழ்ச்சி நிலைக்க முடியுமா ? அதிலும் உங்களுடைய கொஸாக்கியர்களே உங்களை உபாதைபடுத்தும்போது—உங்கள் கணவன்மார்களே

உங்களைத் தாக்கும்போது மகிழ்ச்சி எங்கிருந்து வரும்? இதை ஏன் மறுக்கிறீர்கள்?"

"அதனால் உங்களுக்கென்ன?" என்று படபடப்பாய்க் கேட்டாள் ஒரு பெண்.

"அப்படீன்னா உன் கணவன் ரொம்ப வீரன் போலிருக்கு..." என்றபடி செஞ்சேனைப் பெண் சிரித்தாள். "உன் புருஷன் ஒரு தடவைகூட உன்னை அடித்ததில்லையா? நீ மற்றவங்களிடம் புளுகலாம், எனக்கிட்டே மட்டும் ஏமாற்றாதே. எனக்கு எல்லாம் தெரியும். என் புருஷனே அப்படித்தானே, ஆனால் இப்ப ஆசாமி உயிரோடே இல்லை. எனக்கு எவ்வளவு கொடுமை செய்வார் தெரியுமா? அதிலும் குடிபோதையில் இருக்கும்போது கட்டிப்போட்ட நாயைக் கடிப்பதுபோல என்னைப் படாத பாடுபடுத்துவார். அப்பேர்ப்பட்ட கணவன் செத்ததுக்கு நான் ஓயாமே அழுவேன் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள்? இல்லை, இந்தத் தன்மை வாழ்க்கையிலாவது நான் நன்கு சீவிக்கிறேன் என் மனம்போல வாழ்கிறேன்" என்றாள் செஞ்சேனைப் பெண்.

"நீ பேசுவதெல்லாம் சுத்த அபத்தம். குடும்பப் பெண்ணுக்கே பொருந்தாத துரோகம்" என்று கொஸாக்கியப் பெண் மறுத்தாள்.

"சரி. உன் புருஷன் அடிப்பதில்லை யென்றே வைத்துக்கொள்ளுவோம். அப்படியே உதைபடாமல் இருப்பதால்மட்டும் உங்கள் வாழ்வில் மகிழ்ச்சி வந்துவிடாது, வரவும் முடியாது. யாரால் வர முடியும்? நீங்கள் முயன்றால்தான் மகிழ்ச்சி பெற முடியும். நீங்கள் அனைவரும் நட்டு வைத்த கம்புபோல் சலனமற்றுச் சாகிறீர்கள். எந்தப் புதிய துறைக்கும் அசைந்துகொடுக்க மறுக்கிறீர்கள். உங்கள் நலனை நாடும் நண்பர்களது சொற்களுக்குக்கூடச் செவிசாய்க்க மறுக்கிறீகள். நாட்டு நலனைப் பொருட்படுத்தி யுழைக்கும் மனம் உங்களுக்கு வரவில்லை. இப்பொழுது தவறினால் மீளாத இந்த அடிமைத்தனத்திலிருந்து உங்களை விடுவிக்க முடியாது. சிற்றின்ப வேட்கையையும், புலன் இன்ப நாட்டத்தையும் விட்டு உங்களை மீட்க முடியாது..."



"ஏன் முடியாது. நான் ஏற்கெனவே மீண்டு விட்டேன்!" என்று பெருமையோடு ஒரு கொஸாக்கியப் பெண் உரக்கச் சொன்னாள். இதைக் கேட்ட மற்ற பெண்கள் 'உஷ்' என்ற இகழ்ச்சி யொலி எழுப்பினர். செஞ்சேனைப் பெண்கள் அவர்களுக்கு உற்சாக வழியில் அறிவுறுத்த விரும்பினார்கள்.

"ஆம். மீளாதவர்களும் மீளத்தான் வேண்டும் வீட்டுப் புலன் இன்ப வாழ்வை மட்டும் நாடாது வெளி யுலகிற்கு வரவேண்டும். நாட்டு நிலையைக் காண வேண்டும். அங்கேதான் உண்மையான புது வாழ்வு தொடங்கும். பெண்கள் பங்கு நாட்டின் மறுமலர்ச்சி வேலைக்கு மிகவும் அவசியமானது என்பதாவது உங்களுக்குப் புரியவில்லையா?"

"ஆமாமா. இதுதான் புது வாழ்வு தொடங்குவதாக்கும். உங்களுக்கு எல்லாமே புது வாழ்வுதான்—தொடக்கம்தான். முடிவுதான் இருக்காது" என்று ஒரு கொஸாக்கியப் பெண் முனகினாள்.

"முடிவு உண்டு. எங்களால் முடிக்கத்தான் இயலவில்லை. சுதந்திரப் போராட்டத்தை விரைவில் முடிக்க வேண்டுமென எவ்வளவு துடிக்கிறோம் தெரியுமா? எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு நாட்டுக்கும் நல்லது, நமக்கும் நல்லது. அதற்காகவே நாங்கள் ஆண்களைப் போலக் கால்ச் சராய் அணிந்து புறப்பட்டோம். ஆண்களோடு சேர்ந்து போராட்டத்தைத் துரிதப் படுத்துகிறோம். இதைப் புரிந்துகொள்ளாது நீங்களே நகைக்கிறீர்கள், கேவலமாகப் பேசுகிறீர்கள்

"உங்களைப் பார்த்தால் வேடிக்கையாக இருப்பதால்

தான் சிரிக்கிறோம்" என்றொரு குரல் கூட்டத்தில் கிளம்பியது. ஆனால் கொஸாக்கியப் பெண்கள் நிலையை உணரத் தொடங்கினர். அவர்கள் மனத்தில் மாற்றம் ஏற்பட்டது. சிரிப்பதை நிறுத்தினார்கள். செஞ்சேனைப் பெண்களின் இலட்சிய வாழ்வை எண்ணினார்கள், நாட்டுப் போக்கைச் சிந்தித்தார்கள். "சிரிக்காது...சிந்தித்துப் பாருங்கள். அறிவுடன் ஆராய்ந்து முடிவு கட்டுங்கள்" என்ற வேண்டுகோள்கள் அவர்களது சிந்தனையைத் தட்டின, மனக் கதவைத் திறந்தன. எல்லாவற்றையும் அனுதாபத்தோடு ஆராய்ந்தார்கள்.

செஞ்சேனையின் இலட்சியமெல்லாம் விரிவாக அவர்களுக்கு உணர்த்தப்பட்டன. சோவியத் ஆட்சியின் சிறப்பெல்லாம் விளக்கப்பட்டன.

பிறகு...அடுத்த காட்சியில்...செஞ்சேனை வீரர்களுக்குக் கொஸாக்கியப் பெண்கள் எல்லாவகையான உதவியும் செய்தார்கள். வேண்டிய உணவுப் பொருள்கள் தயாரித்தார்கள். தங்களுக்கு அறிவுறுத்திக் கண்ணைத் திறந்த ஆசான்களான "செஞ்சேனை வீராங்கனையர்" கிராமத்தை விட்டுப் பிரிந்தபொழுது கண்களில் நீர்மல்க, கட்டித் தழுவிப் பிரியா விடை தந்தனுப்பினர். அது முதல் கிராமப் பெண்களிடையே இரு முகாம்கள் ஏற்பட்டன. கம்யூனிஸ்டுகளின் சொல்லைக் கேட்ட கொஸாக்கியப் பெண்கள் "போல்ஷெவிக்குச் சூனியக்காரிகள்" என்று பழிக்கப்பட்டனர்; பிறரால் இகழப்பட்டனர்...என்றாலும் அவர்கள் வாழ்வில் புதுமை பூத்தது. நாட்டுக்காக நலிவை யேற்றார்கள், துணிவோடு ஏற்றார்கள். கொள்கைக்காக உயிர் தந்தார்கள், மனம் மகிழத் தந்தார்கள்...!"

* * * *

நாடகம் முடிந்தது. திரைச் சீலை தாழ்ந்தது. நாடகம் பார்க்கத் திரண்டிருந்த கூட்டத்தினரை எழுந்திருக்க வேண்டாமெனவும் சந்தடி செய்யாமலிருக்குப்படியும் கேட்



டுக் கொண்டார்கள். என்றாலும் கை தட்டல் பல நிமிடங்களுக்குக் கட்டுப்பாட்டையும் மீறி எதிரொலித்தது. இந்த நாடகத்தைக் கொஸாக்கியர்கள் பார்த்தால் என்ன நினைப்பார்கள்?...தங்களது மனைவியரே, தமக்கெதிராகக் கம்யூனிசத்திற்கு மாற்றப்படுவதைக் கண்டால் அவர்கள் மனம் பொறுப்பார்களா? என்றாலும் இவ்வித நாடகங்கள் ஏராளமாகத் தேவைப்பட்டன, கண் மூடிக் கிடந்த மக்களைத் தட்டி யெழுப்புதற்கு!

நாடகத்திற்குப் பின்னர் இன்னொரு வியத்தகு சம்பவமொன்று நடைபெற இருந்தது. அந்தக் கிராமத்தைச் செஞ்சேனைப் படைகள் கைப்பற்றியவுடன், ஒரு குடிசையில் காகிதச் சுருளொன்றைக் கண்டெடுத்தனர். அதில் கிராமத்தை ஆக்ரமித்திருந்த வெள்ளைப் படைக் காவலாளன் கவி ஆஸ்ட் ரோவ் என்பவன் கையெழுத்திட்டு, சப்பாயேவின் மேல் துதிப் பாடலொன்று எழுதிவைத்திருந்தான். இதைப் பத்திரமாகப் பிரதி செய்து, நாடக அரங்கிற்கு கொண்டு வந்தனர். நாடகம் முடிந்தவுடன் தங்கள் நினைவாக இப் பாராட்டுப் பாடல் சப்பாயேவிற்குக் காணிக்கையாகத் தரப்பட்டது.

நாடக அரங்கத்தில் இதைப் படித்துக் கொடுத்தது எல்லோர்க்கும் வியப்பைத் தந்தது. இது யாருடைய திட்டம் என்பது எவர்க்கும் தெரியவில்லை. இதை எல்லோர்க்கும் கேட்கும்படியாக வாசித்துத் தந்திருக்க வேண்டியதில்லை, தனிப்பட்ட முறையில் சப்பாயேவிடம் கொடுத்திருக்கலாம் என்றாலும் கூடியிருந்தோர் அனைவரும் மகிழ்ச்சியுடன் கேட்டனர். பாராட்டுப் பத்திரம் படித்து முடிக்கப்பட்டதும், பியோடார், சப்பாயேவை நிமிண்டினான்... "சப்பாயேவ்...மேடைக்குச் சென்று கொஸாக்கியர்கள் செய்த கொடுமைகளைச் சொல்லு..." என்று தூண்டினான்.

உண்மையில் அப்பொழுது சப்பாயேவ் பேசுவதும் அவசியமாக இருந்தது. சப்பாயேவின் பெருமை மலைபோல்

உயர்ந்து விட்டது. சப்பாயேவ் உடனே மேடையில் பாய்ந்தேறினான். மிகச் சுருக்கமாகவும் உணர்ச்சி பெருகவும் போர் நடவடிக்கைகளை நெஞ்சில் பதியுமாறு விளக்கினான். அவன் பேச்சு முடிந்ததும் எழுந்து கை தட்டலும் ஆரவாரமும் வானைப் பிளந்தன!

...இன்று ஆரவாரம் செய்யும் இவர்களில் எண்ணிலடங்காதவர்கள் நாளை நடக்கப்போகும் போரில் அனாதைப் பிணங்களாக புல்வெளியில் கை விடப்பட இருக்கிறார்கள்...எஞ்சியவர்கள் உரால்ஸ்க் செல்லும் பகுதியில் சிந்தை நலிந்து ஊர்ந்து செல்ல இருக்கிறார்கள்!

சப்பாயேவும் பியோடாரும் சேர்ந்து சென்ற கடைசிப் பயணமும் அதுதான். அதை விடப் பொறுப்பான வேலையொன்றுக்காக பியோடார் மேலிடத்தவரால் அழைக்கப்பட்டான். அவனுடைய கமிசார் பதவிக்கு பாடுரின் என்பவன் நியமிக்கப்பட்டான். இவனை மாஸ்கோவிலேயே பியோடார் கண்டிருக்கிறான். அங்கிருந்து புறப்பட்டு பியோடார் எங்கு சென்றான். அங்கு என்னென்ன செய்தான் என்பனவற்றையெல்லாம் நாம் இனி விளக்கப் போவதில்லை. அவனுடைய வரலாறு ஒரு தனிப்பட்ட காவியம்!

பியோடாரைத் தன்னிடமிருந்து பிரிக்க வேண்டாம் எனப் பல தந்திகளைப் பிரதம தளபதிக்கு சப்பாயேவ் அனுப்பி வேண்டினான். பியோடாரினுடைய மாற்றம் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டு விட்டதால் ஏதும் செய்ய முடியவில்லை. பியோடார் கிளிக்கோவ் தன்னைவிட்டுப் பிரிவதால் ஏற்படும் இழப்பைச் சப்பாயேவ் நன்கு உணர்ந்தான். கிளிக்கோவ் அவனுடைய உயிர் நண்பனாகி விட்டான். அவனுடைய உள்ளக்கிடக்கையைப் புரிந்துகொண்டு தக்க சமயத்தில் வழிகாட்டும் ஒப்பற்ற நண்பனாகி விட்டான் கோபத்தால் கொப்புளித்து நின்ற போதெல்லாம் சப்பாயேவைச் சமாதானப்படுத்தும் தனித்



திறமை அவனுக்கே உண்டு. கமிசார்கள், அரசியல் உத்தியோகஸ்தர்கள், புரட்சிக் கவுன்சில் முதலிய பலரையும் சப்பாயேவ் இழித்துக் கூறியபொழுதெல்லாம் பொறுமையோடு கேட்டு மன்னித்தான். ஆத்திரம் சப்பாயேவின் கண்களை மறைப்பதால் தான் இப்படிப் பேசுகிறானே தவிர உண்மையில் உணர்ந்து பேசவில்லை என்பதைப் புரிந்து கொண்டான். சப்பாயேவ் சில சமயங்களில் சோவியத் ஆட்சிப் போக்கையே மட்டரகமாகத் தாக்கிப் பேசுவான். அவ்விதம் பேசுவதைக் கேட்பவர்களுக்கு அவனைப் பற்றி மாறுபாடாகவே எண்ணத் தோன்றும். ஆனாலும் பியோடார் அதைப் பொருட்படுத்த மாட்டான். தனக்குப் பிடிக்காத அனைத்தையும் தாக்கிப் பேசுவது சப்பாயேவின் இயல்பென்பது அவனுக்குத் தெரியும். பிறரிடம் பழகும்போதும் சப்பாயேவ் இணக்கமாயிருக்க மாட்டான். சப்பாயேவுடன் பியோடார் மிக நெருங்கிப் பழகியிருக்கிறான். இந்த நெருங்கிய பழக்கத்தில் ஏற்பட்ட மறக்கமுடியாத நிகழ்ச்சிகள் எண்ணற்றவை. இன்று பியோடார், சப்பாயேவைப் பிரிந்து செல்லவேண்டியிருக்கிறது. இந்தப் பிரிவு, சப்பாயேவைப் போலவே பியோடாருக்கும் அளவு கடந்த வருத்தத்தைத் தந்தது. தன்னைச் சாவிலிருந்து மீட்கவே இந்த மாற்றம் நிகழ்கிறது என்பதை பியோடார் உணரவில்லை. அதற்கடுத்த இரண்டே வாரத்திற்குள் அவனுடைய பதவியில் இருந்த பாடுரின், கமிசார் வேலை பார்த்தமைக்காகத் தன் உயிரையே தர நேரிட்டது!

பிறகு...பியோடார் நீண்ட சிந்தனையில் ஆழ்ந்தான். சப்பாயேவின் வீரப் பண்புகளையும், செயல் திறங்களையும் எண்ணி வியந்தான். அவனுடைய நடவடிக்கைகளில் வீரப் பண்பு கொண்டவை அப்படி என்னதான் இருக்கின்றன என்று எடைபோட்டுப் பார்த்தான். சப்பாயேவும் அவனும் பல நாட்களாக இணை பிரியாது உழைத்திருக்கிறார்கள்; இக்கட்டான சமயங்களிலும் தொடர்ந்த அணி

வகுப்புக் காலங்களிலும் இணைந்து வேலை செய்திருக்கிறார்கள். சப்பாயேவின் உணர்ச்சிகள், எண்ணங்கள் ஆகிய அனைத்தையும் பியோடார் உணர்ந்து, புரிந்தும் கொண்டான். பிறர் அறியாத பல ரகசியப் பண்புகளையும் அவன் அறிவான். அலெக்ஸாண்ட்ரோவ் கை-நகரில் முதலில் தான் அவனைச் சந்தித்தது முதல் உரால்ஸ்க்கில் இன்று பிரியப் போகும் நாள் வரை ஏற்பட்ட எல்லா நிகழ்ச்சிகளையும் எண்ணிப்பார்த்தான். ஸ்லோபிகின்ஸ் கயாப் போராட்டம், அப்பொழுது ஒரு போர் முனையில் இருந்து இன்னொரு முனைக்குச் சப்பாயேவ் சென்ற துரிதமும், விரைவும், போர் நடவடிக்கைகளைக் கணக்கிட்டறியும் அவனுடைய திறமை, மிகுதியான வேலையையும் நொடியில் முடிக்கும் ஆற்றல்-ஊபா நகரை நோக்கிச் சென்ற அணிவகுப்பில் சப்பாயேவின் பங்கு-பில்யூஜினோப் போரில் அவன் பங்கு, ஊபா நகர்ப் போரில் அவன் ஆற்றிய தொண்டு உரால்ஸ்க் பகுதியில் அவனது அயரா உழைப்பு ஆகிய அனைத்தும் அவன் சிந்தையில் ஒவ்வொன்றாய் முந்துறத் தோன்றின. சப்பாயேவின் தீரச் செயல்களை நேருக்கு நேர் பார்க்கும் பாக்கியம் இனிக் கிடைக்காதே எனப் பெருமூச்சு விட்டான். சப்பாயேவின் புகழ் நாடெங்கும் பரவிக் கிடந்தது; கிராமம் எங்கும் மண்டிக் கிடந்தது. சப்பாயேவின் படைப் பகுதி தோல்வியே கண்டதில்லை என்றால் அதற்குக் காரணம் சப்பாயேவின் ஆற்றலும் தகுந்த வழியமைப்பும்தான். தன்னுடைய வீரர்களிடையே ஒருமித்த உணர்ச்சியையும் தேசா வேசப் புயலையும், சிறந்த கட்டுக்கோப்பையும் புகுத்தியிருந்தான் துணைப் படைத் தளபதி முதல் அனைவரையும் கடமையில் ஈடுபாடு கொள்ளச் செய்திருந்தான். சிறந்த குறிக்கோளுடன் போரிடத் தூண்டினான். இதனால் அவனுடைய படை வெற்றி மேல் வெற்றி பெற்றது. இதுதான் அவனுடைய தீப்பண்பு!

ஆனால் சப்பாயேவின் புகழைச் சுற்றி இதிகாசச்



சிறப்புகளும் கட்டுக் கதைகளும் பரப்பப்பட்டன. அவற்றில் போர்க்களத்தின் முன் வரிசையில் எப்போதும் சப்பாயேவ் போரிடுவான் என்றும், எதிரிகளைத் தன்னுடைய உடைவாளால் தனித்து நின்றே கொல்லுவான் என்றும் புகழப்பட்டிருந்தன. ஆனால் எல்லாச் சமயங்களிலும் அவ்விதம் நடைபெறவில்லை. சப்பாயேவ் படையெடுப்பை முறைப்படுத்தி அமைத்தமையால்தான் பெரும் வெற்றி பெற்றான். அவன் தலை சிறந்த அமைப்பாளன். தன்னை உருவாக்கிய சூழ்நிலைக்கும், காலத்திற்கும் ஏற்ற அமைப்பாளனாகத் தன்னைத் தகுதிப்படுத்திக் கொண்டான். அவன் பெற்ற தகுதியால் சூழ்நிலை அவனைப் போற்றியது, காலம் அவனை வாழ்த்தியது. அதனால் அவன் புகழ் பரவியது, வானளாவ உயர்ந்தது. கால நிலையும், சூழ்நிலையும் சற்று மாறியிருந்தாலோ, மக்களின் மனோநிலை வேறு வகையாகப் போயிருந்தாலோ வாஸிலி இவானோவிச் சப்பாயேவைப் பற்றி யாருமே கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள். சப்பாயேவின் புகழ் ஸ்டெப்பிவெளியில் தோன்றியது; அங்கு தோன்றிய புகழ் ஸ்டெப்பிவெளியையும் தாண்டி நாடெங்கும் வாழ்ந்த பாட்டாளி மக்களின் நெஞ்சில், செஞ்சேனை வீரர்களின் எண்ணத்தில், பாமர மக்களின் நாவில் நடம் புரிந்தது. புரட்சி வரலாற்றுக்கே ஒரு திருப்பமாக அவன் பெயர் அமைந்தது. அவன் புகழ் கேட்டவர்கள் மேலும் மேலும் பிறர்க்குப் பரப்பினார்கள். நடக்காத நிகழ்ச்சிகளைக் கூடக் கற்பனையாக இணைத்துப் பெருக்கினார்கள். சப்பாயேவின் புகழ்பாடி நின்றவர்களையே அழைத்து விசாரித்தால் நேரடியாக எதுவும் தெரியாதென்றே சொல்லுவார்கள். காற்றுவாக்கில் வந்த செய்திகளையே முழுக்க முழுக்க நம்பினர்.

எந்த வீரனைப்பற்றியும் கதைகள் கட்டப்படுவது இயல்பு, அதுபோலவே சப்பாயேவைப்பற்றியும் பின்னப்பட்டன. அவன் புகழ் நாடெங்கும் விரிந்தது. உள்நாட்

டுச் சுதந்திரப் போர் வரலாற்றில் அவனுடைய பெயர் மங்காத நட்சத்திரமாகச் சுடர்விட்டது. அவ்வளவு புகழ் பொலிந்தவனாக அவன் வாழ்ந்தான். அவனைப் போல் வாழ் வாங்கு வாழ்ந்தவர்கள் வாழ்க்கைக் காலத்தில் வெகு சிலரே!

மாவீரனொருவனது வாழ்க்கையைப் பற்றி யெழுந்த உன்னத நாடகத்தின் இறுதிக் கட்டத்திற்கு வந்து விட்டோம்.

பியோடாரைத் தன்னிடமிருந்து பிரிக்கவேண்டா மெனச் சப்பாயேவ் விடுத்த வேண்டுகோள்கள் ஏதும் பலனளிக்கவில்லை. உத்தரவுப்படியே உடனடியாக பியோடார் அழைக்கப்பட்டான். கடந்த ஆறு மாதத்துக்கு முன்பு இருந்ததைவிட இன்று அவன் எல்லாத் துறையிலும் வளர்ந்துவிட்டான். தன்னையே அவனால் நம்பமுடியாத அளவிற்கு உயர்ந்துவிட்டான். தொடர்ந்த போராட்டங்களாலும் இன்னல்களாலும் நன்கு பண்படைந்துவிட்டான்; எதையும் தாங்கும் மனோதிடம் பெற்றுவிட்டான். இப்பொழுது வெவ்வேறு புதுப் பிரச்னைகளைத் தீர்க்க நம்பிக்கையோடும் அனுபவத்தோடும் வேற்றிடத்திற்கு மாற்றப்பட்டுள்ளான், இன்று எந்தச் சிக்கலையும் எளிதில் தீர்க்கும் ஆற்றல் இயல்பாக அவனிடம் பெருகிவிட்டது. ராணுவ வாழ்க்கையால் பெற்ற ஆற்றலையும் உறுதியையும் அவனால் உணர முடிந்தது.

பாடுரின், பியோடார் புறப்படுமுன் வந்து பியோடாரின் அறையிலேயே தங்கினான். இருவரும் மாஸ்கோ நிகழ்ச்சிகளைப்பற்றி நெடுநேரம் பேசினர். பிறகு ராணுவப் பகுதியைப் பற்றிப் பேச்சுத் திரும்பியது. பியோடார் தனது ராணுவச் சூழ்நிலையைப் பாடுரினுக்கு விவரித்தான். இது வரை உற்சாகமற்றிருந்த பாடுரின், பியோடார் விவரித்த புதுச் சூழ்நிலையைக் கேட்டவுடன் மிகவும் மனமகிழ்ந்தான்.

அன்று படைப்பகுதியின் கட்சி மாநாடு கூட்டப்



பட்டது. பியோடார் தலைமை வகிக்கும் கடைசி மாநாடும் அதுதான். எனவே தனக்குப் பின்னர் கமிசாராக வந்துள்ள பாடுரினை எல்லோருக்கும் அறிமுகப் படுத்தினான். பியோடாரின் தோழர்கள் அவனிடமிருந்து பிரியா விடை பெற்றுக் கொண்டனர். அவனுடைய பிரிவு எல்லோர்க்கும் வருத்தம் அளித்தது. சப்பாயேவின் தன் முனைப்பையும், கட்டுப்பாடற்ற போக்கையும், வரம்பு கடந்த தாக்குதலையும் அடக்கி வைக்கும் ஆற்றல் கொண்ட பியோடாரைப் பாராட்டினார்கள். அவனது பண்புகளுக்கு அஞ்சலி செய்தார்கள்.

மாநாடு முடிந்தவுடன் தன்னுடைய படைப்பகுதியைச் சேர்ந்த தளபதிகளையும், கமிசார்களையும் அழைத்து விடை பெற்றுக் கொண்டான். எல்லோரும் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாகப் பிரிந்தனர்.

மறுநாள் பொழுது விடிந்தது. பிரிந்து செல்ல வேண்டிய தருணமும் வந்தது. நண்பர்கள் ஒருவர்க்கொருவர் வணக்கம் தெரிவித்துக் கொண்டனர். பியோடார், சமாராவுக்குப் புறப்பட்டான். சப்பாயேவும், பாடுரினும் தங்களுடைய படைப் பகுதிகளைக் காணப் புறப்பட்டனர்! எல்லோரது இதயத்திலும் சோகம் படர்ந்தது; சூன்யம் கப்பிக்கொண்டது.

செஞ்சேனையின் முன்னேற்றம் வளர்ந்தது. ஷ்மாரினுடைய பட்டாளம் வலுப்படுத்தப்பட்டு, ஊரல் நதியை ஒட்டிய நெடுஞ் சாலையில் அணிவகுத்துச் சென்றது. ஊரலுக்கு அப்பாலிருந்த புக்காரா பகுதியை நோக்கி பொடாபோவின் படை சென்றது. சிஷோவ் தன்னுடைய படைவீரர்களைக் கொண்டு ஊஷிகாவுக்கு அருகில் புதிய போர் வியூகம் ஒன்று அமைத்தான். ஆனால் அங்கு அவனுக்குப் பெருந் தோல்வியும் பேரிழப்புமே ஏற்பட்டன. ஸ்டெப்பிப் புல்வெளியில் கோஸாக்கியர்களை எதிர்த்து எளிதில் வென்று விடமுடியாது. ஏனென்றால் கோஸாக்கிய ராணு

வத்தில் ஏராளமான குடியானவர்களை வலுவில் சேர்த்து வந்தார்கள். இந்தப் புதிய சூழ்நிலையைச் சப்பாயேவ் புரிந்து கொண்டான். எத்தனையோ கிராமங்களை இழந்தாலும் கூடக் கொஸாக்கியர்கள் அயர்வதாகத் தோன்றவில்லை. ஏனென்றால் ஸ்டெப்பி வெளி முழுவதும் கொஸாக்கியர்களுக்குச் சார்பான பகுதியாக இருந்தது. எங்கும் தயங்காது சென்றுவர வெள்ளைப் படையால் முடிந்தது. கொஸாக்கிய மக்கள் அனைவரது ஆதரவும் ஒத்துழைப்பும் அவர்களுக்கு அபரிமிதமாகக் கிடைத்தன. கிடைக்காத இடங்களில் படை பலத்தைக் கொண்டு எல்லாவற்றையும் சாதித்துக் கொண்டார்கள். செஞ்சேனைப் படைகளுக்கு வெகு அருகிலே தங்கியிருந்தாலுங்கூட அவர்களைப் பிடிக்க முடியாத அளவு அபாயமும், அடங்காக் கொடுமையும் கொண்டிருந்தார்கள் எனவே செஞ்சேனையினரின் போர்த் திட்டத்தையும் மாற்றிக் கொள்ள வேண்டும். கொஸாக்கியர்களை விரட்டுவதோ, அவர்களுடைய ராணுவம் கலைக்கப்படும் வரை காத்திருப்பதோ, கிராமங்களை ஒவ்வொன்றாகக் கைப்பற்றுவதோ—முக்கியமான போர்த்திட்டங்கள் தான்; என்றாலும் அவ்வளவு முக்கியமானவையாக இப்பொழுது தோன்றவில்லை. இப்பொழுது உடனடியாகச் செய்யவேண்டியது எதிரியின் எண்ணிக்கை பலத்தைச் சிதைத்து, அவனுடைய ராணுவத்தை சீரழிப்பதுதான். இதற்கு முன்னர் கேல்சாக்கிற்கு எதிராகச் சண்டையிட்ட பொழுது சரணடைந்த வெள்ளைப் படையினரை மீண்டும் செஞ்சேனையில் சேர்த்துக் கொண்டு போரை நடத்த முடிந்தது. அதுபோல கொஸாக்கிய வீரர்களை நம்பிக்கையுடன் சேர்த்துக்கொள்ள முடியவில்லை. கொஸாக்கியர்கள் இரத்த வெறி தலைக்கேறிய விரோதிகள். விரைவில் இணங்கி நட்புக் கொள்ளும் போக்கு அவர்களிடம் மருந்துக்கும் கிடையாது. எனவே கொஸாக்கிய ராணுவத்தை அழிக்கும் அலுவலைத் தன் முதல் வேலையாகச் சப்பாயேவ் மேற்



கொண்டான். செஞ்சேனைப் படைகள் இதைவிட்டு வெறுமனே முன்னேற்றத்தில் மட்டும் அக்கறை காட்டினால் ஸ்டெப்பி வெளிக்குள் புகவேண்டியேற்படும். எனவே எதிரியின் ராணுவத்தைக் குலைப்பதும் கடினமாகி விடும். செஞ்சேனைப் படையினரின் தேவைகளும், உணவு உடைப் பற்றாக் குறைகளும் பெருகிவிடும். மத்திய ராணுவத்துடன் கொண்டுள்ள தொடர்பும் துண்டிக்கப்பட்டு விடும். அதனால் பல தொல்லைகள் ஏற்படக் கூடும்.

செஞ்சேனையினர்க்கு நேர்ந்த தொல்லை போலவே கொலாகியர்களுக்கும் ஏற்பட்டன. அவர்களும் செஞ்சேனைத் தாக்குதலைப் பலவகையிலும் முறியடிக்க வேண்டியிருந்தது. ஆள்சேதத்தையும் தளவாடச் சேதத்தையும் பொருட்படுத்தாது விரைந்தார்கள். ஸ்டெப்பி வெளிக்குள் புகுந்து போரிடுவதால் தங்களுக்கும் சொல்லொணாச் சேதம் ஏற்படக் கூடும் என்பதை உணர்ந்து கொண்டார்கள். எனவே தன்னுடைய புதிய போர்த்திட்டத்தை வெற்றியுடன் நிறைவேற்ற வேறு வழிகளில் சப்பாவேவ் முயன்றான். ஊஸிகாவில் நிகழ்ந்த போரில் ஓரளவு பலன் கிட்டியது. ஊரல் பகுதியின் இரண்டாவது தலை நகராகிய லிபிஸ் வென்ஸ்க் நகரமும் விரைவில் கைப்பற்றப்பட்டது. இவற்றால் பெரும் அழிவுகள் ஏற்பட்டாலும் கூட நல்ல சாதகமும் கிடைத்தது. இதுபோல ஐந்து தாக்குதல்களில் வெற்றி கிட்டினால் போரே முடிந்து விடுமே!

லிபிஸ் ஷென்ஸ்க் நகரைக் கைப்பற்றியவுடன் நோர்யா சென்ஸ்கியைக் கடந்து மெர்ஜென்யோவ்ஸ்கி நகருக்கு முன் முற்றுகையிட்டனர். பின்னிட்டுச் சென்ற கொஸாக்கியப் படையினர். போர் நிலவரத்தைப் புரிந்து கொண்டனர், நதிப் படுகையில் உள்ள வெறும் மணல் வெளியில் தங்களுக்கு என்ன நேரக்கூடும் என்பதை உணர்ந்து கொண்டனர். எல்லாவற்றையும் இழக்கும் முன்பு செஞ்சேனைப் படைகளின் தாக்குதலை முன் கூட்டியே அவர்கள் தகர்த்

தால் தான் முடியும். எனவே எல்லாக் கிராமங்களிலும் இருந்த தங்களது படைகளை வலுப்படுத்தினார்கள். லிபிஸ்ஷென்ஸ்க் நகர்ப் போரிலும் படாத பாடு பட்டுத் தாக்குப் பிடித்தார்கள். ஆனால் செஞ்சேனைப் படைகளின் இத்தகைய உக்கிரத் தாக்குதலை அவர்கள் எதிர்பார்க்கவேயில்லை. சப்பாயேவ் சுற்றிவளைத்துப் பிடிக்கும் போர் முறையை இங்கும் கையாளுவான் என்று நம்பினார்கள். ஆனால் அவர்களது நம்பிக்கை தவறிவிட்டது. லிபிஸ்ஷென்ஸ்க் நகரை நேரடியாகத் தாக்கிச் செஞ்சேனைகள் எளிதில் கைக் கொண்டன. இந்தத் தோல்வி கொஸாக்கியர்களுக்கு ஒரு பாடமாக அமைந்தது. எனவே மெர்ஜென்யேவ்ஸ்கிக் கோட்டையை எல்லாவகையிலும் உறுதிப்படுத்தினர். பதுக்கல் கிடங்குகளில் ஏராளமான வீரர்கள் நிறுத்தப்பட்டனர். எல்லா மூலை முடுக்குகளிலும் சுழல் துப்பாக்கிகளும், பீரங்கி வண்டிகளும் நிறுத்தப் பட்டன. இவ்வளவு வலுவான முயற்சிகளையெல்லாம் செஞ்சேனைப் படைகள் தகர்த்து விட்டன. நேரடிப் போரில் மெர்ஜென்யோவ்ஸ்கி நகரம் வீழ்ந்துவிட்டது. பல கொஸாக்கிய வீரர்கள் கொல்லப்பட்டனர். செஞ்சேனைக்கு நேர்ந்த அழிவும் ஏராளம்தான். வெற்றியால் ஏற்பட்ட பலனை விட அழிவால் நேர்ந்த சேதமே மிகுதி.

சப்பாயேவின் போர்த் தந்திரங்களைக் கொஸாக்கியர்கள் புரிந்துகொண்டு அவற்றைத் தகர்த்தெறியத் தக்க ஏற்பாடுகளைச் செய்தனர். சப்பாயேவும் தன் போர் முறையைச் சமயத்திற்கேற்றபடி மாற்றிக்கொண்டான். நேரடித் தாக்குதலை நிறுத்திவிட்டான். சிஷோவின் படைகளை நெடுஞ்சாலை வழியே செல்லுமாறு ஏவினான். குஷூம் பள்ளத்தாக்கு வழியாக சகார்னாயா என்ற கொஸாக்கியக் கிராமத்திற்குச் செல்லுமாறு ஷ்மாரினுடைய படைக்கு உத்தரவிட்டான்.

இந்தச் சமயத்தில் ஸலோமி கின்ஸ்காயாப் பகுதியிலிருந்து சகார்னாயா பகுதிக்குக் கொஸாக்கியப் படைகள் வந்து கொண்டிருந்தன. இவானோவா—வோஷ்னெஸென்க் ரெஜிமெண்டைச் சேர்ந்த போக்குவரத்து வண்டிகள் தங்கியிருந்த கிராமத்தைக் கடந்து கொஸாக்கியப் படைகள் செல்ல நேர்ந்தது. அங்கு இருதரப்பார்க்குமிடையே படுகொலை நடந்தது! மூன்று செஞ்சேனையரே தப்பிப் பிழைக்க முடிந்தது. நடந்தவற்றையெல்லாம் செஞ்சேனைத் தளபதியிடம் சொன்னார்கள். இப்படுகொலையைக் கேள்வியுற்ற வீரர்கள் திகிலடைந்தனர். அந்தப் பகுதியில் கொஸாக்கியப் படைகளை அவர்கள் எதிர்பார்க்கவேயில்லை. அதனால்தான் அத்தகைய படுகொலைக்கு அவர்கள் ஆளாக நேர்ந்தது. உடனே போக்குவரத்து வண்டிகளை மீட்பதற்கென ஒரு செஞ்சேனை ரெஜிமெண்டு அனுப்பப்பட்டது. அதனால் ஓரளவே வெற்றி கிட்டியது. கொஸாக்கியர்கள் ஏராளமான போக்குவரத்துச் சாதனங்களை அதற்குள் கடத்திக் கொண்டு அந்தக் கிராமத்தை விட்டே சென்றுவிட்டனர்.

செஞ்சேனை வீரர்கள் கிராமத்தில் புகுந்ததும் நெஞ்சுறுக்கும் காட்சிகளைக் கண்டனர். ஒரு காட்சி அவர்களைத் திகில் கொள்ளச் செய்தது. இரு பெண்களின் உடல் கோரமாகக் கிடந்தது. அவர்களுடைய தனங்கள் அறுக்கப்பட்டிருந்தன. அவர்களுக்கு அருகில் உருச் சிதைக்கப்பட்ட பல வீரர்களின் சடலங்கள் அலங்கோலமாகக் கிடந்தன. செஞ்சேனை வீரர்களது மர்ம உறுப்பை அறுத்து வாயில் திணித்துக் கொடுமையாக வீழ்த்தியிருந்தார்கள்! நெஞ்சு சிதைக்கும் கொடுமைத் தோற்றமாக அது இருந்தது.

பழிக்குப் பழி வாங்குவதுடன், இக் கொடுமைச் செயல்களிலும் கொஸாக்கியர்கள் இறங்கிவிட்டனர். கைதாகும் செஞ்சேனையினர்க்கு இப்படியெல்லாம் நேரும் என்ற அச்சத்தையும் ஸ்டெப்பிவெளியில் உயிர் தப்ப முடியாது என்ற பயங்கரத்தையும், அதைவிட்டு ஒழித்தல் வேண்டுமென்ற கோழை எண்ணத்தையும் செஞ்சேனையினர்க்கு.

உணர்த்த மனம் கூசாத கொடுமைகளைத் துணிந்து செய்ய முற்பட்டனர். ஆனால் அவர்கள் எதிர்பார்த்தபடி செஞ்சேனை வீரர்கள் அச்சமடையவும் இல்லை, உயிர்தப்ப விரும்பவில்லை, கோழைகளாகப் போகவும் இல்லை. எல்லாம் மாறாகவே நடந்தது. கொஸாக்கியர்களின் கையில் சிக்கிக் கொடுமைக்காளாகிச் சாவதைவிடப் போரில் இரண்டிலொன்று பார்த்துவிடுவது என்ற உத்வேகத்துடன் செஞ்சேனை வீரர்கள் போரிட்டனர். கடைசி ஒரு துளி இரத்தமும் வடியும்வரை, உடல் உணர்ச்சிகள் ஒடுங்கும்வரை, இறுதி மூச்சு அடங்கும்வரை, உடல் சோரும்வரை துணிந்து போரிட்டார்கள். இந்தக் கிராமத்தில் கொஸாக்கியர்கள் செய்த கொடுமை எல்லாச் செஞ்சேனை வீரர்கட்கும் நொடியில் பரவியது. மனிதப் பண்பற்ற கொஸாக்கியக் கொலைகாரர்களை வேரறுப்பது அல்லது வீழ்ந்து மடிவதென எல்லா வீரர்களும் துணிந்தனர்.

சிஷோவ் நெடுஞ்சாலை வழியே முன்னேறி கார்ஷின்ஸ்கிவரை வந்து, ஷ்மாரினுடைய படை முன்னேற்றச் செய்தியைத் தெரிந்துகொள்ளுவதற்காக அங்கேயே தங்கினான். ஆனால் ஷ்மாரினுடைய படைகள் ஸ்டெப்பிப் பகுதிக்குள் புகுந்துவிட்டதால் சிஷோவுடன் பல நாட்களுக்குத் தொடர்புகொள்ள முடியவில்லை அவன் அனுப்பிவைத்த தூதுவர்களைக் கொஸாக்கியப் படைகள் பிடித்துக்கொண்டன. அவர்களிடமிருந்து பல செய்திகளைத் தெரிந்துகொண்ட பின்னர் கொஸாக்கியர்கள் அவர்களைச் சிரச்சேதம் செய்துவிட்டார்கள். எத்தனை தூதுவர்களை அனுப்பினாலும் எல்லோருடைய கதியும் இப்படித்தான் முடிந்தது.

கொஸாக்கியர்களுக்கு முழு ஆதரவும் தரக்கூடிய எந்தக் கிராமமும் அந்தப் பகுதியில் இல்லை. அங்கும் இங்கும் ஒரு சில குக்கிராமங்களைக் கொண்ட பரந்த புல்வெளியே எங்கும் பரவிக் கிடந்தது. உணவுப் பொருள்கள் அனைத்



தும் தீர்ந்துவிட்டன. ஓரளவு கிடைத்த மாமிசத்தை முகாம் நெருப்பில் வாட்டித் தின்றனர். படை வீரர்களுடையே எல்லாவகை வியாதிகளும் தலை நீட்டின. மஞ்சள் காமாலை பலரை வாட்டியது. மருந்து வசதியும் இல்லை, வைத்தியர் உதவியும் கிட்டவில்லை. குடிதண்ணீர்கூடப் போதுமான அளவு கிடைக்கவில்லை. பலர் குஷூம் நதிக்குக் குதிரையில் சென்று பார்த்தும் வறண்ட தரையையே கண்டனர். ஒரு இடத்தில் சேறு நிறைந்த சிறு நீர்நிலையே இருந்தது. அதில் இருந்த தண்ணீரைப் புட்டிகளில் அடைத்துத் திரும்பினர் அவர்கள் கொண்டுவந்த தண்ணீரைக் குடிக்க நான் முந்தி, நீ முந்தி என்ற போராட்டம்கூடக் கிளம்பிவிட்டது!

எங்காவது கிணற்றில் கொஞ்சம் தண்ணீர் இருந்தால் போதும். எல்லோரும் பங்கிட்டே பருகினார்கள். கூடப் பருகுவதற்கு ஒரு சொட்டுக்கூடக் கிடைக்காது. தண்ணீர் இல்லாத வறட்சிப் பிரதேசத்தில் படாதபாடு பட்டார்கள். தாகம் தீர்க்கும் வகையறியாது தடுமாறினார்கள், சுதந்திர தாக உணர்ச்சிதான் அவர்களை உயிர்வாழ வைத்திருந்தது!

ஷ்மாரினுடைய படைக்கு நேர்ந்த இவ்வளவு இன்னல்கள் வேறு எந்தச் செஞ்சேனைப் படைக்கும் இதுவரை ஏற்பட்டதில்லை. சிஷோவின் படை சகார்னாயா நகரைக் கைப்பற்றிய பின்னர்தான் அவர்களுடன் தொடர்புகொள்ள ஷ்மாரினால் முடிந்தது. ஷ்மாரினுடைய வருகையை எதிர்பாராமலே சிஷோவின் படை முன்னேறிச் சென்றது.

தன்னுடைய உத்தரவுப்படி போறை நடத்தாமைக்காக ஷ்மாரின்மீது சப்பாயேவ் ஆத்திரமும் அடங்காக் கோபமும் கொண்டான். தன்மனம் போல் நடந்மைக்காக அவனைச் சுட்டுப் பொசுக்கவேண்டுமென உறுமினான். ஷ்மாரினைப்பற்றிய புகார், ராணுவ வழக்கு மன்றத்திற்கு வந்தது. விசாரணைக் குழுவின் தலைவனாயிருந்த சிஷோவ் கடுந் தண்டனை எதுவும் விதிக்காது ஷ்மாரினைத் துணைப் படைத் தளபதியாக கீழ்ப் பதவிக்குத் தள்ளும்படி உத்தர

விட்டான். பாடுரினும் இதே கருத்தை வலியுறுத்தினன். மறுநாள், பிரதம படைத் தளபதி பதவியிலிருந்து துணைப் படைத் தளபதியாக்கப்பட்டான் ஷ்மாரின். அப்பொழுது செஞ்சேனைப் படைகள் கால்மிகோவைத் தாண்டி காஸ்பியன் கடலுக்கு அருகில் இருந்த குர்யேவை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தன. இப்பொழுது ஏற்பட்ட பெரும் அழி வொன்று, என்றென்றும் மறக்கமுடியாத கொடுமைச் சின்னமாகப் பதிந்துவிட்டது! அந்தப் பேரழிவை மக்கள் மறக்கவே முடியாது, வரலாறும் மறைக்கவே முடியாது!

படையின் தலைமைக் காரியாலயம் லிபிஸ்ஷென்ஸ்க் நகரில் இருந்தது. அங்கிருந்து சப்பாயேவும், பாடுரினும் எல்லாப் படைப் பகுதிகளையும் மோட்டாரில் தினம் சுற் றிப் பார்த்துத் திரும்புவர். குளிர்காலமும் நெருங்கிக் கொண்டிருந்தது. நாளும் பொழுதும் ஓடிக்கொண்டே யிருந்தன. பின்னிட்டுச் சென்ற கொஸாக்கியப் படைக ளின் நிலையும் மோசமாகிக்கொண்டே யிருந்தது—வெறும் புல்வெளிப் பிரதேசமும், வறட்டுப் புல்லும், பசிப் பிணியும் அவர்களை விநாடிக்கு விநாடி நலியச் செய்தன. செஞ் சேனைத் தாக்குதலை ஏற்று முறியடிக்க வேண்டுமானல் இப் பொழுதே முயன்ருல்தான் ஓரளவு முடியும்—இல்லையென் ருல் காலங்கடந்த வீண் முயற்சியாகி விடும். எனவே இறுதியாகப் போரிட்டு இரண்டிலொன்று பார்த்துவிடுவ தெனக் கொஸாக்கியர்களும் துணிந்தார்கள். சகார்னுயா வுக்கு அப்பால் குஷும் பள்ளத்தாக்கைத் தாண்டிச் செல் லுவதென்றும், வசந்த காலத்தில் ஸ்லோமிகின்ஸ்காயாப் போரில் சப்பாயேவால் தோற்கடிக்கப்பட்ட அதே இடத் தில் மீண்டும் போரைத் தொடங்குவதென்றும், செஞ் சேனைப் படைகளைத் திடீரென நெருங்கித் தாக்குவதென் றும், லிபிஸ்ஷென்ஸ்க்கில் குவிக்கப்பட்டுள்ள செஞ்சேனைப் படைகளை நிர்மூலமாக்குவதென்றும் முடிவு கட்டினுர்கள். அப்பொழுது லிபிஸ்ஷென்ஸ்க் இலக்கில் மிகுதியான செஞ்



சேனை வீரர்கள் இல்லை. பிற இலக்குகளினும் இல்லை தவிர வும் வெடிமருந்துகளும், உடைகளும் கொஞ்ச நாட்களுக்கு முன்னர்தான் வந்திருந்தன. தொடர்ந்த போராட்டங்களா லும், அரைகுறைப் பட்டினியாலும் தொடர்ந்த காய்ச்ச லாலும் எல்லோரும் பீடிக்கப்பட்டதால் அனைவருக்கும் போதிய உடைகளும், பூட்ஸுகளும் வழங்குவதென்று தீர் மானிக்கப்பட்டது.

உரால்ஸ்க்கிலிருந்து குர்யேவிற்குச் சென்ற தொலை யான அணிவகுப்பில் போரில் காயம்பட்டுப் படுத்ததை விடக் காய்ச்சலுக்கு ஆளாகிப் படுத்த செஞ்சேனை வீரர் களின் தொகையே மிகுதி. கிராமங்களில் இருந்த குடிசை களிலும், ராணுவத் தளவாட வண்டிகளிலும், பாதை யோரச் சாக்கடைகளிலும் ஏராளமான நோயாளிகள் படுத் துக் கிடந்தனர். நோய்க்காளான ஒரு சாராரைத் தூக்கிச் செல்லுமுன்னர் அடுத்தாற்போலப் பலர் நோயால் படுத்து விடுவர். கைவிடப்பட்ட கொஸாக்கியக் கிராமத்துக் காலி யான குடிசைகளிலும், புல்வெளிகளிலும் அனுதரவாகப் பலர் விடப்பட்டனர். அவர்களுக்கு மருந்தேதும் கிடைக்க வில்லை. மருத்துவப் படையைச் சேர்ந்தவர்களிலும் பலர் செத்து மடிந்து விட்டனர்.

கொஸாக்கியர்களின் நிலை இதைவிடச் சற்று நல்ல நிலையில் இருந்தது. கிராமங்களுக்கு முதலில் செல்லும் வாய்ப்பு அவர்களுக்குக் கிட்டியதால் கிராமத்தில் கிடைத்த எல்லாப் பொருள்களையும் கவர்ந்து கொண்டார்கள். ஆடு மாடுகளையும், இதர பொருள்களையும் தூக்கிச் செல்ல முடி யாத பொருள்களை நெருப்பிலிட்டார்கள், அழித்தார்கள், விஷமிட்டுக் கெடுத்தார்கள். பிறர்க்கு எவ்வகையிலும் பயன்படாமல் கெடுத்து வைத்தார்கள். கொஸாக்கியர்க ளால் கொள்ளையடிக்கப்பட்டுத் துடைக்கப்பட்ட கிராமங் களுக்கே செஞ்சேனைகள் சென்றமையால் உணவுமுதல் அனைத்திலும் அவர்களுக்குப் பற்ருக்குறை ஏற்பட்டது.

எதுவுமே கிடைக்கவில்லை. செல்லச்செல்ல அவர்களுடைய அணிவகுப்பு மிக நலிந்து போயிற்று. கொஸாக்கியர்கள் இதைத் தெரிந்து கொண்டார்கள். திட்டமிட்டுள்ள தங்களுடைய இறுதித் தாக்குதலுக்கு ஏற்பவே எல்லாம் நடப்பதாக நம்பினார்கள். படையின் தலைமைக் காரியாலயத்தை அழித்துப் போக்குவரத்தைத் துண்டித்து விட்டால், நூறு மைல்களுக்கப்பால் சென்றுள்ள செஞ்சேனைகளுக்கும் தலைமைக் காரியாலயத்திற்கும் உள்ள தொடர்பு அறுந்துவிடும். அவர்களுக்குப் போதிய உதவிகள் கிட்டாது. தொடர்ந்து போரிட முடியாமல் தாமாகச் சரண் புகுந்து விடுவார்கள் என்றெல்லாம் கொஸாக்கியர்கள் எண்ணினார்கள். இது வரை வெல்ல முடியாத சப்பாயேவின் படைகளைத் தோற்கடித்து விடலாம். அவ்விதம் தோற்கடிக்கப்பட்டால் ஊரல் புல்வெளி முழுவதையும் செஞ்சேனையிடமிருந்து மீட்டு விட்டதாகவே கருதலாம் என்றெல்லாம் மனக்கோட்டை கட்டினார்கள். எனவே திட்டமிட்ட இறுதித் தாக்குதலில் தங்களுடைய நம்பிக்கையை யெல்லாம் வைத்திருந்தனர். அத்தாக்குதலை வெற்றியுடன் முடிப்பதற்குத் தகுந்த பயிற்சியும் அனுபவமும் நிறைந்த தளபதிகள் நியமிக்கப்பட்டனர். லிபிஸ் ஷென்ஸ்க் நகரைச் சுற்றிக் கருமையான போர் மேகங்கள் சூழத்தொடங்கின. தவிர்க்க முடியாத பெரும் அழிவொன்று தனக்கு நேரப் போவதை அந்த நகரம் உணரவேயில்லை!

அன்று வழக்கத்திற்கு மாறாக மிகவும் வருத்தமாக இருந்தான் சப்பாயேவ். அன்று விடியற்காலையில் போர் முனைக்குச் சென்று விட்டுப் பகல் நேரத்திலேயே லிபிஸ் ஷென்ஸ்க்குத் திரும்பிவிட்டான். படைகளின் முன்னேற்றமும் தடைபட்டுச் சுணங்க வந்தது. காய்ச்சலுக்கு ஆளாகி எண்ணற்ற வீரர்கள் சுருண்டு விட்டார்கள். வேண்டிய பொருள்களைக் கொணரும் போக்குவரத்துச் சாதனங்கள் பெரிதும் தடைப்பட்டன. சப்பாயேவ் எல்லாவற்றையும்



பார்த்தான். ஒரு அளவுக்கு மேல் எதுவும் செய்ய முடியாதென்பதை உணர்ந்தான். படை வீரர்கள் தங்களது சக்திக்கு மேலே தான் வேலை செய்தார்கள் என்றாலும் அவர்களுடைய தீரச் செயல்களையும், தன்னலம் இல்லாத தொண்டுகளையும் கடந்து சூழ்நிலை பாதகமாகிக் கொண்டிருந்தது. சப்பாயேவின் மனோநிலை இருண்டு இருந்தது. பாடுரினிடம் சென்று பல சந்தேகங்களை விவாதித்து விட்டுத் தன்னுடைய அரைக்குச் சென்று விட்டான். அறைக்குள் இங்கும் அங்கும் வெகுநேரம் நடந்தான். எதையோ யோசித்து முடிவு செய்ய முயன்றான்—ஆனால் எதுவும் முடியவில்லை. அவன் எதிர்பார்த்த விடையும் மார்க்கமும் புலப்படவில்லை. பெட்கா கதவுக்குப் பின்னால் இருந்து சப்பாயேவின் தீவிரச் சிந்தனையைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தான். ஆனால் அவனால் எதுவும் தீவிரமாகச் சொல்ல முடியவில்லை. சப்பாயேவ் ஏதாவது வழியைக் கண்டு பிடித்து உத்தரவிட மாட்டானா என்றுதான் அவனும் ஏங்கிக் கொண்டிருந்தான்.

அங்கே வந்த செக்கோவை உள்ளே நுழைய வேண்டாமென்று பெட்கா வாசற்படியிலேயே தடுத்து நிறுத்தி விட்டான். "உன்னோடு பேசச் சப்பாயேவுக்கு இப்பொழுது நேரமில்லை, தோழரே" என்று சொன்னதும், செக்கோவ் எதுவும் பேசாது திரும்பி விட்டான். சப்பாயேவிடம் ஏதோ முக்கியமான தகவலைச் சொல்ல வேண்டுமென வந்த இலயாட்யோட்கிசன், அவனுடைய மனோநிலையைக் கேட்டவுடன் வந்த வழியே திரும்பி விட்டான். பிரதம உத்தியோகஸ்தன் நோவிகோவை மனம் இல்லாமல்தான் உள்ளே விட்டான். ஏதோ முக்கிய அறிக்கை யொன்றைச் சமர்ப்பிக்க வந்த நோவிகோவை அவனால் தடுத்து நிறுத்த முடியவில்லை.

நோவிகோவ் இருபத்து மூன்றே வயதான நல்லிளைஞன். இதற்கு முன் ஜார் அரசியலில் ஓர் உத்தியோகஸ்

தனாயிருந்தவன். சப்பாயேவின் நம்பிக்கைக்குரிய ஒரு சிலருள் இவனும் ஒருவன். இவன் 1918-ம் ஆண்டில் செஞ்சேனையில் சேர்ந்தான். தன்னுடைய ஈடுபாட்டையும் செயல்திறத்தையும் பொதுப் பிரச்னைகளில் தீவிரமாகச் செலுத்திப் போராடியிருக்கிறான். பலமுறை போரில் காயம் அடைந்திருக்கிறான். துணைப் படைத் தளபதிகள் அனைவரையும் நோவிகோவுக்கு நன்கு தெரியும். எல்லோருடனும் இதமாகப் பழகி அவர்களில் ஒருவனாகவே வாழ்ந்திருக்கிறான். அவர்களும் அவனுக்குத் தக்க மரியாதையும் பெருமையும் தந்து போற்றினார்கள். அவனை ஒரு சமயம் கூடச் சப்பாயேவ் திட்டியதுமில்லை சபித்ததுமில்லை. வேறு எந்த உத்தியோகஸ்தனுக்கும் கிடைக்காத சிறப்பு நோவிகோவுக்கு மட்டுமே கிடைத்தது. இதிலிருந்து சப்பாயேவ் அவனை எவ்வளவு பாராட்டிப் போற்றினான் என்பது புலப்படும்.

நோவிகோவ், அந்த அறைக்குள் நுழைந்து, ஒரு கற்றைக் காகிதங்களுடன் வாயிற்படி அருகிலேயே நின்றுவிட்டான். -

"ஏன் அங்கே நிற்கிறாய்? உள்ளே வா" என்றான் சப்பாயேவ்.

'நன்று' என்றபடியே நோவிகோவ் உள்ளேவந்தான். சப்பாயேவ் அமர்ந்திருந்த மேசை மீதே தனது அறிக்கையைச் சமர்ப்பித்தான். கடைசியாகக் கிடைத்த தகவல்படி செஞ்சேனை வீரர்கள் கைப்பற்றியுள்ள இடங்களையெல்லாம் வரைப்படத்தில் சுட்டிக்காட்டினான். ஊரல் நதியைத் தாண்டி புக்காரா பிரதேசத்திற்குள் புகுந்த படையைப் பற்றிப் பல தகவல்களைச் சப்பாயேவ் கேட்டான். அந்தப் படை இதர படைப் பகுதிகளோடு துண்டிக்கப்பட்டுப் போதிய வசதிகளின்றி இக்கட்டான சூழ்நிலைகளில் போராடிக் கொண்டிருந்தது. அண்மையில் அங்கிருந்து வந்த தந்தியில், ஓரளவு போக்கு வரத்து வசதிகள் அப்படைக்குச் சென்று சேர்ந்து விட்டன என்றசெய்தி குறிக்கப்பட்டிருந்தது. இதைக் கேட்ட பின்னர் சப்பாயேவின் முகம் மலர்ந்தது. அமைதியோடும் அன்போடும் பேசத் தொடங்கினான்.



நோவிகோவ் பேச ஆரம்பித்தான்...

"நேற்று, இங்கிருந்து பதினைந்து கல் தூரத்தில் நம்முடைய போக்கு வரத்து வண்டிப் பகுதி யொன்றின் மீது எதிரிகள் தாக்கினர்"

"எனக்குத் தெரியும்"

"அதைப் பற்றி விசாரணை ஒன்றும் நடந்தது. பலர் படுகாயமுற்றனர், சிலர் கொல்லப்பட்டனர். கொஸாக்கியப் படைகள் நமது போக்குவரத்து வண்டிகளைக் கிராமத்தின் எல்லைவரைக்கும் விரட்டி வந்து, எங்கோ ஓடி விட்டனர்."

"நம்மவர்கள் அவர்களைப் பின்தொடர்ந்து விரட்டிச் சென்றார்களா?"

"நமது வீரர்கள் கொஞ்சம் தாமதமாக வந்ததால் கொஸாக்கியப் படைகள் போன திக்கைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. உயிரோடு திரும்பிய போக்கு வரத்து வண்டிக்காரர்களாலும் அவர்கள் போன திசையைச் சொல்ல முடியவில்லை"

"இதற்குப் பக்கத்திலேயே எங்காவது எதிரிகளின் பெரும் படையொன்று தங்கியிருக்கக் கூடுமென்று உனக்குத் தோன்றவில்லையா, நோவிகோவ்?"

"அப்படிச் சொல்ல முடியாது. உங்களது உத்தரவுப் பிரகாரம் நமது உளவாளிகளை எல்லாத் திசைகளிலும் இன்று காலை அனுப்பியிருக்கிறோம். ஆகாய விமானங்கள் இரண்டு புறப்பட்டுத் துப்பறியச் சென்றிருக்கின்றன"

"யாரும் இதுவரை திரும்பி வரவில்லையா?"

"ஆகாய விமானிகள் திரும்பிவிட்டனர். எதிரிப் படைகளின் எத்தகைய சலனத்தையும் சமீபத்தில் காண முடியவில்லை என்று தெரிவித்தார்கள்"

"சரி....நோவிகோவ். இன்று இரவு டிவிசன் பள்ளிக் கூடத்தைச் சேர்ந்தவர்களைக் காவலில் நிறுத்து என உத்தரவிட்டான் சப்பாயேவ்.

'சரி ..அப்படியே' என்றான் நோவிகோவ். அதற்கப்புறம் இன்னும் சில விபரங்களை இருவரும் விவாதித்தனர். அப்பொழுது பாடுரின் உள்ளளே வந்தான். உளவறியச் சென்று திரும்பிய வீரர்கள், எதிரிப்படைகளைச் சமீபத்தில் காண முடியவில்லை என்று தெரிவித்த தகவலைச் சப்பாயேவுக்கு அறிவிக்க அவன் வந்தான்.

அந்தக் கொடிய இரவில் டிவிசன் பள்ளிக் கூடத்து அலுவலர்களைக் காவலை வி டுக் கடத்தியது யார் என்றே இதுவரை யாருக்கும் தெரியாது. சப்பாயேவ் அதுபற்றி உத்தரவேதும் தரவில்லை. நோவிகோவுக்கும் ஏதும் தெரியாது—நோவிகோவ் துணிவோடு போராடி லிபிஸ்ஷென்ஸ்க் படுகொலையில் பெரிதும் துன்பப்பட்டான்.

அந்தக் கிராமத்து மக்கள் சிலருக்கும் கொஸாக்கியர்களுக்கும் பலவகையில் தொடபுகள் இருந்தன என்பதற்குச் சந்தேகமே யில்லை. ராணுவத்தைச் சேர்ந்த எல்லாப் பகுதிகளும் நன்கு அலசப்பட்டன. பூர்வாங்க விசாரணைகள் செய்யப்பட்டு எல்லா ஏற்பாடுகளும் முன் கூட்டியே உருவாக்கப்பட்டன.

பாடுரின், சப்பாயேவுடன் பேசிக்கொண்டிருந்த பொழுது மனம் திருந்திய கொஸாக்கியப் பெண் ஒருத்தி உள்ளே வந்தாள். பெட்கா எவ்வளவோ தடுத்தும், அவனை மீறி உள்ளே புகுந்துவிட்டாள். அவளது மகன் உரால்ஸ்க் பகுதியில் வேலைபார்க்கிறான். அவசரம் அவசரமாக ஏதோ ஒரு அபாயத்தைச் சுட்டிக்காட்டி எச்சரிக்க முயன்றாள். ஸ்டெப்பி வெளியில் பலர் குதிரைகளில் ஏறி வருவதாகத் தெரிவித்தாள். அவளுடைய இந்த அபாய அறிவிப்பை யாருமே கவனிக்கவில்லை. அந்தப் பெண், செஞ்சேனைப் போக்குவரத்து வண்டிகளைத் தாக்கிய கொஸாக்கிய வீரர்



களைத்தான் குறிப்பிடுகிறாள் என்று நினைத்துச் சப்பாயேவும் பாடுரினும் சிரித்தார்கள். திரும்பவும் சப்பாயேவைப் பார்க்க ட்யோட்கின் அங்குவந்தான். இப்பொழுதும் பெட்கா அவனைத்திருப்பி விட்டான்.

அந்த நள்ளிரவு கடந்துவிட்டது...பொழுது புலரும் சமயமாகிவிட்டது. அந்தக் கிராமம் முழுவதும் அமைதியாக இன்னும் உறங்கிக் கொண்டிருந்தது. முன்னேறிவந்த கொஸாக்கியப் படைகள் கிராமத்தின் எல்லையில் இருந்த காவல் வீரர்களை மடக்கிக் கொண்டனர். எல்லாப் படைகளும் ஒரு சேர இணைந்த தன்னர் கிராமத்தை நோக்கிப் பெரும் படையாக முன்னேறிச் சென்றனர்.

காவல் காத்து நின்ற செஞ்சேனை வீரர்களின் முதல் அபாய அறிவிப்பு வேட்டு முழங்கிய பொழுதே மிகவும் தாமதமாகிவிட்டது. கிராமத்துத் தெருக்களில் திமு திமுவென்று கொஸாக்கியப் படைகள் புகுந்து விட்டன. வரன்முறையற்ற கண் மூடித்தனமான போர் மூண்டது. யாரை நோக்கி எங்கே சுடுவது என்றெல்லாம் தெரியாமல் கண்டபடி சுட்டுத் தள்ளினார்கள். திடீர்த்தாக்குதலுக்கு ஆளான செஞ்சேனைப் படைகள் எதுவும் புரியாது படுக்கையினின்று விழித்து நாலாபுறமும் அரைக்கால் சட்டையுடன் ஓடினார்கள் செஞ்சேனையினர் போருக்குத் தயாரயில்லாததால் ஏற்பட்ட குழப்பமும், திடீர்த்தாக்குதலால் ஏற்பட்ட கலக்கமும் அவர்களைச் சிதறடித்தன. நிலைமையைப் புரிந்து கொண்டவர்கள் சிறு சிறு பகுதிகளாகப் பிரிந்து, கைக்குக் கிடைத்த ஆயுதங்களைக் கொண்டு வலிய கொஸாக்கியப் படைகளுடன் போரிட்டார்கள். அவர்களாலும் நெடு நேரம் ஈடு கொடுக்கமுடியாமையினால் ஊரல் நதிப்பக்கம் ஓடினார்கள். பின்வாங்கிய எல்லாச் செஞ்சேனை வீரர்களும் பொதுவாக ஊரல் நதிக்கரைப்பக்கமே ஓடினார்கள். ஓடிச் சென்ற வீரர்களைத் துரத்திக்கொண்டு கொஸாக்கியப் படைகள் கிராமத்து எல்லை வரை வந்தன. கைக் கெட்டிய

வீரர்களைக் கைது செய்தபின்னர் மீண்டும் கிராமத்திற்குள் திரும்பின. கிராமத்திற்குள் செஞ்சேனையினரின் வலுவான எதிர்த்தாக்குதல் ஏதும் இல்லாவிட்டாலும் கொஸாக்கியப் படைகளால் உள்ளே துணிந்து புகமுடியவில்லை. ஓரிடத்தில் நூற்றுக் கணக்கான வீரர்கள் சப்பாயேவைச் சூழ்ந்து நெருங்கி விட்டனர். வேறு வகையில்லாத சப்பாயேவ், போதிய உடை கூட உடுத்த முடியாது, ஒரு கையில் ரிவால்வாருடனும், இன்னொரு கையில் துப்பாக்கியுடனும் ஓடித் தப்பினான்.

இப்பொழுது நன்கு விடிந்து விட்டது. எல்லாம் கண்களுக்குப் புலப்படத் தொடங்கின. கிராமத்தின் நடுப்புறத்தில் கிடங்குகளில் பதுங்கியிருந்த செஞ்சேனை வீரர்களை நோக்கிப் பெரிய கொஸாக்கியப் படையொன்று நெருங்கியது. பெரும் போர் மூண்டது. பல சுழல் துப்பாக்கிகள் கொணரப்பட்டன. செஞ்சேனையினரின் கொடுந்தாக்குதலை மீறமுடியாத கொஸாக்கியப் படைகள் தயங்கிப் பின்னிட்டன.

அதற்கு அடுத்த தெருவில் ராணுவத்தைச் சேர்ந்த அரசியல் இயக்கக்காரியாலயம் இருந்தது. அங்கு கமிசார் பாடுரினுக்குப் பாதுகாவலாக எண்பது செஞ்சேனைவீரர்கள் இருந்தார்கள். அரசியல் இயக்கக் காரியாலத்தைச் சேர்ந்த எல்லா ஊழியர்களும், சிறப்பாக நோவி கோவ், கிரெய்னுகோவ், சுவோரோவ் ஆகியோரும் உடனிருந்தார்கள். கொஸாக்கியப் படைகளின் தாக்குதல் வலுத்து வருவதைக் கண்ட பாடுரின், தன்னைச் சூழ்ந்திருந்த சிறுபடையுடன் இறுதிப் போராட்டத்திற்குத் தயாரானான். திடீரென்று கொஸாக்கியப் படை யொன்றுடன் மோதினான். எதிர்பாராத தாக்குதலுக்கு ஆளான கொஸாக்கிய வீரர்கள் தறிகெட்டு ஓடினார்கள். அவர்களுடைய இரு சுழல் துப்பாக்கிகள் பாடுரினுடைய கையில் சிக்கின. கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் எதிரி மீதே பிரயோகிக்கப்



பட்டன. அந்தச் சமயத்தில் நோவிகோவின் காலில் பெரும் குண்டொன்று பாய்ந்து வீழ்ந்தான். அவனைப் பக்கத்தில் இழுத்துக் கிடத்தினார்கள். என்ன செய்வதென்று புரியாமல் அவனை அங்கேயே கைவிட்டுச் சென்றார்கள். நோவிகோவ் தானாக நகர்ந்து நகர்ந்து ஒரு குடிசைக்குள் சென்று, அங்கு கிடந்த மேசைக்குக் கீழே பதுங்கிக் கொண்டான். பாடுரினும், அவனைச் சேர்ந்த பல செஞ்சேனை வீரர்களும் இறுதிவரை துணிந்து போரிட்டார்கள். செஞ்சேனைப் படைகளின் உதவி எப்பொழுதும் கிடைக்கும், சப்பாயேவ் கட்டாயம் துணைக்கு வந்துவிடுவான் என்ற நம்பிக்கையுடன் நெடு நேரம் தாக்குப் பிடித்துக் கொண்டார்கள். அவர்களைச் சூழ்ந்து கொஸாக்கியப் படைகள் நெருங்கிய போதும் தளர்ந்துவிடாது போரிட்டார்கள். எப்படியும் வெற்றிபெற முடியும் என்ற நம்பிக்கையோடு எதிர்த்து நின்றார்கள். அந்த நம்பிக்கையோடே வீழ்ந்தும் விட்டார்கள்! செஞ்சேனைப் படைகள் அனைத்தும் தனித்தனியாகத் துண்டிக்கப்பட்டதால், ஒரு படைப் பகுதி வெற்றி பெற்றாலும் இன்னொரு படைப் பகுதிக்குச் சமயத்தில் சென்று உதவ முடியாமல் தேங்கிக் கிடக்க நேர்ந்தது. ஒரு படை வெற்றிபெற்றால், இன்னொரு படை அடியோடு நிர்மூலமாகி விடும். இதனால் ஒரு சேரப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்த முடியவில்லை. தங்களைச்சுற்றி என்ன நடக்கிறது, தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி யாருக்கும் எதுவும் தெரியவில்லை. இந்த நிலையில் நேரடிப் போராட்டத்தில் செஞ்சேனையரை வெல்லமுடியாதெனக் கண்ட கொஸாக்கியப் படைகள் தோட்டங்கள், கொல்லைப் புறங்கள் வழியாகச் செஞ்சேனையரைச் சூழத்திட்டமிட்டன.

கொஸாக்கியப் படைகள் எல்லாத் திசைகளிலும் சூழ்ந்து ஓரேயடியாகத் தாக்கியபொழுது எதுவும் செய்ய முடியாத பாடுரினுடைய படைகள் சிதறியழிந்தன. எங்

காவது ஓடிப் பதுங்கலாமென்றாலும்கூட ஒருவராலும் தப்பமுடியவில்லை. வீடுகளுக்குள் சென்று பதுங்கியவர்களைக் கோஸாக்கியர்களிடம் காட்டிக்கொடுத்துவிட்டனர். அதற்கும் தப்பிச் சென்றவர்கள் ஊரல் நதியைத் தாண்டி அக் கரைக்கு ஓடித் தப்ப முயன்றனர்.

பாடுரின் ஒரு வீட்டிற்குள் புகுந்து அடுப்படியில் பதுங்கினான். (பாடுரின், அந்தக் கிராமத்துப் பொதுக்கூட்டத்தில் பேசியபொழுது பார்த்திருந்ததால்) அந்த வீட்டுக்காரக் கோஸாக்கியப் பெண் அவன் கமிசார் என்பதைத் தெரிந்து கொண்டாள். உடனே கோஸாக்கியர்களிடம் சொல்லியும் விட்டாள்,

வெறிகொண்ட கோஸாக்கிய வீரர்கள் பாடுரினைப் பற்றிப் பிடித்தனர். அவனை இம்சைக்கு ஆளாக்கிச் செய்தியேதும் அறியக்கூட அவ்வெறியர்கள் விரும்பவில்லை. அவனது உடலைச் சிதைத்து இரத்தம் பெருக்கெடுக்கச் செய்து பழிக்குப் பழி வாங்கிக்கொள்ளத் துடித்தனர். பரபரவென்று வீட்டுக்கு வெளியே அவனை இழுத்து வந்தனர். எல்லோரும் அவனைத் தாக்கி வெறி தீர்த்துக்கொள்ளப் பாய்ந்தனர். அவனை நெட்டிக் கீழே தள்ளினர். அவன் நிலை தடுமாறிக் கீழே விழுந்தவுடன், பல துப்பாக்கி முனைகளும், பட்டாக்கத்திகளும் ஒரே சமயத்தில் அவன் வயிற்றிலும் நெஞ்சிலும் ஈவிரக்கமின்றிச் செருகப்பட்டன. இரத்தம் பெருக்கெடுத்து ஓடியது. அதோடுகூட அந்த வெறியர்களின் மூர்க்கம் அடங்கவில்லை. அவன் கால்களைத் தூக்கித் தலைகீழாகப் பிடித்துக்கொண்டு தலையோட்டைச் சிதற அடித்து மூளையைக் கீழேவிழச் செய்தார்கள்; அவனது இரத்தம் தோய்ந்த கமிசார் உடைகளைச் சின்னாபின்னப் படுத்தினார்கள். சிதைக்கப்பட்ட உடலைக் காலால் உதைத்துத் தள்ளினார்கள். கைது செய்யப்பட்ட பல செஞ்சேனை வீரர்கள் பக்கத்தில் நின்று இந்தப் பெரும் கொடுமையைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். நெஞ்சால் போற்றி அன்



பால் வழிபட்டு வந்த கொள்கை வீரனும், தலைசிறந்த தலைவனுமாகிய தங்கள் கமிசாருக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைக் கண்டு மெய்யொடுங்கி உணர்விழந்து நின்றனர். அடுத்த சில வினாடிக்குள் கோஸாக்கிய வெறியர்களின் துப்பாக்கிகள் அனைவரது உணர்வையும் என்றென்றும் அழித்துவிட்டன! செஞ்சேனை வீரர்களது சடலங்கள், பாடுரினுடைய சடலத்திற்கு அரண்கள்போலச் சுற்றிலும் விழுந்தன. உயிரோடும் ஒன்றாகப் போரிட்டார்கள். உயிர் போன பின்னரும் தாய்நாட்டு மண்ணில் ஒன்றாகவே கிடக்கிறார்கள்!

அப்படியானால் சப்பாயேவ் எங்கே போனான்?

பாதுகாப்புக் கிடங்குகளில் பதுங்கி வெகுநேரம் தாக்குப்பிடிக்க முடியவில்லை. நதிக்கரையோரமாகச் செஞ்சேனையினர் அமைத்திருந்த இந்தக் கிடங்குகளுக்குள்ளும் கோஸாக்கியப் படைகள் ஊடுருவி விட்டன. வேறு வழியில்லாத செஞ்சேனை, உயர்ந்த செங்குத்தான நதிக் கரைக்குப் பின் வாங்கிற்று. செங்குத்தான சரிவில் ஏறினால், எதிரியின் கவனத்தில் எளிதில்பட நேரும். என்றாலும் இதை விட்டால் வேறு வழி ஏதும் புலப்படவில்லை. நதிக் கரைகளில் கோஸாக்கியச் சுழல் துப்பாக்கிகள் நிறுத்தப் பட்டன. ஆற்றில் மூழ்கி அக் கரை ஏறி புக்காராப் பகுதிக்கு ஓட முனைந்த செஞ்சேனை வீரர்களைச் சுழல் துப்பாக்கிகள் பதம் பார்த்துக் கொண்டிருந்தன. சப்பாயேவின் கையிலும் குண்டடிபட்டது. அதையும் பொருட்படுத்தாது தன் முகத்தைத் துடைத்தபொழுது தாடையிலும், நெற்றியிலும் வெடிமருந்துச் சிதள்கள் தெறித்த காலத்திலிருந்து இரத்தம் பீறிட்டு வந்தது. அப்பொழுது சப்பாயேவுக்கு அருகில் பெட்காவும் நின்று கொண்டிருந்தான்.

"வாஸிலி இவானேவிச் உங்கள் தலையில் இரத்தம் வடிகிறது. துணியால் ஒரு கட்டுப் போடட்டுமா?" என்று பெட்கா உரக்கக் கத்தினான்.

"பரவாயில்லை, பரவாயில்லை. என் தலையில் ஒன்றுமில்லை" என்று மழுப்பினான் சப்பாயேவ்.

"உங்கள் நெற்றியில் நிறைய இரத்தம் கசிகிறதே!" என்றும் வருத்தம் தோயப் பெட்கா கேட்டான்.

"கசிந்தால் போகட்டும். எல்லாம் ஒன்றுதான்" என்றான் சப்பாயேவ். கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் செங்குத்தான ஆற்றங்கரை யோரத்துக்குப் பின் வாங்கினர். அதற்குமேல் எந்த வகையிலும் தப்ப உபாயம் இல்லை. வேகமாகச் சுழல் வீசிப் பாய்ந்து சென்ற ஊரல் நதி வெள்ளத்தில் எதிர் நீச்சல் போடுவது மிகவும் அபாயமானது; அதைத் தாண்டிவிட்டாலும் கொஸாக்கியத் துப்பாக்கிகளுக்கு இரையாகாமல் தப்புவது இன்னும் இயலாதது. என்றாலும்கூட, எப்படியும் மாவீரன் சப்பாயேவைக் காப்பாற்றிவிட வேண்டுமெனத் துணிந்தார்கள் சூழ்ந்து நின்ற வீரர்கள்!

"சப்பாயேவ் ஆற்றைக் கடக்க உதவுங்கள்" என்று பெட்கா கத்தினான்.

யாருக்கு உடனடியாக உதவவேண்டும் என்பதைச் செஞ்சேனை வீரர்கள் புரிந்துகொண்டனர். அருகில் நின்ற நான்கு பேர் ஓடோடிவந்து, இரத்தம் வடிந்த சப்பாயேவின் கையைத் தாங்கியவண்ணம் சரிவில் மெதுவாக அவனை இறங்க உதவி புரிந்தனர். சப்பாயேவும், அவனுடன் மூன்று வீரர்களும் ஒரே சமயத்தில் ஆற்றில் பாய்ந்து நீந்தினர். அவர்களில் நால்வர் சீறிவந்த குண்டுகளுக்கு இலக்காகி ஆற்றோடு ஆழ்ந்து விட்டனர். சப்பாயேவும் எஞ்சிய இன்னொரு வீரனும் துரிதமாக நீந்தி அக்கரையை நெருங்கி விட்டனர். கரையில் ஏறப் போகும்பொழுது சப்பாயேவின் தலையில் ஒரு கொடிய குண்டு பாய்ந்தது. உடன் வந்த வீரன் சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்தான். எதுவும் அவன் கண்ணுக்குப் புலப்படவில்லை. சப்பாயேவ் நின்ற பக்கம் திரும்பினான். சப்பாயேவ் நிலைதடுமாறி ஆற்றில்



விழுந்த சுவட்டைத்தான் அவனால் காணமுடிந்தது. அளவற்ற வேகத்துடன் பாய்ந்து சென்ற ஊரல் நதி, ஆறாத் தாகம் கொண்ட மாவீரன் சப்பாயேவை ஏந்திச் சென்ற சுவடே தெரியவில்லை. வயலெல்லாம் பாய்ந்து வளம் பெருக்கிவந்த ஊரல் நதி சப்பாயேவின் சுதந்திர உரத்தை நாட்டு மக்களது மனவயலில் எல்லாம் பாய்ச்சத் தாங்கிச் சென்றுவிட்டது!

தன் துப்பாக்கியிலிருந்த ரவைகள் தீருமட்டும் ஆற்றங்கரையில் தனிமையாகப் போராடிக் கொண்டிருந்தான் பெட்கா. உடனே தன்னுடைய ரிவால்வரைக் கையிலெடுத்தான். தன்னை நோக்கிக் கொஸாக்கியப் படைகள் சமீபித்துவிட்டதைக் கண்டான். அவனது கைத் துப்பாக்கியிலிருந்து ஆறு ரவைகள் கொஸாக்கியர்கள்மீது பாய்ந்தன, ஏழாவது ரவை அவனது இதயத்தைச் சுக்கலாக்கி விட்டது. நெஞ்சு படபடக்க ஊரல் கரையில் பெட்காவும் வீழ்ந்தான். துணிவும் வீரமும் நிறைந்த இந்தச் சுத்த வீரனது சவத்தின்மீது தங்கள் ஆத்திரத்தைக் காட்டினர் கொஸாக்கிய வெறியர்கள். பெட்காவின் தோழர்கள் அவனுடைய உடலை அடையாளம் கண்டுபிடிக்க மிகவும் கஷ்டப்பட்டார்கள். உருக் குலைந்த மாமிசத் துண்டங்களாகப் பெட்காவின் உடல் அவனது தோழர்கள் கைக்குக் கிட்டியது!

இந்தப் பெருங் கொடுமை நடந்து இரண்டு மாதங்கள் கழிந்து விட்டன. சோவியத் குடியரசின் புரட்சிக் குழுவினர் இஸாயேவ் முதலிய வீரர்களுக்கு வீரப் பதக்கங்களும், சிவப்புப் பதக்கங்களும் வழங்கிக் கௌரவித்தனர். இறுதிப் போராட்டத்தை வெற்றிகரமாக முடித்த பெருமை இஸாயேவையே சாரும்.

இஸாயேவுடன், செக்கோவும் பிறரும் அதே ஆற்றங்கரைக்குப் பின்னிட்டனர். ஆற்றைக் கடக்கும் முன்பு செக்கோவும் குண்டடிபட்டு மாய்ந்தான். அதற்குப் பிறகு

செஞ்சேனைப் படையினர் போரேதும் செய்யாது பல திசைகளிலும் ஓடினார்கள். ஓடிச் சென்றவர்களைப் பின் தொடர்ந்து கொஸாக்கியர்கள் பிடித்துக் கொண்டனர். அந்தந்த இடத்திலேயே கண்டதுண்டமாகச் சித்திரவதை செய்தனர்.

“கமிசார்களும், கம்யூனிஸ்டுகளும் முன்னால் வாருங்கள்” என்ற கொஸாக்கிய உத்தரவைக் கேட்டு அவர்கள் பதுங்கவில்லை. துணிவுடன் எல்லோரும் முன்வந்தனர். உடலும், உள்ளமும் பற்றியெறியக் கொஸாக்கியர்களுக்குப் பலியானார்கள். செஞ்சேனை வீரர்களின் சடலங்கள் வைக்கோல் போர்கள் போலக் குவிந்தன...

சகார்ஞயா முதலிய கொஸாக்கியக் கிராமங்களைப் பிடித்திருந்த இதர செஞ்சேனைப் படைகளும் ஆற்றைக் கடந்து விட்டன. செஞ்சேனைப் படைக் காரியாலயங்கள் அனைத்தும் தகர்க்கப் பட்டன. எல்லாவகை உதவிகளும் துண்டிக்கப்பட்டன. போதிய தளவாடங்களும், உணவு வசதியும் இன்றி நோய்க்காளாகிப் படை படையாகச் செஞ்சேனைப் பகுதி சரிந்தது. கொஸாக்கியப் படைகளில் இடுக்கித் தாக்குதலுக்கு ஆளாகிப் பல வீரர்கள் பரிதாபமாக மாண்டனர். அவர்களால் வேறு என்ன தான் செய்ய முடியும்.

சிஷோவ் படைத் தலைமைப் பொறுப்பேற்றுக் கொண்டான். அவனை யாரும் தளபதியாக நியமிக்கவும் இல்லை. உறுதிப்படுத்தவும் இல்லை. அந்த மாமூல் சம்பிரதாயங்களுக்கெல்லாம் நேரமில்லாததால் அவனே தளபதியாகி விட்டான். லிபிஸ் ஷென்ஸ்க் நகர்ப் பகுதியிலும், ஊரல் நதிப் படுகையிலும் நடந்த கொடுமைச் செய்திகள் எல்லாச் செஞ்சேனை வீரர்களுக்கும் எட்டியது.

“முன்னேறிச் செல்லுவோமா, பின் வாங்கி விடுவோமா” என்ற பிரச்னை எல்லா வீரர்களிடமும் ஏற்பட்டது. அனாதையாகக் கைவிடப்பட்ட செஞ்சேனைப் படை



யின் இந்தப் பகுதி வீரர்கள் அனைவரது நெஞ்சிலும் முன்னேறுவதா, பின் வாங்குவதா என்ற நெஞ்சுலுக்கும் சிக்கல் எழுந்தது.

இனிமேலும் முன்னேறிச் செல்லுவதென்பது முட்டாள்த்தனமானது. பின் வாங்கி தப்பவும் இடையூறு இருந்தது லிபிஸ் ஷென்ஸ்க் பகுதியில் பரவியுள்ள கொஸாக்கியர்களை வெறுங்கையுடன் போரிட்டு வென்றால் தானே பின் வாங்க வழியேற்படும். இந்த இரண்டு வழிகளில், இரண்டாவது வழியில்தான் ஓரளவாவது தப்பும் நம்பிக்கை தொனித்தது. முன்னேறிச் செல்லுவதென்றால் முழுக்க அழிவிற்கு வழி தேடுவதென்றுதான் பொருள் எனவே உடனடியாகப் பின்வாங்கி விடுவதென்று செஞ்சேனை வீரர்கள் தீர்மானித்தனர். முன்னேறி வலுவில் அழிவதை விடப் பின்வாங்கிப் போரிட்டுச் சாகத் துணிந்தனர். எதிரிப் படைகள் எதிர்பாராத நேரத்தில் பின்வாங்கிக் குழப்பம் விளைவித்துத் தப்பிவிட வேண்டுமெனத் திட்டமிடப்பட்டது.

அத்திட்டப்படி முதல் துணைப்படை மெர்ஜென் யோவ்ஸ்கியை விட்டுப் புறப்பட வேண்டும். அதைத் தொடர்ந்து சகார்ஞயாவில் உள்ள துணைப்படையும் பின் வாங்கிச் செல்ல வேண்டும். செஞ்சேனைகள் பின்வாங்குவதாக எதிரிகளுக்குச் சந்தேகம் ஏதும் ஏற்படாவகையில் இரவோடு இரவாக வெகு விரைவில் கடந்துவிட வேண்டும். போக்குவரத்து வண்டிகள் தளவாட வண்டிகள் ஆகியவற்றைச் சுற்றி ஏராளமான வீரர்கள் சூழ்ந்து செல்ல வேண்டும் பீரங்கிப்படை பின்னணியில் பாதுகாப்பிற்கு வர வேண்டும். இத் திட்டப்படி அமைதியாகச் செஞ்சேனைப் படைகள் இரவு நேரத்தில் பின்வாங்கின. ஆனால் செஞ்சேனை வீரர்கள் தங்கியிருந்த கிராமங்களில் பெரும் நெருப்பு மூட்டங்கள் இரவெல்லாம் எரியவிடப்பட்டன. செஞ்சேனைகள் அக்கிராமங்களில் தங்கியிருப்பதாகக்

கொஸாக்கியர்கள் எண்ணுவதற்காகவே இந்த நெருப்பு மூட்டங்கள் போடப்பட்டன.

செஞ்சேனைப் படைகள் சந்தடியேது மின்றி வெகு விரைவில் ஸ்டெப்பி வெளியைக் கடந்து சென்றன. ஏதோ இறகு கட்டிப் பறப்பது போல அவ்வளவு துரிதமாகப் பின்னிட்டன. இரண்டு நாட்கள் இரவும் பகலும் தொடர்ந்து பயணம் செய்தனர். களைப்புத் தீர ஒரு சில நிமிடங்களே தங்குவார்கள். உடனே மீண்டும் புறப்பட்டு விடுவார்கள். இரண்டாம் நாள் இரவு லிபிஸ் ஷென்ஸ்க் நகரை நெருங்கி விட்டார்கள். மொர்ஜென்யோ வ்ஸ்கியிலிருந்து முதல் செஞ்சேனைப் படை புறப்படுவதற்கு முதல் நாளே லிபிஸ் ஷென்ஸ்க்கிலிருந்த கொஸாக்கியப்படைகள் அனைத்தும் புறப்பட்டு உரால்ஸ்க்கை நோக்கியுள்ள ஆற்றுப் படுகைக்குச் சென்றன. சுகார்னுயாவில் உள்ள செஞ்சேனைப் படைகளை வளைத்துப் பிடிக்கும் திட்டத்தோடு கொஸாக்கியப் படைகள் சென்றன. ஆனால் அதற்குள் செஞ்சேனைப் படைகள் காலி செய்து புறப்பட்டு விட்டன.

இப்பொழுது இரத்தம் தோய்ந்த லிபிஸ் ஷென்ஸ்க் நகரை இரண்டாவது செஞ்சேனைப் படை தாண்டிக் கொண்டிருந்தது. அந்தச் சிறு நகரம் கைவிடப்பட்ட கொடுமைக் களமாகவே இன்னும் காட்சியளித்தது. செஞ்சேனை வீரர்களின் சவங்கள் இன்னும் நடுத் தெருக்களில் நாதியற்று நாறிக் கிடந்தன. முதலில் வந்த செஞ் சேனைப் படை இங்கு சற்றும் தாமதியாது முன்னேறிச் சென்று விட்டது. இப்பொழுது வந்த இரண்டாவது படை வீரர்கள் சிதறிக்கிடந்த செஞ்சேனை வீரர்களது உடல்களைச் சேகரித்து, மரியாதையுடன் மயானத்தில் அடக்கம் செய்தார்கள். எத்தகைய ராணுவச் சம்பிரதாயத்துக்கும் அப்பொழுது நேரமில்லை. செஞ்சேனை வீரர்கள் அனைவரும் முழந்தாள்ப் படியிட்டு, அமைதியாகத் தலை தாழ்த்தி உயிர்தந்த மாவீரர்



களுக்கு அஞ்சலி செய்தனர். அவர்களது கண்களில் நீர்
நிறைந்தது; அவர்களது நெஞ்சத்தில் சோகம் பெருகியது.
அவர்களது மனத்தில் தாளமுடியாத எண்ணங்கள் ஊறின.
ஆனால் அவர்களது சுதந்திரதாகம் மட்டும் கொப்புளித்துக்
கொண்டே இருந்தது !
அவர்கள் லிபிஸ்ஷென்ஸ்க்கில் நீண்டநேரம் தாமதிக்
காது உடனே புறப்பட்டு விட்டனர். புறப்பட்டு ஊரெல்லை
யைத் தாண்டு முன், சகார்னுயாவிலிருந்து அவர்களை
விரட்டிவந்த கொஸாக்கியப் படைகள் மீண்டும் மறித்துக்
கொண்டன. பெரும் போர் மூள்வது தவிர்க்க முடியாததா
யிற்று. மரணப் போராட்டமாகவே அது உருவெடுத்து
விட்டது. உதவியேது மின்றிச் சோர்ந்து போன செஞ்சேனை
வீரர்கள் முனைந்து தாக்கமாட்டார்கள் என்றே கொஸாக்
கியர்கள் எண்ணினர். ஆனால் செஞ்சேனையினரின் சீவ
மரணப் போராட்டம் நொடிக்கு நொடி அனலாகப் பர
விற்று. கொஸாக்கியப் படைகளை நிர்மூலம் செய்து சப்பா
யேவின் படைக்குள்ள பரம்பரைப் பெருமையை நிலை நாட்
டினர்.

அன்று இரவு யானுய்ஸ்கி என்ற குக்கிராமத்தை
அடைந்தனர். நிற்கக் கூட முடியாத அளவு செஞ்சேனை
வீரர்கள் அனைவரும் சோர்ந்து போயிருந்தனர். எல்லோரும்
சவங்கள் போலப் படுத்துறங்கினர். அந்த நள்ளிரவில் தாக்
கிச் செஞ்சேனையைச் சீர்குலைக்க மீண்டும் கொஸாக்கியர்
கள் ஆயத்தம் செய்தனர். யானுய்ஸ்கி நகரை இரவோடு இர
வாகச் சூழ்ந்து கொண்டனர். என்றாலும் இரவில் கிராமத்
திற்குள் புகும் துணிவு யாருக்கும் ஏற்படவில்லை. எனவே
பொழுது புலரும் வரை காத்திருந்தனர். தப்பியோடிய
செஞ்சேனை வீரர்களை விடாது பிடிப்பதற்குக் கிராமத்
தைச் சுற்றிலும் குதிரைப் படைகள் நிறுத்தப்பட்டன.
செஞ்சேனையை மரணத்தின் கொடுமைக் கரங்கள் பற்றிப்
பிடிக்கக் காத்திருந்தன !

செஞ்சேனையினர் தாக்குதல் கண்டு குழப்பமடைவார்களா, எதிர்த்துப் போர் புரிவார்களா என்பதைத் தெரிந்து கொள்ளுவதற்காக வெள்ளோட்டப் போர் புரியக் கொஸாக்கியர்கள் தீர்மானித்தனர். எடுத்த எடுப்பிலேயே வலுவாகத் தாக்கிக் கதிகலங்கச் செய்த் திட்டமிட்டனர். செப்டம்பர் மாதத்துக் காரிருள் அகன்றது. அதைத் தொடர்ந்து "ஹுர்ரா....ரா...ஆ...." என்ற ஆரவாரத்துடன் கொஸாக்கியர்கள் கிராமத்திற்திற்குள் புகுந்தனர். அவர்களது பீரங்கிகளின் உறுமல் நகரைக் கிடுகிடுக்கச்செய்தது.

தூங்கிய வீரர்கள் வெருண்டெழுந்தார்கள். துப்பாக்கிகளைப்பற்றிப் பிடித்தார்கள். முதலில் எவ்வித ஒழுங்கும் இன்றி மனம் போனபடி தாக்கினர். பல தளபதிகள் செஞ்சேனைவரிசையில் சரிந்தனர். குழப்பம் தலைகாட்டத் தொடங்கியது. இக்கட்டான சமயத்தில் எப்படிப் படையை நடத்துவதென்றே யாருக்கும் புலப்படவில்லை. எல்லோரும் உத்தரவுக்குக் காத்தபடி தயங்கித் தோன்றவில்லை. குழப்பம் பெருகிக் கொண்டேயிருந்தது. சமாளிக்கும் ஆற்றல் குறைந்து கொண்டேவந்தது. கிராஸ்னியார்ப் போரில் துணிவோடு போரிட்ட நிக்கோலாய் கிரெப்டோவ் பீரங்கி வண்டிகளிடம் ஓடினான். அங்கு எந்தச்செஞ்சேனை வீரனையும் காணவில்லை. உரக்கச் சத்தமிட்டு அனைவரையும் ஒரு சேர அழைத்தான். சிதறிக் கிடந்த வீரர்கள் சேர்ந்து தாக்க முயன்றனர். தாக்குதல் பலன்தரத் தொடங்கியது உத்வேகத்துடன் தாக்குதலை வலுப்படுத்தினர். குழப்பம் அடங்கியது. வீரர்கள் நிலையைப் புரிந்துகொண்டு துணிவோடு போரிட்டனர். புத்துணர்ச்சியும் நம்பிக்கையும் அவர்கள் நெஞ்சில் பூத்துச் செயலை உந்தின. புதுத் தளபதிகள் சரமாரியாக உத்தரவுகளைத் தந்தனர். மீண்டும் பெரும் போராக மூண்டது.

எதிரியின் இரண்டு கவச வண்டிகள் செஞ்சேனை அணி வகுப்பை நெருங்கி வந்தன. இதைக்கண்ட கிரெப்



டோவ் பதுங்கியிருந்து எறிகுண்டுகளை வீசிக் கவச வண்டிகளைத் தகர்த்தான். கொஸாக்கியப் படைகள் திணறின. கடைசியில் பின்னிட்டே ஓடத் தொடங்கின.

பல கல் தொலைவுக்குக் கொஸாக்கியப் படைகள் விரட்டப்பட்டன. யானுய்ஸ்கிப் போரில் எஞ்சியிருந்த செஞ்சேனை வீரர்களிலும் கணிசமான தொகையினர் பலியாயினர். அவர்களைப் போலப் பன்மடங்கு கொஸாக்கியர்களுக்கு அழிவேற்பட்டது.

யானுய்ஸ்கியில் நடந்ததுபோல சீவ-மரணப் போராட்டம், சுதந்திரப் போர் வரலாற்றின் எப் பகுதியிலும் நடக்கவில்லை. அழிவின் முனைக்குச் சென்ற செஞ்சேனையர்களுக்கு இங்கு கிடைத்த வெற்றித் திருப்பம்போல வேறெந்தப் போரிலும் கிடைக்கவில்லை. போதிய ஆயுத வசதியின்றி, மனோதிடத்தையும் சுதந்திர ஆர்வத்தையும் முன் நிறுத்தி இங்கு பெற்றதுபோல வேறெங்கும் செஞ்சேனைக்கு வெற்றி கிட்டவில்லை.

விரைவில் புதிய செஞ்சேனைப் படைகளும் தளவாடங்களும் வந்து குவியத் தொடங்கின. சில நாட்களுக்கு முன்னர் உயிர் தப்பினால் போதும் என்ற பரிதாப நிலையில் செஞ்சேனைகள் ஓடிவந்த அதே கிராமங்களின் வழியாக மீண்டும் கொஸாக்கியப் படைகள் துரத்திச் செல்லப்பட்டன. இதுவரை பின்னிட்டுவந்த செஞ்சேனை மீண்டும் முன்னேறித் தாக்கத் தயாராகிவிட்டது. குர்யேவ் நகரையும், காஸ்பியன் கடல் எல்லையையும் சென்றடைந்து வெற்றிக் கொடி நாட்டும்வரை செஞ்சேனைப் படைகள் தலை சாய்க்கவே யில்லை!

அந்த வெற்றிகரமான முன்னேற்ற அணிவகுப்பு மீண்டும் லிபிஸிஹென்ஸ்க் வழியாக வந்தது. எல்லாச் செஞ்சேனை வீரர்களும் அங்கு வீழ்ந்து மடிந்த வீரர்களைப் புதைத்திருந்த மயானத்தை அடைந்தனர். முன்பு செய்ய முடியாத ராணுவ மரியாதைகளை இப்பொழுது நிறைவேற்

V55:51y7M87 3.N57



றினர். மரண கீதங்களைப் பாடினர். உயிர் தந்து சலன மற்று மயானத்தின் மடியில் கிடந்த செஞ்சேனை வீரர் களின் முன் வெற்றிமேல் வெற்றி பெறுவோம், இறுதி வெற்றி பெறும்வரை துணிந்து போரிடுவோம் என்று சங் கல்பம் செய்து கொண்டனர். ஊரல் நதியிலும், அதன் தீரத்திலும் சுதந்திரத்திற்காகத் தணியாத தாகம் கொண்டு பலியான. ஆயிரமாயிரம் வீரர்களின் பெயரால் நல்லாட்சி நிலை நிறுத்தச் சத்தியப் பிரமாணம் செய்தனர்...அவர்களது சங்கல்பத்தை ஏற்றுக் கொண்டதுபோல் மயானம் அமைதி யாக விரிந்து கிடந்தது; அவர்களது சத்தியவாக்கை ஆத ரிப்பது போல ஊரல் நதி அமைதியாக ஓடிக்கொண் டிருந்தது!

" சுதந்திர தேவி !
சூற்றினுக்குயிர் கோடி கொடுத்தும்—நின்
பேற்றினைப் போற்றுவோம்."

—அமரகவி பாரதி

106899